நான்காவது
அனைத்துலகத் தமிழாராய்ச்சி
மகாநாட்டு நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம்
சனவரி 1974

முதலாம் தொகுதி

பதிப்பாசிரியர் :
சு. வித்தியானந்தன்

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளை,
வீ. எஸ். ரி. கட்டடம்,
முதலாம் மாடி, 75, வாட் பிளேஸ்,
கொழும்பு - 7
இலங்கை

Published by the
International Association of Tamil Research,
Sri Lanka National Unit

First Published: January 1977

Printed in Jaffna
at the Thirumakal Press
Chunnakam
Sri Lanka (Ceylon)

பதிப்புரை

உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து தமிழ்மொழி, தமிழிலக்கியம், தமிழ்க்கலைகள், தமிழ்ச் சமுதாயம் ஆகியவற்றைப் பற்றிப் பல்கலைக்கழக மட்டத்தில் நின்று ஆராய்கின்ற அறிஞர்களிடையே நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தி, அவர்களின் ஆராய்ச்சிகளுக்கு ஊக்கமும் ஆதரவும் அளிப்பதே அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் தலையாய நோக்கமாகும். அந் நோக்கத்தை அடைதற்கு அனைத்துலக அடிப்படையிலே நடைபெறும் மகாநாடுகள் நல்ல வாய்ப்புக்களை அளிக்கின்றன. மகாநாடுகளிற் சமர்ப்பிக்கப்படும் கட்டுரைகளை வெளியிடுவதன் மூலமே மகாநாடுகளிற் பங்குகொள்ள முடியாத அறிஞர்களும் பிறரும் இம் மகாநாடுகளைப்பற்றியுந் தமிழாராய்ச்சி நிலைகளைப் பற்றியும் அறிந்துகொள்ள முடியும்.

யாழ்ப்பாணத்தில் 1974ஆம் ஆண்டு சனவரி மாதம் 3ஆம் நாள் தொடக்கம் 9ஆம் நாள்வரை நடைபெற்ற நான்காம் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டிற் சமர்ப்பிக்கப்பெற்ற கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடுவதிலே அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக்கிளை மகிழ்ச்சி கொள்கின்றது. தவிர்க்க முடியாத காரணங்களினாலே இவற்றின் வெளியீடு தாமதமாகி யுள்ளது. மகாநாட்டின் பொதுக் கருத்தரங்குகளிலும் குழுக் கருத்தரங்குகளிலும் இடம்பெற்ற ஆய்வுரைகளை அச்சிடமுன், ஆசிரியர்குழு மேலும் பார்வையிட்டுப் பெரும்பாலானவற்றை வெளியீட்டிற்குத் தெரிவு செய்துள்ளது. அத்தகைய கட்டுரைகள் மூன்று தொகுதிகளாக வெளிவருகின்றன. முதலாந் தொகுதியிலே தமிழ்க் கட்டுரைகளும் ஏனையவற்றிலே ஆங்கிலக் கட்டுரைகளும் இடம் பெறுகின்றன. இரண்டாம் தொகுதியிலே பெரும்பாலும் ஈழத்தமிழகம் பற்றிய கட்டுரைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்தியத் தமிழகத்தைப்பற்றிய கட்டுரைகள் மூன்றுந் தொகுதியிலே அடங்கும். முதலாந் தொகுதியிலுள்ள கட்டுரைகள் சமுதாயம், இலக்கியம், மொழியியல், சமயம் ஆகிய துறைகளைப் பற்றியனவாக உள்ளன.

முன்னைய மூன்று மகாநாடுகளிற் சமர்ப்பிக்கப்பெற்ற கட்டுரைகளை வெளியிடுவதற்கு அரசாங்கங்களினூடாக ஐக்கிய நாடுகள் சபையின் கல்விக்குழுவினதும் பல பிரபல நிறுவனங்களினதும் பொருளாதரவு கிடைத்தது. யாழ்ப்பாணத்திலே நடைபெற்ற நான்காவது மகாநாடு இலங்கையிலுள்ள பொது மக்களின்—குறிப்பாக யாழ்ப்பாணத்திலுள்ள பொதுமக்களின்—பண உதவியுடனேயே நடைபெற்றது. அம் மகாநாட்டிலே சமர்ப்பிக்கப் பெற்ற கட்டுரைகளின் தொகுதிகளும் அதே பொதுமக்களின் ஆதரவுடனேயே வெளிவருகின்றன. எனவே ஈழத் தமிழ்ப் பொதுமக்கள், தங்கள் இனம், மொழி, கலாசாரம் ஆகியவற்றின் மீதான பற்றின் காரணமாக, இம் மகாநாடு மற்றைய மகாநாடுகளுக்கு எந்த வகையிலும் விட்டுக்கொடுக்காத வண்ணம் அமைய ஒத்துழைத்தமைக்கு அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

மகாநாட்டு ஒழுங்குகளைப் பல சிரமங்களுக்கிடையே மிகத் திறமையுடன் கவனித்த மகாநாட்டு அமைப்புக்குழுச் செயலாளர் திரு. வி. எஸ். துரைராஜா, இலங்கைக் கிளையின் இணைச் செயலாளர் கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா, இலங்கைக் கிளையின் துணைத் தலைவர் திருமதி புனிதவதி திருச்செல்வம், திரு. க. சச்சிதானந்தன், திரு. இ. பேரின்பநாயகம், கலாநிதி பொ. பூலோகசிங்கம், யாழ்ப்பாணம் வேம்படி மருத்துவமனை அதிபர் டாக்டர் எஸ். சபாரத்தினம் ஆகியோரின் சேவைகள் மறக்கொணாதவை.

1976ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்திலே தேசிய அடிப்படையிலே மட்டக்களப்பிலே நடைபெற்ற தமிழாராய்ச்சி மகாநாட்டிற் சமர்ப்பிக்கப்பெற்ற கட்டுரைகளையும் விரைவிலே வெளியிட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மகாநாட்டுக் கட்டுரைகளின் தொகுதிகளின் வெளியீட்டைப் பொறுப்பேற்று மிகச் சிறந்த முறையிலே சேவை செய்து வரும் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தாருக்கும் பாராட்டுக்கள் உரியன.

—ஆசிரியர் குழு

பொருளடக்கம்

பகுதி II

இலக்கியம்

பகுதி III

இலக்கணம், மொழியியல்

பகுதி IV

வெகுசனத் தொடர்பு

நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாடு

அறிக்கை

பேராசிரியர் சு. வித்தியானந்தன்
இலங்கைக் கிளைத் தலைவர்

நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாடு எதிர்ப்புக் களுக்கும் தடைகளுக்கும் மத்தியிற் குறிப்பிட்ட காலத்திற் குறிப்பிட்ட இடத்திற் சிறப்பாக நடைபெற்று முடிந்தது. இம்மகாநாட்டில் 115 ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப் பட்டன. தென்னிந்தியா, வட இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, அமெரிக்கா, கனடா, சுவிற்சலாந்து, இத்தாலி, இங்கிலாந்து முதலிய நாடுகளிலிருந்தும் பல பிரதிநிதிகளும் பார்வையாளர் களும் கலந்துகொண்டனர். மேனுட்டிலிருந்து வந்த சிலர் கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து தமது நாடுகளுக்கும் இந்தியாவிற்கும் திருப்பி அனுப்பப்பட்டனர். சிலர் இந்தியா விலேயே தடை செய்யப்பட்டு, அங்கு சிலநாட்கள் தங்கிப் பின்பு இங்கு வந்து சேர்ந்தனர். மகாநாட்டிற் கலந்துகொண்ட இவர்கள், முந்திய மூன்று மகாநாடுகளிலும் இம்மகாநாடு பல அம்சங்களிற் சிறப்பாக அமைந்ததெனப் பாராட்டிச் சென்றனர்.

பின்னணி

இம்மகாநாட்டைப் பற்றிய அறிக்கையில் அதன் பின்னணியை ஒரு சிறிது கூறுதல் அவசியமாகும். பாரிஸ் மாநகரில் நடை பெற்ற மூன்ருவது தமிழாராய்ச்சி மகாநாட்டிற்குச் சென்றிருந்த போது நான்காவது மகாநாட்டை ஈழத்தில் நடத்தவேண்டு மென அழைப்பு விடுத்தோம். அதனை அவர்கள் ஏற்றதன் பயனுக, மகாநாடு இங்கு நடைபெறுவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ள இலங்கைக்குழு செயலாற்றத் தொடங்கியதும் யாழ்ப்பாணத்திலேயே மகாநாட்டினை நடத்துவதெனத் தீர்மா னிக்கப்பட்டது. இம்முடிவினை மாற்றிக் கொழும்பில் நடத்த இலங்கைக் குழுவினர் சிலர் எத்தனித்தபோதும், பொதுச்சபை யின் தீர்மானத்தை அவர்களால் மாற்ற முடியவில்லை. சிலர் இம்மகாநாட்டை 1974ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்குப் பிற் போடவேண்டுமென வற்புறுத்தினர். இதனைப் பொதுச் சபை ஏற்க மறுத்தது.

புதிய முகாமைக்குழு

1973 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 5ஆம் திகதியிலிருந்து பேராசிரியர் வித்தியானந்தன் தலைமையிற் புதிய முகாமைக் குழு செயலாற்றத் தொடங்கியது. கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா அவர்கள் இணைச்செயலாளரில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டுத் தனிநாயக அடிகளுடனும் திரு. ஜேம்ஸ் இரத்தினம் அவர்களுடனும் முகாமைக்குழு அலுவல்களைக் கவனித்து வந்தார். பிரசாரம், செய்தி, பாதுகாப்பு உபகுழு வின் தலைவராகவும் இவர் கடமையாற்றினர். அமைப்புக்குழுச் செயலாளராகிய திரு. வி. எஸ். துரைராஜா மகாநாட்டு அமைப்புக்குரிய பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இணைப் பொருளாளரில் ஒருவராக நியமிக்கப்பட்ட அவர், நிதி திரட் டும் குழுத் தலைவராகவும் கலாசார நிகழ்ச்சிகள் ஊர்வலம் ஆகியவற்றின் உபகுழுத் தலைவராகவும் பொறுப்பான பல அலுவல்களைக் கவனித்து வந்தார். துணைத் தலைவரில் ஒருவராகிய திருமதி புனிதம் திருச்செல்வம் அவர்கள் உபசரிப்பு உபகுழுத் தலைவராக மகாநாட்டுடன் தொடர்பான முக்கிய சில அலுவல்களுக்குப் பொறுப்பாக இருந்தார்.

பொருட் காட்சிக்குரிய உபகுழுவிற்குக் கலாநிதி சி. பத் நாதன் தலைமை தாங்கினர். நினைவுமலர் வெளியீட்டின் பொறுப்பு கலாநிதி பூலோகசிங்கம் அவர்களிடமும் திருமதி மகேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்களிடமும் ஒப்படைக்கப்பட்டது. விடுதி, உணவு முதலியனவற்றைத் திரு. கே. சச்சிதானந்தனும், போக்கு வரத்து, சுற்றுலா முதலியனவற்றைத் திரு. ஆர். பேரின்ப நாயகமும் கவனித்துவந்தனர்.

ஆய்வுக் கட்டுரைகள் பற்றிய அறிக்கை

ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிப்பது பற்றிச் செய்தித் தாள்க ளில் விளம்பரம் செய்யப்பட்டது. பிற நாடுகளிலிருந்து முன்பே பதிவு செய்தவர்களுக்கும் இறுதி அறிக்கைகள் அனுப்பப்பட்டன. குறிப்பாக மதுரை, சென்னை, கேரளம், அண்ணுமலை ஆகிய இடங்களிலுள்ள பல்கலைக்கழகப் பேராசிரியர்களுக்கும் மலேசியப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களுக்கும் இறுதி அறிக்கையும் பதிவு விண்ணப்பப் பத்திரங்களும் அனுப்பப்பட்டன.

இலங்கைப் பல்கலைக் கழகத்திற் பேராதனை வளாகத்தைச் சேர்ந்த தமிழ் (எல்லாத்துறை) விரிவுரையாளர்களுக்கும் அறிக்கைகள் நேரிற் கொடுக்கப்பட்டன. பெரும்பாலானோர் (சிங்கள விரிவுரையாளர்கள் உட்பட) கட்டுரைகள் அனுப்பினர்.

கொழும்பு வளாகத்திலிருந்தும் பல கட்டுரைகள் கிடைத்தன. வித்தியோதய வளாகத்திலிருந்து கலாநிதி டி. என். பி. பெரேரா கட்டுரை அனுப்பியிருந்தார். பேராசிரியர் ஏ. ஜே. குணவர்த்தன பார்வையாளராகப் பதிவு செய்திருந்தார்.

பத்திரிகைகளில் வெளிவந்த விளம்பரங்களையும் அறிக்கைகளையும் பார்த்துப் பல்கலைக் கழகத்திற்கு வெளியேயுள்ள பல தமிழ், சிங்கள அறிஞர்கள் பதிவுசெய்து ஆராய்ச்சிக் கட்டுரைகள் அனுப்பினர். எழுத்தாளர் சங்கங்களுக்கோ தனிப்பட்டவர்களுக்கோ கட்டுரை சமர்ப்பிக்கும்படி அழைக்கும் மரபு இத்தகைய மகாநாடுகளில் இல்லை. அப்படிச் செய்வதனாற் பல குறைகளும் ஏற்படும்.

ஈழத்திலும் வெளிநாடுகளிலுமுள்ள பல்கலைக்கழக ஆசிரியர்களிடமிருந்தும் தனிப்பட்டவர்களிடமிருந்தும் கிடைக்கப்பெற்ற ஆராய்ச்சிக் கட்டுரைகள் கல்வி ஆய்வுக் குழுவினாற் பரிசீலனை செய்யப்பட்டு 115 கட்டுரைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு மகாநாட்டு நிகழ்ச்சியிற் சேர்த்துக்கொள்ளவும்பட்டன.

பின்வருவோருக்கு அழைப்புகள் அனுப்பப்பட்டன:—

இலங்கைக் குடியரசுத் தலைவர், இலங்கைத் தேசிய அரசுப் பேரவைச் சபாநாயகர், உறுப்பினர்கள், இலங்கையிலுள்ள பிற நாட்டுத் தூதராலயத் தலைவர்கள், மதத் தலைவர்கள், அரசியற் கட்சிகள், கூட்டணிகள் ஆகியவற்றின் தலைவர்கள், இந்தியா, சிங்கப்பூர், மலேசியா போன்ற பிற நாடுகளிலுள்ள தமிழ் அமைச்சர்கள், அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற முகாமைக் குழுவினர், ஆராய்ச்சி மன்ற இலங்கைக் கிளை உறுப்பினர் முதலியோர்.

மக்கள் எழுச்சி

பல தொல்லைகளின் மத்தியில் மகாநாட்டு அமைப்பாளர்கள் தமிழ் மொழிக்கு விழா எடுப்பதைக் கண்ட பொது மக்கள் வீறுகொண்டு எழுந்தனர். யாழ்ப்பாணத்தின் சரித்திரத்திலேயே என்றுமில்லாதவாறு இளம் தென்னைகளையும், இளம் பனைகளையும், கமுகுகளையும், வாழை மரங்களையும் வேரோடு பிடுங்கி வந்து நகர வீதிகளை அலங்கரித்தனர். தெருவெல்லாம் சிகரங்களும் மாவிலைத் தோரணங்களும் வண்ண வேலைப்பாடுகள் அமைந்த சோடனைகளை இடம்பெறச் செய்தனர். தமிழ்மொழி மேலுள்ள பற்றினாற் பல தடைகளையும் தாண்டி இங்கு வந்து சேர்ந்த வெளிநாட்டறிஞர்களுக்குக் குடாநாட்டின் பல பகுதி

களிலும் மக்கள் குதூகல வரவேற்பளித்தனர். வெளிநாட்டறிஞர்களும் வரவேற்பு வைபவங்களிற் பேசியும் உரையாடியும் மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தனர்.

உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தை நிறுவியவர்களில் முக்கியமானவரும் அதனைத் தன் பிள்ளைபோற் பேணிப் பாதுகாத்து வளர்த்து வருபவருமாகிய தனிநாயக அடிகளார் விழாவைத் தொடக்கிவைத்துத் தொடக்கவுரை நிகழ்த்தினர். தொடக்க விழாவிற்கு இலங்கைக் கிளையின் தலைவர் பேராசிரியர் வித்தியானந்தன் தலைமை தாங்கித் தலைமையுரை நிகழ்த்தினர். வெளிநாட்டுப் பிரதிநிதிகள் சார்பிலே செருமானிய தேசத்துப் பேராசிரியர் ஜனற், கனடா தேசத்துப் பேராசிரியர் செல்வி பிறெண்டா பெக் ஆகியோர் உரையாற்றினர். ஈழத்திலிருந்தும் பிற நாடுகளிலிருந்தும் கிடைத்த வாழ்த்துச் செய்திகள் படிக்கப்பட்டன. இலங்கைத் தேசிய அரசுப் பேரவைச் சிங்கள உறுப்பினரில் முதியன்சே தென்னக்கோன் அவர்கள் மட்டுமே தொடக்க விழாவிற்குச் சமுகம் அளித்து, விழா சிறப்பாக நடைபெற வாழ்த்திச் சென்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.

ஆய்வு அரங்கு

ஆய்வு மகாநாடு பொதுக் கருத்தரங்கு, குழுக் கருத்தரங்கு என இரு பிரிவாக ஜனவரி 3ஆம்நாள் பிற்பகலிலிருந்து 8ஆம் நாள் வரை நடைபெற்றது. 3ஆம்நாள் பிற்பகலிலும் 4ஆம், 5ஆம், 7ஆம், 8ஆம் நாட்களில் முற்பகலிலும் பொதுக் கருத்தரங்கு வீரசிங்க மண்டபத்திலும், 4ஆம், 5ஆம், 7ஆம், 8ஆம் நாட்களிற் பிற்பகலிற் குழுக் கருத்தரங்கு சமூக இயல், இலக்கியம், சமயமும் தத்துவமும், மொழியியல், அறிவியலும் தொழில்நுட்பவியலும், தொல்பொருளியலும் மானிடவியலும் என்னும் 6 பிரிவுகளில் றிம்மர் மண்டபத்திலும் நடைபெற்றன. படிக்கப்பட்ட 115 கட்டுரைகளில் 45 கட்டுரைகள் ஈழத்தின் மொழி, இலக்கியம், கலை, சமூக இயல் போன்றவை பற்றி அமைந்திருந்தமை சிறப்பாகக் குறிப்பிடற்குரியது.

ஈழத்து இலக்கிய மரபையும் பண்பாட்டுக் கூறுகளையும் தமிழர் வரலாற்றையும் உலகப் பேரறிஞர் கவனத்திற்குக் கொண்டுவந்ததோடு, அவர்கள் அறியாத பல புதிய செய்திகளையும் இவ்வாய்வுக்கட்டுரைகள் அளித்தன. 9ஆம் நாட்காலை நடைபெற்ற அரங்கிற் பேசிய வெளிநாட்டறிஞர்கள் மகாநாட்டிற் படிக்கப்பட்ட கட்டுரைகள் மிகவும் உயர்ந்த தரமானவையெனப் பாராட்டினர். சிங்களப் பேராசிரியர்களும்

இக் கருத்தரங்குகளிற் கட்டுரைகள் படித்தும் குழு ஆய்வுக ளுக்குத் தலைமைதாங்கியும் மகாநாட்டினைச் சிறப்பித்தனர். பிற நாட்டறிஞரின் தமிழறிவு முந்திய மகாநாடுகளிலும் கூடுத லாகக் காணப்பட்டது.

கலைநிகழ்ச்சிகள்

வீரசிங்கம் மண்டபம், திறந்த வெளியரங்கு, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆகிய மூன்று இடங்களிலும் நாள்தோறும் இரவிற் கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. நாட்டியாஞ்சலி, உழவர் நடனம், காவடி, கரகம், பரதநாட்டியம், குச்சுப்பிடி முதலிய நடன நிகழ்ச்சிகளும், பண்ணிசை, வீணையிசை முதலிய இசை நிகழ்ச்சிகளும் நாடகங்களும் பொதுமக்களுக்கும் வெளி நாட்டறிஞருக்கும் விருந்தாக அளிக்கப்பட்டன. யாழ்ப்பாணக் கலைஞர்களும், கிழக்குமாகாணக் கலைஞர்களும், மலையகத்துக் கலைஞர்களும் கலைநிகழ்ச்சிகளுக்குப் பொலிவூட்டினர்.

யாழ் முற்றவெளியில் நடைபெற்ற மாட்டுவண்டிற் சவாரி யும் இங்கிலாந்துப் பேராசிரியர் ஜோன் மாரும் அவருடைய மகனும் அளித்த கருநாடக இசைக் கச்சேரியும் சிறப்பு நிகழ்ச்சி களாக இடம்பெற்றன.

அலங்கார ஊர்திப் பவனி

ஒன்பதாம் நாள் பிற்பகல் சங்கிலி மன்னன் காலத்துத் தோரண வாயிலிலிருந்து அலங்கார ஊர்திகள் புறப்பட்டு, யாழ்ப்பாணத்துப் பெருந்தெருக்களிலே பவனிவந்தன. ஒவ் வொரு காட்சிக்கோலத்தையும் பொதுமக்களே தமது செலவில் அமைத்து நடத்தினர். தொண்டர் படையினர் கட்டுப்பாட்டினை நிலைநாட்டினர். ஈழநாட்டுப் புலவர்களின் படங்களைக் கொண்ட ஊர்திகள் ஈழநாட்டின் அரசியல் தொழிலியல் வாணிபம் முதலியன பற்றிய காட்சிகள் பவனியில் இடம்பெற்றன. ஈழத் தமிழரின் வரலாற்றினையும் சில இலக்கியச் செய்திகளையும் உயி ருள்ள மனிதர்களைக் கொண்டே நடத்திக் காட்டியமை சிறப் பம்சமாக அமைந்தது. வெளி ஊர்களிலும் வெளிப்பகுதிகளிலு மிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வீதிகளிற் கட்டுப்பாட்டுடன் திரண்டுநின்று ஊர்திகளின் பவனியைக் கண்டு களித்தனர்.

கண்காட்சி

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட் டிருந்த கண்காட்சி பலரது பாராட்டையும் பெற்றது. யாழ்ப் பாண அரசாங்க அதிபர் விமல் அமரசேகரா அவர்கள் ஜனவரி

4ஆம் நாள் திறந்துவைத்த இக் கண்காட்சியை 8ஆம் நாள்வரை பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்டு பயனடைந்தனர். ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களின் வரலாறு, மொழி, இலக்கியம், கலைகள், கைத்தொழில்கள், தொல்பொருளியல் எனப் பல்வேறு துறைகளை விளக்கிக்காட்டியது இக் கண்காட்சி. ஈழத்துச் சித்த வைத்திய ஏட்டுச் சுவடிகளும் திரு. இ. கனகரத்தினம் அமைத் திருந்த வரலாறு பற்றிய கண்காட்சியும் பலரின் கவனத்தைக் கவர்ந்தன.

வெளியீடுகள்

மகாநாட்டு அமைப்பாளர் சார்பில் மகாநாட்டு நினைவுமலர், மகாநாட்டு 'யார் எவர்' என்னும் மலர், கலைநிகழ்ச்சி மலர் ஆகிய மூன்று ஏடுகள் வெளியிடப்பட்டிருந்தன. ஈழத்துத் தமிழரின் அரசியல், சமுதாய, பொருளியல் வரலாறு, ஈழத்துத் தமிழின் பண்பு அமைப்பு நிலை, இலக்கியத் துறையிலும் இலக்கணத் துறையிலும் வழிகாட்டிய ஈழத்துப் பெரியார்களின் சாதனைகள், ஈழத்துக் கலைகள், சமய வழிபாட்டு முறைகள் முதலியனவற்றைத் தெரிந்துகொள்வதற்குரிய 44 கட்டுரைகள் அடங்கிய நினைவுமலர் மிகவும் பயனுள்ள ஒரு படைப்பாக அமைந்துள்ளது.

'யார் எவர்' என்னும் சிறிய ஏடு மகாநாட்டுப் பிரதிநிதிக ளின் விவரங்களைப் படங்களுடன் தருகின்றது. பார்வையாள ராகப் பங்குபற்றினோர், மகாநாட்டு அமைப்பாளர்கள், உதவி செய்தோர் முதலியோர் பற்றிய விபரங்களையும் கொண்ட இவ்வேடு எடுப்பான தோற்றத்துடன் காட்சியளிக்கின்றது.

மகாநாட்டின்போது வீரசிங்கம் மண்டபம், திறந்த வெளி யரங்கு, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆகிய மூன்று இடங்களி லும் நடைபெற்ற கலைநிகழ்ச்சிகளைப் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய கலைஞர்களின் படங்களையும் கொண்டு வெளியிட்ட கலைநிகழ்ச்சி மலர் கவர்ச்சியான ஏடாக அமைந்திருக்கின்றது.

மகாநாடு பற்றிய திரைப்படம்

மகாநாட்டு நிகழ்ச்சிகளைத் திரு. வி. எஸ். துரைராஜா அவர்கள் தமது சொந்தச் செலவிலே திரைப்படமாக அமைத் துள்ளார்.

சிறப்பியல்புகள்

நான்காவது தமிழாராய்ச்சி மகாநாடு தமிழ் மக்களிடையே இதுவரை எந்தச் சக்தியும் தமிழ்மொழி பற்றி ஏற்படுத்தாத எழுச்சியையும் பற்றையும் ஏற்படுத்தியுள்ளது.

முதலாம் இரண்டாம் ஆராய்ச்சி மகாநாடுகள் போலல்லாது எவ்வித அரசியற் கலப்புமில்லாது இம்மகாநாடு நடைபெற்றது.

அரசியல்வாதிகளோ, 'பெரும் புள்ளி'களோ நின்று நடாத்தும் விழாவாக அமையாது, தமிழாராய்ச்சியில் ஈடுபாடுள்ள அறிஞர் நடத்திய விழாவாக அமைந்தது.

மலேசியாவிலும் சென்னையிலும் நடைபெற்ற மகாநாடுகள் அரசுகளின் ஆதரவுடனும் கண்காணிப்பிலும் ஒத்துழைப்புடனும் பண உதவியுடனும் நடைபெற்றன. ஆனல் இம்மகாநாடு அரசின் ஆதரவின்றி, அரசு விதித்த தடைகளைத் தாண்டிப் பொதுமக்கள் ஆதரவுடன் சிறப்பாக நடைபெற்றது.

மகாநாட்டிற் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகள் மிகவும் உயர்ந்த தரமானவையென மதிப்பிடப்பட்டுள்ளன.

வெளிநாட்டறிஞர் இம்மகாநாட்டுக்குரிய தனிச் சிறப்பொன்றினை விசேடமாகக் குறிப்பிட்டனர். அதுதான், மகாநாட்டுப் பிரதிநிதிகளுக்கும் பொதுமக்களுக்கும் ஏற்பட்ட இணைப்பு. ஏனைய மகாநாடுகளிற் பதிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளும் பார்வையாளருமே ஆராய்ச்சிக் கட்டுரைகள் படிக்கப்படும் போது மண்டபத்தினுள் அனுமதிக்கப்பட்டனர். யாழ்ப்பாண மகாநாட்டிற் பதிவு செய்யப்படாதோரும் பார்வையாளராக அனுமதிக்கப்பட்டனர். மேலும் இம் மகாநாட்டிலேயே பிரதிநிதிகளை மக்கள் வீடுகளிலே தங்க ஒழுங்கு செய்தனர். இதனலே யாழ்ப்பாண மக்களின் பண்பாட்டையும் விருந்தோம்பல் மகிமையையும் அவர்களால் அறிந்துகொள்ள முடிந்தது. மேனட்டு அறிஞர் பலர், வரவேற்புக்களிலும் தங்கிய இல்லங்களிலும் மக்களோடு நெருங்கிப் பழகி இனிய தமிழிற் பேசி மக்கள் உள்ளங்களைக் கவர்ந்துகொண்டனர். வழக்கமாக நடப்பதுபோல அரசியல்வாதிகளோ அதிகாரிகளோ பெரும் பணம் படைத்தவரோ இம் மகாநாட்டில் முன்னணியில் நிற்கவில்லை. மக்கள் எல்லோருமாகச் சேர்ந்து ஆராய்ச்சி அறிஞரை வரவேற்று மகிழச் செய்தனர். இதனலேயே நான்காவது தமிழாராய்ச்சி மகாநாடு எல்லா வகையிலும் சீர்பெற நடைபெற்றதெனப் பிறநாட்டு அறிஞர் வாழ்த்திச் சென்றனர். தொடங்கமுன்பே உலகப் பிரசித்திபெற்ற இம் மகாநாடு, முடிந்தபின்பும் உலகப் பிரசித்தி பெற்றுவிட்டது.

நன்றி நவிலல்

மகாநாடு சிறப்பாக நடந்தேறுவதற்குப் பல துறைகளிலும் உதவியவர்களுக்கு நன்றி தெரிவித்தல் நமது கடமையாகும். மகாநாட்டு அலுவலகத்திற்குப் போதிய இடவசதியும் பிற வசதிகளும் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் முறையே அமைத்துத் தந்த திரு. சி. அம்பலவாணருக்கும், திரு. வி. எஸ். துரைராஜாவுக்கும் நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். யாழ்ப்பாணப் பிரதேசம் முழுவதையுமே சோடனைகளால் இந்திரலோகமாக மாற்றி மகாநாட்டு அறிஞரை வரவேற்று ஆதரவளித்த பொது மக்களுக்கு நாம் செய்யக்கூடிய கைம்மாறு யாதோ? போக்குவரத்திற்கு வாகனங்களும், தங்குவதற்கு இல்லங்களும் உண்பதற்கு உணவும் அளித்தோர் பலர். மகாநாடு ஒழுங்காகவும் சீராகவும் நடைபெற உழைத்த தொண்டர் படையினருக்கும் நிதி உதவி நிமிர்ந்து நிற்கச் செய்த வள்ளல்களுக்கும் உளம் நிறைந்த நன்றி.

மிகக் குறுகிய காலத்தில் மகாநாட்டினை இவ்வளவு சிறப்பாக நடத்தி முடிக்க உறுதுணையாக இருந்த முகாமைக் குழுவினருக்கும் அமைப்புக் குழுவினருக்கும் பொதுச் சபை உறுப்பினர் சிலருக்கும் பெரிதும் நன்றியுடையோம். இவர்களைத் தனித்தனி எடுத்துக் கூறின் குறைகள் ஏற்படக்கூடும். இவர்களுட் பலர் தாம் பொறுப்பேற்ற அலுவலைச் செம்மையாகச் செய்தமையால், மகாநாட்டு நிகழ்ச்சிகள் பலவற்றைக் கண்டுகளிக்க முடியவில்லை. சிலர் மகாநாட்டு நிகழ்ச்சிகளில் ஒன்றிற்கேனும் வராது, பணி செய்தனர். சிலர் மகாநாட்டின் பின், நோய்வாய்ப்பட்டு, அல்லலுற்றனர். இவர்கள் யாவருக்கும் பெரிதும் கடமைப் பட்டுள்ளோம்.

பலத்த எதிர்ப்பின் மத்தியிலே செயலாற்றி வெற்றி காண்பது பெருமகிழ்ச்சியைத் தருகின்றது. இம் மகாநாட்டினை நடத்தியவர்களுக்கும், அதிற் பங்குபற்றியவர்களுக்கும், அதை நடத்த உதவியவர்களுக்கும் அத்தகைய மகிழ்ச்சி உண்டு என நம்புகின்றோம். இலங்கைக் கிளையினைச் செவ்வனே நடத்த எல்லோரின் ஒத்துழைப்பும் ஆதரவும் தொடர்ந்து கிடைக்குமென எதிர்பார்க்கின்றோம். தமிழ்த் தொண்டு இறைத்தொண்டாகும்.

தலைமையுரை

பேராசிரியர் சு. வித்தியானந்தன்
தலைவர்
அனைத்துலகத் தமிழாராய்ச்சிமன்ற இலங்கைக் கிளை

தமிழ் மன்னர் சங்கம் நிறுவித் தமிழ் ஆராய்ந்த யாழ்ப்பாணத்திலே, ஈழத்துப் பூதந்தேவனார் தொடக்கம் பண்டிதமணி கணபதிப்பிள்ளை வரை தமிழ் வளர்த்த தமிழர் தலைநகரிலே, தமிழ் ஆராய்ச்சி நடத்த வந்துள்ள பேரறிஞர்களையும், பொதுமக்களையும் அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையின் சார்பிலே வரவேற்பதிற் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்; பெருமை கொள்கின்றோம். உங்கள் யாவரினதும் வரவும் நல்வரவாகுக. மகாநாடு முடிந்து நீங்கள் 'போய் வருகின்றோம்' என்று கூறும்போது கூட, நாம் 'போய் வாருங்கள்' என்று கூறாமல் 'வரப்போறியளா', என்றுதான் கேட்போம்.

தமிழகத்திற்கு அடுத்தாற்போலத் தமிழாராய்ச்சி மகாநாடு நடத்துவதற்கேற்ற தகுதியும் உரிமையும் யாழ்ப்பாணத்திற்கே உரியது. ''யாழ்ப்பாணம் வீறுபடைத்த தமிழர் நிலம்; அதற்குச் சொற்றிறனும் உண்டு; விற்றிறனும் உண்டு. ஆதி முதலே அது அன்னியர் அட்டூழியங்களை எதிர்த்து எதிர்த்து வந்திருக்கின்றது. யாழ்ப்பாணத் தமிழர் மற்றவருக்குச் சளைத்தவர் அல்லர்; எல்லாத் துறைகளிலும் அவர்கள் முந்தி நிற்கிறார்கள்'', என்று தமிழகத்து யோகி சுத்தானந்தர் அவர்களே கூறியிருக்கின்றார்கள். இம் மகாநாடு தொடர்பாக டாக்டர் சாலை இளந்திரையன் அவர்கள் எமக்கு எழுதிய மடலிற் குறிப்பிடுகின்றார்: ''தமிழ் நலன், தமிழ் உணர்ச்சி என்பவற்றிலே தாய்த் தமிழகத்தைவிட ஈழத் தமிழகத்தவரே ஆர்வம் மிகுந்தவர்கள் என்பது என் கணிப்பு. அங்குள்ள அரசியல் மற்றும் சமுதாயச் சூழ்நிலைகளும் இதற்கு ஒரு காரணம் என்றாலும், ஈழத்தின் ஆர்வப் பெருக்கை யாரும் குறைத்து மதிப்பிட முடியாது.'' இவ்வாறு தமிழகத்தாரே பெருமிதம் அடையும் வகையிலே தமிழ் ஆர்வமும் தமிழ்ப் பற்றும் கொண்ட நாம், யாழ்ப்பாணத்திலே தமிழ் ஆராய்ச்சி மகாநாடு நடத்துவது பொருத்தமானது; ஏற்றமானது; உரிமையானதும் கூட.

உண்மைத் தமிழ் உணர்ச்சியுள்ள எவரும், ஈழத்துத் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியத்தையும் தமிழ்த் தொண்டையும் அறிந்த எவரும் இதனை வரவேற்பர்.

ஈழத்துத் தமிழ்பேசும் மக்கள் தமிழ்மொழிக்காற்றிய தொண்டு சாலப் பெரிது. தமிழ்மொழி வளர்ச்சியிற் பல துறைகளில் ஈழநாட்டுப் பெரியாரே வழிகாட்டி உதவியுள்ளனர். இறக்கும் நிலையிலிருந்த ஏட்டுச் சுவடிகளுக்கு உயிர் கொடுத்தவர் ஈழநாட்டவரே. தெளிவான நடையில் வசனநூல் பல எழுதியும் பழந்தமிழ் நூல்கள் பலவற்றைப் பதிப்பித்தும் வழிகாட்டியவர் ஈழத்து ஆறுமுக நாவலரே. தமிழ் மக்களின் பண்பாட்டையும் நாகரிகச் சிறப்பையும் முதன் முதற் புலப்படுத்தித் தமிழ் இலக்கியப் பெருமையைத் தெளிவாக உணர்த்தித் தமிழர் வரலாற்று ஆராய்ச்சிக்கு அடிகோலியவர் ஈழநாட்டுப் பெருமகன் ஒருவரே. தமிழில் முதன்முதல் வெளியிடப்பட்ட கலைக்களஞ்சியத்தின் ஆசிரியர் யாழ்ப்பாணத்தவர். மேனாட்டு முறையில் முதன் முதல் தமிழ் அகராதி இயற்றிய தமிழர் ஈழநாட்டவர் ஒருவரே. இசைத்தமிழ் வரலாற்றைத் தமிழ் உலகிற்கு வழங்கியவர் ஈழத்து விபுலாநந்த அடிகளே. அவரே தமிழகத்திற் பல்கலைக் கழக முதற்றமிழ்ப் பேராசிரியராகவும் விளங்கினார். விஞ்ஞான நூல்கள் பல எழுதியும் விஞ்ஞானக் கல்வியைத் தமிழிற் போதித்தும் வழிகாட்டிய பெருமை ஈழத்திற் குரியது. பேச்சு வழக்குத் தமிழை எழுத்திற் பொறித்து நாடகங்களை எழுதியவரும் ஈழநாட்டுப் பேராசிரியர் ஒருவரே. இது போன்ற பல துறைகளில் வழிகாட்டித் தமிழ் அன்னைக்குக் கைகொடுத்து அவளைத் தாங்கிவந்திருக்கின்றது ஈழநாடு.

சுருங்கக் கூறின், 19ஆம் நூற்றாண்டிலும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் தமிழ்த் தொண்டிலே முன்னணியில் நின்றவர்கள் ஈழத்தவர்களே. கடந்த 25 ஆண்டு காலத்திற்கூட, புதிய துறைகளாகிய சிறுகதை, நாவல் போன்றவற்றிலும் கவிதையிலும் ஈழத்தவர் பெருஞ் சாதனைகளை நிலைநாட்டியுள்ளனர். இலங்கைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரை, தமிழ் இலக்கியம், இலக்கணம், மொழியியல் ஆகிய துறைகளிலும், தமிழர் வரலாறு, தொல் பொருளியல், பொருளாதாரம், புவியியல் போன்ற துறைகளிலும் பல ஆராய்ச்சிகள் வெளிவந்துள்ளன. இலங்கைப் பல்கலைக் கழகத்துப் பல துறைகளையும் சேர்ந்த தமிழ் அறிஞர்கள் நிகழ்த்திய ஆராய்ச்சிகள் மிகவும் உயர்ந்த தரமானவை எனப் பிறநாட்டறிஞர்கள் பாராட்டிப் போற்றியிருக்கின்றனர்.

மேலும் தமிழகத்திற்கு அடுத்ததாக ஈழத்திலேயே தமிழ் மொழி உயிர்த்துடிப்புடன் விளங்குகின்றது. தென்னிந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா, மொரேசியஸ், இந்தோனிசியா, வியற்நாம், பீஜி, தென்னுபிரிக்கா, ரூெடீசியா, குடெலொப், மாற்றினிக், றியூனியன், றினிடாட் போன்ற தேசங்களிலே தமிழர் வாழ்கின்றனர். ஆனுல், அத்தேசங்கள் பலவற்றில் அவர்கள் தமிழராக வாழவில்லே. தமிழிற் பிறர் பேசுவது விளங்கினுலும், தமிழிற் பேசமுடியாது தவிக்கின்றனர். சிலர் பெயரளவிலேயே — இங்குள்ள சிலர் போல — தமிழராக இருக்கின்றனர். இந்நிலேயிலே, தமிழகத்திலும் ஈழத்திலுமே தமிழ் வாழுகின்றது; உயிர்த்துடிப்புடன் விளங்குகின்றது. ஈழத்திலே பல்கலேக்கழகத்திற் போதனு மொழியாகவும் இடம் பெற்றுள்ளது. இத்தகைய சூழலில் இங்கு தமிழாராய்ச்சி மகாநாடு கூடுவது பொருத்தமானதே.

இச்சந்தர்ப்பத்திலே அனேத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் தோற்றம் பற்றியும் வளர்ச்சி பற்றியும் சிந்தித்தல் அவசியமாகின்றது. அனேத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத் திற்கு இன்னும் 4 நாட்களிற் பத்து வயது முடிகின்றது. 1964ஆம் ஆண்டு சனவரி மாதத்திற் புதுடில்லியில் நடைபெற்ற அனேத்துலகக் கீழைத்தேய அறிஞர் மாகாநாட்டின்போது, சனவரி மாதம் 7ஆம் நாள் அனேத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம் நிறுவப்பட்டது. பதினேந்து நாடுகளிலிருந்து அறிஞர்கள் கூடி இம்மன்றத்தினே நிறுவினர். இலங்கையின் பிரதிநிதியாகப் பேராசிரியர் கணபதிப்பிள்ளேயும், மலேசியாவின் பிரதிநிதியாக வணக்கத்துக்குரிய தனிநாயக அடிகளும், பண்டிதர் இரத்தினமும் இத் தொடக்க விழாவிற் பங்குபற்றினர். அதன்பின் அம்மன்றம் மலேசியாவிலும், இந்தியாவிலும், பிரான்சிலும் மூன்று தமிழா ராய்ச்சி மகாநாடுகளே நடத்தியது. இம்மன்றம், தனது பத்தாம் ஆண்டுப் பிறந்ததின விழாவை அடுத்த திங்கட்கிழமை 7ஆம் திகதி நான்காம் மகாநாட்டின்போது யாழ்ப்பாணத்திற் கொண் டாட இருக்கின்றது.

பத்தாண்டு காலமாக இம்மன்றம் சாதித்தவை யாவை? முதலாவதாகத் தமிழ் இலக்கியம் பற்றியோ, மொழி பற்றியோ ஆராயும் உரிமை தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவருக்கே உரியது என்ற கொள்கையை இது தகர்த்தெறிந்து விட்டது. தமிழ் ஆராய்ச்சி குறுகிய எல்லேக்குட் கட்டுப்பட்டிராது, பரந்து விரிந்து பல துறைகளில் விருத்தியடைந்துள்ளது. தமிழ் இலக்கியம் பற்றியும், இலக்கணம் பற்றியும் உள்ள

ஆராய்ச்சி மட்டும் தமிழாராய்ச்சி என்ற நிலை மாறி, தமிழர் பண்பாடு, தமிழர் வரலாறு, தமிழர் தொல்பொருளியல், சமூக வியல் போன்ற துறைகளிலும் ஆராய்ச்சி விரிந்து சென்றிருக் கின்றது. தமிழ் இலக்கியத்தின் சிறப்புப் பற்றியும், பண்பாட்டின் வளர்ச்சி பற்றியும், தொன்மை பற்றியும், மொழியியல் பற்றியும் பல உண்மைகள் வெளிவந்துள்ளன. இவை யாவற்றையும் ஒன்று திரட்டிப் பல நாடுகளிலும் தமிழாராய்ச்சி செய்கின்ற அறிஞர் தமது ஆராய்ச்சி முடிபுகளைப் பொது மன்ற மொன்றிற் சமர்ப்பித்துப் பயன்பெறத் தமிழாராய்ச்சி மன்றம் வழிவகுத் திருக்கின்றது. இது ஒரு பெருஞ் சாதனை என்றே கூறவேண்டும்.

ஆராய்ச்சி மகாநாடுகளில் அறிஞர்களைக் கருத்துப் பரிமாறச் செய்ததோடு, பார்வையாளராகக் கலந்துகொண்ட பலரைத் தமிழாராய்ச்சியில் ஈடுபடவும் ஆராய்ச்சி மகாநாடுகள் காலாக இருந்துள்ளன. ஒவ்வொரு மகாநாட்டின் பின்பும் தமிழ் ஆராய்ச்சி செய்வோர் தொகை பெருகிக்கொண்டு வந்திருக் கின்றது. கடந்த மூன்று மகாநாடுகளில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் படித்தோர் பெயர்களையும், நான்காம் மகாநாட்டிற் கலந்து கொள்வோர் பெயர்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இவ் வுண்மை புலப்படும். ஒவ்வொரு மகாநாட்டிலும் பழைய பிரதிநிதிகளுடன் பல புதிய அறிஞர்களும் கலந்துகொள்வதை அவதானிக்கலாம். எனவே, இம்மகாநாடுகள் தமிழ் ஆராய்ச்சி யில் அறிஞரை ஈடுபடத் தூண்டியதோடு, ஆராய்ச்சியாளர் தொகையையும் விரியச் செய்திருக்கின்றது.

மேலும், இன்று பிறநாடுகள் பலவற்றிலுள்ள பல்கலைக் கழகங்களிலே தமிழை ஒரு பாடமாக அமைப்பதற்கும், தமி ழாராய்ச்சியில் அப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களை ஈடுபடச் செய்வதற்கும் இம்மன்றமே காலாக இருந்துள்ளது. ஒரு காலத்தில் மேனாட்டுப் பல்கலைக் கழகங்களிற் சமஸ்கிருதம் பற்றியும், இந்தோ ஆரிய மொழி பற்றியுமே ஆராய்ச்சி செய்து வந்தனர். இப்பொழுது அந்நிலை மாறி, தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், தமிழர் வரலாறு, தமிழர் பண்பாடு முதலியன பற்றியும் ஆராய்ச்சி செய்கின்ற நிலை அப் பல்கலைக் கழகங்களில் உருவாகி வளர்ச்சி பெற்றிருக்கின்றது. முன்பு பிற நாட்டவர் சமயப் பிரசாரத்திற்கும், வணிகப் பெருக்கத்திற்கும், அரசியல் ஆதிக்கத்திற்குமே தமிழைப் பெரும்பாலும் கற்றனர். ஆனால், இன்று ஆராய்ச்சிக்காகவும், தமிழ் மொழியின் சிறப்பியல்பு களுக்குமாகவே தமிழை அவர்கள் கற்கின்றனர். அவர்களின் தமிழ்ப் பற்றையும், அபிமானத்தையும், அவர்கள் தமக்கும் தமது பிள்ளைகளுக்கும் தமிழ்ப் பெயர்கள் வைப்பதிலிருந்து

மதிப்பிடலாம். ரஷ்யாவிலுள்ள அறிஞர்கள் செம்பியன், ஐங்குன்றன் என்று தமிழ்ப் பெயரைத் தமக்குச் சூட்டிக் கொள்ளும் அளவிற்குத் தமிழபிமானம் கொண்டுள்ளனர். செக்கோசிலவாக்கியாவிலுள்ள தமிழ் ஆராய்ச்சியாளர் ஒருவர் தன் மகளுக்கு கண்ணம்மா என்று பெயரிட்டுள்ளார். நாம் எமது பிள்ளைகளுக்குத் தமிழ்ப் பெயர்கள் வையாது, சினிமா நட்சத்திரங்களின் பெயர்களைச் சூட்டித் தமிழ் இனத்தின் மானத்தை வாங்குவதை எண்ணும்போது தலைகுனிய வேண்டி யிருக்கின்றது. இவர்கள் தாம் இறந்த பின்பு தமது கல்லறை யிலே 'தமிழ் மாணவர்' எனப் பொறிக்க வேண்டுமென விரும்பு கின்றனர். தமிழபிமானம் கொண்ட இவர்களை, மறுபிறப் பெடுத்தால் தமிழராகப் பிறக்க விரும்புகின்ற இப் பிறநாட்ட வரை, இம் மகாநாட்டிற்கு வரவிட வேண்டாமென எம்மிடையே சிலர் வற்புறுத்தியதை நினைக்கும்போது, தலைநிமிர்ந்து நிற்க முடியாமலிருக்கின்றது.

இவ்வாறு பிறநாட்டவரிடையே தமிழார்வத்தையும், தமி ழாராய்ச்சியையும் வளர்த்த மன்றத்தின் தொண்டினை மதிப் பிடும்போது, இம் மன்றத்தின் தாபகர் வண. தனிநாயக அடிகளை நாம் பாராட்ட வேண்டியவர்கள் ஆகின்றோம். தனிநாயக அடிகள் தமிழ்த் தூதர்; உலக ஆசைகளைத் துறந் திருப்பினும், தமிழ் ஆசையைத் துறவாதவர். தாம் செல்லும் நாடுகளிலே தமிழ்த் தூதராய் விளங்கித் தமிழின் மேன்மையை யும், தொன்மையையும் பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும், கட்டுரைகள் எழுதியும், வானொலியிற் பேசியும், அந்த அந்த நாட்டு மக்களுக்குத் தமிழ் மொழியிடத்து அன்பும் அக்கறை யும் ஏற்படச் செய்தவர். உலகமெல்லாம் தமிழ் முழங்கத் 'தமிழ்ப் பண்பாடு' (Tamil Culture) என்ற ஆங்கில முத்திங்கள் இதழ் ஒன்றைத் தோற்றுவித்து, அதன் ஆசிரியராகவும் பணி செய்தவர். இத் தொண்டுகள் யாவற்றிலும் மேலாக, இது வரை யாரும் செய்திராத பெரிய அளவில் ஐரோப்பா, ஆபிரிக்கா, ஆசியா முதலிய எல்லாக் கண்டங்களிலுமுள்ள தமிழறிஞர்களை ஒன்று கூட்டி அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தினை நிறுவியவர்.

எனவே, இம்மன்றம் அவரின் குழந்தையாகும். இக் குழந்தை யைக் கடந்த பத்தாண்டாகச் சீராட்டித் தாலாட்டி வளர்த்து அதன் பத்தாண்டு நிறைவு விழாவினை, பிறநாட்டுப் பேரறிஞர் களும் கூடியுள்ள இவ்வரங்கிலே, உள்ளம் குளிரக் கண்டு மகிழ் கின்றார். குழந்தை வளர்ப்பு எவ்வளவு கடினமானது என்பதை

நீங்கள் அறிவீர்கள். இந்தக் குழந்தைக்குப் பத்தாவது ஆண்டிறுதியில் ஒரு தத்து ஏற்பட்டது. அப்போது குழந்தையைத் தவிக்க வைத்து ஓடிவிட்டார் என்று அடிகளார் மீது பலர் பழி சுமத்த முயன்றூர்கள். குழந்தைத் துரோகம் அறியாத் தமிழ்ப் பண்பாட்டின் காவலர் அவர். எனவே தான், தத்திலிருந்து குழந்தையைத் தப்பவைக்க எம்மோடு சேர்ந்து உழைத்தார். இக் குழந்தையின் வளர்ச்சியே தமது இலட்சியம் என்பதை நான்காவது மகாநாட்டைத் திறந்துவைக்க முன்வந்ததிலிருந்து உலகறியச் செய்திருக்கின்றூர். அவருக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்.

இம்மகாநாடு, குறுகிய தமிழ் விழா அன்று, அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாடு என்பதை நிலைநாட்டுவதற்காகத் தமக்கு ஏற்பட்ட இன்னல்களையும் தடைகளையும் பொருட்படுத்தாது, இந்தியா, மலேசியா, இங்கிலாந்து, இத்தாலி, சுவீடன், சுவிற்ஸலண்ட், அமெரிக்கா, கனடா, கங்கேரி, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலிருந்து இங்கு வந்து சமுகமளித்துள்ள பிறநாட்டுப் பிரதிநிகளுக்குப் பெரிதும் நன்றியுடையோம்.

இம் மகாநாடு தமிழ் இன வாதத்தை வளர்க்கும் மகாநாடன்று; தேசிய மகாநாடு ஆகும் என்பதை எடுத்துக்காட்டும் முகமாக இம் மகாநாட்டிற் பிரதிநிதிகளாகவும், பார்வையாளராகவும் கலந்துகொள்ளும் சிங்கள, முஸ்லிம் அறிஞர்களையும் நாம் பணிவுடன் வரவேற்கின்றேம். ஈழத்திலே மட்டக்களப்பு, திருகோணமலை, மலைநாடு, வவுனியா, மன்னுர், முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களிலிருந்து இங்கு குழுமியுள்ள அன்பர்களுக்கும், எமக்கு உறுதுணையாக இருந்து இம்மகாநாடு திட்டமிட்டபடி நடப்பதற்குப் பலவகையிலும் உதவிய பொதுமக்களுக்கும் நாம் தலை வணங்குகிறேம்.

ஈழத்திலே இத்தகையதொரு மகாநாடு மொழிக்கென நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும். மகாநாடு தொடங்குவதற்கு முன்பே அது உலகப் பிரசித்தி பெற்றுவிட்டது; முடிந்தபின்னர் இன்னும் பன்மடங்கு உலகப் பிரசித்தி பெறுமென்பதில் ஐயமில்லை. எனவே, என்றுமில்லாத வகையிலே உலகின் கவனத்தைக் கவர்ந்துள்ள இம் மகாநாட்டினை வெற்றியுடன் நடத்தி முடிப்பதற்கு உங்கள் யாவரினதும் ஒத்துழைப்பை நாடுகின்றேம்.

என்னை நன்ருக இறைவன் படைத்தனன்,
தன்னை நன்ருகத் தமிழ்ச்செய்யு மாறே.

3–1–1974

ஆரம்ப உரை

தனிநாயக அடிகள்

சங்க இலக்கியத்திற் கூறிய, ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' எனும் கொள்கையையும், இந்த நூற்றாண்டிற் பாரதியார் கூறிய, ''திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்'' எனும் கோட்பாட்டையும் அடிப்படைக் கொள்கைகளாகக் கொண்டிருப்பது அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகம். இந்தக் கழகம் ஆற்றிவரும் தொண்டுகள் பல. உலகில் உள்ள தமிழ் அறிஞர் பலரையும் ஒன்று சேர்ப்பதும், அவர்களை அறிமுகப்படுத்துவதும், அவர்கள் ஆராய்ச்சியை வெளிப்படுத்துவதும் இந்தக் கழகத்தின் சிறப்புப் பணிகள். இக்கழகம் ஓர் ஆராய்ச்சிக் கழகம்; அதுவும் பல்கலைக் கழக நிலையிலுள்ள ஆராய்ச்சிக் கழகம். உலகில் எங்கு தமிழ்த் துறைகளில் ஆராய்ச்சி நடைபெற்று வருகின்றதோ அங்குள்ள அறிஞரை ஒன்று சேர்ப்பது இக்கழகத்தின் நோக்கம். மேலும் இக்கழகத்திற்குப் பொருந்திய ஆராய்ச்சி, இலக்கணம் இலக்கியம் பற்றிய ஆராய்ச்சி மட்டுமல்ல; தமிழ்த்துறைகளோடு தொடர்புள்ள எல்லாத் துறைகளையும் ஆராய்ச்சிக் களமாகக் கொண்ட ஆராய்ச்சி இக்கழகத்திற்குரியது. தமிழ் மக்களுடைய வரலாறு, தமிழ் மக்களுடைய மனித இயல், தமிழ் மக்களுடைய சமயங்கள், தத்துவங்கள், தமிழ் மக்கள் வாழும் நாடுகள், தமிழ் மக்கள் பிற இனத்தாரோடு கொண்ட தொடர்புகள், தமிழர் பண்பாடு, தமிழ்க் கலைகள், தமிழ்மொழி இயல் இன்னோரன்ன துறைகளில் நிகழும் ஆராய்ச்சி எல்லாம் தமிழ் ஆராய்ச்சியாம். இத்துறைகளில் ஈடுபடும் அறிஞர் சிலர் நன்கு தமிழைப் பேசவும் எழுதவும் அறிந்திலரெனினும், வரலாற்று அடிப்படையிலும், மொழியியல் அடிப்படையிலும், ஒப்பியல் முறையிலும் இவர் ஆற்றும் தொண்டோ பெரிது. ஒக்ஸ்போட்டு பல்கலைக் கழகத்திலும், பேர்க்லி பல்கலைக் கழகத்திலும் உள்ள பேராசிரியர் பரோவும், எமெனோவும் தமிழில் உரையாடும் ஆற்றலைப் பெற்றிலர்; ஆயினும், அவர்கள் பதிப்பித்த திராவிட மொழிகளின் ஒப்பியல் அகரவரிசை எத்துணைச் சிறந்தது. இப்படி உலகம் அறியவேண்டுமென்று ஆங்கிலத்தில் வெளியிடப்

படும் ஆராய்ச்சி ஆண்டுக்கு ஆண்டு வளர்ந்துகொண்டே வருகின்றது. ஆதலால், நம்மவரும் தம் ஆராய்ச்சியை ஆங்கிலத்தில் வெளியிடுவதற்குக் காரணம் அதனை உலகம் அறியவேண்டுமென்பதேயாகும்.

ஒருகாலத்தில் இந்தியப் பண்பாட்டை அறிவதற்கு வட மொழி அறிவிருந்தாற் போதும் என்று மேல்நாட்டார் நினைத் தனர். ஆனால் இன்று திராவிட மொழிகளிற் சிறந்த தமிழ் மொழியை அறியாது இந்தியாவின் அடிப்படைப் பண்பாட் டையும் கலைகளையும் உணரமுடியாது என்றே, வடமொழியுடன் தென்மொழியையும் பயின்று வருகின்றனர் மேல்நாட்டு அறிஞர். எங்கு மேல்நாட்டுப் பல்கலைக் கழகங்களில் ஆழ்ந்த வடமொழிப் பயிற்சியுண்டோ அங்கு தமிழையும் பயிலத் தொடங்கிவிட்டனர். இம்மகாநாடுகளின் பயனை நாம் கணிக்கவேண்டுமாயின், சென்ற மூன்று மாநாடுகளின் தொகை நூல்களைப் (Proceedings) படித்துப் பார்க்க வேண்டும். அந்நூல்களைப் பார்த்தால் தமி ழாராய்ச்சி எவ்வளவிற்கு முன்னேறி வருகின்றது என்பதை உணரக்கூடும். இம்மகாநாட்டின் கட்டுரைகளும் நூலாக வரும் பொழுது அதை உணருவோம்.

வெறும் புகழிற்காகவோ, காரணமின்றிப் போற்றுவதற் காகவோ நாம் தமிழாராய்ச்சியில் இறங்குவதில்லை. ஆராய்ச்சி யாளனின் நோக்கம் உண்மையைக் கண்டுபிடிப்பது; உண்மை யைப் புலப்படுத்துவது; மறைந்திருக்கும் உண்மைகளை அகழ்ந் தெடுப்பது. மொழிகள் எத்துணையிருக்கத் தமிழிற்கு மட்டும் இம் மாநாடுகளை நடத்தவும், உலகத்து அறிஞர் வரவும் காரணங்கள் இருக்கவேண்டும். இந்தியப் பண்பாட்டில் 75 வீதம் விழுக்காடு திராவிடப் பண்பாடு என்று சுநிதிகுமார் சட்டர்ஜி கூறியிருக் கின்றார். இந்த உண்மையைத் தமிழ்த்துறைகளில் ஆராய்ச்சி நடத்துவோர் உணர்ந்துகொண்டே வருகின்றனர். சிந்துவெளி நாகரிகம், திராவிட நாகரிகம் என்று எண்ணுகின்றவர்க்குத் தமிழ் மக்களின் தொன்மையும், தமிழ்க் கலைகளின் தொன்மை யும் நன்கு புலனாகும். சிந்துவெளி நாகரிகத்தைச் சங்ககாலத் துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, அங்குள்ள தொடர்புகள் தெளிவாகின்றன. ஆதலால், இந்திய வரலாற்றைப் பயில் கின்றனர். அந்த வரலாற்றில் மாபெரும் பங்கு கொண்டவர் களைப் பற்றி ஆய்ந்தே தீரவேண்டும். பல்லவ மன்னரின் வெளி நாட்டுத் தொடர்புகள், உரோமப் பேரரசுடன் தமிழ்த் துறைமுகங்கள் கொண்ட வணிகத் தொடர்புகள், சோழ மன்னரின் ஆட்சியும் பேரரசும் ஆகியன ஆசியாவின் வரலாற்

றிலே பெரும் இடத்தைப் பெறுகின்றன. மார்க்கோ போலோ தென்னிந்தியாவைப் பார்த்தபின் பாண்டிய அரசே இந்தியாவின் மிக உயர்ந்த அரசென்று கூறியிருக்கிறூர்.

வரலாறு எவ்வளவுக்குச் சிறந்திருக்கின்றதோ அவ்வளவுக்கு இலக்கியமும் சிறந்துள்ளது. வடமொழி நீங்கலாக மற்றெல்லா இலக்கியங்களும் இந்தியாவில் ஏறக்குறைய பத்தாம் நூற்றுண்டுக்குப் பின்புதான் தோன்றின. ஆனுல் தமிழ் இலக்கியமோ கிறிஸ்துவுக்கு முன்னமே பெரும் மலர்ச்சியை அடைந்துள்ளது. மேலும் சங்க இலக்கியம் சமய இலக்கிய மட்டும் அன்று; மக்களுடைய வாழ்க்கையைக் காட்டும் உலக இலக்கியமும் அது. தொல்காப்பியமும், எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் இந்திய இலக்கியத்தில் மட்டுமல்ல, உலக இலக்கியத்திலேயே பெரும் இடத்தைப் பெற்றுள்ளன. வள்ளுவருடைய திருக்குறளைப் போன்ற நூல் உலகில் இல்லையென்பது அல்பெட் சுவைட்சரின் துணிபு. நீதி இலக்கியத்தைப் போல் நம் பத்தி இலக்கியமும் சிறந்தது. நம்முடைய கலைகள், நம்முடைய கோயில்கள் சிறப்புப் பெற்றவை. மொழி அமைப்பிலும், வளத்திலும் தமிழ்மொழி உலக மொழிகளிற் சிறந்தது. தமிழின் தொன்மை, அதன் வளம், புகழ் மண்டிக்கிடக்கும் பண்பாடு, இவற்றையெல்லாம் ஆராய்கின்றவர்கள் மேலும் மேலும் அவற்றை ஆராய விரும்புவர். ஆதலாலேதான், தமிழ் ஆராய்ச்சி வளர்ந்துகொண்டு வருகின்றது.

யாழ்ப்பாணத்திற் பல்கலைக்கழகம் ஒன்று இருந்திருந்தால் இந்த மாநாட்டினை இன்னும் எவ்வளவோ சிறந்த முறையில் நடத்தியிருக்கலாம். தமிழ் ஆராய்ச்சி நம் நாட்டில் வளர்வதற்கு வடக்கிலும் கிழக்கிலும் பல்கலைக்கழகங்கள் வேண்டும்.

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம்

தலைவர் :

பேராசிரியர் பிரான்சிஸ்கஸ் பேர்னடஸ் ஜகோபஸ் குயிப்பர்,
டி. லிற்., வடமொழிப் பேராசிரியர்,
லெடின் பல்கலைக் கழகம், ஒல்லாந்து.

துணைத் தலைவர் :

பேராசிரியர் ஜேன் பிலியோசா, எம். டி., டி. லிற்.
பிரெஞ்சுக் கல்லூரி, பாரிஸ்.
பணிப்பாளர், பிரெஞ்சு இந்தியவியல் நிறுவனம், பாண்டிச்சேரி.

இணைச் செயலாளர் :

வண. சேவியர் எஸ். தனிநாயகம்,
எம். ஏ., எம். லிற்., பிஎச். டி., டி. டி.
முன்னைநாட் பேராசிரியர், மலாயப் பல்கலைக் கழகம்,
மலேசியா.

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளை

தலைவர்:

பேராசிரியர் கலாநிதி சுப்பிரமணியம் வித்தியானந்தன்
தமிழ்த்துறைத் தலைவர், இலங்கைப் பல்கலைக் கழகப்
பேராதனை வளாகம்.

துணைத் தலைவர்கள் :

திரு. ச. அம்பிகைபாகன், பி. ஏ.
முன்னைநாள் அதிபர், வைத்தீஸ்வரக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

திரு. க. சி. தங்கராசா

கிழக்கிலங்கைக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத் தலைவர்.

திருமதி புனிதவதி திருச்செல்வம்
இலங்கை மகளிர்மன்றத் தலைவி

திரு பே. பஸ்தியாம்பிள்ளை, பி. ஏ., எம். ஏ.
சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை,
இலங்கைப் பல்கலைக் கழகக் கொழும்பு வளாகம்

திருமதி மகேஸ்வரி பாலகிருஷ்ணன், பி. ஏ.
மொழிபெயர்ப்பாளர், இலங்கை அரசாங்கத் திறைசேரி,
கொழும்பு.

இணைச் செயலாளர்கள் :

வண. சேவியர் எஸ். தனிநாயகம்,
எம். ஏ., எம். லிற்., பிஎச். டி., டி. டி.
முன்னைநாட் பேராசிரியர், மலாயாப் பல்கலைக் கழகம்,
மலேசியா.

திரு. ஜே. தே. ரத்தினம்
முன்னைநாள் அதிபர், புனித சேவியர் கல்லூரி,
நுவரெலியா, இலங்கை.

கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா
பட்டயம்பெற்ற பொறியியலாளர், கொழும்பு.

இணைப் பொருளாளர்கள் :

திரு. சி. அம்பலவாணர்
வழக்குரைஞர், வருமானவரி உசாத்துணையாளர்.

திரு ஆர். நமசிவாயம்
சட்டத்தரணி, கொழும்பு.

திரு. வீ. எஸ். துரைராஜா
பட்டயம்பெற்ற கட்டடக் கலைஞர்,
உரிமையாளர், துரைராஜா அசோசியேட்ஸ்.

கல்விக் குழு :

தலைவர் ;
பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன்

துணைத் தலைவர் :
கலாநிதி சி. பத்மநாதன், பி. ஏ., பிஎச். டி.
விரிவுரையாளர், வரலாற்றுத்துறை,
இலங்கைப் பல்கலைக் கழகப் பேராதனை வளாகம்.

செயலாளர்கள் :
திரு. பே. பஸ்தியாம்பிள்ளை, பி. ஏ., எம். ஏ.
விரிவுரையாளர், வரலாற்றுத்துறை.
இலங்கைப் பல்கலைக் கழகக் கொழும்பு வளாகம்.

கலாநிதி கே. இந்திரபாலா, பி. ஏ., பிஎச். டி.
விரிவுரையாளர், இலங்கைப்பல்கலைக்கழகப்பேராதனைவளாகம்.

கலாநிதி பொ. பூலோகசிங்கம், பி. ஏ., பிஎச். டி.
தமிழ் விரிவுரையாளர், இலங்கைப்பல்கலைக்கழகக்
கொழும்பு வளாகம்.

பிறகுழுத் தலைவர்கள்

நிதிக்குழுத் தலைவர்,
கலாசார ஊர்வலக் குழுத் தலைவர் :
அமைப்புக் குழுச் செயலாளர்,
திரு. வீ. எஸ். துரைராஜா
பட்டயம்பெற்ற கட்டடக் கலைஞர்.

விடுதி உணவுக்குழுத் தலைவர் :
திரு. க. சச்சிதானந்தன், எம். எஸ்சி.
ஆய்வு அலுவலர், கடற்றெழில் ஆராய்ச்சி நிலையம், கொழும்பு.

உபசரிப்புக் குழுத் தலைவர் :
திருமதி புனிதவதி திருச்செல்வம்

போக்குவரத்து சுற்றுலாக் குழுத் தலைவர் :
திரு. இ. பேரின்பநாயகம்
தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணிச் செயலாளர்.

பொருட்காட்சிக் குழுத் தலைவர் :
கலாநிதி சி. பத்மநாதன்

மலர் வெளியீட்டுக் குழு ஆசிரியர் :
கலாநிதி பொ. பூலோகசிங்கம்

துணை ஆசிரியர் :
திருமதி ம. பாலகிருஷ்ணன்

பகுதி I

சமூகவியல்

இலங்கையில் தமிழ்மொழி

மொழிக் கோரிக்கைகளும் மொழிச் சட்டங்களும்

அ. சிவராசா

1956 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது இருபத்து நாலு மணி நேரத்துள் சிங்களத்தை மாத்திரம் இலங்கையின் உத்தியோக மொழி ஆக்குவோம் என்ற சுலோகத்தை முன் வைத்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை முக்கியமாகக் கொண்ட மக்கள் ஐக்கிய முன்னணி என்ற கூட்டணி அமோக வெற்றியீட்டி அரசாங்கத்தை அமைத்துக்கொண்டது. திரு. எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்காவைப் பிரதமராகக் கொண்ட இவ் வரசாங்கம் மிகக் குறுகியதொரு காலப் பகுதியினுள் தனது தேர்தல் வாக்குறுதியினை நிறைவேற்றும் பொருட்டுக் கொண்டு வந்த முதலாவது சட்டம் உத்தியோக மொழிச் சட்டமாகும். இச் சட்டம் சிங்கள மொழியே இலங்கையின் தனியொரு உத்தியோக மொழியாக இருக்கும் என்ற வாசகங்களைக் கொண் டிருந்தது. இச் சட்டம் கொண்டுவரப்பட்டதோடு நீண்ட கால மாக நாட்டில் நிலவிவந்த மொழிப் பிரச்சினை ஒரு முனைப்பை யடைந்தது. நாட்டின் இரு பெரும் இனங்களான சிங்கள, தமிழ் இனங்களிடையே இலைமறை காய்போல் இருந்துவந்த எதிர்ப் புணர்வுகள் வெளிக்கிளம்பி ஒரு நெருக்கடி நிலையைத் தோற்று வித்தன. தமிழ் அரசியல் தலைவர்கள் இச் சட்டத்துக்கெதிராகத் தமிழ் மக்களிடையே பிரச்சாரங்களை மேற்கொண்டதோடு, அரசாங்கத்திடம் தமிழுக்கும் சிங்களத்துக்கும் சமமான உத்தி யோக அந்தஸ்து வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

தோற்றம்:

இம் மொழிக் கோரிக்கைகள் காலத்துக்குக் காலம் பல் வேறு உருவங்களை அடைந்தன என்பது இங்கு கவனிக்கற் பாலது. ஆரம்பத்தில் அந்நிய மொழியான ஆங்கிலத்துக்குப் பதில் தேசிய மொழிகள் உத்தியோக மொழிகளாக்கப்பட வேண்டும் எனச் சுயபாஷை இயக்கத்தினர் கோரினர். 1944ஆம்

ஆண்டிலிருந்து 1956 வரை சிங்களமும் தமிழும் உத்தியோக மொழியாதல் வேண்டும் என்ற நிலை இருந்த போதிலும், தமிழுக்கும் சிங்களத்துக்கும் எத்தகைய அந்தஸ்துத் தொடர்பு இருக்க வேண்டும் என்பது பற்றி ஒரு தெளிவான வரையறை இருக்கவில்லை. இடதுசாரிக் கட்சிகள் (குறிப்பாக இலங்கை சமசமாஜக் கட்சி), இலங்கைத் தமிழ் மக்களின் கட்சிகளாக இருந்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி (சமஷ்டிக் கட்சி) என்பன சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடையனவாக இருந்தன. இவற்றுள் இடதுசாரிக் கட்சிகள் பின்னர் ஒரு காலகட்டத்தில் இக் கோரிக்கையைக் கைவிட்டுச் சிங்களம் மட்டுமே அரச மொழி என்றும் தமிழுக்கு நியாயமான அளவு உபயோக அந்தஸ்து என்றும் ஏற்றுக்கொள்ள, தமிழ்க்கட்சிகள் தொடர்ந்தும் சம அந்தஸ்துக் கோரிக்கையைக் கொண்டனவாக இருந்தன. இவையும், தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் பிரச்சாரக் கூட்டங்களிலும் சம அந்தஸ்து என்பதை உறுதியாகவும் தொடர்ச்சியாகவும் கோரி வந்த போதிலும், 1956க்குப் பின்னர் நடந்த இணக்கம் காணும் பேச்சுவார்த்தைகளின்போது தமது சம அந்தஸ்துக் கோரிக்கையினைத் தளர்த்திச் சில குறைந்த பட்சக் கோரிக்கைகளை முன்வைக்கத் தயாராயிருந்தன என்று தெரியவருகிறது. இதிலிருந்து இம் மொழிக் கோரிக்கைகள் கால மாற்றங்கள், எதிர்பார்ப்புக்கள், சமூக பொருளாதாரச் சூழ்நிலைகள் முதலியனவற்ருற் பாதிப்புக்குட்பட்டன என்பது தெரியவருகிறது. சுதந்திரத்துக்கு முன்னர் (1948க்கு முன்பு) ஒரு மத்திய வர்க்க கல்வி கற்ற சிறுபான்மையினரால் மாத்திரம் நடாத்தப்பட்ட அரசியலாட்சி சுதந்திரத்துக்குப் பின்னர், குறிப்பாக 1956ஆம் ஆண்டளவில், சாதாரண மக்களும் பங்கு பெறுகின்ற ஒரு அரசியலாட்சியாக மாறியது. சனத்தொகைப் பெருக்கம், பொது சேவைத் தொழில்களுக்கான போட்டி, பொருளாதாரப் பின்தங்கல், வேலையின்மை என்பன 1956ஆம் ஆண்டளவில் மொழிபற்றிய நோக்கு பெரும்பான்மையினரிடையே மாற்றமடைவதற்குப் பின்னணியாக அமைந்திருந்ததாகத் தெரிகிறது. 1944ஆம் ஆண்டிற் சிங்களமும் தமிழும் உத்தியோக மொழியாதல் வேண்டுமென்பதை எந்தவித சங்கடமுமின்றி ஏற்றுக்கொண்ட சிங்களத் தலைவர்கள், 1956ஆம் ஆண்டில் அதனை ஏற்க முடியாதிருந்தமையும், 1958இல் சற்றுக் கீழிறங்கி நியாயமான அளவு தமிழ் உபயோகம் என்பதை ஏற்றுக்கொள்ளும் நிலையை அடைந்தமையும் அவதானத்துக்குரியனவாகும். இவ்விடத்தில் மாக்சியவாதிகளினுல் முன்வைக்கப்பட்ட கருத்தினையும் கவனத்துள்

கொள்ளல் அவசியமாகும். அவர்கள் மொழிப் பிரச்சினை என்பது உண்மையில் ஒரு பொருளாதாரப் பிரச்சினையே என்றும், நடைமுறையிலுள்ள பொருளாதார அமைப்பினை மாற்றிச் சமவுடைமைப் பொருளாதார அமைப்பினை ஏற்படுத்தினுல் மொழிப் பிரச்சினை தானே மறையும் என்றும் கூறுகின்றனர். ஆகவே மொழிக் கோரிக்கை என்பதைப் பல்வேறு கோணங் களினின்றும் பார்க்க முடிகின்றதென்பது தெரிகின்றது.

மொழிக் கோரிக்கைகள்:

மொழிசம்பந்தமாக இந்நாட்டில் முதன்முதலில் கோரிக்கை விடுத்தவர்கள் சுயபாஷை இயக்கத்தினராவர். இவ்வியக்கம் ஆங்கிலத்துக்குப் பதிலாகச் சுயமொழிகள் உத்தியோக மொழிகள் ஆக்கப்படவேண்டுமென்ற கொள்கையுடையது. பிரித் தானியர் ஆட்சிகாரணமாக ஆங்கிலம் கற்ற ஒரு சிறுபான்மை யோர் சமூகரீதியிற் பெற்றிருந்த அந்தஸ்தை எதிர்த்தும் சுயமொழிகளிற் கல்விகற்றவர்களுக்கு வேலை வசதிகளும், சமூக அந்தஸ்தும் இல்லாது இருந்த நிலையையும் இந்நாட்டினருக்கு விளங்காத அந்நியமொழியில் தாம் ஆட்சிசெய்யப்படுவதனையும் எதிர்த்தும் எழுந்த ஒரு இயக்கமே இதுவாகும். இக் கோரிக்கை களின் உந்துதல்கள் மத்தியில் 1944ஆம் ஆண்டு மே மாதம் 24ஆம் திகதி அரசாங்க சபையில் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்கள் மொழிபற்றிய பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்தார். அது ஒரு நியாயமான அளவு காலப்பகுதியினுள் சிங்களம் உத்தியோக மொழியாக்கப்படவேண்டும் என்பதாகும். அப் போது, அரசாங்கசபையில் அங்கத்துவம் பெற்றிருந்த தமிழ் அங்கத்தவர்களான திரு. ஜே. தியாகராசா, திரு. வி. நல்லையா, திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், திரு. ஏ. மகாதேவா, திரு. எஸ். நடேசன் போன்றோரே முதன்முதலில் தமிழ்மொழி உரிமைகள் பற்றிய கோரிக்கைகளை விடுத்தனர். அதாவது தமிழ்மொழியும் உத்தியோக மொழியாக்கப்படவேண்டும் என்று கோரினர். இதன்காரணமாக, அப்பிரேரணையைக் கொண்டுவந்த திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்களே அதனைத் திருத்திச் சிங்களம் தமிழ் இரண்டும் உத்தியோக மொழிகளாக்கப்படவேண்டும் என்று பிரேரித்தார். அது 27 ஆதரவு 2 எதிர் வாக்குகளுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1945இல் உத்தியோக மொழிகளில் மாற்றங்கள் ஏற்படுத்துவதுபற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப் பிக்க ஒரு தெரிவுக்குழு அமைக்கப்பட்டது. அது 1946ஆம் ஆண்டு தனது அறிக்கையைச் சமர்ப்பித்து அதில் சுயமொழிகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி 10 வருட கால மாற்றம்பெறும்

காலத்தைச் சிபார்சுசெய்து அதன்பின்னர் சுயமொழிகள் உத்தியோக மொழிகள் ஆக்கப்படவேண்டும் எனக் குறிப்பிட்டது. ஆகவே ஆரம்பத்தில் மொழிக் கோரிக்கைகள் சமூகங்களுக்கிடையேயான ஒரு போட்டியாக அன்றி, ஆங்கிலத்தின் இடத்துக்கெதிரான ஒரு கிளர்ச்சியாகவே அமைந்திருந்தது என்பது தெளிவாகின்றது. 1944ஆம் ஆண்டு தொடக்கம் 1956ஆம் ஆண்டு வரையும் இலங்கையிற் காணப்பட்ட பெரும்பாலான அரசியற் கட்சிகள் சிங்களமும் தமிழும் உத்தியோக மொழிகளாக்கப்படவேண்டு மென்ற கொள்கையுடையனவாகவே காணப்பட்டன. ஆனல், இடதுசாரிக் கட்சிகளும் இலங்கைத் தமிழர்களின் அரசியற் கட்சிகளாகிய தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக் கட்சிகளும் சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்கப்படவேண்டுமென்று கோரின.

1948இல் இலங்கை சுதந்திரம் அடைந்தபோது, ஆட்சிப் பொறுப்பைக் கையேற்ற தலைமைத்துவம் சிங்களத்தையும் தமிழையும் உத்தியோக மொழிகள் ஆக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டது. 1948ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் மந்திரிசபையிலே தமிழ்ப் பிரதிநிதிகளும் அங்கத்துவம் வகித்தனர். இக் காலப்பகுதியிலே குறிப்பாக 1956ஆம் ஆண்டுவரையும் தமிழ்மொழிக்கும் இலங்கையில் உத்தியோக அந்தஸ்து வழங்கப்படவேண்டும் என்பதில் எத்தகைய எதிர்ப்புக்களும் இருக்கவில்லை என்பது இலங்கையின் பிரதானமான அரசியற் கட்சிகளின் தலைவர்களது பேச்சுக்களிலிருந்தும் அவற்றின் கொள்கைத் திட்டங்களிலிருந்தும் தெளிவாகியது. ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது மந்திரி சபையில் அங்கம்வகித்து 1951ஆம் ஆண்டிற் சில கருத்து வேறுபாடுகள் காரணமாக அதிலிருந்து விலகிய திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்கள் புதியதொரு கட்சியாகிய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை அமைத்தார். அக்கட்சி தனது முதலாவது கொள்கைத் திட்டத்தில் மொழிகள்பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது. சிங்களமும் தமிழும் உடனடியாக உத்தியோக மொழிகள் ஆக்கப்படுவது முக்கியமானது; அப்போதுதான் இந்நாட்டின் மக்கள் தமது சொந்த நாட்டிலேயே அந்நியர்கள் போன்றிருக்கும் நிலை மாறும் என்பதாகும்.

1952ஆம் ஆண்டில் திரு. டட்லி சேனநாயக்காவின் தலைமையில் வெற்றிபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மகாநாட்டில் அதன் தலைவர் மொழிகள்பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்: ''எமது முன்னைய அரசாங்கம் ஏலவே சிங்களம் தமிழ் என்ற மொழிகளே இலங்கையின் உத்தியோக

மொழிகளாக ஆக்கப்படவேண்டும் என்ற கொள்கையை ஏற்றுள்ளது. ஒரு நியாயமான காலப்பகுதியினுள் இந்த நோக்கம் பூர்த்தியாக்கப்படும் நடைமுறை சாத்தியமின்மைகளைக் கவனத்துட்கொண்டு இந் நடவடிக்கை படிப்படியாக மேற்கொள்ளப்படும்''.

இலங்கையின் இடதுசாரிக் கட்சிகளுட் பிரதான இரண்டு கட்சிகளான இலங்கை சமசமாஜக் கட்சியும் கொம்யூனிஸ்ட் கட்சியும் சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து அளிக்க வேண்டுமென்ற கொள்கையுடையனவாகவே இக் காலப் பகுதியில் இருந்தன. ஆனல், பின்னர் அக்கட்சிகளின் அங்கத்தவர்களிடையே இக்கொள்கைக்கு எதிர்ப்புக்கள் நிலவியதாகவும் தெரியவந்தது. அதாவது சில அங்கத்தவர்கள் சிங்களத்துக்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டுமென்ற கருத்துடையோராய்க் காணப்பட்டனர். 1944இல் இலங்கைவாழ் தமிழ்மக்களின் அரசியல் உரிமைகளேயும் அவர்களது அபிலாசைகளேயும் பிரதிபலிக்கும் நோக்குடன் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் தலைமையில் அமைக்கப்பட்ட கட்சியே அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியாகும். இக் கட்சி இலங்கைக்கு அரசியற் சீர்திருத்தம் அளிக்கவந்த சோல்பரிக் குழுவினர்முன் இலங்கையின் சிறுபான்மையினருக்குச் சம பிரதிநிதித்துவம் (50—50) வழங்கவேண்டுமென்று கோரியது. உத்தியோக மொழிப் பிரச்சினையிற் சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்கப்படவேண்டுமென்றும் இதன் தலைவரான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கோரிக்கை விடுத்தார்.

1949ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பிரஜா உரிமைச் சட்டம் ஒன்றைக் கொண்டுவந்தது. இச்சட்டம் காரணமாகப் பெரும்பாலான இலங்கைவாழ் இந்தியத் தமிழர்கள் தமது பிரஜா உரிமையையும் குடியுரிமையையும் இழக்கவேண்டியதாயிற்று. அப்போது மந்திரிசபையில் அங்கம் வகித்த தமிழ்க் காங்கிரஸ் தலைவர் இம் மசோதாவை ஆதரித்து வாக்களித்தார். இதனே அக்கட்சியில் அங்கத்துவம் வகித்துப் பாராளுமன்றத்திற் பிரதிநிதிகளாக இருந்த திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் போன்ருேர் விரும்பாததால் அக்கட்சியிலிருந்து விலகிப் புதியதொரு கட்சியாகிய இலங்கைத் தமிழரசுக் கட்சியை (சமஷ்டிக் கட்சி) ஆரம்பித்தனர். அக்கட்சி தனது கொள்கைப் பிரகடனத்தின்போது, வேறு பல விடயங்களோடு மொழிபற்றிய விடயத்தில் ''சிங்கள மொழியோடு தமிழுக்கும் பூரண சம அந்தஸ்து அளிக்கப்படவேண்டும்'' என்ற கோரிக்கையுடையதாக இருந்தது. 1956ஆம் ஆண்டு தொடக்கம் 1972ஆம்

ஆண்டு வரையும் அதன்பின்னரும் தமிழ்மொழி உரிமைகள் பற்றிப் பல கோரிக்கைகளை முன்வைத்துப் பல போராட்டங்களை நடத்திய கட்சியும் இதுவேயாகும். இது இலங்கை அரசியல் பதவியேற்ற அரசாங்கங்களிடம் சில குறைந்தபட்சக் கோரிக்கை களையும் முன்வைத்தது என்பதும் குறிப்பிடக்கூடியதொரு அம்சமாகும்.

மொழிபற்றிய கோரிக்கைகளில் 1956ஆம் ஆண்டு ஒரு முக்கியமான காலப் பகுதியாகும். ஏனெனில், இக் காலப் பகுதியிலேதான் சிங்களம் மட்டும் தனியொரு உத்தியோகமொழி யாக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகள் பெரும் அளவுக்கு வலுத்து அவை அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட காலமுமாகும். இந்த மாற்றத்துக்குக் காரணங்கள் எவை என அறிதல் அவசியமாகிறது. இக் கொள்கை மாற்றத்துக்குக் காரணமாயிருந்தவைகளுள் சிங்கள மறுமலர்ச்சி இயக்கம் ஒரு முக்கிய பங்கு வகித்தது. இவ்வியக்கம் சிங்கள மொழியும் தேரவாத புத்தசமயமுமே சிங்கள மக்களுடைய தனித்துவத் தைக் கட்டிக்காத்து அண்மையிலுள்ள திராவிட மொழி பேசும் மக்களினின்றும் தம்மை வேறுபடுத்துகின்றனவெனவும், சிங்கள பாரம்பரியத்திற் சிங்கள மொழிக்குத் தனியொரு இடமுண்டு எனவும், எனவே சிங்களம் இந்நாட்டின் உத்தியோக மொழி யாக்கப்படவேண்டும் என்றும் கோரியது. சுயபாஷை இயக்கத் துக்குக் காரணமான உணர்ச்சிகளே, சிங்களம் மட்டும் உத்தி யோக மொழியாக்கப்படவேண்டும் என்பதற்கும் காரணமா யிருந்தது. பல சிங்கள மக்களைப் பொறுத்தவரை, சிங்களத் துக்கும் தமிழுக்கும் சமமான உத்தியோக அந்தஸ்து அளிக்கப் பட்டாற் சிங்களம் காலக்கிரமத்தில் அழிந்துபடலாம் எனவும் எண்ணத் தொடங்கினர். தமிழர்கள் தாம் சிங்களம் மட்டும் சட்டத்தால் அரசியல் ரீதியில் ஒதுக்கப்படுவார்கள் என்று எவ் வாறு பயந்தார்களோ அவ்வாறே சிங்கள மக்களும் சிறிய பாக்குநீரிணைக்கு அப்பாலுள்ள கோடிக்கணக்கான தமிழ் பேசும் இந்தியத் தமிழ் மக்களின் கலாசார ஆக்கிரமிப்புக்குட்படலாம் எனப் பயங்கொண்டனர். இலங்கையிலுள்ள 60 லட்சம் சிங்கள மக்கள்தான் உலகிலேயே சிங்களமொழியைப் பேசுபவர்க ளாகவும், சிங்கள கலாசாரத்தின் பிரதிநிதியாகவும் உள்ளனர் என்றும், மாறாகத் தமிழ்மொழியின் தலைவிதி இலங்கையில் எவ்வாறு அமைந்தபோதிலும் அது உயிருள்ள மொழியாக வாழக்கூடிய நிலை உண்டு எனவும் சிங்களவர்கள் வாதிட்டனர். தமிழ்மொழி, பழம்பெரும் இலக்கியங்களுடன் இந்தியாவில் அதனைப் படிப்பதற்குரிய நிலையிலும் பிரசுர வெளியீட்டு

வசதிக்கான பல நிலையங்களையுடைய நிலையிலும் இருந்ததனுற் சிங்களத்துடன் தமிழுக்கும் சம அந்தஸ்து அளிக்கப்பட்டால், சிங்களத்தை ஆங்கிலத்தின் கையில் இருந்து காப்பாற்றித் தமிழின் கையிற் கொடுத்ததாக முடியும் என வாதிட்டனர். பெரும்பான்மையோரின் பயத்தினை திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா பின்வருமாறு குறிப்பிட்டார்:

''தமிழ்மொழி பல லட்சக்கணக்கானேரால் மற்றைய நாடுகளிற் பேசப்பட்டு வருவதோடு, பெருமளவு பரந்ததொரு இலக்கியத்தையும் கொண்டிருக்கிறது. இந்த நாட்டில் மட்டும் ஒருசில லட்சக்கணக்கானேராற் பேசப்படும் சிங்களத்தைவிடத் தமிழ்ப்பேசும் மக்களுக்குத் தமது இலக்கியத்தையும் கலாசாரத்தையும் வளர்க்க நிறைய வாய்ப்புகளுண்டு. அத்துடன் இந்நாட்டின் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மட்டுமல்லாது சிங்கள மாகாணங்களிலும் பெருந்தொகையான தமிழர்கள் வாழ்கிருர்கள். இவையெல்லாம் சேர்ந்து சிங்களமொழியின் உபயோகத்தைச் சுருக்கிக் காலக்கிரமத்தில் அம்மொழி அழிந்து போகும் நிலை ஏற்படலாம் எனச் சிங்கள மக்கள் கொள்கின்ருர்கள்'' என்று குறிப்பிட்டார்.

சிங்களம் மட்டும் உத்தியோக மொழியாக்கப்படவேண்டுமென்று கோரியவர்கள்—சிங்களமே மிகப் பெரும்பான்மையோரின் மொழியென்றும் அதாவது இந்நாட்டில் வாழும் 70 வீதம் ஆனவர்களது மொழியென்றும் தமிழ்ச் சிறுபான்மையோரின் தொகை அம்மொழிக்குச் சம அந்தஸ்து வழங்கப்படுவதற்குப் போதுமானதல்ல என்றும் வாதிட்டனர். சிங்களவர்களுக்கு மொழி இயக்கம் அவர்களுடைய மறுமலர்ச்சியினதும் எழுச்சியினதும் சின்னமாகவும் தனித்துவம் பெருமைமிக்க இனத்தினது சுய உரிமைகள் இயக்கமாகவும் ஆகியது. ஆகவே, சிங்களம் மட்டும் என்ற பிரசாரம் சாதாரண சிங்கள மக்களிடையே ஒரு பலம் மிக்க ஆதரவைப் பெறக்கூடியதாயிற்று.

1953இல் ஆங்கிலத்திலிருந்து சுயபாஷைகளுக்கு மாறுவது பற்றி ஆராய அமைக்கப்பட்ட உத்தியோகமொழிக் கொமிஷன் தனது இறுதி அறிக்கையை வெளியிட்டுத் தனியொரு மொழியே உத்தியோக தேசிய மொழியாக்கப்படுதல் சிறந்தது எனக் குறிப்பிட்டது. இதே ஆண்டில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தனது மொழிக்கொள்கைபற்றி மறுபரிசீலனை ஒன்றை மேற்கொள்ள ஒரு குழுவை அமைத்தது. இக்குழு சிங்களம் மட்டும் என்பதற்குச் சாதகமாகத் தன் கருத்தை வெளியிட்டது. ஆகவே, பெரும்பான்மை மக்களிடையே நிலவிய இந்த மாற்றத்தினைக் கட்சியின் 1955ஆம் ஆண்டு வருடாந்த மகாநாடு ஏற்றுக்

கொண்டது. சிங்களம் மட்டும் உத்தியோகமொழி ஆக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை தெற்கில் வலுவடைந்துவந்த இதே காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் அப்போதைய பிரதமராக இருந்த சேர் ஜோன் கொத்தலாவல 1954 செப்டெம்பர் மாதத்தில். தனது யாழ்ப்பாண விஜயத்தின்போது, அரசியற் திட்டத்தைத் திருத்திச் சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்குவதாக வடக்கில் உத்தரவாதம் அளித்தார். இது தெற்கில் ஓர் எதிர்ப்பியக்கத்தை ஏற்படுத்தியதோடு மட்டுமல்லாமல், ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்தவர்களிடையேயும் கருத்து வேறுபாடுகளை ஏற்படுத்தியது. பெருகிவந்த சிங்களம் மட்டும் என்ற கோரிக்கைகளினுல் ஐக்கிய தேசியக் கட்சியும் 1956 பெப்ரவரியில் நடந்த வருடாந்த மகாநாட்டில் சிங்களம் மட்டுமே இலங்கையின் தனியொரு அரசகரும மொழியாக்கப் படவேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டது.

1956ஆம் ஆண்டில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை முக்கியமாகக் கொண்ட மக்கள் ஐக்கிய முன்னணிக் கூட்டரசாங்கம் சிங்களம் மட்டுமே நாட்டின் தனியொரு உத்தியோக மொழி என்னும் சட்டத்தைக் கொண்டுவந்தது. இதற்கெதிராகத் தமிழ்மக்கள் குறிப்பாகத் தமிழரசுக் கட்சியினர் பல எதிர்ப்பியக்கங்களை நடத்தினர். இணக்கம் காண்பதற்கான பேச்சுவார்த்தைகளின்போது சில குறைந்தபட்ச கோரிக்கைகளையும் முன்வைத்தனர். அவற்றுள் முக்கியமானது 1957ஆம் ஆண்டு ஜூலை 26ஆம் திகதி திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவுக்கும் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கும் நடந்த பேச்சுவார்த்தைகளின் பயனுக உருவாகிய பண்டா—செல்வா ஒப்பந்தமாகும். இது பின்னர் கிழித்தெறியப்பட்டபோதும், இதிற் காணப்பட்ட மொழிபற்றிய அம்சங்கள் முக்கியமானவையாகும்.

இதில் தமிழை இலங்கைத் தேசிய சிறுபான்மையோரின் மொழியாக அங்கிகரிப்பதெனவும், வடக்குக் கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழி தமிழாக இருக்கும் எனவும் இணக்கம் காணப்பட்டது. ஆகவே, தமிழ்த் தலைவர்கள் இணக்கம் காண்பதற்காகச் சம அந்தஸ்துக் கொள்கையைக் கைவிட்டுச் சில நியாயமான கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கவும் தயாராயிருந்தனர் என்பது தெரிகின்றது.

மொழிச் சட்டங்கள்:

1956இல் பதவியேற்ற மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தாற் கொண்டுவரப்பட்ட மொழிச்சட்டம் (1956 ஜூலை 7) பின்வருமாறு அமைந்திருந்தது: ''சிங்கள மொழியே இலங்கையின் தனியொரு உத்தியோக மொழியாக இருக்கும்''.

இதற்கெதிராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையில் நடத்தப்பட்ட சத்தியாக்கிரகம், சிங்கள ஸ்ரீ எதிர்ப்பியக்கம் போன்றவை தோல்வியில் முடிந்தன. 1958ஆம் ஆண்டளவில் சிங்கள தமிழ் இனங்களிடையே கலவரம் ஒன்று ஏற்பட்டுப் பல உயிர்கள் பலியாகின. தமிழ் அரசியல் தலைவர்கள் பலர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். நாடு ஒரு இனக் கலவரத்தையும் கண்டது. இத்தகைய நிகழ்ச்சிகள் காரணமாக அதே அரசாங்கம் 1958ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 4ஆம் திகதி இன்னெரு மொழிச் சட்டத்தினைக் கொண்டுவந்தது. அது தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டம் எனப்பட்டது. அது பின் வரும் அம்சங்களைக் கொண்டிருந்தது:-

அரசாங்க பாடசாலைகளிலும் உதவிபெறும் பாடசாலைகளிலும் பயிலும் தமிழ் மாணவர்கள் தமிழ் மொழியிலே கல்வி பயில முடியும். இலங்கைப் பல்கலைக் கழகத்தில் சிங்கள மொழி போதன மொழியாகும்போது, தமிழ்மொழி மூலம் பயின்று பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்கள் அங்கு தமிழ் மொழியிலேயே கல்வி பயிலலாம்.

தமிழ்மொழிமூலம் கல்விபயின்ற ஒருவர் அரசாங்க சேவையிற் சேர்வதற்கு நடாத்தப்படும் பரீட்சைக்குத் தமிழ்மொழி மூலமே தோற்றமுடியும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ளவர்கள் தமிழ்மொழியில் அரசாங்கத்துடன் தொடர்புகொள்ளலாம்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களிற் சில குறிப்பிட்ட நிர்வாகத் தேவைகளுக்குத் தமிழ்மொழியைப் பயன்படுத்தலாம்.

இச் சட்டத்தினை அமுல் நடத்துவதற்கு அவசியமான உப விதிகளை ஆக்கும் அதிகாரம் பிரதமருக்கே வழங்கப்பட்டது. ஆனுல் அதனை அமுல் நடத்துவதற்கு அவசியமான உப விதிகளை இயற்றுவதற்கு 8 வருடங்கள் சென்றன. அது 1966ஆம் ஆண்டு ஐ. தே. கட்சி அரசாங்கத்தினுல்தான் கொண்டுவரப்பட்டு தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) விதிகள் எனப்பட்டது. அது பின்வரும் அம்சங்களைக் கொண்டிருந்தது.

1956ஆம் ஆண்டின் அரசகருமமொழிச் சட்டத்திற்கு எவ்விதமும் குந்தகம் ஏற்படாதவகையில், அதாவது சிங்கள மொழியே இலங்கையின் தனியொரு உத்தியோக மொழியாக இருக்கும் என்பதற்கு முரணேற்படாதவகையில், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசாங்க திணைக்களங்களிலும் ஏனை அரசாங்க நிறுவனங்களிலும் நடாத்தப்படும், எல்லாவகை அரசாங்க பொது அலுவலகப் பொதுப் பதிவுகளை வைத்தற்குத் தமிழும்

பயன்படுத்தப்படும் எனவும், அரசாங்க அதிகாரிகளுக்கிடையே தமிழ்மொழியில் கற்றவர்களுக்கு இடையே நடைபெறும் கடிதப் போக்குவரத்துக்களிலும் அரசாங்க அதிகாரிகளும், வடக்குக் கிழக்கு மாகாணங்களிலே உள்ள தமது அலுவல்களைத் தமது மொழியிலே நடாத்துகின்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இடையே நடைபெறும் கடிதப் போக்குவரத்துக்களிலும் தமிழ் மொழியும் பயன்படும் எனவும் இவ்விதிகளிற் கூறப்பட்டன. மேலும் அரசாங்கத்தினுலும் ஏனைய பொது நிறுவனங்களாலும் வெளியிடப்படும் சட்டங்கள், ஆணைகள், விதிகள், பிரகடனங்கள், வர்த்தமானிகள், வெளியீடுகள் அனைத்தும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்படவேண்டுமென்றும் சட்டம் விதிக்கப்பட்டது.

1970ஆம் ஆண்டுத் தேர்தலில் வெற்றிபெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, இலங்கை சமசமாஜக் கட்சி, கொம்யூனிஸ்ட் கட்சிகளை உள்ளடக்கிய ஐக்கிய முன்னணி இலங்கையைக் குடியரசாக்கும் நோக்குடன் புதியதொரு அரசியல் அமைப்பினை வரைந்தது. அவ்வரசியல் திட்டத்தினை 1972 மே மாதம் 22ஆந் திகதி நடைமுறைக்குக் கொண்டுவந்தது. இந்த அரசியல் திட்டத்தில் மொழிபற்றிய சரத்துக்கள் பின்வருமாறு காணப்படுகின்றன:-

இலங்கையின் அரசகருமமொழி 1956ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க அரசகருமமொழிச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு சிங்கள மொழியாதல் வேண்டும்.

தமிழ்மொழியின் உபயோகம் 1958ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கத் தமிழ்மொழி (விசேட விதி ஏற்பாடுகள்) சட்டத்திற்கிணங்க இருத்தல்வேண்டும்.

1958ஆம் ஆண்டில் 28ஆம் இலக்கத் தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டு அரசியலமைப்புத் தொடங்கப்படுவதற்கு முன்னர் இருந்த தமிழ்மொழி உபயோகத்துக்கான எதுவேனும் ஒழுங்குவிதி அரசியலமைப்பின் ஏற்பாடொன்ருக எவ்வகையாகவேனும் பொருள் கொள்ளப்படலாகாது.

இப்புதிய அரசியல் திட்டத்துக்குத் தமிழ்மக்களும் தலைவர்களும் எதிர்ப்புத் தெரிவித்தமைக்கு, இம்மொழி பற்றிய சரத்துக்கள் முக்கிய காரணம். தற்போது தமிழர் கூட்டு முன்னணி (தமிழரசு—தமிழ்க் காங்கிரஸ்) ஒரு 6 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, அது வழங்கப்படாதுவிடின் போராட்டங்கள் நடத்தப்போவதாக அறிவித்துள்ளது. இக்கோரிக்கைகளுள்ளும் மொழி உரிமைக் கோரிக்கைகள் முக்கிய இடம்பெற்றுள்ளன வெனத் தெரிகிறது.

வேளைக்காரப் படைகள்

சி. பத்மநாதன்

1. தென்னிந்தியாவிலே வேளைக்காரர்:

தமிழக வரலாற்றிலே சோழராட்சிக் காலம் பல தனிச் சிறப்புக்களைக் கொண்டதாக விளங்குகின்றது. ஒன்பதாம் நூற்றாண்டிலே விசயாலய சோழனுடைய ஆட்சியிலே தென்னிந்திய அரங்கிலே மீண்டும் எழுச்சிபெறத் தொடங்கிய சோழவரசு முதலாம் இராசராசன் *(985—1016)*, முதலாம் இராசேந்திரன் *(1014—1044)* ஆகியோரின் காலத்திலே பெரு வளர்ச்சி பெற்றது. பாண்டிநாடு, சேரநாடு, கங்கபாடி, நுளம்பபாடி, ஈழம் முதலிய நாடுகள் யாவும் சோழப் பேரரசின் மண்டலங்களாய் அமைந்திருந்தன.

இராசராசனது ஆட்சியிலே சோழரின் முற்போக்கான ஏகாதிபத்தியம் தோற்றுவித்த சக்திகள் நிர்வாகம், படையமைப்பு, கட்டிடவியல், கலை, சமயம், இலக்கியம் போன்ற துறைகளிலே ஆக்கபூர்வமான விளைவுகளை ஏற்படுத்தியிருந்தன.[1] நீர்ப்பாசனம், வேளாண்மை, கைத்தொழில், வாணிபம் ஆகிய துறைகளிலே அதிக முன்னேற்றம் ஏற்பட்டது. ஏறக்குறைய நான்கு நூற்றாண்டுக்காலப் பரப்புடைய சோழராட்சியிலே ஏற்பட்ட நிர்வாக அமைப்பின் வளர்ச்சி, பொருளாதார முன்னேற்றம் போன்றவற்றின் விளைவாகச் சமுதாய அமைப்பிலே பல மாற்றங்கள் ஏற்பட்டன.

சமுதாய மாற்றங்களை ஏற்படுத்திய சாதனங்களிற் சோழரின் படையமைப்பும் ஒன்றாகும். மிகுந்த பலம் பொருந்திய சோழப் படைகள் பிற மன்னரைத் தோற்கடிப்பதற்கும் பேரரசினை வளர்த்து வலுப்படுத்திக்கொள்வதற்கும் சோழருக்குப் பெரிதுந் துணையாகவிருந்தன. சோழப் பேரரசு காலப்போக்கிலே வளர்ச்சியடைந்து செல்ல, அதன் படையமைப்பும் மிகப் பெரிதாக வளர்ச்சியடைந்தது. சோழர் காலத்துச் சாசனங்களிலே ஏறக்குறைய எழுபது படைப்பிரிவுகளின் பெயர்கள் காணப்படுகின்றன.[2] இவற்றுள் முப்பதுக்கு மேற்பட்டவை முதலாம் இராசராசன் காலத்தைச் சேர்ந்தவை. இப்படைகள் அமைக்கப்பட்டபோது அவை அமைக்கப்படுவதற்கு ஏதுவா

யிருந்த தேவையினையும் சமகாலத்து மக்களுக்கு நினைவுறுத்தும் வண்ணமாக அவற்றின் பெயர்கள் அமைந்தன என்பது நீலகண்ட சாஸ்திரி அவர்களின் விளக்கமாகும்.[3]

சோழப் பெருமன்னரின் வேளைக்காரப் படைகள்:

சோழப் பெருமன்னரின் இராணுவ அமைப்பிலே மூன்றுகை மகாசேனை, கைக்கோளப் பெரும்படை, வேளைக்காரப் படை என்பனவே மிகவும் முக்கியத்துவம் பெற்றிருந்தன என்று கருதலாம். அரச சேவையிலுள்ள படைகளுள் மிக நம்பிக்கை வாய்ந்தனவும் நிலையானவையு மாகியவற்றுள் வேளைக்காரப் படையும் ஒன்றாகும். வேளைக்காரர் (ஆபத்து) வேளை ஏற்படு மிடத்துத் தமது உயிரைக் கொடுத்தேனும் அரசனையும் அவ னுடைய இலட்சியத்தையும் பாதுகாப்பதற்கு என்றுமே தயாரா யிருந்தனர் என்பதை அவர்களின் பெயர் குறித்து நிற்கின்றது.

சோழப் பெருமன்னரின் காலத்திற்கு முற்பட்ட தமிழகத்துச் சாசனங்களிலே வேளைக்காரர் பற்றிய குறிப்புக்கள் எதுவுங் காணப்படவில்லை. வேளைக்காரர் பற்றிய குறிப்புக்களிலும் பெரும்பாலானவை சோழப்பேரரசின் எழுச்சிக் காலத்தைச் சேர்ந்தவை. எனவே, அவற்றை முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன் முதலிய சோழ மன்னர்களே அமைத் தனர் எனக் கொள்ளலாம்.

தஞ்சைப் பெருங்கோயிலிலே வரையப்பெற்றுள்ள முதலாம் இராசராசனுடைய காலத்துக் கல்வெட்டுக்களிலே மேல்வரும் வேளைக்காரப் படைகளின் பெயர்கள் வருகின்றன:[4]

1. பெருந்தனத்து வலங்கை வேளைக்காரப் படைகள்
2. அழகிய சோழத் தெரிந்த வலங்கை வேளைக்காரப் படைகள்
3. அரிதுர்க்க லங்கன தெரிந்த வலங்கை வேளைக்காரர்
4. சந்திர பராக்கிரம தெரிந்த வலங்கை வேளைக்காரர்
5. க்ஷத்திரிய சிகாமணித் தெரிந்த வலங்கை வேளைக்காரர்
6. மூர்த்த விக்கிரமாபரண தெரிந்த வலங்கை வேளைக் காரர்
7. நித்தவிநோத தெரிந்த வலங்கை வேளைக்காரர்
8. ராஜகண்டீரவ தெரிந்த வலங்கை வேளைக்காரர்
9. ராஜராஜ தெரிந்த வலங்கை வேளைக்காரர்
10. ராஜவிநோத தெரிந்த வலங்கை வேளைக்காரர்
11. விக்கிரமாபரண தெரிந்த வலங்கை வேளைக்காரர்.

இப்படைகளெல்லாம் சோழ மன்னர்களது அல்லது சோழ இளவரசர்களது விருதுகளைத் தம் சிறப்புப் பெயர்களாகப் பெற்றுள்ளன. தமிழ் நாட்டிலுள்ள சாசனங்களிலே திருச்சூல வேளைக்காரர், திருச்சிற்றம்பல வேளைக்காரர், பூ வேளைக்காரர், கள்ள வேளைக்காரர், ராக்ஷஸ வேளைக்காரர் முதலிய பலவகையான பிரிவுகளைப்பற்றியும் குறிப்புக்கள் வருகின்றன.[5] இவற்றின் சிறப்புப் பெயர்களுக்கான காரணங்களை இலகுவிலே அறிய முடியாது.

மலையமான் - வேளைக்காரர் :

சோழப் பேரரசிலிருந்த குறுநில மன்னரும் வேளைக்காரப் படைகளை வைத்திருந்தனர். அத்துடன் அவர்களிற் சிலர் வேளைக்காரர் என்னும் வகுப்பினரைச் சேர்ந்திருந்தனர். தொண்டை மண்டலத்திலுள்ள மலையமாஞட்டுக் குறுநில மன்னரான மலையமான்களுக்கும் வேளைக்காரருக்குமிடையில் நிலவிய தொடர்புகளைப் பல கல்வெட்டுக்கள் மூலம் அறியமுடிகின்றது. மலையமான்கள் ஜனநாத வளநாடு என்னும் மலையமாஞட்டை கிளியூர், ஆடையூர் என்னுமிடங்களிலிருந்து ஆண்டுவந்தனர். தென் ஆற்காடு மாவட்டத்துத் திருக்கோயிலூர் தாலுகாவைச் சேர்ந்த அரகண்ட நல்லூரிலுள்ள ஒப்பிலாமணீஸ்வரர் ஆலயத்திலே எழுதப்பெற்ற கல்வெட்டுக்கள் சற்றுக்குடாதான் வன்னியர்நாயன் என்ற மலையமானுக்கு வேளைக்காரர் பலர் சத்தியஞ்செய்து கொடுத்தமைபற்றி எடுத்துரைக்கின்றன.[6] தாம் என்றுமே மலையமானுக்கு ஆதரவாயிருப்பதாகவும் அவனிறக்குமிடத்துத் தாமும் அவனேடு இறப்பதாகவும் வேளைக்காரர் அறங்கூறியுள்ளனர். எனவே, வேளைக்காரர் மலையமான்களின் படைகளிலே இருந்தனர் என்பது தெளிவாகின்றது.

மலையமான்கள் வேளைக்காரப் படைகளுக்குத் தலைவராயிருந்ததோடு அவர்களுமே வேளைக்காரர் என்பதைச் சாசனங்கள் மூலம் அறியமுடிகின்றது. சேதியராய மலையமான், கிளியூரன் கோவல்ராய மலையமான், பலவாயுத வல்லவ மலையமான் என்னும் வேளைக்காரர் கிளியூர் மலையமாஞகிய இறையூரன் சற்றுக் குடாதானுக்குச் சத்தியஞ் செய்து கொடுத்தமைபற்றிக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.[7]

வன்னியர் - வேளைக்காரர் :

வேளைக்காரருக்கும் வன்னியருக்குமிடையிலிருந்த நெருங்கிய தொடர்புகளைச் சாசனங்கள் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. திருக்கோவலூரிலுள்ள சில கல்வெட்டுக்கள் வேளைக்

காரரின் சேவையினைப் பெற்றிருந்த மலையமான்களிற் சிலர் வன்னியர்நாயன் என்ற விருதினையுங் கொண்டிருந்தனர் என்பதை உணர்த்துகின்றன.[8] சில தடவைகளிலே அவ்விருது வன்னியர் மக்கள்நாயன் என்ற விரிந்த நிலையிற் காணப்படுகின்றது. வன்னியர்நாயன் என்னும் விருது (1) வன்னியர் என்னும் சமூகத்தவரின் தலைவன், (2) வன்னியர் படையின் நாயகன் என்னும் பொருள்களைக் குறிக்கும் எனக் கருதலாம். சோழப் பேரரசிலே காணப்பட்ட குறுநில மன்னருட் சிலர் படைத்தலைவராயுமிருந்தனர். ஆடையூர் மலையமானான அமட்டாழ்வான் கரிகால சோழன் வன்னியர்மக்கள் நாயன் என்பான் இரண்டாம் இராசாதிராசன் காலத்திலே படைத்தலைவனாயிருந்தான்.[9]

மலையமான்கள் வன்னியர் என்பதனாலும் அவர்களுட் சிலர் வேளைக்காரர் என்ற காரணத்தினாலும் வேளைக்காரரிற் சிலர் வன்னியரென்று ஊகிக்கலாம். வன்னியர் வேளைக்காரர் என்ற கருத்து ஒரு கல்வெட்டின் சான்றிலிருந்து வலுப்பெறுகின்றது, திருக்கோயிலூரிலுள்ள கல்வெட்டொன்றிலே ஒரு வேளைக்காரி வன்னியநாச்சி என்று குறிப்பிடப்பெற்றுள்ளாள்.[10] ஆகவே. வேளைக்காரன் வன்னியநாயன் என்பது உறுதியாகின்றது.

வாணர்குலம் - வேளைக்காரர் :

சோழப் பேரரசிற் பலர் குறுநில மன்னர் குலங்களைச் சேர்ந்த பெண்களை மணந்திருந்தனர். பெரும்பாணப்பாடி என்னும் பகுதியில் ஆட்சி செலுத்திய வாணருக்கும் சோழருக்குமிடையிலே மணத்தொடர்பு ஏற்பட்டிருந்தது. மூன்றாவது இராசராசனுடைய மெய்க்கீர்த்தியின் மேல்வரும் பகுதி அதனை நன்கு உணர்த்துகின்றது:—

> உலகுடைய பெருமாளுடன் ஒக்க முடிகவித்தாள்
>
> இராஜராஜன் பிரியா வேளைக்காரி இராஜராஜன் திருத்தாலி பெற்றுடையாள்
>
> உரைசிறந்த தனியாணை உடனாணை பெற்றுடையாள்
>
> புவனியேழ் தனதாணையிற் புரக்கும் அந்தப்புரப் பெருமாள் வாணர்குல நில விளக்கு.[11]

இராசராசனோடு இணைந்து ஆட்சி நடாத்துகின்ற அவனுடைய பட்டத்தரசி வாணர்குல நில விளக்கு என்று குறிக்கப்படுவதினாலே அவள் வாணர் குலத்தவள் என்பது தெளிவாகின்றது. மேலும் அவள் வேளைக்காரி என்பது கவனிக்கற்பாலது.

மூன்றும் இராசராசனுடைய பட்டத்தரசி வாணர்குலத்தவள் ஆகையாலும், அவள் வேளைக்காரி என்பதனாலும் வாணரும் வேளைக்காரர் எனக் கொள்ளலாம்.

இதுவரை குறிப்பிடப்பெற்ற தமிழகத்து ஆதாரங்களின் சான்றுகளைத் தொகுத்து நோக்குமிடத்து வேளைக்காரரைப் பற்றி மேல்வரும் முடிபுகளைக் கொள்ளலாம்:— சோழராட்சியிலே பத்தாம் நூற்றாண்டளவில் உருவாகிய வேளைக்காரப் படைகள் சோழ மன்னர்களாலேயே பெரும்பாலும் அமைக்கப்பட்டன. அவ்விதமாக அமைக்கப்படுமிடத்து அவை அரசனது அல்லது இளவரசர்து விருதுகளிலே அல்லது பட்டங்களிலே ஒன்றைத் தம் சிறப்புப் பெயராகப் பெற்றன. அத்துடன் வேளைக்காரர் குறுநில மன்னரின் மெய்காப்பாளராகவும் படைவீரராகவு மிருந்து வந்தனர். சாதாரணமான படைவீரர்கள் மட்டுமன்றி குறுநில மன்னராகிய சாமந்தரிற் சிலரும் வேளைக்காரர் என்னும் பிரிவைச் சேர்ந்திருந்தனர்.

வேளைக்காரரின் சமுதாயப்பணிகள் :

வேளைக்காரரிற் சிலர் ஆலயங்களையும் அவற்றின் உடைமைகளையும் பாதுகாக்கும் பொறுப்பினை மேற்கொண்டிருந்தனர். ஆலயத்தினையும் அதன் நிலங்கள், அதற்குரிய சம்பத்துக்கள் ஆகியவற்றையும் அவற்றோடு அபயம்புக்காரையும் தாம் பாதுகாப்பதாகவும், அதனாலே தம்முயிர்களுக்கு ஏற்படும் ஆபத்தினையும் பிற துன்பங்களையும் பொருட்படுத்தாது தாம் கடமை புரிவதாகவும் வேளைக்காரர் சத்தியஞ் செய்து அதனைக் கல்லிலுஞ் செம்பிலும் வெட்டிக் கொடுத்ததாக ஒரு ஆவணங் கூறுகின்றது.[12] மேலும், ஆலயத்தின் பகுதிகள் பழுதடையுமிடத்து அவற்றைத் திருத்துவதாகவும் அதற்கு வேண்டிய எல்லாவிதமான பணிகளையுஞ் செய்வதோடு திருப்பணிக்குத் தேவையான எல்லாப் பொருட்களையுந் தாமே பெற்றுக்கொடுப்பதாகவும் வேளைக்காரர் உறுதியளித்திருந்தனர். இந்தவிதமான பொறுப்புக்களை முதலாங் குலோத்துங்கனுடைய ஆட்சியிலே மூன்று கை மகாசேனை மேற்கொண்டதெனச் சேர்மாதேவியிலுள்ள 1096ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்று கூறுகின்றது.[13]

2. ஈழத்தில் வேளைக்காரர் :

சோழராட்சிக் காலத்திலே (993—1070) பெருந்தொகையான சோழப்படைகள் இலங்கைக்குச் சென்றதாகச் சூளவம்சம் சொல்லுகின்றது. இராசராசனுடைய ஆட்சிக்குப்பின் முதலாம் இராசேந்திரனுடைய காலத்திலே சோழப்படைகள் புதிதாக

ஈழத்திற்குச் சென்றன. அவற்றிலே முதலாவதாகச் சென்ற படை தென்னிலங்கையிலே ஐந்தாம் மகிந்தனைக் கைப் பற்றியது.[14] அதன்பின் உறுகுணையிலே சிங்கள இளவரசனுகிய கஸபனுடைய எழுச்சியை அடக்குவதற்கெனச் சோழமன்னன் 95,000 போர்வீரர்களைக் கொண்ட பெரும் படையினை அனுப்பி வைத்தான் எனவும் சூளவம்சத்திலே கூறப்பட்டுள்ளது.[15] ஈழத்தி லிருந்த சோழரின் படைபலம்பற்றி அந்நூல் மிகவும் மிகைப் படுத்தியே கூறுகின்றதெனக் கொள்ளவேண்டும்.

முதலாம் இராசாதிராசன், இரண்டாம் இராசேந்திரன் ஆகியோரின் காலங்களிலே ஈழத்திலே பல போர்கள் நடை பெற்றன. ஆயினும், அவர்கள் காலத்திலே சோழநாட்டி லிருந்து மேலும் படைகள் ஈழத்திற்குப் போனதற்குச் சான்றில்லை. இலங்கையினை அடக்குவதற்கு வீரராசேந்திரன் பல நாவாய்களிலே படைகளை அனுப்பிவைத்தானென்று அவனுடைய மெய்க்கீர்த்தி கூறுகின்றது.[16] விசயபாகு சோழருக் கெதிராகப் போர் தொடக்கியபொழுது சோழவேந்தன் இரு தடவைகளாகப் பெருஞ் சேனைகளை அனுப்பிவைத்தா னென்று சூளவம்சம் செப்புகின்றது.[17] எனவே, சோழராட்சிக் காலத்திலே பெருந்தொகையான போர்வீரர்கள் தமிழகத்தி லிருந்து ஈழத்திற்கு வந்திருக்கவேண்டும். ஆயினும், ஈழத்திலே கண்டெடுக்கப்பெற்ற சோழர்காலக் கல்வெட்டுக்களிலே சோழப்படைப் பிரிவுகளைப்பற்றிப் போதிய சான்றுகளில்லை.

இரண்டாம் இராசேந்திரனுடைய 2ஆவது ஆண்டைக் குறிப் பிடும் கல்வெட்டொன்று காணப்படுகின்றது. அதிலே, இளைய மும்முடிச் சோழ அணுக்கரில் பெரும்படை வளவன் மகன் நாராயணன் என்பவனைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது.[18] எனவே, இளைய மும்முடிச் சோழ அணுக்கர் என்ற படைப்பிரிவு இலங்கை யிலே வந்திருந்தது எனக் கொள்ள முடிகின்றது. தஞ்சைப் பெருங்கோயிலிலுள்ள கல்வெட்டுக்களிலே வீரசோழ அணுக்கர் என்ற படை குறிப்பிடப்பெற்றுள்ளது. வீரசோழன் என்பது முதலாம் இராசேந்திர சோழனுடைய விருதுகளுள் ஒன்ருகும். அவ்விருதுப் பெயர் அணுக்கர் என்ற படைப்பிரிவிற்கு அளிக்கப் பெற்றுள்ளது. அதுபோலவே ஈழத்திலிருந்த அணுக்கர் என்னும் படையும் சோழனெருவனின் விருதுப் பெயர்களுள் ஒன்ருகிய இளைய மும்முடிச் சோழன் என்பதைத் தன் சிறப்புப் பெயராகப் பெற்றுள்ளது.

பொலநறுவைக்கு அண்மையிலுள்ள கல்-ஒயா எனும் ஊரிலே யுள்ள கல்வெட்டொன்றில் அதிகரணன் சரபன் மூன்றுகைத் திருவேளைக்காரன் என்ற வாசகம் வருகின்றது.[19] இக்

கல்வெட்டின் வரிவடிவ அமைப்பை நோக்குமிடத்து இது சோழர் காலத்தைச் சேர்ந்ததென்று கொள்ள இடமுண்டு.

தமிழகத்திலே திருவாலீஸ்வரத்திலுள்ள கல்வெட்டொன்று மூன்று மகாசேனை என்ற படையின் சாதனைகளையுஞ் சிறப்புக்களையும் எடுத்துரைக்கின்றது.[20] முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன் ஆகியோரின் காலங்களிலே ஏற்பட்ட சோழப் பேரரசின் வளர்ச்சியிலே அப்படை பெரும் பங்குகொண்டிருந்ததென்பதை அக்கல்வெட்டின் மூலம் அறிய முடிகின்றது. மாதோட்டத்தினைத் தாக்கி அதனை அழித்தமையும் மூன்று கை மகாசேனையின் தீரச் செயல்களுள் ஒன்றாகச் சொல்லப்படுகின்றது. எனவே, ஈழத்திற்கு வந்த சோழப்படைகளிலே மூன்று கை மகாசேனையுஞ் சேர்ந்திருந்ததென்பது உறுதியாகின்றது.

பொலநறுவைக்காலம் (1070—1215) :

ஈழத்திலே சோழராட்சிக்குப் பிற்பட்ட காலப்பகுதியைச் சேர்ந்த நான்கு கல்வெட்டுக்களிலே வேளைக்காரரைப் பற்றிய குறிப்புக்களுள்ளன. அவற்றுள் இரண்டு பொலநறுவையிலே காணப்பட்டன.[21] வேறொன்று பாலமோட்டையிலிருந்தது; அது முதலாம் விசயபாகுவின் 42ஆவது ஆட்சியாண்டைச் சேர்ந்தது.[22] பதவியாவிலே கண்டெடுக்கப்பெற்ற வட மொழியிலுள்ள ஏனையது பதின்மூன்றும் நூற்றாண்டைச் சேர்ந்த கிரந்த எழுத்துக்களிலே வரையப்பட்டுள்ளது.[23] இலங்கையின் மரபு வழியான வரலாற்றைக் கூறும் மகாவம்சத்தின் தொடர்நூலான சூளவம்சம் என்ற நூலிலும் வேளைக்காரர் பற்றிய குறிப்புக்கள் வருகின்றன.

சோழராட்சிக்குப் பின்பும் இலங்கையிலே வேளைக்காரப் படைகள் குறிப்பிடத்தக்களவிலே காணப்பட்டதனால், அங்கு 1070ஆம் ஆண்டளவிற் சோழரின் ஆதிக்கம் முடிவடைந்தபின் இலங்கையிலிருந்த சோழப்படைகள் அங்கு தங்கியிருந்து சிங்கள மன்னருக்குச் சேவைபுரிந்தனவென்று கொள்ளலாம். பொலநறுவையிலுள்ள வேளைக்காரரின் சாசனம் வேளைக்காரப் படையின் அமைப்பினைப்பற்றி மிக முக்கியமான சான்றுகளைத் தருகின்றது. அக் கல்வெட்டு விசயவாகுதேவர் 55 ஆண்டுகள் இலங்கை முழுவதையும் ஆண்டதாகக் குறிப்பிடுகின்றது. ஆனால், அதிலே ஆளுகின்ற மன்னனுடைய பெயர் குறிப்பிடப்படவில்லை. விசயவாகுவினுடைய ஆட்சிக்கும் *(1070—1110)* முதலாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக்கும் *(1153—1186)* இடைப்பட்ட காலத்திலே அக்கல்வெட்டு எழுதப்பட்டிருத்தல் வேண்டும். அதிலே வரும் மேல்வரும் வாசகம் கவனித்தற்பாலது:—

தளதாய்ப் பெரும்பள்ளி உங்கள் ரக்ஷையாக வேண்டு மென்று சகல சாஸ்திராகம சீலா சம்பந்நரான ராஜகுரு முகலன் மகாஸ்தவிரர் ராஜாமாத்யரோடுங் கூட எழுந்தருளி யிருந்து எங்களை அழைத்து அருளிச் செய்தமையினல் மாதந் திரத்தோங் கூடி எங்களுக்கு மூதாதைகளாயுள்ள வளஞ் செயரையும் எங்களோடு கூடிவரும் நகரத்தாருள்ளிட் டோரையும் கூட்டி மூன்றுகைத் திருவேளைக்காரன் தள தாய்ப் பெரும்பள்ளி யென்று திருநாமஞ்சாத்தி எங்களற மாய் எங்கள் காவலாய் நிற்கவேண்டு மென்று அறங் காவலுக்குப் படைப்படையால் ஒரோ சேவகரையும் ஒரோ வேலி நிலமும் இட்டுக்குடுத்து இப் பள்ளி நோக்கின ஊர்க ளும் பரிவாரமும் பண்டாரமும் அபயம் புக்காரையும் பட்டும் கெட்டும் காக்கக் கடவோமாகவும். அழிவுப்பட்ட இடங்கள் அழிவு சேர்ந்தும் எங்கள் அந்வயமுள்ளதனையும் எஞ்ஞான்றும் இதுக்கு வேண்டுவன வெல்லாஞ் செய்வோமாகவும். பண்ணின இந்த வ்யவஸ்தை சந்திராதித்யவரை நிற்பதாக கைய்வினுவேற்றி செம்பிலும் கல்லிலும் வெட்டிக் குடுத் தோம். வலங்கை இடங்கை சிறுதந(ன)ம், பிள்ளைகள் தந(ன)ம், வடுகர், மலையாளர், பரிவாரக் கொந்தம் பலகலனையும் உள்ளிட்ட திருவேளைக்காரரோம்.[24]

இக் கல்வெட்டிலே மாதந்திரத்தோங்கூடி என்ற சொற் றொடர் வருகின்றது. மாதந்திரம் என்பது வேளைக்காரப் படையின் ஒரு பிரிவென்பது சில ஆராய்ச்சியாளரின் நம்பிக்கை. ஆனுல் அது சரியானதாகத் தோன்றவில்லை. தந்திரம் என்பது சாசன வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் படை, காலாட்படை என்ற கருத்துக்களைக் கொண்டுள்ளது.[25] மாறவர்மன் சுந்தர பாண்டியனுடைய 5ஆவது ஆண்டிலே வரையப்பெற்ற திருநெல் வேலியிலுள்ள கல்வெட்டொன்றிலே, வடவாரிநாட்டுத் தேவேந்திர வல்லவன் என்ற செங்கோல் வேளைக்காரன் சேனு பதி (செ)தண்டநாயகத்துக் குள்ளிட்ட தந்திரத்துக்குச் சமைந்த காரணவர் பற்றிக் கூறப்பட்டுள்ளது.[26] இக்குறிப்பிலே தந்திரத் துக்குச் சமைந்த காரணவர் என்ற சொற்றொடர் படையைச் சேர்ந்த காரணவர் என்ற பொருளைக் கொண்டுள்ளது. திரு வாலீஸ்வரம் கோயிலிலேயுள்ள இராணுவம் பற்றிய கல்வெட் டொன்றிலே முதலாம் படைக்குச் சமைந்த, இரண்டாம் படைக்குச் சமைந்த என வரும் சொற்றொடர்களும் தந்திரத் திற்குச் சமைந்த என்ற சொற்றொடரிலே தந்திரம் என்னுஞ் சொல் படையினையே குறிக்கின்றதென்பதை உறுதிப்படுத்து கின்றன. ஆகவே, மாதந்திரம் என்பது பெரும் படையினையே குறிக்கின்றது எனலாம்.

மூன்று கைத் திருவேளைக்கார என்ற சொற்களும் பொலநறுவைக் கல்வெட்டிலே வருகின்றன. முன்னே குறிப்பிட்ட கல்-ஓயா என்னும் ஊரிலுள்ள கல்வெட்டிலும் மூன்று கைத் திருவேளைக்காரன் பற்றிக் கூறப்பட்டுள்ளது. மூன்றுகை என்பது யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை என்னும் முப் படைகளையும் குறிக்கின்றதென ஊகிக்கலாம்; மூன்று பிரிவுகளைக் கொண்ட படையினையும் அது குறிக்குமெனக் கருதலாம்.

மூன்று கை மகாசேனை என்ற ஒரு சிறப்புவாய்ந்த பேராற்றல் பொருந்திய பெரும் படையினைப்பற்றிச் சோழர்காலத் தமிழகத்துக் கல்வெட்டுக்களிலே குறிப்புக்கள் உள்ளன. மகாசேனை என்ற வடமொழிச் சொல்லானது பெரும்படை எனப் பொருள்படும். எனவே, மாதந்திரம், பெரும்படை, மகாசேனை என்பன சிறப்புப் பெயர்களாகவன்றி ஒரே பொருள் கொண்ட பல பிரிவுகளையுடைய பெரிய படையினைக் குறிக்கும் சொற்களாகவே வழங்கிவந்தன என்ற சிந்தனை எழுகின்றது. மகாசேனை மூன்று கை மகாசேனை எனப்படுகின்றமையாலும் மாதந்திரத்தார் மூன்று கைத் திருவேளைக்காரர் எனப்படுகின்றமையாலும் பெரும்படையே மாதந்திரம் எனவும் மகாசேனை எனவுங் கல்வெட்டுக்களிலே குறிப்பிடப்பெற்றுள்ளது என்பது ஓரளவிலே உறுதியாகின்றது. ஒரோ சேவகரையும் என்ற சொல்லடுக்கு ஒவ்வொரு படையிலிருந்தும் ஒவ்வொரு சேவகரை என்ற பொருளைக் குறிக்கின்றது. இக்கூற்றிலிருந்து பொலநறுவையி லிருந்த மாதந்திரம் என்ற வேளைக்காரப் படை பல படைப் பிரிவுகளைக் கொண்டவொரு பெரும் படையாக விருந்தது என்பதை அறியமுடிகின்றது.

பொலநறுவையிலிருந்த வேளைக்காரப் படை வலங்கை, இடங்கை, சிறுதனம், பிள்ளைகள் தனம், வடுகர் (தெலுங்கர்), மலையாளர் என்ற பல்வேறு சமூகப் பிரிவுகளைக் கொண்டிருந்தது. பெருந்தனம், சிறுதனம் என்பன சோழரின் நிர்வாக—இராணுவ அமைப்பிலே சேவைபுரிந்த இருவகையான பிரிவுகளாகக் காணப்படுகின்றன. முதலாம் இராசராசனுடைய காலத்துக் கல்வெட்டுகளிலே பெருந்தனத்து வலங்கை வேளைக்காரப் படைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது.[27] சிறுதனத்து வலங்கை வேளைக்காரப் படைகளுந் தமிழகத்திலே இருந்தமை பற்றி அறியமுடிகின்றது. பிள்ளைகள் தனம் என்பதும் அவ்வகையான ஒரு பிரிவாயிருத்தல் கூடும்.

தமிழகத்துச் சமூகப் பிரிவுகள் யாவும் வலங்கை, இடங்கை என இரு பிரிவுகளாக வகுக்கப்பெற்றிருந்தன. தென்னிந்தியாவி லுள்ள சாசனங்களிலே வலங்கை வேளைக்காரர் பற்றிய குறிப்

புக்களே காணப்படுகின்றன. பொலநறுவைக் கல்வெட்டிலிருந்து இடங்கையாரும் வேளைக்காரராய் இருந்தனர் என்பது தெளிவாகின்றது. சோழரின் நிர்வாகத்திலும் படைகளிலும் தெலுங்கரும் மலையாளரும் சேவைபுரிந்ததற்குச் சான்றுகளுள்ளன. முதலாம் குலோத்துங்கனின் (1070—1120) ஆட்சியிலே சிறுதனம், பெருந்தனம் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த மலையாள அதிகாரிகளிருந்தனர்.[28] சிறுதன்த்து வடுகர் காவலர் என்ற ஒரு படைப்பிரிவுந் தென்னிந்தியாவிலிந்தது.[29] தமிழர் மலையாளர் தெலுங்கர் ஆகிய மூன்று தேசிய இனத்தவரும், வலங்கை இடங்கை என்ற வகுப்பாரும், சிறுதனம் பெருந்தனம் முதலிய பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் வேளைக்காரப் படைகளிலே சேவகம் புரிந்தனர் என்பது பொலநறுவையிலுள்ள வேளைக்காரர் சாசனத்தின் மூலம் தெளிவாகின்றது.

வேளைக்காரப் படை சில வரையறையான ஒழுக்க ஆசாரங்களைக் கொண்டிருந்ததோடு அதன் உறுப்பினர்கள் சில பொது விதிகளுக்குக் கட்டுப்பட வேண்டியிருந்ததென்றுங் கருதுவதற்கு இடமுண்டு. காவல் புரிதல், திருப்பணி வேலைகள் ஆகியவற்றைப் பொறுத்த மட்டிலே பொறுப்புக்களை ஏற்குமிடத்து வேளைக்காரப் படையினர் கூட்டாக இணைந்து செயற்பட்டனர் எனக் கருத இடமுண்டு. ஊர், சபை என்பவற்றைப் போல வேளைக்காரரின் பெரும்படையான மாதந்திரமும் வேளைக்காரர் சம்பந்தமான விடயங்களைப் பொறுத்தமட்டிலே படை உறுப்பினர் அனைவரையுங் கூட்டிச் சில தீர்மானங்களை நிறைவேற்றினர் எனவுங் கருதலாம்.

பொலநறுவையிலிருந்த வேளைக்காரர், வளஞ்செயர் நகரத்தார் என்ற வணிகர் கூட்டங்களோடும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். அவற்றை எங்களுக்கு மூதாதைகளான வளஞ்செயரையும் எங்களோடு கூடிவரும் நகரத்தாருள்ளிட்டாரையும். என்று வேளைக்காரர் குறிப்பிட்டுள்ளனர். மாதந்திரம் கூடியபொழுது வளஞ்செயரும் நகரத்தாரும் அதன் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டனர். நகரத்தார் போன்ற வணிகர் தங்கள் உடைமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கு வேளைக்காரரின் ஆதரவினைப் பெற்றிருத்தல் கூடும். அவ்வித மான தொடர்பின் விளைவாக வேளைக்காரப் படைக்கும் வணிகர் கூட்டங்களுக்குமிடையில் ஒரு நெருங்கிய உறவு ஏற்பட்டிருத்தல் வேண்டும்.

பொலநறுவைக் காலத்துச் சிங்கள மன்னரின் படையமைப்பிலே வேளைக்காரப் படை சிறப்பிடம் பெற்றிருந்தது. முதலாம் விஜயவாகு இரண்டாம் கஜவாகு ஆகியோரின் ஆட்சியிலே

வேளைக்காரர் பொலநறுவையிலே கலகம் விளைவித்தார்கள். முதலாம் விஜயபாகுவின் ஆட்சியிலே வேளைக்காரர் ஏற்படுத்திய கலகத்தினைப் பற்றிச் சூளவம்சம் மேல்வருமாறு எடுத்துரைக்கின்றது:—

'சோழ நாட்டிற்குப் படைகளை அனுப்புவதற்கெனச் சேனாதிபதிகள் கப்பல்களையுந் தளபாடங்களையுஞ் சேர்த்த பொழுது (விஜயபாகுவின் ஆட்சியில்) முப்பதாம் ஆண்டிலே (1086) வேளைக்காரர் என்னும் படை அங்கு (சோழ நாட்டிற்குப்) போக விரும்பாமையினாலே கலகம் பண்ணியது. அவர்கள் (வேளைக்காரர்) இரு சேனாதிபதிகளையுங் கொன்றுவிட்டுக் கட்டுக்கடங்காத மதயானைகளைப் போலப் பொலநறுவையின் சுற்றுடலிலுள்ள பிராந்தியங்களைச் சூறையாடினார்கள். மன்னனுடைய இளைய சகோதரியையும் அவளுடைய புதல்வர்களையுங் கைப்பற்றிவிட்டு அரண்மனையைத் தீயிட்டுக் கொளுத்தினார்கள். எனவே, அரசன் தக்கிண தேசத்திற்கு விரைந்தோடினான். அங்கு தன் செல்வங்களை வாதகிரி மலையிலே வைத்துவிட்டுச் சிங்கத்தையொத்த துணிவு படைத்த யுவராசனான வீரவாகுவுடன் பெருஞ்சேனையைக் கூட்டிக்கொண்டு புலத்தி நகருக்கு வந்து கடும் போர் புரிந்து ஒன்றுதிரண்டிருந்த (வேளைக்காரப்) படைகளைத் துரத்தினான். கிளர்ச்சியாளரின் தலைவர்களைப் பிடித்து முதுகுக்குப் பின்பாக அவர்களின் கைகளைக் கட்டுவித்துவிட்டு கொலையுண்ட (தன்) சேனாதிபதிகளின் சடலங்கள் வைக்கப்பட்ட மயானத்திலே அவர்களைக் கழுவேற்றி எரிப்பித்துவிட்டு இலங்கையிலே அமைதியை நிலைநாட்டினான்,[30]

சூளவம்சம் கூறுவனவற்றிலிருந்து சோழருக்கு எதிரான போர்முயற்சிகளை விரும்பாதமையினாலே வேளைக்காரப்படை கிளர்ச்சிபுரிந்ததென்பது புலனாகின்றது. வேளைக்காரரின் கலகத்தின் விளைவாகத் தற்காலிகமாக விஜயவாகு பொலநறுவையிலே அதிகாரமிழந்தான்.[31] பொலநறுவையிலிருந்து அரசனைத் துரத்தக் கூடியளவு பலத்தினை வேளைக்காரப்படை கொண்டிருந்ததினாலே அப்படை பெருந்தொகையான போர்வீரர்களைக் கொண்டிருந்தது எனலாம். விஜயவாகு அவர்கள் விளைவித்த கலகத்தை அடக்கிய பின்பும் வேளைக்காரர் பொலநறுவையிலே சேவை புரிந்ததற்குப் பல சான்றுகள் உள்ளன.

பொலநறுவையிலுள்ள றன்கொத் விகாரையிலே காணப்பட்ட ஒரு தமிழ்க் கல்வெட்டிலே, '...ஈழம் எழுநூற்றுக் காதம் யெறிஞ்சு கொண்டருளிய சேபாகுதேவர் நிழல் வேளைக்காரன்

மஹமண்டல நாயக்கனுன சேதராயன்' என்ற குறிப்பு வருகின்றது.[32] முதலாம் விஜயவாகு இறந்தபின் அரசனுகிய ஜயவாகுவின் காலத்திலே இக் கல்வெட்டு எழுதப்பட்டிருத்தல் வேண்டும். சேதராயன் என்ற வேளைக்காரன் ஜெயவாகுமன்னனுக்கு ஆதரவாயிருந்ததோடு மஹமண்டல என்னும் பிராந்தியத்தின் அதிகாரியாகவுமிருந்தான். எனவே, வேளைக்காரப் படையின் தலைவர்கள் சிலர் தமிழகத்திற் போல ஈழத்திலும் சிலவிடங்களிலே பிரதேசவாட்சிக்குப் பொறுப்பாயிருந்தனர் எனக் கருதலாம்.

முதலாம் கஜவாகுவின் ஆட்சியிலும் பொலநறுவையிலே வேளைக்காரப் படைகளிருந்தன. மானபரணனின் தம்பிகளான கீர்த்திஸ்ரீமேகன், ஸ்ரீவல்லவன் ஆகிய இருவரும் கஜவாகு அரசனுகிய பொழுது அவனுக்கு எதிராகப் போர் தொடக்கினுர்கள். கஜவாகுவின் வேளைக்காரப் படைகளுக்கு அதிக உபகாரங்களைக் கொடுத்துத் தம்வசப்படுத்திவிட்டுப் பொலநறுவையிலே கிளர்ச்சி புரியுமாறு அவர்களைத் தூண்டினுர்கள். தென்னிலங்கை அரசர் இருவரும் 'கஜவாகுவைத் தாக்கிய தருணத்திலே அவனுக்கெதிராகத் தலைநகரிலே வேளைக்காரப் படைகள் கிளர்ச்சி செய்தன. எனினும், கஜவாகு தென்னிலங்கை மன்னரின் படைகளைத் தோற்கடித்துத் துரத்தியதோடு வேளைக்காரரின் படைக்கலகத்தையும் அடக்கிவிட்டான்.[33]

முதலாம் பராக்கிரமவாகுவின் ஆட்சியிலே கோட்டியாரத்திலே வேளைக்காரப் படையொன்று தங்கியிருந்தது. பராக்கிரமவாகுவின் சேனுதிபதிகளிற் பலரும் பெரும்பாலான படைகளும் உறுகுணைக்குப் போயிருந்த காலத்திலே கோட்டியாரத்திலிருந்த கேரளப் படையும் சிங்களச் சேனையும் வேளைக்காரருஞ் சேர்ந்து கலகம் விளைவித்தார்கள்.[34] இராசரட்டையினைக் கைப்பற்றும் நோக்கத்தோடு அரசனுக்கெதிராக அப்படைகள் போரினைத் தொடக்கின. எனினும், அரசன் பொலநறுவையிலிருந்து படைகளை அனுப்பி அக்கிளர்ச்சிகளை அடக்கினுன்.

தென்னிந்தியாவிற் போல இலங்கையிலும் ஆலயங்களையும் அவற்றின் உடைமைகளையும் பாதுகாக்கும் பொறுப்பினையும் வேளைக்காரர் ஏற்றிருந்தனர். முதலாம் விஜயவாகுவின் 42ஆவது ஆட்சியாண்டிலே எழுதப்பட்ட பாலமோட்டைக் கல்வெட்டு விக்கிரம சலாமேகத் தெரிந்த வலங்கை வேளைக்காரன் என்போனைக் குறிப்பிடுகின்றது. விக்கிரம சலாமேக என்பது விஜயவாகுவின் மகனும் முடிக்குரிய இளவரசருள் ஒருவனுமாகிய விக்கிரமவாகுவின் பட்டமாயிருத்தல் கூடும்.

அது சோழராட்சிக் காலத்தைச் சேர்ந்த வேளைக்காரப் படையின் பெயராயுமிருந்திருத்தல் கூடும்.

கந்தளாயான விஜயராஜ சதுர்வேதி மங்கலத்திலுள்ள ஸ்ரீ விஜயராஜ ஈஸ்வரம் எனுங் கோயிலிலே நாகைச் சாணி என்ற விதவை தன் கணவனுகிய யக்ஞ கிரமவித்தன் என்ற அந்தணனின் நன்மைக்கெனத் தான் செய்த தருமங்களைக் காப்பாற்றும் பொறுப்பை வலங்கை வேளைக்காரனிடம் ஒப்படைத்தாள்.[35] பொலநறுவையிலுள்ள வேளைக்காரர் கல்வெட்டும் பதவியாவிலுள்ள வடமொழிக் கல்வெட்டும் பௌத்த நிறுவனங்களைப் பாதுகாக்கும் பொறுப்பை வேளைக்காரர் மேற்கொண்டதனைப் பற்றிக் கூறுகின்றன. விஜயவாகுவின் ஆணையை மேற்கொண்டு சேனுதிபதி தேவன் பொலநறுவையிலே தளதாய்ப் பெரும்பள்ளியினை அமைத்திருந்தான். அது மூன்று கைத் திருவேளைக்காரன் தளதாய்ப் பள்ளியென்று பெயரிடப் பட்டிருந்தது.

சேது குலத்தைக் குறிப்பிடும் பதவியாக் கல்வெட்டானது லோகநாதன் என்ற சேனுதிபதி ஒரு விகாரத்தைக் கட்டுவித் தான் எனக் கூறுகின்றது. அந்த விகாரம் வேளைக்கார விகார மென நாமஞ் சூட்டப்பெற்றது. மகாதேரரான வியாரிணி முகலன் வேளைக்காரரை அழைத்துத் தளதாய்ப் பெரும் பள்ளி யினைப் பாதுகாக்கும் பொறுப்பினை அவர்களிடம் ஒப்படைத்தார். அதுபோலவே லோகநாத தண்ட நாயக்கன் அமைப்பித்த விகாரம் வேளைக்காரரின் பொறுப்பிலே விடப்பட்டது. தள தாய்ப் பெரும்பள்ளியினைப் பொறுப்பேற்ற பொழுது வேளைக் காரர் அதனையும் அதனைச் சார்ந்த ஊர்களையும் அதன் பரிவாரத்தையும் அதன் பண்டாரத்தையும் (சம்பத்துக்கள்) அங்கு அபயம்புக்காரையும் தம்முயிரை இழக்க நேரிடினும் அதனைப் பொருட்படுத்தாது பாதுகாத்துக் கொள்வதாகச் சத்தியஞ் செய்து அதனைக் கல்லிலும் செம்பிலும் எழுதிக் கொடுத்தார்கள்.

அடிக்குறிப்புகள்

1. K. A. Nilakanta Sastri, *The Cōlas*. Second Edition (Madras, 1955). p. 168.
2. Ibid, p. 454.
3. Ibid.
4. T. V. Mahalingam, *South Indian Polity* (Madras, 1955), p. 258.

5. Ibid, pp. 259—260; *Annual Report on Epigraphy (ARE)* Madras, 1914, No. 368 of 1914; *ARE*, 1921, No. 393 of 1921.
6. *ARE*, 1934/35: Nos. 122, 126, 136, 142, 144, 147, 153—159.
7. *ARE*, 1934/35: Nos. 145, 153, 202.
8. இராஜராஜ சேதியராயன் இராமன் பொற்குடங் குடுத்தான். இராஜராஜ கோவல்ராயன் ஆகிய கிளியூர் மலையமான்கள் வன்னியர் நாயன் என்ற பட்டத்தினைப் பெற்றிருந்தனர். ஆடையூர் மலையமானாகிய அமட்டாள்வான் நரசிங்கவர்மன் கரிகாலசோழன் வன்னியர்மக்கள் நாயன் என்ற பட்டத்தினைக் கொண்டிருந்தான். *ARE*, 1934/35, pp. 61—63, Nos. 125, 186, 188, 190; *ARE*, 1937/38: No. 381; *South Indian Inscriptions* [SII] VII; Nos. 117, 120.
9. ரீ. வி. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் சரித்திரம் *(அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1957)*, பகுதி 2, ப. 173.
10. *ARE*, 1934/35, No. 122.
11. *The Cōḷas*, p. 439.
12. *South Indian Polity*, pp. 259—260.
13. *The Cōḷas*, p. 455.
14. *Cūlavaṃsa (Cv.)*, 55: 15—19.
15. மேலது, 55: 24—25.
16. *பிற்காலச் சோழர் சரித்திரம், 1*, பக். 276—282.
17. *Cv.*, 58: 13—15, 24—26.
18. K. Indrapala and P. L. Prematilleke, 'A Cola Inscription from Mediriniginiya, *Epigraphia Tamilica* (June, 1971), pp. 25—28.
19. SII, IV: No. 1398.
20. *The Cōḷas*, p. 455.
21. *SII*, IV: 1393: A. Veluppillai, 'A Tamil Inscription from Polonnaruwa Ranket Vihare' *Ceylon Tamil Inscriptions* (CTI) (Peradeniya, July, 1971) pp. 24—26.
22. S. Paranavitana 'A Tamil Inscription from Palamottai', *Epigraphia Zeylanica* (EZ) IV: No. 20.

23. S. Paranavitana, 'A Sanskrit Inscription from Padaviya', *Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society*, New Series VIII, (ii) pp. 261—264.

24. SII iv. 1393.

25. Madras Tamil Lexicon.

26. செ. குணசிங்கம், *13ஆம் நூற்றுண்டில் பாண்டிநாட்டி லிருந்த படையமைப்பு சிந்தனை 3(2), ஜுலை, 1970, பக். 122.*

27. *SII*, II. p. 3.

28. *ARE*, 1938/39, No. 130.

29. *Epigraphia Indica* XVIII, p. 336.

30. *Cv.*, 60: 35—44.

31. மேலது.

32. *CTI*, p. 26.

33. *Cv.*, 63: 24—29.

34. *Cv.*, 74: 44—49.

35. *EZ*, IV, No. 20.

யாழ்ப்பாணக் காசுகள்

வி. சிவசாமி

பொது :

பழைய காலம் தொட்டு மனிதன் பயன்படுத்திவந்த சாதனங்களிலே நாணயமும் ஒன்ருகும். பண்டமாற்று, மந்தை, சிப்பி, சோழி, உலோகத்துண்டுகள் முதலியன வெவ்வேறு காலங் களிலே, மனிதனுக்குத் தேவையான பொருட்களைப் பெறுதற்குப் பெறுமதியுள்ளனவாகப் பயன்படுத்தப்பட்டன. முடிவிலே நாணயம் உருவாகிற்று.[1] மனித நாகரிக வரலாற்றிலே, குறிப் பாகப் பொருளாதார வரலாற்றிலே, நாணயத்தின் தோற்றமும் வளர்ச்சியும் புரட்சிகரமான சம்பவமாகும். இதன் விளைவாகப் பண்டமாற்றிலுள்ள பல சிக்கல்கள் தீர்ந்தன. ''திட்டவட்ட மான உருவமும், அளவுமுடைத்தாய், பொறுப்புள்ள அதிகாரி ஒருவரினல் அங்கீகரிக்கப்பட்ட சின்னங்கள் பொறிக்கப்பட்ட உலோகத்துண்டு நாணயம்''[2] எனப்படும்.

இலங்கையிலே, கி. மு. ஆரும் நூற்ருண்டு தொட்டாவது நாணயங்கள் புழக்கத்திலிருந்து வந்தன. ஈழத்தின் பிறபகுதி களைப் போலவே, வடக்கிலுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டி லும் நீண்டகாலமாக மனிதன் நடமாடி வருகிருன் என்பதற்கு நாணயங்களும் சான்ருகும்.

கிடைக்குமிடங்கள் :

யாழ்ப்பாணத்திலே வெவ்வேறு காலத்தைச் சேர்ந்த நாண யங்கள் பல்வேறு தொகைகளிலே கந்தரோடை, வல்லிபுரம், நாகர்கோவில், புலோலி, மட்டுவில், நல்லூர், கோப்பாய், அச்சுவேலி, கொக்குவில், மானிப்பாய், பண்டத்தரிப்பு, தெல்லிப்பழை, தொல்புரம், வட்டுக்கோட்டை, அல்லைப்பிட்டி, மண்கும்பான், நாரந்தனை, புங்குடுதீவு முதலிய இடங்களிலே கிடைத்திருப்பினும், கந்தரோடை, வல்லிபுரம் ஆகியனவே இன்றைய நிலையிலே பழைய நாணயக் களஞ்சியங்கள். கி. மு. ஆரும் நூற்ருண்டு தொடக்கம், போத்துக்கேயர் காலம் வரை யுள்ள பிரதான நாணயவகைகளைப் பற்றிப் பொதுப்படக் கூறலாம். கந்தரோடை, வல்லிபுரம் ஆகிய ஈரிடங்களிலுமே

தொடர்ச்சியாகக் காலமுறைப்படி நாணயங்கள் கிடைக்கின்றன. பிற இடங்களிலே, குறிப்பிட்ட காலத்தினைச் சேர்ந்த காசுகளே கிடைக்கின்றன. பல இடங்களிலே கிடைக்கும் நாணயங்களைப்பற்றிய விபரங்களோ, அவை எவ்வாறு மறைகின்றன என்பது பற்றியோ தெளிவான தகவல்கள் அருமை. இத்தகைய நிலை மாறவேண்டும்.

யாழ்ப்பாணத்திலே கிடைத்துள்ள நாணயங்களைப்பற்றித் திரு. போல் இ. பீரிஸ்,[3] எச். டபிள்யூ கொட்றிங்ரன்,[4] முதலியார் செ. இராசநாயகம்,[5] சுவாமி ஞானப்பிரகாசர்[6] போன்ற அறிஞர் ஆராய்ந்துள்ளனர். பெருமழையின் பின்னரோ, நிலத்தினைப் பண்படுத்தும்போதோ, கட்டிடத்திற்கு அத்திவாரம் வெட்டும்போதோ, மண் வெட்டும்போதோ பல காசுகளும், பிற தொல்பொருளியற் சின்னங்களும் இன்றும் வெளிப்படுகின்றன. இங்கு கிடைக்கும் நாணயவகையிலே காலத்தால் முந்திய **புராணஸ்** பற்றிக் குறிப்பிடலாம்.

புராணஸ்:[7]

இந்தியாவிலும், ஈழத்திலும் கிடைக்கும் காலத்தால் முந்திய நாணயவகை இதுவே. '**புராண**' எனில் 'பழைய' எனப் பொருள்படும். இதனை, மேலும், வடமொழியிலே **கார்ஷாபண** எனவும், பாளி மொழியிலே **கஹாபணு** எனவும், ஆதிச்சிங்கள மொழியிலே **கஹவனு** எனவும் அழைப்பர். இவை பொன், வெள்ளி, செம்பு முதலிய உலோகங்களாலானவை. பரவலாக இந்தியா அடங்கலும், ஈழத்திலு மிக்காசுகள் கிடைத்துள்ளன. யாழ்ப்பாணத்திலே, கந்தரோடை, வல்லிபுரம் முதலிய இடங்களிலே கிடைக்கின்றன. இவை பெரும்பாலும் நீள்சதுர வடிவின; பிந்திய காலத்தியவை சில வட்டவடிவின; சில முட்டை வடிவின; தடிப்பும் கூடியவை; சராசரியாக 56 'கிறெயின்ஸ்' நிறை கொண்டவை. கந்தரோடையிற் கிடைத்தவற்றுட் சில வெள்ளியாலானவை; சில வெள்ளிமுலாம் பூசப்பெற்ற செப்புக்காசுகள்; சில முற்றாகவே செப்புக்காசுகள்; பொற்காசுகளும் உண்டு. இவைகள் உலோகத் தகடுகளை நீட்டாக அடித்து வெட்டப்பட்டவை; அவசியமாயின் மூலை ஓரங்களும் வெட்டப்படும். இக்காசுகளின் முன்புறத்திலும், சிலவேளை இருபுறங்களிலும் இலச்சினைகள் குத்தப்படும். பின்புறத்தில் இலச்சினைகள் குறைவு அல்லது இல்லை. சிலவற்றில் ஒன்றிற்கு மேற்பட்ட இலச்சினைகள் அழுத்தமாகக் குத்தப்பட்டிருக்கும்.

இந்தியாவிலே கிடைத்துள்ள 'புராணஸ்' காசுகளிலே மூந் நூறுக்குமதிகமான இலச்சினைகள் உள்ளனவாக அறிஞர் குறிப் பிட்டுள்ளனர். இலங்கையிலே கிடைத்தவற்றிலே சூரியன், மிருகம், பறவை, ஸ்வஸ்திகா, மரம், பிறை, சக்கரம், சைத்யம் முதலியன காணப்படுகின்றன. இக்காசுகள் இந்தியாவிலே கி. மு. 1000 தொடக்கம் வழங்கப்பட்டுவருவதாகக் கொள்ளப் படினும், இலங்கையிலே கி. மு. ஆரும் நூற்ருண்டு தொடக்கம் கி. பி. இரண்டாம் நூற்ருண்டுவரையாவது நிலவின எனலாம். இவற்றினைத் தொடக்கத்திலே சமயக் குழுவினர், வணிகக் குழுவினர் போன்ருேர் வெளியிட்டனர். காலப்போக்கில் இவை மன்னரின் அனுமதியுடன் வெளிவந்தன. இதனுற்ருன் சமயக் குறிகள், குழுக்குறிகள் சில இவற்றிலிடம்பெற்றன. இலங்கைக் காசுகள் இந்தியக் காசுகளுடன் நெருங்கிய தொடர்புள்ளவை. கொட்றிங்ரன் என்பவர் இலங்கை நாணயங்கள் தென்னிந்திய நாணயங்களுடன் நெருங்கிய தொடர்புடையன எனவும், அவை அங்கிருந்து கொண்டுவரப்பட்டன எனவும், இரு நாடுகளிலும் சமகாலத்திலேதான் இவற்றின் புழக்கம் குன்றியது எனவும் குறிப்பிட்டுள்ளார்.[8] பல நாணயங்கள் இந்தியாவிலிருந்து வியாபாரத்திற்காகக் கொண்டுவரப்பட்டன எனலாம்; சில இலங்கையிலும் வெளியிடப்பட்டிருக்கலாம்.

இவ்வகை நாணயங்களைத் தொடர்ந்து குத்தப்பட்ட இலச் சினைகள் ஒன்ருக வார்க்கப்பட்.டு உருவாக்கப்பட்ட காசுகள்[9] (Die Struck Coins) வெளிவந்தன. முதலில் ஒரு புறத்திலும், பின் இரு புறங்களிலும் இலச்சினைகள் இடம்பெற்றன. பின் புறத்தில் அச்சுக்குத்திய இலச்சினைகளும் உள்ளன. இக் காசு களிற் சில நீள்சதுர வடிவின; சில வட்டமானவை; வேறு சில நீண்டுருண்டவை. யானையும் ஸ்வஸ்திகாவும் கொண்ட நாண யங்கள் பண்டைய ஈழ நாணயவகையில் ஒன்று. சிலவற்றிலே, வேதிகையுடன் மரமும், ஸ்வஸ்திகாவும், பிற சின்னங்களும் முன்புறத்திலே காணப்படுகின்றன. பின்புறத்திலே தடிமேலே ஸ்வஸ்திகாவும், வேதிகையும், நந்திபாதமும், பிறவும் உள்ளன. சிலவற்றிலே புத்தசக்கரம், சைத்யம் முதலியன இடம்பெற் றுள்ளன. சிலவற்றின் முன்பக்கத்திலே வேதிகையிலுள்ள கொடித்தம்பத்தை நோக்கி யானையும், அதற்குமேலே வட்ட மான கோவில் அல்லது தூணுள்ள வீடு அல்லது கொட்டில் போன்றவையும், வேறு சில சின்னங்களும் உள்ளன. இவை பழைய பாண்டியக் காசுகளாயிருக்கலாமெனத் திரு. போல் இ. பீரிஸ் கருதினுர். சிலவற்றிலே எருது காணப்படுகிறது. பிடரி மயிரில்லாச் சிங்கம் பொறிக்கப்பட்டுள்ள நாணயம் மகா சேனன் காலத்தவை எனக் கொட்றிங்ரன் குறிப்பிட்டுள்ளார்.

கந்தரோடையிலே திரு. போல் இ. பீரிஸ் சேகரித்த காசுகளிலே இந்தியாவிலுள்ள மால்வாக் காசுகளிலே காணப்படும் ''உஜ்ஜயின் இலச்சினை'' (தர உள்ள இரு வட்டங்கள்) யும், சதகணிச என்ற வாசகமும் உள்ள காசு ஒன்றும் இருந்தது.[10] இது சாதவாஹன காசாக இருக்கலாம்.

லக்ஷ்மி தகடுகள் (Laksmi Plaques):[11]

லக்ஷ்மி 'பிளாக்குகள்' அநுராதபுரம், சிலாபம், திஸ்ஸ மஹாராம, நிந்தாவூர் போன்ற பிற இடங்களிலே கிடைத்திருப் பினும், ''யாழ்ப்பாணத்திற் கிடைத்தவையே நேர்த்தியா னவை'' எனப் போல் இ. பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். இவை நீள்சதுர வடிவின; ஈயம், செம்பு, இரும்பு, சிலிக்கா, நிக்கேல் முதலியன கொண்டு செய்யப்பட்டவை. இவற்றின் முன் பக்கத்திலே, தாமரையாசனத்திலே நிற்கும் நிலையிலே லக்ஷ்மி விளங்குகிறார்; அவரின் இரு கரங்களிலும் கமலங்கள் திகழ் கின்றன; இருமருங்கிலும் யானைகள் நீர் சொரிகின்றன; சிலவற்றிலே பின்புறமாக ஒளிவட்டம் காணப்படுகின்றது. இவ்வாறு கஜலக்ஷ்மி அழகாக மிளிர்கின்றார். பின்புறத்திலே வேதிகையிலுள்ள ஸ்தம்பத்தின்மீது ஸ்வஸ்திகா முழுநீளத்திற் கும் காணப்படுகின்றது. இக் கஜலக்ஷ்மி வடிவம் ஸ்ரீசூக்தத்திலே வரும் லக்ஷ்மி பற்றிய வருணனையினைப் பெருமளவு ஒத்துக் காணப் படுகின்றது. இக் கஜலக்ஷ்மி நாணயங்கள் வைஷ்ணவ சின்ன மாகவும் விளங்குவன. லக்ஷ்மி திருமாலின் சக்தி; செல்வத் திற்கு இறைவி.

சிங்கக் காசு:

பிடரிமயிருள்ள சிங்கம் பொறித்த காசுகள் கந்தரோடை யிலே கிடைத்துள்ளன. சிங்கம் முன்பக்கத்திலும், மூன்று புள்ளிகளடங்கிய வட்டம் பின்பக்கத்திலும் காணப்படுகின்றன. ஒன்றின் பின்பக்கத்திலே கிளையுள்ள மரமுள்ளது. அழகிய சிறு காசு ஒன்றிலே சிங்கமும் முக்கோண இலச்சினையும் முன் பக்கத்திலும், ஸ்வஸ்திகா பின்பக்கத்திலும் காணப்படுகின்றன. இக்காசு கி. பி. 3ஆம் நூற்றாண்டளவைச் சேர்ந்த பல்லவக் காசு எனப் போல் இ. பீரிஸ் கருதினார்.[12] சிங்கம் பொறித்த மேற்குறிப்பிட்ட காசுவகை இலங்கையில் அநுராதபுரம் போன்ற இடங்களில் அதிகமாகக் கிடைப்பதாலும், சிங்கம் தேசிய சின்ன மாகையாலும் இவ்வகை இலங்கைக்கே உரியதெனக் கொட் றிங்ரன் கருதினார்.[13] ஆனால், பல்லவ சின்னங்களிலே சிங்கம் பிரபல்யமான இடம் பெற்றுள்ளதை மறுக்கமுடியாது. பல்லவரும்

இத்தகைய காசு வெளியிட்டுள்ளனர். சமீபகாலத்திலே இதுபோன்ற சிங்கம் பொறித்த காசு திருக்கேதீஸ்வரத்திலே கிடைத்தது. அதன் முன்பக்கத்திலே சிங்கமும், பின்பக்கத்திலே பூரணகும்பமும், அயலில் இருமருங்கும் குத்துவிளக்குகளும் போன்றவை காணப்படுகின்றன. இவ்வகை நாணயம் பல்லவக் காசு என டி. பி. இ. ஹெற்றியாராய்ச்சி என்ற அறிஞர் ஆய்ந்துள்ளார்.[14] சில காசுகளிலே, ஏரிக்கட்டுள்ள எருது நிற்கும் நிலையிலே முன்பக்கத்திலேயும், சக்கரம் மறுபுறமும் உள்ளன. எருது பல்லவ இலச்சினை.

முக்கியத்துவம்:

மேற்குறிப்பிட்ட காசுகளிலே காணப்படும் ஸ்வஸ்திகா போன்ற சின்னங்கள் சைவம், வைணவம், பௌத்தம், சமணம் போன்ற இந்திய சமயங்கள் அனைத்திற்கும் பொதுவானவை. சிங்கம் ஒருபுறத்திலே இலங்கையின் தேசிய சின்னமாகும். ஆனால், அதேவேளையிலே துர்க்கையம்மனின் வாகனம் என்பதும் கவனித்தற்குரியது. ஸ்தூபி, அரசமரம், வேதிகை போன்றவை பௌத்தத்துடன் பெருமளவு தொடர்புடையவை. ஆனால் அரசமரம் பிற இந்தியச் சமயங்களுக்கும் பொதுவான விருட்சமே. எருது சைவத் தொடர்பைச் சுட்டும். லக்ஷ்மி நாணயம் வைஷ்ணவத் தொடர்பைக் காட்டும். எருது, சூலம் போன்ற சின்னங்கள் கிறிஸ்து ஆண்டிற்குச் சற்று முன்பின்னுன காலத்திலே, வடமேற்கு இந்தியாவி லாட்சிசெய்த இந்தோ—கிரேக்கர், குறிப்பாகக் குஷாணர் போன்ருேர் நாணயங்களிலே[15] காணப்படுவதும் குறிப்பிடற்பாலது.

ரோமக் காசுகள்:[16]

ரோமப் பேரரசிற்கும் (கி. மு. இரண்டாம் நூற்ருண்டு தொடக்கம் கி. பி. ஐந்தாம் நூற்ருண்டு வரை) இலங்கை, இந்தியா போன்ற கீழ்நாடுகளுக்குமிடையிலே நெருங்கிய வர்த்தகத் தொடர்புகள், குறிப்பாக கி. பி. முதல் ஐந்து நூற்ருண்டுகளில் நிலவின. இதன்விளைவாகப் பெருந்தொகையான ரோமக் காசுகள் இந்நாடுகளுக்கு இறக்குமதியாகின. இவை பொன், வெள்ளி, செம்பு முதலிய உலோகங்களாலானவை. மேலும், தமிழ்நாட்டிலுள்ள புதுச்சேரியிலும், ரோமக்காசுகள் வெளிவந்தன. இலங்கையிலே அநுராதபுரம், சிகிரியா, கந்தரோடை, வல்லிபுரம், திருக்கேதீஸ்வரம் முதலிய பல இடங்களிலே ரோமக் காசுகள் கிடைத்துள்ளன. 1907க்குப் பின்னர்தான் யாழ்ப்பாணத்திலே ரோமக்காசுகள் கிடைத்தன. இக்காசுகளின்

முன்பக்கத்திலே பொதுவாக, இறந்த அல்லது சமகால ரோமப் பேரரசனின் கிரீடம் தரித்த தலையும் அவரின் பெயரும் காணப் படுவன; பின்பக்கத்திலே ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று போர்வீரர் அல்லது சிலுவை முதலிய உருவங்கள் காணப்படுவன. கந்தரோடையிலே, போல் இ. பீரிஸ் சேகரித்த வற்றுட் பல கி. பி. 4ஆம், 5ஆம் நூற்றுண்டுகளைச் சேர்ந்தவை யாம். இவற்றிற்கு முற்பட்ட கால நாணயங்கள் சிலவும் கிடைத்ததாகத் தெரிகின்றது. விபரங்கள் தெரியவில்லை. இக் காசுகள் பொதுவாகச் செம்பினுலானவை. விளிம்பிலே சுற்றி வரச் சிறுபுள்ளிகள் உள்ளன. ரோமக் காசுகள் கி. பி. 6ஆம் நூற்றுண்டளவிலும் புழக்கத்திலிருந்தன. ரோமக் காசுகளைப் பின்பற்றியும் இலங்கையிலே நாணயங்கள் வெளிவந்தன. அரசரின் வடிவம் தாங்கிய காசுகள் ரோமக்காசுகளைப் பின் பற்றி வெளிவந்திருக்கலாம். ரோமானிய சொலிடுஸ் என்பதை அடிப்படையாகக்கொண்டு இலங்கையிலே கலன்ட என்ற பொற் காசு வெளிவந்தது.[17]

கஹவணு :[18]

பிந்திய அநுராதபுர காலத்தினை (கி. பி. 6—10ஆம் நூற் றுண்டு வரை)ச் சேர்ந்த நாணயங்களும் கஹவணு எனவே அழைக்கப்படும். இவற்றிற் பலவகையுண்டு. இவை பொன், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களினுலானவை; பெரும்பா லானவை பொற்காசுகளே. இவை வட்டவடிவின. இந்நாண யங்களின் முன்பக்கத்திலே தோதி (வேட்டி), மேலாடை தரித்து, முடியணிந்து, நிற்கும் நிலையிலே மனித வடிவம் — அரசரின் வடிவம் உள்ளது. இடது கரத்தினை மடித்து, சங்கு அல்லது தாமரைமலர் அல்லது வேறு ஏதோ வைத்திருக்கிறுர். வலது கரம் தொங்குகிறது. சிலவற்றில் ஒருபுறத்திலும், சிலவற்றில் இருபுறங்களிலும் விளக்குகள் காணப்படுகின்றன. புள்ளியுள்ள அல்லது இல்லாத நான்கு சிறு வட்டங்கள் உள்ளன. பின் பக்கத்தில் அரசர் இருக்கும் நிலையிலே காணப்படுகிறுர். சில வற்றிலே சதுரக்கோடிழுத்த ஆசனம் உண்டு. இடது கரத்தினை முன்பக்கத்திற் போலவே வைத்திருக்கிறுர்; தோதி, முடி அணிந் துள்ளார். வலதுகரம் முழந்தாளிலுள்ளது. இடப்புறமாக ஸ்ரீலங்காவிபு அல்லது ஸ்ரீலங்கேஸ்வர என்ற வாசகம் மூன்று வரிகளிலே நாகரி எழுத்திலுள்ளது. மன்னரின் பெயரின்றி, ஈழத்தின் தலைவன் அல்லது அரசன் எனப் பொருள்படும் வாசகமே காணப்படுகின்றது. சில காசுகளிலே மன்னர் பிறை, அல்லது தாமரை மலர், அல்லது சங்கு, அல்லது மல்லிகைப்பூ,

அல்லது சக்கரம் முதலியனவற்றைக் கொண்டுள்ளார். இங்கு காணப்படும் மனித உருவம் காத்தற் கடவுளான திருமால் எனவும் சில அறிஞர் விளக்கம் கொடுப்பர். நாடு காக்கும் மன்னனைக் காத்தற் கடவுளான திருமாலாகக் கொள்ளுவதுண்டு. ''திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேன்'' என ஆள்வார் ஒருவர் குறிப்பிட்டுள்ளமையும் கவனித்தற்பாலது.

மேற்குறிப்பிட்டதன் அரைவாசிக் காசு அர்த்த கஹவனு எனவும், காற்பகுதி பல அல்லது தெக எனவும், எட்டிலொன்று அக எனவும், கி. பி. 8—10ஆம் நூற்றுண்டுவரையி லழைக்கப் பட்டன. இவை சிறியவை. மேற்குறிப்பிட்ட காசிலுள்ள சில இலச்சினைகள் இவற்றிலுமுள்ளன. சிலவற்றிலே ஸ்ரீலங்கா என்ற வாசகம் நாகரி லிபியிலுள்ளது. சிலவற்றிலே லக்ஷ்மி நிற்கும் நிலையிலே தாமரையாசனத்திலே காணப்படுகிருர். மறுபுறத்திலே லக்ஷ்மி என்ற வாசகம் நாகரி லிபியில் உள்ளது. வேறு சிலவற்றிலே, அர்த்தசந்திரன், தாமரைப்பூ முதலியனவும், நந்தக அல்லது உரக அல்லது தரக அல்லது இரக (அல்லது அரக) என்ற வாசகம் நாகரி எழுத்திலும் காணப்படும்.

இந்நாணயங்களிலே வட இந்திய நாகரி லிபி பயன்படுத்தப் பட்டதிலிருந்து, இவை வெளிநாட்டு வர்த்தகத்திற்குப் பயன் படுத்தப்பட்டமை குறிப்பிடற்பாலது. வடமொழி இந்தியப் பொதுமொழியாக மட்டுமன்றி இலங்கை, பர்மா, தென்கிழக் காசியா, மத்திய ஆசியா ஆகிய இடங்களின் பொதுமொழி யாகவும் நிலவியது. மேற்குறிப்பிட்ட வகையினைச் சேர்ந்த காசுகள் சில கந்தரோடையிலும் கிடைத்துள்ளன. இவ்வகை நாணயங்கள் குப்த நாணயங்களைப் பின்பற்றி எழுந்தன.[19] இவற்றிலே காணப்படும் உருவங்கள், குறிப்பாக மன்னர் உருவங்கள், லக்ஷ்மி, நாகரி எழுத்துகள் முதலியவை குப்த நாணயவியலின் சாயலைக் காட்டுவன.[20]

மத்தியகால நாணயங்கள்:[21]

கி. பி. 11—16ஆம் நூற்றுண்டுவரையுள்ள இலங்கை நாண யங்களின் பொது அம்சங்களை முதலிற் குறிப்பிடலாம். இவற் றின் முற்புறத்திலே அநுராதபுரகாலப் பிற்பகுதி நாணயங் களைப் போன்று நிற்கும் நிலையிலும், பின்புறத்திலே இருக்கும் நிலையிலும் மன்னர் காணப்படுகிருர். பின்புறத்திலே மன்னரின் பெயர் நாகரி எழுத்திலே பொறிக்கப்பட்டுள்ளது. முன்னைய வற்றிற் போன்று நாணயத்தின் விளிம்பிலே சுற்றிவரச் சிறு புள்ளிகள் உள்ளன.

தன்னுடைய பெயரினைக் காசிலே முதன் முதலாகப் பொறித்த சிங்கள அரசன் முதலாம் விஜயபாஹு(1055—1110). இவனுக்குமுன் இலங்கையைக் கைப்பற்றி ஆண்ட சோழப் பெருமன்னர் (993—1070), குறிப்பாக முதலாம் ராஜராஜன் அநுராதபுர முடிபுகால ஈழநாணயங்களைப் பின்பற்றியும் ஒரு வகையான நாணயங்களை வெளியிட்டான். இவற்றிலேயுள்ள ஸ்ரீலங்காவிபு என்ற வாசகத்திற்குப் பதிலாக ராஜராஜனின்: பெயர் ஸ்ரீராஜராஜ என இடம்பெற்றது. இவ்வகை நாணயம் இலங்கையிற் புழக்கத்திற்காக அடிக்கப்பட்டது. ஆனல், ராஜ ராஜனுக்கு முன்பே ஈழக்காசுகள் தமிழகத்திலே வியாபாரத்திற் காகப் புழக்கத்திலிருந்தன. இவற்றை 'ஈழக்காசு' எனவும், 'ஈழமனிதன்' பொறித்த காசு எனவும் குறிப்பிட்டனர். ராஜ ராஜனைப் பின்பற்றி விஜயபாஹு தன்பெயரிலே தரம்குறைந்த பொன், வெள்ளி, ஆகியவற்றில் ஓரளவும், பெருமளவு செம்பி லும் காசுகளை வெளியிட்டான். இவற்றிலே மன்னர் பெயர் ஸ்ரீ விஜயபாஹு என நான்கு வரிகளிலே காணப்படும். இவ னுக்குப் பின் முதலாம் பராக்கிரமபாகு (1153—1186) தன் பெயரிலே (ஸ்ரீ பராக்கிரமபாஹு) மூன்று உலோகங்களிலும் காசுகளை வெளியிட்டான். இவனுக்குப் பின் பொன் வெள்ளிக் காசுகள் அருகியே பயன்படுத்தப்பட்டன. வெள்ளிமுலாம் பூசிய செப்புக்காசுகளும் வெளிவந்தன. நிஸங்கமல்லன் (1187—1196), சோடகங்கன் (1196—1197), லீலாவதி (1197—1200, 1209—1210, 1211—1212), சாஹஸமல்லன் (1200—1202), தம்மாசோகதேவ (1208) முதலியோரின் செப்புக்காசுகள் பல்வேறு தொகையாக யாழ்ப்பாணத்திலும் கிடைத்துள்ளன. எடுத்துக்காட்டாக, பண்டத்தரிப்பிலே லீலாவதியின் நான்கு காசுகளும்,[22] மட்டுவிலிலே லீலாவதியின் 60 காசுகளும், சாஹஸமல்லனின் 105 காசுகளும், தம்மாசோகனின் 10 காசு களும் கிடைத்துள்ளன.[23] கந்தரோடை, தொல்புரம், வல்லிபுரம் முதலிய இடங்களிலும் சாஹஸமல்லனின் காசுகள் கிடைத் துள்ளன.

. தம்பதெனிய காலத்திய (கி. பி. 13—14ஆம் நூற்றுண்டு) காசுகள் யாழ்ப்பாணத்திலும் பல இடங்களிலே கிடைக்கின்றன. பராக்கிரமபாஹு (குறிப்பாக இரண்டாம் பராக்கிரமபாஹு 1236—1270), விஜயபாஹு (குறிப்பாக 4ஆம் விஜயபாஹு), புவனேக பாஹு (குறிப்பாக முதலாம் புவனேகபாஹு 1272—1284) காலத்திய காசுகள் கந்தரோடை, வல்லிபுரம், அச்சுவேலி, தெல்லிப்பழை, புங்குடுதீவு முதலிய இடங்களிலே கிடைத் துள்ளன. 1972இலே தெல்லிப்பழையிலே இம்மூன்று மன்னரின் ஏழு நாணயங்கள் திரு. ஆ. சிவநேசச்செல்வன் என்பவருக்குக்

கிடைத்தன. ஆனால் இவை முட்டியொன்றிலே பிறபல காசுக ளுடன் வெளிவந்ததாகவும், ஏனைய காசுகள் வேறு நோக்கங் களுக்காக உருக்கப்பட்டுவிட்டனவாகவும் அறிகிறோம். இம் மூன்று மன்னர் காலத்திலே, யாழ்ப்பாணத்திலே, கலிங்கர், ஜாவகர், தமிழர் ஆகியோரினாதிக்கம் நிலவியதாலே, இக் காசுகள் வர்த்தகத் தொடர்பாலே கொண்டுவரப்பட்டிருப்பன.

கோட்டையரசனான ஆறும் பராக்கிரமபாஹு (*1412—1467*) நாணயங்கள் பல கந்தரோடை, வல்லிபுரம், நல்லூர், கொக்கு வில் முதலிய இடங்களிலே கிடைத்துள்ளன. இக்காசுகளிலே சிங்கமுகம் பொறிக்கப்பட்டுள்ளது. இவன் சிலகாலமாக யாழ்ப் பாணத்தையு மீணத்து ஆட்சி செய்தவன் (*1450—1467*). ஆகவே, ஆதிக்கத் தொடர்பாலும் இக்காசுகள் கொண்டுவரப் பட்டிருப்பன.

சேது நாணயங்கள்: [24]

கி. பி. *13*ஆம் நூற்றாண்டு பிற்பாதி தொடக்கம் கி. பி. *1619* வரை யாழ்ப்பாணத்தி லாட்சிபுரிந்த தமிழ்மன்னர் தனிப் பட்ட நாணயவகையினை வெளியிட்டனர். இவை சோழ மன்னர், சமகாலச் சிங்கள மன்னர் நாணய வகையினைப் பின் பற்றியவை. இவற்றிற் காணப்படும் சில அம்சங்கள் முற்குறிப் பிட்ட காசுகளில் உள்ளன. ஆனால் புதிய அம்சங்கள் சில உள்ளன. குறிப்பாக மன்னரின் பெயருக்குப் பதிலாக **சேது** என்ற வாசகம் இடம்பெற்றுள்ளது. இது காணப்படும் காசின் பின்புறத்திலே கம்பீரமான தோற்றமுள்ள எருது படுத்த நிலையில் உள்ளது. அதன்மேலே பிறையும், இவ்வாசகமும் உள்ளன. முன்பக்கம் பெரும்பாலும் சமகால சிங்களமன்னர் நாணயங்களைப் போன்றதே. இக்காசிலும் பலவகைகள் உள்ளன. பெரும்பாலும் செப்புக்காசுகளே கிடைத்துள்ளன.

இவற்றைவிட, சோழர், பாண்டியர், சேரர் காசுகளும், அராபியக் காசுகளும், சீனக் காசுகளும் யாழ்ப்பாணத்திலே கிடைத்துள்ளன.

அடிக்குறிப்புகள்

1. Morgan, E. V. *History of Money*, Great Britain 1965 pp. *1—13*

   Sircar, D. C. *Studies in Indian Coins*, Delhi 1968 pp. *1—2*

2. Sircar, D. C. Ibid p. *2*

3. Pieris, P. E. *Nagadipa II—Coins* JRASCB' 73. 1919 p. 45—60

4. Codrington, H. W. *Ceylon Coins and Currency*, Colombo 1924

5. Rasanayagam, Mudaliyar C. (i) *Ancient Jaffna* 1926 p. 300 (ii) *Jaffna Coins* JRASCB XXXI. 83, 1930 pp. 589—590

6. Gnanaprakasar, Rev. S. *The Forgotten Coinage of the kings of Jaffna*, Ceylon Antiquary and Literary Register V. IV. 1919—1920 p. 172—179

7. (அ) Codrington, H. W. Ibid pp. 11—17
(ஆ) Pieris, P. E. Ibid pp. 47—51
(இ) Brown, C. J. *The Coins of India, Calcutta* 1922 pp. 13—21

8. Codrington, H. W. Ibid p. 16

9. Codrington, H. W. Ibid pp. 17—26
Pieris, P. E. Ibid pp. 48—51

10. Pieris, P. E. „ p. 51

11. Codrington, H. W. „ pp. 26—31
Pieris, P. E. „ pp. 52—56

12. Pieris, P. E. „ p. 56

13. Codrington, H. W. „ p. 25

14. Hettiaratchi, D. P. E. *A note on unpublished Pallava Coins JRASCB N S I V.* 1955 pp. 73—77

15. Sircar, D. C. Ibid Plates VIII—XII

16. அ. Codrington, H. W. Ibid pp. 31—45; 250—253
ஆ. Pieris, P. E. Ibid p. 57
இ. Still John *Roman Coins found in Ceylon* JRASCB 1907 pp. 161—190

17. Paranavitane, S. "*Coins*" University History of Ceylon Vol. I Part I p. 227

18. Codrington, H. W. Ibid pp. 50—63

19. Codrington, H. W. *Ceylon Numismatics* JRASCB XXIV 1915—16 p. *176*

20. Sircar, D. C. Ibid Plates XIV, XV
Brown, C. J. Ibid pp. *40—49*

21. Codrington —*Ceylon Coins and Currency*, Colombo 1924 pp. *63—83*

22. Ceylon Antiquary and Literary Register 1916 p. *225*

23. JRASCB XXVI 70. 1917, p. *104*

24. அ. Rasanayagam, C. Ibid
ஆ. Gnanaprakasar, S. Ibid
இ. Codrington, H. W. Ibid pp. *74—77*
ஈ. Pathmanathan, S. Kingdom of Jaffna Circa A. D. 1250—1450. Unpublished Ph. D. thesis. 1969.

நடுகல் வழிபாடு

புலவர் செ. இராசு

நடுகல்பற்றிய ஆய்வு:

தமிழ்க் கல்வெட்டுக்களாக சுமார் ஒரு லட்சம் கல்வெட்டுக்கள் நாட்டில் இருக்கக்கூடும். அவைகளில் படி எடுத்திருப்பவை ஏறத்தாழ 25,000 கல்வெட்டுக்கள்தாம். அச்சாகி வெளிவந்திருப்பன சுமார் 5,000 தாம். ஆனால் அவைகளில் சில நூறுதான் நடுகல் பற்றிய கல்வெட்டுக்கள் இருக்கும்.[1]

பெரும்பாலும் கோயில் கல்வெட்டுக்களே முன்பு படி எடுக்கப்பட்டன. காடு மேடுகளிலும், மலைச்சாரல்களிலும், புதர்களினிடையிலும் மறைந்து கிடக்கும் நடுகற்கள் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. இன்று நடுகற்களைக் காணவேண்டும் என்ற ஆர்வம் தமிழகத்தில் ஏற்பட்டுள்ளது.

1971ஆம் ஆண்டு வடஆர்க்காடு மாவட்டத்தில் செங்கம் பகுதியில் நூற்றுக்கு மேற்பட்ட நடுகற்களைத் தமிழக அரசின் தொல்பொருள் ஆய்வுத்துறை கண்டுபிடித்துப் படி எடுத்து ஆய்ந்து வருகின்றது.[2] 1973 பிப்ரவரி மாதம் இத்துறையினர் நடுகற்களைப் பற்றிய ஒரு கருத்தரங்கினையும் பொருட்காட்சியினையும் நடத்தினர்.

தனியாக நடுகற்களைக் கண்டு ஆய்ந்து வருபவரில் தருமபுரி மாவட்டம் கடத்தூர்ப் புலவர் புது. போ. வேங்கடராமன் அவர்களைச் சிறப்பாகக் குறிப்பிடலாம்.[3] அரும்பொருட் காட்சிச் சாலைகளில் நடுகற்களுக்கென்றே தனிப்பகுதி அமைத்துத் தொகுத்து ஆய்வு நடத்தவேண்டும் என்ற எண்ணமும் நடுகற்களை ஆராயும் ஆர்வமும் பெருகி வரும் இப்பொழுது அது பற்றிய சில குறிப்புக்களைத்தான் இக்கட்டுரை சிந்திக்கிறது.

பெயர் பொருந்துமா?

பாராட்டத்தக்க நல்ல பண்புகளைப் பெற்ற ஒருவர் இறந்த பின் அவர் நினைவாக நடும் கல்லை 'நடுகல்' என்று முன்னோர் வழங்கினர்.

'பரலுடை மருங்கின் பதுக்கை சேர்த்தி
மரல்வகுந்து தொடுத்த செம்பூங் கண்ணியோடு
அணிமயிற் பிலி சூட்டிப் பெயர்பொறித்து
இனிநட் டனரே கல்லும்'[4]

என்பது உறையூர் இளம்பொன் வாணிகனுர் கூற்று. 'நட்டகல்'—நடுகல்—என்பது நல்ல சொல்லே. ஆனல் பிற்காலத்தில் கோபுரங்களிலும், தூண்களிலும், மலைச்சாரலிலும், குகைகளிலும் பொறித்த சிற்பங்களை எவ்வாறு 'நடுகல்' என்பது?

நடுகல் என்பதனை ஆங்கிலத்தில் 'Hero Stone' என்றே பலரும் குறிக்கின்றனர்.[5] போரில் வீரமரணம் எய்திய வீரர்க்கு மட்டும் கல் நடுவதில்லை. கடவுள் கோயில் கட்டியவருக்கும்,[6] கால்வாய் வெட்டியவருக்கும்,[7] வடக்கிருந்து உயிர் விட்டவருக்கும்,[8] சல்லேகனை விரதமிருந்து உயிர்நீத்த சமணச் சான்ருேருக்கும்,[9] பெண்டிருக்கும்,[10] நற்காரியத்தின் பொருட்டுத் தற்கொலை செய்துகொண்டவர்களுக்கும்,[11] நரபலியாக வெட்டுண்டவருக்கும்,[12] உடன்கட்டை ஏறிய உத்தம மாதர்களுக்கும்[13] நினைவுக் கற்கள் இருக்கின்றன.

எனவே 'நடுகல்', 'வீரக்கல்' என்று இவைகளை அழைப்பதை விடுத்து (கற்களின் வகையும் தொகையும் பல்கிய காரணத்தால்) 'நினைவுக்கல்' என்று அழைக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஆராய்ச்சிச் சான்ருேர்கள் இது குறித்து ஆய்வார்களாக.

தொல்காப்பியனுர் குறிப்பு:

நடுகல் நாட்டிக் கோயில் கட்டும் முறையைத் தொல்காப்பியர் மிகத் தெளிவாக முறைப்படுத்திக் கூறுகின்ருர்.

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்
சீர்த்தகு சிறப்பில் பெரும்படை வாழ்த்தலென்று
இருமூன்று மரபிற் கல்"[14]

என்ற பகுதியில் இது விளங்கும். தொல்காப்பியர் காலம் கி. மு. 5ஆம் நூற்ருண்டென்பது அறிஞர் துணிபு.[15] தொல்காப்பியர் இலக்கியங் கண்டு இலக்கணம் இயம்புகின்ருர். ஆயின் நடுகல் நாட்டும் மரபு எத்துணை தொன்மையுடையது என்பது இதனுல் புலப்படும். தொல்காப்பியர் கூறும் நடுகல்லில் எழுத்திருந்ததா என்பது ஆய்வுக்குரியது.

சங்ககால நடுகல்:

நீண்டு உயர்ந்த பெரிய கற்களையே (நெடுநிலை நடுகல்) நடுகல்லாக நட்டனர். அவை பார்ப்பதற்கு யானைபோன்று காட்சியளிக்கும். அதன் நிழலில் மக்கள் தங்குவர். முன்னர் கேடயம், வேல் ஊன்றப்பட்டிருக்கும். கல்லில் வீரனது பெருமைகளையும், பெயரையும் பொறித்திருப்பர். மயில்பீலி சாத்தும் வழக்கமும் உண்டு.[16]

நாள்தோறும் அதிகாலையில் நீராட்டி வாசனைப் புகையைக் காட்டி நெய் விளக்கு ஏற்றுவார்கள். கரந்தைப் பூவையும், பனை ஓலையில் தொடுக்கப்பட்ட வேங்கைப் பூவையும், மரல் பூவைப் பிளந்த செம்மையான கண்ணியையும் சூட்டி மகிழ்வர். நெல்லொடு பூவைக் கலந்து தூவி வழிபடுவர். ஆட்டுக் கிடாய்களை வெட்டிப் பலிதருவர். கள்ளைச் சிறு கலங்களில் ஊற்றிப் படைப்பார்கள்.[17]

முன்னோர் கற்களைப் பெண்களும், பிறரும் வணங்குவர். இறந்த கணவனின் கல்லை கைம்மை நோன்புடைய மனைவி வணங்குவாள். வழிச்செல்வோர் நடுகல்லை வழிபடுவர். மழை பெய்து குளிர்ச்சியாகி வழிச்செலவிற்கு இன்பம் தரும் என்று நம்பினர். நடுகல்லைவிட வேறு சிறந்த தெய்வமில்லை என்பது மக்கள் துணிபு.[18] கல் நாட்டுவது வேந்தர்க்கும், வீரர்க்கும் பொதுவாக இருந்தது.[19] போரில் புண்பட்ட வீரர்கள், நடுகல்லிடத்து வந்து புண்ணைக் கிழித்துக்கொண்டு இறந்து படுவதும் உண்டு.[20]

அகநானூற்றுக் குறிப்பு:

இரண்டு அகநானூற்றுப் பாடல்கள் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. சங்க காலத்து விளங்கிய தொன்மையான நடுகற்களை அவை படம் பிடித்து நமக்குக் காட்டுகின்றன.

ஒரு நடுகல்லில் எழுத்து இருந்தது. வீரர்கள் தங்கள் அம்புகளை அதில் தேய்த்துக் கூர்மையாக்கினர். எழுத்துக்கள் அழிந்தன. கல்லும் தேய்ந்தது. வழிச்செல்வோர் அவ்வெழுத்துக்களைப் படிக்க முடியவில்லை. உள்ள எழுத்து வேறாகக் காட்சி அளிக்கின்றன.

> 'கடுங்கண் மறவர் பகழி மாய்த்தென
> மருங்குல் நுணுகிய பேஎமுதிர் நடுகல்
> பெயர்பயம் படரத் தோன்றுகுயில் எழுத்து
> இயைபுடன் நோக்கல் செல்லாது அசைவுடன்
> ஆறுசெல் வம்பலர் விட்டனர் கழியும்'[21]

இன்னொரு சிற்றூரில் நடுகற்கள் பல இருந்தன. அதரிடை நட்டது அல்லவா? அங்கு உப்பு வணிகரின் வண்டிகள் வருகின்றன. அவற்றின் சக்கரங்கள் பட்டு எழுத்துக்கள் அழிந்தன. இங்கும் அதே காட்சி.

"மரங்கோள் உமண்மகன் பேரும் பருதிப்
புன்தலை சிதைந்த வன்தலை நடுகல்
கண்ணி வாடிய மண்ணா மருங்குல்
கூர்உளி குயின்ற கோடுமாய் எழுத்தவ்
வாறுசெல் வம்பலர் வேறுபயம் படுக்கும்
கண்பொரி கவலைய கானம்".[22]

அம்புகளைத் தேய்க்கும் அளவிற்குப் பழைமையானதாகவும், வண்டி செல்வழியைத் தடுக்கும் அளவிற்கு மிகுதியானதாகவும் நடுகற்கள் இருந்தமை இதனால் புலப்படுகிறது.

பாலையில்தான் இருந்ததா?

நடுகற்கள் பெரும்பாலும் சிற்றூர்களின் சிறு வழியில், இடுகாட்டில், நெல்லிமர நிழலில், கல்சூழ்ந்த பதுக்கையிடங்களில் இருந்தன என்று கூறப்பட்டாலும் இன்று கிடைக்கும் (சங்கப் பாடல்களின்) குறிப்புக்கள் மூலம் அவை பெரும்பாலும் பாலை நிலத்தில்தான் இருந்தனவோ என்று எண்ணத் தோன்றுகிறது. நடுகற்கள் உள்ள இடங்களை "வெஞ்சுரம், அருஞ்சுரம், அருமுனை, சிறுவழி, அரிதுன் கூவல், அங்குடிச் சீறூர், வன்புலச் சீறூர், போக்கறு கவலைய புலவுநாறு அருஞ்சுரம், இடம் பிறர் கொள்ளாச் சிறுவழி" என்று சங்க இலக்கியப் பாடல்கள்[23] கூறுகின்றன. பெருங்கதை போன்ற பிற்கால இலக்கியங்களும் இதனையே கூறுகின்றன.[24]

நடுகற்களைக் குறிக்கும் இடங்களின் வருணனை ஏன் பெரும்பாலும் பாலை நிலமாகக் கூறப்படுகிறது என்பதை அறிஞர்கள் ஆய்வார்களாக.

இடைக்கால நடுகல்: (சில வழக்கங்கள்)

ஒரு புலவர் நடுகல்லை 'நடும்கல்' (நடுங்கல்) என்று குறிக்கின்றார்.[25] நச்சினார்க்கினியர், தொல்காப்பியர் காட்சி முதலியனவாகக் கூறுவனவற்றை கல்லை ஆராய்ந்து காண்பது, நட்டபின் கல்லில் வீரனைக் காண்பது என இரண்டிரண்டாக்கிப் பன்னிரு துறையாக்குவர். இது அவர் காலத்திருந்த வழக்கத்தைக் காட்டுகிறது.

கல் தேடும்பொழுது தெய்வத்தை உடம்பிலே நிறுத்தித் தேடுவர். கல்லை எடுக்கும்பொழுது அதன்மீது நீர் பெய்து, கள் தெளித்து, பூத்தூவி, மாலையிட்டுத் துடியினை ஒலித்து எடுப்பர். அப்போது மணிகள் ஒலிக்கும். நறும் புகையூட்டிச் சந்தனமும் பூசுவர். கல்லிற்கு ஆட்டிய நீரை வான்நீரினும் தூயதென்று தாமும் ஆடுவர். வீரன் மனம் குளிரக் குளத்தின் உள்ளும் கல்லை இடுவர். வீரர்களும் சுற்றத்தினரும் இருப்பர். பாணர், கூத்தர் புடைசூழ நெடுந்தூரம் கல்தேடிச் செல்வது முண்டு.

வண்டியிலேற்றி ஆரவாரத்துடன் கல் கொண்டு வரப்படும். பல வீரர்கட்கு ஒன்ருகக் கல் நடுவர். பீடம் அமைத்து விளக்கு வைப்பர். இமயம் போல் வாழ்க என்று வாழ்த்துவர். கோயிலும், மதிலும், வாயிலும் அமைக்கப்படுதலும் உண்டு.[26] தொல்காப்பியர் கூறிய 'பெரும்படை' பிற்காலச் சோழர் காலத்தில் வேந்தருக்கும், வீரருக்கும் எடுக்கப்பட்ட 'பள்ளிப் படை' ஆயிற்றுப்போலும்.[27]

புறத்திணை நடுகற்கள்:

புறத்திணை எட்டிற்கும் சான்ருக விளங்கும் நடுகற்கள் இன்று நமக்குக் கிடைக்கின்றன. இதனுல் புறத்திணை என்பது நாட்டில் மெய்யாகவே நடைபெற்ற நிகழ்ச்சி; கற்பனை அன்று என்பது பெறப்படுகிறது. இந்நடுகற்கள் பலவும் தொல்காப்பிய உரையாசிரியர் காலத்திற்கும், புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் காலத்திற்கும் முற்பட்டவை. எனவே, அவர்கள் இச் சிற்பங்களைப் பார்த்தும் தம் கருத்துக்களை எழுதியிருக்கலாம்.

வெட்சி (ஆநிரை கவர்தல்):

''கோ விசைய நரசிங்க பருமற்கு இரண்டாவது வாண கோன் அதிரைசர் சேவகர் மீகொன்றை நாட்டு மேல் வேளூர் ஆளும் பறைய மாளியர் இவ்வூர்த் தொறுக் கொண்ட ஞான்று பட்டார்''.[28]

கரந்தை (ஆநிரை மீட்டல்):

''கோ விசைய கம்ப பர்மற்கு
யாண்டு ஆருவது கொங்க
த் தெழுமாத்தூ ர் இருந்து
வாழும் சாகாடச் சிற்றன்
மீகொன்றை நாட்டு
ப்புளியூர் எரு
மை கொண்ர ஞா

ன்று பூசல்லோடி
மேல் வேணாட்டு மணி
க்கல வடவூரில் முட்டி எ
மைத் தொறு மீட்டுப் பட்டா
ன் சாகாடச் சிற்றன்''[29]

வஞ்சி (பகைவர்மேல் செல்வது):

''மாந்த பருமற்குப் பதிறெ
ன்ருவது கொங்கணி அரைசரு
படை ஒரு சிரி கங்கரைசரு
சங்க மங்கலத் தெறிந்தஞா
ன்று சிரி கங்கரைசரு சேவக
ரு விசைய கொற்ற
டையாரு எறிந்
து பட்
ட கல்''[30]

காஞ்சி (வரும் பகையை எதிர்த்து நிற்பது):

''கோ விசைய மகேந்திரபரு
மற்கு முப்பத் தொன்பதாவது
வாணகோ அரைசரு மருமக்கள் பொ
ற்றெக்கையார் சருக்கிருந்த ஊர் போ
ந்தை மேற் சக்கரவரு படை வந்தஞா
ன்று ணக்கையார் இளமகன் வத்தாவ
ன் மகன் எந்
தி எறிந்து பட்டா
ன் கல்''[31]

நொச்சி (தம் கோட்டையைப் பாதுகாத்தல்):

''தென்வேணாட்டு மேலைக் கரு
ங்காலிப்பாடி சிலகில் காவேட்வைய
ன் அடியேன் பறையன் புளியனேன்
ஊரழியப் போகே
னென்று பட்டான்''[32]

உழிஞை (பகைவர் கோட்டையை வளைத்து அழிப்பது):

''ஸ்ரீ புயவீர விற்பன் எயில் நாடன்
மலைத் தோழன் எயிலெறிந்து பட்ட ஞான்று
எயில் நாடர் இட்ட கல்''[33]

தும்பை (இரு பெரும்படையும் எதிர் எதிர் பொருவது):

''ஸ்வஸ்தஸ்ரீமது புஜபலச் சக்ரவர்த்தி பிஜ்ஜண தேவ
ரசர் சுகமாயும் புத்தியோடும் ராஜரீகம் செய்து
இருக்க வனவாசி நாட்டுத் தண்ட நாயகனுகிய
பத்மரசன் ஏவலாய் தட்சிண கேதாரத்துத் தேவர்
பாதாராதகராகிய வாமசக்தி தேவரைக் கட்டிப்
பிடித்ததில் தொணவத்தியிலிருக்கும் மெறெ
காரண னுகிய பாபெய நாயகன் செருச்செய்து
ஸ்வர்க்கத்தனுனதை இக்க மருமகன் மது செய
பாபெயன் கல்லே நட்டு வீரசாலே எடுப்பித்தான் ''[34]

வாகை (வெற்றி பெறுவது):

''வாய்த்தபுகழ் மங்கலத்து வந்தெதிர்ந்த மாற்றலரைச்
சாய்த்தமகன் வென்ற சயம்பெருக—சீர்த்தபுகழ்
நிக்குவணம் கற்பொறிக்கப் பட்டான் கரையகுலச்
சொக்கனேந்த லேவுலகில் தான்
இக்கற்பொறி இரட்சிப்பான் பாதம் எந்தலே
மேலே ''[35]

இவ்வாறு எட்டுப் புறத்திணைகட்கு மட்டுமல்ல பல்வேறு துறைகளுக்கும் (யானே கைக்கோள், வேற்றுப் படை வரவு, செருவிடை வீழ்தல், குதிரை மறம், குதிரை வென்றி) நடுகல் சிற்பங்கள் இருக்கின்றன.[36] அறிஞர்கள் புறத்திணையை இனி நடுகல் துணைகொண்டு ஆய்வார்களாக.

தலைக்கொடை நடுகற்கள்:

தெய்வத்திற்குக் காணிக்கையாகத் தம் தலையை அரிந்து கொடுக்கும் வழக்கத்தைச் சிலப்பதிகாரம்,[37] கலிங்கத்துப் பரணி,[38] தக்கயாகப் பரணி,[39] அரிச்சந்திர புராணம்[40] முதலிய நூல்கள் கூறுகின்றன.

கம்ப வர்மன் காலத்து நடுகல் ஒன்று இதனை அழகிய முறையில் கூறுகிறது.

''ஸ்ரீகம்ப பருமற்கு யாண்டு இருபதாவது
பட்டை பொத்தனுக்கு ஒக்கொண்ட நாதன்
ஒக்க திந்தன் பட்டை பொத்தன் மேதவம்
புரிந்ததென்று படாரிக்கு நவகண்டங் குடுத்து
குன்றகத் தலே அறுத்துப் பிடலிகைமேல்
வைத்தானுக்கு.........'' [41]

என்பது இதன் பகுதியாகும். தருமபுரி மாவட்டத்தில் பல நடுகற்களும், சிற்பங்களும் இம் முறையில் உள்ளதைப் புலவர் புது போ. வேங்கடராமன் கண்டு பிடித்துள்ளார்.

நரபலி நடுகற்கள்:

சோழன் பூர்வபட்டயம் கொங்கு நாட்டில் பல ஊர்களில் நரபலி நடந்ததைக் குறிக்கின்றது. சென்னிமலை, பேரூர், அன்னூர், அவிநாசி முதலிய ஊர்களில் நரபலி கொடுக்கப் பட்டதாம்.[42] நரபலி கொடுக்கப்பட்டவர்கட்கு அங்கு நடுகல் நாட்டப்பட்டது. அக்கற்கள் இன்னும் இருக்கின்றன. செப் பேட்டு வாசகத்தைப் பார்ப்போம்.

''பாலகுமரனை அழைத்து திருமஞ்சனமாடுவித்து திரு நீற்றுக் காப்புமிட்டு ஆடையுடுத்தி ஆபரணங்கள் பூட்டி அலங் கரித்துப் பாலசன மிடுவித்துப் பரிமள களப கஸ்தூரிகள் பூசி வீரசந்தனம் இடுவித்துப் பாக்கு வெற்றிலை கையில் கொடுத்து வீரகொம்பு, வீரகாளம், வீரமல்லாரி, வீரசிகண்டி, வலம்புரிச் சங்குடனே வீர மேள வாத்தியம் முழங்க பஞ்ச வன்னக் குடை பஞ்சமுகத் திவட்டிகை விருது ரண வீரவளை வேங்கைப் புலிக் கொடியுடனே நடை பாவாடையுடனே நடை பாவாடைமேல் நடந்து நடன சங்கீத ராக மேள வாத்தியம் சூழ்ந்துவர சென்னிமா நகரில் நாலுவீதி மெறமனையும் வருவித்துச் சென்னி மாகாளிக்கு எதிர் நிறுத்தி அந்தப் பாலகுமரனைச் சமய முதலியாகிறவர் நாம் முன்பு சொன்ன நற்பலியும் உனக்கு வந்ததென்று அந்தப் பாலகுமரனை வெட்டிப் பலி யூட்டி வைத்து......... ... பின்பு அந்தச் சென்னி மாகாளி பலிக்கு நின்ற பாலகுமரனை சாவார்க்கோல முகத்தேதியாய் ஒரு கல்சிலை விக்கிரகமும் அவனைப் பார்த்தாப் போலே பார்க்கிற முகமாக அடிப்பித்து அந்தச் சிலையை சென்னியங்கிரி ஆலயத்தில் நிறுத்தி வைத்து குமார சுப்பிரமணிய பண்டிதரைக் கொண்டு அந்தச் சிலைக்குப் புண்யாங்க அஷ்ட மந்திரப் பிரதிஷ்டையும் செய்வித்து அபிஷேக தூப திபாராதனை முடிப்பித்து எல்லோரும் தரிசித்துக் கொண்டு அதன் பின்பு அந்தச் சாவாரப் பலிக்கல் சிலைக்கு.. ...... '' என்பது அதன் பகுதி.

இன்றும் சென்னிமலையில் 'சாவான் கோயில்' என்ற கோயில் உள்ளது.

திருச்செங்கோடு, கபிலமலை, திருவண்ணாமலை, மதுரையிலும் 'சாவான் கோயில்கள்' உள்ளன.[43]

சமயத்துறை நடுகற்கள் :

திருநாதர் குன்றில் சந்திரநந்தி என்ற சமணத் துறவி 57 நாள் உண்ணு நோன்பிருந்து உயிர் துறந்தமைக்கு நிசீதிகை (கல்) நினைவாக எடுக்கப்பட்டது.[44] திருச்சி, கழுகுமலை போன்ற இடங்களிலும் இது போன்ற கற்கள் இருக்கின்றன.[45]

இவ்வாறு சல்லேகனை (வடக்கிருத்தல் போல) விரதமிருந்து உயிர் நீத்த சமண சமயப் பெண்பால் துறவியர்கட்கும் (இவர்கள் ஆர்யாங்கனை—குரத்தியர் எனப்படுவர்) நிசீதிகைக் கல் நாட்டப்பட்டது.

கோயமுத்தூர் மாவட்டம் ஈரோடு தாலூக்கா விஜயமங்கலத்தில் உள்ள சமணக் கோயிலான ஸ்ரீ சந்திரப் பிரப தீர்த்தங்கரர் கோயிலான ஸ்ரீ வீரசங்காதப் பெரும்பள்ளியில் கங்க அரசனின் தளபதியும், கி. பி. 10 ஆம் நூற்றுண்டில் சிறப்பு வாய்ந்த சிரவண பௌகுளம்—கோமடேசுவரர் சிலையைச் செய்தவனுமான சாமுண்டராயனின் தங்கை புளியம்மை இவ்வாறு சல்லேகனை விரதமிருந்து உயிர் நீத்தாள். ''ஸ்ரீ சாமுண்டிராயன் தங்கை புளியம்மை நிசீதிகை கல்'' என்ற பழம் கல்வெட்டு அங்கு இன்றும் உள்ளது.[46]

திருவரங்கம் அரங்கநாதர் ஆலயத்தின் கிழக்குக் கோபுர வாயில் அருகே நட்ட கல் உள்ளது என மெக்கன்சி குறிப்பில் ஒரு கல்வெட்டு குறிப்பிடப் பெறுகின்றது. கோயில் பூசை சரியாக நடக்காதபொழுது அது சரியாக நடக்கவேண்டும் என்பதற்காக ஒருவர் கோபுரத்தின் மேலேறிக் கீழே விழுந்து தற்கொலை செய்து கொண்டார். அக்கல்லில் இக் கல்வெட்டுடன் அவர் சிற்பத்தையும் வடித்துள்ளனர்.

''சுபமஸ்து சௌமிய வருஷம் தை மாசம்
நாலாந் தியதி வெள்ளிக்கிழமை நாள்
ஸ்ரீ ரங்கநாத ச்வாமிக்கு படித்தரம்
ஒன்றும் நடத்தாமல் மிக அன்னி
யாயம் பண்ணுகையில் பொறுக்க
மாட்டாதே இந்தத் திருக்கோபுரத்தில்
ஏறி விழுந்து யெறந்த காலம்
யெடுத்த அழகிய மணவாளதாசன்
ஸ்ரீ கார்யம் அப்பாவையங்கார். இவ
ருக்கு ச்வாமி யெக்காளைகள் திருத்
தேர் புறப்பாடு முதலான அதிய
வரிசைகளையும் பிரசாதித்தருளி பிரம்ம
மெத சமஸ்காரம் பண்ணுவித்தருளி முழுப்

படித்தரம் கொண்டருளினர். இப்படி
நடந்து வந்த முழுப்படித் தரத்திற்கு
விரோதம் பண்ணினவன் ரெங்கத் துரோகி
யாய் போகக் கடவன். அனுகூலம்
பண்ணினவன் ஸ்ரீ லஷ்மி பரிபூர்ண
கடாக்ஷ பாத்திரஸ்தனக யிருக்கக் கடவன்''[47]

அரகண்ட நல்லூரில் ஒரு கோயில் மண்டபம் இடையூறின்றிக் கட்டப்பட பொன்னுண்டி என்ற தேவரடியாள் மகன் இளவென் மதிசூடி தன்னைப் பலியிட்டுக் கொண்டான். தெலுங்கு நாட்டில் இப்படிப்பட்ட கற்களை ''நெத்துப் பட்டு'' என்று வழங்குவர்.[48]

சதி நடுகற்கள்:

கற்புடைய பெண்களுக்கு நாட்டப்படும் நடுகல்லை மகா சதிக்கல், மாசதிக்கல், மாஸ்திக்கல், சதிக்கல் என்று வழங்கு கின்றோம். (கண்ணகிக்குச் செங்குட்டுவன் எடுத்த கல் இவ்வகை யானதே).[49]

கன்னட நாட்டுப் பகுதியில் இவை அதிகம். கொங்கு நாட்டில் வடமேற்கு எல்லைகளில் இவை கிடைக்கின்றன. இவற்றில் பெரும்பாலும் உருவம் இருப்பதில்லை. தோளுடன் கூடிய ஒரு கையே காணப்படும். சிலவற்றில்தான் எழுத்துக்கள் காணப்படுகின்றன.

உடன்கட்டை ஏறுதலாகிய தீப்பாய்தலைக் கன்னடத்தில் '**தோள் கொடுத்தல்**' என்றே குறிப்பர், சககமனம்—அனுமரணம் என்றும் குறிப்பர். இக்கற்களை ''வியாசன தோளு கல்லு'' என்று கூறுகின்றனர்.[50]

புறநானூற்றில் பூதப் பாண்டியன் தேவி பெருங்கோப் பெண்டு தீப்பாய்ந்ததையும்,[51] மணிமேகலையில் ஆதிரை தீப் பாய முயன்றதையும் காணுகின்றோம்.

உடுமலைப்பேட்டை, தாலூக்காவில் கொழுமம் தாண்ட வேச்சுரர் கோயில் கல்வெட்டில் வீர சோழன் மனைவி சோழமா தேவி தீப்பாய்ந்ததையும்,[52] இரண்டாம் பராந்தகனுகிய சுந்தர சோழன் மனைவி வானவன் மாதேவி கி. பி. 969ஆம் ஆண்டு தன் கணவனுடன் உடன்கட்டையேறிய செய்தியையும் வரலாற்றில் காணுகின்றோம்.

''செந்திரு மடந்தைதன் சிராஜ ராஜன்
இந்திர சமானன் இராஜசர் வஞ்ஞனெனும்
புலியைப் பயந்த பொன்மான் கலியைக்

கரந்து கரவாக் காரிகை சுரந்த
முலைமகப் பிரிந்து முழங்கெரி நடுவனும்
தலைமகன் பிரியாத் தையல் நிலைபெறும்
தூண்டா விளக்கு.........
.... மணிமுடி வளவன்
சுந்தர சோழன் மந்தர தாரன்
திருப்புயம் முயங்கும் தேவி''

என்ற மெய்க்கீர்த்திப் பகுதி பார்ப்பவர்களை உருக்கும் தன்மையது.[53]

''வீர பிரதாப மகாராயர் பிருத்விராஜ்யம்
செய்திருக்க சகவருஷம் 1339ஆவது
ஹேவிளம்பி சம்வத்சரத்து பாத்திர
பத சுத்த பஞ்சமி ஸ்ரீ சகலாட்ச
புரத்தும் ரெ .... மகன் புக்கரன்
ஸ்வர்க்கத்தன் ஆனதில் அவன்
பெண்டாட்டியர் மூவர் தோளும்
கையும் கொடுத்த கம்பம்''[54]

வீரர்கள் சுவர்க்கம் புகுவர் என்று புறநானூற்றுப் புலவனும் கூறுகின்றான்.[55]

கடத்தூர் நடுகல் கல்வெட்டு (தருமபுரி மாவட்டம்)

''ஸ்வத்தி ஸ்ரீ சார்வ பௌம சக்ரவர்திகள்
ஸ்ரீ போசாள வீர ராமனாத தேவர்க்கு
யாண்டு 33 ஆவது ஆடிமாதம் பதி
னேழாம் தியதி மகத்தினன்று
கடத்தூர் நாட்டு நாயஞ்செய்
வான் ஆரொத்தான் இருக்கன்
பெருமாள் மகன் ஆண்பிள்ளைப்
பெருமாள் புலியைக் கொன்று
வீர ஸ்வர்க்கம் பெற்றான்.[56]

வீடு பேற்று நடுகல்:

இவ்வாறு வீரன் வீரசுவர்க்கம் அடைவதைக் காட்டும் நடுகற்கள், மூன்று நிலையாகச் சில இடங்களில் அமைக்கப்பட்டிருக்கும்.

கீழ்நிலையில் போர்க் காட்சியும், இரண்டாம் நிலையில் மனைவியருடனுள்ள காட்சியும், மேல்நிலையில் தேவமாதர் வரவேற்கும் காட்சியும், வீரன் சுவர்க்கம் புகும் காட்சியும்

இருக்கும். அவன் சமயத்திற்கு ஏற்றவாறு சிவன் அல்லது விஷ்ணுவின் சிற்பம் மேல்நிலையில் இருக்கும்.

பொதுப்பணி நடுகற்கள்:

கன்னட நாட்டுப் பகுதியில் குளங்களைத் தோண்டியும் கால்வாய் வெட்டியும் மக்களுக்கு நன்மை செய்தவர்களுக்கும் நடுகல் உள்ளன. கோவை மாவட்டம் ஈரோடு தாலுக்காவில் கி. பி. 13 ஆம் நூற்றுண்டில் 56½ மைல் நீளமுள்ள கால்வாயை வெட்டினுன் ஒரு வீரன். அவன் பெயர் காலிங்கராயன். அவன் கட்டிய அணையில் அவனைச் சிலையாக வடித்து வணங்கினர் முன்னோர். அதனைக் காலிங்கராயன் வமிசாவளி கூறுகிறது.

"காலிங்கக் கவுண்டன் கட்டியிருக்கப்
பட்ட அணையிலே கவுண்டனை சிலா
பிரதிமை ரூபமாகக் கல்வெட்டி வச்சு
சிலா சாசனமும் எழுதி
யிருக்கிறது. அந்த அணை போட்டு
இருக்கப்பட்ட இடத்தில் குடிகள்
வருஷப் பிரதியும் உற்சவம் பண்ணிக்
கொண்டு வருகிறது".[57]

பாண்டி நாட்டில் ஒரு ஏரியைக் காத்து மாண்ட பெரு மகனுக்கு நடுகல் நாட்டி அவன் மகளுக்கு 'உதிரப்பட்டி' மானியம் கொடுத்தனர். உதிரப்பட்டி மானியத்தைச் சோழன் பூர்வ பட்டயம் 'ரத்தக்காணி' என்று கூறும்.

"குலசேகர தேவ
ர்க்கு யாண்டு 34வ
துக் கருங்குளத்திர்க்
கு ஒரு பழிஉன்
டான படியாலே
இப்பழிக்கு இவ்வூர்
குடும்பரில் பெரிய
தேவப்பள்ளன் அணை
வெட்டிப் போகையா
லே இவன் மகளுக்கு
ஊரார்க ளிட்ட உதி
ரப்பட்டி குடுத்தபடி தபான
வ நிலம் அரை மா அணை
நிலம் சந்திராதித்தவல்
மானி போவிப்பார்
கா.........

என்பது முதுகுடி நடுகல்லில் கண்ட வாசகம்.[58]

தலைவனைக் காத்த 'கோவிவன்' என்ற நாய்க்கும் நம் முன்னோர் நன்றியுணர்வுடன் நடுகல் நாட்டியுள்ளனர்.[59]

விலங்குப்போர் நடுகற்கள் :

காடுகள் மிகுதியான பழங்காலத்தில் விலங்குகளால் ஊருக்குத் தொல்லை ஏற்பட்டபொழுது அவைகளிடமிருந்து ஊர்மக்களைக் காப்பாற்ற முயன்று இறந்த வீரர்களுக்கு நடுகல் நடுவர்.

பவானியில் காட்டுப்பன்றி வேட்டை நடுகல்லையும், முட்டத்தில் யானைப்போர் நடுகல்லையும், ஊத்துக்குழி, வெள்ளோடு, பழமங்கலம், குலவிளக்கு, பேரூர், தாரமங்கலம் முதலிய பல்வேறு இடங்களில் புலியுடன் பொருத நிலையில் பல நடுகற்களையும் காணுகின்றோம்.

ஊராட்சிக் கோட்டை மலை அடிவாரத்தில் ஒரு நடுகல் 'பசவேசர்துணை' என்று தொடங்குகிறது. வீரசைவனான அவன் உண்மையிலேயே வீரமிகுந்த சைவனாக இருந்துள்ளான்.

''பசவேசர் துணை
ஆனந்த வருஷம் சித்
திரை மாதம் 15 தியதி ஊ
ராள்ச்சிக் கோட்டை ஆள்
கை கெம்பை நாயக்க
ர் புலிகுத்திப்பட்டிறந்தகா
ணியாட்சி அப்பைய நாயக்
கர்க் இந்த மானுவக்காடும் யூ
ராள்ச்சியும் கொடுத்தோம்''

என்பது அக் கல்வெட்டாகும்.

ஈரோட்டு நகரில் நாச்சிமுத்து என்பவர் ஒருவர் அஞ்சல் நிலையத்தில் பணிபுரிகின்றார். 'புலிக்குத்தி நாச்சிமுத்து' என்பது அவர் பெயர். அவர் முன்னோர் விஜயமங்கலம் பகுதியில் கொடிய புலி ஒன்றைக் கொன்று ஊர் மக்களைக் காப்பாற்றினராம். வீட்டிலேயே நடுகல் உள்ளது. பரம்பரையில் மூத்தமகன் 'புலிக்குத்தி' என்ற பெயர் வைத்துக் கொள்கின்றான். பெண்கள் நடுகல் அருகே போவதில்லையாம்.

இன்றும்...நடுகல் :

கொங்கு நாட்டில் உள்ள தொட்டிய நாயக்கர்கள் இன்றும் இறந்தபின் 'கல் நாட்டுதல்' என்ற சடங்கினைச் செய்கின்றனர். சென்னைப் பக்கத்திலும் சில சமூகத்தார்களிடையே இவ்வழக்கம் உண்டு என்பர்.

'கருமாதி கல்லெடுப்பு' என்ற பழமொழியும் வழங்குகிறது. ''கல் என்றாலும் கணவன்'' என்ற பழமொழி கூட நடுகல்லைக் குறிக்கும் என்பர் சான்றோர். கொங்கு நாட்டு வேளாளர் திருமண நிகழ்ச்சியில் '**நட்கல்**' வழிபாடு (நாட்டுக்கல்) இன்றும் உண்டு.

கொங்கு நாட்டில் உள்ள இராசா, அண்ணன்மார், அப்பிச்சிமார், சடையப்பன், குப்பியண்ணன், கருப்பணன், ராவுத்தனன், செல்லக்குமரர், வீரகுமாரசாமி, முத்தையன் கோயில்கள் அனைத்தும் நடுகல்லுக்கு அமைத்த கோயில்களே! பிற்காலத்தும் பல ஊர்களில் நடுகல் அமைக்கலாயினர்.

கோவை மாவட்டத் திருப்பூரில் தியாகி குமரனுக்கு நினைவுக்கல் எடுத்திருப்பதையும், அறிஞர் அண்ணாவின் சமாதியையும் இன்றைய நடுகற்கள் எனலாம்.

வரலாறு கூறும் நடுகற்கள்:

கொங்கு நாட்டுப் பழங்குடி மக்கள் வேட்டுவர்களே. இன்று பெரும்பான்மை மக்களாய் விளங்கும் வேளாளர்கள் வேட்டுவர்களை வென்று குடியேறியவர்களே.[60]

வேட்டுவர் நடுகற்கள் பலவற்றில் 'ஊராளி வேட்டுவன்' என்ற தொடர் காணப்படுகிறது.

கொடுமுடி அருகே இராசேந்திர சோழனின் கங்கை கடார வெற்றியைக் குறிப்பிடும் நடுகல் ஒன்று உள்ளது. கொங்குச் சோழர்கள் ஆட்சிக்காலம் அது. அவர்கள் அரசு தனி அரசேனும் தஞ்சைச் சோழர்க்கு அடங்கியிருந்தனர் என்ற செய்தி இதனால் பெறப்படுகிறது.

செங்கம் நடுகல் ஒன்றில் எந்தெந்தத் தலைவர்கள் எப்பகுதியை ஆண்டனர் என்பதையும், தகடூர் நடுகல் ஒன்றில் ஒரு அரசன் வஞ்சித்து நாடு கொண்டதையும் காணுகின்றோம்.[61] ஒவ்வொரு நடுகல்லும் ஏதாவது ஒரு அரும் வரலாற்று நிகழ்ச்சியைக் காட்டுகிறது; வரலாற்று நிகழ்ச்சியைக் கூறுகிறது.

கோயில்களில் காணப்படும் கல்வெட்டுக்களை விடச் சிறப்பாக அக்கால உருவ அழகு, உடையழகு, சிற்பத்திறன், பண்பாடு, கலை இவைகளை நேருக்கு நேராகக் காட்டி நம் பழந்தமிழர் நாகரிகத்தை இன்று காட்டும் சிறந்த புகைப்படமாக—ஒளிப்படமாக விளங்கி நிற்பது நடுகற்களே.

நடுகல் வாழ்த்தி வணங்கும் தெய்வமாகவும் நின்றிலங்குகிறது. நாமும் அதன் தெய்வீகச் சிறப்புக்காக மட்டுமல்ல அதன் பெருமைமிக்க வரலாற்றுச் சிறப்புக்காகவும் சென்று வணங்குவோம் வாருங்கள்.

''நடுகல்லைக் கண்டுணர்வோம்
நல்ல வரலாறு காண்போம்''.

அடிக்குறிப்புகள்

1. கல்வெட்டுக் கருத்தரங்கு (1968) முன்னுரை
2. செங்கம் நடுகற்கள் (1972) முன்னுரை
3. ஆய்வுத்தேன் பக். 58
4. புறநானூறு 264
5. சாசன இலாகா அறிக்கை 1950
6. கெட்டி முதலியார்—தாரமங்கலம்
7. காலிங்கராயன்—அணைமுகப்பு
8. கோப்பொருஞ்சோழன்—புறம் 221
9. சந்திரநந்தி—திருநாதர் குன்று
10. புளியம்மை—சாசன இலாகா அறிக்கை 597/1905 (புள்ளப்பை)
11. அப்பாவையங்கார்—திருவரங்கம் (87/1937)
12. பாலகுமரன்—சென்னிமலை
13. செந்தமிழ் 3 (து. அ. கோபிநாதராவ் கட்டுரை)
14. தொல்பொருள் 60
15. இலக்கண வரலாறு (தொல்காப்பியம்)
16. அகநானூறு 289, 53, 131, 67, ஐங்குறுநூறு 352
17. புறநானூறு 329, 261, 265, 264, 335, 232
18. புறநானூறு 306, 261, 263, 335
19. சேதுப்பிள்ளை பாராட்டுவிழா மலர் பக். 275
20. பெருந்தொகை 701
21. அகநானூறு 297
22. அகநானூறு 343
23. ஐங்குறுநூறு 352, அகம் 35, 53, புறம் 223, 260
24. பெருங்கதை 1—46—272
25. பெருந்தொகை 1177
26. நச்சினர்க்கினியர் உரை புற. 5
    பு. வெண்பாமாலை பொது 8—14
27. பிற்காலச் சோழர் சரித்திரம் 1.76
28. எபிகிராபியா இண்டிகா 32—110, 111
29. செங்கம் நடுகற்கள் 1971/57
30. ,, ,, 1971/124
31. ,, ,, 1968/35
32. ,, ,, 1971/116
33. ஆய்வுத்தேன் பக். 63
34. செந்தமிழ் 3 (து. அ. கோபிநாதராவ் கட்டுரை)
35. கொங்கு 1—1—4
36. ஆய்வுத்தேன் 61—63

37. ''அடல்வலி எயினர்நின் அடிதொடு கடன்இது
மிடறுஉழு குருதிகொள் விறல்தரு விலையே''
(வேட்டுவவரி)

38. ''அடிக்கழுத்தின் நெடும்சிரத்தை அலிவராலோ
அரிந்தசிரம் அணங்கின்னகக் கொடுப்பராலோ''
(க. பரணி. கோயில் 15)

39. தலையரிந்து விடுவார்; உயிர் விடார்.
(த. பரணி 61)

40. ''அச்சமது அறத்தமது உயிர்க்கொடை
அளித்தவர் அறுத்த தலை''
(அரி. புராணம் விவா. 121)

41. செங்கம் நடுகற்கள் பக். 12
42. சோழன் பூர்வபட்டயம் முகவுரை 8, 9
43. ,, ,, 202
44. கொங்கு 2 பக். 233
45. கல்வெட்டுக்களால் அறியப்பெறும் உண்மைகள் 1
46. ஆய்வுத்தேன் பக். 27
47. தென்னிந்திய கோயில் சாசனங்கள் 2 783
48. சோழன் பூர்வபட்டயம் கூறும் கொங்குநாட்டு ஊர்கள் பக். 44
49. 'நான்கண்ட நடுகற்கள்'—புலவர் செ. இராசு
50. செந்தமிழ் தொகுதி—3
51. புறநானூறு—246
52. தென்னிந்திய கோயில் சாசனங்கள் 1
53. பிற்கால சோழர் சரித்திரம் 1 87
54. செந்தமிழ் தொகுதி 3
55. புறநானூறு 260, 287
56. கொங்கு 2 256
57. காலிங்கராயன் வமிசாவளி அரசினர் சுவடிச்சாலை டி. 3044
58. கொங்கு 2 301
59. செங்கம் நடுகற்கள்
60. நடுகல் கருத்தரங்கு—புலவர் செ. இராசு
61. செங்கம் நடுகற்கள் 13

விளக்கநூல்கள் :

ஆண்டு அறிக்கைகள் சாசன இலாகா டெல்லி
ஆய்வுத்தேன் ச. பிரகதம்
கொங்கு பதிப்பகம் சென்னை 1973

கல்வெட்டுக் கருத்தரங்கு	இரா. நாகசாமி புக்ஸ் இந்தியா	சென்னை	1968
கல்வெட்டுக்களால் அறியப்பெறும் உண்மை	டி. வி. எஸ். பண்டாரத்தார் தொல்காப்பியர் நூலகம்	சென்னை	1961
கலிங்கத்துப்பரணி	செயங்கொண்டார்		
கொங்கு 1, 11	ச. பிரகதம் 26, இந்திரா நகர் சென்னை 20		1971, 72
சங்க இலக்கியம்	அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு		
சிலப்பதிகாரம்			
செந்தமிழ்—3	மதுரைத் தமிழ்ச் சங்கம்		
செங்கம் நடுகற்கள்	இரா. நாகசாமி	த. அ. தொ. துறை சென்னை	1972
சேதுப்பிள்ளை வெள்ளிவிழா மலர்	குழு	சென்னை	1961
சோழன் பூர்வ பட்டயம்	பதிப்பு கோவைகிழார்	கீழைத்திசைச் சுவடிச்சாலை சென்னை	1950
சோழன் பூர்வபட்டயம் கூறும் கொங்கு நாட்டு ஊர்கள்	கி. நாச்சிமுத்து	திருவனந்தபுரம்	1969
தென்னிந்திய கோயில் சாசனங்கள் 1, 11	டி. என் சுப்ரமணியம்	கீழைத்திசைச் சுவடிச் சாலை	1954
தொல்காப்பியம்	பொருளதிகாரம்		
புறப்பொருள் வெண்பாமாலை	ஐயன் ஆரிதனுர்—பொதுவியல்		
பெருங்கதை	கொங்குவேளிர்		
பெருந்தொகை	மு. இராகவையங்கார் மதுரைத் தமிழ்ச்சங்கம்		1936

பிற்சேர்க்கை :

நடுகல்லைக் குறிக்கும் புலவர்களிற் சிலர்

அம்மூவனார் (அகம் 35)
அள்ளூர் நன்முல்லையார் (புறம் 306)
ஆலூர் மூலங்கிழார் (புறம் 261)
இளங்கிரனார் (அகம் 289)
இளங்கோவடிகள் (வஞ்சி)
உறையூர் இளம்பொன் வாணிகனார் (புறம் 264)
ஐயன் ஆரிதனார் (வெண்பாமாலை—பொது)
ஐயூர் முடவனார் (புறம் 314)
ஓதலாந்தையார் (ஐங்—352)
ஔவையார் (புறம் 232)
கடியலூர் உருத்திரங்கண்ணனார் (பட்டினப்பாலை)
கல்லாடனார் (கல்லாடம்—)
கொங்குவேளிர் (பெருங்–1–46 — 271–273)
சித்தலைச்சாத்தனார் (அகம்—53)
சேரமான் பெருமாள் நாயனார் (திரு—16)
சோணாட்டு முகையலூர் சிறுகருந்தும்பியார் (புறம்—265)
திருவள்ளுவர் (771)
தொல்காப்பியர் (புறத். 5)
நெட்டிமையார்
நோய்பாடியார் (அகம் 67)
மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் (புறம் 329)
மருதன் இளநாகனார் (அகம்—131, 297, 343)
மாங்குடி கிழார் (புறம்—335)
புத்தமித்திரர் (விரசோ. 98)

பிற்சேர்க்கை :

நடுகல் எடுத்தல்—சில நிலைகள்

(1) தொல்காப்பியனார் கி. மு. 5 நூ	காட்சி	கால்கோள்	நீர்ப்படை	நடுகல்	பெரும்படை	வாழ்த்தல்
(2) இளங்கோவடிகள் கி. பி. 2 நூ	காட்சிக் காதை	கால்கோட் காதை	நீர்ப்படைக் காதை	நடுகற் காதை	—	வாழ்த்துக் காதை
(3) ஐயன் ஆரிதனார் 10 நூ	கற் காண்டல்	கற்கோள் நிலை	கல் நீர்ப்படுத்தல்	கல் நடுதல்	இற்கொண்டு புகுதல்	கல்முறை பழிச்சல்
(4) பெருந்தேவனார் 12 நூ	கல் தேடுதல்	—	நீருட் குளிப்பித்தல்	கல் நடுதல்	பெரும் படை	வாழ்த்தல்
(5) வைத்தியநாத தேசிகர் 17 நூ	கற் கண்டிடுதல்	கற்கோள் நிலை	கல் நீர்ப் படுத்தல்	கல் நாட்டுதல்	இற்கொடு புகுதல்	கல்முறை பழிச்சல்

ஈழத்திற் சைவக் கிராமிய வழிபாடு

த. சண்முகசுந்தரம்

ஈழத்தில் இன்று நிலவுகின்ற சைவ வழிபாட்டு முறைகளை இரண்டு பிரிவிலே அடக்கலாம். அவையாவன : வேதாகம விதிகளுக்கு அமைந்த வழிபாடுகள், வேதாகம விதிகளுக்கு அமையாத கிராமிய வழிபாடுகள். வேதாகம விதிகளுக்கு முற்றிலும் அமையாத வகையிற் கதிர்காமக் கந்தன் கோயில், நல்லூர்க் கந்தன் கோயில், தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோயில் என்பன இருக்கின்றன. கதிர்காமத்தில் அந்தணர் அல்லாதோர், கப்புருளைகள் பூசகர்களாக இருக்கின்றனர். நல்லூரில் மூலமூர்த்தியில்லை. வேல் வைத்து வணக்கம் நடைபெறுகின்றது. இதனை ஆறுமுக நாவலர் பெருமான் கண்டித்திருக்கின்றார். இக்கருத்தை இன்றும் ஆதரிப்பவர்களுள் மிகவும் முக்கியமானவர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள். செல்வச் சந்நிதியில் அந்தணர் அல்லாதோர் பூசை நடாத்துகின்றனர். கதிர்காமம், உண்மையிலே காட்டில் உருவான பண்டைய முருகன் வழிபாட்டின் படிமுறை வளர்ச்சியேயெனலாம். வள்ளியைப்பற்றிச் செவிவழி வந்துள்ள கதிர்காமக் கதைகள் இக்கருத்தையே வலியுறுத்துகின்றன. இன்றும் வள்ளி வழங்கியதான தேனும், தினைமாவும் முருகனுக்குக் கதிர்காமத்தில் சிறப்பாகப் படையல் செய்யப்படுகின்றன. யாழ்ப்பாண வைபவமாலைப்படி கருணாகரத் தொண்டமானால் சோழப் பேரரசு காலத்திலே தொண்டைமானாறு அமைக்கப்பட்டது. தொடக்கத்திற் கப்பல் ஏறுவோர் இறங்குவோர் வணங்கிய முருகனின் சிறு கோயிலே, காலகதியில் பெருங் கோயிலாக மாறியது எனக் கொள்ளலாம். கப்பற் பிரயாணம் அச்சம் நிறைந்ததானபடியால் துறைமுகக்கடவுளர் வழிபாடு நடைபெற்றது. இந்த மூன்று கோயில்களிலும் நிலவுகின்ற புற நடைகள் உண்மையில் அக்காலத்தில் நிலவிய பொதுமக்களின் வழிபாட்டை உண்மைப்படுத்துகின்றன. கிராமிய வழிபாடு என்பதிலும் பார்க்கப் பொதுமக்கள் வழிபாடு என்பது பொருத்தம் எனலாம்.

இந்தியாவிற்கு அணித்தாக ஈழம் அமைந்துள்ளது. எனவே, அங்கு உருவாகிய வரலாற்றுச் சக்திகள் ஈழத்தைப் பெரிதும் பாதித்தன. அங்கு நிலவிய வைதிக வழிபாட்டு முறைகளும் பொதுமக்கள் வழிபாட்டு முறைகளும் ஈழத்தில் இடம்பெற லாயின. தொன்றுதொட்டே இத்தொடர்பு நிகழ்ந்திருக் கின்றது. சோழப் பேரரசு, பாண்டியப் பேரரசு, விசயநகரப் பேரரசு என்பவைகளின் காலத்தில் இப்படியான மதத் தொடர்புகள் மேலும் வலுப்பெற்றன. யாழ்ப்பாண அரசு 1619 வரையும் சுதந்திரமாக வட இலங்கையில் இயங்கி வந்தது. இதன்மீது போர்த்துக்கேயர் 1560 இல் படையெடுத்து வெற்றி கண்டனர். பின், 1619இல் யாழ்ப்பாணத்தரசைக் கைப்பற்றித் தமது மாகாணமாக ஆண்டு வந்தனர். போர்த்துக் கேயரின் பிடியில் அகப்பட்ட யாழ்ப்பாணத்தில் நிலவிய சைவ வழிபாட்டு முறைகள் நசுக்கப்பட்டன. ஈழத்தில் உள்ள புகழ் பெற்ற சைவத்தலங்கள் பல—திருக்கேதீச்சரம், திருக்கோணேச் சுரம், நல்லூர், மாவிட்டபுரம்—இடித்துத் தரைமட்டமாக்கப் பட்டன. இக்காலத்தில் ஈழத்தில் வாழ்ந்த சைவ மக்கள் தங்கள் பண்டைய வழிபாட்டு முறைகளை வெளிவெளியாக நடத்த இயலாது தவித்தனர். வீட்டு வளவின் பின்புறம், மரத்தின் அடிப்பாகப் பொந்துகள், பனங்கூடல்கள், காட்டுப் பகுதிகள் என்பவற்றில் வேல், சூலம், கல்லுப் பிள்ளையார் போன்றவற்றை வைத்து வணங்கினர். இதனாலேதான் இன்று ஈழத்தின் பல பாகங்களிலும் கிராமப்புறத் தெய்வ வழிபாட்டு நிலையங்கள் இருக்கின்றன. ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் (1796—1948) சமயக் கொள்கையில் சற்றுத் தாராளமான போக்குக் காணப்பட்டது. ஆறுமுக நாவலர் போன்றவர்கள் சைவ மறுமலர்ச்சியையும், நாட்டுப்பற்றையும் உருவாக்கினர். இதனால், அழிந்த பழம் பெருங் கோயில்கள் திருத்தப் பெற்றன. பொதுமக்களுக்குரிய கோயில்களிலே தாராளமாக வழிபாடுகள் நிகழத் தொடங்கின. போர்த்துக்கேயரால் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் இடித்துத் தரைமட்டமாக்கப் பட்டது. இருந்தும், முருகனில் நம்பிக்கையுடைய பொது மக்கள் தலைமறைவாக முன்னர் கோயில் இருந்த நிலையத்தில் வேல் ஒன்றை வைத்து வணங்கினர் என்பது செவிவழிவந்த கதை. இந்த வேல்தான் பின்னர் மூலமூர்த்தியாகியது என்பர் ஒருசாரார். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ஆதிமூல மூர்த்திக்கு அருகில் நிலத்தில் வேல் ஒன்று உள்ளது. இதற்கும் நீராட்டித் திருவிளக்குக் காண்பிப்பது இன்றும் வழக்கிலிருக் கின்றது. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டபோது அந்த இடத்திற் சைவ மக்கள்

தலைமறைவாக வந்து இரவோடு இரவாக வேலை வைத்து வணங்கி வந்தனர். இந்த வேல் பின்னர் மூல மூர்த்தியுடன் வணக்கத்திற்கு வைக்கப்பட்டது என்பர் இன்றைய ஆதீன கர்த்தர்.

இன்றைய ஈழத்தின் வட பகுதியில், கிழக்குப் பகுதியில், மலையகத்தில் இன்னும் பரவலாக எல்லா நகரங்களிலும் சைவக் கோயில்கள் இருக்கின்றன. சைவ மக்களின் ஆன்மீக வாழ் விற்கு இவை உறுதுணையாக அமைந்துள்ளன. இவற்றுடன் பொதுமக்களின் வணக்கத்திற்குரிய கிராமியக் கோயில்கள் புகழுடன் திகழுகின்றன. எடுத்துக்காட்டாக யாழ்ப்பாணம் வவுனியா வீதியில் உள்ள முறிகண்டிப் பிள்ளையார் கோயில், வடமராட்சி தில்லையம்பலப் பிள்ளையார் கோயில் என்பவை களைத் தரலாம். இந்தியாவிலிருந்து ஈழத்திற்கு வந்த பொது மக்களின் வழிபாட்டு முறைகள் இந்நாட்டிற்கு ஏற்ப மாறுதலும் அடைந்துள்ளன. தமிழ் நாட்டிலே ஐயனுருக்கு மிருகபலியீடு இல்லை. ஆனல், யாழ்ப்பாணத்தில் உள்ள சுன்னுகம் ஐயனுர் கோயிலிலும் காங்கேசந்துறை ஐயனுர் கோயிலிலும் மிருக பலியீடு இருந்தது. அது தற்போது நிறுத்தப்பட்டது. மேலும், தமிழக ஐயனுர் கோயில்களில் உருவத்தாற் பெரிய மண் குதிரைகள் இருக்கின்றன. இங்கு இவை பெரும்பாலும் இல்லை. ஈழத்துக் கோயில்களில் ஆடு, கோழி என்பன மட்டும் பலி யிடப்படுகின்றன. எருமை பலியிடும் வழக்கம் இல்லை எனலாம். இந்தியாவில் இவ் வழக்கம் இருக்கின்றது. மட்டக்களப்பில் வாழும் சைவப் பெருமக்கள் பலரின் குலதெய்வமாகவே கண்ணகி அமைகின்ருள் என்கிருர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள். பருத்தித்துறையில் உள்ள மாத்தனை என்னும் ஊரில் உள்ள கண்ணகை அம்மன், கண்நோயைத் தீர்க்கும் தெய்வம் என அவ்வூர் மக்கள் கருதுகின்றனர். இக் கடவுளுக்குப் பறை முழக்கி வளந்து வைத்துப் பொங்கிக் கண்மடல் செய்து கொடுத்துக் கண்நோய் நீங்கியவர் நேர்த்திக் கடன் செய்வர்.

இன்று ஈழத்திற் கிராமிய வழிபாடுகள் மக்களிடம் செல் வாக்குப் பெற்றிருப்பதற்குக் கிராமிய வழிபாட்டிற்குப் பொது வான காரணங்களையும் ஈழத்திற்குச் சிறப்பான காரணங்களையும் ஆராயலாம். முதலாவதாக, வேதாகம வழிபாடுகள் உயர்ந்த உட்பொருள்களை உடையவை. பொதுமக்களுக்கு அவை பெரும் பாலும் விளங்குவதில்லை. இரண்டாவதாக, இவ் வழிபாடு களுக்கு உரிய செய்முறைகள் மிகவும் விரிவானவை. இவற்ருல் பொதுமக்களுக்கு அலுப்பு ஏற்படுகின்றது. குட முழுக்கு, பொது மக்களுக்கு உட்பொருள் விளக்கத்திலும் பார்க்கப்

பக்தியை உருவாக்குகின்றது எனலாம். வேதாகம வழிபாட்டு முறை நிகழும் கோயில்களிற் பூசையிலும் பார்க்க இசை நிகழ்ச்சிகளும், கதாப்பிரசங்கங்களும், வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளும் பொதுமக்களைக் கவர்கின்றன என்பது உண்மை. மூன்றாவதாக, கிராமியக் கடவுளரைப் பொதுமக்கள் நேரடியாகச் சென்று வழிபடுகின்றனர். அங்கு பணிபுரிகின்ற பூசாரிமார்கள் அந்தணர்களைப் போலக் கட்டுப்பாடுகளையும், விதிகளையும் அழுத்தமாகக் கடைப்பிடிப்பதில்லை. இதனாற் கடவுளருடன் பொதுமக்கள் நேரடியாகவே அன்புப்பிணிப்பை உண்டாக்குகின்றனர். நான்காவதாக, கிராமிய வழிபாடுகள் மிகவும் இலகுவானவை; எளிமையானவை; எவராலும் நன்கு பின்பற்றக் கூடியவை. பொது மக்கள் தாம் விரும்பிய தினங்களில் கிராமியக் கோயில்களுக்குச் சென்று பொங்கல், புழுக்கல், மடை, படையல் என்பவற்றைச் செய்கின்றனர். கிராம வாசி ஒருவன் தான் அன்புடன் தேடிய பச்சை அரிசி, பால், பழம், இளநீர், கரும்பு என்பவற்றைக் கிராமியக் கோயிலுக்கு எடுத்துச் செல்கின்றான். தானே பொங்குகின்றான். தானே படைக்கின்றான். அந்தணரின் சேவை அங்கு இல்லை. எனவே, கிராமவாசி கடவுளுடன் தான் நேரடியாகத் தொடர்பு கொள்ளும் அன்பு நிலையைப் பெறுகின்றான். ஐந்தாவதாகக் கிராமக் கோயில்கள் எந்த நேரத்திலும் திறந்தபடியே இருக்கும். கிராமவாசி ஒருவன் தான் நினைத்த நேரம் கோயிலுக்குச் சென்று தன் குறையைச் சொல்லி முட்டுத்தீர அழுகின்றான். கடவுளிடம் தன் பாரங்கள் எல்லாவற்றையும் ஒப்படைத்த உணர்வுடன் வீடு திரும்புகின்றான். ஆறாவதாக, ஆசௌசம் போன்ற விதிகள் கிராமியக் கோயில்களிற் பின்பற்றப்படுவதில்லை. நோயாளி, பேய் பிடித்தவர் போன்றவர்களைக் கோயில் வாசலில் வைத்து உறவினர் கடவுளை வணங்குவர். பூசாரியார் அவர்களுக்குத் தீர்த்தம் கொடுப்பார்; திருநீறு போடுவார்; நூல் கட்டுவார். ஆனால், அந்தணர்கள் இப்படிச் செய்யார்கள். பருத்தித்துறை வல்லிபுர ஆழ்வார் கோயில், காங்கேசந்துறை குருநாதசாமி கோயில் போன்றவற்றில் வேதாகம முறைகளே பின்பற்றப் படுகின்றன. எனினும், பொதுமக்கள் பொங்கல் செய்ய ஒழுங்குகளும் வசதிகளும் ஆக்கப்பட்டுள்ளன. அரசினர் வைத்தியசாலைகளில் இப்பொழுது கோயில்கள் அமைக்கப் படுகின்றன. நோயாளிகள் இங்கு கூடித் தேவாரம், திருவாசகம், திருப்புகழ் போன்றவற்றைப் படித்து வணங்குவர்.

வைத்தியசாலை இறப்பும் பிறப்பும் நிகழும் இடம். எனவே, நித்திய ஆசௌசம் நிறைந்த இடம் எனக் கூறுவர் வைதிக பரம் பரையில் வந்தோர். எனினும் வைத்தியசாலைக் கோயில்களிலே ஐயர் பூசைசெய்வதும் வழக்கம். காலத்தையொட்டி இந்த வழக்கம் வலுப்பெறுகின்றது. நீதிமன்றங்களுக்கு அருகாமையில் மரத்தடிப் பிள்ளையார் போன்ற தெய்வங்கள் இருக்கின்றன. இனி, ஈழத்தைச் சிறப்பாக நோக்குமிடத்து, போர்த்துக் கேயரின் ஆட்சியும் (1505 — 1658) ஒல்லாந்தரின் ஆட்சியும் (1658 — 1796) நடைபெற்றன. இக்கால எல்லையில் ஈழத்து மன்னர்களால் ஆதரிக்கப்பெற்ற வைதிக வழிபாட்டுக் கோயில்கள் நலிவுற்றன. இந்த ஆட்சியாளர் நடத்திய மதப் பொறுமையில்லாக் கொள்கை வேதாகம வழிபாட்டிற்கு இடம் கொடுக்கவில்லை. எனவே, இலகுவாகப் பின்பற்றக்கூடிய கிராமிய வழிபாட்டு முறைகள் தலைமறைவாகப் பல்கிப் பெருகின என்பது முன்னரே சுட்டிக்காட்டப்பட்டது. ஆறுமுக நாவலர் போன்றவர்கள் வேதாகம வழிபாட்டை வளர்த்தனர். மிருக பலியை வன்மையாகக் கண்டித்தனர். இருந்தும் இந்தக் கிராமிய வழிபாட்டுமுறை நீங்கவில்லை.

வடஈழத்தில் சமாதிகள் பல இருக்கின்றன. இவையும் வணக்கத்திற்குரியவைகளாகவே அமைந்துள்ளன. இறந்தவரை அடக்கஞ்செய்த இடத்தில் நடுகல்நடுவது பழந்தமிழர் வழக்கம். இந்த வழக்கமே பிற்காலத்தில் சமாதி கட்டும் வழக்கமாக மாறியது. யாழ்ப்பாணத்தில், மட்டக்களப்பில், மலையகத்தில் இன்று பல சமாதிகள் இருக்கின்றன. இங்கு குருபூசைகள் நடப்பது வழக்கம். சடையம்மா சமாதி, கடையிற்சாமியார் சமாதி எனச் சமாதிகள் அடியவர்களின் பெயரால் அமைக்கப் படுகின்றன. அண்மைக்காலத்தில் அமரரான கொழும்புத்துறை யோகர் வணக்கத்திற்குரிய மகானுகிவிட்டார். ஈழத்தில் வாழ்ந்து சமாதியான பக்தர்கள் சித்தர்களுக்குச் சமாதிகட்டி வணங்கும் வழக்கம் ஓரளவு செல்வாக்குப் பெற்றது.

ஈழத்துக் கிராமியக் கடவுளரை மேல்வரும் வகையிற் பிரித் துப் பார்க்கலாம். பிள்ளையார், வைரவர், வீரபத்திரர், காளி, ஐயனர் என்போர் வைதிக வழிமுறையில் வந்த கடவுளர்கள். காளி, வைரவர், வீரபத்திரர், அண்ணமார் கூட்டத்தார் போன்ற கடவுளர் மிருகபலி பெறுபவர். பெண் கடவுள ராகக் காளி, கண்ணகி, மாரியம்மன், நாய்ச்சிமார், காமாட்சி, சீதை அம்மன் போன்றவர் இருக்கின்றனர். கண்ணகியும், சீதையும் பத்தினிப் பெண்கள் வழிபாட்டில் அடங்குவர். நாய்ச்சிமார், முனியப்பர், வழிபாடு வீர வணக்

கத்திற்கு உரியது என்பர் ஒருசாரர். நாய்ச்சிமார் வழிபாடு தமிழ்நாட்டில் உள்ள ஏழுகன்னிகைகள் வழிபாட்டை ஒத்தது. முனியப்பர் வழிபாடு முனியாண்டியின் வழிபாட்டில் இருந்து எழுந்ததோ என்ற கேள்வியும் எழுகின்றது. நாகதம்பிரான் வழிபாடு இன்று வல்லிபுரக் கோயிலிலும், நயினுதீவு நாகபூசணி அம்மன் கோயிலிலும், நாகர்கோயிலிலும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. தென்புலத்தார் வழிபாடாகச் சமாதிகள் அமைந்துள்ளன. இப்படியான சமாதிகள் மலையகம் உட்படத் தமிழ் பேசும் மக்கள் வாழும் இடங்களில் இன்றும் இடம்பெறுகின்றன. மர வழிபாட்டின் அம்சமாக வேம்பு, அரசு, நாவல், ஆல், புளி, மருது முதலிய மரங்கள் உண்டு. வேம்பும் அரசும் சேர்ந்து பின்னி வளர்ந்தால் அவை அம்மனையும் சிவனையும் குறிக்கும் என்பர். கிராமியக் கோயில்கள் சிலவற்றின் பெயர் மரப் பெயரையே முன் கொண்டுள்ளன. எடுத்துக்காட்டாக, மருதடிப் பிள்ளையார், அரசடி அம்மன், புளியடி வைரவர், ஆலமரத்தடி முனியப்பர், புங்கடி வைரவர், நாவலடி வைரவர் என்பவற்றைத் தரலாம்.

இன்னல்களைப் போக்குவதற்கே பிள்ளையார் வழிபாடு நடைபெறுகின்றது. மரஅடி, குளம், தெரு போன்ற இடங்களில் பிள்ளையாரை வைத்து மக்கள் வணங்குகின்றனர். இந்தப் பிள்ளையார் கோயில்களிற் பல, இன்று குடமுழுக்குப் பெற்றுள்ள கோயில்களாக மாறிவிட்டன. தெருவடிப் பிள்ளையார்களில் முறிகண்டிப்பிள்ளையார், பயணிகளின் இன்னல்களைப் போக்குபவர் என்ற நம்பிக்கை மக்களிடம் நிலவுகின்றது. மாடுகளைப் பாதுகாக்கும் தெய்வமாகப் பருத்தித்துறையில் இருந்து சில கல் தொலைவில் உள்ள தில்லையம்பலப்பிள்ளையார் அமைந்துள்ளார். மாட்டுப் பட்டியுடன் பிள்ளையார் பெத்தையராக இருந்தார் என்பது கதை. பேத்தை வயிறர், பெத்தையர் ஆயிற்று என்பர். மோதகம் அவித்து மடையிடுவது வழக்கம். மிகவும் பெரிதாக ஒரு மோதகமும் சிறியதாகப் பல மோதகங்களும் செய்யப்படும். பெரிய மோதகம் ஆனைமோதகம் எனப்படும். உயர்ந்த நோக்கங்களுக்காகவே பிள்ளையாரை வழிபடுவர் மக்கள்.

வைரவர், காளி, ஐயனுர், அண்ணமார் போன்ற தெய்வங்கள் தம்மை வழிபடாதவருக்கும், நிந்திப்பவர்களுக்கும் குறைபாடுகளை ஏற்படுத்துவார்கள் என்பது பொதுமக்களின் நம்பிக்கை. தலைவலி, கழுத்துவலி, முடக்குவாதம், குறைப்பிரசவம் என்பவைகள் இத் தெய்வங்களின் சீற்றத்தால் வருபவை என மக்கள் எண்ணுகின்றனர். இக்குறைபாடுகளைப் போக்குவதற்காகப் பலியிடுவதற்கு ஆடு கோழிகளை நேர்ந்து வேள்வி

செய்வர்; மடைபோடுதல் போன்றவற்றை நடாத்துவர். சூலம் செய்து கொடுத்தல், கல்விளக்குச் செய்துகொடுத்தல், சங்கு, சேமக்கலம், மணி முதலியவை வழங்குதல் போன்ற தானங்களையும் மக்கள் கொடுப்பர். வேள்வி நடைபெறும் கோயில்களில் அந்தணர் பூசாரியராக இருப்பதில்லை. மற்ற எந்தக் குலத்தவரும் பூசாரியராக இருக்கலாம். எனினும் வீரசைவர் குலத்தவரே பெரும்பாலும் பூசாரிகளாக இக்கோயில் களில் இருக்கின்றனர். அரிசனங்களின் கோயில்களில் அக் குலத்தில் மூத்தவர் ஒருவரே பூசாரியராக அமைவர். எட்டு நாட்களுக்கு விளக்கு வைத்து வழிபாடு நடத்திய பின்னர் வேள்வி நடைபெறும். தோட்டங்கள் வயல்களில் களவெடுப் பவர்களைக் காளி, வைரவர் போன்ற தெய்வங்கள் தண்டிக்கும் என மக்கள் நம்புகின்றனர். ''சூலவயிரவா சுற்றிப்பிடியடா, வீரபத்திரா வெள்ளிப்பிரம்பு எடுத்தடியடா, காளி அம்மா கழுத்தை நெரியடியம்மா'' என்ற கூற்றுக்கள் இந்த நம்பிக்கையை உணர்த்துகின்றன. வைரவர் பல அடைமொழிகளைக் கொண் டுள்ளார். எடுத்துக்காட்டு: உக்கிர வைரவர், நரசிங்க வைரவர், சுடலை வைரவர், காட்டு வைரவர், பணிக்கர் வைரவர் என்பன. வேள்வி நடவாத கோயில்களில் உள்ள வைரவர் ஞானவைரவர் என்ற பெயரைப் பெற்றுள்ளார். காளிக்குப் பல பெயர் உண்டு. வீரமாகாளி, பத்திரகாளி என்பவை சில. அம்மன் வழிபாடு, முத்துமாரியம்மன், காமாட்சி அம்மன் போன்ற பல பெயர்களில் நடைபெறுகின்றது. அம்மை, கொப்புளிப்பான், சின்னமுத்து போன்ற நோய்களை அம்மன் போக்குவாள் என்பது மக்கள் நம்பிக்கை. கரகஆட்டம், குளிர்த்தி, மடை, கஞ்சி வார்த்தல் போன்றவை அம்மனுக்குரியவை. அம்மன் கோயில் களிற் சித்திரபுத்திரநாயனர் கதை, செட்டிச்சி அம்மை கதை போன்றவை படிக்கப்படுவது வழக்கம். கரக ஆட்டத்துடன் உடுக்குப் பாட்டு, அம்மன் காவியம் போன்றவை படிக்கப்படும். ''வாரா வினைகள் வந்தாலும் முத்துமாரி வஞ்சனைகள் செய் திடாதே முத்துமாரி, தவத்தால் மூத்தவளே முத்துமாரி'' என்ற அடிகள் ஆதிசக்தி வழிபாட்டை நினைவுபடுத்துகின்றன. இது தமிழருக்கே உரியது என்பர்.

கண்ணகி வழிபாடு, சீதை அம்மன் வழிபாடு, திரௌபதை அம்மன் வழிபாடு என்பவை ஈழத்தில் இன்றும் நடைபெறு கின்றன. கண்ணகி என்ற பெயர் திரிந்து, கண்ணகை எனவும், கண்ணகை அம்மன் எனவும் ஆயிற்று. கண்ணகி வழிபாடு நடந்த இடங்களிற் சில இப்பொழுது வேதியர்களால் அம்மன் கோயில்களாக மாற்றப்பட்டுள்ளன. இங்ஙனம் நடந்த ஒரு கோயிலில் இன்று கண்ணகி பிரகாரநாயகியாக அமைந்துள்

ளார். இது மாவிட்டபுரத்திற்கு அருகில் நடந்துள்ளது. நுவரெலியாவில் உள்ள சிதா எலியாச் சீதைஅம்மன் கோயில், கிழக்கு மாகாணத்தில் உள்ள திரௌபதை அம்மன் கோயில் போன்றவை காப்பியவழி வந்தவை. நாய்ச்சிமார் வழிபாடு எழுந்ததுபற்றிக் கருத்துவேற்றுமை உண்டு. ஈழத்துச் செவிவழி வந்துள்ள கதைப்படி வன்னியில் உள்ள ஏழு நாய்ச்சியர்கள், போர்த்துக்கேயரின் கைபட்டுக் கற்பிழந்து வாழ விரும்பாமல் குன்றிமணியை இடித்துத் தின்று மடிந்தனர். இவர்கள் நினைவிற் காகவே நாய்ச்சிமார் வழிபாடு எழுந்தது என்பர் ஒரு சாரார். முனியப்பரும் போர்த்துக்கேயரை எதிர்த்து வீரமுடன் போராடி மடிந்த தளபதி என்பதும் செவிவழி வந்த கதை. காமாட்சி அம்மன் இரும்பு உலோகத் தொழிலாளரின் தெய்வம். அண்ண மார், கூட்டத்தார் என்பவை மரம் ஏறுபவர்களின் தெய்வங்கள். கூட்டத்தார் என்பவை போர்த்துக்கேயரை எதிர்த்துப் போராடி மடிந்த பாளைக்கத்தி பள்ளரின் கூட்டத்தைக் குறிக்கும் என்பது செவிவழிவந்த கதை. சேவுகர், படைக்கலர் என்ற வழிபாடுகள் இப்பொழுது இல்லை எனலாம். இவை ஐயனாரின் காவற் படையினர் என்பது தமிழ்நாட்டிலும், ஈழத்திலும் நிலவுகின்ற நம்பிக்கை. அண்ணமார் வழிபாடு பற்றிய வரலாறு தெளிவாகத் தெரியவில்லை. இறந்தவர்களில் மேம்பட்டவர்களாகக் கருதப் படுகின்ற தென்புலத்தார் வழிபாடு இது என்பார் ஒருசாரர். அண்ணல்மார் என்பதுதான் அண்ணமார் எனத் திரிந்தது என்பர். விறுமர், கிங்கரர் என்பவை சுடலையில் உள்ள தேவதைகள் என்பர். மந்திரசித்தி, செய்வினை, சூனியம் போன்றவற்றில் ஈடுபடுபவர்கள், இத்தெய்வங்களை வழிபடு வர். காடேறி, கல்லெறிமாடன் என்பவையும் கெடுதலைச் செய்கின்ற தேவதைகள். வேட்டைக்குப் போகின்றவர்கள் காடேறியை வழிபட்டனர். கல்லெறிமாடன் வீட்டிற்குக் கல் லெறிகின்ற கெட்ட தேவதை. வேல் வைத்து வணங்க இதன் குறைபாடு நீங்கும் என்பதும் நம்பிக்கை. சலவைத் தொழி லாளரின் தெய்வம் பெரியதம்பிரான்.

மரங்களில் முனிகள் குடிகொண்டு இருக்கின்றன என்பது ஐதிகம். இதனால், மரங்களுக்குக் கீழ் வெறும் கல்லு மேடை போன்றவற்றை அமைத்தும் வழிபடுவர் மக்கள். இந்த நம்பிக்கையை வலியுறுத்தும் வகையில் ஒரு கதையைச் சொல்ல லாம். மின்சாரம் வழங்குவதற்காக மிகப்பெரிய ஆலமரம் ஒன்றைத் தறிக்கவேண்டியதாயிற்று. அதற்குப் பெயர் முனி யால். தறிக்கின்ற ஒப்பந்தவேலையை ஒருவர் மேற்கொண்டார். அதற்கு முன்னர் வெள்ளிக்கிழமை நாளில் கல்லொன்றை

வைத்துப் படையல் செய்து வணங்கியபின்னர், கல்லை எடுத்துப் பிரபலமான ஆலயவீதியில் ஈசான மூலையில் அவர் வைத்தார். இப்படியாக, கல்லை எடுத்து, முனி அகற்றப்பட்ட பின்னரே ஆலமரத்தைத் தறிக்கின்ற வேலை தொடங்கிற்று. வேலைகள் யாவும் இன்னல் இன்றி முடிந்ததும் மீண்டும் அந்த ஆலயத் திற்குச் சென்று பூசை கட்டினார்கள்.

நீலி என்பது காளியின் பெயர். இந்த வழிபாடு இப்பொழுது இல்லை எனலாம். ஒவ்வொரு வீட்டிலும், தெற்கு வேலியில் கள்ளி மரம் ஒன்றை நட்டிருப்பார்களாம். இது எல்லைக் கள்ளி எனலாம். கள்ளி நடும் வழக்கம் சோழர் காலத்துக் கல் வெட்டில் காணப்படுகிறது. இந்தக் கள்ளி மரத்தின் கீழ் கல் ஒன்று வைத்து நீலியை வழிபட்டனர். 'ஆய்ச்சி, ஆய்ச்சி வேலியுக்கை நீலி' என்ற பழங்கூற்று இதனையே உணர்த்து கின்றது. புத்தாண்டு, தைப்பொங்கல், பங்குனித் திங்கள், ஆடிப்பிறப்பு போன்ற நாட்களில், வேலியில் நீலிக்குச் சிறிது படையல் செய்யப்படும். இப்படிப் படையல் செய்யப்படும் உணவைத் திருப்பி எடுப்பது கிடையாது; ஏனெனில், நீலி சுவைத்ததை உண்டால் நோய் அணுகும் என்பது நம்பிக்கை. வேதாகம முறைப்படி நடக்கின்ற கோயில்களில் நவக்கிரகங் களுக்கு நிவேதிப்பதும் இப்படியே செய்யப்படுகின்றது என்பதை இங்கு சுட்டிக்காட்டலாம்,

தென்புலத்தார் வழிபாடு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலையகம் போன்ற இடங்களில் நிறைய உண்டு. வீர சைவர்கள், பரதகுலத்தவர் சிலர், அடியார் கூட்டத்தவர் போன்றவர்கள் இறந்தால், அவர்களை உப்பும் திருநீறும் இட்டு அடக்கம் செய்வது வழக்கம். இப்படியானவர் ஒருவர் இறந்தால், "அடங்கிவிட்டார், சமாதியாகிவிட்டார், கட்டையை விட்டு விட்டார்" எனக் கூறுவர். யாழ்ப்பாணத்திலே, சேர் பொன். இராமநாதன் சமாதி வைக்கப்பட்டார். கொழும்புத்துறையில் உள்ள யோகர் சுவாமியின் நினைவு மண்டபம் அன்னாரின் சீடர் களின் வழிபாட்டு நிலையமாக அமைந்துள்ளது. கீரிமலையில் அடியார்களின் சமாதிகள் பல இருக்கின்றன. மலைநாட்டில் உள்ள பெருந் தோட்டங்களில் சமாதிகள் பல இருக்கின்றன.

அடுத்ததாக இக் கோயில்களின் அமைப்பையும், பூசாரி களின் கடமைகளையும், வழிபாட்டு முறைகளையும் ஆராயலாம். இக் கோயில்கள் யாவும் மரத்தின்கீழ் உள்ள திறந்த வெளி மேடைகளாகவும் அல்லது சிறு கொட்டில்களாகவும் அல்லது சிறு அறையுள்ள கட்டிடமாகவும் காட்சி தருகின்றன. பெரிய கட்டிடங்கள் இல்லை எனலாம். மரங்களின் கீழ்த்தான் பொங்கல்,

படையல், வழிபாடு எல்லாம் நடைபெறும். தில்லையம்பலப் பிள்ளையார் கோயிற் பூசாரியார் ஒருவர் சொன்ன கதை உண்மையை விளக்குகின்றது. ''பெரிய கோயில் கட்டிடம் எல்லாம் இந்தப் பெத்தையருக்குப் பிடியாது. 'அப்படிக் கட்டினுல் நான் குடியெழும்பிப் போய்விடுவேன்' என்ருர் கனவில். செல்வர் பலர் கட்டிடம் கட்டித் தருவதாகக் கூறினர். நாங்கள் விடவில்லை'' என்ருர். முன்னர் சுட்டிக் காட்டியது போலப் பூசாரிகள் வீர சைவர்களாகவும், பரம்பரை பரம்பரை யாக வருகின்ற மூத்தவர் ஒருவராகவும் இருக்கின்றனர். இவர்களுடைய பூசை முறையிற் பொதுமக்களுக்கு நம்பிக்கை உண்டு. மலைநாட்டில் உள்ள பூசாரிகளின் பிள்ளைகள் சிலரை அழைத்துத் திருக்கேதீச்சரத்தில் உள்ள அந்தணர்க்குரிய குரு குலப் பாடசாலையில் குருத்துவப் பயிற்சி அளிக்க எடுத்த முயற்சி வெற்றியளித்ததாகத் தெரியவில்லை. குருப்பட்டம் பெற்ற ஒருவர் கிராமியக் கோயிலில் கடமை செய்யும்போது பொதுமக்களுடன் ஒட்டி உறவாட முடியாத நிலை ஏற்பட்டு விடும். பெரும்பாலும் பூசாரிமார்கள் மக்களுடன் சேர்ந்து அவர்கள் கொடுப்பதை வாங்கி உண்டு, அவர்களின் சுக துக்கங் களிற் பங்கு கொள்வர். பூசாரிமாரை நியமிப்பதோ, தெரிவு செய்வதோ கிடையாது. ஒரு பூசாரியார் இறக்க அவருக்கு உதவியாக இருந்தவர் அந்த இடத்தைப் பிடிப்பார். மேலும் பூசாரிமார் நூல் கட்டுதல், திருநீறு போடுதல், வேப்பிலை பிடித்துப் பேய்க்குப் பார்த்தல், சாந்தி செய்தல், கழிப்புக் கழித்தல் போன்றவற்றில் ஈடுபடுவர். நினைத்த காரியம் சொல்லுதல், மை போட்டுப் பார்த்தல் போன்றவற்றையும் செய்வர். அந்தணர்கள் செய்ய முடியாத, நிரப்ப முடியாத தேவைகளைப் பூசாரிமார்கள் செய்து முடிப்பது தெளிவு. பூசாரி மார் பொங்கல் விழாப்போது உருவாடி அருள் கொடுப்பது வழக்கம்.

ஏற்கனவே, குறிப்பிட்டதுபோலக் கிராமியக் கடவுளரின் வழிபாட்டுமுறை மிகவும் இலகுவானது. இதில் எவரும் நன்கு கலந்துகொள்ளலாம். பொங்கல், படையல், மடை எல்லாம் மிகவும் எளிமையாகப் பக்தி சிரத்தையுடன் நடக்கும். பூசாரிகள் மேற்பார்வை செய்வர். அதிகமான காணிக்கைப் பணம், அர்ச்சனை, காளாஞ்சி போன்றவை இங்கு கிடையா. பொங்கினவர் வறியவர்களும் பொங்கமுடியாத நிலையில் உள்ளவர்களும் நீட்டும் பெட்டிகளிலே தாராளமாகப் பொங்கல் போடுவார்கள். இதனுலேதான் '' பொங்கினவனிலும் பார்க்கத் தண்டினவனுக்குப் புக்கை கூட'' என்ற கூற்று எழுந்தது.

கிராமத்து மக்கள் ஒன்றுகூடிச் சமுதாய வாழ்க்கை அமைப்பில் கலக்கும் இடம் கிராமத்துக் கோயில். இங்கு சாதிக்கட்டுப்பாடு இல்லே. பொங்கற் பந்தல் போடுவது அரிசனத் தொழிலாளரின் வேலே. வாத்தியம் இசைப்பவர், பறையை ஏந்தி நிற்பர். மற்றக் குலத்தவர்களுக்கும் அதிகம் கட்டுப்பாடு கிடையாது. ''சற்றே விலகி நில்லும் பிள்ளாய் சந்நிதானம் மறைக்குதாம்'' என்ற பேச்சுக்கு இடம் இல்லே.

இந்த வழிபாட்டின் இன்றைய நிலேயைக் கல்வி, சமுதாயப் பொருளாதார அரசியற் பின்னணியில் ஆராயலாம். இந் நாட்டிலே கட்டாய இலவசக் கல்வி நிகழுகின்றது. இதன் பயனுக மக்களிடம் அறிவு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. கிராமிய வாழ்க்கையை, வானெலியும் செய்தித்தாளும் பாதிக்கின்றன. அறிவுபெற்றவர்கள் படிப்படியாகப் புதுமையை விரும்புகின்ற னர். பழைய பழக்கங்களேத் தள்ளுகின்றனர். அத்துடன் இந்த நாட்டில் உள்ள பாடசாலேகளிற் கற்பிக்கப்படுகின்ற சமயப் பாடத்திட்டமும் மிகவும் முக்கியமானது. புராணக் கதைகள், நாயன்மார் வாழ்க்கை வரலாறு என்பவற்றுடன் திருவருட் பயன், திருக்குறள், தேவாரம், திருவாசகம் என்பவை இடம் பெறுகின்றன. இதனுல், கடவுள் வழிபாடு, மெய்ப்பொருள் விளக்கம் என்பவை பற்றிய அறிவு இளந்தலேமுறையினரிடம் வளர்கின்றது. இவர்கள் கிராமிய வழிபாட்டை அதிகம் நாடாம லிருப்பதும் இயற்கையே. சமுதாய அடிப்படையில் ஆறுமுக நாவலர் தொடக்கம் அச்சுவேலி சிவப்பிராமண குரு குமார சாமிக் குருக்கள் வரை வேதாகம வழிபாட்டு முறையையே வலியுறுத்திக் கூறினர். பழைய கோயில்களுக்குக் குடமுழுக்குச் செய்கின்ற கிரியையை நாவலர் தொடக்கி வைத்தார். கண்ணகி வழிபாடுகூடச் செட்டிச்சி வழிபாடு என இவராற் கண்டிக்கப் பட்டது. சமுதாயத்தில் எழுந்த சைவ மறுமலர்ச்சி வேதாகம வழிபாட்டை ஊக்குவித்தது. மிருக பலியை இந்தியாவிற் புலவர் தேசிகவிநாயகம்பிள்ளே எதிர்த்ததுபோல, இங்கும் சோம சுந்தரப் புலவர் போன்ருேர் எதிர்த்தனர். காந்திய இயக் கத்தில் ஈடுபட்டோர் பலி நிறுத்த இயக்கத்தில் ஈடுபட்டனர். சைவபரிபாலன சபை போன்ற நிறுவனங்கள் சமயச் சீர்திருத் தத்தை வேண்டி உழைத்தன. மிருக பலி நிறுத்தப்பட்ட கிராமிய கோயில்கள் சிலவற்றிலே திருவெம்பாவை நடைபெறுவது குறிப் பிடத்தக்கது. நிலமானியமுறையும் சாதிக் கட்டுப்பாடும் தளரத் தொடங்கின. அரிசனங்களின் ஆலயப் பிரவேச இயக்கம் வலுப்பெற்றது. போராட்டங்களும் நிகழ்ந்தன. கிராமிய வழிபாடுகளில் ஈடுபட்ட அரிசனங்கள், வேதாகம

அமைப்புக் கோயில்கள் பலவற்றிலும் சென்று வணங்கும் உரிமை பெற்றனர். இதனுற் கிராமிய வழிபாட்டு முறைகள் முதன்மை இடத்தை இழக்கின்றன. வளர்ந்தோர் வாக்குரிமை மூலம் மக்களின் சமத்துவம் வலுப்பெற்றது. கடவுளின் முன்னர் எல்லோரும் சமம் என்ற கருத்தும் பெருகியது. பொருளாதார ஏற்றத்தாழ்வு இருந்தாலும் எல்லோரும் சமம். ஏன்? எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற கருத்து வேர் ஊன்றிவிட்டது. சமுதாயத்தில் ஏற்பட்ட மாற்றங்கள், பொருளாதார வாழ்வில் ஏற்பட்ட திருப்பங்கள், கல்விச் சீர்திருத்தங்கள் எல்லாம் மக்களின் வாழ்க்கைமுறையை மாற்றுகின்றன. இக் காரணங்களாற் கிராமிய வழிபாட்டு முறைகளும் மாறுகின்றன; மாறிக் கொண்டே வருகின்றன. தொழிலாளர்கள் எமது சமுதாயத்திலே தோன்றிய புதியதொரு கூறு. இவர்கள் அன்னதானம், நவராத்திரி பூசை, சிவராத்திரி பூசை போன்றவற்றைத் தொழில் நிலையங்களிற் செய்விக்கின்றனர்; ஆனுல், சிலர் ஆட்டுக்கடாவை நேர்ந்து வளர்த்துக் கோயிலிற் பலியும் இடுகின்றனர். ஈழத்துக் கிராமிய வழிபாட்டு முறைகளும் காலத்திற்கேற்ப மாற்றம் பெற்றுக்கொண்டே வருகின்றன. மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலில் வழிபட்டபின் மோட்டார் வண்டி ஒன்றிலே ஒருவர் கொழும்பிற்குச் செல்லுகின்முர். செல்லும்போது, நெடுஞ்சாலையில் உள்ள முறிகண்டிப் பிள்ளையாருக்குத் தேங்காய் உடைத்துக் கற்பூரங் கொளுத்திச் செல்லுகின்முர். வேதாகம வழிபாட்டிற்கும் கிராமிய வழிபாட்டிற்கும் இவரின் மத வாழ்வில் இடமுண்டு. இதுவே எதிர்காலத்தையும் ஒரு வகையில் உணர்த்துகின்றது.

சிங்கள தமிழ் ஒற்றுமை

டி. டி. நாணயக்கார

உலகத்திலே இருக்கும் வேறு எச்சாதியினரிலும் அவர்தம் மொழிகளிலும் பார்க்கச் சிங்களவருக்கு நெருங்கிய தொடர்பிருக்கிற சாகியத்தினரும் மொழியும், தமிழர்களும் தமிழுமே என்ற உண்மையை அடிக்கடி எடுத்துக்காட்டுவது மிக முக்கியம். சென்ற சில ஆண்டுகளாக இரு சாகியத்தினரிடையே ஏற்பட்டு வருகிற கருத்து வேறுபாடுகளுக்கு மேற்கூறிய நெருங்கிய தொடர்பே காரணமென்பதை அறிவது இரு பகுதியினருக்கும் நன்மை பயப்பதாகும். இவ்விரண்டு விடயங்களைப்பற்றி ஆராய்ந்து பார்ப்பதும் நலமே தரும்.

1. மொழி இனத்தின் முதன்மைக்குக் காரணங்கள்:

ஆரிய நாகரிகத்தின் வழிவந்த அகஸ்திய முனிவர் தமிழ் மொழியில் இருந்த அருமை பெருமைகளை நோக்கி அம் மொழிக்கு இலக்கணம் அமைத்தார் என்றால், தமிழ்மொழியின் பெருமை சொல்லற்கரியது. தமிழ்த் தெய்வம் எனப் போற்றும் முருகக் கடவுள் தமிழைக் கேட்டுத் தாம் இன்புறுவதற்காகத் தமிழ்ப் புலவராகிய ஔவையார்முன் தோன்றி, அரியது, பெரியது, கொடியது எவை என்று கேள்வி மூலமாகத் தமிழின் இனிமையையும், சொற்பொருட்செறிவையும் தானும் அநுபவித்துப் பிறரும் அறிய வைத்தார். தெய்வத்தை வைதாரையும் வாழ வைக்கும் சிறப்பு தமிழிற்குண்டு. தமிழின் தொன்மையை ஆராய்ந்து செல்கையில் முதற் சங்கம், இடைச்சங்கம், கடைச் சங்கம் ஆகிய முச்சங்கங்களும் வளர்ந்த நிலப்பாகம் கடலுள் ஆழ்ந்துவிட்டதான துணிபு உண்டாயிற்று. ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலையிற் காவியத் தலைவியின் பழம் பிறப்பை, புத்த பீடிகைத் தரிசனத்தால் உணரவைக்கும் பாகத்திற் கடல்கோள் ஏற்பட்டுத் தெற்கேயிருந்த நிலப்பரப்பு நீருள் அமிழ்ந்தியதாகச் சொல்லப்படுகிறது. இந்நிலப்பரப்பில் வாழ்ந்த மக்கள் பற்றி ''இலே மூறியா''

என்ற பெயர் கொண்டு வரலாற்று அறிஞர்கள் குறித்திருக்கிறார்கள். இவர்களுக்கு ஐம்புலன்களைவிட ஆறாவது புலன் ஒன்று இருந்ததாகவும் இதனைக் கொண்டு வெகுதூரத்தில் உள்ள நிகழ்ச்சிகளையும் உணரக்கூடியதான அறிவு இருந்ததாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். காலக்கழிவால் இந்த மக்கள் அழிவுற்றனராயினும் இவர்கள் மொழி, நாகரிகம் கடல் கோளாற் கொள்ளப்பட்ட நிலப்பரப்பை விட எஞ்சியிருந்த நிலப்பரப்பில் பரவத் தொடங்கியதாகவும் நாம் ஊகித்துக்கொள்ள இடம் உண்டு.

வால்மீகி 'இராமாயணத்தில் வரும் இலங்கையும் அதனை ஆண்ட இராவணேஸ்வரனும் மேலே காட்டப்பட்ட நாகரிக மக்களுடைய அடுத்த காலப்பகுதியின் தொடர்பு எனக்கொள்ளலாம். கிரேக்க நாட்டிற்கு ஒரு கிரீட்டா தீவு இருக்கிறதுபோல, இந்திய நிலப்பரப்பிற்கும் இலங்கைத் தீவு அமைந்தது. கிரேக்க நாட்டை விடக் கிரீட்டா தீவு நாகரீக வளத்தில் மேம்பட்டிருந்தது போல, இந்திய நிலப்பரப்பில் வாழ்ந்தோரை விட இலங்கையில் வாழ்ந்த இராவணேஸ்வரருடைய சந்ததியினர் மிக ஆற்றல் படைத்தவராக விளங்கினர். இதற்கு இராமாயணம் சான்று. ஆகவே இந்த இலங்கையில் வாழ்ந்தோர் இலேமூறியருக்குப் பின் வந்த ஆதி திராவிடராக இருக்கலாம். வால்மீகி இராமாயணத்திற் குறிக்கப்பட்ட இலங்கையும், இலங்காபுரி என்ற இராவணனது நகரமும் அடுத்த கடல் கோளால் அழிவுற்றிருக்கலாம். இக்காலத்தில் ஆங்கில மொழி வளர்ச்சிக்கு உறுதுணைபுரிந்த கிரேக்க, இலத்தீன் மொழிகள் பாபிலோனிய, சுமேறிய, எபிரேய மொழிகளிலிருந்து வளர்ந்தவையாகும். இவற்றிற்கும் மூலமான ஒரு தாய்மொழி இருந்ததாகவும், அதிலிருந்து 'பிராகிருத' மொழியாக ''பிராஹ்மி'' என்ற வரிவடிவம் தோன்றியதாகவும் மொழி வரலாற்று ஆய்வுநர் கொள்கின்றனர். எவ்வாறிருந்தபோதிலும் இந்திய மொழிகளான சமஸ்கிருதம், பாளி, தமிழ் எல்லாவற்றிற்கும் இத் தாய்மொழியான ''பிராஹ்மி'' வரிவடிவமே காரணமாயிற்று. தமிழிலிருந்து கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய தென்னிந்திய மொழிகள் கிளைத்தன. இலங்கைக்குப் பௌத்தமதம் வரமுன்பு சைவமும் தமிழும் வழக்கில் இருந்தமை 'மூத்த சிவன்' போன்ற அரசர் பெயரிலிருந்து நன்கு தெரிகிறது. இலங்கையிற் பௌத்த மதம் பரவுவதற்கு மறைமொழி ஒன்று தேவையாக இருந்தது. இதன்பொருட்டு அசோகச் சக்கரவர்த்தி காலத்திற் பௌத்த மதத்தைத் தழுவிய பிராமணர்களே பாளி, சமஸ்கிருதம், தமிழ் இவற்றை ஆதாரமாகக் கொண்டு சிங்கள மொழியை இலங்கையில் வளர்த்தனர்.

சிங்களத்தில் அனேக தமிழ்ச் சொற்கள் உருவம் திரிந்தும் திரிபில்லாமலும் வழங்கிவருகின்றன. சில சொற்கள் அப்படியே தமிழ் வடிவத்தில் இருந்தும் கருத்து வேறுபாடு இருத்தலைக் காண்கிறோம்.

2. தமிழ் வளத்தில் நான் காணும் இன்பம்:

மகாவம்சத்தின் கூற்றின்படி கி. மு. ஆறும் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்த விஜயனும் அவனது தோழர்களும் பாண்டிய நாட்டிலிருந்து கன்னியர்களை வரவழைத்துத் திருமணஞ் செய்ததாகவும் அவர்கள் சந்ததியினர் இலங்கையிற் சிறப்பாக வாழ்ந்ததாகவும் அறிய முடிகிறது. கி. மு. மூன்றாம் நூற்றாண்டிற் பௌத்த மதம் இலங்கைக்கு வந்தபோது, தென்னிந்தியாவிலும் பரவிய இம்மதத்தின் சார்பால் இரு நாட்டிற்கு மிடையே ஒற்றுமை வளர்வதாயிற்று. சமயம், கலாச்சாரம், வாணிபம் ஆதியன சம்பந்தமான தொடர்புகள் ஏற்பட்டன. கி. மு. 25ஆம் ஆண்டில் அசேலனுடன் போர் புரிந்து இலங்கையில் இராசரட்டைப் பிரதேசத்தை ஆண்ட எல்லாளன் நாற்பத்தைந்து ஆண்டுகளாக நீதியுடன் ஆட்சிபுரிந்தான். கடைசியில் துட்டகைமுனு எல்லாளனை யுத்தத்தில் வென்ற பொழுதும் அந்த நீதி மன்னனை மிகவும் கௌரவித்து எல்லாளன் இறந்த இடத்திற் சமாதி கட்டுவித்து, அம்மன்னன் சமாதிக்கருகே எவ்வித கோலாகல வைபவத்துடன் ஊர்வலம் வந்தாலும், அரசராயினும் எவராயினும் அச்சமாதிக்கு மரியாதை செய்து செல்லும் வழக்கத்தையும் செய்து வைத்தான். இச்சம்பவத்திலிருந்து நீதியுள்ள அரசனாக எல்லாளன் இருந்தமையால் மட்டுமன்றித் தமிழ் மன்னனாக இருந்தமையாலுமே துட்டகைமுனு மகாராசன் அவனை மதித்திருந்தனனென அறியலாம்.

3. தமிழ் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் கழியினும் இறவாத மொழி:

நான் கற்ற தமிழ் அறிவைக் கொண்டு தமிழ் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் கழியினும் இறவாத மொழி என்பதை உணர்கிறேன். தமிழர்கள் கைகூப்பி வணங்கும் கலியுக வரதர் கந்தசுவாமி என்ற தெய்வம் தமிழிற்கே கசிந்துருகும் தெய்வமாயிற்றே. திருச்செந்தூரிலே அலை அலைத்தாலும், அவர் சிலை நிலை குலையாது. தமிழைக் காத்து நிற்கையில் எப்படித்தான் அழிவு வரும்? தென் குமரியிலே தெறித்து வரும் திரை மருங்கில் அழியாக் கன்னியாய் அழகு தமிழ் அணங்காய்க் கோவில்கொண்டிருக்கையில், தமிழிற்கு அழிவிழைப்பார் அழிவதன்றித் தமிழ் அழியுமா? அகத்தியனை வளர்த்த தமிழ், தமிழ் வளர்த்த அகத்தியனைப் பொதியில் என்றும் உலாவும் வரை அழியுமா?

தமிழ் அழிவற்ற மொழி என்பதற்கு உறுதியான காரணங்கள் உள. ஒன்று தமிழிற்கு இயல்பாக அமைந்த நெடுங்கணக்கில் உள்ள சிறப்பியல்பு. எழுத்துக்களின் ஒலி, வடிவில் உள்ள ஓசையின் சிறப்பு, தமிழ்ச் சொற்கள் உணர்த்தும் பொருட்டிறன். இவற் றிற்கு இலக்கணமாக அமைகிறது திருக்குறள். திருக்குறளைப் படித்தால் ஏன் தமிழ் அழியாத மொழி என்பது நன்கு புலனாகும்.

4. ஈழத்தில் தமிழ் தூய்மைபெறக் காரணம் யாது ?

தமிழ், இந்தியத் தென்னகத்திலே பிறந்ததாயினும், இலங்கை வாழ் மக்கள் மத்தியிலேதான் அழகிய பேச்சு உருவில் திகழ் கிறது; தமிழ் தமிழாகப் பேசப்படுகிறது. தமிழ் பிறந்த மண்ணிலே அதனை வழுவின்றித் தமிழர் பேசவில்லை என்பது அவர்கள் குற்றமல்ல. அங்கே தமிழைப் பேசும் சூழ்நிலை அத் தகைய மாற்றத்தைக் கொடுக்கிறது. காரணம், பல பல மொழிகளின் மத்தியிலே தமிழர்கள் வாழ்கிறார்கள். சேரர் வளர்த்த தமிழ் இன்று சேர நாட்டில் இல்லை. இதேபோலப் பாண்டி நாட்டிலும் சோழ நாட்டிலும் பேச்சு வழக்கில் சிதைவுகள் அதிகம். காரணம் பிறமொழிக் கலப்புகள் அங்கே அதிகமாக இருத்தலாற் சொற்கள் சிதைந்தும் திரிந்தும் குறுகியும் மக்கள் வழக்கில் இயங்குகின்றன. இலங்கையின் வடபகுதியாகிய யாழ்ப் பாண மாவட்டத்திலே வாழும் தமிழர், நாவலர் பெருமான் தமிழைப் பேச்சிலும் எழுத்திலும் வளர்த்த காரணத்தாலே தமிழைத் தமிழாகவே பேசுகின்றனர். புத்தகத் தமிழுக்கும் பேசும் தமிழுக்கும் வித்தியாசமில்லை. தென்னிந்தியாவிற் சில பகுதி களிலே தமிழர் பேசுந் தமிழை, யாழ்ப்பாணத் தமிழர் விளங்கிக் கொள்ளாமல் இடர்ப்படுதலை அநுபவ வாயிலாக அறியலாம். யாழ்ப்பாணத்துத் தமிழ் பேச்சு வழக்கிலும், எழுத்து வழக் கிலும் தூய்மையுடன் விளங்குகிறது. நாவலர் காலத்திலிருந்து தொடர்பாக கைலாசபிள்ளை, குமாரசுவாமிப் புலவர், சபாபதி நாவலர், வண. பிதா ஞானப்பிரகாச சுவாமிகள், பண்டிதர் மகாலிங்கசிவம் போன்ற பல தமிழறிஞர்கள் தமிழைச் சிறப் பாக வளர்த்தனர். சமீபத்தில் சிறந்த இலக்கண வித்துவானாக விளங்கிய வித்துவசிரோமணி கணேசையர் அவர்கள், சிறப்பாக இலக்கண அறிவைப் பல மாணவருக்குப் புகட்டித் தமிழ் இலக்கண வரம்பு தேய்ந்து போகாது கட்டிக்காத்தார்.

5. மத்தியகாலப் பகுதியில் இலங்கையிலே தமிழ்மொழி நிலைமை :

இலங்கையிற் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் கலப்பால் மத்திய காலத்திற்குச் சிறிது முன்னும் பின்னுமாகத் தமிழ் வளர்ச்சி பெற்றது. சிங்களமும் தமிழோடிணைந்து அநேக

தமிழ்ச் சொற்களைப் பெற்று வளர்ச்சியடைவதாயிற்று. சிங்கள இலக்கியங்களிற் கோட்டை இராச்சியக்காலம் தமிழின் வளர்ச்சிக்கும் ஒரு பொற்காலமாகத் திகழ்ந்தது. ஜெயவர்த்தன புர யுகம் என்றே புலவர்கள் வர்ணித்துள்ளனர். நல்லூர்த் துணையார் என்ற தமிழ் அரசகுமாரன் ஆறுவது பராக்கிரமபாகுவின் மகள் ''உலோக நாதா'' அல்லது உலகுடையாள் என்ற இளவரசியைத் திருமணஞ் செய்தான். சில ஆண்டுகளிலே தமிழ் இலக்கிய வளர்ச்சியின் துரிதம் போல அதே இலக்கியக் கருத்துக்களை உள்ளடக்கிய சிங்கள காவியங்கள் பல எழுந்தன. புலவர்களை இவ்வரசன் நன்கு ஆதரித்தான். இவர்களுக்குப் பிறந்த மகன் ''ஜயபாகு'' அரசனானான். அவ்வேளையில் சேர நாட்டில் பணிக்கர் குலத்திலிருந்து தோன்றிய ''சபுமல் குமாரயா'' ஜயபாகுவைக் கொன்று அரசனானான். தன் பெயரை ''ஆறும் புவனேகபாகு'' என்று மாற்றிக் கொண்டு அரசாட்சி புரிந்து வந்தான். இவனுக்கு அம்புலுகல குமாரயா என்றொரு சகோதரன் இருந்தான். இவனும் ஜயபாகுவின் மகன் பண்டித பராக்கிரம பாகுவைக் கொலை செய்து வீரபராக்கிரமபாகு என்ற பெயரோடு அரசபதவிக்கு வந்தான். இந்தப் பணிக்கர் வம்சக் கடைசிக் கோட்டை அரசன் தர்மபாலன் ஆவான். சபுமல் குமாரயா ஆறும் புவனேகபாகு என்ற பெயருடன் கோட்டை அரசனான காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டையும் ஆட்சி செய்து வந்தான். வீதாகம மகாதேரோ யாழ்ப்பாணத்திற்குச் சென்று தமிழிற் புத்த தர்மத்தை உபதேசித்தார். இக்காலத்திற் காணி பூமிகள் தமிழர்களுக்கு மானியமாக வழங்கப்பட்டன என்று சிலாசாசனங்கள் கூறுகின்றன. ஆறும் பராக்கிரமபாகு சோழ நாட்டையும் கைப்பற்றியதால், இக்காலத்திற் தமிழர்கள் பலர் சுலபமாக இலங்கைக்கு வந்தார்கள்; இந்து சமயத்தைப் பரவச் செய்தார்கள். தமிழ், இலங்கையில் வளர்ச்சி பெற்றதை இக்காலத்திற் பாடிய தூதுகாவியங்களில் வரும் வர்ணனைகள் கூறுகின்றன. ஈஸ்வரன் கோயில், மகேஸ்வரர் ஆலயம், பிள்ளையார் கோயில் ஆகிய இந்து தலங்களைப் பற்றி இந்தச் சந்தேசகாவியங்களில் நன்றாக வர்ணிக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலிருந்து வந்த அமாத்திய குலப் பிராமணர்கள் அரசனுடைய அமைச்சர்களாகப் பதவி பெற்றார்கள்.

இவ்வாறு தமிழர்களுடன் தொடர்பு பெற்ற காலம் இலங்கைச் சரித்திரத்தில் வேறு இருந்திருக்கவில்லை. இக்காலத்திலிருந்து கல்வி நிலையங்களில் (பிரிவேனாக்களில்) தமிழும் ஒரு முக்கிய பாடமாகக் கற்பிக்கப்பட்டது. தமிழில் எழுதப்பட்ட வைத்திய நூல்கள் போதனைக்குக் கையாளப்பட்டன. தமிழ்

அறிஞர்கள், சான்றோர்கள், புலவர்கள், வித்தகர்கள் இலங்கையிற் பலர் இருந்தார்கள். வட இந்திய, தென்னிந்திய பண்டிதர்கள் அரச சபையில் இலங்கைப் பண்டிதர்களோடு பட்டி மண்டபத்திற் கருத்தரங்குகள் நிகழ்த்தினார்கள்; அரசனாற் கௌரவிக்கப்பட்டார்கள். இலங்கையிலிருந்த பல பண்டிதர்கள் தென்னிந்தியாவிலுள்ள தமிழ் மன்னர்களாலும் கௌரவிக்கப்பட்டார்கள். பல தமிழ் நூல்கள் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டன. ''வைத்திய சிந்தாமணி'' என்ற வைத்திய நூல் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. சிங்களத்திற் பல தமிழ்ச் சொற்கள் அப்படியே உருக்குலையாமல் கையாளப்பட்டன. கைப்பு, மல்லி, பத்தியம், மஞ்சாடி, சிந்துரம், நெல்லி, சாதிலிங்கம், சரக்கு, பல், மாணிக்கம், திப்பலி, இலவங்கம், கறுவா, பெருங்காயம், களிப்பாக்கு, நீர்முள்ளி போன்ற நூற்றுக்கணக்கான தமிழ்ச் சொற்களைச் சிங்கள நூல்களிற் பரக்கக் காணலாம். இக் காலத்தில் ஆறுவது பராக்கிரமபாகுவின் அமைச்சருள் ஒருவரான தமிழறிஞர் நன்னூறு துணையர் ''நாமாவலிய'' என்ற முதன்முதல் தொகுத்த சிங்கள அகராதியை அரசவையில் அரங்கேற்றினர். இந்நூல் பதினான்கு சருக்கங்களையும் இருநூற்றைம்பத்தைந்து செய்யுள்களையும் கொண்டது. இவ்வாறு பல தமிழறிஞர்களே சிங்கள இலக்கிய, இலக்கண, வைத்திய நூல்களைத் தந்து தமிழும் சிங்களமும் ஒற்றுமையாக வளர்தற்கு உதவினர். இதை உணர்ந்தோரிடையே எவ்வாறு தமிழ்—சிங்களம் என்ற குரோதம் எழும்? சிங்கள அகராதியைத் தந்த இதே தமிழறிஞர் பௌத்தராகிப் பாளி மொழியையும் நன்கு கற்றுணர்ந்து, ''செலலிஹினி சந்தேச'' என்ற தூதுக்காவியத்தையும் பாடினர். இக்காவியம் ஆறு பாஷை வல்லுநரான தொட்டகமுவே ஸ்ரீ ராகுல என்பவரால் எழுதப்பட்டது என்பாருமுளர். ''வீதாகம மைத்திரிய ஹமி'' என்ற பண்டிதரும் இக்கால எல்லையில் வாழ்ந்தவராவர். இவர் தமிழிலும் வல்லுநராயிருந்து ''புதுகுண அலங்காரம்'' என்ற நூலை இயற்றினர். ''தகம் கொண்ட மாலய'' என்ற பெயரில் இவர் இயற்றிய வேறு நூலொன்று தமிழ்—சிங்கள சொற்கள் இடையிடையே இசைந்த மணிப்பிரவாள நடைக் காவியம். இரண்டு, செண்டு, மாண்டு, காவல், கொண்டே, தெல்ல (தாலி) ஒன்பது, வாசல் என்பன உதாரணம். இக்காலத்திற் சனநாதபுரம், புலஸ்தி நகர், பொலனன்நுவரை (பொற்பட்டினம்) என்ற பெயர்களால் அழைக்கப்படும் பொலனறுவை மிகுந்த செல்வாக்குடன் விளங்கிய காலம்; சிவ தேவாலயங்களும், பௌத்த ஆலயங்களும் இராணிக்கும் மன்னனுக்கும் பொது

மக்களுக்கும் வழிபாட்டிற்காகக் கட்டி எழுப்பிய காலம்; இந்து சமயமும் பௌத்த சமயமும் பிரிவினையின்றி ஒருங்கே வளர்ந்த காலம்; வேதங்களும் திரிபிடகமும் ஒலி எழுப்பிய காலம்; வேதப் பிராமணரும், பௌத்த துறவிகளும் மதம் வளர்த்த நேரம்; கட்டிடங்களும், சிற்பங்களும், ஓவியங்களும் புத்துயிர் பெற்று ஓங்கிய காலம். ''கிராசந்தேசய'' என்ற சிங்கள நூலில் இந்துசமயப் புராணக் கதைகள் பல காணப்படுகின்றன. சேர, சோழ, பாண்டிய, கூர்ஜ்ஜர, தெலுங்கு, கன்னடம் போன்ற நாடுகளிலிருந்து வந்த வியாபாரிகள் போன்றவர்கள் அம்பலங்களில் (மடங்களில்) தங்கி, இராமாயணம், மகா பாரதம் போன்ற கதைகளைச் சொல்லி மகிழ்ந்ததாக நாற்பத்தி ரண்டு செய்யுள் கொண்ட அந்த ''கிராசந்தேசய'' என்ற தூதுக் காவியம் வர்ணிக்கின்றது. தமிழ் நாட்டில் இளங்கோவடிகளாற் பாடப்பட்ட சிலப்பதிகாரம் என்ற காப்பியத்திற் கோவலன், கண்ணகி, கௌந்தியடிகள் ஆகிய மூவரும் பாண்டிநாட்டிற்குச் செல்லும் வழ்சியில் ஓர் அம்பலத்திலே தங்கியிருந்தபோது, கௌசிகன் என்னும் பார்ப்பான் பாண்டியமன்னன் புகழை அடிக்கடி ஓதி மகிழ்ந்த சம்பவத்தோடு கிராசந்தேசய தூது காவிய சம்பவம் தொடர்புடையதாகக் காணப்படுகிறது. ஆறுவது பராக்கிரமபாகு மன்னன் புகழைக் கூறிய இப் புலவரும், 'தொட்டகமுவ' என்ற இடத்திலுள்ள ''விஜயபா'' பிரிவெனத் தில் (குருகுலவாசம்) சம்ஸ்கிருதம், பாளி, சிங்களம் ஆகிய பாஷைகளுடன், இயல், இசை, நாடகமாகிய முத்தமிழும் விரவிய செந்தமிழையும் கற்பித்தார் என்று கூறப்படுகின்றது.

தென்னிலங்கைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் ஒரு தூதுக் காவியம் பாடப்பட்டதென்றால் எவ்வளவு தொடர்பு இரு பிரதேசத்திற்கும் இருந்திருக்க வேண்டும் என்பதை அறியலாம். ''கோகில சந்தேசய'' (குயில் தூது) என்னும் காவியமே அத் தூதுக் காவியம். இதனைப் பாடியவர் ''திலக பிரிவென (குருகுலவாசம்)வின்'' தலைவராவர். இந்தக் கோகில சந்தேசத் தில் ஊர்ப்பெயர்கள் பற்றியும், அங்கேயுள்ள இந்துக் கோயில் களைப் பற்றியும் பாடியிருக்கிறார். ஏனைய தூதுக்காவியங்களை விட இந் நூலிலே தமிழர்களுடைய பல உற்சவங்களைப்பற்றிய விளக்கங்கள் காணப்படுகின்றன, ''வெல்லேமடம்'' என்ற இடத்திலுள்ள பிள்ளையார் கோவிலிற் கொண்டாடப்படும் தீபாவலியைப்பற்றி நாற்பத்திரண்டாவது செய்யுளில் விபரித்து ஓதப்படுகிறது. வலிகாமத்தில் பலசாதி வியாபாரிகள் பண்ட மாற்றுச் செய்தார்கள் என்றும், தமிழ் அறிஞர்கள் பலர் வாழ்ந்தார்கள் என்றும் குறிப்பிடப்படுகிறது. இங்கே குறிப்

பிடும் வெலிகாமம் தென்னிலங்கையில் உள்ளது. ''பையாகல'' என்ற இடத்தில் தமிழ் அறிஞர்கள் வாழ்ந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. '' செலவிகினி '' சந்தேசய என்னும் தூதுக் காவியம் கோட்டையில் இருந்த சிவன் கோவிலைப்பற்றிய தமிழ்த் தோத்திரங்களை எடுத்துக் கூறுகிறது. இந் நூலைப் பாடிய தொட்ட கமுவ ஸ்ரீ ராகுல சுவாமி அறுபத்துநான்காவது பாடலில் நகை களைப்பற்றித் தமிழ்ப் பெயர்களாகவே பாடியிருக்கிருர். இசைக் கருவிகளுக்குத் தமிழில் இருந்த பெயர்களை அப்படியே ''கிராசந் தேசய '' என்ற நூலிற் காணலாம். எல்லாத் தூதுக்காவியங் களும் பாணந்துறைக்குச் சமீபமாக உள்ள நல்லூரைக் குறிப் பிட்டே செல்கின்றன. யாழ்ப்பாணம் நல்லூர் போலப் பாணந் துறையும் நல்லூரும் தமிழர்களுக்கு அக்கால உறைவிடங்க ளாக இருந்தன என்பது வெளிப்படை.

6. ஆங்கில இராச்சியத்திற் சிங்களத்தின் சீர்குலைவுபோலத் தமிழிற்கு இல்லாததேன்?

போர்த்துக்கேயர் ஒல்லாந்தரது ஆளுகை குறுகிய காலத் துடன் நின்றுவிட்டது. ஆயினும் இவர்கள் ஆட்சிக்காலத்தில் உத்தியோகத்தில் இருந்த ஆசைகாரணமாகச் சிங்கள தமிழ் மக்களிடையே மொழிப்பற்றுக் குறைந்துகொண்டே வந்தது. ஆனுல் இரு சாதியாரிடையேயும் மொழிப்பற்றிலும் பார்க்கச் சமயப்பற்றுத் தலைதூக்கி நின்றது. பல குடும்பங்கள் முதலியார் பட்டங்கள், மணியகாரன் பட்டங்களைப் பெறுவதிலும் உத்தி யோகம் பார்ப்பதிலும் ஆசைகொண்டமை உண்மை. ஆனுல் இந்த இரு அந்நியர்களும் கிறீஸ்தவ மதத்தை வலோற்கார மாகத் திணிப்பதற்கு ஆசைப்பட்டமையால் இவ்விரு மக்களி லும் பெரும்பான்மையோர் மதத்தை — மொழியிலும் மேலாக மதித்தனர். அக்காலத்தில் விவசாயிகளும் தொழிலாளிகளும் கல்வியறிவு குறைந்தவர்களா யிருந்தவர்களும் மதத்தையும் மொழியையும் விரும்பவில்லை. தமிழரிடையே தமிழ்க் கல்வி யைப் பாரம்பரியமாகத் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் மூலம் பெற்றவர்களும், இதேபோலச் சிங்களம் படித்தவர்களும் தாம் இலகுவாகப் போர்த்துக்கேய ஒல்லாந்த பாஷைகளைப் படித்து விடலாம், அதிகார வர்க்கத்தினரான அவர்களிடமிருந்து சலுகைகளைப் பெறலாம் என்ற நோக்கத்துடன் மதத்தையும் மொழியையும் தழுவினர். இவர்களைவிடச் சுதேச ஆட்சியில் அரச மானியங்களைப் பெற்றவர்களும் அரச காரியங்களைச் செய்தவர்களும் சிற்றரசர்களும் அந்நியர்க்கு ஆதரவு கொடுத் தனர். அந்நியரும் தம்மை ஆதரிப்பவர்க்குச் சகல செல்வாக்குக்

களையும் கொடுத்துக் கௌரவித்தனர். தங்கள் ஆணைக்குள் அடங்காதோரை — அநியாயமாகத் தண்டனைகள் கொடுத்து வாட்டி வதக்கி, அவர்கள் உற்றார் உறவினரையும் ஒறுத்தனர். இதனாற் பயம் காரணமாகவும் பலர் மதம் மாறினர். இந்த நிலையில் ஆங்கிலேயர் ஆட்சி ஆரம்பித்த போது அவர்கள் சமய சுதந்திரத்திலே தலையிடாமல், தாங்கள் முந்திய ஆட்சியாளரிலும் நல்லவர்கள் என்று நம்பவைத்தனர். ஆனால் கிறீஸ்தவ மதத்தையும், ஆங்கில மொழியையும் ஏற்றவர்களுக்கு உத்தியோக உயர்வுகள், பட்டம் பதவிகள் கொடுத்துக் கௌரவித்தனர். இதனால் மிக விரைவாக மக்கள் மதம் மாறினர். மொழியைப் படித்தனர். ஆங்கிலேய கலாசாரங்களை விரும்பினர். இந்த நிலைமை தமிழரிலும் பார்க்கச் சிங்களரிடையே கூடுதலாக ஏற்பட்டது. பல பௌத்த குடும்பங்களும் சைவ குடும்பங்களும் கிறிஸ்தவ குடும்பங்களாக மாறின. ஏழைக் குடும்பங்களாய் இருந்தாலும் பலர் மதமாற்றத்தை விரும்பாதவர்களாக இருந்தார்கள். இக்காலத்திலே (ஆங்கிலேயர் ஆட்சியின் நடுப்பகுதியிலே) யாழ்ப்பாணத் தமிழர்க்குள்ளே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களும் சிங்களவர்க்குள்ளே வண. அநகாரிக தர்மபால அவர்களும் கிறிஸ்தவ மதத்தை எதிர்த்துச் சைவத்திற்கும் பௌத்தத்திற்கும் தொண்டு புரிந்தார்கள். ஆனால் இருவரும் ஆங்கில மொழியைக் கற்றுக் கொண்டனர். இம்மொழியறிவால் வண. அநகாரிக தர்மபால அவர்கள் வெளிநாடுகளிலும் பௌத்த மத போதனைகளைப் பரப்பினர். ஆறுமுக நாவலரவர்கள், தாம் ஆங்கில அறிவைப் பெறக் காரணராயிருந்த வண. பேர்சிவல் பாதிரியாருக்குத் தமிழைக் கற்பித்து அச்சியந்திரம் பெற்று, தாம் இயற்றிய சைவநூல்களையும் இலக்கண இலக்கிய நூல்களையும் அச்சிடுவித்து, தமிழையும் சைவத்தையும் நன்கு வளர்த்தார். இந்த வழியில் தமிழர்கள் தமிழை வளர்த்தார்கள். சிங்களத்திற்கு அச்சியந்திரம் பிற்காலத்திலேயே ஏற்பட்டது. இதனாற் பல சிங்கள ஏட்டுச் சுவடிகள் அழிந்தொழிந்து போயின. சிங்களத்திற்கான ஆக்கவேலைகள் குறைவென்றே கூறலாம்.

7. தமிழிற் பிறமொழிகள் கலப்பதில் இருக்கும் கஷ்டங்கள் :

தமிழ் தனித்துவமான ஒரு மொழி. பிறமொழிக் கலப்பு இலகுவில் தமிழுடன் சம்பந்தப்படாது. தமிழில் ஒலிவடிவில் வர்க்க எழுத்துக்கள் சொற்களுள் மறைந்து நிற்கின்றன. வரிவடிவில் அவ் வெழுத்துக்கள் இல்லை. ஆனதால் வரிவடிவிலுள்ள பிற பாஷைச் சொற்களைத் தமிழ் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டு இயங்குந் தன்மையில்லை. உதாரணமாக "Boy"

என்ற ஆங்கிலச் சொல்லில் வரும் 'B'க்கு தமிழில் எழுத்தில்லை. சிங்களம், சம்ஸ்கிருதம், பாளி மொழிகளில் 'B'க்கு சமான மாக வர்க்க எழுத்து உண்டு. தமிழிற் பிறமொழிச் சொற்கள் கலப்பதால் மொழி வளர்ச்சிக்கு இடையூறுவதுடன் தமிழிற்கே தனித்துவமாக உரிய சொற்கள் மறைந்துவிடும். கூடிய அளவு பிறமொழிச் சொற்கள் கலவாது எழுதுவதற்கும் பேசுவதற்கும் பழகிக் கொள்ளுதல் வேண்டும்.

8. நான் பெற்ற செல்வம் :

தமிழை நான் கற்றுக்கொண்டதை, நான் பெருஞ் செல்வ மாக மதிக்கிறேன். பலர் கருதுவதுபோலத் தமிழரும் சிங்களம் கற்க வேண்டும் என்ற கொள்கையாற் சிங்கள மொழி விருத்தி யடையும் என்பது என் அனுபவத்திற்கு மாறானது. இக் கட்டுரையில் மத்தியகாலப் பகுதியில் இலங்கையிலே தமிழ் மொழி நிலைமைபற்றிக் கூறியபோது கோட்டை இராச்சியத்தில் ஒரு பொற்காலமாக விளங்கிய சமயம், இலங்கையிலே தமிழ் அறிஞரும் தமிழ் மொழியும் சிங்கள இலக்கியங்களையும் இதி காசங்களையும் வளர்த்த வரலாற்றையும், சிங்கள மொழி சிறப் புடன் பரவியமையையும் விபரமாகக் கூறியுள்ளேன். மொழி களுட் சிறந்த மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட ஒரு இனத்தை வேறொரு மொழியைக் கற்கவேண்டும் என்று வலிந்து திணிப்பதனால் இன வேற்றுமையும் பகையும் ஏற்பட்டு நாடு பிளவுபடுமே தவிர, நன்மை கிடையாது. ஒரு நாட்டின் முன் னேற்றத்திற்கு இன ஒற்றுமை வேண்டும். எத்தனை இனம் உண்டோ, அத்தனை இனமும் பேசும் மொழிக்கு ஜனநாயக உரிமை வேண்டும். அப்போது இன ஒற்றுமையுடன் மொழிகளும் தாமாகவே வளரும்.

ஈழத்தில் தமிழின் உத்தியோக பூர்வநிலை

மு. செல்வச்சந்திரன்

ஈழத்திலே பிரதானமான மொழிகள் சிங்களமும் தமிழும். 1956ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்டம் ஈழத்தின் ஒரேயொரு அரசகருமமொழி சிங்கள மொழியாதல் வேண்டும் என்று கூறுகின்றது.[1] இச் சட்டத்திற்கு முன்பு ஆங்கிலமே அரசகரும மொழியாய் இருந்தது. அத்துடன் சிங்களமும் தமிழும் ஓரளவு நிலையைப் பெற்றிருந்தன. இச் சட்டத்துடன் தமிழ் அதற்குள்ள நிலையை இழந்தது.

தமிழுக்கு ஓரளவு உத்தியோக பூர்வநிலை 1958ஆம் ஆண்டின் தமிழ் மொழிச் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்துடன் ஏற்பட்டது. அச் சட்டம் தமிழ்மொழியின் உபயோகம் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றது :[2]

அரசாங்கப் பள்ளிக்கூடத்தில் அல்லது உதவிபெறும் பள்ளிக்கூடத்தில் தமிழ் மாணக்கர் ஒருவர் கல்விக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கல்வி கற்பிக்கும் மொழி தொடர்பாக நடைமுறையிலிருக்கும் அல்லது இனிமேல் நடைமுறைக்குக் கொண்டுவரக் கூடிய அத்தகைய ஒழுங்கு விதிகளுக்கிணங்க தமிழ்மொழி மூலம் கல்வி கற்பிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சிங்கள மொழி கல்வி கற்பிக்கும் மொழியாக்கப்படும் பொழுது, தமிழ் மொழி இலங்கைப் பல்கலைக்கழகக் கட்டளைச்சட்டத்தினதும் அதன்கீழ் ஆக்கப்பட்ட நியதிச்சட்டங்கள், சட்டங்கள், ஒழுங்குவிதிகள் போன்றவற்றினதும் ஏற்பாடுகளுக்கிணங்க, அத்தகைய பல்கலைக்கழகத்தில் சேருவதற்கு முன்பு தமிழ்மொழி மூலம் கல்வி கற்ற மாணவர்களுக்கு அத்தகைய பல்கலைக்கழகத்தில் கல்வி கற்பிக்கும் மொழியாதல் வேண்டும். (அ) இலங்கையின் அரசகரும மொழியில் போதிய அறிவு இருக்கவேண்டுமென்று, அல்லது (ஆ) பொதுச்சேவையில் சேர்ந்ததன் பின்பு குறிப்பிட்ட காலத்திற்குள் அத்தகைய அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென

அதற்கென இச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் படி தேவைப்படுத்தக் கூடியதான நிபந்தனைக்கு உட்பட, தமிழ் மொழி மூலம் கல்வி கற்ற ஆளொருவர், பொதுச்சேவையில் ஆட்களைச் சேர்ப்பதற்கான ஏதேனும் பரீட்சையில் அத்தகைய மொழி மூலம் பரீட்சிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும். ஆயின் தமிழ்மொழி கல்வி கற்பிக்கப்படும் மொழியாக உள்ள பள்ளிக்கூடங்களில் சிங்கள மொழியைக் கற்பிப்பதற்குப் போது மான வசதிகள் இருக்கின்றதெனவும், இப் பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் (ஆ) என்னும் வாசகத்தை நீக்குதல் மட்டுமிஞ்சிய இடர்ப்பாட்டை ஏற்படுத்தாதெனவும் அரசாங்கம் திருப்தி யடையும்பொழுது, அத்தகைய வாசகம் நடைமுறையிலிருந்து இல்லாமற் போய்விடுமென இச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி மூலம் ஏற்பாடு செய்யப்படலாம். அலுவலர் என்ற தன்மையில் தமது செயல்களைப் புரியும் அலுவலர் தவிர்ந்த தமிழ்மொழி மூலம் கல்வி யூட்டப்பட்டவர்களாயுள்ள ஆட்க ளுக்கும் அலுவலர் என்ற தன்மையில் செயலாற்றும் எந்த அலுவலருக்கும் இடையிலும் அல்லது வடக்கு அல்லது கிழக்கு மாகாணத்திலுள்ள எந்த உள்ளூராட்சி மன்றத்திற்கும் அலுவலர் என்ற தன்மையில் செயலாற்றும் எந்த அலுவலருக்கும் இடையிலும் நடைபெறும் கடிதத் தொடர்புகளும், விதிக்கப் பட்டவாறு, தமிழ் மொழியில் இருக்கலாம். வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தமிழ்மொழி, விதிக்கப்பட்ட நிருவாக நோக்கங்கள் தொடர்பாக இலங்கையின் அரசகருமமொழியின் உபயோகத்திற்குப் பங்கம் விளைவிக்காமல், இச் சட்டத்தின் மற்றைய ஏற்பாடுகளுக்கிணங்க அந்த மொழி பயன்படுத்தப் படும் நோக்கங்களுடன், விதிக்கப்பட்ட நிருவாக நோக்கங் களுக்குப் பயன்படுத்தப்படலாம். அமைச்சர் இச் சட்டத்தின் கோட்பாடுகளையும் ஏற்பாடுகளையும் நடைமுறைப்படுத்து வதற்கு ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்.

இச் சட்டம் 1960ஆம் ஆண்டு திசெம்பர் முப்பத்தோராம் நாளன்று முடியும் காலத்தில் 1956ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க அரசகருமச் சட்டத்தின் 2ஆம் பிரிவிற்கான காப்பு வாசகத்தின் கீழ்க் கையாளப்பட்டிருக்கக் கூடிய அல்லது கையாளப்படக்கூடிய அத்தகைய நடவடிக்கைகளுக்கு அமையப் பயன்பாடுடையதாதல் வேண்டும். ஆனால் 1966ஆம் ஆண்டு வரை தமிழ்மொழி உபயோகத்துக்கென ஒழுங்குவிதிகள் உருவாக்கப்படவில்லை.

1966ஆம் ஆண்டு தைத்திங்கள் 8ஆம் நாளன்று 1958ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கத் தமிழ்மொழி (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் ஒழுங்கு விதிகள் உருவாக்கப்பட்டன. அந்த

ஒழுங்கு விதிகள் தமிழ்மொழியின் உபயோகம்பற்றிப் பின்வருமாறு கூறுகின்றன:[3]

சிங்கள மொழி இலங்கையின் ஒரே அரசகரும மொழியாயிருத்தல் வேண்டுமெனவெளிப்படுத்தியதான 1956ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் செயற்பாட்டிற்கு பங்கமில்லா வகையில், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எல்லா அரசாங்க அலுவல்களையும், பொது அலுவல்களையும் கையாளுவதற்கும் அரசாங்க பொதுப் பதிவேடுகளை வைத்திருந்து வருவதற்கும் அத்தகைய அலுவல்கள் அரசாங்க திணைக்களம் அல்லது அரசாங்க நிறுவனம் ஒன்றில் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனம் ஒன்றில், அல்லது சட்டபூர்வமான தாபனமொன்றில் நடைபெறுவதாலும் அன்றேல் இவற்றால் நடாத்தப்படுவதாலும் தமிழ்மொழியும் உபயோகிக்கப்படுதல் வேண்டும்; உத்தியோகத்தர் என்ற தன்மையில் தமது செயல்களைப் புரியும் உத்தியோகத்தர் தவிர்ந்த தமிழ்மொழி மூலம் கல்வியூட்டப்பட்டவர்களாயுள்ள ஆட்களுக்கும் உத்தியோகத்தர் என்ற தன்மையிற் செயலாற்றும் எந்த உத்தியோகத்தர்க்கும் இடையிலும் அல்லது தமிழ் மொழியில் அதனது அலுவல்களை நடாத்தும் வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள எந்த உள்ளூரதிகார சபைக்கும் உத்தியோகத்தர் என்ற தன்மையிற் செயலாற்றும் எந்த உத்தியோகத்தர்க்கும் இடையில் நடைபெறும் எல்லாக் கடிதத் தொடர்புகளுக்கும் தமிழ் மொழியும் உபயோகிக்கப்படுதல் வேண்டும்.

1958ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கத் தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் நெறிகள், ஏற்பாடுகள் என்பவற்றுக்கும் இவ் ஒழுங்குவிதிகளுக்கும் முழு வலிமையும் பயனுமளிக்கும் நோக்கத்துக்கெனக் கட்டளைச் சட்டங்கள், சட்டங்கள் அனைத்தும் எழுத்திலுள்ள எந்த நியாயப் பிரமாணத்தின் கீழேனும் ஆக்கப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட கட்டளைகள், பிரகடனங்கள், விதிகள், துணை விதிகள், ஒழுங்கு விதிகள், அறிவித்தல்கள் அனைத்தும் அரசாங்க கசெற்றும், அரசாங்கத்தினால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனங்களினால் அல்லது சட்டபூர்வமான தாபனங்களினால் வழங்கப்படும் அல்லது உபயோகிக்கப்படும் ஏனைய அரசாங்கப் பிரசுரங்கள், சுற்றறிக்கைகள், படிவங்கள் அனைத்தும் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டுப் பிரசுரிக்கப்படுதல் வேண்டும்.

1972ஆம் ஆண்டு வைகாசித்திங்கள் 22ஆம் நாளன்று உருவாக்கப்பட்ட இலங்கை அரசியலமைப்பு தமிழ்மொழி உபயோகம் தொடர்பாகப் பின்வருமாறு கூறுகின்றது:[4]

இலங்கையின் அரசகருமமொழி 1956ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க அரசகருமமொழிச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு சிங்கள மொழியாதல் வேண்டும். தமிழ் மொழியின் உபயோகம் 1958ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கத் தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கிணங்க விருத்தல்வேண்டும். 1958ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கத் தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டு அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர் முன்னர் வலுவுள்ளதா யிருந்துவந்த, தமிழ்மொழி உபயோகத்துக்கான எதுவேனும் ஒழுங்குவிதி அரசியலமைப்பின் ஏற்பாடொன்றுக் எவ்வகையாகவேனும் பொருள்கொள்ளப்படலாகாது; ஆனல் 12ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் இப்போதுள்ள எழுத்திலான சட்டமாகத் தொடர்ந்திருந்து வரும் துணைநிலைச் சட்டவாக்கமாகக் கொள்ளப்படுதல் வேண்டும். இதனுல் தமிழ் ஒழுங்கு விதிகள் அரசியலமைப்பின் ஏற்பாடாகக் கருதப்படாமல் துணைநிலைச் சட்டவாக்கமாகக் கருதப்படுகின்றது. தமிழ் மொழியின் உபயோகம் பல கட்டளைச் சட்டங்களிலும் இருக்கின்றது. உதாரணமாக, பிறப்பு இறப்புச் சட்டத்தில் பதிவுகளையும் பதிவேடுகளையும் தமிழில் வைத்திருப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.[5] நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம்,[6] விவாகப் பதிவுக் கட்டளைச் சட்டம்,[7] 1956ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க நாடாளுமன்றத் தேர்தல் திருத்தச் சட்டம்,[8] குடியியல் நடவடிக்கைமுறைக்கோவை[9] போன்றவற்றில் தமிழ் மொழியின் உபயோகத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆனல் இலங்கை அரசியலமைப்பு, தமிழ் மொழியின் உபயோகத்தை 1958ஆம் ஆண்டின் தமிழ்மொழி (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்திற்கு மட்டும் மட்டுப்படுத்துகின்றது.

சட்டவாக்கமொழி தொடர்பாக இலங்கை அரசியலமைப்பு பின்வருமாறு கூறுகின்றது :[10]

சட்டங்கள் யாவும் சிங்களத்திற் சட்டமாக்கப்படல்வேண்டும் அல்லது இயற்றப்படல் வேண்டும். அவ்விதம் சட்டமாக்கப்படும் அல்லது இயற்றப்படும் ஒவ்வொரு சட்டத்தினதும் தமிழ் மொழிபெயர்ப்பொன்றும் இருத்தல்வேண்டும். அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர் முன்னர் வலுவுடையனவாயிருந்த, துணைநிலைச் சட்டவாக்கம் உட்பட எழுத்திலான எல்லாச் சட்டங்களும் நீதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அதிகாரத்தின்கீழ் இயன்றளவு விரைவாகச் சிங்களத்திலும் தமிழ் மொழிபெயர்ப்பிலும் கசெற்றில் வெளியிடப்படல் வேண்டும். தேசிய அரசுப் பேரவை வேறு வகையில்

ஏற்பாடு செய்தாலொழிய இப்பிரிவின் 1ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் சிங்களத்தில் வெளியிடப்படும் சட்டம், அத்தகைய வெளியீட்டுத் தேதியிலிருந்து, அச்சட்டமாகக் கொள்ளப்படல் வேண்டும் என்பதோடு ஆங்கிலத்தில் உள்ள நேரொத்த சட்டத்தினை மேலோங்கி நிற்றலும் வேண்டும்.

நீதிமன்ற மொழி தொடர்பாக, 1961ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நீதிமன்ற மொழிச் சட்டம் பின்வருமாறு கூறுகின்றது:[11]

ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகளைச் சிங்களத்திற் பதிவதற்குத் தேவையான பதவியினர்களுக்கும் சாதனங்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றதென்று நீதியமைச்சர் திருப்தியடையுமிடத்து, அவர் பிரதம அமைச்சரின் உசாவுதலுடன், அந்த நீதிமன்றத்தில் பதிவேட்டில் சமர்ப்பிக்கப்படும் வழக்குரைகளுக்கும் வழக்கு நடவடிக்கைகளுக்கும் சிங்களம் பயன்படுத்தப்படுதல் வேண்டுமெனப் பணிக்கலாம்.

இலங்கை அரசியலமைப்பு, நீதிமன்றங்களின் மொழி தொடர்பாகப் பின்வருமாறு கூறுகின்றது :[12]

நீதியை நிருவகிப்பதற்குச் சட்டத்தினால் தத்துவமளிக்கப்பட்டுள்ள நீதிமன்றங்கள், நியாயசபைகள் என்பனவற்றினதும், கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட நீதிமன்றங்கள், நியாயசபைகள், ஏனைய நிறுவனங்கள் என்பனவற்றினதும், 1958ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட இணக்கச் சபைகளினதும் மொழி இலங்கை எங்கணும் சிங்களமாதல் வேண்டும்; அதற்கிணங்க வழக்குரைகள், நடவடிக்கைகள், தீர்ப்புக்கள், கட்டளைகள் என்பனவும் நீதிமுறைச் செயல்கள், சட்ட நிருவாகச் செயல்கள் பற்றிய பதிவேடுகளுமுட்படவுள்ள அவற்றின் பதிவேடுகள் சிங்களத்திலிருத்தல் வேண்டும்.

எனினும், வடக்கு கிழக்கு மாகாணங்களில் முதனிலை நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும் நிறுவனங்களின் விடயத்திலும், கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நீதிமன்றங்கள், நியாயசபைகள், வேறு நிறுவனங்கள் என்பவற்றின் விடயத்திலும், 1958ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க இணக்கச் சபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இணக்கச் சபைகள் விடயத்திலும், தேசிய அரசுப் பேரவை அதனது சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் வேறு வகையில் ஏற்பாடு செய்யலாம்.

இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளானவை அவ்வுட்பிரிவிற் குறிப்பிடப்பட்ட ஏதேனும் நிறுவனத்தினது நியா

யாதிக்கத்தினேடு அல்லது பணியோடு நேரொத்த அல்லது பெருமளவில் ஒத்த நியாயாதிக்கத்தினை அல்லது பணியினை ஏதேனும் எதிர்காலச் சட்டத்தின் கீழ் உடையதாயிருக்கும் ஏதேனும் நிறுவனத்திற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் முசுலிம் திருமண், மணநீக்க சட்டத்தின் கீழ் காதிமார் முன்பு வரும் நடவடிக்கைகளிலும், இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் அல்லது (2)ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் நீதிமன்றத்தின் அல்லது நியாயசபையின் அல்லது வேறு நிறுவனத்தின் முன்னருள்ள கட்சிக்காரர்கள், விண்ணப்பகாரர்கள் என்போரும் அத்தகைய கட்சிக்காரர்கள் அல்லது விண்ணப்பகாரர்களைப் பிரதிநிதித்துவம் வகிக்கச் சட்டப்படி உரிமை கொண்ட ஆட்களும்,

(அ) அவர்களது வழக்குரைகள், விண்ணப்பங்கள், பிரேரணைகள், மனுக்கள் என்பனவற்றைத் தமிழிற் சமர்ப்பிக்கலாம்; அத்துடன்,

(ஆ) அந்நடவடிக்கைகளில் தமிழிற் பங்கு கொள்ளலாம்.

அத்தகைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சிங்கள மொழிபெயர்ப்பொன்று இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் அல்லது (2)ஆம் உட்பிரிவிற் குறிப்பிடப்பட்ட அத்தகைய நீதிமன்றத்தினுல் அல்லது நியாயசபையினுல் அல்லது வேறு நிறுவனத்தினுல் அதன் பதிவேடுகளின் பொருட்டுத் தயாரிக்கப்படச் செய்தல் வேண்டும்.

இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் அல்லது (2)ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட நீதிமன்றம் ஒன்றில் அல்லது நியாயசபை ஒன்றில் அல்லது வேறு நிறுவனத்திற் பயன்படுத்தப்படும் மொழியை அங்கு எடுபடும் நடவடிக்கைகளை அறிந்து அவற்றிற் பங்குபற்றக்கூடிய அளவில் அறிந்திராத கட்சிக்காரர், விண்ணப்பகாரர், நீதிபதி, யூரிமார் அல்லது நியாயசபை உறுப்பினர் ஒவ்வொருவரும் இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் அல்லது (2)ஆம் உட்பிரிவிற் குறிப்பிடப்பட்ட அந்நீதிமன்றத்தின் அல்லது நியாயசபையின் அல்லது வேறு நிறுவனத்தின் முன்னருள்ள நடவடிக்கைகளை விளங்கிக்கொண்டு அவற்றிற் பங்குபற்றுவதனை அவர்க்கு இயலச் செய்வதற்காக அரசினுல் ஏற்பாடு செய்யப்படும் பேச்சு மொழிபெயர்ப்பையும் சிங்களத்தில் அல்லது தமிழிலான மொழிபெயர்ப்பையும் பெறும் உரித்துடையவராதல் வேண்டும்.

அத்தகைய ஆள் சட்டத்திற்கிணங்கப் பெறற்குரிமையுள்ள அப்பதிவேட்டின் அத்தகைய ஏதேனும் பாகத்தைச் சிங்களத்தில் அல்லது தமிழில் பெறும் உரிமையையும் உடையவராதல் வேண்டும்.

கட்சிக்காரர் அல்லது விண்ணப்பகாரர் ஒருவரைப் பிரதிநிதித்துவம் வகிக்கச் சட்டப்படி உரிமைகொண்டுள்ள ஆள் ஒருவர் இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் அல்லது (2)ஆம் உட்பிரிவிற் குறிப்பிடப்பட்ட ஏதேனும் நீதிமன்றம், நியாயசபை அல்லது வேறு நிறுவனத்தில் எடுபடும் நடவடிக்கைகளில் சிங்களத்தில் அல்லது தமிழிற் பங்குகொள்ளலாம் என்பதுடன் அந்நோக்கத்துக்கென அரசினல் ஏற்பாடு செய்யப்படும் சிங்களத்தில் அல்லது தமிழிலான பேச்சு மொழிபெயர்ப்புக்கு உரிமையுடையவராதலும் வேண்டும்.

ஈழத்திலுள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முதனிலை நியாயாதிக்கம் பிரயோகிக்கும் குறித்த சில் நிறுவனங்களின் விடயத்தில் தமிழ் மொழியைப் பயன்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யும் 1973ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, நீதிமன்றங்களின் மொழி (சிறப்பேற்பாடுகள்) சட்டம் பின்வருமாறு கூறுகின்றது :[13]

2. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முதனிலை நியாயாதிக்கத்தினைப் பிரயோகிக்கின்ற ஏதேனும் நிறுவனத்தினதும், கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட ஏதேனும் நீதிமன்றத்தினதும், நியாயசபையினதும் அல்லது வேறு நிறுவனத்தினதும் 1958ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட ஏதேனும் இணக்கச் சபையினதும் மொழி தமிழாக இருத்தல் வேண்டுமென அமைச்சர், அமைச்சரவையின் ஒருப்பாட்டுடன் தீர்மானிக்கலாம்.

3. இச்சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ்த் தீர்மானமொன்று செய்யப்பட்டதும், எந்த நீதிமன்றம், நியாயசபை, நிறுவனம் அல்லது சபை தொடர்பில் அத்தீர்மானஞ் செய்யப்பட்டதோ, அந்த நீதிமன்றத்தை, நியாயசபையை, நிறுவனத்தை அல்லது சபையை,

(அ) அதன் வழக்குரைகள், வழக்கு நடவடிக்கைகள், தீர்ப்புக்கள், கட்டளைகள் என்பனவும் நீதித்துறைச் செயல்கள் சட்டநிருவாகச் செயல்கள் என்பனபற்றிய பதிவேடுகளும் உள்ளிட்ட பதிவேடுகள் தமிழில் வைத்திருக்கப்படல் வேண்டுமென அமைச்சர் பணித்தல் வேண்டும்.

எனினும் அமைச்சர் கட்டளைமூலம் பணிக்கக்கூடிய அத்தகைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும், அத்தகைய நீதிமன்றத்தினால், நியாயசபையினால், நிறுவனத்தினால் அல்லது சபையினால் பதிவேட்டின் நோக்கங்களுக்கெனச் சிங்கள மொழிபெயர்ப்பொன்று தயாரிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) கட்சிக்காரர்கள், விண்ணப்பகாரர்கள் என்போரும் அத்தகைய கட்சிக்காரரை அல்லது விண்ணப்பகாரரைப் பிரதிநிதித்துவம் வகிப்பதற்குச் சட்டப்படி உரித்துடைய ஆட்களும்,

(i) தத்தமது வழக்குரைகளையும் விண்ணப்பங்களையும் பிரேரணைகளையும் மனுக்களையும் சிங்களத்திற் சமர்ப்பிக்கலாம் எனவும், அத்துடன்

(ii) வழக்கு நடவடிக்கைகளில் சிங்களத்திற் பங்குபற்றலாம் எனவும், அமைச்சர் பணித்தல் வேண்டும்.

ஆயின், எவ்வாறுயினும், அமைச்சர் கட்டளை மூலம் பணிக்கக்கூடிய அத்தகைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பதிவேட்டின் நோக்கங்களுக்காகத் தமிழ் மொழிபெயர்ப்பொன்றைத் தயாரிப்பித்தல் வேண்டும்; அத்துடன்

(இ) கிராம நீதிமன்றமொன்று தவிர்ந்த, அத்தகைய நீதிமன்றத்திலிருந்து, நியாயசபையிலிருந்து, நிறுவனத்திலிருந்து அல்லது சபையிலிருந்து மேன்முறையீடொன்று செய்யப்படும்போது, (அ) என்னும் பந்தியின் காப்புவாசகத்தின் கீழ், சிங்கள மொழிபெயர்ப்பொன்று தயாரிக்கப்பட்டிருப்பினுஞ்சரி, இல்லாவிடினுஞ்சரி, அத்தகைய மேன்முறையீட்டை விசாரிக்கும் நீதிமன்றம் பயன்படுத்துவதற்கென சிங்களத்திற் பதிவேடொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென அமைச்சர் பணித்தல் வேண்டும்.

4. இரண்டாம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட நீதிமன்றத்தின் நியாயசபையில் அல்லது வேறு நிறுவனத்தில் பயன்படுத்தப்படும் மொழியை அறிந்திராத கட்சிக்காரர், விண்ணப்பகாரர், நீதிபதி, யூரிமார், அல்லது நியாயசபை உறுப்பினர் ஒவ்வொருவரும், வழக்கு நடவடிக்கைகளை விளங்கிக் கொள்வதற்கும் அவற்றிற் பங்குபற்றுவதற்கும் அவரை இயலச் செய்வதற்காக அரசினால் ஏற்பாடு செய்யப்படும் பேச்சு மொழிபெயர்ப்பையும் சிங்களத்திலான மொழிபெயர்ப்பையும் பெறுவ

தற்கு உரிமையுள்ளவராதல் வேண்டும். அத்தகைய ஆள், சட்டத்திற் கிணங்கப் பெறுவதற்கு உரிமையுள்ள பதிவேட்டின் அத்தகைய ஏதேனும் பாகத்தைச் சிங்களத்திற் பெறும் உரிமையும் உடையவராதல் வேண்டும்.

5. இரண்டாம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் நிறுவனத்தின் நியாயாதிக்கத்தை அல்லது பணியை ஒத்த அல்லது பெருமளவில் ஒத்த நியாயாதிக்கத்தை அல்லது பணியை ஏதேனும் எதிர்காலச் சட்டத்தின் கீழ்க் கொண்டிருக்க வேண்டியதான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள நிறுவனம் எதற்கும் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

6. இச்சட்டத்தில் நெறிகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் பயன் கொடுப்பதற்காக அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

ஆனல் மேற்கூறிய சட்டம் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள முதனிலை நியாயாதிக்கம் பிரயோகிக்கும் குறித்த சில நிறுவனங்களின் விடயத்தில் தமிழ்மொழியைப் பயன்படுத்துவதற்கு ஏற்பாடு செய்கின்றது. மேற்படி மாகாணங்களிலுள்ள முதனிலை நியாயாதிக்கம் பிரயோகிக்கும் சில நிறுவனங்களின் திர்ப்புகளுக்கு எதிரான மேன்முறையீடுகளெல்லாம் உயர்நீதிமன்றத்திற்குச் (Supreme Court) செய்யப்படுதல் வேண்டும். இச்சட்டம் உயர்நீதிமன்றத்திற்குச் செய்யப்படும் மேன்முறையீடுகள் தொடர்பாகத் தமிழ் மொழியைப் பயன்படுத்துவதற்கு ஏற்பாடு செய்வதாகத் தெரியவில்லை.

ஆரம்பக் கட்டத்தில் தாய்மொழி மூலம் கல்வி கற்பிப்பதற்கு ஏற்பாடுகள் இந்தியாவில் உள்ளன. இது தொடர்பாக இந்திய அரசியலமைப்பு பின்வருமாறு கூறுகின்றது:[14]

It shall be the endeavour of every State and of every local authority within the State to provide adequate facilities for instruction in the mother tongue at the primary stage of education to children belonging to linguistic minority groups; and the President may issue such directions to any State as he considers necessary or proper for securing the provision of such facilities.

ஆனல், ஈழத்தில் தாய்மொழிமூலம் கல்வி கற்பிக்கப்படுதல் வேண்டுமென்று கூறும் உரிமை இல்லை.

ஈழத்தில் தமிழ்மொழிக்கு நிருவாகத்துறையிலும் நீதித்துறையிலும் ஓரளவு இடம் கொடுக்கப்பட்டுள்ளது.

அடிக்குறிப்பு

1. *Supplement to the Revised Edition of the Legislative Enactments of Ceylon – Volume II*
   Official Language Act, No. 33 of 1956 - Page - 967.
2. *Supplement to the Revised Edition of the Legislative Enactments of Ceylon – Volume II*

   Tamil Language (Special Provisions) Act, No. 28 of 1958 - Page 495 - 1967.
3. "*Ceylon Government Gazette*"
   No. 14, 653 of February 3, 1966.
4. இலங்கை அரசியலமைப்பு – பக்கம் 5 1972.
5. *Births and Deaths Registration Act* – Caption 110 - Revised Edition of the Legislative Enactments of Ceylon– 1956.
6. *Notaries Ordinance* – Caption 157 - Revised Edition of the Legislative Enactments of Ceylon - 1956.
7. *Marriage Registration Ordinance* – Caption 112 - Revised Edition of the Legislative Enactments of Ceylon - 1956.
8. *Parliamentary Election Amendment Act* – No. 16 of 1956.
9. *Civil Procedure Code* – Caption 101. Revised Edition of the Legislative Enactments of Ceylon - 1956.
10. இலங்கை அரசியலமைப்பு – பக்கம் 5 1972.
11. Supplement to the Revised Edition of the Legislative Enactments of Ceylon – Volume II

    Language of the Courts Act, No. 3 of 1961 - Page 651- 1967.
12. இலங்கை அரசியலமைப்பு பக்கங்கள் 6, 7 - 1972.
13. இலங்கைத் தேசிய அரசுப் பேரவையினது 1973ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, நீதிமன்றங்களின் மொழி (சிறப் பேற்பாடுகள்) சட்டம் – பக்கங்கள் 1 - 3 - 1973.
14. *Constitution of India* – Part XVII.
    Special Directives - Section 350A
    Publishers: Manager of Publications, Delhi.

இலங்கையிற் போதனுமொழி மாற்றத்தின் ஆரம்பம்

அதன் பின்னணி பற்றிய ஆய்வு

சோ. சந்திரசேகரம்

1945ஆம் ஆண்டளவில் இலங்கையின் கல்விமுறையில் இடம் பெற்றிருந்த ஒரு முக்கிய அம்சம் போதனுமொழி அடிப்படையிற் பாடசாலைகள் பிரிக்கப்பட்டிருந்தமையாகும். பிரித்தானிய ஆட்சியாளர் கடைப்பிடித்த கல்விக்கொள்கைகளின் விளைவாக அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் நாட்டில் ஆங்கிலப் பாடசாலைகளும் சுயமொழிப் பாடசாலைகளும்[1] தோன்றி வெவ்வேறு தரமான கல்வியை வழங்கிவந்தன. 1831ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட கோல்புறூக் குழுவினரின் அறிக்கையிற் காணப்பட்ட விதப்புரைகளின் விளைவாக அரசாங்கம் ஆங்கிலப் பாடசாலைகளை அமைப்பதில் முன்னைவிட அதிக ஊக்கம் செலுத்தியது. அவ்வறிக்கை, ஆசிரியர்களாக நியமனம் பெறுகின்றவர்கள் ஆங்கிலத்திலே தேர்ச்சியுடையவர்களாகவும் அம்மொழியிற் கற்பிக்கக்கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும் என்று விதந்துரைத்தது.[2] சுயமொழிப் பாடசாலைகளாக இருந்த அரசாங்கப் பாடசாலைகள் ஆங்கிலப்பாடசாலைகளாக மாற்றப்பட இவ்வறிக்கை வழிகோலியது. அதனை இலகுபடுத்தும் நோக்குடன் குழு ஆங்கிலமொழி மூலம் கல்வித்தகுதி பெற்றவர்கள் எவ்வகுப்பைச் சேர்ந்தவர்களாயினும் அவர்கள் அரசாங்க சேவையிற் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கூறியது.[3] இவ்வாறு அரசாங்க சேவையில் இலங்கையர்கள் சேருவதற்கு இடமளித்த குழு அரசாங்க சேவையிற் சேருபவர்கள் ஆங்கில மொழியிலே தேர்ச்சி பெற்றவர்களாக இருக்கவேண்டுமென்று விதித்தது.[4] இதனுல் அரசாங்க சேவையிற் சேரவிரும்பும் எவரும் ஆங்கிலக் கல்வியைப் பயில வேண்டியதாயிற்று. ஆங்கிலம் அரசகரும மொழியாக ஆக்கப்பட்டமையால் ஆங்கிலக் கல்விமுறை

யொன்று உருவாகி நாட்டிற் செல்வாக்குப் பெறுவது தவிர்க்க முடியாததாயிற்று. அரசாங்க நிர்வாகத்தை நடத்துவதற்கு ஆங்கில மொழி பயின்றவர்களை உள்ளூரிலேயே திரட்டுவது ஆட்சியாளரின் நோக்கமாக[5] இருந்தமையால் அரசாங்கத்தின் ஆதரவுடன் ஆங்கிலப்பாடசாலை முறையொன்று நாட்டில் வளர்ச்சியடையத் தொடங்கியது. இலங்கையில் வளர்ச்சியுற்ற ஆங்கிலக் கல்விமுறை இரத்தத்திலும் நிறத்திலும் இலங்கையர்களாகவும் கருத்திலும் சுவையிலும் அறிவிலும் ஆங்கிலேயர்களாகவும் உள்ள புதிய ஒரு வகுப்பினரை உருவாக்கும் குடியேற்ற நாட்டுக் கொள்கைக்கு ஒப்ப அமைந்தது.

1843ஆம் ஆண்டிற் பாடசாலைகளுக்கு அரசாங்கம் உதவி நன்கொடை வழங்கும் முறை செயற்படுத்தப்பட்டபோது, அரசாங்கம் நாட்டில் ஆங்கிலக் கல்வியை வளர்க்க விரும்பியமையால், நன்கொடை வழங்கும்போது ஆங்கிலப் பாடசாலைகளுக்கே முதலிடம் வழங்கப்பட்டது. கோல்புறூக் குழுவினரின் விதப்புரைகளின் காரணமாகக் கிறித்தவசமயக் குழுவினரின் பாடசாலைகளும் ஆங்கிலப்பாடசாலைகளாக மாற்றப்படலாயின. இப்பாடசாலைகள் தொடக்கத்தில் ஆரம்பப் பாடசாலைகளாக வளர்ச்சியடைந்தன. உதவி நன்கொடையும் ஆங்கிலக் கல்விக்கான தேவையும் அதிகரித்தமையாற் சமயக் குழுவினர் பெரிய ஆங்கிலப்பாடசாலைகளை உருவாக்கினர். இப்பாடசாலைகள் படிப்படியாக வளர்ச்சியுற்று முன்பு ஆரம்பப் பாடசாலைகளுக்கிருந்த இடத்தைப் பெற்றன. சமயக் குழுவினரின் ஆங்கிலப் பாடசாலைகளிற் பெரும்பாலானவை இங்கிலாந்தில் நிலவிய செல்வந்தர் பாடசாலை அமைப்பைத் (Public Schools) தழுவியனவாக அமைந்தன. இப்பாடசாலைகளின் பாடவிதானம் நூற்கல்விச் சார்புடையதாகவும், உயர்நிலையில் அதிக அளவுக்குச் சிறப்புப் பயிற்சி தருவதாகவும் அமைந்திருந்தது. பாடசாலைக் கல்வி பாடசாலை விடுகைச்[6] சான்றிதழைப் பெறும் நோக்குடன் அல்லது பல்கலைக்கழகக் கல்விக்கு ஆயத்தம் செய்யும் நோக்குடன் அமைந்தது.

கிறித்தவ சமயக் குழுவினர் இலங்கையிற் கல்விப் பணிகளை ஆரம்பித்த காலம் தொடக்கம் சுயமொழிக் கல்வி வளர்ச்சியிற் கூடிய ஆர்வம் செலுத்தி வந்தனர். நாட்டிற் சுயமொழிக் கல்வியைப் பரப்புவதற்காக அவர்கள் சுயமொழிப் பாடசாலை முறை ஒன்றை ஆரம்பித்தனர். இத்துறையிற் சமயக் குழுவினரின் பணி அரசாங்கத்தின் முயற்சியை விட அதிக அளவுக்கு வெற்றியளித்தது. சமயக் குழுவினர் அரசாங்கத்தை விடத் திறமையாகவும் சிக்கனமாகவும் சிங்கள, தமிழ் மொழிகளிற் கல்வி வழங்கினர். கோல்புறூக் குழுவினர் தமது அறிக்கையில்

ஆங்கிலேய சமயக் குழுவினர் தமது பாடசாலைகள் மூலமாக ஆங்கில மொழியைப் பரப்புவதில் உள்ள முக்கியத்துவத்தைப் பொதுவாக வரவேற்கவில்லை என்று கூறியிருந்தனர். இதிலிருந்து சமயக் குழுவினர் சுயமொழிக் கல்வியிலேயே ஆர்வம் காட்டி வந்தனர் என்பது தெளிவாகும்.

1841ஆம் ஆண்டு அரசாங்கப் பாடசாலைகளை மேற்பார்வை செய்யவென நியமிக்கப்பட்ட மத்தியபாடசாலை ஆணைக்குழு தேவையை நிறைவு செய்யும் அளவுக்கு ஆங்கிலக் கல்வி விரிவடைந்திருந்தது என்று கருதியமையால் எதிர் காலத்திற் சுயமொழிக் கல்வியையே முக்கியமாக விருத்திசெய்யவேண்டும் என்று தீர்மானித்தது. எனவே ஆங்கிலத்தில் மட்டுமே கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்ற ஆரம்ப காலப் பிரித்தானியக் கொள்கை கைவிடப்பட்டுச் சுயமொழிக் கல்விக்குச் சார்பான ஒரு கொள்கை உருவாக்கப்பட்டது.[8] ஆணைக்குழு ஆங்கிலக் கல்விக்கு முன்னேடியாகச் சுயமொழிக் கல்வியை அறிமுகப் படுத்தத் தீர்மானித்தது. ஆங்கிலக் கல்வி பெறுவதற்கு முன்னுயத்தமாகச் சுயமொழிகளில் ஒவ்வொரு ஆரம்பப் பாடசாலையிலும் போதனை வழங்கப்படவேண்டுமென்றும், அதனுல் ஆங்கிலக் கல்வியினுற் பெறக்கூடிய நன்மைகளை அறியாத இலங்கையர்கள் தமது பிள்ளைகளை அரசாங்கப் பாடசாலைகளுக்கு அனுப்புமாறு தூண்டமுடியும் என்றும் ஆணைக்குழு கருதியது.

1841ஆம் ஆண்டு தொடக்கம் 1847ஆம் ஆண்டு வரையும் அரசாங்கம் மத்தியபாடசாலை ஆணைக்குழுவினூடாகச் சிங்களப் பாடசாலைகளையும் தமிழ்ப்பாடசாலைகளையும் ஆரம்பித்தது. இக்காலப் பகுதியிற்முன் அரசாங்கம் மக்களுக்கு அவர்களுடைய சுயமொழிகளிற் கல்வி கற்பிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தது. பிள்ளைகள் ஆங்கிலம் கற்பதற்கு முன்னர் தமது சுயமொழிகளில் வாசிக்கவும் எழுதவும் கற்றனர். முக்கிய நூல்கள் சிங்களத்திலும் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டன. 1880ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட கோப்பி நெருக்கடியின் காரணமாக உருவான நிதிப்பிரச்சினை சுயமொழிக் கல்வியை வளர்க்கும் அரசாங்கக் கொள்கையை ஊக்குவித்தது. ஏனெனில் ஆங்கிலப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கு அதிக பணம் செலவிடவேண்டியிருந்தது. எனவே, ஒரு சில பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய அரசாங்க ஆங்கிலப்பாடசாலைகள் யாவும் கிறித்தவ சமயக் குழுவினரிடம் ஒப்புவிக்கப்பட்டன. சமயக் குழுவினர் அரசாங்க நன்கொடையுடன் அப்பாடசாலைகளைப் பொறுப்பேற்று நடத்த

ஆயத்தமாக இருந்தனர். அரசாங்கத்தின் கல்விப் பொறுப்பு 1886ஆம் ஆண்டளவில் கிறித்தவ சமயக் குழுவினரிடம் ஒப்பு விக்கப்பட்டது.

சமயக் குழுவினரின் உதவிபெறும் சுயமொழிப் பாட சாலைகள் நாடெங்கும் பரந்து காணப்பட்டன. சிங்களப் பாட சாலைகள் சிங்களவர்கள் வசித்த பகுதிகளிலும், தமிழ்ப் பாட சாலைகள் தமிழர்கள் அதிகமாக வசித்த இடங்களிலும் காணப் பட்டன. சுயமொழிப் பாடசாலைகள் ஆரம்பக் கல்வியை அல்லது இடைநிலைக் கல்வியை ஒரே பாடசாலையில் அல்லது வெவ்வேறு பாடசாலைகளில் வழங்கின. ஆரம்பப் பாடசாலைகள் ஐந்தாண்டுக் கல்வியை வழங்கின. இடைநிலைப் பாடசாலைகள் எட்டாம் தரம் வரை (கனிட்ட இடைநிலை) அல்லது பத்தாம் தரம் வரை (சிரேட்ட இடைநிலை) உள்ள வகுப்புகளை மட்டும் கொண்டிருந் தன. இப்பாடசாலைகள் தமது மாணவர்களை ஆகக் கூடியது சிரேட்ட பாடசாலைப் பத்திர நிலைப் பரீட்சைக்கு ஆயத்தப் படுத்தின.

சுயமொழிகளை மட்டும் கற்பித்த பாடசாலைகளை விட நாட்டில் ஆங்கில சுயமொழிப் பாடசாலைகள் அல்லது இரு மொழிப் பாடசாலைகள் (Bilingual Schools) என்ற மற்றொரு வகைப் பாடசாலைகள் இருந்தன. இப்பாடசாலைகளின் ஆரம்ப வகுப்புகளில் சுயமொழி போதனமொழியாகவும், உயர்நிலைகளிற் படிப்படியாக ஆங்கிலம் போதனமொழியாகவும் இருந்தன. இப்பாடசாலைகள் சுயமொழிக் கல்வியைப் பொறுத்தவரையி லான அரசாங்கக் கொள்கைக்கு ஒப்பவும் ஆங்கிலக் கல்விக் கிருந்த தேவையை நிறைவு செய்வனவாயும் அமைந்தன. பிற் காலத்தில் நாடெங்கும் சுயமொழிகள் போதனமொழிகளாக்கப் பட்டதும் இப்பாடசாலைகளுக்கான தேவை மறைந்தது.

குடியேற்ற நாட்டுக் கல்வி முறையின் முக்கிய அம்சம் பெரும்பாலானவர்களுக்குத் தரத்திற் குறைந்த இலவச சுய மொழிக் கல்வியும், குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் தரத்திற் கூடிய ஆங்கிலக் கல்வியும் வழங்கப்பட்டமையாகும். மக்களின் அறிவு வளர்ச்சியைப் பொறுத்தவரையில் அரசாங்கத்துக்கிருந்த பொறுப்பைக் குறைந்த செலவில் நிறைவேற்றச் சுயமொழிப் பாடசாலைகளும், அரசாங்க நிர்வாகத்தை நடத்த ஆங்கிலம் தெரிந்த கற்றோர் வர்க்கம் ஒன்றை உருவாக்க ஆங்கிலப் பாட சாலைகளும் நிறுவப்பட்டன. இவ்விரு கொள்கைகளையும் பிரதி பலிக்கும் வகையில் ஆங்கிலச் சுயமொழிப் பாடசாலைகளை அமைக்க நீடித்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் அம்முயற்சிகள் வெற்றி பெறவில்லை. 1928ஆம் ஆண்டுக்கும்

1940ஆம் ஆண்டுக்குமிடையில் இப்பாடசாலைகளிற் பயின்ற மாணவர்களின் தொகை குறைந்து வந்ததைப் பின்வரும் புள்ளி விபரம் காட்டும்:[9]

ஆண்டு	ஆங்கில சுயமொழிப் பாடசாலைகள் மாணவர் தொகை
1928	37,365
1938	20,156
1939	19,912
1940	15,917

எனவே, போதனமொழிகளை அடிப்படையாகக் கொண்ட இரு வேறுபட்ட பாடசாலைகள் குடியேற்ற நாட்டாட்சி நிலவிய காலம் முழுவதும் நீடித்து இயங்கிவர நேர்ந்தது.

ஆங்கில மொழி அரசகரும மொழியாகவும் வர்த்தகத் துறையில் நிர்வாக மொழியாகவும் இருந்தமையால் ஆங்கிலக் கல்வி பெரிதும் விரும்பப்பட்டது. கூடிய சம்பளங்களைக் கொண்ட பதவிகளை அடைவதற்கு ஆங்கில மொழிக் கல்வி பெரிதும் இன்றியமையாததாக இருந்தது. எனவே, சிங்களவர்களும் தமிழர்களும் பொருளாதார சமூகப் பயன்பாடு கருதி ஆங்கில மொழிக் கல்வியை நாடினர். சிங்களவர்களும், தமிழர்களும், டச்சுக்காரர்களும் ஓர் அந்நிய மொழியைக் கற்க வேண்டும் என்பதற்காகத் தமது தாய் மொழியை அலட்சியம் செய்ய நேர்ந்தது பற்றி எவ்வித மனக் குறைவும் அடைந்ததாகத் தெரியவில்லை.[10] ஆங்கிலக் கல்வித் தகுதிகளைக் கொண்டு அரசாங்க பதவிகளையும், அவற்றினூடாக உயர்ந்த பொருளாதார சமூக அந்தஸ்தையும் அடைவதற்காகப் போட்டியிட வேண்டிய நிலைமையிருந்தமையால் அவர்கள் கல்விப் பிரச்சினையைத் தேசிய நோக்குடனோ அல்லது கல்வித்தத்துவ உண்மைகளின் அடிப்படையிலோ அணுக முயலவில்லை. உண்மையிற் பொருளாதார, சமூக காரணங்களுக்காக இந்நாட்டு மக்கள் ஆங்கிலக் கல்வியை விரும்பியமையாலேயே தாம் ஆங்கிலம் போதனமொழியாக அமையவேண்டும் என்று விதந்துரைப்பதாகக் கோல்புறூக் குழுவினர் கூறியிருந்தனர்.[11] பொருளாதார நன்மைகள், பணவருவாய், உத்தியோக அந்தஸ்து முதலியவற்றைப் பெறுவதற்கான போராட்டத்தில் இந்நாட்டு மக்கள் தமது தேசிய தனித்துவத்தையும், சுயகௌரவத்தையும் பல காலமாகப் போற்றப்பட்டு வந்த பாரம்பரியத்தையும் தியாகம் செய்ய ஆயத்தமாக இருந்தனர்.[12] சுயமொழிகளின் வளர்ச்சியிற் கூடிய அக்கறை செலுத்தப்படாமையால் மக்கள் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்து காணப்பட்ட பழக்க வழக்கங்களும்

பண்பாட்டு அம்சங்களும் சீர்கேடடையத் தொடங்கின. சிங்களவர், தமிழர்கள் பலரின் இல்லங்களில் ஆங்கிலம் வீட்டு மொழியாகப் பயன்படுத்தப்பட்டது. உள்ளூர் மொழிகள் வீட்டிலுள்ள ஊழியர்களுடன் உரையாடுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டன.[13] சுயமொழிகளில் ஒரு சொல்கூடத் தெரியாதவர்கள் உயர்ந்த பதவிகளையும், செல்வத்தையும், செல்வாக்கையும் பெறக்கூடியதாக இருந்தது. அத்துடன், சுயமொழி அறிவு எவ்வளவுதான் விரிவானதாக இருந்தபோதிலும் எந்தத் துறையிலாவது தொழில் பெற முடியாத நிலையிலிருந்தது.[14] சுயமொழிகளிற் கல்வி கற்பதால் எதிர்காலத்திற் பொருளாதார, சமூக அந்தஸ்தினை உயர்த்திக் கொள்வதற்கு எதுவித வாய்ப்பினையும் பெற்றுக்கொள்ள முடியாத வகையிற் குடியேற்றநாட்டுக் கொள்கை அமைந்திருந்தமையாற் சுயமொழிக் கல்வி நடைமுறை வாழ்க்கைக்குப் பயனற்றது என்ற கருத்து வலுப்பெற்றது. ''சுயமொழிகளைப் பயன்படுத்துவதால் ஏதேனும் பொருளாதார நன்மைகள் கிடைக்கும் என்று மக்கள் கருதாவிட்டால், பற்றுணர்வின் காரணமாக அம்மொழிகளைப் பயன்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. சிங்களத்தில் அல்லது தமிழிற் கல்வி பயிலும் குடிமகன் சுயமொழி அறிவைக் கொண்டு மட்டும் தனது சீவனோபாயத்தைத் தேடுவதற்கும் பிறருடன் சமமாகப் போட்டியிடுவதற்கும் உயர்பதவிகளைப் பெறுவதற்கும் உத்தரவாதம் இருக்கவேண்டும்'' என்று 1946ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அரசகரும மொழிகள் பற்றிய தெரிவுக் குழுவின் அறிக்கையிற் கூறப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.[15] மிக அண்மைக்காலம் வரை சிங்கள/தமிழ் சி. பா. த. ப. அரசாங்க பாடசாலைகளில் ஆசிரியர் பதவி தவிர்ந்த வேறு எந்தத் தொழிலையும் அல்லது அரசாங்கப் பதவியையும் பெறுவதற்கான தகுதிப் பரீட்சையாக அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.[16]

பொருளாதார, சமூக அந்தஸ்தை உயர்த்திக் கொள்வதில் மட்டும் சுயமொழிக் கல்வி ஆங்கிலக் கல்வியை விடப் பின் தங்கிய நிலையில் இருக்கவில்லை. உயர்கல்வியைப் பெறுவதற்கும் ஆங்கில அறிவு அல்லது வேறு ஏதேனும் ஐரோப்பிய மொழி அறிவு தேவைப்பட்டது. சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் உயர்கல்விக்குப் பயன்படத்தக்க நூல்கள் மிகவும் குறைவாகவே இருந்தன. மொழிபெயர்ப்பதற்கு ஏற்படக்கூடிய செலவினை ஈடுசெய்யும் அளவுக்கு அத்தகைய நூல்களுக்கு அதிக தேவையும் இருக்கவில்லை. எனவே உயர்கல்வியை நாட விரும்புபவர்கள் தவிர்க்க முடியாத வகையில் ஆங்கிலத்திற் சிறந்த தேர்ச்சி பெற்றவர்களாக இருக்கவேண்டி நேர்ந்

தது.[17] ஆங்கில மொழி மூலம் மட்டும் நடாத்தப்பட்ட புகு முகப் பரீட்சையின் பெறுபேறுகளைக் கொண்டு பல்கலைக்கழகத் துக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். சுயமொழிகளில் டிப்ளோமாப் பட்டம் பெறுவோர் தவிர்ந்த ஏனையோர் இவ் வாறு தெரிவுசெய்யப்பட்டனர். சிங்களம் அல்லது தமிழ்மொழி மூலம் மாணவர்களைப் பரீட்சித்துப் பல்கலைக்கழகத்தில் அனும திக்க எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே ஆங்கிலமொழி மூலம் கல்வி பயிலும் மாணவர்கள் மட்டுமே பல்கலைக்கழகத்தில் அனுமதி பெறக் கூடியதாக இருந்தது.[18] சிங்கள/தமிழ் சிரேட்ட பாடசாலைத் தராதப் பத்திரம் பெற்ற எம் மாணவனும் உயர்கல்வியைப் பெற முடியாமலிருந்ததுடன் நாட்டிலிருந்த ஒரே ஒரு பல்கலைக்கழகத்திலும் அவனுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இச் சூழ்நிலை சுயமொழிக் கல்வி தளர்ச்சி யடையக் காரணமாக இருந்தது.[19] பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதி தொடக்கம் இலங்கையிற் கிறித்தவ சமயமும் ஆங்கில மொழியுமே உயர்கல்விக்கும், சமூகப் பெயர்ச் சிக்கும் இட்டுச்செல்லும் முக்கிய ஏதுக்களாக விளங்கின.

பொருளாதார, சமூக நன்மைகளையும் உயர்கல்வி வாய்ப்புக் களையும் வழங்கிய ஆங்கிலக் கல்வி யாவருக்கும் கிடைக்கத்தக்க தாக இருக்கவில்லை. அரசாங்கமும் கிறித்தவ சமயக் குழுக்களும் ஆங்கிலப் பாடசாலைகளை ஆரம்பித்தகாலம் தொடக்கம், பொரு ளாதார வசதியுள்ளவர்கள் மட்டுமே தமது பிள்ளைகளை அங்கு அனுப்பிக் கல்வி பயிலச் செய்யக்கூடியதாக இருந்தது.[20] சுய மொழிப் பாடசாலைகள் இலவசக் கல்வியை வழங்கிய இடத்து ஆங்கிலப் பாடசாலைகள் கட்டணம் அறவிட்டமையால் ஆங்கிலக் கல்வி பொருளாதாரத் துறையிற் சலுகை பெற்ற வகுப்பின ருக்கு ஒதுக்கப்பட்ட தொன்றாகியது.[21] கல்லூரி நிலையிலான ஆங்கிலப் பாடசாலைகள் (Collegiate English Schools) அரசாங்க நிதியிலிருந்து உதவி நன்கொடை பெற்ற போதிலும், அவை பிள்ளைகளின் கல்விக்குக் கட்டணங்களைச் செலுத்தக்கூடிய பெற்றோர்களுக்குரியனவாகவே விளங்கின. இப்பாடசாலைகளிற் கல்வி பெறுவதற்கு அதிகம் செலவு செய்யவேண்டி யிருந்தமை யால், குறித்த ஒரு சிலருக்கான கல்வி நிலையங்களாக அவை விளங்கின. எனவே, இப்பாடசாலைகள் கல்வித்துறையில் யாவ ருக்கும் சமசந்தர்ப்பத்தை வழங்கவில்லை. இது இப்பாடசாலை களுக்குரிய ஒரு குறைபாடான இயல்பாகக்கொள்ள முடியாது. முழுக்கல்வி முறையிலும் இவ்வியல்பு செறிந்து காணப்பட்டது.[22] எனவே, இலங்கையிற் கட்டணம் செலுத்திக் கல்விபெறக் கூடியவர்கள் செல்லக்கூடிய ஒரு பாடசாலை முறையும், அதற் கான வழிவகைகள் இல்லாதவர்கள் செல்லக்கூடிய பாடசாலை

முறையும் என இருவகையான பாடசாலை முறைகள் தோன்றி வளர்ச்சியுற்றன. ஒரு பாடசாலையிலிருந்து மற்றப் பாடசாலைக்கு மாறிச் செல்வது கடினமானதாக இருந்தது. எனவே ஏழ்மை யான பெற்றோர்களின் பிள்ளைகள் உயர்கல்வி பெறமுடியா திருந்தது.[23] ஆங்கிலப் பாடசாலைகளிற் பிள்ளைகளை அனுமதிப்ப தற்கு அவர்களுடைய உள்ளார்ந்த ஆற்றல்கள் கருத்திற் கொள்ளப்படாது பெற்றோர்களின் பொருளாதார நிலைக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டமையால், போதிய கல்வி வாய்ப் புக்கள் இன்றிப் பிள்ளைகளின் ஆற்றல்கள் தேசிய முன்னேற் றத்துக்காகப் பயன்படுத்தப்படாது விரயம் செய்யப்பட்டன.

அரசாங்க நன்கொடையாலும் பொருளாதார பலம் மிக்க வர்களால் வழங்கப்பட்ட கட்டணங்களாலும் ஆங்கிலப் பாட சாலைகள் சிறந்த பாடசாலைகளாக உருவாயின. அவை சிறந்த கட்டிடங்களையும் சிறந்த உபகரணங்களையும் சிறந்த ஆசிரியர் களையும் கொண்டனவாக விளங்கின. இப்பாடசாலைகள் காலம் காலமாகக் கட்டணங்களை அறவிட்டு வந்தன. இக்கட்டணங் களையும் பிற நன்கொடைகளையும் கொண்டு, சிங்கள, தமிழ் பாடசாலைகளால் அமைத்துக்கொள்ளமுடியாத அளவுக்குச் சிறந்த கட்டடங்களையும் உபகரணங்களையும் அவை கொண்டு விளங்கின. அப்பாடசாலைகளின் அதிபர்கள் மேற்கு நாடுகளி லிருந்து வந்தவர்களாகக் காணப்பட்டனர். சிங்கள, தமிழ் பாடசாலைகளிற் சேரும் ஆசிரியர்களைவிட ஆங்கிலப் பாடசாலை களிற் சேரும் ஆசிரியருக்கு அதிக தகுதிகள் தேவைப்பட்டன. ஆங்கில ஆசிரியர்கள் அதிகம் செலவு செய்து கல்வி பயின்ற தாலும், அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்து காணப் பட்டமையாலும் அவர்களுக்கு அதிக சம்பளங்களை வழங்க வேண்டியிருந்தது. ஆங்கிலப் பாடசாலைகளும் உயர்ந்த சம்ப ளங்களை வழங்க ஆயத்தமாக இருந்தமையாலே திறமைமிக்க ஆசிரியர்கள் அப்பாடசாலைகளிற் சேர்ந்துகொண்டனர்.[24] அர சாங்கமும் பொதுவாக இருமொழிப் பாடசாலைகளையும் சுய மொழிப் பாடசாலைகளையும் விட ஆங்கிலப் பாடசாலைகளையே கூடிய அளவுக்கு ஆதரித்தது. ஆங்கிலப் பாடசாலைகளில் ஒரு ஆசிரியருக்கு இருபது மாணவர்களும் இருமொழிப் பாடசாலை களில் முப்பது மாணவர்களும் சுயமொழிப் பாடசாலைகளில் நாற்பது மாணவர்களும் காணப்பட்டனர். ஓர் ஆண்டுக்கு ஒரு மாணவனுக்கான அரசாங்கச் செலவு ஆங்கிலப் பாடசாலை மாணவர்களுக்குச் சார்பானதாகவே அமைந்து காணப்பட் டது. (ஆங்கிலப்பாடசாலை ரூ. 36-00, இருமொழிப்பாடசாலை ரூ. 25-08, சுயமொழிப்பாடசாலை ரூ. 18-70). எனவே பெரும்

பான்மை மாணவர்களைப் பொறுத்தவரையில் அரசாங்கப் பணம் பாரபட்சமான முறையில் ஆங்கிலப் பாடசாலைகளுக்கே கூடுதலாகச் செலவுசெய்யப்பட்டது.[25]

ஆங்கிலப் பாடசாலைகள் உயர்தரமான கல்வியை வழங்கிய சிறந்த கல்விக் கூடங்களாயும் எதிர்கால வாழ்க்கையிற் பொருளாதார, அதிகார பலத்தை வழங்குவனவாயும், சமுதாயத்திலிருந்த சலுகை பெற்ற வகுப்பினருக்குரியனவாயும் விளங்கியவிடத்து, சிங்களப் பாடசாலைகளும் தமிழ்ப் பாடசாலைகளும் இவை எல்லாவற்றிலும் நேர்மாருன இயல்புகளைக் கொண்டனவாக விளங்கின. பொதுவாகப் பிறநாடுகளிற் பாடசாலைகள் ஆரம்பப்பாடசாலைகளாகவும் இடைநிலைப் பாடசாலைகளாகவுமே பிரிக்கப்பட்டிருக்கும். ஆனல் இலங்கையில் அவை போதனு மொழி அடிப்படையில் ஆங்கிலப் பாடசாலைகளாகவும் சுயமொழிப் பாடசாலைகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. எல்லாச் சுயமொழிப் பாடசாலைகளும் சுதந்திரத்துக்கு மிக அண்மைக்காலம் வரை ஆரம்பப் பாடசாலைகளாகவே விளங்கி வந்தன. எழுத்து, வாசிப்பு, எண் முதலியவற்றுடன் சிறிதளவு முன்னேற்றமான கல்வியையே அவை கற்பித்து வந்தன. நவீன கல்வியைக் கற்பித்த ஆங்கிலப் பாடசாலைகளை விட அவை எல்லாவிதத்திலும் தரத்திற் குறைந்தவையாகக் காணப்பட்டண.[26] சுயமொழிக் கல்விக்கான வசதிகள் மிகவும் பின்தங்கிக் காணப்பட்ட அதே வேளையில் அக்கல்வியைப் பெறுவதற்கான ஊக்கம் ஆங்கிலக் கல்விக்கு வழங்கப்பட்டது போன்று வழங்கப்படவில்லை. பாடசாலை சென்ற மாணவர்களில் 80 வீதத்துக்கும் அதிகமானவர்கள் சுயமொழிப் பாடசாலைகளுக்கே சென்ற போதிலும் அவர்களில் மிகக் குறைந்த வீதமானவர்களே ஆரம்பப் பின்னிலை (Post Primary) வகுப்புக்களிற் கல்வி பயின்றனர் என்பதைப் பின்வரும் புள்ளி விபரங்கள் காட்டும்.[27]

	மாணவர் தொகை 1943	1944
ஆரம்பநிலை	594,031	606,209
ஆரம்பப் பின்னிலை	62.991	60,802

குறைந்த வீதமானவர்கள் ஆரம்பப் பின்னிலைக் கல்வியைப் பெற்றதையும் அதனல் கல்வித்துறையில் கணிசமான அளவுக்கு விரயம் (wastage) ஏற்பட்டதையும் இப்புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.[28] 1943ஆம் ஆண்டைவிட 1944ஆம் ஆண்டில் ஆரம்ப நிலை மாணவர்களின் தொகை அதிகரித்திருந்த போதிலும், ஆரம்பப் பின்னிலை மாணவர்களின் தொகை குறைந்திருப்பது

குறிப்பிடத்தக்கது. அரசாங்கத்தின் குடியேற்ற நாட்டுச் சார்பான மொழிக் கொள்கையின் விளைவாக, சிங்களம் தமிழ் ஆகிய மொழிகளில் ஆரம்பப் பின்னிலைக் கல்வியைப் பயிலுவதாற் சமூக, பொருளாதார நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பதாலேயே இந்நிலை ஏற்பட்டது. சுயமொழிகளில் இத்தகைய முன்னேற்றமான கல்வியைப் பயிலுபவர்கள் ஆசிரியர் சேவையில் மட்டுமே சேரக்கூடியதாக இருந்தது.[29] நாட்டின் பொருளாதார நிலை சுயமொழிகளில் உயர்கல்வி பெறுவதை ஊக்குவிக்காது அம்மொழிகளிற் கல்வி பயிலுவதைத் தடைசெய்வதாக அமைந்திருந்தது. ''பாடசாலை மாணவர்களிற் பெரும்பாலோர் நாட்டில் வழக்கிலிருந்த சட்டங்களின் படி குறைந்த பட்சக் கல்வியை முடித்துக்கொண்டு தமது குடும்பங்களின் சீவனோபாயத்துக்காக உழைக்கச் சென்றுவிட, பாடசாலையிலே தொடர்ந்து பயிலுபவர்கள் தமது பெற்றோர்களுக்கு ஒரு சுமையாகவே விளங்கினர்.[30] சிங்கள தமிழ் பாடசாலைகளில் ஐந்தாம் வகுப்பிற் சித்தியடைந்த மாணவர்களில் 64 வீதமானவர்களே ஆரம்பப் பின்னிலைக் கல்வி பெறச் சென்றனர். அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு உயர் வகுப்பிலும் அவர்களுடைய எண்ணிக்கை குறைந்து சென்றது. ஆரம்பப் பின்னிலைக் கல்விபெறச் சென்ற மாணவர்களிற் சிரேட்ட தராதரப் பத்திர வகுப்புவரை சென்ற மாணவர்களின் வீதம் பின்வருமாறு.[31]

	ஆண்கள் வீதம்	பெண்கள் வீதம்
சிங்களப் பாடசாலைகள்	11	25
தமிழ்ப் பாடசாலைகள்	30	15

பொருளாதார, சமூக அந்தஸ்தை உயர்த்துவதற்குரிய பயன்படாத நிலையிற் சுயமொழிக்கல்வி இத்தகைய சீர்கேட்டினை அடைய நேரிட்டது.

சமூக அமைப்பிற் காணப்படும் சமூக வகுப்பு வேறுபாடுகளைக் களைவதில் அல்லது குறைப்பதிற் கல்வி ஒரு முக்கிய கருவியாகத் தொண்டாற்றி ஆகக்கூடுதலான சமூகப் பெயர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமாயின் எல்லாச் சமூக வகுப்பினரும் எல்லாக் கல்வி நிலைகளிலும் சேர்ந்து பயிலச் சமவாய்ப்பு இருக்க வேண்டும். ஆனுல் இலங்கையில், பொருளாதார வசதியுள்ள

வர்கள் எதிர்காலத்திற் புதிய வாய்ப்புக்களைத் தரக்கூடிய தரமான ஆங்கிலக் கல்வியையும், ஏழ்மை நிலையிலிருந்தவர்கள் அத்தகைய வாய்ப்புக்களைத் தந்துதவாத, தரத்திற் குறைந்த சுயமொழிக் கல்வியையும் பெற நேர்ந்தமையால், ஏற்கனவே சாதிப் பாகுபாடுகளாற் பீடிக்கப்பட்டுப் பொருளாதார அடிப் படையிற் சமூக வகுப்புக்களாகப் பிரிக்கப்பட்டிருந்த ''சமூக அமைப்பில், ஒரு புதிய சமூக வேறுபாடு புகுத்தப்பட்டு மேலும் சிக்கல்கள் தோற்றுவிக்கப்பட்டன.[32]'' செல்வந்த வகுப்பினர் களுக்கு எதிர்காலத்தில் மேலும் செல்வத்தையும் அதிகாரத் தையும் அந்தஸ்தையும் பெற்றுக்கொள்வதற்கான அடிப் படையை அமைப்பதாக ஆங்கிலப் பாடசாலைகள் விளங்கிய மையால், அவை சமூக அநீதிக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கின. மேற்கு நாட்டு ஆதிக்கம் இந்நாட்டில் ஏற்படுத்திய ஒரு முக்கிய விளைவு மேற்கத்தைய கல்வி பயின்ற கற்றோர் வகுப்பினரின் (western - educated elite) தோற்றமாகும். அர சாங்க சேவை உயர் தொழில்கள் அரசியல் முதலிய துறைகளில் அவர்களே சகல வாய்ப்புக்களையும் பெற்றுக்கொண்டனர்.[33] இவ்வகுப்பினருக்கும் பொதுமக்களுக்கு மிடையிலிருந்த வேறு பாடு எல்லாக் கீழைத்தேய சமுதாயங்களுக்குமே பொதுவான தாகக் காணப்பட்டது. ஆங்கிலம் கற்ற வகுப்பினருடைய தொகை மிகவும் குறைவாகவே காணப்பட்டது. 1914ஆம் ஆண்டில் நாட்டில் வாழ்ந்த 40 இலட்சம் மக்களில் 1 சதவீத மானவர்கள் ஆங்கிலம் பேசுவோராக இருந்தனர்.[34] 1921இல் மொத்த மக்கள் தொகையில் 3·7 வீதமானவர்களும், 1946இல் 7 வீதமானவர்களும் 1953இல் 10 வீதமானவர்களும் ஆங்கிலம் பேசுவோர்களாக விளங்கினர்.[35] 1921ஆம் ஆண்டுக்கும் 1946ஆம் ஆண்டுக்குமிடையில் ஆங்கிலம் கற்றவர்களின் தொகை இரண்டு மடங்காக அதிகரித்தது. சுயமொழிப் பாடசாலைகளின் தொகையும் மாணவர்களின் தொகையும் ஆங்கிலப் பாடசாலை களின் தொகையையும் மாணவர்களின் தொகையையும் விடப் பன்மடங்கு அதிகமாக இருந்தது. 1929ஆம் ஆண்டிற் பாட சாலை சென்ற மாணவர்களில் 89·76 வீதமானவர்கள் சுய மொழிப் பாடசாலைகளுக்கே சென்றனர்.[36] பின்வரும் புள்ளி விபரம் 1930ஆம் ஆண்டு தொடக்கம் 1946ஆம் ஆண்டு வரை யுள்ள காலப்பகுதியில் ஆங்கில, இருமொழி, சுயமொழிப் பாடசாலைகளின் தொகையையும் அவ்வப்பாடசாலைகளுக்குச் சென்ற மாணவர்கள் தொகையையும் எடுத்துக் காட்டும்.[37]

ஆண்டு	ஆங்கிலப்பாடசாலைகள்	ஆங்கிலப் பாடசாலை மாணவர்	இருமொழி பாடசாலைகள்	இருமொழிப் பாடசாலை மாணவர் தொகை	சுயமொழிப் பாடசாலை	சுயமொழிப் பாடசாலை மாணவர் தொகை
1930	280	61,397	46	11,010	3535	4,69,200
1932	295	63,596	54	13,577	3654	4,95,399
1934	301	60,865	58	13,095	3808	5,34,487
1936	322	67,253	67	15,862	4236	5,88,711
1938	330	76,915	72	18,605	3638	6,04,130
1944	354	1,01,029	62	15,194	4146	6,67,032
1946	365	1,16,385	43	13,504	4441	7,52,282

சிறுபான்மையினருக்கு ஆங்கிலக் கல்வியையும் பெரும்பாலானவர்களுக்குச் சுயமொழிக் கல்வியையும் வழங்குவதை வலியுறுத்திய குடியேற்ற நாட்டுக் கல்விக் கொள்கை இப்புள்ளி விபரங்களினுற் பிரதிபலிக்கப்படுகின்றது. இத்தகைய கல்வி முறையினுல் ஏற்பட்ட சமூகப் பிரிவுகள் பற்றி அரசாங்க சபை உறுப்பினர் ஒருவர் பின்வருமாறு கூறினுர்: ''மொழி அடிப்படையில் வேறுபட்டு அமைந்துள்ள எமது கல்விமுறை இரண்டு வேறுபட்ட நாடுகளேயே ஏற்படுத்தி விட்டது. ஒரு நாடு சிங்களத்தையும் தமிழையும் கற்றுச் சிங்களத்தையும் தமிழையும் பேசி வருகின்றது. இன்னெரு நாடு ஆங்கிலத்தைக் கற்று ஆங்கிலத்தையே பேசி வருகின்றது. இந்நாட்டில் நடைபெற்று வந்த பிரித்தானிய ஆட்சிமுறையின் மிகவும் குறைபாடான அம்சம் இதுவாகும். எங்களுடைய மாணவர்களில் 95 வீத மானவர்கள் தமது தாய்மொழியிற் கல்வி கற்றமையால் ஆங்கில மொழிமூலம் நடாத்தப்படும் அரசாங்கத்தில் எதுவித பங்கும் கொள்ள முடியாதுள்ளனர். எங்களுடைய பாடசாலைகளில் 5 வீதமானவை மட்டுமே ஆங்கில மொழிமூலம் கற்பிக்கின்றன. அங்கிருந்து கற்று வெளியேறுபவர்கள் பொதுமக்களுடன் எதுவிதத் தொடர்பற்றவர்களாகவும் தங்களுடைய வரலாற்றையும் பழக்க வழக்கங்களேயும் அறியாதவர்களாகவும் காணப்படுகின்றனர்.[38]

1943ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட விசேட கல்விக் குழுவினரின் அறிக்கை, போதனுமொழி அடிப்படையில் இருவகையான கல்விமுறை நிலவியதாற், சமூக அமைப்பில் ஆங்கிலம் கற்றவர், சுயமொழி கற்றவர் என்ற இரு வேறுபட்ட வகுப்பினர் தோன்றி, அவர்களில் ஆங்கிலம் கற்ற வகுப்பினர் சலுகை பெற்றவர்களாக இருந்ததை ஒரு குறைபாடாக ஏற்றுக் கொண்டது. அத்துடன் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும்

தாய்மொழியே இயற்கையான சிறந்த போதனுமொழி என்பதையும் ஏற்றுக்கொண்டது. இருவகைப் பாடசாலைமுறை கல்வித்துறையில் நிலவிய சமவாய்ப்பின்மையைப் பிரதிபலித்தது என்பதையும் குழு சுட்டிக் காட்டியது.[39] இக் குறைபாடுகளைப் போக்குவதற்கு ஒரு வழியாகக் குழு எல்லாப் பாடசாலைகளிலுங் கல்வி இலவசமாக வழங்கப்பட வேண்டுமென்று விதந்துரைத்தது. மூன்றாம் நிலைக் கல்வி வழங்கும் உயர்கல்வி நிலையங்களிலும் இலவசக்கல்வி இடம்பெற வேண்டும் என்று குழு விதந்துரைத்தது.[40] ஆற்றல்களும் திறன்களும் ஒரு குறிப்பிட்ட சமூக வகுப்புக்கோ அல்லது குழுவுக்கோ உரியன அல்ல; எச்சமூக அமைப்பும் அவை வெளியிடப்படுவதற்கு ஏதுவாகக் கல்வித்துறையிற் சமவாய்ப்புக்களை வழங்கவேண்டும்[41] என்னும் கருத்தைக் குழு ஏற்றுக்கொண்டது. சுதந்திரத்துக்கு முன் 1945ஆம் ஆண்டில் அரசாங்க சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இலவசக் கல்வித் திட்டம் 1951ஆம் ஆண்டளவில் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டு அக்காலந் தொடக்கம் இலங்கையின் கல்வி வளர்ச்சிக்கான அடித்தளத்தை அமைத்தது. இன்னும்கூட எல்லாப் பிள்ளைகளுக்கும் சிறந்த கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் கிடைத்துவிட்டதாகக் கூற முடியாதெனினுஞ் சிறந்த முன்னேற்றங் காணப்பட்டுள்ளதை மறுக்க முடியாது. அத்துடன் கல்வித்துறையிற் சமவாய்ப்புக்களை வழங்குவதைப் பொறுத்த வரையில் இலங்கையை வேறு எந்த அபிவிருத்தியுறுகின்ற ஆசிய நாட்டுடனும் ஒப்பிட முடியுமா என்பது ஐயத்துக்குரியதாகும்.[42]

இலவசக் கல்விமுறை நடைமுறைக்கு வருவதற்கு முன்பே அரசாங்கப் பாடசாலைகளும் உதவிபெறும் பாடசாலைகளும் சுயமொழிக் கல்வியை இலவசமாக வழங்கி வந்தன. இலவசக் கல்விமுறை, கட்டணம் அறவிட்டு வந்த அரசாங்க உதவி பெறும் ஆங்கிலப் பாடசாலைகளையும், பல்கலைக்கழகம், தொழில் நுட்பப் பாடசாலை ஆகிய கல்வி நிலையங்களையும் சுயமொழிப் பாடசாலைகள் போன்று இலவசக் கல்வியை வழங்கும் நிலைக்குக் கொண்டு வந்தது. எனவே, ஏழ்மையான பிள்ளைகள் ஆங்கிலக் கல்வி பெறுவதிலிருந்த பொருளாதாரத் தடைகள் ஓரளவுக்கு நீக்கப்பட்டன. சுயமொழிக் கல்வி பெற்ற பெரும்பாலான மாணவர்கள் ஏற்கனவே இலவசமாகக் கல்வி பெற்றமையால் இலவசக் கல்வி முறை அரசாங்கத்தின் கல்விச் செலவிற் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தவில்லை. இலவசக்கல்வி கல்விக் கட்டணமில்லாத கல்வி என்ற முறையிலேயே நடைமுறைப் படுத்தப்பட்டமையால் ஏழ்மையான பிள்ளைகளின் நிலை தீவிர

மாற்றமடைந்ததாகக் கூறமுடியாது. இலவசக் கல்விமுறை, போதனுமொழி அடிப்படையிற் குறைபாடுகள் நிறைந்து காணப் பட்ட இருவகைப் பாடசாலே முறையில், ஆங்கிலக்கல்வி பெறும் வாய்ப்புக்களே ஓரளவுக்கு விரிவுபடுத்திய விடத்து, சுதந்திரத் தின் பின்னரும் அவ்விருவகைப் பாடசாலேமுறை நீடித்து நிலவியது.

கல்வித்துறையில் வழங்கப்பட்ட புதிய வாய்ப்புக்களே மக்கள் உற்சாகத்துடன் பயன்படுத்த முற்பட்டமையால் ஆங்கிலப் பாடசாலேகளில் அனுமதியை நாடும் பிள்ளேகளின் எண்ணிக்கை அதிகரித்தது. அரசாங்க ஆங்கிலப் பாடசாலே களிலும் உதவிபெறும் ஆங்கிலப் பாடசாலேகளிலும் மாணவர் களின் தொகை அதிகரித்து, அனுமதியைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலே ஏற்பட்டது. சுயமொழிப் பாடசாலேகளிலிருந்த ஆரம்பப் பின்னிலேப் பிரிவுகள் தளர்ச்சியுற்று அவற்றிற் சில மறையத் தொடங்கின. புதிய பாடசாலேகள் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளும் எழ ஆரம்பித்தன. இலவசக் கல்வி முறையைக் காரணமாகக் கூறி ஆங்கிலப் பாடசாலேகள் அமைக்கப்படவேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது. எனவே 1945ஆம் ஆண்டில் ஆங்கில அரசாங்கப் பாடசாலேகளின் தொகை 15 ஆக இருந்து, 1950ஆம் ஆண்டில் 289 ஆக அதி கரித்தது. 1945ஆம் ஆண்டில் 5 — 14 வயதுக்கிடைப்பட்ட பிள்ளேகளில் 50 வீதமானவர்கள் ஆங்கிலக் கல்வியையும் சுய மொழிக்கல்வியையும் கற்றனர். 1949ஆம் ஆண்டு இவ்வீதம் 63 ஆக அதிகரித்தது.[43] உண்மையில் விசேட கல்விக்குழு குறை பாடுடைய இருவகைப் பாடசாலே முறை அப்படியே இருக்கத் தக்கதாக, இலவசக் கல்வி முறையின் மூலம் கல்வியை விரிவு செய்ய முற்பட்டது. பொருளாதார வசதிகள் உள்ளவர்களுக் குத்தான் பயனுள்ள ஆங்கிலக்கல்வி கிடைக்கும் என்ற நிலேயில் ஓரளவு மாற்றம் ஏற்பட்டதெனினும் ஆங்கிலம் கற்றவர்கள் சுயமொழி கற்றவர்கள் என்ற இரு வகுப்பினரின் தொகை மேலும் அதிகரிப்பதில் மாற்றம் நிகழவில்லே. ஆங்கிலக் கல்வியை வருமானங் குறைந்தவர்களுக்கு விரிவு செய்யும் உற்சாகத்திற் சமூக அமைப்பிற் புதிய சமூகப் பிரிவுகள் வளர்ச்சியுறுவதைத் தடுக்கும் முயற்சி தளர்ச்சியடைந்தது. பின்வரும் புள்ளி விபரம் 1944ஆம் ஆண்டு தொடக்கம் 1960ஆம் ஆண்டுவரை ஆங்கிலக் கல்வியும் சுயமொழிக் கல்வியும் விரிவடைந்ததைக் காட்டும்.[44]

ஆண்டு	ஆங்கிலப்பாடசாலைகள்	ஆங்கிலப் பாடசாலை மாணவர் தொகை	இருமொழிப்பாடசாலைகள்	இருமொழிப் பாடசாலை மாணவர் தொகை	சுயமொழிப் பாடசாலைகள்	சுயமொழிப் பாடசாலை மாணவர் தொகை	தோட்டப் பாடசாலைகள்	தோட்டப் பாடசாலை மாணவர் தொகை
1944	354	1,01,029	62	15,194	4146	6,67,032	918	43,896
1946	365	1,16,385	43	13,505	4441	7,52,282	850	35,886
1948	623	2,29,064			4645	9,00,907	968	51,451
1950	647	2,59,356			4681	10,33,837	945	59,475
1952	659	2,87,646			4843	11,26,110	934	66,089
1954	670	3,12,543			5072	12,18,959	890	66,280
1956	679	3,24,739			5303	13,02,834	884	69,918
1958	754	4,13,278			5798	14,76,817	879	
1960	779	5,00,506			6207	16,13,140	874	

1934ஆம் ஆண்டில் ஆங்கிலப் பாடசாலை மாணவர்களின் தொகை 1932ஆம் ஆண்டைவிட 4 வீதத்தால் அதிகரித்திருந்தது. ஆனல் 1954ஆம் ஆண்டில் அம்மாணவர்களின் தொகை 1952ஆம் ஆண்டைவிட 8 வீதத்தால் அதிகரித்தது. தொகையளவில் 1938ஆம் ஆண்டில் ஆங்கிலப் பாடசாலை மாணவர்களின் தொகை 1936ஆம் ஆண்டைவிட 9662 ஆல் அதிகரித்தவிடத்து, 1948ஆம் ஆண்டில் அம்மாணவர்களின் தொகை 1946ஆம் ஆண்டைவிட 1,12,679ஆல் அதிகரித்தது. இது இலவசக்கல்வி முறையால் ஆங்கிலக் கல்வி பெறுவதற்கான வாய்ப்புக்கள் விரிவடைந்ததைக் காட்டும்.

இலவசக் கல்வி நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் சுய மொழிக் கல்வி பயிலும் மாணவர்களின் தொகையிலேற்பட்ட அதிகரிப்பு ஆங்கிலக்கல்வி பயிலும் மாணவர் தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பைவிடப் பன்மடங்காக இருந்தது. 1936ஆம் ஆண்டில் ஆங்கிலப் பாடசாலை மாணவரின் தொகை 1934ஆம் ஆண்டைவிட 6,388ஆல் அதிகரித்தவிடத்து, அதே காலப் பகுதியிற் சுயமொழிக் கல்வி பயிலும் மாணவர் தொகை 54,224ஆல் அதிகரித்திருந்தது. ஆனல் இலவசக்கல்வி நடைமுறைப் படுத்தப்பட்டபோது 1948ஆம் ஆண்டில் ஆங்கிலப் பாடசாலை மாணவர்களின் தொகை 1946ஆம் ஆண்டை விட 1,12,679ஆல் அதிகரித்தவிடத்து, அதே காலப்பகுதியிற் சுயமொழிக் கல்வி பயிலும் மாணவர் தொகை 54,224ஆல் அதிகரித்திருந்தது. ஆனல் இலவசக்கல்வி நடைமுறைப்படுத்தப்பட்டபோது, 1948 ஆம் ஆண்டில் ஆங்கிலப் பாடசாலை மாணவர்களின் தொகை 1946ஆம் ஆண்டை விட 1,12,679ஆல் அதிகரித்தவிடத்து அதே காலப்பகுதியிற் சுயமொழிப் பாடசாலை மாணவர் தொகை 1,48,625ஆல் மட்டுமே அதிகரித்தது. மேலும்

1944ஆம் ஆண்டில் ஆங்கிலப் பாடசாலை மாணவர் சுயமொழிப் பாடசாலை மாணவர் விகிதம் ஏறத்தாழ 1 : 6 என்று இருந்து 1956இல் 1 : 4 ஆக மாற்றமுற்றது.

இப்புள்ளி விபரங்கள் இலவசக் கல்விமுறையின் விளைவாகப் பாடசாலை செல்லும் மாணவர்களின் வீதம் அதிகரித்ததைக் காட்டும் அதேவேளையில், ஆங்கிலக் கல்வி சுயமொழிக் கல்வியை விட வேகமாக விரிவடைந்ததையும் காட்டுகின்றது. கல்வி முறையில் இருந்த குறைபாடு, ஆங்கிலக் கல்வி யாவருக்கும் கிடைக்கத்தக்கதாக இருக்கவில்லை என்பது மட்டுமல்ல, போதனு மொழி அடிப்படையிற் கல்விமுறை பிரிவுபட்டு அமைந்திருந் தமையாற் சமூக அமைப்பில் எழுச்சியுற்ற புதிய சமூக வகுப்புப் பிரிவுகளும் ஒரு முக்கிய குறைபாடாகவே எடுத்துக் கூறப் பட்டன. போதனுமொழியை எல்லாக் கல்வி நிலைகளிலும் மாற்ருது இலவசக் கல்விமுறை அமுலுக்குக் கொண்டுவரப் பட்டமையால் ஆங்கிலத்தையும் சுயமொழிகளையும் கற்ற இரு வெவ்வேறு ''நாடுகள்'' சுதந்திரத்தின் பின்னரும் வளர்ச்சி யுறுவது தவிர்க்க முடியாததாயிற்று. இலவசக் கல்வி முறையி ஞல், ஆங்கிலக் கல்வியை நாடிய யாவருக்கும் அது கிட்டிய தாகக் கூறுவதற்கில்லை. சுயமொழிக் கல்வி பயிலும் மாணவர் களின் தொகை 1945ஆம் ஆண்டின் பின்னர் அதிகரித்துச் சென்றதைக் காட்டும் புள்ளி விபரம் இதற்குத் தக்க சான் ருகும். 1946ஆம் ஆண்டில் 6,67,032 ஆக இருந்த சுயமொழிப் பாடசாலை மாணவர் தொகை, 1956இல் 13,02,834 ஆக அதிகரித்தது. இலவசக் கல்வி முறை நடைமுறையிலிருந்த போதிலும் இக்காலப்பகுதியிற் புதிதாகச் சேர்ந்த 6,35,802 மாணவர்கள் அவ்வசதியைப் பயன்படுத்தி ஆங்கிலப் பாடசாலை களிற் சேரமுடியாதிருந்தது. ஆங்கிலத்தின் முக்கியத்துவம் இக்காலப் பகுதியிலே தொடர்ந்து நிலைபெற்றிருந்ததாதலால், அவர்கள் விரும்பிச் சுயமொழிப் பாடசாலைகளிற் சேர்ந் திருப்பர் என்று கொள்ளமுடியாது.

இலவசக்கல்வி நடைமுறைக்கு வருமுன்னரே சுயமொழிப் பாடசாலைகள் இலவசமாகக் கல்வி வழங்கி வந்தன. உயர்தர மான ஆங்கிலக் கல்வியை வழங்கிய பாடசாலைகள் கட்டணம் அறவிட்டு வந்தன. 1945ஆம் ஆண்டில் இலவசக் கல்விக் கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டதும் உடனடியாக ஏற்பட்ட விளைவு என்னவெனில், இதுவரை ஆங்கிலக் கல்வியைப் பெறக் கட்டணம் செலுத்தி வந்த பொருளாதார வசதியுள்ள வகுப் பினர் இதன் பின் அதே கல்வியை இலவசமாகப் பெற்றமை யாகும். நீண்டகாலமாக இலவசமாக வழங்கப்பட்டு வந்த

தரம் குறைந்த கல்வியையே வசதி குறைந்த வகுப்பினர் தொடர்ந்து பெற்றுவர நேரிட்டது.[45] எனவே போதனுமொழி அடிப்படையிலான குறைபாடுகள் நிறைந்த இருவகைப் பாடசாலே முறை நீடித்து நிலவ நேரிட்டது.

இலங்கையின் கல்விமுறையிலிருந்த இம் முக்கிய குறைபாட்டைப் போக்குவதற்கு எல்லாப் பாடசாலேகளிலும் சுயமொழிகளேப் போதனுமொழிகளாக்க வேண்டியிருந்தது. போதனுமொழி மாற்றம் நடைபெற்றபோது ஆங்கிலத்திற்குப் பதிலாகச் சிங்களத்துக்கும் தமிழுக்கும் இடமளிக்கப்பட்டது. ஆரம்பநிலே, இடைநிலே, உயர்நிலே ஆகிய மூன்று கல்வி நிலேகளிலும் படிப்படியாக ஆங்கிலம் நீடிக்கப்பட்டபோது சிங்களத்துக்கும் தமிழுக்கும் இடமளிக்கப்பட்டது. ''தேசிய நோக்கில் ஆங்கிலம் போதனு மொழியாக அமைவது ஒரு தவருன தெரிவு'' என்றும் ''தாய்மொழிக்கு நாம் அளிக்கும் பெரும் முக்கியத்துவத்தை ஒரு சிறுபான்மையினருக்காகக் கைவிட ஆயத்தமாயில்லே'' என்றும் கூறிய விசேட கல்வி ஆணைக்குழு (1943) ஆரம்பப் பாடசாலேயிலே தாய்மொழியே போதனு மொழியாக இருக்க வேண்டும் என்று விதந்துரைத்தது. மூன்ரும் வகுப்பிலிருந்து ஆங்கிலம் கட்டாய இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்பட வேண்டுமென்றும் குழு விதந்துரைத்தது.[46] இவ்விதப்புரைகள் அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப் பட்டன.

விசேட கல்விக் குழுவின் அறிக்கை எழுதப்பட்டு பிரசுரிக்கப் பட்டபோது அரசாங்க சபை சிங்களமும் தமிழும் அரசகரும மொழிகளாகுதல் வேண்டும் என்று தீர்மானிக்கவில்லே. எனவே, குழு அரசாங்க மொழி ஒன்ருக இருக்க, கல்வி நிலேயங்களிற் போதனுமொழி வேருென்ருக இருப்பதால் எழக்கூடிய பிரச்சினேகளே எதிர்நோக்கியது. எல்லாவகையான கல்வி நிலேகளிலும் தாய்மொழியே போதனுமொழிகளாகிவிடும் என்பதை எதிர் பார்த்த விசேடகுழு ஆங்கிலம் நிர்வாக மொழியாக இருந்தமையால் அதனே யாவரும் கற்றல் வேண்டும் என்று விதந் துரைத்தது.

விசேட கல்விக் குழுவின் முக்கிய கொள்கைகள் அரசாங்க சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் எல்லாக் கல்வி நிலேகளிலும் தாய்மொழியைப் போதனுமொழியாக்கும் குறிக்கோள் அரசின் முக்கிய குறிக்கோளாக்கப்பட்டது. 1945ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 28ஆம் திகதியும் செப்டம்பர் மாதம் 20ஆந் திகதியும் அரசாங்கசபை உதவிபெறும் ஆங்கிலப் பாடசாலேகளுக்கான கல்விச் சட்டக் கோவையைத் **(Education Code)**

திருத்தி 1945ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஐந்தாம் வகுப்புவரை எல்லா வகுப்புக்களிலும் ஒவ்வொரு மாணவனுடைய தாய்மொழியும் போதனா மொழியாக அமைதல் வேண்டுமென்றும் மூன்றும் வகுப்புத் தொடக்கம் எல்லாப் பாடசாலைகளிலும் ஆங்கிலம் கட்டாய இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்பட வேண்டுமென்றும் விதித்தது. இதன் விளைவாகக் கடந்த 130 ஆண்டுகளாகக் கல்விமுறையிற் காணப்பட்டு வந்த முக்கிய குறைபாடு நீக்கப்பட்டது.[47] ஆரம்பநிலை வகுப்புக்களைப் பொறுத்தவரையில் 369 ஆங்கிலப் பாடசாலைகள் 5,436 சிங்கள தமிழ்ப் பாடசாலைகளின் நிலைக்குக் கொண்டுவரப்பட்டன.

தேசிய மொழிகளைப் பொறுத்தவரையிற் கல்வித்துறையிலே திட்டவட்டமான மாற்றங்கள் ஏற்பட்டவிடத்து அரசியற்றுறையிற் சுயமொழி இயக்கம் தேசிய விழிப்புணர்ச்சியின் வளர்ச்சியை ஊக்குவித்தது. 1932ஆம் ஆண்டில் அரசாங்க சபையால் ஆரம்பித்த இயக்கத்தின் விளைவாகச் சிங்களத்தையும் தமிழையும் நாட்டின் அரசகரும மொழிகளாக்குவதுபற்றி ஆராய ஓர் அரசாங்கசபைத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டது. இக்குழு சமர்ப்பித்த அறிக்கையை விவாதிக்கு முன்னர் அரசாங்கசபை கலைக்கப்பட்டது.

1947ஆம் ஆண்டில் நாடு சுதந்திரமடைந்ததும் புதிய யுகமொன்று ஆரம்பமாயிற்று. இந்தியா இந்தி மொழியைத் தேசிய மொழியாகப் பிரகடனம் செய்தது. பர்மாவும் இந்தோனேசியாவும் தத்தம் தேசிய மொழிகளைப் பொறுத்தவரையில் இதேபோன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்தன. ஒரு சுதந்திரமடைந்த சனநாயகநாடு அந்நிய மொழியைப் பயன்படுத்துவது மக்கள் பெற்றுக்கொண்ட புதிய அந்தஸ்துக்கு முரண்பட்டதாக இருந்தது. தேசிய நிறுவனங்களுக்கும் தேசிய மொழிகளுக்கும் புத்துயிர் அளிக்க வேண்டும் என்ற மக்கள் கோரிக்கை வலுப்பெற்றது. இக்கோரிக்கை நியாயமானதாகவும் முறையானதாகவும் இயல்பானதாகவும் விளங்கியது. மக்கள் தொகையில் 6 வீதமானவர்களே ஆங்கிலத்தை விளங்கிக்கொள்ளக் கூடியவர்களாகவும், எஞ்சிய 94 வீதமானவர்களும் நாட்டின் சமூக, அரசியல், கல்வித் துறைகளில் என்ன நடக்கின்றது என்பதை அறியாதவர்களாகவும் இருந்த நிலையில் இம்மொழிக் கோரிக்கை தவிர்க்க முடியாததாக இருந்தது.

1951ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ஆம் திகதி கல்வி அமைச்சர் ஆறும், ஏழாம், எட்டாம் வகுப்புக்களில் முறையே 1953, 1954, 1955ஆம் ஆண்டுகள் தொடக்கம் தாய் மொழியே போதனாமொழியாக அமைய வேண்டுமென்று விதித்தார். எனவே, இதுவரை ஐந்தாம் வகுப்புத் தொடக்கம் சி. பா. த. ப.

வகுப்புவரை ஆங்கிலத்தைப் போதனுமொழியாகக் கொண்டிருந்த நகரப் பாடசாலைகள் கட்டாயமாகத் தேசிய மொழிகளைப் போதனு மொழிகளாக்க வேண்டியதாயிற்று. இவ்விதி உண்மையில் ஆங்கிலத்திற் கல்விகற்ற 6 சதவீதமான பிள்ளைகளையே பாதித்தது.[48] உண்மையிலே தேசிய மொழிகளைப் போதனுமொழிகளாக மாற்றும் பிரச்சினையை ஒரு சில நகரப்புறப் பாடசாலைகளே எதிர்நோக்கின.

1945ஆம் ஆண்டில் இலங்கையில் ஆரம்பநிலைக் கல்வி நிலையிலே தொடங்கிய போதனுமொழி மாற்றம் 1960இல் பல்கலைக்கழக நிலைவரை முன்னேறிச்சென்ற போதிலும் இன்னும் அது முழுமை பெற்று விடவில்லை.[49] உயர்கல்வியையும் வேலை வாய்ப்புக்களையும் பொறுத்தவரையிலே தேசிய மொழிகள் நடைமுறையில் முழு இடத்தையும் பெற்றுவிடவில்லை. போதனு மொழி மாற்றம் முக்கியமாக நாட்டிலிருந்த 10 சத வீதத்துக்கும் குறைந்த ஆங்கிலப் பாடசாலைகளுக்கும் அப் பாடசாலைகளுக்குச் செல்லும் பிள்ளைகள் சார்ந்திருந்த வசதி படைத்த சமூக வகுப்புக்களுக்கும் எதிரான ஒரு போராட்டமாகவும், போதனுமொழி அடிப்படையிலான குறைபாடுகள் நிறைந்த இருவகைப் பாடசாலை முறையினுற் கல்வித் துறையிலும் சமூகத் துறையிலும் ஏற்பட்ட அநீதிகளைக் களைந்தெறியும் இயக்கமாகவும் விளங்கியது. சலுகை பெற்ற சிறுபான்மை வகுப்பினர் ஆங்கிலக் கல்வியின் மூலம் பொருளாதார, சமூக அந்தஸ்தை உயர்த்திக் கொள்வதற்கும் உயர்கல்வி பெறுவதற்கும் இருந்த வாய்ப்புக்கள் சுயமொழிக்கல்வி கற்றவர்களுக்குக் கிடைக்கப் பெருமையால் ஏற்பட்ட குறைபாடுகளைப் போக்கும் ஒரு முக்கிய கல்விச் சீர்திருத்தமாகவும் போதனுமொழி மாற்றம் விளங்கியது. இலவசக் கல்விமுறை யாவருக்கும் ஆங்கிலக்கல்வி கிடைப்பதை உறுதிப்படுத்தாத போதிலும், உயர்கல்வி நிலையிற் படிப்படியாக ஏற்பட்ட போதனுமொழி மாற்றம் சுயமொழி கற்றவர்களுக்கு உயர்கல்வி பெறும் வாய்ப்பையும் உயர்கல்வித் தகுதிகளின் அடிப்படையில் வேலை வாய்ப்புக்களைப் பெறும் வசதிகளையும் வழங்கியதை மறுப்பதற்கில்லை. குடியேற்ற நாட்டாட்சியின்போது ஆங்கிலக்கல்வி பெறுவதற்கான வசதிகள் மிகச் சிறுபான்மையினருக்கே அளிக்கப்பட்டமையால் ஏற்பட்ட தீங்கான சமூக விளைவுகளும், பெரும்பாலானவர்கள் சுய மொழிகளிலேயே கல்வி கற்று வந்தமையும் ''பிள்ளைகள் கல்வி பெறச் சிறந்த போதனுமொழி தாய் மொழியே'' என்ற கல்வித்தத்துவ, உளவியல் ஆதாரங்களுடன் கூடிய உண்மை, போதனுமொழி மாற்றம் பற்றிய போராட்டத்திற் கொள்ள வேண்டிய பங்கின் முக்கியத்துவத்தைக் குறைத்து விட்டது.

அடிக்குறிப்புகள்

1. சுயமொழிகள் என்பன சிங்களம், தமிழ் ஆகிய இரு தேசிய மொழிகளையும் குறிக்கும்.
2. Ceylon, Colebrooke Commission Report, 1831 P. 31
3. Ibid P. 29
4. Ibid P. 30
5. Ceylon, Sessional Paper X 1956. Final Report of the Commission on Higher education in the National Languages P. 6
6. Mulder Wallace R. School For a New Nation, Colombo 1962 P· 32—33
7. Ceylon, Colebrooke Commission Report, 1831 P. 32
8. Ruberu, Ranjit T. "Church and State in Education in Ceylon: an historical survey" World Year book of Education 1966, London, 1966 P. 123
9. Ceylon Sessional Papers XXIV 1943. Report of the Special Committee on Education P. 22
10. Ceylon Sessional Paper X Op. Cit. P. 7
11. Ruberu, Ranjit, T. Education in Colonial Ceylon Colombo P. 253
12. Ceylon Sessional paper X 1956 Op. Cit P. 7
13. Ceylon Sessional Paper XXIV 1943. Op. Cit P. 40
14. Ceylon Sessional Paper XXII 1946 Report of Official Languages P. 11
15. Ibid P.11
16. Ceylon Sessional Paper X 1956 Op. Cit P. 19
17. Ceylon Sessional Paper XXIV 1943 Op. Cit. P. 22
18. Ceylon Sessional Paper X 1956 P. 16
19. Ibid P. 19
20. Ceylon Sessional Paper 1943 Op. Cit P. 23
21. Jayasuriya T. L. Education in Ceylon before and after independence 1939—1968. Colombo, 1969. P. 5
22. Ruberu, Ranjit T. 1966. Op. Cit. P. 121

23. Ceylon Sessional Paper XXIV 1943 P. 23
24. Ibid
25. Jayasuriya T. E. Op. Cit. P. 5
26. Mendis G. C. "Adult Franchise and Educational Reforms" University of Ceylon Review II 1—2 Oct. 1944 P. 39
27. Ceylon Administrative Report, 1944 Part IV P. A. 8
28. Ibid
29. Ceylon Administrative Report, 1945 Part IV P. A. 11
30. Ceylon Administrative Report, Part IV P. A. 5
31. Ibid
32. Arulnandhy K. S. Ceylon Year Book of Education 1952 London. 1952 P. 535
33. Wriggins, Howard. W. Ceylon, Dilemma of a new nation Princeton University Press, New Jersey, 1960. P. 30
34. Ames Mickal, M. The impact of Western Education on Religion and Society in Ceylon. Pacific Affairs, Vol. XL 1&2 1967. P. 31
35. Ibid
36. Mills, Lennex. A. Ceylon under British Rule 1975—1932 Colombo, 1964. P. 265
37. Ceylon Administrative Report 1930 Part IV P. A 45
„ „ „ 1932 Part IV P. A 61
„ „ „ 1934 Part IV P. A 68
„ „ „ 1936 Part IV P. A 80
„ „ „ 1938 Part IV P. A 54
„ „ „ 1944 Part IV P. A 17
„ „ „ 1946 Part IV P. A 25
38. Ceylon, Hansard (State Council) 24, January, 1945. Col. 485, 486.
39. Ceylon, Sessional Paper, XXIV 1943 Op. Cit P. 138.
40. Ibid P. 66

41. Ibid P. 64

42. Jones, Gairn, S. Population Growth and Educational Progress in Ceylon Colombo. 1971 P. 1

43. Arulnandhy, K. S. Op. Cit. P. 539

44. Ceylon Administrative Report 1944 Part IV A 17

,,	,,	,,	1946	Part IV	A	25
,,	,,	,,	1948	Part IV	A	30
,,	,,	,,	1950	Part IV	A	21
,,	,,	,,	1952	Part IV	A	30
,,	,,	,,	1954	Part IV	A	32
,,	,,	,,	1956	Part IV	A	38
,,	,,	,,	1958	Part IV	A	127
,,	,,	,,	1960	Part IV	A	130

45. Jayasuriya, J. E. Op. Cit. P. 85.

46. Ceylon Sessional Papers, XXIV, 1943 Op. Cit P. 40

47. ,, ,, ,, XXIV, 1946 Op. Cit. P. 36

48. ,, ,, ,, X, 1956 Op. Cit. P. 8

49. Jayasuriya, J. E. Op. Cit. P. 200

இடப்பெயர் வரலாறு — மட்டக்களப்பு மாவட்டம்

ம. சற்குணம்

இலங்கையின் கிழக்கே நீர்வளமும் நிலவளமும் பெற்றுச் சிறந்த நெற்களஞ்சியமாய்த் திகழும் நாடு மட்டக்களப்பு. இந் நாடு அண்மைக்காலம்வரை கிழக்குப் பிராந்தியம் என அழைக் கப்பட்டுத் திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதாய் இருந்தபோதும் இன்று திருகோணமலைப் பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளே மட்டக்களப்பு என அழைக் கப்படுகின்றன.

மகாவலி கங்கையின் ஒரு கிளையான வெருகல்கங்கைப் பேரியாறு தொடக்கம் தெற்கே குமுக்கன் ஆறு வரையும் பரந்து நீண்டு கிடக்கும் வளமார்ந்த செழுமை நிறைந்த நிலப்பகுதியாய் இந்நாடு திகழும். சுமார் நூற்றுமுப்பது மைல் நீண்டு கிழக்கு மேற்காய் முறையே நெய்தலும், மருதமும், முல்லையும், குறிஞ்சியும் அணிபெற அமைந்து ஏறக்குறைய எழுபது மைல் அகன்று கிடப்பது இந்நாடு. இந்நாட்டின் அழகினைச் சுவாமி விபுலாநந்தர் பின்வருமாறு அழகாகக் கூறியுள்ளார்.

"காவும் பொழிலும் கழிமுகமும் புள்ளணிந்த
ஏரியும் மல்கி இரத்தினத் தீவமென
ஆரியர் போற்றும் அளிசால் இலங்கையிலே
சீரார் குணதிசையைச் சேர்ந்து வளர்புகழும்
ஏராலியன்ற செந்நெலின் சுவைத்தீங் கன்னலொடு
தெங்கி னிளநீரும் தீம்பலவின் அள்ளமிர்தும்
எங்கும் குறையா இயலுடைய நன்னாடு
மட்டக் களப்பென்னும் மாநாடு."[1]

இந்நாடு நீண்ட காலமாகவே மக்கட் குடியிருப்பைப் பெற்று வந்திருக்கின்றது. காலங்காலமாக இங்கு வசித்து வந்தோரும், இந்நாட்டிற் குடியேறியோரும், பின்னர் தம் ஆட்சிக்குட்படுத்திய

அந்நியரும் வரலாறு நோக்கியும், இயல்பு பற்றியும், அபிமானங் காரணமாகவும் கிராமங்களுக்குப் பெயரிட்டு வந்துள்ளனர்.

மட்டக்களப்பின் பிரதேசங்கள் நீண்ட காலமாகக் கண்டி நாயக்க வம்ச அரசுடன் இணைந்தும் பிணைந்தும் இருந்து வந்த போதும் கிராமங்களின் ஊர்ப்பெயர்கள் தனித்தமிழ்ப் பெயர்களாகவே அமையலாயின. இக்கூற்றினைக் கிராமங்களின் இடப் பெயர்கள் எடுத்துக் காட்டும். மண்முனைப் பற்று மத்தியில் அமைந்து கிடக்க அதன் வடக்கே கோறளைப்பற்றும் ஏறுவூர்ப் பற்றும் புறங்கிடக்கத் தெற்கே அமைந்து கிடக்கின்ற எருவில் போரதீவுப்பற்று, சம்மாந்துறைப் பற்று, கரவாகு நிந்தவூர்ப் பற்று, அக்கரைப்பற்று, பாணமைப்பற்று என்ற எட்டுப் பற்றுக் களும் பொருந்திய மட்டக்களப்பு மாவட்ட ஊர்ப்பெயர்களின் தோற்றம் வரலாறு என்பனவே இங்கு எடுத்தாளப்படும்.

ஊர்களுக்குப் பெயர்கள் அமையும்போது பொதுவாகவும் சிறப்பாகவும் அமைந்து காணப்படுவதே இயற்கை. அது போலவே மட்டக்களப்புப் பகுதிகளில் இடப்பெயர்களும் அமைந்து காணப்படுகின்றன. பெரும்பாலான இடப் பெயர்கள் ஊர், குடி, கேணி, முனை, குடா, காடு, தீவு, துறை, வெளி ஆகியவற்றை விகுதிப் பெயர்களாகக் கொண்டே அமைந்து காணப்படுகின்றன.

ஊர் என்னும் விகுதிப் பெயர்களைக் கொண்ட இடப் பெயர்களைத் தொகுத்து ஆராயும்போது மட்டக்களப்புப் பகுதிகளிலே மண்டூர், ஏறுவூர், நிந்தவூர், மகிழூர் என்னும் இடப்பெயர்களைக் காண முடியும். இது போலவே ஈழத்திலே தமிழர் வாழும் ஏனைய பகுதிகளிலும் தென்னிந்தியத் தமிழகத்திலும் ''ஊர்'' என்னும் விகுதிப்பெயர் கொண்ட இடப் பெயர்கள் அமைந்துள்ளன. யாழ்ப்பாணப் பகுதிகளில் நல்லூர், புத்தூர், கரையூர், பாசையூர் என்பனவும், திருகோணமலைப் பகுதிகளிலே தோப்பூர், சம்பூர், மூதூர், சேனையூர் என்பனவும், தென்னிந்தியத் தமிழகப் பகுதிகளில் மருதூர், தெங்கூர், பனையூர், பாகூர், கடம்பூர், திருநாரையூர், கோழியூர், புலியூர், நல்லூர், புத்தூர் ஆகியனவும் அமைந்து காணப்படுகின்றன.[2] எனவேதான் தொல்காப்பியர் ''ஏமப் பேரூர்ச் சேரியும்'' என்ற தொடக்கத்தையுடைய சூத்திரத்தைத் தந்துள்ளார்.[3] அஃதாவது ஊர் என்ற சொல் நிலைகொண்டு சீவிக்கும் இடப் பரப்பு என்று பொருள் தருகின்றது.

மண்டூர் என்பது மண்டு மரங்கள் நிறைந்த குடியிருப்பாய் இருந்து இடப்பெயரைப் பெற்றிருக்க வேண்டும். அதேபோல

அவ்வூர் தில்லைமண்டூர் என்ற பெயரையும் பெற்றுள்ளது. அவ்வூருக்கு அண்மையில் உள்ள மண்டுக்கோட்டைமுனை என்னும் ஊரும் மண்டு என்னும் மரப் பெயராற் பெயரைப் பெற்றிருப்பதால் மண்டூரும் மரத்தாலே இடப்பெயரைப் பெற்றது எனலாம்.

ஏறுவூர் என்னும் ஊரின் பெயரோடு மட்டக்களப்புப் பகுதிகளில் வாழ்ந்து வந்த திமிலருக்கும் முக்குவருக்குமிடையே நடைபெற்ற கலகங்கள் பொருத்தப்பட்டுள்ளன. திமிலரோடு முக்குவர் போர் செய்து வெற்றிபெற உதவிய பட்டாணிகளைக் குடியேற்றியதோடு பகைவரான திமிலர் மீண்டும் வந்து தம்மூர்களுட் குடியேறு வகையில் அரண்செய்த ஊர் ''ஏறுவூர்'' எனவும் கதைகள் வழங்கி வருகின்றன.[4] இதனையே சிங்கள மன்னராற் குறிப்பிடப்படும் எகுலப்பற்று எனக் கொள்ள முடியும் என்பர்.[5] ஆனல் ஏறுவூர் பட்டாணிகள் குடியேறும் வரை குடியேறமல் இருந்த ஊர் எனக் கொள்வதையும் விட, அவர்கள் குடியேறிய பின்னர் இப்பெயர் ஏற்பட்டது எனக் கொள்வதே பொருத்தம் போலத் தெரிகின்றது. 'ஏறு' என்பதை எதிர்மறையாகக் கொள்வாரும் உளர். உடன்பாடாகக் கொள்வாரும் உளர். உடன்பாடாகக் கொள்வதே சாலச் சிறப்புடையது. இதற்குத் தமிழ் இலக்கியங்களும் அரண் செய்கின்றன.[6]

நிந்தவூர் என்பது சொந்தமாய்க் கொடுக்கப்பட்ட ஊர் எனப் பொருள்படும். இதனுலேதான் தமிழில் உறுதி எழுதுவோர் சொந்தமும், நிந்தமும்[7] என்ற சொற்றொடரைப் பயன்படுத்தி வருகின்றனர். அதுபோலவே மகிழூர் என்பது மகிழ மரத்தின் பெயரைக் கொண்ட ஊர்ப் பெயராய் இருக்க வேண்டும்.

மக்கட்டொகை பெருகப் பெருகக் காடு வெட்டி நாடாக்கிக் குளம் தொட்டு வளம் பெருக்கி வாழ வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எனவே ஊர்களை அண்டிக் குடியிருப்புக்கள் தோன்றின. உறவு முறை கொண்ட பல குடியினர் சேர்ந்து வாழ்ந்த இடம் குடியிருப்புக்களாய்த் தோற்றம் பெற்றன எனவும் கொள்ளலாம். இவ்வகைக் குடியிருப்புக்கள் பெரும்பாலும் ஒரு தலைவரின் பெயருடன் சார்த்திக் கூறப்பட்டிருப்பனவாகவே காணப்படுகின்றன. காத்தான் குடியிருப்பு, களுவாஞ்சிக் குடியிருப்பு, ஆறுமுகத்தான் குடியிருப்பு என்பனவற்றை நோக்கலாம். அத்துடன் சேனைக் குடியிருப்பு, கல்முனைக் குடியிருப்பு, குடியிருப்பு முனை, சிற்ருண்டிக் குடியிருப்பு என்னும்

குடியிருப்பு ஊர்ப் பெயர்களும் மட்டக்களப்புப் பகுதிகளைச் சார்ந்து வழங்கி வருகின்றன. புதிய குடியேற்றம் புதுக்குடியிருப்பு எனப் பெயர் பெற்றிருக்க வேண்டும்.

காத்தான் குடியிருப்பு இன்று காத்தான்குடி என்றே அழைக்கப்பட்டு வருகின்றது. இவ்வூர்ப் பெயரைப் போலவே களுவாஞ்சிக் குடியிருப்பு களுவாஞ்சிக்குடி எனவும், ஆறுமுகத்தான் குடியிருப்பு ஆறுமுகத்தான்குடி எனவும், கல்முனைக் குடியிருப்பு கல்முனைக்குடி எனவும் ஈறு குறைந்து வழங்கி வருகின்றன. சிற்றாண்டிக் குடியிருப்பு சிற்றாண்டி என இன்று 'குடியிருப்பு' ஈற்றுப்பெயர் இல்லாமலே வழங்கிவருகின்றது.

காத்தான்குடி என்னும் ஊர்ப் பெயரோடு ஒரு பரம்பரைக் கதையும் கூறப்பட்டு வருகின்றது. காத்தான் என்பவனை ஊரைக் காத்தவனாக்கி அக்கதை புனையப்பட்டுள்ளது. காத்தான் என்னும் வேடக் குடிமகன் தன் குடிகளுடன் அங்கே தற்போது சின்னப்பள்ளியடி எனக் கூறும் ஐந்தாம், ஏழாம் வட்டாரத்துக்குச் சமமான இடத்திற் குடியேறிச் சேனைப்பயிர் செய்து வாழ்ந்து வந்தான் எனவும், நாளடைவில் அவனது பெயர்படக் காத்தான்குடி என வழங்கி வரலாயிற்று எனவும் அறிய முடிகின்றது.[8] அத்துடன் கிழக்கிலங்கைப் பகுதியிற் கண்டி அரசனால் முஸ்லிம்கள் குடியேற்றப்பட்டதும் அங்கு வாழ்ந்த தமிழ்க் குடிகள் புதுக்குடியிருப்பில் அல்லது ஆரையம்பதியில் இடம்பெயரக் காத்தான்குடியில் முஸ்லிம்கள் வாழலாயினர் என்னும் கதையும் வழங்கி வருகின்றது.

பாண்டிருப்பு என்னும் பெயருள்ள ஊர் ஒன்றும் மட்டக்களப்புப் பகுதியில் உண்டு. பாண்டு வம்சத்தோர் முன்பு குடியிருப்புக்களை உண்டாக்கிய இடம் இதுவாய் இருக்க வேண்டுமெனப் பெயர்க் காரணம் கூறுவர். இதனை மட்டக்களப்பு மான்மியம் பாண்டுறுப்புமுனை எனக் கூறும்.[9] இக் குடியிருப்புத் தொடரில் நடுவுக் குடியிருப்பு, பரவன் குடியிருப்பு, பழங் குடியிருப்பு என்பனவும் மட்டக்களப்புப் பகுதிகளிற் பேசப்பட்டு வருகின்றன. மன்னாரிலே துள்ளுக்குட்டிக் குடியிருப்பு உண்டு.

குடியிருப்பு வகையிற் சேர்ந்து பெயர்பெற்ற இடங்கள் ஒரு புறமிருக்க, இவற்றோடு ஒப்பில்லாத 'பட்டிருப்பு' என்ற கிராமத்தையும் நாம் சேர்த்துப் பார்த்தல் வேண்டும். பட்டிருப்பு என்பது பார்த்திருப்பு என்ற சொல்லின் திரிபாகும். அரசன் தனக்குத் திறை கொண்டுவரும் வன்னியர்களை எதிர்பார்த்திருக்கும் இருப்பிடத்தைப் பார்த்திருப்புவ என்பர். மட்டக்

களப்புப் பகுதி வன்னியர் கண்டியரசுக் கமைந்து நடந்த காலத்தில் அரசன் அங்கு வந்திருந்த இடமே 'பட்டிருப்பு' என மருவியிருக்க வேண்டும். மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு காலத்தில் அரசாங்க அதிபராய் இருந்து பெருஞ் சேவை செய்த கொட்றிங்ரன் பிரபு பின்வருமாறு தமது நூலிற்[10] கூறியுள்ளார்.

> "PATTIRIPPUWA—An elevated platform or pavilion, e. g. the Octagon in Kandy, from which the king watched peraheras and other spectacles. The word is from Tamil பார்த்திருப்பு. 'a place from which one sees.'"

ஆகவே பட்டிருப்பு என்பது பார்த்திருப்பு என்ற தமிழ்ச் சொற்றொடரின் திரிபு மொழியாகும் எனலாம்.

கேணி என்னும் ஈற்றையுடைய இடப் பெயர்கள் மட்டக் களப்புப் பகுதிகளில் அதிகமாகக் காணப்படுகின்றன. மாங் கேணி, காயாங்கேணி, பனிச்சங்கேணி, தும்மங்கேணி, தாமரைக் கேணி, நாவற்கேணி, கருவேப்பங்கேணி, கறுவாக்கேணி என்பனவும் மீராங்கேணி, மீராலங்கேணி, களுவங்கேணி, ஐயங் கேணி, சுங்காங்கேணி என்பனவும் இதில் அடங்கும். இவை பெரும்பான்மை மரப் பெயர்களைச் சார்ந்தும் சிறுபான்மை தலைவன் பெயரைச் சார்ந்தும் காணப்படுகின்றன. இதுபோலவே மன்னாரிற் பொற்கேணியும், தென்னிந்தியாவிற் திருவல்லிக் கேணியும் வழங்கி வருகின்றன.

கேணி ஈற்றுப் பெயர்களைப் போலவே முனை ஈற்றுப் பெயர் களும் மட்டக்களப்புப் பகுதிகளில் அதிகமாகக் காணப்படு கின்றன. கடலுக்குள் நீண்டிருக்கும் தரைப் பாகம் முனை என்று வழங்கி வரும். இந்நிலப்பகுதி கல்லாயிருந்தால் கல்முனை என்றும், மண்ணாயிருந்தால் மண்முனை என்றும் பெயர் பெற்றது. கல்முனை என்னும் பெயர் இலங்கையில் எங்கும் உண்டு. வீச்சுக் கல்முனை, சொறிக் கல்முனை என்பன கல்முனையை விசேடித்துப் பெயர் பெற்றனவாயுள்ளன. இதே போலவே மருதமுனை, வீரமுனை, மகிழூர்முனை, நொச்சிமுனை, கல்லடி முனை, நற்பிட்டிமுனை, மண்டுக்கோட்டைமுனை, கடுக்காமுனை, கோட்டைமுனை, பாலமுனை,[11] குறிஞ்சாமுனை, தன்னாமுனை என்னும் பெயர்களும் மட்டக்களப்புப் பகுதிகளிற் காணப் படுகின்றன.

கடலுள் நீண்டிருக்கும் தரைப்பகுதி முனை எனக் கூறப்படுவது போலவே அது கோவளம் எனவும் அழைக்கப்படும்.[12] சென்னை

பட்டணத்துக்குத் தெற்கே இருபது மைல் தூரத்திற் செங்கல் பட்டைச் சேர்ந்த கோவளம் என்னும் ஊர் இருப்பதாக அறிகின்றோம். யாழ்ப்பாணம் காரைநகருக்கு மேற்பாலுள்ள குறிச்சி ஒன்றுக்கும் கோவளம் எனப் பெயருண்டு. கற்கோவளம் என்பதோர் இடம் பருத்தித்துறையில் உண்டு.[13] எனவே கற்கோவளமும் கல்முனையும் ஒரே கருத்தைக் கொடுக்கும் இரு இடப்பெயர்களாகும் எனலாம்.

குடா என்னும் ஈற்றுப் பெயர்களை நோக்கும்போது தாளங் குடா, புளியடிக்குடா, முதலைக்குடா, கற்குடா, கன்னங்குடா, புன்னைக்குடா, நெல்லிக்குடா, நாவற்குடா, காஞ்சிரங்குடா, சிறட்டையன்குடா என்னும் பெயர்களை அவதானிக்கலாம்.

காடு ஈற்றும் பெயர்கள் மட்டக்களப்புப் பகுதிகளைப் போலவே எல்லா இடப்பெயர்களிலும் அமைந்து காணப்படு கின்றன. மட்டக்களப்புப் பகுதியிலே பனங்காடு, நாவற்காடு, பலாக்காடு, மாங்காடு, முனைக்காடு, முனையக்காடு, பாலைக் காடு, வெட்டுக்காடு என்பன போன்ற பெயர்கள் வழங்கி வருகின்றன. யாழ்ப்பாணப் பகுதிகளில் இடைக்காடு, நாவற் காடு, சாவற்காடு, கட்டைக்காடு, புதுக்காடு, வெட்டுக்காடு என்பனவும், மன்னரில் சூரியகட்டைக்காடு, கள்ளிகட்டைக் காடு என்பனவும் உண்டு. இந்தியத் தமிழகத்திலும் பல காடு ஈற்றுப் பெயர்கள் இருந்திருக்கின்றன. மறைக்காடு, தலைச்சங் காடு, தலையாலங்காடு, சாய்க்காடு, கொள்ளிக்காடு, ஆலங் காடு, பனங்காடு, வெண்காடு என்னும் ஊர்ப் பெயர்களைத் தொகுத்து அப்பர் சுவாமிகள் பாடியுள்ளார்.[14]

தீவு என்னும் ஈற்றுப் பெயர்களையுடைய இடப் பெயர் களும் பெரும்பாலான இடப் பெயர்களாய்க் காணப்படு கின்றன. நாசுவன்தீவு, கள்ளியந்தீவு, வவுணதீவு, திமிலதீவு, புளியந்தீவு, ஈச்சந்தீவு, கரையாக்கன்தீவு, மாந்தீவு, காரைதீவு, சல்லித்தீவு, மல்லிகைத்தீவு, கருங்கொடித்தீவு, தேத்தாத்தீவு, அரசடித்தீவு, மகிழடித்தீவு, கோயிற் போரதீவு, பெரிய போர தீவு, முனைத்தீவு என்பவற்றை நோக்கலாம்.

இவற்றிற் காரைதீவு என்னும் ஊர்ப் பெயர் ஈழத்திற் பல இடங்களிலும் பேசப்பட்டு வருவதால் யாழ்ப்பாணத்தின் காரை தீவு காரைநகர் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.[15] இன்னும் ஒரு காரைதீவு புத்தளத்தில் அமைந்துள்ளது. மட்டக் களப்பின் தென்பால் சுமார் 30 மைல்களுக்கப்பால் அமைந் துள்ள காரைதீவினைக் காரேறுதீவு,[16] காரேறு சோலை[17] எனவும் அழைத்து வந்துள்ளனர். எனினும் காரைதீவென்றே பெரும்

பாலும் அழைக்கப்பெறும். இவ்வூர் தீவு எனப் பெயர் பெற்றிருந்தாலும் தீவல்ல. முன்பு தீவாய் இருந்திருக்கலாம். காரேறு மூதூர் எனக் கொண்டு கார்காத்த வேளாளரின் தீவு எனவும் வழங்குவர்.[18]

திமிலதீவு என்பது திமிலர் என்னும் வகுப்பார் வாழ்ந்து வந்த இடமாயிருக்க வேண்டும். இத் திமிலதீவு பற்றி மட்டக்களப்பு மான்மியமும் கூறிச் சென்றுள்ளது. ''ஆதியிலே தென்னிந்தியாவிலே திமிலர் என்னும் ஒரு சாதியினர் வாழ்ந்து வந்தனர். அவர்தம் தொழில் மீன் பிடித்தலாகும். அவர் இலங்கையிற் குடியேறி மட்டக்களப்பை அடைந்தபோது அது தம் தொழிலுக்கு வாய்ப்புடைத்ததெனக் கண்டு ஓரிடத்தைத் தம் உறைவிடமாக்கி அதனை அரண்செய்து தம் தொழிலைச் செவ்வனே புரிந்து வந்தனர். அவரிடங்கோலிய இடம் இன்றும் திமிலதீவு என வழங்கப்பட்டு வருகின்றது''.[19] திமில்[20] என வழங்கப்படும் தோணிகளை வைத்து மீன் பிடித்த சாதியினரே திமிலர் எனப்பட்டனர்.

புளியந்தீவு என்னும் சிறிய தீவு மட்டக்களப்பு வரலாற்றில் மிகவும் பிரசித்தி பெற்றிருப்பதோடு வரலாற்றுச் சம்பவங்களும் பொருந்தியதாகக் காணப்படுகிறது. இது காவிரி நடுவண் அமைந்த திருவரங்கம் போல மட்டக்களப்பு வாவியின் நடுவணமைந்து இலங்கையின் வெனிஸ் என விளங்கி வருகின்றது. புளியங்கொட்டை வடிவில் இருப்பதாலும், அதிகளவான புளிய மரங்களைப் பெற்றுள்ளதாலும் புளியந்தீவு எனப் பெயர் பெற்றதெனவும்[21] புவியன் என்னும் வேடர்குலத் தலைவன் இருந்து ஆட்சிசெய்த இத்திவு அவன் பெயராலே புவியன் தீவு என வழங்கி வந்தது எனவும், பின்பு மொழிச் சிதைவினாலே புளியந்தீவு என வழங்கப்பட்டது எனவும் கொள்ள இடமுண்டு. இதுவே மட்டக்களப்புப் பகுதியின் தலைநகராய் விளங்கியது.

கடல் வாணிபத்துக்குச் சாதகமாயிருந்த இடங்கள் எல்லாம் துறை என்னும் ஈற்றுப் பெயருடன் அழைக்கப்பட்டு வந்தமை போலவே, மட்டக்களப்புப் பகுதிகளிற் சில இடங்கள் இவ்வகை ஊர்ப்பெயர்களைக் கொண்டுள்ளன. சம்மாந்துறை, கண்டபாணத்துறை, மாவிலங்கத்துறை, அம்பிளாந்துறை, கொம்மாதுறை, திருப்பெருந்துறை, வேப்படித்துறை என்ற பெயர்களை நோக்கலாம். பாணந்துறை, களுத்துறை என்பன இவ்வகையைச் சார்ந்தன.

சம்பான் என்ற தோணிகள் வந்து அடைந்த துறையே சம்மாந்துறை எனப்படும். அம்பாந்தோட்டை என்ற பெய

ருக்கும் இதுவே காரணமாயிருக்க வேண்டும். சம்பாந்துறை முற்காலத்தில் மலேயர்களின் கப்பற் பொருள்களை இறக்கும் ஒரு பிரசித்தி வாய்ந்த துறையாகவே இருந்து வந்திருக்கிறது.[22] எனவேதான் இத்துறை சம்பான்துறை என அழைக்கப்பட்டுப் பின்பு சம்மாந்துறை என மருவியிருக்க வேண்டும்.

கண்டபாணத்துறை பற்றிக் கோவலனார் கதை குறிப்பிடுகின்றது.[23] இதனைக் கண்டபாணம் என்று கண்ணகி வழக்குரை கூறும்.[24] அம்பிளாந்துறை முன்பு அம்பிலாந்துறை என அழைக்கப்பட்டு வந்துள்ளது.[25] இவ்வகைப் பெயர் கொண்ட ஊர் ஒன்று காவேரி நதிப்பாங்கரில் இருப்பதாக மட்டக்களப்பு மான்மிய மூலஏடு கூறுகின்றது. இது மட்டக்களப்பு மான்மியத்திற் பதிப்பிக்கப்படவில்லை.

பெருந்துறை அல்லது பெரியதுறை என்னும் ஊர் ஒன்று மட்டக்களப்பு வாவியின் அந்தத்தில் அமைந்து கிடக்கிறது. இத்துறையே மட்டக்களப்பின் பெருந்துறையாக அக்காலத்தில் அமைந்திருத்தல் வேண்டும். ஆகவேதான் அங்குள்ள பழம் பெருமை வாய்ந்த முருகன் கோவில் இன்று புனருத்தாரணம் செய்யப்பட்டு வருகிறது. இவ்விடத்தில் ஆயிரத்து எண்ணூறும் ஆண்டளவிற் பாடசாலை ஒன்று இருந்ததாக அறியக்கிடக்கிறது.[26] இப்பெருந்துறை முருகன்மீது ஆயிரத்து எண்ணூற்று எண்பத்து இரண்டாம் ஆண்டில் வித்துவான் ச. பூபாலபிள்ளை பதிகம் பாடியுள்ளார்.[27]

ஈழத்தில் வெளி ஈற்றுப் பெயர்களையுடைய ஊர்கள் அநேகமாய் இருப்பதைப் போலவே கிழக்கிலங்கையிலும் காணப்படுகின்றன. தாண்டவன்வெளி, கதிரவெளி, சந்திவெளி, குளவெளி, புட்டுவெளி, நாவிதன்வெளி, குருமன்வெளி, வெல்லாவெளி, கந்தன்வெளி, பன்குடாவெளி, பண்டாரியாவெளி, மயிலம்பாவெளி, படையாண்டவெளி, வெட்டுக்காட்டுவெளி என்ற ஊர்ப் பெயர்களை நோக்கலாம். இந்த வெளியீற்றுப் பெயர்கள் திரிந்தே வலை, வல, வளை[28], வெல, வில் என்ற ஈற்றினையுடைய ஊர்ப்பெயர்கள் தோன்றியிருக்க வேண்டும். ஒலுவில், பொத்துவில், கோளாவில், எருவில், தம்பிலுவில் என்னும் வில் ஈற்று ஊர்ப்பெயர்களையும் களுதாவளை என்னும் வளை ஈற்று ஊர்ப்பெயரையும் நோக்கலாம். இந்த வெளி ஈற்று ஊர்ப் பெயர்கள் மன்னார்ப் பகுதியிலும் உண்டு. மேத்தன்வெளி, புதுவெளி, பண்டாரவெளி, ஆட்காட்டிவெளி என்பவற்றை நோக்கலாம்.

வெளி, வில், வில என்ற ஈற்று ஊர்ப்பெயர்களைப் போலக் ''குளம்'' ஈற்று ஊர்ப்பெயர்களும் தோன்றியிருக்க வேண்டும்,

இந்த வில அல்லது வில் என்பது குளத்தையும் அதனோடு அண்டிய வெளியினையும் கருதி நின்றதால் விவசாயத்தோடு அண்டிய ஊர்ப்பெயர்கள் யாவும் குளம் ஈற்றுப் பெயர்களைக் கொண்டு அழைக்கப்பட்டன. மட்டக்களப்புப் பிரதேசம் விவசாய நிலப்பரப்பினை அதிகமாகக் கொண்டிருந்தாலும் வெளி ஈற்று ஊர்ப்பெயர்களைப் போலக் குளம் ஈற்று ஊர்ப்பெயர்கள் அதிகமாக இடம்பெறவில்லை. கிரான்குளம், கொத்துக்குளம், ஒல்லிக்குளம் என்ற ஒரு சில ஊர்ப்பெயர்கள் மட்டுமே காணப்படுகின்றன. ஆனால் குளம் ஈற்று ஊர்ப் பெயர்கள் மன்னார் வவுனியா மாவட்டங்களில் அதிகமாகக் காணப்படு கின்றன.[29]

மட்டக்களப்புப் பிரதேசத்தில் ‘அடி’ ஈற்று ஊர்ப்பெயர் களும் அதிகமாகக் காணப்படுகின்றன. நாவலடி, அரசடி, கல்லடி, மாவடி, புளியடி, புளியங்கண்டடி, செங்கலடி, மடத்தடி, சவுக்கடி, மண்டபத்தடி, திண்ணையடி, கருங்கிண்ணையடி, ஒட்ட மாவடி, கண்டலடி என்னும் ஊர்ப்பெயர்களில் இதனைக் கண்டு கொள்ளலாம். இந்த அடி ஈற்று ஊர்ப்பெயர்கள் சிங்களத்திற் ‘பெ’ ஈற்றுப் பெயர்களாகக் காணப்படுகின்றன.[30] இதனைத் தொடம்பெ, மாதம்பெ என்னும் ஊர்ப்பெயர்களை நோக்கி யுணரலாம். மட்டக்களப்பிலே தென்பாலுள்ள அளிக்கம்பை, புட்டம்பை என்பனவும் யாழ்ப்பாணப் பகுதிகளிலுள்ள மாதும்பை, தோடப்பை, மயிலப்பை என்பனவும் இவ் வகை யினவாய் இருக்கலாம் எனவும் எண்ணத் தோன்றுகின்றது.

மடு ஈற்று ஊர்ப்பெயர்களை பாலமீன்மடு, கோரைக்கல்லி மடு, கொடுவாமடு, முடக்குமடு, பாலமடு, பாலையடிமடு, ஒல்லிமடு, வட்டிபோட்டமடு ஆகிய ஊர்ப்பெயர்களிலும், வெட்டுவான் ஈற்று ஊர்ப்பெயர்களை முள்ளிவெட்டுவான், மயிலவெட்டுவான், வேப்பவெட்டுவான், கொண்டவெட்டுவான் என்னும் ஊர்ப்பெயர்களிலும் காணலாம்.

இதேபோலவே ஓடை ஈற்று ஊர்ப்பெயர்களைக் களியோடை’ மாவடியோடை, மீராவோடை, காங்கேயனோடை என்னும் ஊர்ப்பெயர்களிலும் பிட்டி ஈற்று ஊர்ப்பெயர்களைப் பட்டி யடிப்பிட்டி, வளத்தாப்பிட்டி என்னும் ஊர்ப் பெயர்களிலும், வத்தை ஈற்று ஊர்ப்பெயர்களை மல்வத்தை, தம்பலவத்தை, சின்னவத்தை, மாளிகாவத்தை என்னும் ஊர்ப் பெயர்களிலும் கண்டுகொள்ளலாம்.

மலை ஈற்று ஊர்ப்பெயர்களை ஆயித்தியமலை, அன்னமலை, புல்லுமலை என்னும் ஊர்ப் பெயர்களிலும், ஆறு ஈற்று ஊர்ப்

பெயர்களைக் கரடியனாறு, கல்லாறு (கோட்டைக் கல்லாறு, பெரிய கல்லாறு) என்னும் ஊர்ப்பெயர்களிலும் கண்டுகொள்ளலாம்.

காமம் என்னும் ஈற்று ஊர்ப்பெயர் பழுகாமம், இறக்காமம், சாகாமம், உறுகாமம் என்னும் ஊர்ப் பெயர்களிற் காணப்படுகின்றது. இக் 'காமம்' ஈற்று ஊர்ப் பெயர்கள் கிராமம் என்ற சொல்லில் இருந்து மருவியிருக்க வேண்டும். இதே போலக் காமம்→கமம் என்றும் மருவியுள்ளது. இவை மட்டக்களப்புப் பகுதிகளிற் போல யாழ்ப்பாணப் பகுதிகளிலும் அதிகமாகக் காணப்படுகின்றன. கொடிகாமம், வீமன்காமம், வலிகாமம் என்பவற்றையும், திருகோணமலையில் உள்ள தம்பலகாமம் என்ற ஊர்ப்பெயரையும் நோக்கலாம்.

புதுக்கமம் என்னும் மன்னார் மாவட்ட ஊர்ப்பெயர் 'கமம்' என்னும் ஈற்று ஊர்ப்பெயராய் உள்ளது. இது 'கம்' எனவும் மருவியுள்ளது. சுன்னாகம், பண்ணாகம், மல்லாகம் என்பவற்றை நோக்கலாம். மேலும் கிராம மணியம் என்ற பெயர் இந்தியாவில் இன்றும் வழக்கில் உண்டு. அதனைச் சிவஞானக் கிராமணியார் என்ற பெயரில் அவதானிக்கலாம். கிராமமணியம்→கிராமணி→காமினி என்று வருதல் இயல்பானது. சிங்கள மக்களிற் காமினி என்ற பெயர்வழக்குப் பெருவாரி. இது கிராம மணியம் என்ற சொற்றொடரின் திரிபு போலும். மணிக்கிராமம் என்பது மாணிக்கக் கிராமம் என்பதன் மரூஉ எனக் கொண்டு அவ்வூரினரே மாணிக்கவாசகர் என்ற வாதங்களும் நடைபெற்றுள்ளன.[31]

பழுகாமம் என்பது பாழுகமம் என்ற சொல்லில் இருந்து தோன்றியிருக்க வேண்டும்.[32] பாழ்போன அதாவது சந்ததியற்ற கிராமத்தைச் சிங்கள மக்கள் பாழுகம என்பர். எனவே பாழ் என்ற தமிழ்ச் சொல் கம என்ற சொல்லோடு சேர்ந்து இடப்பெயராகியிருக்கவேண்டும். இவ் விடப்பெயர் தற்போது திருப்பழுகாமம் என வழங்கி வருகிறது. இது கண்டி அரசனின் கிழக்கு மாகாண இருப்பிடங்களில் ஒன்றாய் இருந்திருக்க வேண்டும்.[33]

மட்டக்களப்பு மாவட்டம் மட்டக்களப்பு நகரத்தின் பெயரில் இருந்தே பெயர்பெற்றது. ஒரு சிறிய நகரின் பெயர் அம் மாவட்டம் முழுவதற்கும் அமைவது இயல்பானது. எனவே மட்டக்களப்பும் இதற்கு விதிவிலக்கல்ல. மட்டக்களப்பு பல பெயர்களைக் கொண்டு அழைக்கப்பட்டு வந்துள்ளது. இது

மட்டக்களப்பு[34] மட்டக்கிழப்பு[35], மட்டுக்களப்பு[36] என்றெல்லாம் அழைக்கப்பட்டு வந்துள்ளபோதும் இன்று மட்டக்களப்பு என்றே அழைக்கப்பட்டு வருகின்றது. இது மட்டுமாநகர்[37], மட்டுநகர்[38] என்றும் அழைக்கப்படும். யாழ்ப்பாணம் யாழ் நகர் எனவும், திருகோணமலை திருமலை எனவும் அழைக்கப்படும் பான்மையாய் இது அமைந்திருக்க வேண்டும்.

இவ்வூர்ப் பெயர் மட்டம் களப்பு என்னும் இரு சொற்களாலாகியது. இது ஒரு தமிழ்த் தொடராகும். மட்டமான ஆழமற்ற நீர்நிலை என்பது இதன் பொருளாகும்.[39] ஆழமற்ற நீர்நிலையைக் களப்பு என்பது இந்நாட்டு வழக்கு. மட்டமான களப்பு மட்டக்களப்பு. இப் பெயர் முதலிலே ஓரிடத்துக்குரிய சிறப்புப் பெயராகவிருந்து பின்பு நாடு முழுவதற்கும் பொதுப் பெயராயிற்று.[40] இதனை மடகளப்புவ எனக் கொண்டு சேறு பொருந்திய நீர்நிலை என்னும் சிங்களச் சொல்லில் இருந்து திரிபாயமைந்தது என்றும், மட்டுக்கலப்பு எனக் கொண்டு தேன்பாயும் நாடு என்ற தமிழ்ச்சொற் பிறப்பினமைந்தது என்றும் கூறுவர்.[41] இன்னும் மடு+கலப்பு எனக் கொண்டு பலமடுக்கள் கலந்த நீர்நிலை எனவும் கூறுவர்.

மட்டக்களப்புப் பற்றி மட்டக்களப்பு மான்மியம் பின்வருமாறு கூறுகின்றது.

> ''மட்டக்களப்பு என்னும் பெயர் தொன்றுதொட்டு ஏற்பட்டதாகச் சாசனங்களிலும் காணப்படவில்லை. அக்காலம் இது காடடர்ந்த வனந்தரமாக விருந்ததாகவே எண்ண இடமுண்டு. அந்நியதேச வாசிகள் மரமேற்றிய காலம் இங்குள்ள கண்டபாணத்துறையிற் தங்குவதுண்டாம். முற்குகர் இலங்கையின் கிழ்ப்பாகம் வந்தபோது ஒரு சதுப்பேரி காணப்பட்டது. வழியில் மண்செறிந்த ஒரு முனை குறுகலாக இருந்தமையால் அதற்கு மண்முனை எனும் பெயரிட்டனர். வாவி எல்லையில் ஓடம் சென்றதும் அப்பாற் செல்ல வழியில்லாமை கண்டு இது ''மட்டும் மட்டடா மட்டக்களப்படா'' எனப் பகர்ந்து அந்தத்தில் மட்டக்களப்பென்னும் நாமத்தைச் சூட்டி ஒரு கிராமத்தை அரணாக்கினர். ஒல்லாந்தர் காலம்வரை வாவியின் தென் எல்லையே மட்டக்களப்பு என்னும் பெயரைப் பெற்றிருந்தது. ஒல்லாந்தர் தங்களுக்குக் கோட்டை கட்டுவதற்கு வசதியான ஒரு இடத்தைத் தெரிந்து 16ஆம் நூற்றாண்டிற் கட்டினர். அது தொடக்கமே வாவியின் வடபுறம் மட்டக்களப்பு என்னும் பெயராயிற்று''[42]

இக் கருத்தையே கண்ணகி வழக்குரைப் பாடலும் அரண் செய்கின்றது.[43] எனவே மட்டக்களப்பு, ஒல்லாந்தர் காலம்வரை மட்டக்களப்பு வாவியின் தென்கோடிக்கப்பால் உள்ள பகுதியாய் இருந்தது எனவும், பின்பு ஒல்லாந்தர் தங்கள் வசதிக்கேற்ப வாவியின் வடக்கே உள்ள கடல் வாயினைத் தெரிந்து அவ் விடத்தில் இருந்த புளியந்தீவிற் கோட்டையைக் கட்டிய பின்னரே மட்டக்களப்பு என்ற பெயர் வாவியின் வடபகுதிக்கும் சென்றதெனவும் அறியமுடிகின்றது.

காலங்காலமாக மட்டக்களப்பு என்ற பெயர் வழங்கிவந்த போதும் போர்த்துக்கேயர் வருகையின் பின்னர் இந்த Mada-kalapu என்னும் பெயர் Matecaloa எனவும், பின்னர் ஒல்லாந் தரால் Batecalo என அழைக்கப்பட்டதெனவும், ஆங்கிலேயர் அதனையும் திருத்தி Batticaloa எனப் பூரணப்படுத்தினர் எனவும் அறியமுடிகின்றது.

மட்டக்களப்புக்கு அணித்தாயுள்ளது அமிர்தகழி என்னும் ஊர். இவ்வூர் பற்றிச் சுவாமி விபுலாநந்தர் பின்வருமாறு கூறி யுள்ளார்:

"மட்டக் களப்பென்னும் மாநாடங் நாட்டிலிடைப்
பட்டினப் பாங்கர்ப் பரந்ததோ ருமுகமாய்
ஐங்கரன் கோயில் அமிர்தகழிக் கணித்தாய்ப்
பொங்குகழி யுட்புகும் நீர்நிலை யொன்று......"

இவ்வூர் மட்டக்களப்பு வாவியின் கழிமுகத்தில் அமைந் திருப்பதனுற் போலும் கழி என்ற ஈற்று மொழியுடன் முற்றுப் பெறுகின்றதெனலாம். இது அமிர்தநதி என்றும் அழைக்கப் பெறும். அமிர்தகழி என்னும் சொல்லில் உள்ள கழி என்னும் விகுதி ஆழமற்ற நீர்நிலை என்னும் கருத்தைக் கொடுப்பதனுல் அமிர்தநதியின் பெயரே அமிர்தகழி என வழங்கலாயிற்று என எண்ணுவதற்கு இடமுண்டு. அதனை மாமாங்கம் என்றும் அங்கு வீற்றிருக்கும் பிள்ளையாரை மாமாங்கேஸ்வரர் என்றும் அழைப்பர்.

மாமாங்கம் என்பது மகாமகம் → மாமகம் என்பதன் திரிபு என்பர். மட்டக்களப்பு மான்மியம் அதனை "மாமாங்கை" என்று கூறியுள்ளது.[44]

புளியந்தீவின் நடுவண் அமைந்துள்ள இடத்தின் பெயர் ஆனைப்பந்தி என அழைக்கப்பட்டு வருகின்றது. இப் பெயர் யாழ்ப்பாணத்திலும் சில கிராமங்களுக்கு உண்டு. யானைகள் கட்டப்பட்டதால் இப்பெயர் பெற்றிருக்க வேண்டும். போர்த்துக்

கேயர், ஒல்லாந்தர் காலங்களில் யானைகளை ஏற்றுமதி செய்வதற்காக அவற்றைக் காடுகளிற் பிடித்துவந்து இவ்விடத்திற் கட்டி வைத்தனர் என்றும், அவ்வாறு கட்டிவைத்த யானைகளுக்குத் தீனி போட அமர்த்தப்பட்ட மக்கள் அதன் பாகங்களில் வசித்தனர் என்றும் அறிய முடிகிறது. மட்டக்களப்பிலும் யாழ்ப்பாணத்திலும் ஆனைப்பந்தி என்னும் இடங்களின் பாங்கரிற் தனக்காரர் என்ற சாதியினர் வாழ்ந்து வருவதை இன்றும் நோக்கலாம்.

ஊறணி என்ற சிறிய கிராமமும் மட்டக்களப்புக்கு அணிமையாகவே உள்ளது. இது ஊரார் உண்ணும் நீரையுடையதாதலால் ஊருணி என்ற பெயரைப்பெற்றுப் பின்பு ஊறணி என மருவியதெனவும் கூறுவர். ஊர் உண் நீர் என்னும் சொற் கூட்டமே ஊரணியாய் மாறியிருக்க வேண்டும். இதனையே இளம் நீர்—இளனி, வீழும்நீர்—வீணி, பழம்நீர்—பழநி[45], என்னும் சொற்கோவைகளும் அரண் செய்கின்றன. ஊரணி என்பது ஊருணியின் திரிபாகும். ''ஊருணி நீர்நிறைந்தற்றே'' என்னும் திருக்குறளால் அச்சொல்லின் பழமை விளங்கும். ஊருக்கு அணித்தாக உள்ள நீர்நிலை ஊருணி எனப்படும் எனவும் கூறுவர்.[46] எனினும் ஊர்—உண்—நீர் என்ற சொற்றொடரே ஊறணி என மருவியது என்று கொள்வதே பொருத்தமுடையது.

மட்டக்களப்புப் பகுதிகளிலே உள்ள ஊர்ப்பெயர்களைத் திமிலருக்கும் முக்குவருக்கும் இடையே நடைபெற்ற கலவரங்களோடு பொருத்திக் காட்டுவதற்கு மட்டக்களப்பு மான்மியம் முனைந்துள்ளது. திமிலரைத் துரத்தித் திரும்பி வரும்போது பல திக்காகவும் துரத்திச் சென்றவர்கள் வந்து சந்தித்த இடம் சந்திவெளி என்றும், அவர்கள் அனைவரும் ஆறிய இடம் வந்தாறுமூலை என்றும், பதுங்கியிருந்து சத்துருக்களைக் கொன்ற இடம் சத்துருகொண்டான் என்றும் கூறப்பட்டுள்ளது.[47] இதே போலவே திமிலரும் முக்குவரும் நடத்திய போரில் இரு வகுப்புப் படைகளும் ஒன்றையொன்று எதிர்த்துப் போரேறிய இடம் போரதீவு என்றும் அழைக்கப்பட்டதென்பர்.[48]

இன்னுஞ் சில இடப் பெயர்கள் பற்றி மட்டக்களப்பு மான்மியம் கூறியுள்ளது. தம்பட்டை தம்பட்டார்ஊர் எனவும், தம்பிலுவில் தம்பதிவில் எனவும், பாணமை (பாணகை) பாலர் நகை எனவும், சங்குமன்கண்டி சங்குமங்கண்டு எனவும், வீரமுனை வீரர்முனை எனவும் கூறப்பட்டுள்ளன. அதே போலவே நற்பிட்டிமுனை நாப்புட்டிமுனை எனவும் கூறப்பட்டுள்ளது.

உன்னிச்சை என்பது ஒரு குளத்தின் பெயர். இது வன்னிச்சை ஒருத்தியின் ஆட்சியில் இருந்திருக்க வேண்டும். வன்னிச்சைக் குளமே உன்னிச்சைக் குளமாய் மாறியதென்பர். பனிச்சங் கேணியும் அத்தன்மைத்ததே. வன்னிச்சிக்கேணி பனிச்சங்கேணி எனக் காலவகையில் மாறியது போலும். இங்கு வன்னிச்சியின் ஆட்சி நிலவியது என்பதற்கும் இது பண்டைப் பெருமை யுடைத்து என்பதற்கும் இங்கு கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக் களும் சாசனங்களும் சான்ருவன.

அம்பாறை என்பது அம்பாள் ஏரி என்பதன் மாற்றம் என்று காட்டியுள்ளார் எஸ். ஒ. கனகரெத்தினம்.[49] ஆனுல் இன்று அழகிய பாறை கொண்ட இடம் என்ற பொருளில் அம்பாற என அழைக்கப்படுகின்றது. இது தமிழ்ப் பெயர் சிங்கள மயமான தைக் குறித்து நிற்கும்.

கிழக்கிலங்கையிலே உள்ள பிரதான தலங்களில் மண்டூர், மாமாங்கம் போலவே திருக்கோவில், கொக்கட்டிச்சோலை என்பனவும் குறிக்கப்பெறும். திருக்கோவில் முன்பு நாகர்முனை என அழைக்கப்பட்டதாகவே மட்டக்களப்பு மான்மியம் கூறி யுள்ளது.[50] அத்துடன் திருக்கோவிற் பெயருக்கு ஒரு பரம் பரைக் கதையையும் அது கூறியுள்ளது. ''கலியுக சகாப்தம் அசுரனை அழிப்பதற்காகச் சுப்பிரமணியர் அனுப்பிய வேலானது உக்கிரம் சகிக்கவொண்ணுது கடல் நோக்கி வரும் வழியில் மூன்று தடாகங்களை ஏற்படுத்தி வாகூர மலையை இரண்டு பிளவாக்கிச் சமுத்திரத்தில் மூழ்கி வெள்ளை நாவலில் ஆறியிருந்ததெனவும், அந்தக் காலத்தே வனவாசிகளான வேட்டுவர் அதனைக் கண்டு ஆராதித்தார்கள் எனவும், தமிழரின் இரண்டாம் படை யெழுச்சிக் காலத்தில் வந்த சோழ நாட்டு மன்னர் எழுவர் திருக் கோயிலைக் கட்டி முடிப்பதற்கு இந்தியாவில் இருந்து கல் முதலியன கொணர்ந்து கட்டி முடித்துத் திருப்பணியைப் பூர்த்தி செய்தார்கள் எனவும், அத்தினத்து வடமுகமாயிருந்த வேல் கிழக்கு முகமானதினுல் திருக்கோவில் என அழைக்கப்பட்ட தெனவும் கோயிற் றிருப்பதிக மொன்றினுல் உணரக்கிடக் கிறது.[51] எனவே அங்கு அமைந்த கோவிலின் பெயரால் ஊரும் பெயர்பெற்றதாகக் கொள்ளக் கிடக்கிறது.

இது போலவே கொக்கட்டிச்சோலையும் பரம்பரைக். கதை யுடையது. மட்டக்களப்புப் பகுதிகளிலே தும்பாலஞ்சோலையும் சோலை ஈற்று ஊர்ப்பெயரைக் கொண்டிருந்தபோதும் கொக் கட்டிச்சோலை அங்கு வீற்றிருக்கும் தான்தோன்றீஸ்வரர் ஆலயத் தினுற் சிறப்பும் பெருமையும் பெற்றுத் திகழ்கின்றது. இவ்வூருக் குள்ள பரம்பரைக் கதைகளை மட்டக்களப்பு மான்மியத்தில் இருந்து அறிந்து கொள்ளலாம்: ''பண்டைக்காலத்திற் கதிர

மலையைத் தரிசிக்க முத்துலிங்கர், கொக்கட்டியார் என இரு தபோதிகள் புறப்பட்டனர். கொக்கட்டியார் சிவபதமடைய அவரைச் சமாதியிருத்தி முத்துலிங்கர் கதிரமலையைத் தரிசிக்கச் சென்றனர். அச்சமாதியில் இருந்து ஓர் லிங்கம் உண்டாகி ஒரு கொக்கு நெட்டி மரத்தினுல் மறைக்கப்பட்டு இருந்தது. தேன் பெறச் சென்ற எயினர் அம்மரத்திலே தேன் எடுப்பதற்காக மரத்தை வெட்ட இரத்தம் சிந்தியது. இதனைச் சொப்பனத்தினுலறிந்த கதிர்காம யாத்திரிகர்களிலொருவரான செட்டியார் கோயிற்றிருப்பணியைப் பூர்த்தி செய்தனர். இஃது கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோயிலென அழைக்கப்படுகிறது.[52]

இவற்றைவிட, மட்டக்களப்புப் பகுதிகளில் ஆரையம்பதி, குருக்கள்மடம், ஒந்தாச்சிமடம், நீலாவணை, சாய்ந்தமருது, அட்டப்பள்ளம், பட்டிமேடு, ஆலயடிவேம்பு, கிரான், செட்டிபாளையம், கரவெட்டி, கிட்டங்கி, சவளக்கடை போன்ற ஊர்ப் பெயர்களும் உண்டு.

மட்டக்களப்பு இடப் பெயர் வரலாற்றிற் சேனை ஈற்று ஊர்ப்பெயர்களும் காணப்படுகின்றன. வாழைச்சேனை, பாவக்கொடிச்சேனை, பொன்னுங்கனிச்சேனை, பருத்திச்சேனை, குரக்கஞ்சேனை, மணற்சேனை, இலுப்பையடிச்சேனை, கூழாவடிச்சேனை, முறக்கட்டாஞ்சேனை, வரிப்பத்தாஞ்சேனை என்பவற்றைக் கூறலாம். இதே போலத் திருகோணமலைப் பகுதியிலும் அதிகமான இவ்வகை இடப் பெயர்கள் உண்டு. மாவடிச்சேனை, பாலத்தடிச்சேனை, வாய்க்காலடிச்சேனை, பாலைக்குடாச்சேனை, மணற்சேனை, கதிரயடிச்சேனை என்பனவற்றை நோக்கலாம். ஈழத்தின் வடக்குக் கிழக்கு மாகாணங்களைத் தவிர்ந்த ஏனைய இடங்களிலும் இவ்வகை இடப் பெயர்கள் உண்டு.[53] அரிவிச்சேனை, செட்டிச்சேனை, எள்ளுச்சேனை, கள்ளமேட்டுச்சேனை, கருக்குச்சேனை, கிழவாமடுச்சேனை, குறத்திச்சேனை, மறவன்சேனை, நாயக்கர்சேனை, புளியன்சேனை, சந்திச்சேனை, அத்தியடிமூலைச்சேனை என்பனவற்றை உதாரணமாகக் கொள்ளலாம்.

எனவே மட்டக்களப்பின் ஊர்ப்பெயர்கள் இயற்கையோடொட்டியனவாய் அமைந்திருந்த போதும் ஏதோ ஒரு வகையிற் பரம்பரைக் கதையினையும் பெற்றுத் திகழ்ந்து பெரும்பாலானவை காணப்படுவதை அவதானிக்கலாம். அத்துடன் சில ஊர்ப் பெயர்கள் மட்டக்களப்பின் சரித்திரத்தின் பின்னணியுடன் பொருந்திய வரலாற்றுச் சம்பவத்தை அழியாமற் பாதுகாப்பனவாய் அமைந்திருப்பதை அறிந்து கொள்ளவும் துணையாய் இருக்கின்றன.

உசாத்துணை — நூல்கள், சஞ்சிகைகள்

1. விபுலாநந்தர் சுவாமி, யாழ்நூல், பாயிரவியல், பக்கம் 7, கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர் (1947).

2. திருநாவுக்கரசர் தேவாரம்—அடைவுத் திருத்தாண்டகம்—4.

"பிறையூரும் சடைமுடியெம் பெருமா னூர்
பெரும்பற்றப் புலியூரும் பேரா வூரும்
நறையூரும் நல்லூரும் நல்லாற் றூரும்
நாலூரும் சேற்றூரும் நாரை யூரும்
உறையூரும் ஒத்தூரும் ஊற்றத் தூரும்
அளப்பூரோ மாம்புலியூர் ஒற்றி யூரும்
துறையூரும் துவையூரும் தோழூர் தானும்
துடையூரும் தொழஇடர்கள் தொடரா வன்றே."

3. தொல்காப்பியம்—பொருளதிகாரம் 37.

4. நடராசா எவ். எக்ஸ். சி., வித்துவான் (பதிப்பாசிரியர்), மட்டக்களப்பு மான்மியம், பக். 8, கலாநிலையம், கொழும்பு (1962).

5. கந்தையா வி. சி., வித்துவான் பண்டிதர், மட்டக்களப்புத் தமிழகம், பக். 400, திருமகள் அழுத்தகம், சுன்னுகம் (1964).

6. நாலடியார் 14

"தாழாத் தளராத் தலைநடுங்காத் தண்டுன்ரு
விழா இறக்கும் இவள்மாட்டும்..."

7. Codrington H. W., *Glossary of Native Foreign and Anglicized Words*, P. 40, Government Printer, Ceylon, Colombo (1924).

8. நவவி கே. எம். எம்., "காத்தான்குடி", ஸ்ரீலங்கா, பக். 27, அரசாங்க சமாசாரப்பகுதி வெளியீடு, கொழும்பு (மார்ச் 1960).

9. நடராசா எவ். எக்ஸ். சி., வித்துவான் (பதிப்பாசிரியர்), மட்டக்களப்பு மான்மியம், பக். 59.

10. Codrington H. W., *Glossary of Native Foreign and Anglicized Words*, P. 45. Government Printer, Ceylon, Colombo (1924).

11. இவ்வூர்ப் பெயர் மட்டக்களப்புப் பகுதிகளில் மூன்று இடங்களுக்கு உண்டு.

12. சேதுப்பிள்ளை ரா. பி., தமிழகம் ஊரும் பேரும், பக். 46, பழனியப்பா பிறதர்ஸ், சென்னை (மூன்றும் பதிப்பு 1956).

13. கந்தையா வி. சீ., வித்துவான் பண்டிதர் (பதிப்பாசிரியர்), கண்ணகி வழக்குரை, பக். 39, பாடல் 137, காரைதீவு இந்துசமய விருத்திச்சங்க வெளியீடு, மட்டக்களப்பு (1968).

14. திருநாவுக்கரசர் தேவாரம் — அடைவு திருத்தாண்டகம் 6.

"மலையார்தம் மகளொடுமா தேவன் சேரும்
மறைக்காடு வண்பொழில்சூழ் தலைச்சங் காடு
தலையாலங் காடுதடங் கடல்சூ ழுந்தண்
சாய்க்காடு தள்ளுபுனற் கொள்ளிக் காடு
பலர்பாடும் பழயனூர் ஆலங் காடு
பனங்காடு பாவையர்கள் பாவம் நீங்க
விலையாடும் வளைதிளைக்கக் குடையும் பொய்கை
வெண்காடும் அடையவினை வேறு மன்றே."

15. நடராசா எவ். எக்ஸ். சி., வித்துவான், காரைநகர் மான்மியம், பக். 55, இரஞ்சன அச்சகம், கொழும்பு (1971).

16. விபுலாநந்தர் சுவாமி, "வசந்தன்கவி", லோகோபகாரி ஆண்டு மலர், பக். 49 (1941).

17. கந்தையா வி. சி., பண்டிதர் (பதிப்பாசிரியர்), கண்ணகை அம்மன் குளுத்திப் பாடல் (முதலிய நான்கு நூல்கள்), ஊர் சுற்றுக் காவியம் 27, பக். 26, இளங்கோ அச்சகம், மட்டக்களப்பு (வைகாசி 1958).

18. Canagaratnam S. O., *Monograph of Batticaloa District of the Eastern Province, Ceylon*, p. 80, Government Printer, Ceylon, Colombo (1921).

19. நடராசா எவ். எக்ஸ். சி., வித்துவான் (பதிப்பாசிரியர்), மட்டக்களப்பு மான்மியம், பக். 5 — 6.

20. புறநானூறு 24.

"தின் திமில் வன் பரதவர்" என்று வரும் அடி இதற்குச் சான்றாகும்.

21. Canagaratnam S. O., *Monograph of Batticaloa District*, P. 1. (quoting from C. A. L. R. Vol. 28., P. 291.)

22. Rani Masilamani Mrs., "Batticaloa's Names", *Ceylon Daily News*, 29-1-1937.

23. செல்லையா மா. சே., தென்புலியூர் (பதிப்பாசிரியர்), கோவலனார் கதை, பக். 19, பாடல் 4, வியாபாரிமூலை கலாபவன அச்சகம், பருத்தித்துறை (சுபகிருது சித்திரை—1962).

24. கந்தையா வி. சி., வித்துவான் பண்டிதர் (பதிப்பாசிரியர்), கண்ணகி வழக்குரை, பக். 42, பாடல் 152.

25. நடராசா எவ். எக்ஸ். சி., வித்துவான் (பதிப்பாசிரியர்), மட்டக்களப்பு மான்மியம், பக். 21.

26. Vimalananda T., *Buddhism in Ceylon under the Christian Powers* pp. 29—30, M. D. Gunasena, Colombo (1963). (quoting from James Cordiner's letter to The Hon'ble Frederic North, Governor of Ceylon, on 12th Sept. 1800).

27. பூபாலபிள்ளை ச., வித்துவான், பெரியதுறைத் திருமுருகர் பதிகம் (1882), (சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை (தொகுப்பாசிரியர்), தோத்திரக்கோவை, பக். 41—47, சென்னை (1922).

28. குமாரசுவாமி ச., வடமாகாணத்துள்ள சில இடப் பெயர்களின் வரலாறு, பக். 43, ஜயசிறீ சாரதா பீடேந்திர சாலை, வயாவிளான் (1918). (இந்நூல் ''யாழ்ப்பாண வைபவ கௌமுதி'' என்னும் நூலின் பிற்பகுதியாய் உள்ளது.) வளை தமிழ்ச் சொல்லன்று என்பதும் சிங்களச் சொல்லின் சிதைவே என்பதும் தெளிவாகும் எனக் கூறப்பட்டுள்ளது.

29. (அ) சற்குணம். எம்., ''மன்னார் மாவட்டத்தின் குளப் பெயர்கள்'', சமூகஜோதி, பக். 56, மன்னார் மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாச வெளியீடு, மன்னார் (1972).

(ஆ) புலியூரான், ''வன்னிநாட்டு இடப்பெயர் வரலாறு, குளங்களையும் மரங்களையும் தழுவியுள்ள பெயர்கள்'', தினகரன், 19—3—1960.

(இ) Bickmore C. W. and Freeman H. R., "Some Wanni Place Names" *Journal of the Royal Asiatic Society* (C. B.), p. 110, Vol. 4. (1918/1919).

30. குமாரசுவாமி ச., வடமாகாணத்துள்ள சில இடப்பெயர்களின் வரலாறு, பக். 54.

31. வையாபுரிப்பிள்ளை எஸ்., பேராசிரியர், தமிழ்ச்சுடர் மணிகள், பக். 122—126, பாரி நிலையம், சென்னை (மூன்றும் பதிப்பு மார்ச் 1959).

32. நடராசா எவ். எக்ஸ். சி., வித்துவான், ''மட்டக்களப்பு இடப் பெயர் வரலாறு'', தேசவளக் காட்சி மலர், மட்டக்களப்பு, பக். 2 (1970).

33. Canagaratnam S. O., *Monograph of Batticaloa District* p. 80.

34. அருட்பிரகாசம் ஜே. டயிள்யூ., (பதிப்பாசிரியர்), வையா பாடல், பக். 26, பாடல் 55. யாழ்ப்பாணம் (1921).

35. கணபதிப்பிள்ளை க., டாக்டர், ''ஓர் பழைய ஏட்டுப் பிரதி'', இலங்கை வித்தியா போதினி, பக். 141 (1953).

36. டானியல் ஜோன் எஸ்., யாழ்ப்பாணச் சரித்திரம் (பகுதி ஒன்று), பக். 8., தெல்லிப்பழை (மூன்றும் பதிப்பு 1929).

37. நடராசா எவ். எக்ஸ். சி., வித்துவான் (பதிப்பாசிரியர்), மட்டக்களப்பு மான்மியம், தாதன் கல்வெட்டு, பக். 81.

38. மேற்படி நூல், பக். 83.

39. பெரியதம்பிப்பிள்ளை ஏ., புலவர்மணி, ''ஈழத்து ஊர்ப் பெயர்கள் (கிழக்கிலங்கை)'', ஸ்ரீ லங்கா, பக். 9, அர சாங்க சமாசாரப் பகுதி வெளியீடு (ஜனவரி 1959).

40. விபுலாநந்தர் சுவாமி, ''வசந்தன்கவி'', லோகோபகாரி ஆண்டு மலர், பக். 49.

41. கந்தையா வி. சி., வித்துவான் பண்டிதர், மட்டக்களப்புத் தமிழகம், பக். 2.

42. நடராசா எவ். எக்ஸ். சி., வித்துவான் (பதிப்பாசிரியர்), மட்டக்களப்பு மான்மியம், பக். 6—7.

43. கந்தையா வி. சி., வித்துவான் பண்டிதர் (பதிப்பாசிரியர்), கண்ணகி வழக்குரை, பக். 42, பாடல் 151.

44. நடராசா எவ். எக்ஸ். சி., வித்துவான் (பதிப்பாசிரியர்), மட்டக்களப்பு மான்மியம், பக். 32.

45. துரை அரங்கசாமி மொ. அ., டாக்டர், சங்ககாலச் சிறப்புப் பெயர்கள், பக். 282, சாது அச்சுக்கூடம், மயிலாப்பூர், சென்னை (1960).

46. சேதுப்பிள்ளை ரா. பி., பேராசிரியர், தமிழகம் ஊரும் பேரும், பக். 44, அடிக்குறிப்பு.

47. நடராசா எவ். எக்ஸ். சீ., வித்துவான் (பதிப்பாசிரியர்), மட்டக்களப்பு மான்மியம், பக். 7—8.

48. பெரியதம்பிப்பிள்ளை ஏ., புலவர்மணி, "ஈழத்து ஊர்ப் பெயர்கள் (கிழக்கிலங்கை)", ஸ்ரீ லங்கா, பக். 10.

49. Canagaratnam S. O., *Monograph of Batticaloa District*, P. 34.

50. நடராசா எவ். எக்ஸ். சீ., வித்துவான் (பதிப்பாசிரியர்), மட்டக்களப்பு மான்மியம், பக். 25.

51. மேற்படி நூல் பக். 4—5.

52. மேற்படி நூல் பக். 5.

53. Kularatnam E., "Tamil Place Names in Ceylon outside the Northern and Eastern Province", *Proceedings of the First International Conference Seminar of Tamil Studies*, Vol, 1, P. 491, Kuala Lumpur, Malaysia (April 1966).

பண்டைய குரவைக்கூத்தும், மட்டக்களப்புக் குலவை போடுதலும்

இ. பாலசுந்தரம்

குரவை, குரவையாடல், குரவையாட்டம், குரவையார்தல், குரவை நாடகம், குரவைக் கூத்து என்னும் சொல்லாட்சிகளும் அவைபற்றிய செய்திகளும் பழந்தமிழ் இலக்கிய இலக்கண நூல்களிலும் உரை நூல்களிலுங் காணப்படுகின்றன. ஈழத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள மட்டக்களப்பு மாநிலத்திலே ''குலவை போடும்'' வழக்கும், அம்மரபுச் செயல்களும் பண்டுதொட்டு நிலவி வருகின்றன.[1] தமிழர்தம் பண்டைய குரவைக் கூத்திற் கும் மட்டக்களப்பு மாநிலத்தில் வழங்கும் குலவை போடுதலுக்கும் தொடர்புகள் காணப்படுகின்றன. குரவைக்கூத்தின் ''மிச்சசொச்சமாகவே'' மட்டக்களப்புக் குலவைபோடும் மரபு அமைந்துள்ளது. குலவை போடப்படும் விதத்திலும், குலவை இடப்பெறும் சந்தர்ப்பங்களின் தன்மையிலும் இவை இரண்டி னதும் தொடர்ச்சிநிலை வலியுறுத்தப்படுகின்றது. மட்டக்களப்பு மாநிலத்திற் குலவை போடும் மரபோடு தொடர்புடைய சம்பிரதாயங்களும் நம்பிக்கைகளும் நிறையக் காணப்படுகின் றன. இவைபற்றி ஆராய்ந்து அறிவதற்கு ஆதாரமாகப் பண்டைய குரவைக்கூத்துப்பற்றியறிதல் பொருத்தமானது.

1. குரவைக்கூத்து :

'தமிழ் நாட்டிற் சங்க காலத்திலும் அதற்குப் பின்னரும் நடைமுறையில் இருந்து வந்ததாகத் தெரிகின்ற பலவகையான கூத்துக்களிற் பயின்று வழங்கியது இக்கூத்து எனத் தெரிகிறது. சாந்தி, விநோதம் என்ற இருவகைக் கூத்துக்களில் இது விநோதக் கூத்தின் ஒரு பிரிவாகும்.[2] சமூக நிகழ்ச்சிகளிலும் சமயச் சடங்குகளிலும் குரவைக் கூத்து முக்கிய இடம் பெற்றமை யைச் சங்கச் செய்யுள்கள்,[3] தொல்காப்பியம்,[4] சிலப்பதிகாரம்,[5] புறப்பொருள் வெண்பாமாலை,[6] முதலியன குறிப்பிடுகின்றன.

இவை தரும் செய்திகளிலிருந்து பண்டைய குரவைக்கூத்து குரவைப்பாடலுடன் இணைந்த ஒருவகை ஆடலைக் குறிக்கின்றது என்பது தெளிவாகின்றது.[7] பண்டு ஆண்களும் பெண்களும் இணைந்து தேறல் மாந்தி, களிசிறந்து, குரவைப்பாடல் பாடி, தாளத்துக்கு அமைய ஆடி மகிழ்ந்துள்ளனர்.[8] 'குரவை இரு பாலாரும் விரவி ஆடுவதாதலின்' என்று அடியார்க்கு நல்லார் கூறுவதும் நோக்கற்பாலது.[9]

குரவைக்கூத்தில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து ஆடினர் களா, அல்லது பெண்கள் மட்டும் ஆடினர்களா என்பதுபற்றிச் சங்கச் செய்யுள்கள் திடமான கருத்துத் தருவதாக இல்லை. மேற்கூறப்பட்ட சான்றுகள் இருபாலாரும் இணைந்து குரவை பாடி ஆடியதையே வலியுறுத்துகின்றன. ஆயினும் பெண்கள் மட்டும், குரவையாடினர் என்பதற்கும் சில சான்றுகள் காணப் படுகின்றன.[10] நெய்தல்நில மகளிர் சேர்ந்து குரவைக்கூத்து ஆடியமையும், இடையர்குலப் பெண்கள் நோயும் பிணியுந் தீங்கு மகலத் திருமாலைப் போற்றி ஆடியமையும், குன்றக் குற மகளிர் கண்ணகியைப் பத்தினித் தெய்வமாகத் துதிசெய்து ஆடியமையும் பெண்களே குரவைக்கூத்திற் பங்குபற்றினர் என்ற கருத்தைத் தருகின்றன. தொகுத்து நோக்கின், சங்கச் செய்யுள் களின் மூலம் ஆண்களும் பெண்களும் குரவைக்கூத்தில் இடம் பெற்றனர் என்ற பரவலான செய்தியும், சிலப்பதிகாரத்தின் மூலம் குரவைக்கூத்து பெண்களுக்கே யுரியது என்ற கருத்தும் நன்கு வரையறுக்கப்படுகின்றன.

2. குரவைக்கூத்து இலக்கணம்:

சிலப்பதிகாரத்திலே அரங்கேற்றுகாதையிற் கூத்தியல் இலக்கணங்கள் விரிவாகக் கூறப்படுகின்றன. அடியார்க்கு நல்லார் கூறும் உரை அவற்றுக்கு மேலும் விளக்கமாக அமை கிறது. இவர் குரவைக்கூத்தை விநோதக் கூத்துக்களில் ஒன் ருகக் கருதுகின்ருர். விநோதக் கூத்தாவது: குரவை, கலிநடம், குடக்கூத்து, கரணம், நோக்கு, தோற்பாவை என்பனவாகும்.[11] விநோதக் கூத்திலடங்கும் 'குரவை என்றது: காமமும் வென்றி யும் பொருளாகக் குரவைச் செய்யுள் பாட்டாக எழுவரேனும் எண்மரேனும், ஒன்பதின்மரேனும் கைபிணைந்தாடுவது' என விளக்கந்தரப்பட்டுள்ளது.[12] அடியார்க்கு நல்லார் குரவைபற்றி விளக்குவது ஈண்டு நோக்கற்பாலது:

'குரவை யென்பது கூறுங் காலைச்
செய்தோர் செய்த காமமும் விறலும்
எய்த வுரைக்கு மியல்பிற் றென்ப'' —எனவும்,

"குரவை யென்ப தெழுவர் மங்கையர்
செந்நிலை மண்டலக் கடகக் கைகோத்
தந்நிலைக் கொப்பநின் றாட லாகும்" —எனவுஞ் சொன்னு
ராகலின்.[13]

2:1. திவாகர நிகண்டு, "குரவைக்கூத்தே கைகோத் தாடல்" எனக் கூறுகிறது.[14] தாள அமைதியுடன் கைகோத்துத் தழுவி ஆடுதல் என்ற பொருளில் மதுரைக் காஞ்சியில் வரும் "தழூஉ" என்பதைக் குரவைக் கூத்தென்கிருர் நச்சினுர்க்கினியர்.[15] தழுவிக் குலவைபோடும் மரபு மட்டக்களப்பிலும் காணப்படுவது நோக்கற் பாலதாகும்.[16]

2:2. தொல்காப்பியத்திற் கூறப்படும் முன்தேர்க்குரவை, பின்தேர்க்குரவை[17] என்பன துணங்கைக் கூத்துடன் தொடர்புடையனவாகக் கூறப்படுகின்றன.[18] குரவைக்கூத்தின் இவ்விரு நிலைகளுடைய தொடர்ச்சி, மட்டக்களப்புக் குலவைபோடும் நிகழ்ச்சிகளில் வேறுபட்ட சூழ்நிலைகளிற் காணப்படுவது, கவனிக்கத் தக்கதாகும்.[19]

3. மட்டக்களப்பிலே "குலவைபோடும்" மரபு:

மட்டக்களப்பு மாநிலத்திலே "குலவை" இடம்பெருத மங்கல நிகழ்ச்சிகளையோ அல்லது திருவிழாக்களையோ காண்பதரிது. அப்பிரதேச மக்களது சமூக நிகழ்ச்சிகளிலும் சமயச் சடங்குகளிலும் சம்பிரதாயங்களிலும் குலவை போடுதலுக்கு மிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. "குரவைக்கூத்துப்" பற்றிய செய்திகள் இலக்கியங்களிற் காணப்பட, மட்டக்களப்பிற் "குலவைபோடுதல்" நிகழ்ச்சிகளே இடம்பெறுகின்றன. இவற்றுக்குள்ள வேறுபாடுகள் கவனிக்கத்தக்கன.

3:1. பண்டைய குரவைக்கூத்தில் ஆண்களும் பெண்களும் சேர்ந்தோ அல்லது தனித்தோ குரவைபாடி ஆடி மகிழ்ந்த செய்திகள் காணப்படுகின்றன. ஆனுல் மட்டக்களப்புக் குலவை போடும் மரபிற் பாடலோ அல்லது ஆடலோ இடம்பெறுவதில்லை. குலவைபோடும் நிகழ்ச்சியில் ஒருவகையான குரலோசை எழுப்பப்படுகின்றது. அவ்வோசை அமைதியிலேயே குலவையின் சிறப்புக் காணப்படுகிறது. காலமாறுபாட்டினுற் குரவைக் கூத்தின் தேவைகளும் பயன்பாடுகளும் குறைந்துபோக, குரவைப் பாடல்களும் குரவைக்கூத்து முறைகளும் மறந்து, மறைந்து போயிருக்கலாம். ஆனுல் அப்பாடலின் "இசைவடிவம்" மாத்திரம் குலவை ஓசையாக மிஞ்சியுள்ளது.

3:2. இப்பிரதேச மக்கள் குலவைபோடும்போது எழுப்பப் படும் குரலோசையைப் பலமுறை பல்வேறு சந்தர்ப்பங்களில் அவதானித்துக் கேட்டபோது, அது பாடலின் பின் ஓசையைப் போன்று ஒலிக்கின்றது. இவர்களது குலவை ஒலி ஒரேவிதமான ஓசையும் ஓசை அமைதியில் ஏற்றஇறக்கம் பெற்று, வேகமுடைய தாகவும், உணர்ச்சியூட்டக் கூடியதாகவும், ஒத்திசையும் ஒலி நயமும் உடையதாகவும் காணப்படுகிறது. இக் ''குரலோசை'' பண்டைய குரவைப்பாடலின் பின்னணி இழுவலோசையாக (Chorus) இருந்திருக்கலாமா என ஊகிக்கக்கூடியதாக இருக்கின்றது. குறிப்பிட்ட ஒரு பாடல் நன்கு பயிற்சியிலிருந்து பின் மறந்துவிட்டால் அப் பாடலை இழுவலோசையாக இசைத்து ஒருவாறு அப்பாடலைப் பூர்த்திசெய்து இன்பமடைவதை யாவரும் அனுபவத்தில் அறிவர். அதுபோன்றே, வழக்கில் இருந்துவந்த பண்டைய குரவைப்பாடலும் ஆடலும் காலவெள்ளத்தில் அள்ளுண்டுபோக, அவற்றின் நினைவாக வெறும் ஒலியமைப்பும் தாள அமைதியும் கொண்டதாக அமைந்துள்ளது இப்பிரதேச மக்களின் குலவை.

3:3. இக் குலவை ஓசையில், ஆட்டத்திற்கு ஏற்றவாறு அசைவும், ஏற்ற இறக்கமும் காணப்படுகின்றன. இசை ஆய் வாளர்கள் இதில் ஆராய்ச்சி மேற்கொண்டால், பண்டைய குரவைப்பாடலின் இசைமரபை ஒருவாறு நிறுவலாம்.

4. குலவைபோடும் விதம்:

4:1. குலவைபோடுவோர் எண்ணிக்கை:

பண்டு 'எழுவர் மங்கையர் செந்நிலை மண்டிலக் கடகக் கைகோத்து'க் குரவைபாடி ஆடினர்.[20] ஆனால் குலவைபோடும் நிகழ்ச்சியில் அத்தகைய எண்ணிக்கை சரியான முறையிற் கடைப்பிடிக்கப்படுவதில்லை. இதற்குப் பல காரணங்களும் சந்தர்ப்பங்களும் ஏதுவாக அமைகின்றன. திருவிழாக்காலம், சூரன்போர், சுவாமி திருப்பவனி ஆகிய சந்தர்ப்பங்களிற் பெருந் தொகையான பெண்கள் கலந்துகொள்வது வழக்கம்.

இச் சந்தர்ப்பங்களில் அங்கு கூடிய பெண்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து ஒருமித்த குரலிலே . குலவை போடுவர். பத்திமேலிட, பத்திப்பிரவாகத்தினாலே தங்களை மறந்த நிலையிற் குலவைபோடும்போது எண்ணிக்கையைக் கவனிக்க முடியாது. எனவே சமய சம்பந்தமான வைபவங்களிற் குலவைபோடும் போது எண்ணிக்கை கவனிக்கப்படுவதில்லை.

4:1:1. ஆயினும் இதற்கு விதிவிலக்குகளும் சில சந்தர்ப்பங்களிற் காணப்படுகின்றன. சிறப்பாக முருகன் கோயில்களிலே "திருக்கலியாண உற்சவம்" நடைபெறும்போது, அங்கே கூடியுள்ள பெண்கள் "வள்ளியம்மன்", "தெய்வானையம்மன்" பக்கத்தினர் என இரு கோஷ்டியாகப் பிரிந்துகொண்டு மாறி மாறிக் குலவைபோடுவர்.[21]

4:1:2. சமூகசம்பந்தமான நிகழ்ச்சிகளில் எண்ணிக்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. பெண் பக்குவமடைந்த வீடு, கலியாணவீடு ஆகிய சந்தர்ப்பங்களிற் குலவைபோடும் போது, மச்சாள் முறையினர் யாவரும் 5, 7, 9 என்ற எண்ணிக்கையினராகச் சேர்ந்துகொண்டு குலவைபோடும் வழக்கம் காணப்படுகிறது. இது பண்டைய குரவைக்கூத்தில் எழுவர் மங்கையர் குரவையாடியதை நினைவூட்டி, அதன் தொடர்ச்சியைக் காட்டுகின்றது.

4:2. குலவைபோடும் விதம்:

குலவைபோடத் தொடங்கும் முன்னர் பெண்கள் தமது வலக்கையை உயர்த்தித் தம் மேல் உதட்டிற்கும் மூக்கிற்கும் இடையில் வலது உள்ளங்கையை வளைத்துப் பிடித்துக்கொள்வர். இடது கையை மடித்து, வயிற்றோடு அணைவாக வைத்து, மேலே உயர்ந்து நிற்கும் வலது கையின் முழங்கையைத் தாங்கிக் கொள்வர். சில வேளைகளில் இடது கையாற் பக்கத்தே நிற்கும் பெண்ணின் தோளையோ அல்லது கரத்தினையோ பற்றிக்கொள்வதுமுண்டு. வாயிதழ்கள் இரண்டையும் குவித்து, நா விளிம்புகளை மேல்நோக்கி வளைத்து, நாநுனியால் நுனி அண்ணத்தையும் குவிந்திருக்கும் இதழ்களின் உட்புறத்தையும் வாயின் உள்ளிருந்து வரும் காற்றின் வேகத்தோடு இணைய வருடும்போது ஒரு வகையான குரல்ஒலி (வருடொலி) தோன்றுகின்றது. இவ்வோசையே "குலவை" எனக் கூறப்படுகின்றது.[22]

4:2:1. குலவை போடும்போது உள்ளங்கையை வாயின் மேற்பக்கமாக வளைத்துப் பிடிப்பதற்குச் சில காரணங்கள் காணப்படுகின்றன:

(அ) வாயின் மேற்பக்கமாக உள்ளங்கையை வளைத்துப் பிடிக்கும்போது குலவை ஒலி இயற்கையாக வெளி வருவதைவிட, மேலும் எதிரொலித்து (Echo) உரத்து ஒலிக்கும் என்ற நம்பிக்கை.

(ஆ) அவ்வாறு கையைப் பிடித்தல் குலவை போடுவதற்கு ஆயத்தம் என்பதற்கு அடையாளமாக (Symbol) அமைகிறது.


(இ) வாயை அசைத்துக் குலவை போடும்போது ஏற்படும் அங்க அசைவுகளையும், விகாரத்தையும் மற்றவர்கள் பார்க்காதிருக்கச் செய்தல்.

4 : 2 : 2. குலவைபோடும்போது தம் இடது கையாற் பக்கத்தே நிற்பவரின் தோளேயோ அல்லது கையையோ பற்றிக் கொள்வதற்கும் காரணங்கள் உள. தாம் நெருங்கிய உறவினர் என்பதையும், தாம் ஒரு கோஷ்டியினர் என்பதையும், குலவை போட்டு முடியும்வரை பிரியாதிருக்க வேண்டும் என்பதையும் இச் செயல் குறிக்கின்றது.

5. குலவை ஓசை அமைப்பு:


பெண்களது குலவை ஓசையில் ஒருவகையான இழுவல் ஓசை அமைந்து காணப்படுகின்றது. இதனைப் பின்வருமாறு கோடிட்டுக் காட்டலாம்:

(அ) தமிழ்ப் பெண்களின் குலவை ஓசையமைதி:



மேலே காட்டப்பட்டுள்ள குலவை ஓசை அமைதியினை நோக்கும்போது, இது பாடலின் ஓசை ஒழுங்கினை எடுத்துக் காட்டுவதாகக் காணப்படுகிறது. பண்டைய குரவைப் பாடலும் இவ்வகையான ஓசை ஒழுங்கில் இருந்திருக்கலாமோ என ஊகிக்க இடமேற்படுகிறது. இளங்கோவடிகள், சிலப்பதிகாரம்— ஆய்ச்சியர் குரவையிலே, ''கூத்துள்படுதல்'' என்ற பகுதியில் தந்துள்ள பண்ணமைதியைக் குரவைப்பாடல் பண்ணமைதியாகக் கொள்ளலாமா என்பது இசை ஆய்வாளர் ஆராய்ந்து நிறுவவேண்டிய ஒரு விடயமாகும்.

(ஆ) இஸ்லாமியப் பெண்களின் குலவை ஓசையமைதி:



இவ்வரைப்படம் இஸ்லாமியப் பெண்களின் குலவை ஓசையை வரைகோடிட்டுக் காட்டுகின்றது. இவர்களது குலவை ஒலிக்கும் தமிழ்ப் பெண்களின் குலவை ஒலிக்கும் ஓசை அமைதியில் வேறுபாடுகள் காணப்படுவதைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் அவதானித்துள்ளேன். தமிழ்க் குலவையில் இழுபட்டுச் செல்லும் இனிய மெல்லோசை அமைந்துள்ளது. ஆனல் இஸ்லாமியப் பெண்களின் குலவை ஓசையானது, திடீர் வேகத்தில் உச்சநிலையடைந்து, அதே வேகத்திற் கீழிறங்குந் தன்மையும், அதி உன்னத தொனியும் உடையதாகக் காணப்படுகிறது.

6. குலவை பெண்களுக்கே உரிய சொத்து:

சங்கச் செய்யுள்கள், சிலப்பதிகாரம் என்பன குரவைக் கூத்திற் பெரும்பாலும் பெண்களே முக்கியத்துவம் பெறுவதைக் குறிப்பிடுகின்றன. ஆண்களும் பெண்களும் சேர்ந்தாடிய குரவைக்கூத்து, பெண்களின் சொத்தாக மாறுவதைச் சிலப்பதிகாரத்திற் காண்கின்ரேம். மட்டக்களப்பிலே பெண்களின் சொத்தாக மாறுவதைக் காண்கின்ரேம். மட்டக்களப்பிலே பெண்களின் சொத்தாகக் குலவைபோடும் மரபு கருதப்படுவது, பண்டைய மக்களின் சமுதாயப் பழக்கவழக்கங்களின் தொடர்ச்சி நிலையைக் காட்டுகின்றது.

பண்டைத் தமிழ்ப் பெண்கள் தமக்கு இன்னல் இடையூறுகள், நோய் நொடிகள், துர்ச்சகுனங்கள் ஏற்பட்டபோது, தம் வழிபடு தெய்வங்களை முன்னிறுத்திக் குரவையாடி, தெய்வ அருள் பெற்றுள்ளனர். இடையர்குலப் பெண்கள் ஆயர்சேரியில் துர்ச்சகுனங் கண்டபோது, பயந்து திருமாலைப் போற்றிக் குரவைக் கூத்தாடினர்.

மகிழ்ச்சி, அற்புதம் என்பவற்றை வெளிக்காட்டவும், பொழுதுபோக்கு அடிப்படையிலும் பண்டைய பெண்கள் குரவை ஆடியுள்ளனர். கண்ணகி வேங்கைமர நிழலிலே கற்புக் கடம் பூண்ட பொற்புடைத் தெய்வமாக வந்து நின்ற காட்சி யையும், பின் கண்ணகி கோவலனுடன் தேவலோகம் சென்ற காட்சியையும் கண்ணுற்ற குன்றக் குற மகளிர் அற்புத மேலீட்டி ஞற் குரவை ஆடலாயினர். கோவலனும் கண்ணகியும் மதுரைக்குக் காட்டுவழியே வரும்போது, களைப்படைந்து ஓர் ஐயனர் கோட்டத்திலே தங்க, அப்போது, வேட்டுவ மகளிர் வரிக்கூத்தாடி அவர்களை மகிழ்வித்தனர். அந்த வரிக்கூத்திற் குரவையும் இடம்பெறலாயிற்று.[23] கண்ணகிக்கு முன்னர், அன்று வேட்டுவ மகளிர் குரவை ஆடியதைப் போன்றே, அதன் தொடர்பாக இன்றும் மட்டக்களப்பில் கண்ணகை அம்மன் கோயில் உற்சவகாலங்களிற் பெண்கள் குலவை போடுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாருகப் பல்வேறு சந்தர்ப்பங்களிலே பண்டைய மகளிர் குரவைக் கூத்தாடி மகிழ்ந்தது போன்றே மட்டக்களப்புப் பெண்களும் குலவை போட்டு மகிழ்கின்றனர். எனவே, இப் பெண்கள் பழைய பண்பாட்டைப் பேணுபவர்களாக, குலவைக்கு உரிமையுடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

6 : 1. ஆண்களும் குலவை போடுகின்றனர்:

சில சந்தர்ப்பங்களில் ஆண்களும் இங்கு குலவை போடு கின்றனர். போட்டி அடிப்படையிலும் கேலிசெய்யும் மனே பாவத்திலும் இது நிகழ்கிறது. கோயில் தேர்கள் பவனிகொண்டு வரப்படுங் காலங்களிற் பெண்கள் குலவை போட்ட வண்ணம் தொடர்ந்து வந்துகொண்டிருப்பர். இக்குலவை ஒலி தேர் சுமக்கும் ஆண்களுக்கு உற்சாகமூட்டுவதாக அமைகிறது. பெண்கள் களைப்படைந்து குலவை போடுவதை நிறுத்திக் கொண்டால் ஆண்கள் குலவை போடத் தொடங்கிவிடுவர். அதன்மூலம் பெண்கள் வெட்கமடைந்து, உற்சாகத்தோடு குலவைபோட்டு ஆண்களின் குலவையை அடக்கிவிடுவர்.

கண்ணகை அம்மன் கொம்புத்தட்டு ஊர்வலமாகக் கொண்டு வரும்போது அதிகமானேர் ஆண்களே பங்குபற்றுகின்றனர். அப்போது ஆண்கள் போட்டி அடிப்படையிலும் குதூகல மனே நிலையிலும் குலவைபோடுகின்றனர். ஆயினும் இவர்களது குலவை, பெண்களது இனிமையான மென்மையான குலவை ஓசையைப் போன்று இருக்கமாட்டாது. ஆண்களும் பெண்களும்

பண்டு குரவைக்கூத்தாடினர் என்பதை மட்டக்களப்பில் இரு பாலாரும் குலவை போடுகின்றனர் என்ற செய்தி தொடர்பு படுத்திக் காட்டுகிறது.

7. சமூக நிகழ்ச்சிகளிற் குலவை போடுதல்:

7:1. பெண் பூப்பெய்தல்:[24]

பெண் பூப்பெய்திய அறிகுறி கண்டதும் அயற் பெண்கள் எல்லோருஞ் சேர்ந்து முதலிற் குலவைபோடுவர்.[25] தூரத்தே யுள்ளவர்கள் அக்குலவை ஓசையைக் கேட்டதும் அதற்குரிய காரணத்தை வினவி அறிந்துகொள்வர். காலையிலே குலவை போடுவார்களாயின் எதுவித ஐயமுமின்றி ''யாரோ பக்குவப் பட்டிருக்க வேண்டும்'' எனக் கூறிக்கொள்வர்.[25] அவ் வீட் டிற்கு உறவினர்கள் வந்து சேர்ந்ததும் குலவை தொடர்ந்து போடப்படும். குறிப்பிட்ட வீட்டின் தெருவுக்குப் பெண்கள் வந்ததும் தெருச்சந்தியிலே வெடி கொளுத்திக் குலவை போடத் தொடங்குவர். அதற்குப் பதிலாகப் பெண் வீட்டாரும் வெடி கொளுத்திக் குலவை போடுவர். சாமத்திய வீட்டிற்குப் பெண்கள் ''தத்திதத்தியாக'' (கோஷ்டியாக) வரும்போதெல் லாம் வெடிச்சத்தமும் குலவை ஒலியும் கேட்டவண்ணமாகவே இருக்கும்.

7:1:1. பூப்படைந்த பெண்ணுக்கு அன்று மாலை சுமார் ஆறுமணியளவிற் குளிப்பாட்டுவர். இதனைத் ''தண்ணீர் வார்த்தல்'' என்பர். இவ் வைபவத்திற் பெண்களே கலந்து கொள்வதோடு, அங்கு பெண்ணாதிக்கமே மேலோங்கிக் காணப் படும். தண்ணீர் வார்க்கும்போது வரவேண்டிய உறவுமுறைப் பெண்கள் யாவரும் வந்து சேர்ந்திட வேண்டும். அல்லது அது பெரிய குறையாக வந்துவிடும்.[26] தண்ணீர் வார்க்கும்போது குதூகலமாகவும் தொடர்ச்சியாகவும் குலவை போடப்படுகிறது. குலவை போடுதலின் அதி உச்சக்கட்டத்தை இச் சந்தர்ப்பத்திற் பல தடவைகளில் அவதானிக்கலாம். இதற்குக் காரணம் இவ் வைபவம் குதூகலமாகவும் பெண்களால் நடாத்தப்படுவது மாகும். பெண்ணுக்குத் தண்ணீர் வார்த்தபின், தூய ஆடை அணிந்து, ஆலாத்தி எடுப்பர். அப்போதும் குலவை போடப் படும்.

7:1:2. இத்தகைய வைபவங்களில் அங்கு வந்து கூடிய பெண்கள் யாவரும் 5, 7, 9 என்ற எண்ணிக்கையுடையோ ராகச் சேர்ந்து, வட்டமாக நின்று கோஷ்டி கோஷ்டியாகக்

குலவை போடுவர். ஒரு கோஷ்டியினரோ அல்லது தனி நபரோ களைத்துவிட்டால் அல்லது திறமையற்றுக் காணப்பட்டால் ஏனையோரால் கேலிக்கு ஆளாவர். கோஷ்டிகளிடையே கேலிச் சண்டைகளும் (Mockery Fight) வாக்குவாதங்களும் ஏற்படுவது முண்டு. இதன் மூலம் தொடர்ச்சியாகவும், எடுப்பாகவும், குதூகலமாகவும் குலவைபோடும் நிகழ்ச்சி அமைந்து காணப் படுகின்றது.

7 : 1 : 3. குலவையும் வெடியும் :

'சீனவெடி' கொளுத்துதல் சகல சமூக மங்கல, அமங்கல நிகழ்ச்சிகளிலும், சமயச் சடங்குகளிலும் இடம்பெறுதல் சர்வ சாதாரணமாக இங்கு காணப்படுகிறது. வெடிச் சத்தத்திற்கும் குலவை ஒலிக்கும் மிக நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. குலவைபோடத் தொடங்க முன்னர் ''வெடியைக் கொளுத் துங்க'' என்று கூறிவிட்டுக் குலவை போடுவதற்குத் தாம் ஆயத் தமாக இருப்பர். வெடிச்சத்தம் கேட்டதும் குலவை போடத் தொடங்குவர். குலவை போடத் தொடங்கமுன்னர் வெடி கொளுத்துவதற்குச் சில காரணங்கள் கூறப்படுகின்றன.[27]

(அ) வெடிச்சத்தம் குலவை போடுவோருக்கு உற்சாகத் தையும் களிப்பையும் குதூகலத்தையுங் கொடுத்து அவர்களைக் குலவைபோடத் தூண்டுகிறது.

(ஆ) வெட்கம் கூச்சம் ஆகிய உணர்வுகளை வெடி ஒலியி னால் மறந்து குலவை போட உதவுகிறது.

(இ) ஆரம்ப நிலையில் முந்திப்பிந்தித் தோன்றும் குரல் ஒலிகளை மறைத்து, ஒருமித்த குரல் ஒலி எழுப்புவ தற்கு வெடிச்சத்தம் உதவியாக அமைகிறது.

(ஈ) வெடிச்சத்தம் அவர்களுக்குப் பக்க ஓசையாகக் காணப் படுகிறது.

7 : 2. சமைந்த வீட்டிற்குப் பிட்டுக் கொண்டுபோதல் :

பெண் சமைந்த வீட்டிற்குப் பிட்டுக் கொண்டு போதல் இப் பகுதியிற் குதூகல நிகழ்ச்சியாக நடைபெறுகின்றது. அவ் வீட்டாரின் உறவுமுறைப் பெண்கள் யாவரும் கோஷ்டி கோஷ்டி யாகச் சேர்ந்து பிட்டு அவித்துக்கொண்டு, மேளவாத்தியம் ஒலிக்கக் குலவை போட்டவண்ணம் செல்லுவது வழக்கமாகும். இவர்களை வரவேற்க அவ் வீட்டிலும் பெண்கள் காத்திருப்பர். பிட்டுக்கொண்டு வருவோர் தம் குலவை ஒலி குறிப்பிட்ட

விட்டாருக்குக் கேட்கும் தூரத்துத் தெருவில் நின்று குலவை போடவேண்டும். அதற்குப் பதிற் குலவை அவ் வீட்டார் போட்டால்தான் அவர்கள் தொடர்ந்து அவ்வீட்டை நோக்கி முன்னேறுவர். அல்லாவிடின் பதிற் குலவை கேட்கும்வரையும் அந்த இடத்திலேயே நின்று மீண்டும் மீண்டும் வெடி கொளுத்திக் குலவை போடுவர். இதற்குக் காரணம் என்னவெனில், பதிற் குலவை போட்டால்தான் தங்களை வரவேற்று உபசரிக்கத் தயாராக இருக்கிறார்கள் என்பது பொருளாகும். அவர்கள் விட்டுக்கு வந்ததும் இரு கோஷ்டியினரும் மாறி மாறிக் குலவை போடுவர். பின்னர் புறப்பட்டுச் செல்லும்போதும் வெடி கொளுத்திக் குலவைபோட்டுச் செல்வர். இவற்றை நேரிற் பார்க்கும்போது இம்மக்களின் குதூகலமான சமுதாயக் கோட்பாடுகளினதும் வழக்கங்களினதும் மகிமை புலப்படும்.

7:3. பூப்பு நீராட்டு விழா:

இதனைச் சாமத்தியக் கலியாணம் என இவர்கள் கூறுவர், குறிப்பிட்ட சுபநேரத்தில் அப் பெண்ணுக்குக் குளிப்பாட்டும் போதும் பெண்கள் குலவை போடுகின்றனர். பொதுவாக நீராட்டும் நிகழ்ச்சிகள் நடைபெறும்போது குலவை போடப் படுவது நோக்கற்பாலதாகும்.[28]

7:3:1. இஸ்லாமியர் குலவை:

மங்கல நிகழ்ச்சிகளிற் குலவைபோட வேண்டும் என்ற கருத்து இஸ்லாமியப் பெண்களிடமுங் காணப்படுகிறது. தமிழ்ப் பெண் பக்குவம் அடைந்த வீட்டிற் பல்வேறு சந்தர்ப்பங்களிற் குலவை போடப்படுவதுபோல், இஸ்லாமியர் வீட்டிற் குலவை போடப்படுவதில்லை. அவர்களது மரபுப்படி, பெண் பக்குவமடைந்து ஏழாம்நாள் தண்ணீர் வார்க்கும்போது மட்டுமே அவர்கள் குலவை போடுகின்றனர்.

7:4. மாப்பிள்ளையை அழைத்து வருதல்:

மணமகனை, உற்றார் உறவினர் புடைசூழ, குதூகலமாக அழைத்து வருவர். அதில் ஆண்களும் பெண்களும் கலந்து கொள்வர். பெண்கள் கலந்துகொள்ளும் வைபவம் மங்கலமாகவும் குதூகலமாகவும் அமைந்துவிட்டால் அவர்களிடையே குலவை தானாகவே பிறந்துவிடுகிறது. வெடி கொளுத்தி மேளதாளங்களுடன் செல்லும்போது குலவையும் சேர்ந்தொலிப்பதைக் கவனிக்கலாம். மாப்பிள்ளையை அழைத்துச் செல்லும்

போது, சந்திக்குச் சந்தி வெடிச்சத்தமும் குலவையும் ஒலிக்கும். பெண்வீடு அண்மித்ததும் குலவைச் சத்தமும் வேகமாக ஒலித்துக் கொண்டிருக்கும். இவர்கள் பெண் வீட்டை அடைந்ததும் இரு கோஷ்டியினரும் மாறி மாறிக் குலவை போடுவர். அச் சந்தர்ப்பத்தில் மாப்பிள்ளைக் கோஷ்டியினரும் பெண் கோஷ்டியினரும் போட்டிக்குக் குலவை போடுவர். இதனை ''குலவைப் போட்டி'' அல்லது ''வாதுக் குலவை'' என்பர். இந் நிகழ்ச்சியை நேரிற் காண்போர் அதன் ஒலியமைதியிலும், வேடிக்கையிலும் உள்ளத்தைப் பறிகொடாதிரார். குலவையின் உச்ச ஒலியை பக்குவமடைந்த பெண்ணுக்கு நீராட்டும்போதும், இச் சந்தர்ப்பத்திலும் கேட்கலாம்.

7:4:1. ஆலாத்தி எடுத்தல்:

ஆலாத்தி எடுக்கும் சகல சந்தர்ப்பங்களிலும் குலவை போடும் வழக்கம் பின்பற்றப்படுகிறது. மாப்பிள்ளைக்கு விதம் விதமான ஆலாத்தி எடுப்பர். அப்போது இரு கோஷ்டியினரும் மாறிமாறிக் குலவை போடுவர். இக் குலவை சுமார் பத்து நிமிட நேரமட்டில் ஒலித்துக்கொண்டிருக்கும். தூரத்தே உள்ளவர்கள் இக் குலவையைக் கேட்டு, ''மாப்பிள்ளை போய்ச் சேர்ந்துவிட்டார், ஆலாத்தி எடுக்கிறார்கள். அதுதான் குலவை இப்படித் தொடர்ந்து கேட்கிறது'' என்று கூறிக்கொள்வர். ஆலாத்தி எடுக்கும்போது மாப்பிள்ளையைச் சூழ்ந்து நிற்போர் அனைவரும் பெண்களாதலாலும், அப்போது அவர்களது உள்ளத்திற் களிமகிழ்வே பொங்குமாதலாலும் உற்சாகமுங் குதூகலமும் அவர்களைச் சேர, இடையருத வண்ணம் குலவை போடுகின்றனர்.

7:4:2. இஸ்லாமியக் குலவை:

மாப்பிள்ளையை அழைத்துக்கொண்டு வரும்போது, இஸ்லாமியப் பெண்களும் குலவை போடுகின்றனர். பெண் வீட்டிற்கு அருகேயுள்ள சந்தியில் வந்துநின்று குலவை போடுவர். அச் சந்தியைக் ''குலவைச் சந்தி'' எனக் கூறுவர். அவர்களது குலவையைக் கேட்டுப் பெண்வீட்டார் பதிற்குலவை போட வேண்டும். இது இவர்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்கப் பயன்படுகிறது. பெண்வீட்டார் குலவைச் சந்திக்குச் சென்று, குலவை போட்டு மாப்பிள்ளைக் கோஷ்டியினரை அழைத்துவர வேண்டும். அக் குலவையைச் ''சம்பந்திக் குலவை'' என்பர். பின்னர் இரு கோஷ்டிப் பெண்களும் குலவை

போட்ட வண்ணம் வீட்டுக்கு வருவர். வீட்டுக் கடவல் மட்டுமே குலவை போடப்படும். பின்னர் குலவை போடப்படுவதில்லை.

7 : 5. தாலிகட்டுதல் :

தாலிகட்டும் சுபநேரத்திலும் தமிழ்ப் பெண்கள் குலவை போடுகின்றனர். மங்கள நோக்குடன் மட்டுமல்லாது, தாலி கட்டும் வேளையிலே தும்மல், பல்லிச் சத்தம், அழுகை முதலிய துர்ச்சகுன ஒலிகள் கேட்காமல் இருப்பதற்கும் குலவை பயன் படுகிறது.[28அ]

7 : 6. கால்மாறிப் போதல் :

திருமணம் நடந்து, மூன்றும் அல்லது ஏழாம் நாள் புது மணத் தம்பதிகள் மணமகனின் வீட்டுக்கு முதன்முதலாகச் செல்வதைக் ''கால்மாறிப் போதல்'' என்பர். இவர்களை வரவேற்கக் காத்திருக்கும் பெண்கள் ஆலாத்தி எடுத்துக் குலவைபோட்டு வரவேற்பர்.

7 : 7. சந்தனக்கிண்ணி கொண்டுபோதல் :

திருமணம் நடந்து, மூன்று அல்லது ஏழு நாட்கள்வரை மணமகன்வீட்டுப் பெண்கள், தம்பதிகளின் வீட்டுக்குப் பின் னேரங்களில் சந்தனம் கரைத்துக் கொண்டு வருவர். அங்கு வந்து சேர்ந்ததும் அவர்கள் குலவை போடுகின்றனர். தாம் கொண்டுவந்த சந்தனத்தை எடுத்து மணமகளுக்குப் பூசுவர்.[29] முறைப்படி புதுத்தம்பதிகள் கால்மாறிச் செல்லும் நாளில் மணமகளுக்குக் குளிப்பாட்டும்போதும் குலவைபோடும் வழக்கம் இஸ்லாமியரிடையே காணப்படுகிறது. உறவினர் வீடுகளுக்குக் கால்மாறிச் சென்று விருந்துண்டு திரும்பும்போதும் குலவை போட்டு வழியனுப்பி வைக்கும் மரபும் இவர்களிடம் மட்டுமே காணப்படுகிறது.

7 : 8. ''சுன்னத்துக் கலியாணம்'' :

சுன்னத்துக் கலியாணம் இஸ்லாமியரது சமய சம்பிரதாயங் களில் இடம்பெறும் ஒரு சடங்காகும். இந் நிகழ்ச்சியின்போதும் பெண்கள் குலவைபோட்டு மகிழ்கின்றனர். சுன்னத்து நடை பெற்றவரை மாட்டுவண்டியிலோ அல்லது மோட்டார் வண்டி யிலோ ஊர்வலமாகக் கொண்டுவரும்போதும் பெண்கள் குலவை போடுகின்றனர்.

8. மரணவீட்டிலும் குலவை:

மட்டக்களப்பு மாவட்டத்திலே மங்கல நிகழ்ச்சிகளில் மட்டுமின்றி அமங்கல நிகழ்ச்சிகளிலும் குலவை இடம்பெறுவது கவனிக்கத் தக்கதாகும். இறந்தவரின் பூதவுடலை மயானத்துக்கு எடுத்துச் செல்ல முன்னர், அதற்கு நீராட்டி, நல்லாடை அணிவித்து, திலகமிட்டு, புதுமணக்கோலம் புனைவர். இச்சந்தர்ப்பத்தில் ஒப்பாரி செய்துகொண்டிருந்த பெண்கள் யாவரும் அழுகையை நிறுத்திவிட்டு ஓரிரு நிமிடம் குலவை போடுவதைத் தமிழ் வீடுகளிலே கவனிக்கலாம்.[30] பிரேதத்திற்கு நீராட்டத் தொடங்கும்போது அவ் வீட்டிற்குத் தலைவன் அல்லது ''மூத்த மனிதர்'' ஒருவர் உரத்த குரலில் ''இனி ஒருவரும் அழக்கூடாது, எல்லோரும் குலவைபோட வேண்டும்'' எனப் பெண்களிடம் கூற, பெண்கள் ஒப்பாரியை ஒருவாறு அடக்கிக்கொண்டு, கண்ணீரும் கம்பலையுமாக விக்கி விக்கிக் குலவை போடுவர். எனினும் இறந்தவரின் மனைவியோ, தாயோ அல்லது சகோதரியோ குலவை போடுவர் எனக் கூறமுடியாது. இவர்களால் அப்போதைய நிலையிற் குரல் எடுத்துக் குலவை போட நாதம் வராது; உணர்வு செயற்படாது. எனவே, அங்கு வந்திருக்கும் ஏனையோரே குலவை போடுவர். இச் சந்தர்ப்பத்திற் குலவைபோடப்படுவதற்குரிய காரணம்:

(அ) பூதவுடல் மயானத்திற்கு எடுத்துச் செல்வதற்குச் சிறிது நேரத்திற்கு முன்னர்தான் அதனை நீராட்டுவது வழக்கம். எனவே பெரும் ஏக்கத்திலும் பதற்றத்திலும் உணர்விழந்து, செயலற்று ஏங்கித் துடிக்கும் இறந்தவரின் மிக நெருங்கிய இரத்த உறவினருக்கு, அப் பூதவுடல்கூட, இன்னுஞ் சிறிது நேரத்தில் வீட்டிலிருந்து போகப்போகிறதே என்ற ஏக்கம் வந்துவிட்டால் அவர்களது நிலை இன்னும் அபாயகரமாகிவிடும். அந்த மனோநிலையை மாற்றுவதற்காகக் குலவைபோட்டு அவர்களது புலனை மாற்ற முனைகின்றனர் போலும்.

(ஆ) இறந்தவரின் உயிர் தேவலோகத்திற்குச் செல்கின்றது என்ற நம்பிக்கை கொண்டுள்ள இம் மக்கள், அந்த ஆத்மாவை வழியனுப்பும்போது குலவையாகிய மங்கல ஒலியை எழுப்புகின்றனர் என்க.

9. வீட்டில் நடைபெறும் புதிய நிகழ்ச்சிகள்:

வீடு கட்டும்போது புதிதாக நிலைவைத்தல், வளை வைத்தல், அத்திவாரக் கல் வைத்தல் ஆகிய சந்தர்ப்பங்களிலும் பெண்கள்

குலவை போடுகின்றனர். புதுமனை குடிபுகும் வேளையிலும் குலவை இடம்பெறுகிறது.[31] கிணறு கட்டுவதற்கு வேண்டிய துரவு வெட்டித் தண்ணீர் கண்டதும் குலவை போடப்படும்.

9 : 1. குடியிருக்கும் வளவில் தாம் நாட்டிய தென்னம் பிள்ளை முதன்முதலாகப் பாளைபோட்டிருப்பதைக் கண்டவுடனே அவ் வீட்டிலுள்ள பெண்கள் குலவை போடுகின்றனர்.[32] இஸ்லாமியர் இதனைத் ''தென்னம்பிள்ளைக் கலியாணம்'' அல்லது ''பட்டைக் கலியாணம்'' என்பர். அவர்கள் அம் மரத்திற்குப் பட்டுச்சேலை உடுத்தி, குலவை போட்டு, சந்தனம் தாம் பூசி மகிழ்கின்றனர்.[33]

10. பாராட்டு நிகழ்ச்சியிலும் குலவை இடம்பெறுகின்றது:

நாட்டுக் கூத்திற் சதங்கை கட்டும்போதும், அரங்கேற்றும் வைபவம் நடைபெறும்போதும் கூத்துப்பார்க்க வந்திருக்கும் பெண்கள், கூத்தாடுவோருக்கு உற்சாகமும் பாராட்டும் அளிக் கும் முகமாகக் குலவை போடுவர். கதாபாத்திரம் மேடைக்கு வரும்போது வெடியும் பகல் வெற்றியும் கொளுத்தி ஆண்கள் தமது பாராட்டைத் தெரிவிக்க, அதேசமயம் பெண்கள் குலவை போடுவர்.

10 : 1. பாராட்டு விழாக்களிலும் பொதுக் கூட்டங்களிலும் புதிதாக ஒருவர் பேசத் தொடங்கும்போதும் பெண்கள் குலவை போடுவர். சிறப்பாகத் தேர்தற் கூட்டங்களில் அபேட்சகர் பேசத் தொடங்கும்போது குலவை ஒலி தொடர்ந்தொலித்த வண்ணமாக இருக்கும். தேர்தலில் வெற்றி பெற்றவரை ஊர் வலமாக அழைத்துச்செல்லும் போதும் பெண்கள் குலவை போட்டு அவரைக் கௌரவிப்பர்.

11. சமயச் சடங்குகளிற் குலவை போடுதல்:

11:1. கண்ணகை அம்மன் வழிபாடு:

மட்டக்களப்பு மாவட்டத்திலே கண்ணகை அம்மன் கோயில் களில் வைகாசி மாதம் வளர்மதி நாட்களிற் பூரணைக்கு முதல் எட்டு நாட்களும் ''கண்ணகை அம்மன் சடங்கு'' நடைபெறும். பூசை நேரங்களிற் பெண்கள் அம்மனின் அருள் வேண்டிப் பயபக்தியுடன் குலவை போடுவர். அம்மன் சந்நிதியிற் குலவை போடுதல் புனிதமான தொண்டு என அவர்கள் கருதுவதோடு தமது குலவையை அம்மன் விரும்புகிறாள் என்றும், அது அம்மனை

மகிழ்விக்கும் என்றும் அவர்கள் நம்புகிறார்கள். அம்மன் சடங்கின் ஐந்தாம் நாள் கோவலனுக்கும் கண்ணகிக்கும் திருமணம் நடைபெறுவதைக் குறிக்கும் ''கலியாணப் படிப்பு'' நிகழும். அன்றைய தினத்திலே குலவைபோடும் நிகழ்ச்சி மிக மும்முரமாக நடைபெறும். சடங்கின் எட்டாம் நாள் ''குளுத்தி'' என்னும் சடங்கு நடைபெறும்போதும் குலவை சிறப்பாகக் காணப்படும்.

11 : 1 : 1. கண்ணகை அம்மன் வழிபாட்டுடன் தொடர்புடைய போர்த்தேங்காய் உடைத்தல், கொம்பு முறித்தல், தேர் ஊர்வலம் வருதல் ஆகிய சந்தர்ப்பங்களிலும் பெண்களது குலவை இடம் பெறுகிறது. இந் நிகழ்ச்சிகளில் ஆண்களும் குலவை போடுவதைக் காரைதீவிற் காணலாம். போர்த் தேங்காய் உடைத்து வென்ற சேரியினர் தோற்ற சேரியினரை நகையாடுவதற்காக ஆண்கள் குலவை போடுவர். தமது வெற்றிக் களிப்பைப் புலப்படுத்தும் நோக்கமாகவே அவ்வாறு செய்கின்றனர்.

11 : 1 : 2. தெய்வத்தை முன்னிறுத்திக் காரியங்களைத் தொடங்குவதும், அக்காரியங்கள் சித்தியடையவேண்டி நேர்த்திக் கடன் வைப்பதும் இம் மக்களின் பொதுவான வழக்கமாகும். கண்ணகி அம்மனுக்கு நேர்த்திக்கடன் வைத்து, சடங்கு காலங்களிற் குலவை போடும் வழக்கம் இப்பகுதிவாழ் தமிழ்ப் பெண்களிடம் காணப்படுகிறது. பிள்ளைகள் நோயாற் பீடிக்கப்பட்டிருக்கும்போது, அம்மன் அருளைப் பெற்றுக் குணமடையச் செய்வதற்காகத் தாய்மார் அம்மனுக்குப் பலவாறு நேர்த்திக் கடன் வைப்பர். நோயாளி பெண்ணாக இருந்தால் ''அம்மாளே எதிர்வரும் அம்மன் சடங்கில் உன் கோயில் காத்து என் மகளைக் குலவைபோடச் செய்விப்பேன்'' என்று தாய்மார் நேர்த்திவைப்பதை அவதானிக்கலாம். குறிப்பிட்ட பெண் நோய் குணமடைந்ததும், விரதம் அனுட்டித்து எட்டு நாட்களும் பூசை வேளையிற் குலவை போட்டு அம்மனுக்கு நன்றி செலுத்தி, அம்மன் அருளைப் பெறுவர்.

11 : 1 : 3. முதன்முதலாகக் கண்ணகியைத் தெய்வமாகப் போற்றியவர் நெடுவேள்குன்றத்துக் கானக்குறமகளிராவர். அப்போது அவர்கள் குரவை ஆடியமை குறிப்பிடத்தக்கது. அதன் தொடர்ச்சியாகவே மட்டக்களப்பிலும் கண்ணகி வழிபாட்டிற் குலவை போடுதல் முக்கியத்துவம் பெறுகின்றது என்க.

பக்தியோடு மனமுருகிப் பாடும் இசைப்பாடல்கள் எவ்வாறு தெய்வத்தைப் பக்தனின் பக்கத்திற்கு இசையச் செய்கின்றனவோ

அத்தகைய வல்லமை தமது குலவைக்கும் உண்டு என்ற நம்பிக்கை இப்பகுதிவாழ் கிராமியப் பெண்களிடம் காணப்படுகிறது. ஆதலினாலேயே சமயச் சடங்குகளிலும் திருவிழாக் காலங்களிலும் ஆண்கள் பக்திப் பாடலைப் பாட, பெண்கள் சேர்ந்து, குலவை போட்டுத் தமது பக்தியைப் புலப்படுத்துகின்றனர்.

11 : 2. முருக வழிபாடு :

மட்டக்களப்புக் கிராமங்கள் தோறும் அமைந்துள்ள முருகன் ஆலயங்களிலே திருவிழாக்களிற் பெண்கள் குலவை போடுகின்றனர்.[34] குலவையின் மூலம் முருகன் அருளைப் பெறலாம் என்ற நம்பிக்கையும் முருகன் தம் குலவையை விரும்பி ஏற்பான் என்ற எண்ணமும் இக் கிராமியப் பெண்களிடம் நிலைத்துக் காணப்படுகின்றன. முருகனுற் குரவை விரும்பப்பட்டது என மதுரைக் காஞ்சியிலும் கூறப்பட்டுள்ளது.[35] பூசை நடைபெறும் போது, புதிது புதிதாகத் தீபங்கள் காட்டப்படும் வேளையிலே, பெண்கள் குலவை போட்டவண்ணமாகவே இருப்பர். சுவாமிக்குச் சாமரை இரட்டும்போது குலவை ஒலியிற் புது வேகத்தைக் காணலாம். சாமரை அரசனுக்கே யுரியதாலும், அதனைப் பெண்களே இரட்டுவதாலும் இதில் அகவுணர்வுகள் எழக்கூடிய நிலைமைகள் காணப்படுவதாலும் ஒருவிதமான புத்துணர்ச்சியுடன் அப்போது பெண்கள் குலவை போடுகின்றனர்.

11 : 2 : 1. முருகன் கோயிலிற் கந்தஷட்டி விரதத்தின் ஆறும்நாள் சூரன் போர் நடைபெறும். அப்போதும் பெண்களின் குலவை இடம்பெறுகின்றது. சுப்பிரமணியக் கடவுளின் வீரச் செயல்களையும் வெற்றியையும் பாராட்டு முகமாகப் பெண்கள் குலவை அமைகின்றது. சூரன் போரின் இறுதிக் கட்டத்திற் பக்தர்களின் உள்ளத்திற் போரில் வெற்றிவாகை சூடிய பேருவகை தோன்றும். அப்போது பெண்கள் போடும் குலவை, தொல்காப்பியர் குறிப்பிடும் முன்தேர்க் குரவை, பின்தேர்க் குரவைகளை நினைவூட்டும்.

11 : 2 : 2. சூரன்போர் முடிவுற்றதும் அங்கு திருக்கல்யாண உற்சவம் நடைபெறும். அப்போது நிகழும் சகல கிரியைகளிலும் பெண்களின் குலவையும் சேர்ந்தே காணப்படும். இச் சந்தர்ப்பங்களிற் குலவை போடும்போது உள்ள மகிழ்ச்சியுடன் அவர்கள் காணப்படுகின்றனர். மண்டூர் கந்தசுவாமி கோயிலிலே சூரன்போர் நடைபெறுவதில்லை. ஆனுற் கந்தஷட்டி விரதம் தொடங்கிய மூன்றும் நாளில் வள்ளியம்மை திருமணம் நடாத்துகின்றார்கள். பொதுமக்கள் இதனைக் 'கலியாணப் படிப்பு' என்றும் 'குரவைத் திருநாள்' என்றும் கருதுகின்றனர். அன்று

இரவு முருகனுக்கும் வள்ளிநாயகியாருக்குமான திருமண நிகழ்ச்சியும் அதற்குரியதெனக் கருதப்படும் குலவையிடும் வழிபாடும் நடக்கின்றன.[36]

11 : 2 : 3. வள்ளியம்மை திருக்கலியாணத்தின் பின்னர் தெய்வநாயகி அம்மையார் திருக்கலியாணம் நடைபெறும். திருப்பொற்சுண்ணமிடித்தல், திருமணப் பட்டுச் சாத்தல், திருப் பொன்னூசல் முதலிய நிகழ்ச்சிகளிலும் பெண்கள் சிறப்பாகக் குலவை போடுகின்றனர். அங்கு ஒரு புனிதமான கலியாண வீடாகவே பாவனை செய்யப்படும். மக்களின் கலியாண வீட்டிற் குலவை போடுவதைப் போன்றே முருகன் கோயிலிலே திருக்கலியாண உற்சவத்திலும் குலவை இடம்பெறுவது ஈண்டு கவனிக்கத்தக்கதாகும்.

11 : 2 : 4. தேர்ப்பவனியும் தீர்த்த உற்சவமும் :

கோயிலிலே திருவிழா நிறைவுபெற்றுத் தீர்த்தமாடுவதற்காகச் சுவாமி தேரிலே பவனி கொண்டுவரப்படுகின்றார். அச் சமயம் பெண்கள் குலவை போட்டவண்ணம் வந்துகொண்டிருப்பர். கடற்கரையிற் சுவாமி தீர்த்தமாடும்போதும், பெண்கள் தாம் தீர்த்தமாடும்போதும் குலவை போடுகின்றனர்.

11 : 2 : 5. முருக வழிபாடும் குறவர் குலவையும் :

மட்டக்களப்புப் பகுதியில் விந்தனை பட்டிமோடு முதலிய இடங்களிலே குறவர்கள் வாழ்கின்றார்கள். இவர்களும் பழந் தமிழ் இலக்கியங்களிலே காணப்படும் குறமாந்தர்களைப் போன்றே கட்குடித்து ஆடியும் பாடியும் முருகனைத் தம் குல தெய்வமாகப் போற்றி வாழ்கின்றனர். 'மட்டக்களப்புக் காடுகளிலும் மலைச் சாரல்களிலும் வாழும் குறவர் குலத்தாரும் கட்குடித்தாடும்போது, குலவையிடுதலைக் காண்கின்றோம். அவர்களும் தலையிற் கலசம், வில், அம்பு என்பனவற்றை வைத்து ஆடுகின்றனர். அவ் வாடல்களிற் பெண்பாலாரும் கலந்துகொள்ளலும், இரு பாலாரும் வாயினூற் குலவைஒலி கிளத்தலும் வழக்கமாக உள்ளது. அவர்களது ஆடல்தானும் எந்தத் தாள அமைதிக்கு உட்பட்டது எனத் தெரியவில்லை. இக் குரவைக்கூத்து தனித்தனி நின்றே ஆடப்படுகின்றது. வெயில் மிகுந்த ஆடி ஆவணி மாதங்களில் விளைவுவிழா முடிந்த படுவான்கரை வயல்களில் குறவர் வந்து குடிபுகுந்து, சிறு கூடாரம் அடித்துத் தங்குதலையும், அன்னார் தமது தெய்வமொன்றுக்குச் சடங்கு இயற்றி உயிர்ப்பலி யிட்டு இவ்வாடல் புரிவதையும் நாம் காணலாம். அவர்கள் பொதுவாக முருகனைக் குறித்தே குரவை ஆடல் செய்கின்றார்கள் என்று தெரிகின்றது.[37]

12. குலவை போடுதலின் அடிக்கருத்து :

பல்வேறு சந்தர்ப்பங்களிலும் நிகழ்ச்சிகளிலும் பண்டைய மக்கள் கோலம்பூண்டு, மகிழ்சிறந்து, வேகம்கொண்டு, பல்வேறு நோக்கங்களுடன் விநோதம் ஏற்படும் வகையில் ஆடிய ஆடல்வகைகளைப் பண்டையோர் விநோதக் கூத்துக்கள் என வகுத்தனர். குரவைக்கூத்தும் அந்த விநோதக்கூத்தின் ஒரு வகையென அடியார்க்கு நல்லார் கூறுகின்றார்.[38] எனவே விநோதம் விளைவிக்கும் நோக்குடனேயே குரவை ஆடப்பட்டதென்க. ''விநோதம்'' என்ற சொல்லுக்கு ''மனமகிழ்ச்சி'' என்ற பொருள் கொள்வது பொருத்தமானதாகும்.[39] ஆயர்பாடியிலே துர்நிமித்தங்கள் ஏற்பட்டபோது, அவற்றின் தீய விளைவுகளிலிருந்து தப்பிக்கொள்வதற்காக ஆயர்மகளிர் தம்குல தெய்வமான கண்ணனை மகிழ்விக்கும் பொருட்டுக் குரவைக் கூத்தாடியமையும், தேவலோகம் அடைந்த கண்ணகியை நினைந்து அத்தெய்வமகளுக்கு மனமகிழ்ச்சியை ஏற்படுத்தும் வண்ணம் குன்றக் குறத்தியர் குரவை யயர்ந்தமையும் இக்கருத்தை வலியுறுத்துகின்றன. எனவே பண்டைய குரவைக் கூத்து மனமகிழ்ச்சியை உண்டுபண்ணும் காரணகாரியத் தொடர்புடையதாகக் காணப்படுகிறது என்க.

விநோதம் விளைவிக்கும் குரவைக்கூத்தைப் போன்றே மட்டக்களப்புக் குலவை போடுதலும் மனமகிழ்ச்சியை உண்டு பண்ணுதல் அல்லது தமது மனமகிழ்ச்சியை வெளிப்படுத்தல் என்னும் அடிப்படை நோக்குடனேயே நிகழ்த்தப்படுகிறது. சமூக மங்கல நிகழ்ச்சிகளிலே தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தவே குலவை போடுகின்றனர். அமங்கல நிகழ்ச்சியில், மரண வீட்டிற் சோகத்தில் ஆழ்ந்து துடிக்கும் பெண்களுக்குக் கண நேரம் மனஆறுதலை ஏற்படுத்தும் நோக்குடனேயே, குலவை அங்கு இடம் பெறுகிறது. சமயச் சடங்குகளில் இடம்பெறும் குலவையானது, தெய்வத்தை மகிழ்வித்துத் தெய்வ அருளைப் பெறுவதற்காகவே நிகழ்த்தப்படுகின்றது.

''இன்று மட்டக்களப்புத் தமிழகத்தில் 'குலவை' என்ற திரிந்த சொல்லால் வழங்கப்படும் குரவையானது கூத்து வழக்கத்தினின்றும் பிரிந்த ஒன்று போலவே தெரிகிறது. அன்றியும் இங்கே அது விநோதம் விளைவித்தற்காக எழுந்த ஒன்று எனக் கொள்ளும் தன்மையுடையதாயும் காணப்படவில்லை.'' என்று வி. சீ. கந்தையா அவர்கள் கூறுவது பொருத்தமற்றதாகும்.[40] ஏனெனில் விநோதம் என்ற பதம் மனமகிழ்ச்சி என்னும் பொருளைத் தருதலால் விநோதம் விளைதற்காகவே மட்டக்களப்பு மக்கள் குலவைபோட்டு மகிழ்கின்றனர்.

உசாத்துணை விபரமும் அடிக்குறிப்புக்களும் :

1. குரவை என்னும் சொல் இங்கு குலவை, கொலவை, கொலவ என மாற்றம் பெற்று மக்கள் வழக்கிற் காணப் படுகிறது. குரவை ஒலியிடுதலை இம் மக்கள் ''குலவை போடுதல்'' என்றே வழங்குகின்றனர். அச் சொற்றொடரே பொருத்தம் நோக்கி இக் கட்டுரையில் எடுத்தாளப்பட் டுள்ளது.
2. கலைக்களஞ்சியம்; தொகுதி—4 ; பக். 61.
3. அகநானூறு : 20, 118, 232, 336 ; புறநானூறு : 24, 129; நற்றிணை : 276 ; கலித்தொகை : 39 ; மதுரைக்காஞ்சி : 96—97, 160, 329, 615 ; மலைபடுகடாம் : 320 — 322; திருமுருகாற்றுப் படை : 194—197, 216.
4. தொல்காப்பியம் : பொருளதிகாரம், புறத்திணையியல் : சூத். 76.
5. சிலப்பதிகாரம் : பதிகம் 77, 82; அரங். 24 ; இந்திர 70 ; ஆய்ச்சியர் குரவை; கால்கோள் ; 240—241; நீர்ப்படை 31; வரந்தரு. 134; கட்டுரை—9.
6. புறப்பொருள் வெண்பா மாலை: தொகு: 173, 144, 145.
7. 3, 4, 5, 6ஆம் அடிக்குறிப்புக்களைப் பார்க்கவும்.
8. (அ) '' .... குரவன் மாக்கள்
வாங்கமைப் பழுநிய தேறன் மகிழ்ந்து
வேங்கை நீழற் குரவை யயரும்'' (புறம் — 129)

(ஆ) ''வியலறை வரிக்கும் முன்றிற் குறவர்
மனைமுதிர் மகளிரொடு குரவை தூங்கும்''
(அகம் — 232 ; 9 — 10)

(இ) 'வாங்கமைப் பழுநிய நறவுண்டு
வேங்கை முன்றிற் குரவையுங் கண்டே'' (நற். 276)

(ஈ) ''கொடுந்தொழில் வல்விற் கொலைஇய கானவர்
நீடமை விளைந்த தேக்கட் தேறல்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை யயரும்''
(திருமுருகு. 194 — 97)

(உ) ''நறவுநாட் செய்த குறவர்தம் பெண்டிரொடு
மான்றோற் சிறுவறை கறங்கக் கல்லென்று
வான்றோய் மீமிசை யயருங் குரவை''
(மலைபடு. 320 — 322)

(ஊ) "........... . ... மதுவுங்
கிழங்கு மருந்தியிருந் தெம்மோடின்று கிளர்ந்துகுன்றர்
முழங்குங் குரவை யிரவிற்கண் டேகுக"
(திருக்கோவையார்)

9. பதிப்பாசிரியர்: சாமிநாதஐயர், உ. வே., பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும், பக். 638, கபீர் அச்சகம், சென்னை, ஆறும் பதிப்பு, 1961.

10. (அ) "..................... மணல்மலி கானல்
பரதவர் மகளிர் குரவையொ டொலிப்ப"
(மதுரை 96—97)

(ஆ) சிலப்பதிகாரம்: ஆய்ச்சியர் குரவை; குன்றக் குரவை.

11. பதிப்பாசிரியர்: சாமிநாதஐயர் உ. வே., சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் — அடியார்க்கு நல்லார் உரையும்; பக். 80, கேஸரி அச்சகம், சென்னை, 3ஆம் பதிப்பு, 1927,

12. மேற்படி நூல், பக். 80.

13. மேற்படி நூல், பக். 27.

14. 9ஆம் அடிக்குறிப்பு நூல், பக். 66.

15. மேற்படி நூல், பக். 335.

16. இக் கட்டுரையில் 4. 1, 4 . 1 . 2 இலக்கப் பந்திகளைப் பார்க்கவும்.

17. "...... .... களவழித்
தேரோர் தோற்றிய வென்றியுந், தேரோர்
வென்ற கோமான் முன்றேர்க் குரவையும்"
(தொல்காப்பியம், பொருள், புறம்: 76)

18. Sivathamby K. 'The Ritualistic Origins of Tamil Drama' *Proceedings of the First International Conference Seminar of Tamil Studies*, Vol. 2, p. 173, I. A. T. R., Kuala Lumpur, Malaysia, April 1966.

19. இக் கட்டுரையின் 6.1, 11.1.1, 11.2.1, 11.2.4 இலக்கப் பந்திகளைப் பார்க்கவும்.

20. 11ஆம் அடிக்குறிப்பு நூல் பக். 27.

21. இக் கட்டுரையின் 11 . 2 . 2, 11 . 2 . 3 இலக்கப் பந்திகளைப் பார்க்கவும்.

22. "குரவையிடுதல்—நாவாற் குளறி மகிழ்ச்சியொலி செய்தல் குரவையிடுதல்". *Tamil Lexicon*, Vol. 2, Part 1, P. 1012, University of Madras, 1934.

23. வரிக்கூத்தின் ஓர் உறுப்புக் குரவையாதலின் என்க.

24. பெண் பூப்பெய்தலை மட்டக்களப்பு மக்கள் பக்குவப்படுதல், சமைதல், பெரியபிள்ளையாதல், சாமத்தியப்படுதல், புத்தியறிதல் என்றும் வழங்குவர்.

25. திருநெல்வேலி மாவட்டத்திலும் (தமிழகம்) பெண் பூப்படைந்த வீடுகளிற் பெண்கள் குலவை போடுகின்றனர். அறிவிப்பாளர்: ஆ. சிவசுப்பிரமணியம், தூத்துக்குடி.

25அ. இதனை ஒரு நாட்டார் பாடலிலிருந்து அறிந்து கொள்ளலாம்:

"கொண்ட வட்டான் புட்டியில
குலவைவெடி என்னவென்றால்
பூசாரி மச்சாண்ட
பொண்சமைஞ்சு போனதாக்கும்".

சேகரித்தவர்: இ. பாலசுந்தரம்; கூறியவர்: க. ஆறுமுகம், காரைதீவு.

26. குறிப்பிட்ட நேரத்தில் வரவேண்டிய உறவினர் வராமையைக் குறிப்பிட்டுப் பாடுவதாக மேல்வரும் நாட்டார் பாடல் அமைகிறது.

"கூந்தல முடியவிழ்க்க
குறுக்காலே வெள்ளைகட்ட
ஆலாத்தி வீசமச்சான்
ஆக்களெங்க போனரோ".

சேகரித்தவர்: மு. இராமலிங்கம்; பிரசுரம்: வீரகேசரி, 16-5-65.

27. காரைதீவு (தமிழ்), அக்கரைப்பற்று (இஸ்லாமியர்) ஆகிய இரு கிராமங்களிலும் பல்வேறு சந்தர்ப்பங்களிலே, குலவை போட்ட பெண்களைப் பேட்டிகண்டபோது கிடைத்த தகவல்கள் இவையாகும்.

28. இக் கட்டுரையின் 8, 11.2.4 இலக்கப் பந்திகளைப் பார்க்கவும்.

28அ. இராமநாதபுர மாவட்டத்திலும் தாலிகட்டும்போதும் குலவை போடுகின்றனர். அறிவிப்பாளர்: கே. காந்தி, மூடலூர்.

29. கழுத்திலும் உடலிலும் பூசி மகிழ்வர். ஆனால் திலகமிட மாட்டார்கள்.

30. இம்மரபு இராமநாதபுரத்திலுமுண்டு. சவம் எடுத்துச் செல்லும்போது ஹரிஜனப் பெண்கள் குலவைபோட்டுப் பின்தொடர்ந்து செல்வர். இவர்கள் இதற்குக் கூலி வாங்குவதில்லை. அன்பு காரணமாக இதனைச் செய்கின்றார்கள். அறிவிப்பாளர்: பேராசிரியர் எஸ். வி. சுப்பிரமணியம், இராமநாதபுரம்.

31அ. இராமநாதபுரத்திலும் இம் மரபுண்டு. அறிவிப்பாளர்: கே. காந்தி, மூடலூர்.

ஆ. இராமநாதபுரத்தில் பெண்கள் நாற்று நடப்போகும் போதும், நாற்று நட்டு முடிந்த பின்பும் குலவை போடுகின்றனர். அதுபோன்றே களை எடுக்கப் போகும்போதும் குலவை போடுகின்றனர். அறிவிப்பாளர்: பேராசிரியர் எஸ். வி. சுப்பிரமணியம், இராமநாதபுரம்.

32. முதன்முதலாக நடைபெறும் நிகழ்ச்சிகளிற் குலவை போடுகின்றனர். கேரள நாட்டில் ஆண்குழந்தை பிறந்தவுடனே பெண்கள் கூடிக் குலவை போடுகின்றனர். குழந்தை பிறந்தவுடனே இச் சத்தத்தைக் கேட்பதால் பின்னர் அது எதுவித சத்தத்திற்கும் பயப்படமாட்டாதாம். அறிவிப்பாளர்: திருமதி கோமதியம்மா, காரியாவட்டம்.

33. அறிவிப்பாளர்: அ. ஸ. அப்துஸ் ஸமது, அக்கரைப்பற்று

34. இம் மரபு இராமநாதபுரத்திலும் காணப்படுகிறது. அறிவிப்பாளர்: கே. காந்தி, மூடலூர்.

35. " கடம்பின் ....
சீர்மிகு நெடுவேள் பேணித்தழூஉப் பிணையூஉ
மன்றுதோறும் நின்ற குரவை" (மதுரை 614 — 615)

36. கந்தையா வி. சி., மட்டக்களப்புத் தமிழகம், பக். 194,

37. மேற்படி நூல் பக். 196.

38. சாமிநாதஐயர் உ. வே. பதிப்பு, சிலப்பதிகாரம், பக். 80.

39. விநோதம் என்ற சொல்லுக்கு விளையாட்டு, மனமகிழ்ச்சி, வியப்பு, அழகு என்னும் பொருள் கூறப்படுகிறது. Tamil Lexicon, Vol. VI. Part I, P. 3678.

40. கந்தையா வி. சி., மட்டக்களப்புத் தமிழகம், பக். 192.

பகுதி II

இலக்கியம்

ஈழத்துப் பள்ளுப் பிரபந்தங்கள்

கலையரசி வேந்தனார்

மக்களிடையே வழங்கிவந்த வாய்மொழிப் பாடல்களின் அடிப்படையாகத் தோன்றிய பிரபந்த இலக்கியங்கள் சிலவற்றைத் தமிழ்மொழியிற் காணலாம். அம்மானை, திருப்பள்ளியெழுச்சி, தாலாட்டு, குறவஞ்சி, பள்ளு என்பன அத்தகைய இலக்கியங்களாகக் கொள்ளத்தக்கன. வாய்மொழிப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டெழுந்த இவ்விலக்கியங்களுட் சில பிற்காலத்திற் செம்மையான இலக்கணத்தைப் பெற்று விளங்கின. அவற்றுட் பள்ளும் ஒன்றாகும்.

கடவுள் வணக்கம் உழத்திய ருங்குடும் பன்வரலொன்
றடைமுறை நாடு வளங்குயிற் -கூமழைக் காங்குறியோர்ப்
படுமா றுவரற் சிறப்புட் டுறைத்தலை வன்வரற்கூப்
படுமவ னன்னுள் உரப்பல் வெளியாம் பண்ணைச்செயலே
வினுச்சொல வாயம் வருவிக் கவரல் தகைமுதலாள்
தனதுரைக் கேட்டுக் குடும்பன் கிடையிருந் தானெனவந்
தனற்றெழு மாட்டப் புலம்பல்முற் பள்ளிகூழ் கொண்டுவரல்
சொனனவள் மன்னித்தற் கேட்கவேண் டற்கு மறுத்திடலே
சூளவனை மீட்பவனைப் பணிவித் துழவருழக்
காளைவெருட் பளைபாயப் புலம்பல் எழுந்து வித்தல்
ஆளத் தலைவற் குணர்த்தல் நடல்வினை செப்பம்செய்நெல்
நீள அளத்தல் முதற்பள்ளி கூவேசல் மூட்டவையே
இவ்வம யங்களிற் பாட்டுத் தலைவன் பெருமை யாங்காங்
கொவ்விய சிந்து விருத்தம் விரவி வரத்தொடர்பு
செவ்விதிற் பாடுமது உழத்திப் பாட்டு பள்ளுமென்பர்.

என நவநீதப்பாட்டியலின் மிகைச் செய்யுட்கள் பள்ளின் இலக்கணத்தைக் கூறியுள்ளன. இவ்விலக்கணத்தைச் சதுரகராதியும் விரிவாகக் கூறியுள்ளது. நவநீதப்பாட்டியலின் மிகைச் செய்யுட்களும் சதுரகராதியும் கூறும் பள்ளின் இலக்கணத்தினைப் பார்க்குமிடத்துப் பள்ளன், மூத்தபள்ளி, இளையபள்ளி, பண்ணைக்

காரன் என்னும் நான்கு பாத்திரங்களைக் கொண்டு, கதைப் போக்கில் மருதநில உழவர் வாழ்க்கையைச் சித்திரிக்கும் பிரபந்தமாகப் பள்ளு அமைந்துள்ளது என்பது தெரிகின்றது. இத் தன்மை வாய்ந்த பள்ளுப் பிரபந்தங்கள் பல தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் தோன்றியுள்ளன. அவற்றுள், ஈழத்தில் எழுந்த பள்ளுப் பிரபந்தங்களை எடுத்து நோக்கி, அவை பற்றிய சில முடிபுகளைக் கூறுவதாக இக் கட்டுரை அமைந்துள்ளது.

ஈழத்தில் எழுந்த பள்ளுப் பிரபந்தங்கள்:

கதிரைமலைப் பள்ளு, ஞானப் பள்ளு, பருளை விநாயகர் பள்ளு, தண்டிகைக் கனகராயன் பள்ளு, நவாலிப் பள்ளு, நவாலியூர் வன்னியசேகரன் பள்ளு என்னும் ஆறு பள்ளுப் பிரபந்தங்கள் ஈழத்தில் எழுந்துள்ளன. இவற்றுள் நவாலிப் பள்ளு, நவாலியூர் வன்னியசேகரன் பள்ளு ஆகிய இரண்டும் பெயரளவில் அறியப்படுகின்றனவே அல்லாமல் நூலுருவிற் கிடைக்கவில்லை. நவாலிப் பள்ளு கதிர்காமர் என்பவரால் இயற்றப்பட்டது என்றும், அந்நூல் அழிந்துபோக, சில செய்யுள்கள் மட்டும் செவிவழக்கிலிருக்கின்றன என்றும் கூறப்படுகின்றது.[1] நவாலியூர் வன்னியசேகரன் பள்ளு நவாலியூர் சோமசுந்தரப் புலவரால் இயற்றப்பட்டது[2] என்பதனைத் தவிர அப் பள்ளினைப் பற்றி வேறு செய்திகள் கிடைக்கவில்லை. ஈழத்தில் எழுந்த பள்ளுப் பிரபந்தங்களுள் நவாலிப் பள்ளு, நவாலியூர் வன்னியசேகரன் பள்ளு ஆகிய இரண்டு பள்ளுப் பிரபந்தங்களும் கிடைக்காமையால் அவை தவிர்ந்த ஏனைய நான்கு பள்ளுப் பிரபந்தங்களுமே ஈழத்தில் எழுந்த பள்ளுப் பிரபந்தங்களாக வழக்கிலுள்ளன.

அ. **கதிரைமலைப் பள்ளு:** கதிர்காமத்தில் எழுந்தருளியுள்ள முருகனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு, கடவுள் வணக்கம் முதலாக வாழ்த்து ஈறாக 137 செய்யுட்களை உடையதாகக் கதிரைமலைப் பள்ளு அமைந்துள்ளது. கதிரையப்பர் பள்ளு என்ற பெயரும் இதற்குண்டு. இப் பள்ளினை இயற்றிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை. அத்துடன் நூலின் காலத்தினையும் திட்டமாகக் கூறுவதற்கேற்ற அகச் சான்றுகளும் கிடைக்கவில்லை. இந்நிலையில், ஈழத்தில் எழுந்த சில நூல்களை ஆதாரமாகக் கொண்டே கதிரைமலைப் பள்ளு எழுந்த காலப் பகுதியை வரையறுக்க வேண்டியுள்ளது. போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தில் எழுந்த ஞானப் பள்ளு என்ற நூல், கதிரைமலைப் பள்ளு சைவராற் பாடப்படுதல் காரணமாக அதன் பின்னர் தோற்றம் பெற்றது எனக் கூறப்படுகிறது.[3] ஞானப் பள்ளின் அமைப்பினைக் கொண்டும் அந்நூல் கதிரைமலைப் பள்ளுக்குப் பின் தோன்றியது எனக் கூறலாமாகையினல் ஞானப்

பள்ளினை ஆதாரமாகக் கொண்டு, ஞானப்பள்ளு இயற்றப்படுவதற்கு முன்னர் கதிரைமலைப் பள்ளு இயற்றப்பட்டது எனக் கொள்ளலாம். ஞானப் பள்ளுக்கு முன்னர் எழுந்த கதிரைமலைப் பள்ளு கி. பி. 15ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலோ அல்லது கி. பி. 16ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலோ எழுந்திருக்கலாம் என ஊகிப்பதற்குப் பரராசசேகரம் என்னும் நூல் துணை புரிகின்றது. பரராசசேகரம் என்னும் வைத்திய நூலிற் பலவிடங்களிலும் தென்கதிரை வேலவர் போற்றப்பட்டுள்ளார்.[4] அதனால், அந்நூல் எழுந்த காலத்திற் கதிர்காம முருகனைப் போற்றும் வழக்கு புலவர்களிடையே இருந்தது என்பது தெரிகின்றது. ஞானப் பள்ளுக்கு முன்னர் எழுந்த கதிரைமலைப் பள்ளில் அதன் ஆசிரியர்,

> 'தென்கதிரை வேலவர் திருநாமம் பாடலால்
> என்கதையை யெண்ணா ரிகழ்ந்து[5] '.

எனக் கூறிக், கதிரை முருகனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு கதிரைமலைப் பள்ளினைப் பாடியுள்ளார். இதனால், தென்கதிரை வேலவரைப் பலவிடத்தும் போற்றும் பரராசசேகரம் என்னும் நூல் எழுந்த காலத்திற் கதிரைமலைப் பள்ளும் எழுந்திருக்கலாம். பரராசசேகரம் என்னும் நூல் கி. பி. 1478—1519 ஆம் ஆண்டு வரை நல்லூரில் இருந்து ஆட்சி செலுத்திய பரராசசேகர மகாராசாவின் காலத்தில் எழுந்ததாகையினாற் கதிரைமலைப் பள்ளும் 15ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அல்லது 16ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுந்தது எனக் கூறலாம்.

பொருளமைதி: கடவுள் வணக்கம் முதலாக ஏசல் ஈறாகக் கூறப்படும் பள்ளுப் பிரபந்தப் பொருட்பகுதிகளில் ஆயர்வரல், அவர் பெருமை கூறல் என்பன தவிர்ந்த ஏனைய பொருட் பகுதிகள் யாவும் கதிரைமலைப் பள்ளில் இடம் பெற்றுள்ளன. இவை தவிர்ந்த, பள்ளியர் தம் ஆண்டையின் பெருமை கூறல், பள்ளன் மூத்த பள்ளியை நேரஞ் சென்றமைக்குக் காரணங் கேட்டல் என்பன புதிய பகுதிகளாக இடம் பெற்றுள்ளன, கதிரைமலைப் பள்ளிற் பள்ளியர் தம் நாட்டு வளங் கூறுதல், ஆற்றில் வெள்ளம் வருதல், நாற்று நடுதல், ஏசல் என்னும் பகுதிகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இவற்றுள் ஆற்றில் வெள்ளம் வருதல், நாற்று நடுதல் என்னும் பகுதிகளில் அமைந்த பாடல்கள் பொருளும் ஓசையும் ஒத்தமையும் சிறப்பினைப் பெற்றுள்ளன. மூத்த பள்ளி மூறையீடு, ஏசல் என்னும் பகுதிகளில் வரும் பாடல்களும் இப் பள்ளிற் சிறப்பாக அமைந்துள்ளன.

பள்ளுப் பிரபந்தத்திற்குரிய பொருட் பகுதிகள் பலவற்றையும் போற்றிய கதிரைமலைப் பள்ளில் பாட்டுடைத்தலைவன் பெருமை ஆங்காங்கு விரவிவரும் பள்ளுப் பிரபந்த மரபிற்கேற்ப மூத்த பள்ளி தன் ஆண்டையின் பெருமை கூறல், குயில் கூவல், மழைபெய்ய வரங்கேட்டல், மூத்த பள்ளி முறையீடு, நாற்றுநடுதல் ஆகிய பகுதிகளிற் பாட்டுடைத் தலைவனான முருகனின் பெருமை கூறப்பட்டுள்ளது. இவற்றைவிடக் கவிக்கூற்றாகப் பாட்டுடைத் தலைவன் பெருமை கூறும் செய்யுட்கள் ஒன்றும் கதிரைமலைப்பள்ளில் இடம் பெறவில்லை. இதனாற் கதையோடு தொடர்பான வகையிலேயே கதிரைமலைப் பள்ளிற் பாட்டுடைத் தலைவன் பெருமை கூறப்பட்டுள்ளது. கதிரைமலைப் பள்ளுக்குப் பின்னர் எழுந்த பள்ளுப் பிரபந்தங்களில் இச் சிறப்பினைக் காணமுடியாது.

கதிரைமலைப்பள்ளு ஈழத்தில் எழுந்த முதற் பள்ளுப் பிரபந்தமாகையினால் அதன் பின்னர் எழுந்த ஈழத்துப் பள்ளுப் பிரபந்தங்களுக்குக் கதிரைமலைப்பள்ளு பொருளமைதியில் ஓரளவு வழிகாட்டியுள்ளது எனக் கூறலாம். கதிரைமலைப்பள்ளில் நாட்டு வளம் கூறும் செய்யுட்களை அடுத்து, பள்ளியர் தம் ஆண்டையின் பெருமை கூறல் என்னும் பகுதி அமைந்துள்ளது. இது புதிய பகுதி என்பது முன்னர் கூறப்பட்டது. இப் பொருட்பகுதி கதிரைமலைப் பள்ளின் பின்னர் ஈழத்தில் எழுந்த மூன்று பள்ளுப் பிரபந்தங்களிலும் நாட்டு வளம் கூறும் பகுதியை அடுத்து இடம் பெற்றுள்ளது. பள்ளியர் பண்ணைத் தலைவனை வணங்கும் பொழுது,

> 'சுரித்த கழுத்தனாரே கும்பிடுகிறேன்—வட்டச்
> சொறித்தேமற் காதனாரே கும்பிடுகிறேன்'.[6]

என்ற முறையிற் பண்ணைத் தலைவரின் அழகற்ற தன்மையை விதந்து கூறி வணங்குவதாகக் கதிரைமலைப்பள்ளு கூறியுள்ளது. இத்தன்மை முக்கூடற் பள்ளில் இல்லை. ஆனால் ஈழத்திலே எழுந்த பருளை விநாயகர் பள்ளிலும்[7] தண்டிகைக் கனகராயன் பள்ளிலும்[8] இத்தன்மை இடம் பெற்றுள்ளது. இவ் வெடுத்துக்காட்டுக்கள் கதிரைமலைப்பள்ளு அதன் பின்னர் எழுந்த ஈழத்துப் பள்ளுப் பிரபந்தங்களுக்குப் பொருளமைப்பில் ஓரளவு உதவியுள்ளது என்பதனைத் தெளிவாக்குகின்றன.

ஈழத்தின் முதற் பள்ளுப் பிரபந்தமான கதிரைமலைப் பள்ளினைத் தமிழ் நாட்டின் முதற் பள்ளுப் பிரபந்தமான முக்கூடற் பள்ளுடன் ஒப்பிடுமிடத்து, பொருளமைதியில் அவற்றிடையே சில வேறுபாடுகளை அவதானிக்க முடிகின்றது. பள்ளியர் ஏசல் என்னும் பகுதியில் பள்ளியர் இருவரையும்

பண்ணைக்காரன் சமாதானப் படுத்தியதாகக் கதிரைமலைப்பள்ளு கூற, முக்கூடற்பள்ளு பள்ளியர் இருவரும் தாமே சமாதான மடைந்தனர் எனக் கூறியுள்ளது. இது முக்கியமான வேறு பாடாகும். கதிரைமலைப் பள்ளில் அகத்துறைச் செய்யுட்கள் இடம்பெருத நிலையில் முக்கூடற் பள்ளில் ஆற்றுவரவுச் செய்யுட் களின் இடையே அகத்துறைச் செய்யுட்கள் இடம் பெற்றமை யும் குறிப்பிடத்தக்க வேறுபாடாகின்றது.

மொழியமைதி : சிந்து விருத்தம் தரு என்னும் பாடல்களால் அமைந்த கதிரைமலைப்பள்ளின் மொழியமைதியினை நோக்கு மிடத்து, மக்களிடையே வழங்கும் பேச்சு வழக்குச் சொற்கள், சொற்ருெடர்கள், முதுமொழிகள் என்பன கதிரைமலைப்பள்ளில் இடம்பெற்றுள்ளமையினைக் காணலாம். கேளும் *(55)* பேசாதே *(56)* தேட்டம் *(58)* என்னடி *(64)* காலமே *(66)* ஊதாரி *(73)* இங்கே *(82)* மெத்த *(108)* பேசியும் *(110)* என்னும் சொற் களும்; விற்றுத் தின்றது *(55)* இப்படிக்கொத்த *(67)* கன்று காலி *(78)* கள்ளுஞ் சுள்ளும் *(78)* உன் புருஷனே *(89)* தயங் கிருனடி *(100)* மோசம்பண்ணி *(108)* எடி நாயே *(114)* முழு மூடி *(115)* வயிறு வளர்ப்பதும் *(124)* வாய் பிளப்பேன் *(127)* என்னைப் பாராயோ *(92)* ஒன்றுசொல்ல ஒன்பதுஞ் சொல்லி *(78)* பண்ணுகின்ற *(78)* என்னுஞ் சொற்ருெடர்களும்; அன்னை யின் மனையாள் *(78)* ஆகமும் உயிரும் போல *(77)* ஊரை உலைமூடி கொண்டு மூடலாமோ *(57)* கோத்திரத்திலில்லாத குணம் படைத்து *(108)* சற்றே தண்ணீர் தலைக்குமேலோடின் சாணென்ன முழந்தானென்ன *(90)* கண்ட கண்ணும் கடலிற் கழுவி *(77)* பூனையுடன் எலியெதிர்த்தால் தப்பி மீளுமோ *(117)* வேழம்கண் டாழியஞ்சி வெருளுமோ *(111)* உப்பும் கர்ப்பூரமும் ஒக்குமோ *(110)* என்னும் முதுமொழிகளும் எடுத்துக்காட்டாகக் கூறத்தக்கவை.

இவை யாவற்றையும் தொகுத்து நோக்குமிடத்து, கதிரை மலைப்பள்ளு, பள்ளுப்பிரபந்தக் கதைப்போக்கிற்கு ஊறுசெய்யாத வகையிற் பாட்டுடைத் தலைவன் பெருமையைக் கூறியிருப்பத ஞலும், இலக்கிய நலன் வாய்ந்த பாடற்பகுதிகளைக் கொண் டிருப்பதனுலும் இலக்கியச் சிறப்புவாய்ந்த நூலாக விளங்கு கின்றது. ஈழத்தின் முதற் பள்ளுப் பிரபந்தம் என்ற வகையிற் பின்னர் எழுந்த ஈழத்துப் பள்ளுப் பிரபந்தங்களுக்கு ஓரளவு வழிகாட்டி உள்ளது; மக்களிடையே வழங்கும் பேச்சு வழக்குச் சொற்கள் சொற்ருெடர்கள் முதுமொழிகள் என்பனவற்றை அதிக அளவில் எடுத்தாண்டுள்ளது என்னும் கருத்துக்கள் புலனுகும்.

ஆ. ஞானப்பள்ளு: யேசுநாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட ஞானப்பள்ளு 257 செய்யுட்களைக் கொண்டுள்ளது. கதிரைமலைப்பள்ளின் ஆசிரியர் பெயர் தெரியாதிருப்பதுபோல் ஞானப்பள்ளின் ஆசிரியர் பெயரும் தெரியவில்லை. ஆசிரியரின் பெயர் தெரியாமையினுற் காலத்தினையும் திட்டவட்டமாகக் கூறமுடியாதுள்ளது. எனினும், ஞானப்பள்ளில் வரும் செய்யுள் ஒன்று அதன் காலத்தினை வரையறுக்க உதவுகின்றது.

'பேரான பாராளும் பிடுத்துக்கால் மனுவென்றன்
பிறதானம் விசவே கூவாய் குயிலே.' [9]

என்னும் செய்யுளில் 'பாராளும் பிடுத்துக்கால்' எனப் போர்த்துக்கேயர் ஆட்சிநிகழ் காலத்திற் கூறப்படுவதனுல், போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் இந்நூல் எழுந்திருக்க வேண்டும். கி. பி. 1621ஆம் ஆண்டிலிருந்து 1658ஆம் ஆண்டு வரை போர்த்துக்கேயர் ஆட்சி யாழ்ப்பாணத்தில் நிலவியமை யால் அக்காலப் பகுதிக்குள் ஞானப்பள்ளு எழுந்தது எனக் கொள்ளலாம்.

பொருளமைதி: பள்ளுப் பிரபந்தத்திற்குரியனவாகக் கூறப் படும் பொருட் பகுதிகளில் ஆயர் சம்பந்தமான பகுதிகளும் இளைய பள்ளியைப் பண்ணைத் தலைவன் உரப்பல் என்னும் பகுதியையும் தவிர்ந்த ஏனைய பொருட்பகுதிகள் யாவும் ஞானப் பள்ளில் இடம் பெற்றுள்ளன. பண்ணைக்காரன் பள்ளனிடம் மூத்த பள்ளியைப் பிரிந்து இளைய பள்ளியிடம் போவதற்கு என்ன காரணம் எனக் கேட்பதும் அதற்குப் பள்ளன் விடை கூறுவதும் புதிய பகுதிகளாக உள்ளன. கடவுள் வணக்கம் முதலாக ஏசல் ஈருகப் பள்ளுப் பிரபந்தத்திற்குரிய பகுதிகள் பலவற்றையும் ஞானப்பள்ளில் அமைத்த அதன் ஆசிரியர் அப் பொருட் பகுதிகள் பலவற்றிற் சமயக் கருத்துக்களையே கூறியுள்ளார். இதனுற் பள்ளுப் பிரபந்தத்திற்குரிய இலக்கியச் சிறப்பினை ஞானப்பள்ளிற் காணமுடியா திருக்கின்றது. மழை பொழிதல், நாற்று நடுதல், அரிவி வெட்டுதல், சூடடுக்குதல் என்னும் பகுதிகள், அந் நிகழ்ச்சிகளை இயற்கையான முறையிற் பொருட் சிறப்பும், ஓசைச் சிறப்பும் பொருந்த வருணிப்பனவாகவே பள்ளுப் பிரபந்தங்களில் இடம் பெற்றுள்ளன. ஆனுல், ஞானப்பள்ளின் ஆசிரியர் இயற்கை நிகழ்ச்சிகளுக்குப் பதிலாகச் சமயக் கருத்துக் களையே அப்பகுதிகளில் எடுத்துக் கூறியுள்ளார். மழை பொழிதல் என்னும் பகுதியில்

கொலையொடு களவுங் கொடியபொய் தாமும்
கொடுகியே நிலையற் றுலையவே
தன்மக் குணமுந் தவநெறி பொறையும்
தானிடு செபமும் பொழியவே
நன்மழை தானே பொழிந்ததுவே.[10]

எனக் கூறியிருப்பதும்,

நாற்று நடுதல் என்னும் பகுதியில்,

ஓங்கியே கடலில் நீங்கியே திரிந்த
உத்தம கிறிஸ்து நானுடன்
உயங்கி ருசியாள் சுசீலியாளு முகந்து
நாற்று நடுகச்சே
தாங்கியே நரகில் விங்கியே யெரிந்து
சந்தம் புரியும் பாவிகள்
தாங்கியே நெருக்கம் போக்கிவிண் ணடைந்த
சங்கத்தைப் பாரும் பள்ளிரே.[11]

எனக் கூறியிருப்பதும் இங்கு சான்ருக எடுத்துக் காட்டத் தக்கன. முன்னர் குறிப்பிட்ட பகுதிகளுடன், 'பள்ளன் கணக்குக் கூறல்' என்னும் பகுதியும் சமயக் கருத்துக்களுக்கு முக்கியத் துவம் கொடுப்பதாக ஏனைய பள்ளுப் பிரபந்தங்களில் இருந்து வேறுபட்டமைந்துள்ளது.

இவ்விதம் பள்ளுப் பிரபந்தத்தின் பொருட் பகுதிகளிற் சமயக் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்த ஞானப் பள்ளின் ஆசிரியர் பள்ளியர் தம் தலைவன் பெருமை கூறல், குயில் கூவல், நாற்று நடுதல் என்னும் பகுதிகளிற் பாட் டுடைத் தலைவரான யேசுநாதரின் பெருமையினைக் கூறியுள் ளார். பாட்டுடைத் தலைவன் பெருமை பாடுவதே ஆசிரியரின் முக்கிய நோக்காக இருந்தமையால் அதற்கேற்பப் பள்ளியர் தம் தலைவன் பெருமை கூறல் என்னும் பகுதியை மிகவும் விரி வாக அமைத்துள்ளார்.

பள்ளுப் பிரபந்தத்திற்குரிய பொருட் பகுதிகளை விடப் பள்ளுப் பிரபந்தத்தின் கதைப் போக்கோடு தொடர்பற்ற வகையில் 29 அறிவுறுத்தற் பாடல்கள் ஞானப் பள்ளில் இடம் பெற்றுள்ளன. கவிக் கூற்ருக வரும் இப் பாடல்களிற் பாட் டுடைத் தலைவரான யேசுநாதரின் பெருமையும் நிலையாமைக் கருத்துக்களும் கூறப்பட்டுள்ளன. சில செய்யுட்களிற் பிரசாரத் தன்மையும் காணப்படுகின்றது. இச் செய்யுட்கள் நூல் முழு

வதிலும் ஊடுருவி அமைந்துள்ளமையினுற் பள்ளுப் பிரபந்தத்தின் கதைப் போக்கு இவற்றினுற் பெரிதும் பாதிக்கப்படுகின்றது. இவை யாவும் ஞானப் பள்ளின் ஆசிரியர் பள்ளுப் பிரபந்தக் கதைப் போக்கிற் கவனஞ் செலுத்தாது பாட்டுடைத் தலைவன் புகழ் பாடுவதிலும் சமயக் கருத்துக்களைக் கூறுவதிலுமே கவனஞ் செலுத்தியுள்ளார் என்பதனைக் காட்டுகின்றன.

மொழியமைதி: வெண்பா கலிப்பா விருத்தம் சிந்து தரு ஆகிய பாடல்களால் அமைந்துள்ள ஞானப் பள்ளிற் பேச்சு வழக்கின் செல்வாக்கு மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. பேசினுய் *(234)* சுமத்தினுய் *(253)* ஆரடி *(238)* ஏனடி *(35)* தேடுமேன் *(188)* நம்புமேன் *(186)* நம்புறீர் *(206)* தளம்புறீர் *(224)* முதலான சொற்கள் சிலவும் விழுந்தே போச்சு *(126)* நாற்று நடுகச்சே *(212)* உண்மையாச் சொல்லும் *(236)* வைத்திருக்குது *(196)* முதலான சொற்ருெடர்கள் சிலவுமே பேச்சு வழக்கினை நினைவூட்டுவனவாக அமைந்துள்ளன. மக்களிடையே வழங்கும் பழமொழிகளின் ஆட்சி இப் பள்ளில் இடம் பெறவில்லை.

இதுவரை கூறியவற்றிலிருந்து ஞானப்பள்ளு, யேசுநாதரின் புகழினைப் பாடுதலையே முக்கிய நோக்காகக் கொண்டுள்ளது; சமயத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்த நிலையிற் பள்ளுப் பிரபந்தத்தின் இலக்கியச் சிறப்பினை இழந்து ஏனைய பள்ளு நூல்களில் இருந்து வேறுபட்டுள்ளது; பேச்சு வழக்கின் செல்வாக்கினை மிகக் குறைந்தளவிலேயே காட்டுகின்றது என்னும் கருத்துக்கள் பெறப்படுகின்றன.

(இ) பருளை விநாயகர் பள்ளு: பருளை என்னும் இடத்தில் எழுந்தருளியுள்ள விநாயகரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பருளை விநாயகர் பள்ளு பாடப்பட்டுள்ளது. காப்புச் செய்யுட்களும் கடவுள் வாழ்த்துச் செய்யுட்களும் நீங்கலாக, பள்ளியர் தோற்றம் முதல் நாற்று நடுதல் ஈருக 126 செய்யுட்கள் பருளை விநாயகர் பள்ளில் இடம் பெற்றுள்ளன. இப் பள்ளில் நாற்று நடுதலின் பின் உள்ள செய்யுட்கள் சிதைந்து விட்டன. இந் நூலின் ஆசிரியர் கி. பி. 1716—1780 வரை வாழ்ந்த நல்லூர்ச் சின்னத்தம்பிப் புலவராவர். பருளை விநாயகர் பள்ளு, எந்த ஆண்டிற் பாடப்பட்டது என்பதனைக் கூறுவதற்கு ஏற்ற சான்றுகள் இன்மையாற் சின்னத்தம்பிப் புலவர் வாழ்ந்த காலப்பகுதியையே நூலின் காலப்பகுதியாகக் கொள்ளவேண்டியுள்ளது.

பொருளமைதி: நாற்று நடுதல் என்னும் பகுதிவரையுள்ள பருளை விநாயகர் பள்ளில் ஆயர் வருதல் அவர் பெருமை கூறுதல் என்னும் பொருட் பகுதிகள் இடம் பெறவில்லை. அத்துடன் பண்ணைத் தலைவன் வரவின் பின்னர் இடம் பெறும் மூத்த பள்ளி முறையீடு, பண்ணைத் தலைவன் இளைய பள்ளியை உரப்பல், பள்ளன் வரல் ஆகிய பகுதிகள் தனித்தனியாக விரித்துக் கூறப்படாது, ஒரு செய்யுளிலே தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

பருளை விநாயகர் பள்ளிற் பள்ளியர் நாட்டு வளம் கூறுதல், மழை பொழிதல், ஆற்று வரத்து, நாற்று நடுதல், மூத்த பள்ளி முறையீடு என்னும் பகுதிகளில் வரும் பாடல்கள் இலக்கிய நயம் பயப்பனவாக அமைந்துள்ளன. நாட்டு வளம் கூறும் 34 பாடல்களிலும் ஈழ மண்டலத்தினதும் சோழ மண்டலத்தினதும் இயற்கை வளத்தினைக் கற்பனை வளந்தோன்றச் சின்னத்தம்பிப் புலவர் பாடியுள்ளார். மழை பொழிதல், ஆற்று வரத்து, நாற்றுநடுதல் என்னும் பகுதிகளில் வரும் பாடல்கள் பொருட் சிறப்பும், ஓசைச் சிறப்பும் உடையனவாக விளங்குகின்றன. நாற்று நடுதல் என்னும் பகுதியில் வரும் பாடல்கள் சின்னத்தம்பிப் புலவரின் கற்பனையாற்றலினைக் காட்டுவனவாகவும் அமைந்துள்ளன.

பள்ளுப் பிரபந்தத்தின் பொருட் பகுதிகள் சிலவற்றைச் சிறப்பான முறையில் அமைத்த சின்னத்தம்பிப் புலவர், பாட்டுடைத் தலைவரான விநாயகர் பெருமையினையும் குயில் கூவல், நாற்று நடுதல் ஆகிய பகுதிகளிற் கதையோடு தொடர்பான முறையிற் கூறியுள்ளார். இவற்றை விட நாட்டு வளம் கூறும் பாடல்களை அடுத்து இடம்பெற்ற குலமுறை கிளத்தல் என்னும் பகுதியிலும் வேறு இரண்டு செய்யுட்களிலும் கதைத் தொடர்பற்ற வகையிற் கவிக் கூற்றாகப் பாட்டுடைத் தலைவராகிய விநாயகரின் பெருமை கூறப்பட்டுள்ளது.

கவிக் கூற்றாக வரும் மூன்று பாடல்களைக் கொண்ட பருளை விநாயகர் பள்ளில் கதைத் தொடர்பற்ற வகையில் நான்கு அகத்துறைச் செய்யுட்களும் இடம்பெற்றுள்ளன. கழிக்கரைப் புலம்பல், தலைவியைப் புகழ்தல், தலைவன் பொருள்வயிற் பிரிந்துழித் தலைவி வருத்தம் பாங்கி கூறல், நற்றாயிரங்கல் என்னுந் துறைகளில் அமைந்த அப் பாடல்கள் நான்கும் முறையே குயில்கூவல், ஆற்று வரத்து, பள்ளன் ஆண்டைக்குக் கணக் கொப்பித்தல், பண்ணைச் செயல் காணப் பண்ணைத் தலைவனை அழைத்தல் என்னும் பகுதிகளை அடுத்து அமைந்துள்ளன. இவ் வகத்துறைச் செய்யுட்கள் கதையோடு தொடர்பற்ற வகையில் ஆங்காங்கு அமைந்துள்ளமையினாற் பருளை விநாயகர் பள்ளின் கதைப்போக்கினை இவை ஓரளவு தடைசெய்கின்றன.

பருளை விநாயகர் பள்ளின் பொருளமைதி பற்றிக் கூறு மிவ்விடத்தில் முக்கூடற் பள்ளின் செல்வாக்குப் பருளை விநாயகர் பள்ளில் இடம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்க தாகும். பருளை விநாயகர் பள்ளு பண்ணைக்காரனின் தோற்றத் தினைக் கூறுமிடத்து அவன் கண்ணை 'மாறுகண்' எனவும், வயிற்றினை 'பருத்திப்பைக் கூறை வயிறு' எனவும் கூறியுள்ளது. இதனால், 'மாறுகண்ணும் பருத்திப்பைக் கூறுவயிறும்' என வரும் முக்கூடற்பள்ளு அடிகளின் செல்வாக்கு பருளை விநாயகர் பள்ளில் இடம் பெற்றுள்ளது என்பது தெரிகின்றது. மேலும் பருளை விநாயகர் பள்ளில் மூத்தபள்ளி முறையீடு என்னும் பகுதியில் வரும்,

'பெட்டிச் சோற்றுக்கும் கள்ளுக்கும் நெல்லெல்லாம்
பெட்டியால் அள்ளிக் கொட்டின னுண்டே.'[12]

'அவள் சொன்னால் நாகமும் பிடிப்பான்.'[13]

என்னும் கருத்துக்கள், முக்கூடற் பள்ளில் மூத்த பள்ளி முறையீடு என்னும் பகுதியில் வந்துள்ள,

'பெட்டியால் வாரிப் பட்டடை நெல்லெல்லாம்
பேய்த் தண்ணிருக்குத் தேய்த்தான்கா ணுண்டே.'[14]

'அவள் சொன்னால் பாம்பையும் பிடிப்பான்,'[15]

என்னும் கருத்துக்களைத் தழுவி எழுந்துள்ளன. இவற்றுடன் பருளை விநாயகர் பள்ளின் நுகம், கொழு என்பனவற்றின் கணக்கினைக் கூறுமிடத்து வரும்,

'மற்றப் பாம்புக்கும் பூரத்துக்கும் பகல்
வைத்த நானுக மொன்றுண்டே.'[16]

'மாணிக்கர் சொன்ன கோவையி லேகொழு
வைத்திருப்பது பார்மின்.'[17]

என்னும் கருத்துக்கள் முக் கூடற் பள்ளில்[18] வந்தவையே.

இவ்விதம் முக்கூடற் பள்ளின் செல்வாக்கினை அதிகம் பிரதிபலிக்கும் பருளை விநாயகர் பள்ளில் நாற்று நடுதல், மூத்த பள்ளி புலம்பல் ஆகிய பகுதிகளில் வரும் பாடல்களிற் கதிரை மலைப் பள்ளின் செல்வாக்கினைக் காணலாம்.

மொழியமைதி: சிந்து, வெண்பா, கலிப்பா, விருத்தம், என்னும் பாடல்களால் அமைந்த பருளை விநாயகர் பள்ளில் வரும் இங்கே பாரும் (118) வரும் (81) கேளும் (93) இளையாள் (93) சட்டைக்காறி (94) பாரதம் (95) தலையாரி (97) தோச்சிடும் (97) முதலான சொற்களும், ஆயிரக்காணும் (85)

ஐந்நூறுகாணும் (85) பழைய தாரம் (94) ஒருக்காலும் (99) விண்ணிலிடி மின்னுமல் வீழ்ந்ததையா (111) நடவாரும் (116) தலையாட்டினன் (119) ஆகிய சொற்றொடர்களும் பேச்சு வழக்கினை நினைவூட்டுகின்றன. இவற்றைவிட மக்களிடையே வழங்கும் பட்டநெஞ்சில் அடாதன செய்தார் படாத தெல்லாம் படுவார் (99) கண்ணிலே கரந்தீண்டிவிட்டால் அந்தக் கைவிரல் தறிப்பார்களுண்டோ (100) சிறியோர் செய்யும் பிழை சீரியோர் பொறுக்கக் கடன் (100) என்னும் முதுமொழிகளும் இப் பள்ளில் வந்துள்ளன.

இதுவரையும் கூறியவற்றால் பருளை விநாயகர் பள்ளு இலக்கிய நலன் வாய்ந்த பாடல்கள் பலவற்றைக் கொண்டுள்ளது; முக்கூடற் பள்ளின் செல்வாக்கினை அதிகம் பிரதிபலிக்கின்றது; குறிப்பிடத்தக்க அளவிற்கு மக்களின் பேச்சு வழக்குகளைக் கையாண்டுள்ளது என்னும் கருத்துக்கள் புலனாகியுள்ளன.

தண்டிகைக் கனகராயன் பள்ளு: தெல்லிப்பழையில் வாழ்ந்த தண்டிகைக் கனகராய முதலியார் என்பவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட இப்பள்ளு கடவுள் வணக்கம் முதலாக நாற்று நடுதல் ஈறாக 153 செய்யுள்களைக் கொண்டுள்ளது. இப் பள்ளிலும் நாற்று நடுதலிற் பின் உள்ள பாடல்கள் சிதைந்து விட்டன. இப் பள்ளின் ஆசிரியர் மாவைச் சின்னக்குட்டிப் புலவராவர். கி. பி. 1792ஆம் ஆண்டிற்குச் சில காலம் முன்னர் இப் பள்ளு இயற்றப்பட்டது[19] என்பர்.

பொருளமைதி: நாற்று நடுதல் வரையிலான பாடல்களைக் கொண்டுள்ள தண்டிகைக் கனகராயன் பள்ளிலும் முன்னர் கூறிய ஈழத்துப் பள்ளுப் பிரபந்தங்கள் முற்றிலும் இடம் பெறாத ஆயர் வருதல், ஆயர் பெருமை கூறுதல் என்னும் பகுதிகள் இடம் பெறவில்லை. இவற்றைவிடப் பள்ளுப் பிரபந்தத்திற்குரிய முக்கியமான பொருட் பகுதிகள் யாவும் தண்டிகைக் கனகராயன் பள்ளில் இடம் பெற்றுள்ளன. ஞானப் பள்ளினைப் போன்று தண்டிகைக் கனகராயன் பள்ளிலும் பாட்டுடைத் தலைவன் பெருமைக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. தண்டிகைக் கனகராயன் பள்ளில் வரும் நாட்டு வளம் கூறுதல், கிளை வளங் கூறுதல், குயில் கூவல் ஆகிய பகுதிகள் பாட்டுடைத் தலைவன் பெருமையினைப் புலப்படுத்துவதே ஆசிரியரின் நோக்கம் என்பதனைக் காட்டுகின்றன.

தண்டிகைக் கனகராயன் பள்ளில் வடகாரை தென்காரை நாட்டு வளங் கூறுவதற்கு முன்னர், கனகநாயக முதலியின் பெருமையினையும் அவன் உறவினரையும் கூறித் "தண்டிகைக்

கனகநாயகன் நாடெங்கள் நாடே' எனப் போற்றும் ஐந்து பாடல்கள் வந்துள்ளன. பிற பள்ளுப் பிரபந்தங்களில் இத் தன்மை இடம் பெறவில்லே. கிளேவளங் கூறல் என்னும் பகுதியிற் கனகநாயக முதலியின் சந்ததியினர் யாவரையும் தமது தலேவர்கள் எனப் பள்ளியர் பாடுவதாகச் சின்னக்குட்டிப் புலவர் அமைத்துள்ளார். குயில் கூவல் என்னும் பகுதி மிகவும் நீண்டு தெல்லிப்பழை, மயிலிட்டி, இருபாலே ஆகிய மூன்று இடங் களிலும் உள்ள சிலரை விதந்து போற்றுவதாக உள்ளது.

இவ்விதம் மேற்கூறிய பகுதிகளிற் பாட்டுடைத் தலேவனேயும் அவன் சந்ததியினரையும் போற்றிய சின்னக்குட்டிப் புலவர் நூலின் கதைப் போக்குடன் தொடர்பற்ற வகையிற் பாட்டுடைத் தலேவன் புகழைப் பல செய்யுட்களிற் கூறியுள்ளார். பெரும் பாலும் பள்ளுப் பிரபந்தத்தின் பொருட் பகுதிகள் ஒவ்வொன் றினேயும் அடுத்து அத்தகைய செய்யுட்கள் இடம்பெற்றுள்ளன. அச் செய்யுட்களிற் பெரும்பாலானவை அகத்துறை சம்பந்த மானவையாக அமைந்துள்ளன. இவ்வாறெல்லாம் பாட்டுடைத் தலேவன் பெருமை பாடுவதற்கு ஆசிரியர் கொடுத்த முக்கியத் துவம் தண்டிகைக் கனகராயன் பள்ளின் கதைப் போக்கினேத் தடை செய்து அதன் இலக்கியச் சிறப்பினேயும் பாதித்துவிட்டது எனலாம். இலக்கியச் சிறப்பு பாதிக்கப்பட்ட இடத்தும் இப் பள்ளில் வந்துள்ள மழை பொழிதல், ஆற்று வரத்து, நாற்று நடுதல் என்னும் பகுதிகள் சிறப்பாய் அமைந்துள்ளமை குறிப் பிடத்தக்கது.

பருளே விநாயகர் பள்ளினேப் போன்று தண்டிகைக் கனக ராயன் பள்ளிலும் முக்கூடற்பள்ளின் செல்வாக்கினேக் காணலாம். மூத்த பள்ளி பள்ளனேத் தொழுவில் மாட்டுமாறு முறையிடும் பகுதியில் முக்கூடற் பள்ளில் வந்த கருத்துக்கள் சில அப்படியே தண்டிகைக் கனகராயன் பள்ளிலும் வந்துள்ளன.

'தேனுக்குட் பாலாய் — அவள் மஞ்சள்
மேனிக்கு மாலாய் — பணமெல்லாஞ்
சிந்தியே கெட்டான் — எனேயின்று
சந்தியில் விட்டான்[20]

என முக்கூடற் பள்ளில் வருவது,

தேனுக்குட் பாலாய் அவள் மஞ்சள்
மேனிக்கு மாலாய்
எனே யென்றுஞ் சந்தியி லிழுப்பான்
பண மெல்லாஞ் சிந்தியே கெடுப்பான்

எனத் தண்டிகைக் கனகராயன் பள்ளில் அப்படியே இடம் பெற்றுள்ளமையினை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். மேலும் பள்ளன் தொழுவில் மாட்டுண்டிருத்தலைக் கூறுமிடத்து முக்கூடற் பள்ளில் மூத்த பள்ளியின் கூற்றாக வரும் கருத்துக்கள் அப்படியே தண்டிகைக் கனகராயன் பள்ளிலும் வந்துள்ளமையினை,

பருந்தாட்டங் கொண்டு கொப்பத்தில் — ஆனை
பட்டாப்போல் அகப்பட்டாய் — மரத்தில்
பொருந்தத் தன்வினை தன்னைச்சுற்றும் விதி
பொய்க்குமோ[22]

என்னும் முக்கூடற்பள்ளு அடிகளையும்,

மதம் பட்டமா வகப்பட்டாற் போல
பொருந்தித் தன்வினை தன்னைச்சுற்றக் காலிற்
பூணதாய்த் தொழுப் பூண்டு[23]

எனவரும் தண்டிகைக் கனகராயன் பள்ளு அடிகளையும் ஒருங்கு நோக்குமிடத்துக் காணலாம். தண்டிகைக் கனகராயன் பள்ளில் வரும் பண்ணைக்காரன் தோற்றம் பற்றிய வருணனை முக்கூடற் பள்ளை அப்படியே தழுவியுள்ளது. இவற்றைவிட தண்டிகைக் கனகராயன் பள்ளின் நாற்றுநடுதற் பகுதியில் வரும் பாடல் களிலும் முக்கூடற் பள்ளின் செல்வாக்கினைக் காணலாம்.

மொழியமைதி: சிந்து தரு கலிப்பா விருத்தம் ஆகிய பாக்க ளால் அமைந்த தண்டிகைக் கனகராயன் பள்ளின் மொழி யமைதியினை நோக்குமிடத்து, கதிரைமலைப் பள்ளு, பறாளை விநாயகர் பள்ளு என்பவற்றிலும் விடக் குறைவாகவே பேச்சு வழக்கின் செல்வாக்கு இடம் பெற்றுள்ளமை தெரிகின்றது. சிறுத்த (107), பெருத்த (107) சொந்தக்காரி (111) பிலுக்காய் (117) தேட்டம்(118)என்னும் சொற்களும், என்ன காரியம்(117), வீரப்பள்ளனுரே, அகப்பட்டுக் கொண்டாயே (123) ஒன்றுக் கொன்பது சொல்லி (123) சன்னை கொன்னை (125) என்னும் சொற்றொடர்களும் பேச்சு வழக்கினவாக அமைந்துள்ளன. இவற்றுடன் தன்வினை தன்னைச் சுற்ற (122) என்னும் முது மொழியும் இடம் பெற்றுள்ளது.

இதுவரை கூறியவற்றிலிருந்து தண்டிகைக் கனகராயன் பள்ளு, பாட்டுடைத் தலைவன் புகழ் பாடுவதையே முக்கிய மாகக் கொண்டமையினுல், இலக்கியச் சிறப்பினை இழந்து விட்டது. இப்பள்ளில் முக்கூடற் பள்ளின் செல்வாக்குப் பெரிதும் இடம் பெற்றுள்ளது. பேச்சு வழக்குச் செல்வாக்கு மிகக் குறைவாகக் காணப்படுகின்றது என்னும் கருத்துக்கள் பெறப் படுகின்றன.

ஈழத்துப் பள்ளுப்பிரபந்தங்கள் பற்றிய சில முடிவுகள் :

இவ்விதம் ஈழத்தில் எழுந்த கதிரைமலைப்பள்ளு, ஞானப் பள்ளு, பருளை விநாயகர் பள்ளு, தண்டிகைக் கனகராயன் பள்ளு என்னும் நான்கு பிரபந்தங்களையும் விரிவாக நோக்கியதன் மூலம் ஈழத்துப் பள்ளுப் பிரபந்தங்களின் காலம், பொரு ளமைதி, மொழியமைதி, இலக்கியச் சிறப்பு என்பனபற்றிய பொதுவான முடிபுகள் சிலவற்றைக் கூறக்கூடியதாக இருக் கின்றது.

ஈழத்தில் எழுந்த பள்ளுப் பிரபந்தங்களுள் கதிரைமலைப் பள்ளு கி. பி. 1478—1519 வரையுள்ள காலப்பகுதியிலும், ஞானப்பள்ளு கி. பி. 1621—1658 வரையுள்ள காலப் பகுதி யிலும், பருளை விநாயகர் பள்ளு கி. பி. 1716—1780 வரை யுள்ள காலப் பகுதியிலும், தண்டிகைக் கனகராயன் பள்ளு 1792ஆம் ஆண்டிற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னும் எழுந் துள்ளன வாகையினுல், ஈழத்துப் பள்ளுப் பிரபந்தங்களுள் கதிரை மலைப் பள்ளே காலத்தால் முற்பட்டது என்பது தெளிவா கின்றது. தமிழ் நாட்டில் எழுந்த முதற் பள்ளுப்பிரபந்தமெனக் கூறப்படும் முக்கூடற்பள்ளின் காலம் கி. பி. 1680 எனக் கூறப்படுவதனுல்[24] தமிழ் நாட்டில் முக்கூடற்பள்ளு தோன்ற முன்னர் ஈழத்திற் கதிரைமலைப் பள்ளும் ஞானப் பள்ளும் தோன்றிவிட்டன என்பதும் தெரிய வருகின்றது. இந் நிலை யில் முக்கூடற் பள்ளே தமிழில் முதல் எழுந்த பள்ளுப் பிர பந்தம்[25] எனவும், அதனைப் பின்பற்றிப் பிற பள்ளுகள் அனைத்தும் எழுந்தன[26] எனவும் கூறப்படும் கருத்துக்கள் தவருனவை என்றே கூறவேண்டும். சிலர் திருவாரூர்ப் பள்ளினைத் தமிழ் நாட்டில் எழுந்த முதற் பள்ளுப் பிரபந்தமெனக் கொண்டு அதுவே தமிழில் எழுந்த முதற் பள்ளு இலக்கியம் எனக் கூறுவர்[27]. அவ்வாறு கூறுவோர் திருவாரூர்ப் பள்ளின் காலத்தினை கி. பி. 16ஆம் நூற்ருண்டின் பிற்பகுதி எனக் கூறுவதனுல் அதுவும் கதிரைமலைப் பள்ளுக்குப் பிற்பட்டதாகவே விளங்குகின்றது. இதனுல் திருவாரூர்ப் பள்ளே தமிழில் எழுந்த முதற் பள்ளுப் பிரபந்தம் என்பதும் தவருன முடிவாகின்றது. இவ்விதம் தமிழ் நாட்டில் முதலில் எழுந்த பள்ளுப் பிரபந்தங்கள் எனக் கூறப் படும் முக்கூடற் பள்ளும், திருவாரூர்ப் பள்ளும் கதிரைமலைப் பள்ளின் காலத்திற்குப் பிற்பட்டனவாகையினுல், இன்று எமக்குக் கிடைக்கும் பள்ளுப் பிரபந்தங்களுள் ஈழத்தில் எழுந்த முதற் பள்ளுப் பிரபந்தமான கதிரைமலைப்பள்ளே பள்ளுப் பிரபந்தங்கள் யாவற்றினுள்ளும் காலத்தால் முற்பட்டதாக விளங்குகின்றது எனக் கூறலாம்.

பொருளமைதியைப் பொறுத்தளவிற் கதிரைமலைப் பள்ளு, ஞானப்பள்ளு என்பனவற்றில் அகத்துறைச் செய்யுட்கள் இடம் பெறுமையால் காலத்தால் முற்பட்ட ஈழத்துப் பள்ளுப் பிரபந்தங்கள் அகத்துறைக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை என்று கூறலாம். இப் பண்பால் தமிழில் உள்ள ஏனைய பள்ளு நூல்கள் யாவற்றிலிருந்தும் கதிரைமலைப் பள்ளும் ஞானப்பள்ளும் வேறுபடுகின்றன. அடுத்து, தமிழ்நாட்டில் எழுந்த முக்கூடற்பள்ளு, பள்ளுப் பிரபந்த வகையில் மிகவும் சிறப்புப் பெற்று விளங்கியமையால், அதன் பின்னர் எழுந்த பள்ளுப் பிரபந்தங்கள் பிரதிபலித்த அதன் செல்வாக்கினை ஈழத்துப் பள்ளுப் பிரபந்தங்களும் பிரதிபலித்தமையைப் பறாளை விநாயகர் பள்ளும் தண்டிகைக் கனகராயன் பள்ளும் காட்டுகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மொழியமைதியைப் பொறுத்தளவில் ஈழத்தில் எழுந்த பள்ளுப் பிரபந்தங்களுட் கதிரைமலைப்பள்ளே மக்களின் பேச்சு வழக்கினை அதிகம் எடுத்தாண்டுள்ளது. பறாளை விநாயகர் பள்ளினை இவ்வகையில் அடுத்துக் குறிப்பிடலாம். இவை தவிர்ந்த ஏனைய இரண்டு பள்ளுகளிலும் பேச்சு மொழிச் செல்வாக்கு மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. தமிழ் நாட்டில் எழுந்த பள்ளுப் பிரபந்தங்களுடன் ஒப்பிடுமிடத்து, பேச்சு வழக்கின் செல்வாக்கு ஈழத்தில் எழுந்த பள்ளுப் பிரபந்தங்களிற் குறைவாகவே காணப்படுகின்றது என்பதும் மனங்கொள்ளத்தக்கது.

இறுதியாக, பள்ளுப் பிரபந்த இலக்கியச் சிறப்பினைப் பொறுத்தவரையில், ஈழத்தில் எழுந்த பள்ளுப் பிரபந்தங்களிற் கதிரைமலைப் பள்ளு, பறாளை விநாயகர் பள்ளு ஆகிய இரண்டுமே இலக்கியச் சிறப்பு வாய்ந்தவையாக அமைந்துள்ளன எனக் கூறலாம்.

அடிக்குறிப்பு:

1. தந்தையார் பதிற்றுப் பத்து என்னும் நூலிற் பிற்சேர்க்கையாக இடம் பெற்ற 'நவாலியூர் அருமையினுர் வன்னியசேகர முதலி மரபு' என்னும் கட்டுரையில் இக்கருத்துக் கூறப்பட்டுள்ளது.

   தந்தையார் பதிற்றுப்பத்து – பிற்சேர்க்கை பக். vii — viii, திருமகள் அழுத்தகம், சுன்னுகம், 1961.

2. சதாசிவம் ஆ., ஈழத்துத் தமிழ்க்கவிதைக் களஞ்சியம், பக். 454, சாகித்திய மண்டல வெளியீடு, திருமகள் அழுத்தகம், சுன்னுகம், 1966.

3. Gnanaprakasar S. Rev. *The Kathiraimalaipallu*, Hindu Organ, 13-2-33. குமாரசாமி வ., கதிரைமலைப் பள்ளு, முகவுரை, பக். 8, சென்னை புரோகிரஸ் அச்சுக்கூடம், 1935
4. ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், பக். 57.
5. கதிரைமலைப் பள்ளு, காப்புச் செய்யுள்.
6. க. பள்ளு, 53ஆம் செய்யுள்.
7. பருளை விநாயகர் பள்ளு, 82ஆம் செய்யுள், சுழிபுர சங்கப் பிரசுரம், வித்தியானுபாலன அச்சகம், சென்னை, 1956.
8. த. க. பள்ளு, செ. 109, சாது அச்சுக்கூடம், சென்னை,1932.
9. ஞானப்பள்ளு, செ. 840, அரசு வெளியீடு, கொழும்பு, 1968.
10. ஷை செ. 94, 95.
11. ஷை செ. 215.
12. ப. வி. ப., செ. 94.
13. ஷை செ. 96.
14. மு. கூ. ப., செ. 57. கழக வெளியீடு, 1957.
15. ஷை செ. 89.
16. ப. வி. ப., செ. 86.
17. ஷை செ. 90.
18. மு. கூ. ப., செ. 73, 74.
19. த. க. பள்ளு (குமாரசாமி வ.), பக். 69.
20. மு. கூ. ப., செ. 87.
21. த. க. ப., செ. 114, 115.
22. மு. கூ. ப., செ. 98.
23. த. க. ப., செ. 122.
24. மு. கூ. ப. (அருணாசலம் மு.), முன்னுரை பக். 19.
25. ஷை முன்னுரை பக். 81.
26. ஷை முன்னுரை பக். 26.
27. செயராமன் ந. வீ., சிற்றிலக்கியச் செல்வங்கள், பக். 155—156, மணிவாசகர் நூலகம், 1917.

ஈழத்துத் தமிழ் நாவல்கள்

நாகராஜ ஐயர் சுப்பிரமணியம்

ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் நாவல் என்ற புதிய துறை பத்தொன்பதாம் நூற்ருண்டின் இறுதிப்பகுதியிலே தோற்றம் பெற்றது. அக்காலப் பகுதியிலிருந்து 1973ஆம் ஆண்டுவரை சுமார் முந்நூறு தமிழ் நாவல்கள் (சிறிதும் பெரிதுமாக) ஈழத்தில் எழுதப்பட்டுள்ளன. இவற்றுட் பெரும்பாலன பத்திரிகைகளிலே தொடர்கதைகளாக வெளிவந்தவை. நூலுருவில் வெளிவந்தன வாக அறியப்படுவனவற்றுட் பல இன்று கிடைப்பதில்லே. நூலுரு விற் கிடைப்பவற்றையும் பத்திரிகைகளில் வெளிவந்தவை பற்றி அறியப்படும் தகவல்களேயும் ஆதாரமாகக் கொண்டு ஈழத்துத் தமிழ் நாவல்களே வரலாற்றுக் கண்ணேட்டத்தில் நோக்குவதாக இக் கட்டுரை அமைகின்றது.

பத்தொன்பதாம் நூற்ருண்டின் இறுதிப் பகுதியிலிருந்து இருபதாம் நூற்ருண்டின் மூன்ருவது தசாப்தம் வரையுள்ள காலப் பகுதியை ஈழத்துத் தமிழ் நாவல் வரலாற்றின் ஆரம்ப காலம் எனலாம். ஈழத்தை ஆங்கிலேயர் ஆட்சி செய்த அக் காலப் பகுதியில், அரசியல் ஆலோசகராகவும், நிர்வாக உதவி யாளர்களாகவும் ஈழத்தவரைப் பயிற்றும் பொருட்டுப் பரப்பப் பட்ட ஆங்கிலக் கல்வி, உத்தியோகம் பார்க்கும் நடுத்தர வர்க்கம் ஒன்றை உருவாக்கத் தொடங்கியிருந்தது. அதே வேளேயில் ஈழத்திற் கிறிஸ்தவ மதம் பரப்பும் முயற்சியில் ஈடு பட்ட மிஷனரி இயக்கத்தினரின் கல்விப்பணியின் பெறுபேருன ஆங்கிலக் கல்வி வளர்ச்சியும் மரபு வழிவந்த தமிழ்க்கல்வி வளர்ச்சியும் தமிழர் மத்தியிற் பலரை எழுத்தறிவு பெற்ருே ராக்கியிருந்தன. தமிழும் ஆங்கிலமும் கற்ற பலர் தேசிய உணர்வை வளர்ப்பதிலும் சமயப் புனருத்தாரண முயற்சிகளி லும் ஈடுபட்டனர். சிலர் தமிழ்நாட்டிற்குச் சென்று பல துறை களிலும் சிறந்து விளங்கியதோடு கல்விப்பணியும் புரிந்தனர்.

சைவத்தைப் பிரதான சமயமாகக் கொண்டிருந்த தமிழர் மத்தியில் நான்கு நூற்றாண்டுகாலம் மேனாட்டினரின் ஆட்சியாலும், மிஷனரி இயக்கத்தினரின் சமயப் பிரசார முயற்சிகளாலும் குறிப்பிடத்தக்க தொகையினர் கிறிஸ்தவர்களாகியிருந்தனர். கிறிஸ்தவ பிரசார முயற்சிகட்கெதிராக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் (1822 — 1879) சைவக்காவலராக நின்று ஆற்றிய பணிகள் அவர் காலத்தின் பின்னரும் சைவப் பெரியார்களாலே தொடரப்பட்டன. ஈழத்து முஸ்லிம்களிடையிலும் சமயம், அரசியல், கல்வி ஆகிய துறைகளில் மறுமலர்ச்சி ஏற்படத் தொடங்கியிருந்தது.

இவ்வாறு சமய இயக்கங்கள் இக்காலப் பகுதியிற் பெற்றிருந்த முக்கியத்துவம் இலக்கிய வளர்ச்சிக்குத் தூண்டுகோலாயமைந்தது. அச்சுக்கூடங்கள் நிறுவப்பட்டுப் பத்திரிகைகள் மூலமாகவும், தனி நூல்களாகவும் சமயக் கருத்துக்களும் கண்டனங்களும் பொதுமக்களை நோக்கிப் பரிமாறப்பட்டன. அதுவரை கற்றோர் கற்றுச் சுவைக்கும் நோக்கில் எழுதப்பட்ட வசனமும் செய்யுளும் தேவைக்கேற்ப இலகுபடுத்தப்பட வேண்டியவையாயின. இந்நிலை இருபதாம் நூற்றாண்டின் மூன்றாவது தசாப்தம்வரை காணப்பட்டது. சமூகத்தில், மேனாட்டுப் பண்பாட்டின் தாக்கத்தால் ஈழத்தின் மரபுவழிப் பண்பாடு சீர்குலைவது கண்டு அதனைச் சீர்திருத்தும் நோக்கிற்கும் எழுத்துப் பயன்படுத்தப்படலாயிற்று.

இத்தகைய சூழ்நிலையிற் பத்தொன்பதாம் நூற்றாண்டினிறுதியில் ஈழத்திலே தமிழ் நாவல் எழுதியோர் தமது மேனாட்டிலக்கியப் பயிற்சி, சமயத் தொடர்புள்ள கதைகளிற் கொண்ட ஈடுபாடு என்பவற்றின் முனைப்பால் எழுதினர். ஈழத்தின் முதலாவது தமிழ்நாவல் எனப்படும் சித்திலெவ்வையின் 'அஸன்பேயுடைய சரித்திரம்' (1890) மிஸர் தேசத்து அரசகுமாரனை அஸன்பே என்னும் சிறுவனின் சரிதை.[1] இதனாசிரியரான அறிஞர் சித்திலெவ்வை ஈழத்து இஸ்லாமியரின் எழுத்துலக முன்னோடி எனவும் மறுமலர்ச்சித் தந்தை எனவும் போற்றப்படுபவர். 'அபூனுவாஸின் கதை' என்னும் மேனாட்டுக் கதைத் தொகுதியை வெளியிட்ட இவர் தமிழில் நாவல் எழுதும் ஆர்வங் கொண்டிருந்தார் என அறியப்படுகின்றார்.[2]

இரண்டாவது தமிழ் நாவல் என்று கொள்ளத்தக்க 'ஊசோன் பலந்தை கதை' (1891) (Orson and Valentine) என்ற போர்த்துக்கேய நாவலொன்றின் தழுவல்[3]. இதனாசிரியரான எஸ். இன்னாசித்தம்பி கிறிஸ்தவ சமயப் பிரசார நோக்குடையவர்,

இந்நாவலைப் பதிப்பித்து வெளியிட்ட எஸ். தம்பிமுத்துப்பிள்ளை அச்சுவேலியிலிருந்த தமது ஞானப்பிரகாச யந்திரசாலை மூலம் கிறிஸ்தவ சமயப் பிரசாரப் பிரசுரங்கள் பலவற்றை வெளியிட்டவர்.

> '' நாவலிலக்கிய ஆரம்பத்தின் முன்னர் கிறிஸ்தவர்கள் சமயப் பிரசாரத்திற்கு நாட்டுக்கூத்து, நாடகம் ஆகியவற்றைப் பயன்படுத்தினர். அச்சக வசதிகள் ஏற்பட்டதும் நாட்டுக்கூத்துப் பிரதிகள் நூல்வடிவு பெற்றன. அச்சுப் புத்தகமூலம் கதை கூறும் பண்பு சில காலமாக இவ்வழியாக மேற்கொள்ளப்பட்டது. இது நாவலிலக்கியத் தோற்றத்திற்குக் காரணமாகியது. இவ்வாறுன வொன்றே ' ஊசோன் பலந்தை கதை' ''

என்று தில்லையூர் செல்வராசன் தெரிவித்துள்ள கருத்து[4] ஈழத்துத் தமிழ் நாவலின் தோற்றத்திற் கிறிஸ்தவ சமயப் பிரசார முயற்சிகள் பூண்டிருந்த பங்கினை உணர்த்தும். யாழ்ப்பாணம் 'றிலிஜஸ் சொசைட்டி'யினரின் வெளியீடான 'காவலப்பன் கதை' (1856) என்ற நூலே தமிழின் முதலாவது நாவல் என்ற கருத்துமுண்டு[5]. இந்நூலும் கிறிஸ்தவ சமயப் பிரசார முயற்சியிலீடுபட்டவர்களாலேயே வெளியிடப்பட்டதென்பது தெளிவு.

ஈழத்திற் பிறந்து தமிழகத்திற்குச் சென்று கல்வி கற்றுப் பல துறைகளிலும் சிறந்து விளங்கியவருள் ஒருவரான திருகோணமலை த. சரவணமுத்துப்பிள்ளை, அங்கு தாம் ஆற்றிய நூலகர் பணியுடன் தொடர்பான வரலாற்ருராய்ச்சியின் ஈடுபாட்டால், 'மோகனங்கி' (1895) என்ற வரலாற்று நாவலை எழுதினர். தமிழ் நாட்டின் நாயக்கராட்சிக்கால வரலாற்றுச் செய்திகள் புனைந்தெழுதப்பட்ட இந்நாவல் ஈழத்துத் தமிழ் நாவல் வரிசையிற் சேர்க்க முடியாதென்பர் சோ. சிவபாதசுந்தரம்.[6] ஆயினும் தமிழ் நாவலின் ஒரு முக்கிய பிரிவுக்கு முன்னேடியாக விளங்கியவர் ஈழத்தவர் என்ற நியாயமான பெருமை ஈழத்துத் தமிழ் நாவலாராய்ச்சியில் ஈடுபடுபவர்களால் நினைவுகூரத் தக்கதொன்றென்பதை மறுப்பதற்கில்லை.

ஈழத்து மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளைப் பொருளாகக் கொண்டு நாவல்கள் எழுதப்படும் மரபு இருபதாம் நூற்ருண்டின் தொடக்கப் பகுதியிலிருந்தே தோற்றம் பெறுகின்றது. சமயப் பிரசாரம், சமயப் பாதுகாப்பு, சமூக சீர்திருத்தம் என்பன மக்கள் மத்தியில் விரிவாகப் பரவத் தொடங்கிய இக்காலப் பகுதியில், அந் நோக்கங்களுக்கு ஏற்றதொரு கருவியாகப் பயன்படுத்தப்பட்ட நாவல் மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளைப் பொருளாகக் கொண்டு எழுதப்பட வேண்டியது தவிர்க்கப்பட

முடியாததாயிற்று. வரலாற்றுக் கதைகளை எழுதிய ஒரு சிலரும் நல்லொழுக்கப் போதனை நோக்கில் எழுதினர். இக் காலப் பகுதி நாவல்களில் நோக்கத்திற்கேற்பக் கலைப்பண்பை விட யதார்த்தப் பண்பிற்கே முக்கியத்துவமளிக்கப்பட்டது.

இக்காலப் பகுதியில் எழுதப்பட்ட நாவல்களிற் காலத்தால் முந்தியதாக எமக்குக் கிடைப்பது 'நொறுங்குண்ட இருதயம்' *(1914)* ஆகும். கல்விக் குடும்பப் பின்னணியும், கிறிஸ்தவ நம்பிக்கையும், போதனை மனேநிலையுங் கொண்ட மங்களநாயகம் தம்பையா[7] என்பவரால் எழுதப்பட்ட இந் நாவல், சன்மார்க்க சீலியத்தின் மாட்சிமையை உபதேசத்தால் விளக்குவதிலும் உதாரணங்களாலுணர்த்துவது மிகவும் நன்மை பயத்தற்கேது வாகுமென்ற[8] எண்ணத்தோடு எழுதப்பட்டது. யாழ்ப்பாணப் பிரதேசச் சமூகத்தில் நிலவிய பொருளாசை, அந்தஸ்து, பெண்களை ஆண்கள் அடக்கியாளும் கொடுமை முதலியவற்றை எடுத்துக்காட்டி, இவற்ருல் இருதயம் நொறுங்குண்ட ஒரு பெண்ணின் அவல வாழ்வைச் சித்திரிப்பதாக இந் நாவலின் கதை அமைகின்றது. கிறிஸ்தவ சமய நம்பிக்கை மூலம் உலகியல் இன்னல்களிலிருந்து விடுபட்டு அமைதியுறலாம் என்ற போதனை நாவலிற் பல விடங்களிற் காணப்படுகின்றது. ஆசீர்வாதம், ஓ. எம். ஐ. பதிப்பித்த 'புனிதசீலி' *(1927)*, 'பாவ சங்கீர்த்தன இரகசியப்பலி' என்பன கிறிஸ்தவ சமயப் பிரசாரத்தையே முக்கிய நோக்கமாகக் கொண்டவை. சார்ள்ஸ் ஸ்ரிக்னி என்பார் எழுதிய 'தேம்பாமலர்' *(1929)*, 'ஞானபூரணி' *(1933)* என்பவை 'நொறுங்குண்ட இருதயம்' போல, சன்மார்க்க போதனைகளை வெல்லங்கலந்த மருந்துபோலக் கதாரூபமாக வெளியிடுவதை நோக்கமாகக் கொண்டவை.

சைவசமயப் பாதுகாப்பு நோக்கில் எழுதப்பட்ட 'காசிநாதன் நேசமலர்' *(1924)*, 'கோபால நேசரத்தினம்' *(1927)* ஆகிய நாவல்கள் அக்காலப் பகுதியிற் கிறிஸ்தவ சமயப் பிரசார முயற்சியிலீடுபட்ட பாதிரிமார்களும், போதகர்களும் மதமாற்ற முயற்சியிலே தோல்வியடைவதைக் காட்டும் கதைப் போக்குடையவை. இவற்றுட் 'கோபால நேசரத்தினம்' குறிப்பிடத் தக்கது. கோபாலபிள்ளை என்ற வாலிபனைக் கிறிஸ்தவனுக மதம் மாற்ற முயன்ற போதகரொருவர் தமது மகளுடன் அவனைப் பழக விடுகிருர். அப் பழக்கத்தின் முடிவு காதலாகிப் போதகரின் மகளைச் சைவத்திற்கு மாறச் செய்து விடுகின்றது. ஈற்றிற் போதகரும் சைவத்திற்கு மாறி விடுகிருர். சைவ சமயப் பாதுகாப்பில் அன்றைய பெண்குலத்துக்கிருந்த பெரும் பங்கினைக் கோபாலபிள்ளையின் தாயாரான நேசரத்தினம் என்ற

பாத்திரத்தின் மூலம் ஆசிரியர் ம. வே. திருஞானசம்பந்த பிள்ளை எடுத்துக் காட்டுகிறார். 'இந்துசாதனம்' பத்திரிகையாசிரியராக விளங்கிய இவர் 'உலகம் பலவிதக் கதைகள்' என்ற தலைப்பில் மேற்படி இரு நாவல்களையும் தொடராக எழுதி வெளியிட்டார். இடைக்காடர் எழுதிய 'சித்தகுமாரன்' (1925) என்ற நாவல் சைவ சித்தாந்த தத்துவ உருவகமாக அமைந்தது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே சமயப் பிரச்சினைகள் பெற்றிருந்த சமுதாய முக்கியத்துவம் காலப் போக்கிற் சிறிதாகக் குறையத் தொடங்கியது. அரசியற் சீர்திருத்தங்கள், கல்வி வளர்ச்சி என்பவை இக்கால நாவலாசிரியர்களைச் சமயத்துடன் சமூகப் பிரச்சினைகளைப் பற்றியும் சிந்திக்கத் தூண்டின. இடைக்காடரின் 'நீலகண்டன்—ஒரு சாதிவேளாளன்' (1925), ம.வே. திருஞானசம்பந்தப்பிள்ளையின் 'துரைரத்தினம் நேசமணி' (1931) ஆகியன இக்காலத்திற் சாதி ஏற்றத்தாழ்வு, சீதனப் பிரச்சினை என்பவற்றைப் பொருளாகக் கொண்டெழுதப் பட்டவை. யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இன்றும் காணப்படும் சீதனப் பிரச்சினை பற்றி அன்று சிந்தித்த திருஞானசம்பந்தப் பிள்ளை அதனால் வருங் கேடுகளை உணர்ந்திருக்கிறார். குறிப்பிட்ட சீதனத்தை மாமனார் தராததாலே தமது மனைவியை அவளது பிறந்த வீட்டிற்கனுப்பிய கணவன் தீயவர் தோழமையால் ஒழுக்கங் கெடுகிறான். ஈற்றில் மனைவியின் நற்பண்புகளாலே திருந்தி விடுகிறான். சீதனம், மதுபானம், பரத்தையொழுக்கம், தீயவர் சகவாசம் என்பவற்றின் கேடுகளை எடுத்துக்காட்டுவதே தமது நோக்கமென ஆசிரியர் நூன்முகத்திற் குறிப்பிட்டுள்ளார். ஈழத்துத் தமிழரின் முக்கிய சமூகக் குறைபாடான சாதி ஏற்றத் தாழ்வைப் பொருளாக வைத்து எழுத முயன்ற இடைக்காடர், பிரச்சினையைக் கைநழுவ விட்டுச் சம்பவச் சுவையுடைய வீர சாகசக் கதையையே தந்துள்ளார்.

செம்பொற் சோதீஸ்வரர் செல்லம்மாளின் 'இராசதுரை' (1924) நாவல் சமூக ஊழல்களை ஆங்காங்கே எடுத்துக் காட்டினும் சம்பவச் சுவையுடன் 'நீலகண்டன்—ஒரு சாதி வேளாளன்' போலவே அமைந்தது. சமூகத்தை ஏமாற்றித் திரியும் போலிச் சந்நியாசி ஒருவனைப் பற்றிய கதையான எஸ். தம்பிமுத்துப் பிள்ளையின் 'சுந்தரன் செய்த தந்திரம்' அங்கதச் சுவையுடன் எழுதப்பட்டது.

ஆரம்பகாலப் பகுதியைச் சார்ந்த மேற்படி நாவல்களில் நாவலிலக்கிய வடிவ அமைதி சிறப்பாக அமையவில்லை. உருவ அமைப்பிலோ உத்திகளிலோ கவனம் செலுத்தப்படவில்லையென்றே கூறலாம். தாம் கூறவந்ததை நேரடியாகவே கூறினர்.

குடும்பப் பெண்களும் ஆசிரியர்களுமான இக்காலப் பகுதிப் பெரும்பான்மை நாவலாசிரியர்கள் சமூகத்துக்குப் போதனை செய்கிறோமென்ற உணர்வுடன் எழுதியவர்களாவர். பௌராணிகக் கதை மரபினின்று விடுபடாமையால் நாவலிலக்கியத்தின் தனிப் பண்புகளை இவர்களால் வேறுபடுத்திக் காண முடியவில்லை.

> ''......அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களையும் செவ்வனே யடைந்து வாழும்படி என் சிற்றறிவிலுதித்த அனுபவத்தைக் கொண்டு நவமாக எழுதப்பட்டது.''

என்று 'இராசதுரை' நாவலின் ஆசிரியை கூறுவது[9] இக்கால நாவலாசிரியர்களது பொதுவான இலக்கிய நோக்கை உணர்த்துவதாகும். கதைத் தலைவர் தலைவியரைக் கொண்டு பெயர்பெறும் மரபினின்று வேறுபட்டதாகக் கதைப் பொருளாயமைந்த பெயரைக் கொண்ட 'நொறுங்குண்ட இருதயம்', நாவல் இலக்கியப் பண்பான நடைமுறை வாழ்க்கைச் சம்பவங்களுடன் கூடிய கதையுடனமைந்த போதிலும் கதையோட்டத்தில் வேகமில்லை. பாத்திரங்கள் பலவற்றின் நடமாட்டம் கதைப் போக்கைச் சிக்கலாக்குகின்றது. 'துரைரத்தினம் நேசமணி' நாவலிற் கதை வளர்ச்சிப் பண்பு குறிப்பிடத்தக்கதாகவுள்ளது.

ஆசிரியர் கூற்றாகவே கதை நடத்திச் செல்லப்படும் இக்காலப் பகுதி நாவல்களிற் பேச்சு வழக்கோடொட்டிய உரையாடல் மரபு சிறிது சிறிதாக வளர்ந்து வந்துள்ளமையைச் சித்திரலேகா ஆராய்ந்துள்ளார்[10].

இக்காலப் பகுதியிலே தமிழ் நாட்டில் எழுதப்பட்ட நாவல்கள் ஈழத்திற் பரவியிருந்தன என்று கொள்வதற்குச் சான்றுகள்[11] உண்டெனினும், ஈழத்து நாவல்களிலே அவை தாக்கமெதையும் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. தமிழ் நாட்டிலிருந்து வெள்ளம்போல் வெளிவந்த காமக்கிளர்ச்சியூட்டும் நாவல்களை வெறுத்தொதுக்கவேண்டு மென்ற ஒரு குரல் 'இந்துசாதனம்' பத்திரிகையில் எழுந்தது[12] என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

1930ஆம் ஆண்டை அடுத்துச் சுமார் கால் நூற்றாண்டு காலப் பகுதியை ஈழத்துத் தமிழ் நாவல் வரலாற்றிற் பத்திரிகை யுகம் எனலாம். 'ஈழகேசரி' (1930), 'வீரகேசரி' (1930), 'தினகரன்' (1932) ஆகிய பத்திரிகைகளைக் களமாகக் கொண்டு பெருந்தொகையான தொடர்கதைகள் வெளிவந்த இக்காலப் பகுதியில் ஈழத்து அரசியலிற் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. டொனமூர் அரசியற்றிட்டத்தின் விளைவான சர்வசன வாக்

குரிமை பொது மக்களிடையில் ஓரளவு அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. இக்காலப் பகுதியிற் செய்திப் பத்திரிகைகள் தோற்றம் பெற்றமை குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகிறது. இச் செய்திப் பத்திரிகைகள் இலக்கியப்பணி புரிவதிலும் முன்னின்றன. ஈழம் அரசியல் விடுதலையடைந்த காலப் பகுதியை அடுத்துத் தோன்றிய 'சுதந்திரன்' (1949) பத்திரிகையும் இப் பணியிற் பங்குபற்றியது.

இக்காலப் பகுதி 'ஈழகேசரி'யின் நிறைவு வரை (1958) நீடித்தது. பரந்த வாசகர் தொகையை நோக்கி நாவல்கள் எழுதப்பட்டன. நாவலின் நோக்கிலும் போக்கிலும் மாற்றங்கள் நிகழ்ந்தன. தமிழ் நாட்டின் இலக்கியப்போக்கு ஈழத்திற் குறிப்பிடத்தக்க அளவு தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியது. இதற்கு முதலில் 'வீரகேசரி' களமாக அமைந்தது. 'வீரகேசரி' யின் ஆசிரியராகப் பணிபுரிந்த எச். நெல்லையா தமிழ் நாட்டவர்; தாம் பணிபுரிந்த பத்தாண்டுக் காலத்திற் பத்து நாவல்களை எழுதினர். இவற்றுள் எட்டு, சம்பவச் சுவையும் துப்பறியும் மர்மப் பண்பும் கலந்து எழுதப்பட்டவை. 'ஈழகேசரி'யில் வரணியூர் ஏ. சீ. இராசையா இவ்வகை நாவல்களை எழுதினர். தமிழ் நாட்டின் காந்தி சகாப்த சிந்தனைகளது தொடர்பால் ஈழத்தில் 1930—40க்கு இடைப்பட்ட காலத்திலே தீண்டாமை, பெண்கல்வி முதலியவற்றைப் பொருளாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல் களும் இக் காலத்திற்குரிய பொதுப் பண்புகளான சம்பவச் சுவைக்கும் துப்பறியும் மர்மப் பண்புக்கும் விலக்காக அமையவில்லை. இக்காலப் பகுதியில் ஆங்கில நாவலொன்றைத் தழுவி 'அரங்கநாயகி' (1934) என்ற நாவல் வெளிவந்தது,

1940ஆம் ஆண்டில் இருந்து 'ஈழகேசரி' ஈழத்துத் தமிழ் நாவல்களது முக்கிய களமாகியது. இக்காலப் பகுதியில் முதலில் நவீன தமிழ் இலக்கியத்தில் அதிக ஈடுபாடு காட்டாத 'ஈழகேசரி'யை, ஈழத்து நவீன தமிழ் இலக்கியத்தின் தொட்டிலாக்கினர் சோ. சிவபாதசுந்தரம்[13]. புதிய எழுத்தாளர் மரபு ஒன்று உருவாகியது. தமிழ் நாட்டு இலக்கிய முயற்சிகளின் தூண்டுதலால் ஈழத்தில் எழுதப்புகுந்த இவர்கள் முதலிற் சிறுகதைத் துறையிற் காலூன்றி அதிற் பெற்ற அனுபவ வளர்ச்சியால் நாவலின் பக்கம் திரும்பினர். யாழ்ப்பாணப் பிரதேசத்தின் மண்வளத்தோடொட்டிய கதைப் பொருளைத் தேர்ந்து எழுதினர். இக்காலப் பகுதியிலிருந்தே நாவலுக்கான கலைப் பண்பு வளர்ச்சி பெறுகின்றது.

சச்சிதானந்தன், சம்பந்தன், கசின், வ. அ. இராசரத்தினம், கனக. செந்திநாதன், சொக்கன், அ. செ. முருகானந்தன்,

தேவன், த. சண்முகசுந்தரம் முதலியோர் 'ஈழகேசரி'யில் எழுதியோருட் குறிப்பிடத் தக்கவர்கள். அ. செ. முருகானந்தன் யாழ்ப்பாணப் பிரதேச மண்வாசனையையும், வ. அ. இராசரத்தினம் கிழக்கிலங்கையின் இயற்கைச் சூழலையும் தத்தம் நாவல்களிற் புலப்படுத்தினர். சம்பந்தன் காதலுணர்வைப் புலப்படுத்துவதில் வல்லவராகத் திகழ்ந்தார். தமிழின் சிறுகதை முதல்வர்களுள் ஒருவரான இவர் எழுதிய 'பாசம்' (1947) என்ற நாவல் காண்டேகர் பாணியில் எழுதப்பட்டது. நாராயணன், சாருகாசினி, சாரதா, ஸ்ரீநிவாசன் என்னும் நான்கு பாத்திரங்கள் பேசுவதாக அமைந்த இந் நாவலிற் காதலுணர்வுகள், தத்துவங்கள், மனப்போராட்டங்கள் ஆகியன நன்கு சித்திரிக்கப்பட்டுள்ளன. வ.அ.இராசரத்தினத்தின் 'கொழுகொம்பு' (1956) காதல், தியாகம் என்பவற்றைப் பொருளாகக் கொண்ட ஒரு சமூகச் சித்திரமாக அமைந்தது. தேவனுடைய நாவலான 'கேட்டதும் நடந்ததும்' (1954) மனத்தத்துவ நோக்கில் எழுதப்பட்டது.

ஈழத்துத் தமிழ் நாவல் வரலாற்றில் 'ஈழகேசரி'க்காலம் ஒரு பரிசோதனைக்காலம் எனலாம். சமகாலத் தமிழ்நாட்டு இலக்கியங்களையும், ஆங்கிலம் முதலிய பிறமொழி இலக்கியங்களையும் கற்றதனுல் நாவல் பற்றிய தெளிவும் எழுதுவதற்கான ஆர்வமும் ஏற்பட்டனவெனலாம். ஆர்வத்தின் வழி நடத்தப்பட்ட இக்கால நாவலாசிரியர்கள் சிலர் தமிழ் நாட்டின் சமகால எழுத்தாளர்களை ஆதர்சமாகக் கொண்டனரெனினும் தமக்கெனத் தனிப் பண்புடன் எழுதினர்.

பிறமொழி நாவல்களைத் தழுவியும் மொழி பெயர்த்தும் எழுதும் போக்கும் இக்காலப் பகுதியிற் குறிப்பிடத்தக்க முக்கியத்துவமடைந்தது. ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், ருஷ்ய மொழி நாவல்களையும், இந்தியாவின் வங்கமொழி நாவல்களையும் தழுவியும் தமிழாக்கியும் தந்தனர். இலங்கையர்கோன், சி. வைத்திலிங்கம், க. சச்சிதானந்தன், தேவன், பேராசிரியர் கணபதிப்பிள்ளை முதலியோர் இத் துறையிற் குறிப்பிடத்தக்க பணிபுரிந்தனர். பிற மொழிகளிலே தாம் கற்ற புதுமைகளைத் தமிழ் வாசகர்களுக்குக் காட்டவேண்டுமென்ற இயல்பூக்கம் இவ்வகை நாவல்கள் எழக் காரணமாயிற்றெனலாம்.

> ''பண்டிதத் தமிழும் பழமையும் நிறைந்திருந்த யாழ்ப்பாணத்தில் புதுமைக் கிளர்ச்சி ஏற்பட்டுச் சொற்ப காலம். ஆனுல் இக் குறுகியகால எல்லைக்குள்ளே தன்னுலான புதுமைத் தொண்டு ஆற்றுவதற்கு யாழ்ப்பாணம்

கொஞ்சமும் பின்நிற்கவில்லை. வங்க நாவல்களைப் பின் பற்றிப் புதுமையிலிறங்கிய 'அன்னபூரணியும்' இதற்குப் பிரத்தியக்ஷம் ''[14]

சச்சிதானந்தனின் 'அன்னபூரணி' (1942) நாவலுக்குப் பத்திராதிபர் குறிப்பாக அமையும் இக் கூற்று அக்காலகட்டத்தில் ஈழத்துத் தமிழ் நாவல் புது வேகத்துடன் வளர்ந்ததற்கான அடிப்படையைக் காட்டுவதோடு, வங்க நாவல்களைப் பற்றிய அறிவு ஈழத்து எழுத்தாளரிடையிற் பரவி யிருந்ததையும் உணர்த்துகிறது. இந்திய மொழிகளிலே முதலில் நாவலிலக்கிய வளம் பெற்ற வங்க மொழியின் சிறந்த படைப்புக்களை 1940ஆம் ஆண்டை அடுத்துத் தமிழ்நாட்டின் கலைமகள் சஞ்சிகை மொழி பெயர்த்து வெளியிடத் தொடங்கியிருந்தது என்பதை இங்கு குறிப்பிடுவது அவசியம்.

ஈழத்துத் தமிழ் நாவல் வரலாற்றிற் புதுயுகம் என்று கூறத் தக்க காலப் பகுதி ஈழம் சுதந்திரம் பெற்ற சுமார் பத்தாண்டு காலத்தின் பின் தொடங்கியது. 1950ஆம் வருடத்திற்குப் பின்னர் சுதந்திரமடைந்த ஒரு நாட்டிற்குரிய பிரத்தியேக பிரச்சினைகள் மெல்ல மெல்லத் தலைதூக்கின. தேசியம் ஜன நாயகம் முதலிய கோட்பாடுகள் தொழிற்படத் தொடங்கின[15]. இக்காலப் பகுதியிலே தமிழிலக்கியத் துறையிற் காலூன்றத் தொடங்கிவிட்ட மார்க்ஸீய அரசியற் கோட்பாடுகளின் முதற் பிரசவமான 'பஞ்சும் பசியும்' (1953) நாவல் தமிழ் நாட்டில் வெளிவந்தது. ஈழத்தில் 1956ஆம் ஆண்டிற் சோஷலிஸவாதிகள் தேசிய உணர்வினருடனிணைந்து பெற்ற வெற்றி நாவலிலக் கியப் போக்கில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தி யது. சமூகப்பார்வை விரிந்தது. மக்களின் அன்றுடப் பிரச்சினைகள் வாழ்க்கைத் தரம் என்பவற்றைப் பற்றிச் சிந்திப்பது எழுத்தாளனின் கடமையாயிற்று.

ஈழத்துத் தமிழர் சமூகத்திற் பொதுவாகக் காணப்பட்ட பொருளாதார ஏற்றத்தாழ்வும், சமூகக் குறைபாடான சாதி ஏற்றத்தாழ்வும், மலையகத்தில் வாழும் குடியுரிமையற்ற தமிழ்த் தொழிலாளரின் அவல வாழ்வும் இக்காலப் பகுதி எழுத்தாளர்க ளது சிந்தனையைத் தூண்டின. வர்க்க வேறுபாட்டையும் சாதி இன வேறுபாடுகளையும் இணைத்து நாவல்களெழுதிய இளங்கீரன் தொழிலாளர் வாழ்வின் இன்னல்களை விரிவாகத் தமது எழுத் துக்களில் வடித்துத் தந்துள்ளார். இவ்வகையில் இவரது 'நீதியே நீ கேள்' (1959) சிறப்புடையது.

1960ஆம் ஆண்டினையடுத்து ஈழத்துத் தமிழ் எழுத்தாளரிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் நாவலின் வளர்ச்சி மேலும் வேகம் பெறுவதற்குத் தூண்டியதோடு சோஷலிச யதார்த்த இலக்கியத்தின் தேவையை வற்புறுத்தின. சமகால நிகழ்ச்சிகளை இலக்கியத்திற்குப் பொருளாகக் கொள்ளுமளவு சமூகப் பார்வை கூர்மையடைந்தது.

யாழ்ப்பாணச் சமூகத்தின் மிக முக்கிய குறைபாடான சாதி ஏற்றத்தாழ்வு பெரும் பிரச்சினையாக உருவாகிச் சமூகப் போராட்டங்களாக மாறிய காலப்பகுதியில் நாவலெழுதப் புகுந்த கணேசலிங்கன் அதற்குத் தமது நாவல்களிலே தீர்வுகாண முயன்றார். 'நீண்ட பயணம்' (1965), 'போர்க்கோலம்' (1969) என்பன தாழ்த்தப்பட்ட சாதியினரெனப்படுவோரின் உரிமை கோரும் போராட்ட உணர்வினை எடுத்துக்காட்டுவனவாக அமைந்தன. கணேசலிங்கனின் நாவல்கள் அவரே 'நீண்ட பயணம்' நாவலிற் கூறியுள்ளதுபோல வரலாற்றுண்மைகளுக்கு வடிவம் தருவனவாக அமைந்தன. அரசியலையும் காதலையும் இணைத்து இவர் எழுதிய 'செவ்வானம்' (1967),

> "தமிழ் இலக்கியம் இப்பொழுதுதான் வாழ்க்கையை வருணிப்பதை விட்டு விமர்சனம் செய்யத் தொடங்குகின்றது என்றேன். அதற்கு முதல் உதாரணந்தான் திரு. கணேசலிங்கனின் செவ்வானம்."[16]

என்று தமிழ்நாட்டுத் திறனாய்வாளரது பாராட்டுதலைப் பெற்றது. யாழ்ப்பாண மக்களின் சடங்கு சம்பிரதாயங்களின் போலியியல்பை எடுத்துக்காட்டுவதாக இவரது 'சடங்கு' (1966) நாவல் அமைந்தது. நடுத்தர வகுப்பினரது அவல வாழ்க்கையையும் விவசாயிகளது போராட்ட உணர்வையும் இவர் தமது 'தரையும் தாரகையும்' (1968), 'மண்ணும் மக்களும்' (1970) நாவல்களில் சித்திரித்துள்ளார்.

அடிப்படை உரிமைகள் அற்ற நிலையில் அல்லலுறும் மலையகத்தின் தோட்டத் தொழிலாளர்களது சமூக வரலாறாக அமைகிறது 'தூரத்துப் பச்சை' (1964). இதனாசிரியையான, கோகிலம் சுப்பையா, அவலச் சுவை ததும்ப அவர்களது இன்னல்களை எடுத்துக் காட்டியுள்ளார். இத் தொழிலாளர்களின் உரிமைப் போராட்ட உணர்வை எடுத்துக்காட்டுவதாகப் பெனடிக்ட் பாலனின் 'சொந்தக்காரன்' (1968) அமைகிறது.

சமூக விமர்சனப் பார்வை கூர்மையடைந்த இக்காலப் பகுதியிற் சோஷலிச யதார்த்த வாதக் கண்ணோட்டத்திற்கு வெளியில் நின்று சமூகத்தின் இயற்கையான மனிதப் பிரச்சினை

களைக் கலைக்கண்ணேடு நோக்கி எஸ். பொன்னுத்துரை 'சடங்கு' (1966) என்ற நாவலை எழுதியுள்ளார். செ. கணேசலிங்கன் காட்டிய யாழ்ப்பாணத்து நடுத்தர வர்க்க சமூகத்தை இவர் இன்னெரு கோணத்தில் நின்று காட்டுகிருர்.

வன்னிப் பிரதேசத்தின் மண்வாசனைக்கு இலக்கியவடிவம் தருவதாக அமைந்த 'நிலக்கிளி' (1973), திருகோணமலைப் பிரதேசச் சூழ்நிலையை எடுத்துக் காட்டுவதுடன் இன ஒற்றுமை யுணர்வையும் புலப்படுத்துவதாக அமைந்த 'அவர்களுக்கு வயது வந்துவிட்டது' (1973) என்பன ஈழத்துத் தமிழ் நாவலிலக்கிய வரலாற்றிலே அடுத்து அமையப்போகும் திருப்பத்திற்கான நெறியை உணர்த்தி நிற்கின்றன எனலாம்.

முழு நாவல்களாக வெளிவந்தவற்றைத் தவிரக் குறுநாவல் முயற்சிகளும் கடந்த பத்தாண்டுகாலப் பகுதியிற் குறிப்பிடத் தக்க அளவு காணப்படுகின்றன. அகஸ்தியர், செ. யோக நாதன், செங்கையாழியான், தொ. சிக்கனராஜு முதலியோர் இவ்வகை நாவல்களை எழுதியுள்ளனர்.

வரலாற்று நாவல்கள் காலத்துக்குக் காலம் எழுதப்பட்ட பொழுதும் ஒரு தனித்துறையாக அவை வளர்ச்சிபெற வில்லை. ஈழத்துத் தமிழரின் வரலாற்று மரபு தெளிவாக ஆராயப்படாமை இதற்குக் காரணமாகலாம். எச். நெல்லை யாவைப் பின்பற்றிக் கே. வி. எஸ். வாஸ் ஆதியற்புத சம்பவக் கதைகளையும், துப்பறியும் மர்மப் பண்புள்ள கதைகளையும் எழுதி வருகிருர்.

சமூக விமர்சன நோக்கும் பிரதேசப் பண்பை எடுத்துக் காட்டும் ஆர்வமும் தேசிய உணர்வும் இன்றைய ஈழத்துத் தமிழ்நாவல் வளர்ச்சிக்கு உந்துசத்திகளாயுள்ளன.

அடிக்குறிப்புகள் :

1. கமாலுதீன் எஸ். எம்., "அறிஞர் சித்திலெவ்வை இலங்கையின் முதல் தமிழ் நாவலாசிரியர்", தினகரன் வாரமஞ்சரி, பக். 2. அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர் லிமிட்டெட், கொழும்பு, (22-10-1972).
2. இக்பால் ஏ., "மறுமலர்ச்சித் தந்தை", பக். 47, விண்மதி வெளியீடு, நாவலப்பிட்டி, இலங்கை, (1971).
3. செல்வராசன், சில்லையூர்; ஈழத்துத் தமிழ் நாவல் வளர்ச்சி, பக். 13, அருள் நிலையம், சென்னை, (1967)

4. சிவநேசச்செல்வன் ஆ., ஈழத்தில் தமிழ்நாவல் இலக்கியம்—சில குறிப்புகள். பக். 4. கலைப்பெருமன்றம், அம்பனை, (1973). சில்லையூர் செல்வராசனின் மேற்படி கருத்து இங்கு எடுத்தாளப்பட்டுள்ளது.

5. கணபதிப்பிள்ளை மு., சில்லையூர் செல்வராசனின் ஈழத்துத் தமிழ் நாவல் வளர்ச்சி, பக். 11—12.

6. சிவபாதசுந்தரம் சோ., ''தமிழில் வெளிவந்த முதலாவது சரித்திர நூல்'', தினகரன் வாரமஞ்சரி, பக். 3. அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட், கொழும்பு, 4. (12-11-1972).

7. சிவநேசச் செல்வன் ஆ., ''நொறுங்குண்ட இருதயம் கதையும் கதைப் பண்பும்'', பாவலர் துரையப்பாபிள்ளை நூற்றாண்டு விழா மலர், பக். 75, நூற்றாண்டு விழாச்சபை வெளியீடு, தெல்லிப்பழை, 1972.

8. மங்களநாயகம் தம்பையா., ''நொறுங்குண்ட இருதயம்'', பக். 3, தெல்லிப்பழை, 1914.

9. செல்லம்மாள் செ., இராசதுரை, குறிப்பு.

10. சித்திரலேகா க., ''ஈழத்துத் தமிழ் நாவல்களில் வழக்குத் தமிழின் ஆரம்பம்'', பாவலர் துரையப்பாபிள்ளை நூற்றாண்டு விழா மலர், பக். 45—50. நூற்றாண்டு விழாச்சபை வெளியீடு, தெல்லிப்பழை, 1972.

11. சின்னப்பிள்ளை சி. வை., ''விஜயசீலம்'', ஸ்ரீ சண்முகநாத யந்திரசாலை, யாழ்ப்பாணம் (1916). நாவலின் முகவுரையில் வண்ணை மா. சிவராமலிங்கபிள்ளை, தமிழ்நாட்டு நாவலாசிரியர்களான ஆரணி குப்புசாமி முதலியார், ஜே. ஆர். ரங்கராஜு, தி. ம. பொன்னுசாமிப்பிள்ளை, நாகை ஸி. கோபாலகிருஷ்ணபிள்ளை ஆகியோரைக் குறிப்பிட்டுப் புகழ்கிறார்.

12. ''குமரன்'', ''நாவல் வெள்ளம்'', இந்துசாதனம், சைவப் பிரகாச யந்திரசாலை, யாழ்ப்பாணம், 14-12-1924.

13. சிவத்தம்பி கா., ''தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்'', பக். 146, பாரி நிலையம், சென்னை, (1967).

14. பத்திராதிபர்: ஈழகேசரி, பக். 11. திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 27-12-1942.

15. கைலாசபதி க., ''தமிழ் நாவல் இலக்கியம்''. பக். 241; பாரி நிலையம், சென்னை, (1968).

16. அரங்கராசன் சு., ''செ. கணேசலிங்கனின் செவ்வானம்'' தாமரை, தொகுதி 11, பகுதி 6, பக். 57. எம். கல்யாண சுந்தரம், ஜனசக்தி அச்சகம், சென்னை. (1969).

உசாத்துணை:

சுப்பிரமணியம் நாகராஜ ஐயர்: ''ஈழத்துத் தமிழ் நாவல்கள்'' இலங்கைப் பல்கலைக்கழகப் பேராதனை வளாகத் தமிழ் முதுமாணிப் பட்டத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை. பேராதனை, 1972. (நூலுருவில் இன்னும் வெளியிடப்படவில்லை).

செல்வராசன், சில்லையூர்: 'ஈழத்துத் தமிழ் நாவல் வளர்ச்சி', அருள் நிலையம், சென்னை, (1967).

எளியநடைக் கவிதையும் ஈழத்து மஹாகவியும்

சாலை இளந்திரையன்

இலக்கியத்தில் எளிமை ஆடம்பரம் என்னும் இரண்டு போக்குகளுக்கும் எப்போதும் இடம் இருந்தே வந்திருக்கிறது. நமது இலக்கண நூலிற் (தண்டியலங்காரம்) சொல்லப்படும் வைதருப்பநெறி என்பது, பொருளிலும் சொல்லாட்சியிலும் இயல்பான இயம்பு முறையைக் குறிக்கிறது. கவுடநெறி என்பது கற்பனையிலும் சொல்லாட்சியிலும் ஆடம்பரமான இயம்பு முறையைக் குறிக்கின்றது. ஆனாலும், இந்த நூற்றாண்டில் எழுந்த எளியநடைக் கவிதை என்னும் கொள்கையை இந்தப் பழைய நெறிகளோடு குழப்பிக் கொள்ளக் கூடாது. முன்பு, எளிய நெறி என்பது, 'எளிமையில் இன்பம்' என்னும் பொதுவான குறிக்கோள்களுள் ஒன்றாகி, கவிதை படிப்போரின் ஒருவித வகைமைப்பாட்டு ஆவலை மட்டுமே தணிவித்தது. இன்று எளிய நடைக் கவிதை எனப்படுவது—கவிதை போன்ற கலைகளைப் படித்துச் சுவைப்போர் குறிப்பிட்ட சிலரே என்ற பழநிலையை மாற்றி—எல்லோரும் படித்துச் சுவைத்துப் பொருளறிந்து பயனடையும் விதமாகக் கவிதை உருக்கொள்ள வேண்டும் என்ற நோக்கில் எடுத்துரைக்கப் படுகிறது. இந்தக் கொள்கையும், கடந்த சுமார் 50/60 ஆண்டுகளுக்குட் சில வளர்ச்சி நிலைகளை அடைந்துள்ளது. அந்த நிலைகளை எடுத்துரைத்து, அவற்றுள் ஈழத்து மஹாகவி (உருத்திரமூர்த்தி)க்கு உள்ள இடத்தை மதிப்பிடுவதே இந்த ஆய்வுரையின் நோக்கம்.

1:1. "எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோ

ளுகின்றன். ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்க ளெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன், காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்துதல் வேண்டும்.'' இவ்விதம் சுப்பிரமணிய பாரதி சொல்லும்போது, ''வழக்காறு ஒழிந்ததை வைத்து எழுதித்தான் பிழைக்கும் நிலைமை பெறலாம் என்றும், புதுச்சொல் புதுநடை போற் றேல் என்றும், நந்தமிழ்ப் புலவர் நவின்ற'' கொள்கைக்கு[2] எதிரான ஒரு குரலே கேட்கிறது. அதாவது, வழக்கொழிந்த சொற்களையும் (பாமர) மக்களுக்குப் புரியாத நடையமைப் பையும் கொண்ட கவிதைகளுக்குப் பதிலாக, மக்கள் படித்த உடனே புரிந்துகொள்ளக் கூடிய (பேச்சு வழக்குக்கு மிக அருகில் உள்ள) ஒரு நடையிற் கவிதை இயற்றப்பட வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது.

1 : 2. பாரதிதாசன் தம்முடைய 'பாண்டியன் பரிசு' புத்த கத்தின் முன்னுரையில், ''எளிய நடை ஒன்றுலேயே தமிழின் மேன்மையை, தமிழின் பயனைத் தமிழர்க்கு ஆக்க முடியும் என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கை'' என்று[3] பேசும் போதும் மொழி நடையையே அவர் குறிப்பிட்டார் என்பது விளங்குகிறது. அதே முன்னுரையில், ('பாண்டியன் பரிசு' புத்த கத்தைப் பற்றி) ''தொடக்கப் படிப்பினரும் புரிந்து கொண் டார்கள் இச் செய்யுளின் பொருளை எனின், அதுதான் எனக்கு மகிழ்ச்சியூட்டுவது'' என்று அவர் கூறுவதும் இதனை மெய்ப் பிக்கின்றது.

1 : 3. நடையில் எளிமை என்பது மக்களுக்கு விளங்கக் கூடிய சொற்களால் மட்டுமே ஆகிவிடாது. மக்களுக்குப் பழக்க மில்லாத சிக்கலான பொருட்களையோ கருத்துக்களையோ மக்க ளுக்குத் தெரிந்த சொற்களை மட்டுமே வைத்து விளக்கிவிட இயலாது. திருமணம் செல்வக் கேசவராயர் சொல்வதைப் போல, எல்லாப் பொருள்களையும் எளிய சொற்களாலேயே விளங்க வைத்துவிடலாம் என்பது இயல்வதன்று; சில பொருள்கள், அவைகளுக்குரிய கலைச்சொல் என்னும் பரிபாஷைச் சொற்களாலேயே சரியான விளக்கம் பெறும். அவைகளைப் பற்றிய அடிப்படை அறிவு இல்லாதவர்களுக்கு அந்த எழுத் தோவியம் விளங்கவில்லை என்பதாலே அதைக் கடுநடை உடையது என்று சொல்ல இயலாது.[4] ''ஒரு பொருளைப் புரிந்துகொள்ளும் அடிப்படைப் பயிற்சி இல்லாதவர்கள் அத னிடத்து ஆர்வம் கொள்ள முடியாது'' என்னும் கிராம்ப்டன் கலைக்களஞ்சியக் கூற்றும்[5] இதையே குறிப்பாக உணர்த்துகிறது.

1 : 4. பாரதியின் தமிழ்ப்பணியைப் பாராட்டுகிற பாரதி தாசன், ''பன்னீராயிரம் பாடிய கம்பனும், இப்போது மக்கள் பால் இன்தமிழ் உணர்வை எழுப்பியது உண்டோ? இல்லவே இல்லை!'' என்கிறார்.[6] ஆனால் ''கம்பநாடன் கவிதையிற் போல் கற்றோர்க்கு இதயம் கனியாதே!'' என்றும்[7] ''கம்பநாடு உடைய வள்ளல், கவிச்சக்கரவர்த்தி, பார்மேல், நம்பு பாமாலை யாலே நரருக்கு இன்று அமுதம் ஈந்தான்!'' என்றும்[8] பிற வாறும் கம்பன் கவிதை பாராட்டப்பட்டிருப்பதை நாம் அறி வோம். அந்தக் கவிஞனாலும் பொதுமக்களிடையே தமிழ் (இலக்கிய) உணர்வை ஈட்ட முடியவில்லை என்பதே, பாரதி தாசன் கம்பனிடம் காணும் குறை. அந்தக் குறைக்கு விளக்கம் தருவதுபோல, ''இந்த நாளில் இந்நாட்டு மக்கட்கு வேண்டும் பண்பு, வேண்டும் செயல்களை, கொஞ்சமும் பாரதி அஞ்சாது கூறினான்'' என்கிறார் கவிஞர்.[9] அதாவது, மக்களின் வாழ் வோடு நேரிடையாகத் தொடர்புடைய கருத்துக்களையும் செய்திகளையும் வைத்துப் பாடியதால், பாரதி, மக்களிடையே உணர்வை எழுப்ப முடிந்தது என்பதும், அப்படிச் செய்யாத தாற் கம்பனால் அதைச் செய்ய முடியவில்லை என்பதும் குறிப்பு.

1 : 5. இந்த இரண்டு கவிஞர்களும்; எளியநடை பற்றிப் பேசும்போது சொல்லாட்சி, வாக்கியத்தின் (அல்லது பாட்டின்) சிக்கலற்ற அமைப்பு ஆகியவற்றையே குறித்தாலும், மக்களோடு தொடர்புடையதும் அவர்கள் விரும்பியும் எளிதாகவும் தெரிந்து கொள்ளக் கூடியதுமான பொருட்புதுமையும் எளிய நடைப் பாட்டுக்கு அவசியம் என்ற மெல்லிய ஓர்மை, பிற்காலத்திற் பாரதிதாசனுக்கு ஏற்பட்டிருந்தது என்று தெரிகிறது. ஆயினும், பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் பிந்திய கவிஞர்களே இதைத் தெளிவாக உணர்ந்து அந்த ஓர்மையோடு பாட்டு இசைக் கிறார்கள் என்று சொல்ல வேண்டும். இந்த ஓர்மையிற் பெரு மளவு தெளிவு பெற்றவராக விளங்குபவர் ஈழநாட்டு 'மஹாகவி' உருத்திரமூர்த்தி.

2 : 1. 'இன்னவைதாம் கவி எழுத ஏற்ற பொருள் என்று, பிறர் சொன்னவற்றை நீர் திருப்பிச் சொல்லாதீர். சோலை, கடல், மின்னல், முகில், தென்றலினை மறவுங்கள். மீந்திருக்கும் இன்னல், உழைப்பு, ஏழ்மை உயர்வு என்பவற்றைப் பாருங்கள்' என்று இருபது வருடங்களுக்கு முன் மஹாகவி எழுதினார். நிகழ்காலச் செய்திகளையும், பிரச்சினைகளையும் கவிதையில் ஆண்டு அதனை இன்றைய யுகத்திற்கு இழுத்துவரல் அவசியமாகும் என்று மிகச் சமீபத்திலும் அவர் எழுதினார். 'இன்றைய காலத்

திருக்கும் மனிதர்கள், இன்றைய காலத்தியங்கும் நோக்குகள், இன்றைய காலத்து இழுப்புகள் எதிர்ப்புகள், இன்றைய காலத்து இக்கட்டுகள்' ஆகியவையே கவிதையில் இடம்பெற வேண்டும் என்று அவர் சொன்னார்.[10] இவ்வாறு எளிய நடை பற்றிய தெளிந்த ஓர்மை அவருக்கு இருந்ததனாலேதான், மஹாகவி, இன்றைய மக்களின் கவனத்துக்கும் களிப்புக்கும் உரிய கருத்துக்களையும் செய்திகளையுமே தம்முடைய கவிதைகளில் முதன்மைப்படுத்தினார்.

2 : 2. ''கவிதையிடம் மக்கள் வரவில்லையே'' என்று ஏங்கும் கவிஞர்கள், மக்களின் சிந்தனைக்கு எட்டாத அல்லது அவர்களின் வாழ்வோடு எந்தத் தொடர்பும் இல்லாத நோக்குகளைப் பாடிக்கொண்டிருப்பதிற் பயனில்லை. இந்த உண்மையைப் புரிந்துகொண்டு, மஹாகவி எவ்வளவு தூரம் மக்களுடன் நெருங்கி வந்தார் என்பதை ''நேர்மை'' என்னும் அவருடைய கவிதை விளக்குகிறது. வசுவிலே பயணச்சீட்டுக் கொடுத்த வசு நடத்துனர் சீட்டு வாங்கியவருக்குச் சேர வேண்டியதிலும் சற்றே அதிகமான சில்லறையைக் கொடுத்து விடுகிறார். அதைப் பார்த்ததும் மிகுதிச் சில்லறையைத் திருப்பித் தந்துவிடவே அவர் மனம் எழுகிறது. கூடவே அந்த எண்ணத்தை அமுக்கி விட்டு அவருடைய வறிய உள்ளம், ''வீட்டுக்குச் சென்றதும் என் இளைய குழந்தை என் மீதில் கால்பிடித்து ஏறுங்கால், இன்றென்றாலும், அதன் கையிலே பழம் ஒன்றை இட்டு இன்பம் ஊட்டிடலாகுமே!''[11] என்று தயங்குகிறது. இறுதியில், ''நேர்மை எவர்க்குமே கட்டுமா நண்ப ? — காசற்றவர்கள் நாம்,'' என்று[12] அவர் கேட்கும்போது, ஓர் ஏழையின் நெஞ்சில் நேர்மைக்காக நடக்கும் பெரிய போராட்டமும் அதன் விளைவும் யாருக்கும் எளிதே விளங்குகின்றன. எடுத்துச் சொன்ன நிகழ்ச்சி இன்றைய வாழ்வின் சாதாரண நிகழ்ச்சி யாதலால், பாட்டின் சொற்களையும் மீறிக்கொண்டு அதன் இலக்கியப் பயன் எல்லோருடைய நெஞ்சிலும் ஏறி விடுகிறது.

2 : 3. தமிழ்ச் சிறுகதையில் ஏற்பட்ட இந்தப் புதுமையைப் பின்வருமாறு சொல்லியுள்ளார் புதுமைப்பித்தன்; ''மனிதனின் சிறுமைகளை, தப்பிதங்களை, அதில் அவன் நாடும் வெற்றியை இலக்கியமாகச் சிருஷ்டிப்பதற்கு வெகுகாலம் சென்றது. 'தமிழிற்கே விமோசனம் கிடையாது' என்று நினைத்துக் கொண்டிருக்கும் சமயத்தில் வெள்ளி முளைத்தாற்போல் சில கதை எழுதுகிறவர்கள் தோன்றியிருக்கிறார்கள்.. .. ''[13] பொருட் புதுமையாற் சிறுகதைக்குக் கிடைத்த இந்த எளிமை தமிழ்க் கவிதைக்கு அவ்வளவு எளிதிலோ விரைவிலோ கிட்டவில்லை :

''நவீன வடிவங்களான சிறுகதை, நாவல் ஆதியன நவீன உரிப்பொருளைக் கையாண்ட வேளை கவிதை மட்டும் பழைய பொருள் மரபைப் பற்றியே சுழன்றமையால் அருகிவரும் கலை எனக் கருதுமாறுயிற்று. நிகழ்காலச் செய்திகளையும் பிரச்சினை களையும் கவிதையில் ஆண்டு அதனை இன்றைய யுகத்திற்கு இழுத்துவரல் அவசியமாகும்.''[14] இப்படிச் சொல்லியிருப்பவர் மஹாகவியே.

2 : 4. இந்தத் தெளிவு இருந்ததாலேயே, இக்காலத்தின் அன்றாடப் பழகு பொருட்களாகிய சிலை, செய்மலர்[15], குப்பைத் தொட்டி,[16] ஒளிகாட்டி (Traffic Light)[17] முதலியவற்றை எல்லாம் பாடுபொருளாக்கினர் மஹாகவி. அவருடைய 'குறும்பா' இக் காலத்தில் விஞ்சிநிற்கும் வரதட்சணை என்னும் மாப்பிள்ளை விலைக் கொடுமையையும், கையூட்டு என்னும் லஞ்ச ஊழலையும், அணுக்குண்டு அபாயத்தையும்,[18] இவை போன்ற வேறு தற்காலப் பொருள்கள்/கருத்துக்களையும் பற்றிப் படர்ந்துள்ளது.

2 : 5. மஹாகவியின் பாடுபொருள் காலத்தை ஒட்டிய தாகவும் இன்றைய மனிதனின் வாழ்க்கை நோக்கை அனுசரித்த தாகவும் அமைந்ததால் தமிழ்க் கவிதைக்கு ஓர் அருமையான எளிய நடை கிடைத்தது என்பதற்கு அவருடைய 'ஒரு சாதாரண மனிதனது சரித்திரம்' சரியான எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது. இந்தக் கவிதைக் கதை இன்றைய நடுத்தர வகுப்பு மனிதனின் வாழ்வை அடித்தளமாகக் கொண்டது; புதுமைப்பித்தன் சொன்னதுபோல, ''அவனுடைய (பெருமை களை மட்டுமல்லாமல்) சிறுமைகளை, தப்பிதங்களை, அதில் அவன் நாடும் வெற்றியை இலக்கியமாகச் சிருஷ்டிக்கிறது.'' இதைப் படிக்கின்ற யாருக்கும் விளங்காத செய்தி என்றோ, புரியாத நடை என்றோ சொல்ல இதிலே எதுவும் இல்லை; மாருக, தங்கள் அன்றாட வாழ்வின் அனுபவங்களே பாட்டாகி யிருப்பதைக் கண்டு, எல்லோருமே அதிலே ஓர் ஆர்வம் கொள் வார்கள். எந்த மனிதனும், தன்னைப் பாராட்டிச் சொல்வதைக் கேட்டு மகிழ்கிறுன்; தன்னைப் பழித்துப் பேசினுல் உளைகிறுன். ஆனுல், தன்னையும் தன் தொடர்பானவைகளையும் புறக்கணிக் கிறுர்கள் அல்லது இருட்டடிப்புச் செய்கிறுர்கள் என்று தெரிந் தால் வெறுப்பும் கோபமுமே அடைகிறுன். மனிதனின் இந்த அடிப்படை இயல்பைப் புரிந்துகொண்டு, இன்றைய இலக்கியம் அவனையும் அவனுடைய வாழ்வையுமே பேசுவதால், அதன் மீது அவனுக்கு ஓர் ஆர்வம் ஏற்படுகிறது. அதன் காரணமாக அந்த இலக்கியமே அவனுக்கு எளியநடை இலக்கியமாகத் தோன்றுகிறது.

3 : 1. தன்னைப்பற்றி மற்றவர்கள் அக்கறை கொள்ள வேண்டும் என்று பொதுப்பட விரும்புவதோடு, தனது போக்கையும் தனக்குத் தேவையானதையும் சரிவர உணர்ந்து பேசுகிறவர்களிடம், எந்த மனிதனும் தனிப்பட்ட அன்பு வைக்கிறான். பாரதி தமது காலத்திற் பொங்கிய தேசிய ஆர்வத்தைச் சுட்டிக் குறித்துப் பாடி, எளிய நடையாளர் என்று பெயர் பெற்றார்; பாரதிதாசன், அவர் காலத்திய தமிழ்த் தேசிய உணர்வுக்கும் தொழிலாளர் சார்பான எண்ணங்களுக்கும் உருக்கொடுத்து எளியநடைக் கவிஞர் என்று புகழ் பெற்றார். இன்று வாழும் கவிஞர்களிலே பலர், இன்றைய மனிதனின் இலக்கு எது என்று தெரியாததாலேயே அவனிடமிருந்து விலகி நிற்கிறார்கள். ஒரு சாதாரண மனிதனது சரித்திரத்தில், இன்றைய பெரும்பாலான மனிதர்களின் மனஓட்டத்தைச் சரியாகச் சுட்டிக் குறித்ததன் மூலம் எளியநடைக் கவிஞராக விளங்குகிறார் மஹாகவி.

3 : 2. அறிவியலின் பல சௌகரியங்களை அனுபவிக்கின்ற இன்றைய மனிதன், அதன் தவிர்க்க முடியாத தீய விளைவுகளையும் ஏற்க வேண்டியவனாகவே உள்ளான். இந்த நிலையைக் கண்டு, சிலர், ''காலம் கெட்டுப் போய்விட்டது'' என்று வாடிச் சாம்புகிறார்கள். ஆனால், பெரும்பான்மையான மக்கள் வாழ்வின் மீதும் தங்கள் ஆற்றலின்மீதும் நம்பிக்கை வைத்து, ஒருவிதமான தளரா முனைவுடனேயே மேற்செல்லுகிறார்கள், அவர்களுக்கும் வாழ்விலே தோல்விகள் உண்டென்றாலும். தங்கள் வாழ்வு ''மேட்டைக் கண்டு துளைத்துப் புகுந்தது, — வெள்ளம் கண்டு வளைத்துக் கடந்தது'' என்ற[19] உணர்வே அவர்களிடம் மேலோங்கி நின்றது. இந்த உணர்வைத் தொட்டுக்காட்டும் மஹாகவியின் கவிதை அவர்களுக்கு உவப்பாகவும் எளியதாகவும் தோன்றுவதில் வியப்பில்லை.

4 : 1. நீண்ட காலமாகவே தமிழ்க்கவிதை மக்களின் வாழ்வை விட்டு விலகிப் போய்விட்டது. போய்விடவே, கவிதைச் சுவைப்பு என்பது ஒரு சிலரின் பொழுதுபோக்கு என்ற ஒரு நோக்கு உருவாயிற்று. ஆகவே கவிதையானது, மக்களுக்குத் தெரியாததும் தேவையில்லாததும் (சிலபோது அவர்களையே பழிப்பதும்) ஆன தடங்களில் நடைபயிலத் தொடங்கியது. அந்த நிலையில் மக்களிடையே வழங்கும் மொழியோ, மொழித் தோரணையோ (Modes of expression) கவிதையில் இடம் பெறவில்லை. அவை இடம்பெறவில்லையாகவே, கவிதைச் சுவைப்பு என்பது, மக்களுக்கு விளங்காத (அயல் மொழிப் பாட்டுக் கேட்பது போன்ற) ஒரு தொழில் ஆயிற்று. அதனாலேதான் தமிழர்களே, ''தமிழ்க் கவிதை கடுநடையில்

உள்ளது. எளிய நடையில் இயன்றால் நல்லது'' என்று உணரத் தலைப்பட்டார்கள்: பாரதியும் பாரதிதாசனும் இந்த உணர்வின் விடிவுக் காலத்தவர்கள். பாட்டில் எளியநடை என்ற தத்துவத்தின் ஒரு பகுதியை மட்டுமே அவர்கள் அறிந்து வலியுறுத்தினார்கள். அதன் வளர்ச்சியும் தவிர்க்க முடியாத தொடர் விளைவுமான பொருள் எளிமை (அல்லது கருத்து எளிமை) என்னும் அம்சத்துக்கு வடிவம் கொடுத்தவர்களுள் மஹாகவி சிறந்தவராக விளங்குகிறார். இந்தச் சிறப்பு தற்செயலாக அமைந்ததன்று; முழு ஓர்மையோடு கவிதைத் துறையில் அவர் நிகழ்த்திய சோதனைகளுக்குக் கிடைத்த வெற்றி அது.

4 : 2. 'கட்டித்த சிந்தனை உடைய பண்டிதர்களும், கோட்பாடுகளை விழுங்கிவிட்டுச் செமித்துக்கொள்ள முடியாதவர்களும், மோப்பதற்கும் மோந்து முணுமுணுப்பதற்குமாக எழுதப்படுவதன்று கவிதை; ஒரு சாதாரண மனிதனின் பழுதுபடா உள்ளத்திற் பாயப் பிறப்பது, என்று[20] ஓரிடத்தில், தமது நோக்கைத் தெளிவுபடுத்துகிறார் மஹாகவி. இதில் முதலிற் குறிக்கப்பட்டவர்கள் செயற்கை மனிதர்கள்; அவர்கள் தங்களுக்கு விளங்காததையும் விளங்கி விட்டதாக நடிப்பார்கள். சாதாரண மனிதன் நடிப்புப் பயிலாதவன். அவன் தனக்குப் புரிந்ததையே சுவைப்பான். அவனுக்குப் புரியாமற் போய்விட்ட கவிதைப் பொருளை அவனுக்கு மிக அணுக்கமானதாகக் கொண்டு வந்ததே எளியநடைக் கவிதைக்கு மஹாகவி செய்த பணி. அதுவே, எளியநடைக் கவிதையாக்கத்தில் ஒரு கணிசமான பணி.

மேற்கோட் குறிப்புகள் :

1. சுப்பிரமணிய பாரதி: பாரதியார் கவிதைகள், கோவை, 1969, பக்கம் 357.
2. பாரதிதாசன்: பாரதிதாசன் கவிதைகள் (2ஆம் தொகுதி) சென்னை, 1964. பக்கம் 74.
3. பாரதிதாசன்: பாண்டியன் பரிசு, இராமச்சந்திரபுரம், 1973, முன்னுரை.
4. தி. செல்வக்கேசவராயர்: தமிழ் வியாசங்கள், சென்னை, (1945), பக்கம் 81.
5. *Crompton Encyclopaedia* Vol. XXI Chicago 1971, page 491.
6. பாரதிதாசன்: பாரதிதாசன் கவிதைகள் (2ஆம் தொகுதி), சென்னை, 1964, பக்கம் 75.

7. கம்பராமாயணம் (மர்ரே பதிப்பு), சென்னை, 1958, பக்கம் 6
8. மேற்படி நூல் பக்கம் 6.
9. பாரதிதாசன்: பாரதிதாசன் கவிதைகள் (2ஆம் தொகுதி) சென்னை, 1964, பக்கம் 76.
10. எம். ஏ. நுஃமான்: ''மஹாகவியின் ஒரு சாதாரண மனிதனது சரித்திரம்'', கொழும்பு, 1971, முன்னுரை.
11. மஹாகவி: வீடும் வெளியும், கல்முனை, 1973, பக்கம் 56.
12. மேற்படி நூல் பக்கம் 56.
13. சாலை இளந்திரையன்: சிறுகதைச் செல்வம், சென்னை, 1966, பக்கம் 14 (மேற்கோள்).
14. மஹாகவி: வீடும் வெளியும், முன்னுரை.
15. எம். ஏ. ரகுமானின் இளம் பிறை இதழ், ஜூன் 1969, பக்கம் 10.
16. மேற்படி இதழ், ஆகஸ்டு 1969, பக்கம் 25.
17. மேற்படி இதழ், செப்டம்பர் 1972, பக்கம் 19.
18. மஹாகவி: குறும்பா, கொழும்பு, 1966, பக்கங்கள் முறையே 40, 53, 100.
19. மஹாகவி: ஒரு சாதாரண மனிதனது சரித்திரம், கொழும்பு, 1971, பக்கம் 52.
20. மஹாகவி: குறும்பா, கொழும்பு, 1966, முன்னுரைக் குறிப்பு.

சீவகசிந்தாமணியின் காலம்

செல்வி வி. முத்துக்குமாரு

தமிழ்க் காப்பியங்களுள் ஒன்முன சீவகசிந்தாமணி ஜைன சமயத்திலுள்ள இருபத்துநான்கு காமதேவர்களுள் ஒருவரான சிவகனின் வரலாற்றைக் கதைப் பொருளாகக் கொண்டது. இந் நூலை ஆக்கியோன் பெயர் திருத்தக்க தேவர் என்பது, இந் நூலின் சிறப்புப் பாயிரத்தால் மாத்திரமே அறியக்கூடியதாக இருக்கிறது. இந்நூல் எழுந்த காலம் பற்றியோ, அன்றேல் இந் நூலாசிரியன்பற்றியோ அறிவதற்கு இந்நூலில் எதுவித நேரடி ஆதாரமும் எமக்குக் கிடைக்கவில்லை. எனவே, இதன் காலத்தை அறிவதற்கு இந்நூலிலுள்ள இலக்கிய ஆதாரங்களையும், இந் நூலைப்பற்றிப் பிறநூல்கள் கல்வெட்டுக்கள் கூறும் குறிப்புக்களை யும், இந்நூலிற்கும் ஏனைய சிவகன் கதைபற்றிக் கூறும் நூல்களுக் கும் உள்ள தொடர்புகளையும் மாத்திரமே நாம் நம்பியிருக்க வேண்டியவர்களாகிறோம்.

வடமொழியிற் குணபத்திரரின் உத்தர புராணத்தில் ஒரு பகுதியும், வாதிபசிம்மனின் கத்தியசிந்தாமணி க்ஷத்திர சூடாமணி என்ற காவியங்களும், ஹேமசந்திரனின் ஜீவாந்தர சம்புவும் சிவகன் கதையைத் தம் கதைப் பொருள்களாகக் கொண்டுள்ளன. பிராகிருதத்திற் புஷ்பதந்தரால் எழுதப்பட்ட மகாபுராணத்தின் தொண்ணூற்ரென்பதாவது சந்தியும் இக் கதையையே கூறுகின்றது. இவற்றைவிடக் கன்னடத்தில் பாஸ் கரனின் ஜீவாந்தரச் சரிதமும் (கி. பி. 1425), தேரக நம்பி பொம்மரசனின் ஜீவாந்தர சம்கத்தியமும் (1485), கோடீஸ் வரனின் ஜீவாந்தர சத்பதியும் (கிட்டத்தட்ட கி. பி. 1506), பிரம்மகவியின் ஜீவாந்தரச் சரித்திரமும் இக்கதையை எடுத் தாளுகின்றன. மேற்கூறிய நூல்களுட் கன்னட மொழியிலுள்ள நூல்கள் காலத்தால் மிகப் பிந்தியவை. ஆகவே, சிந்தாமணியின் கால நிர்ணயத்தைப் பொறுத்த மட்டில் இவை உதவியளிப்பன வாக இல்லை. இதேபோலவே தமிழிலுள்ள ஸ்ரீ புராணமும் காலத்தாற் பிந்தியபடியால் இக்கால ஆராய்ச்சிக்கு உதவுவ தாக இல்லை.

வடமொழியிலுள்ள நூல்களுள் ஹேமசந்திரனின் ஜீவாந்தர சம்பு, வாதீபசிம்மனின் கத்தியசிந்தாமணி க்ஷத்திரசூடாமணி ஆகிய நூல்களுக்கும் சீவகசிந்தாமணிக்கும் காலத்தாற் பிந்தியது.[1] தமிழ்ச் சிந்தாமணியிலுள்ள பல பாடல்கள், சொல் லாட்சிகள் இந்நூலிற் கையாளப்படுவதுடன், மொழியமைப்பு கதைப்புணர்ப்பு என்பவற்றில் வாதீபசிம்மனின் நூல்களைப் பெரிதும் தழுவியுள்ளன.[2] ஹந்திக் என்ற ஆசிரியர் கூறுவது போல் ஜீவாந்தரசம்புவில் உள்ள கதை ஓட்டத்தை இலகுவில் விளங்க வாதீபசிம்மனின் நூல்களின் அறிவு அத்தியாவசிய மானது.[3] எனவே ஜீவாந்தரசம்பு, சீவகசிந்தாமணிக்கும் வாதீப சிம்மன் நூல்களுக்கும் காலத்தாற் பிந்தியதாக இருப்பதால், இந்நூல் எமது கால நிர்ணய முயற்சிக்கு அவ்வளவு உதவி யளிப்பதாக இல்லை. ஏனைய சமஸ்கிருத நூல்களுட் குணபத் திரரின் உத்தரபுராணம், புராணம் ஆகையால் வர்ணனைப் பகுதிகள் குறைந்து உருவத்திற் சிறியதாகவும், பல இடங் களில் சீவகசிந்தாமணி க்ஷத்திரசூடாமணி முதலியவற்றிலும் பார்க்கக் கதைப் போக்கில் வேறுபட்டும் காணப்படுகிறது.

வாதீபசிம்மன் நூல்களுக்கும் சீவகசிந்தாமணிக்கும் கதை யமைப்பு, கதைப்புணர்ப்பு, வர்ணனைகள், சொல்லாட்சிகள் முதலியவற்றுள் மிக நெருங்கிய ஒற்றுமையுண்டு. இவ்வித நெருங்கிய ஒற்றுமை கண்டே வையாபுரிப்பிள்ளை, பாலசுப்பிர மணியம் ஆகியோர், சீவகசிந்தாமணி வாதீபசிம்மன் நூல்களைப் பின்பற்றி எழுதப்பட்டுள்ளது என்பர். ஆனால், இந்த முடிபு தவறானது என்பதைப் பின்காட்டப்படும் ஆதாரங்களிலிருந்து அறியலாம்.

அக்காலத்தில் வாழ்ந்த ஜைனமுனிகள் தமிழ், கன்னடம், சமஸ்கிருதம், பிராகிருதம் முதலிய மொழிகளிற் சிறந்த தேர்ச்சி பெற்றிருந்தார்கள். இதன் விளைவாக அவர்கள் இயற்றிய நூல்களில் மற்றைய மொழிகளின் செல்வாக்கை நாம் காணக் கூடியதாயிருக்கின்றது. சீவகசிந்தாமணி ஆசிரியரும் தனது காவியத்திலே தமிழினதும் சமஸ்கிருதத்தினதும் சிறந்த பண்புகளை ஒருங்கிணைத்துக் காவியத்திற்குச் சிறப்பூட்ட முயன் றிருக்கிறார். இதன் விளைவாகச் சீவகசிந்தாமணியிற் காணப் படும் சமஸ்கிருதச் செல்வாக்கு, ஒருகால் வாதீபசிம்மனது நூல்களைத் தழுவி எழுதப்பட்டது என்ற முடிவிற்கு வரக் காரணமாயிருக்கலாம். வாதீபசிம்மன் நூல்களுக்கும் சீவக சிந்தாமணிக்கும் ஒற்றுமை காட்டிநிற்கும் பகுதிகள் பல இருப் பினும், அவற்றுட் சில, கத்தியசிந்தாமணி க்ஷத்திரசூடாமணி

என்ற இரு நூல்களும் சீவகசிந்தாமணியைப் பின்பற்றி எழுதப்பட்டமையை எடுத்துக்காட்டுகின்றன.

சீவகசிந்தாமணியிலே தமிழ் மரபுப்படி வர்ணிக்கப்படும் இடங்கள் வாதீபசிம்மன் நூல்களிற் கவனமாகத் தவிர்த்து விடப்பட்டுள்ளன. வாதிபசிம்மன் நூல்களிற் கத்தியசிந்தாமணி உரைநடையில் எழுதப்பட்டப்படியால் அங்கு வர்ணனைகள் விரிவாக உள்ளன. க்ஷத்திரசூடாமணி சுலோகயாப்பால் அமைந்து கதையைச் சுருக்கமாகக் கூறிச்செல்கிறது. சீவக சிந்தாமணியிலே தமிழ் மரபுப்படி வர்ணிக்கப்படும் இடங்களி லெல்லாம், கத்திய சிந்தாமணியில் வடமொழிக் காவியங்களி லுள்ள வர்ணனை மரபுக்கேற்ப வர்ணனைகள் காணப்படுகின்றன. தமிழ்ச் சிந்தாமணியிலுள்ள ஐவகை நில வர்ணனைகள் நிலத் திற்கேற்ற ஒழுக்கங்கள் முதலியவை கத்திய சிந்தாமணியிலே தவிர்த்து விடப்பட்டிருக்கின்றன. எனினும், இரு நூல்களிலு முள்ள ஒற்றுமையான பகுதிகளை ஒவ்வொன்ருக எடுத்து ஆராயும் பொழுது, சில இடங்களில் வாதீபசிம்மனின் நூல்களி லுள்ள வர்ணனைகளையும் சொற்றொடர்களையும் விளங்கச் சீவக சிந்தாமணியின் அறிவு தேவையாயிருப்பதை அவதானிக்கலாம். இத்தகைய சந்தர்ப்பங்களைக் கீழே எடுத்துக் காட்டுகின்ரேம்:

1. சீவகசிந்தாமணியிற் கோவிந்தையாரிலம்பகத்தில் ஆநிரை மீட்டுக் கொடுத்த சீவகனுக்கு, இடையர் தலைவன் தன் மகளைக் கொடுத்து அவளை ஏற்கும்படி வேண்டுகின்ருன். இச்சந்தர்ப்பத்தில் இடையர் தலைவன் குலவேறுபாடு காட்டித் தன் மகளை ஏற்காது விடுவானே சீவகன் என்ற பயத்திற் ''குலநினையல் நம்பிகொழுங் கயற்கண் வள்ளி நலனுகர்ந்தா னன்றே நறுந்தார் முருகன்''[4] என்று வள்ளி முருகன் கதையை உதாரணம் காட்டிச் சீவகனை வேண்டுகிருன். இச் சந்தர்ப்பத்திற் கத்திய சிந்தாமணி ஆசிரியர், வள்ளி முருகன் உறவை நேரடியாகக் கூறுமற் சண்முகன் ஆதியவர்கள் கீழ்க் குலப் பெண்ணை மணந்த சம்பவங்கள் முன்பு இருந்திருக்கிற படியால் நீயும் கோவிந்தையை ஏற்றுக்கொள் என்று கூறு கின்ருர்.[5]

தமிழ் இலக்கிய மரபுப்படி முருகன் குறிஞ்சிநிலக் கடவுள். குறிஞ்சிநில மக்களான குறவரிடைப் பிறந்தவள் வள்ளி. முருகன் வள்ளியைக் கூடுவது அந்நில மக்களுக்கேயுரிய ஒழுக்கமாகிய களவொழுக்கத்தை எடுத்துக் காட்டுகின்றது. முருகன் துணை யாக வள்ளியைக் கொள்வது பழந்தமிழ் இலக்கியங்களான நற்றிணை[6], பரிபாடல்[7] திருமுருகாற்றுப்படை[8] முதலிய நூல்

களிலும் காணப்படுகிறது. காலப்போக்கில் ஆரியர் செல்வாக்குத் தமிழ்நாட்டிற் பரவ அவர்கள் கடவுளான 'ஸ்கந்தன்' முருகனுடன் ஒன்ருகக் கணிக்கப்பட்டான். ஸ்கந்தனின் ஆறுமுகமும் பன்னிரு கரமும், தேவசேனு என்ற மனைவியும் முருகனுக்குமாயிற்று. எனவே முருகன் இரு மனைவியருடையவன். ஆனல், சம்ஸ்கிருத இலக்கியங்களில் ஸ்கந்தனுக்கு வள்ளியென்ற ஒரு மனைவி இருந்ததாகக் குறிப்புகள் எங்கும் இல்லை. சம்ஸ்கிருத ஸ்கந்த புராணத்திற்கூட ஸ்கந்தன் கீழ்க்குலப் பெண்ணை மணந்ததாக ஓரிடத்திலும் கூறப்படவில்லை. எனவே, சீவகசிந்தாமணியிலும் கத்தியசிந்தாமணியிலும் கூறப்படும் வள்ளி முருகன் உறவு, தமிழ் இலக்கியமரபு தெரிந்த ஒருவரால்தான் விளங்கிக்கொள்ள முடியும். கத்தியசிந்தாமணியிற் சன்முகன் முதலாயினேர் கீழ்க்குலப் பெண்ணை மணந்தனர் என்று கூறும் பகுதியை விளங்கச் சீவகசிந்தாமணியில் அதுபற்றி விளக்கமாகக் கூறும் பகுதியில் அறிவு வேண்டியிருக்கிறது.

2. கத்தியசிந்தாமணியிலும் க்ஷத்திர சூடாமணியிலும் தன் யானையை அடக்கிய சீவகன் மேற் கடுஞ்சினங் கொண்ட காஷ்டாங்காரனுடைய கோபத்தின் ஏற்றத்திற்குக் காரணமான விஷயங்களை வரிசைப்படுத்திக் கூறும்போது, ஆசிரியர் சீவகன் கட்டியங்காரன் அரசவைப் பெண்ணுகிய அநங்கமாலையைச் சேர்ந்ததும் ஒன்று எனக் கூறுகின்ருர்.[9] அநங்கமாலையைச் சீவகன் சேர்ந்த கதை வாதீபசிம்மன் நூல்கள் எவற்றிலும் கூறப்படவில்லை. இக் கதை விளக்கமாகக் கூறப்பட்டிருக்கும் ஒரேஒரு நூல் சீவகசிந்தாமணியாகும்[10]. குணபத்திரரின் உத்தர புராணத்திற் கூட இக்கதை கூறப்படவில்லை. எனவே, இங்கும் வாதீபசிம்மன் அநங்கமாலையைப் பற்றிக் கூறும் அடியை விளங்கச் சீவகசிந்தாமணியின் அறிவு முக்கியமாகின்றது.

3. சீவகசிந்தாமணியிற் பதுமையாரிலம்பகத்தில், பதுமையும் சீவகனும் திருமணத்திற்கு முன்னரே களவொழுக்கம் பூண்டதாகக் கூறப்படுகிறது.[11] இவர்களிடை நிகழ்ந்த கூட்டம், தமிழ் இலக்கிய மரபுப்படி, பாங்கியர் கூட்டம், இடந்தலைப்பாடு, இயற்கைப் புணர்ச்சி முதலிய விபரங்களுடன் வர்ணிக்கப்பட்டுள்ளது. இவ்விதம் வர்ணிப்பது தமிழ் இலக்கிய மரபுக்கு மாத்திரமே சிறப்பாக உள்ள ஒரு பண்பு. இந்த வர்ணனைப் பகுதிகளையெல்லாம் வாதீபசிம்மன் தன் நூல்களிலே தவிர்த்துவிட்டிருந்தாலும், இறுதியில் சீவகனும் பத்மாவும் மணந்து கொள்வதாகக் கூறும் ஒரு வசனத்தின் விளக்கத்திற்குச் சீவகசிந்தாமணியின் அறிவு தேவைப்படுகிறது. கத்தியசிந்தாமணியின், ''முன்னரே மாதவிக்கொடி மண்டபத்தில் காதல் தீ சாட்சியாக,

மன்மதன் கொடுக்க, மணந்துகொண்ட மதமூட்டப்பட்டவள் போன்ற பத்மாவை, மீண்டும் லோகபாவன் கொடுக்க நன்நிமித்தத்தில், மணந்துகொண்டான்.''[12] என்ற வசனத்திற் கூறிய செய்தியான மாதவிக்கொடி மண்டபத்திற் பதுமையைக் கூடியமை, வாதிபசிம்மன் நூல்களில் எவ்விடத்திலும் கூறப்படவில்லை. எனவே, இவ்வசனத்தை விளங்க, சீவகசிந்தாமணியின் அறிவு அத்தியாவசியமாகும்.

இவற்றைவிட, சீவகசிந்தாமணியிற் பல இடங்களிற் பழந்தமிழ் இலக்கியங்களிற் கையாளப்பட்ட சொல்லாட்சிகள் உவமான உவமேயங்கள் முதலியன எடுத்தாளப்பட்டிருக்கின்றன. இவற்றையும் வாதீபசிம்மன் பல இடங்களிலே தவிர்த்துவிட்டிருந்தாலும், தெரிந்தோ தெரியாமலோ ஒரு சில இடங்களில் இந்தப் பண்பினது தன்மை புலனாகிறது. உதாரணமாக,

''இன்நிழல் இன்மையின் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்கும் கலை''[13]

என்று கலித்தொகையிற் கூறியதை,

''கலையின் பிணை கன்றிடும் என்றுகசிந்
திலையின் நிழல் அவ்வயின் இன்மையான்
நிலையின் நிழ றந்து நின்றுகொடுத்
துலையும் வெயினின் றுருகு முரவோய்.''[14]

என்று கூறுகின்றார். இதே சந்தர்ப்பத்தில் வாதீபசிம்மனும் ''மரங்களெல்லாம் இலையின்றி நிற்கும் காட்டிலே களிறொன்று தன் பிடியை வெப்பத்தினின்றும் காக்கத் தன் நிழலைக் கொடுத்து நிற்கிறது''[15] என்று கூறுகிறார். இவ்வருணனை இங்கு வருவது வாதிபசிம்மனுக்கு இருந்த சீவகசிந்தாமணியின் அறிவைப் புலப்படுத்துகிறது. மானை யானையாக மாற்றி வருணித்தாலும், வர்ணனையிற் பண்பு ஒன்றாக இருப்பதை அவதானிக்கலாம்.

இதே போலச் சிந்தாமணியிலே தமிழ் மரபுப்படி நிலத்திற்கேற்ற கருப்பொருள்களால் வர்ணிக்கப்பட்டும் நில வர்ணனைகள் சில கத்தியசிந்தாமணியிலும் பின்பற்றப்பட்டிருப்பதைக் காணலாம்.[16]

இவ்விதம், மேற்காட்டிய உதாரணங்களெல்லாம் கத்தியசிந்தாமணியும் க்ஷத்திரசூடாமணியும் சீவகசிந்தாமணியைப் பின்பற்றி எழுதப்பட்டுள்ளன என்பதைக் காட்டி நிற்கின்றன. வாதிபசிம்மன் தனது கத்தியசிந்தாமணியின் நூன் முடிபுச்

செய்யுள் ஒன்றில், தனது நூல் இன்னொரு சிந்தாமணிபோல் உல கத்தில் நிலைபெறவேண்டும் எனக் கூறுகிறார்.[17] இங்கு இன்னொரு சிந்தாமணிபோல் என்று கூறியது மேற்காட்டிய முடிவிற்கு வலுவூட்டுவதாக அமைகின்றது. இங்கு இன்னொரு சிந்தாமணி என்று வாதீபசிம்மன் கூறுவது சீவகசிந்தாமணியைத்தான் என் பது, அவன் சீவகசிந்தாமணியைப் பின்பற்றித் தன் காவியத்தை யாத்ததிலிருந்து தெளிவாகப் புலப்படுகிறது. அத்துடன் சிந்தாமணி என்ற பெயர் வாதீபசிம்மன் நூலுக்கும் திருத் தக்கதேவர் நூலுக்கும் உண்டு. திருத்தக்கதேவர் தன் நூலுக்குச் சிந்தாமணி என்று பெயரிட்டமைக்கு நூலிலேயே காரண முண்டு. சீவகன் சுடுகாட்டிற் பிறந்தபோது, அவன் தாயான விசயை, ''சிந்தாமணியே கிடத்தியால்''[18] எனச் சீவகனை விளிக் கிறாள். இவ்விதம் ஒரு சந்தர்ப்பத்திலாவது கத்தியசிந்தாமணியிற் சிந்தாமணி என்ற பெயர் இடம் பெறவில்லை. இதைவிட, வாதீபசிம்மன் தனது நூலை உரைநடைச் சிந்தாமணி—அதாவது கத்தியசிந்தாமணி என்று கூறுவதற்கு, அதற்கு முன்பு ஒரு கவிதை நடையிலான சிந்தாமணி—பத்தியசிந்தாமணி இருந் திருக்க வேண்டும். இங்கும் கவிதைநடையிலான சிந்தாமணி யாகச் சீவகசிந்தாமணியையே கொண்டு வாதீபசிம்மன் தன் நூலிற்குக் கத்தியசிந்தாமணி எனப் பெயரிட்டிருக்கிறார் என்பது புலனாகிறது.

மேற்கூறிய எல்லாவற்றிலிருந்தும், வாதீபசிம்மன் திருத் தக்கதேவருக்குக் காலத்தாற் பிந்தியவராகையால், இவரது காலம் சீவகசிந்தாமணியின் காலத்தின் கீழ் எல்லையாக அமையலாம்.

வாதீபசிம்மன் காலம் பற்றி இதுவரை அறிஞரிடை அபிப் பிராயபேதம் நிலவிய போதும், இன்று எமக்குக் கிடைத்துள்ள இலக்கியக் கல்வெட்டுச் சான்றுகள் மூலம் இவன் சோழ மன்னன் முதலாவது இராசஇராசனின் (கி. பி. 985—1016) சமகாலத் தவன் என்பது தெளிவாகிறது.[19] எனவே வாதீபசிம்மன் பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதிக்கும் பதினோராம் நூற்றாண்டின் முற் பகுதிக்கும் இடைப்பட்ட ஒரு காலப்பகுதியில் வாழ்ந்திருக்க வேண்டும். ஆகவே சீவகசிந்தாமணி இந்தக் காலப்பகுதிக்கு முற்பட்டதாகவே இருக்கவேண்டும்.

அடுத்ததாகச் சீவகசிந்தாமணியின் காலத்தை ஆராய்வதில் எமக்குக் குணபத்திரரின் உத்தர புராணம் (கி.பி.897) உதவுமா என நோக்குவோம். இந்நூல்கள் இரண்டையும் ஒப்பிட்டுப் படித்ததிலிருந்து இவற்றிடைக் கதையில் ஒற்றுமை இருந்த

போதும். கதைப்போக்கிற் குறிப்பிடத்தக்க வேற்றுமையைக் காண்கிறோம். அத்துடன், சீவகசிந்தாமணியிலுள்ள சச்சந்தன், கட்டியங்காரன், கந்துக்கடன், கூழவேகன் முதலிய பாத்திரப் பெயர்கள் பிராகிருத மூலம் உடையனவாகக் காணப்படுகின்றன. உத்தர புராணத்திலுள்ள வேற்றுமைகளையும் பிராகிருத மூலமுடைய இப் பாத்திரப் பெயர்களையும் நோக்கும் போது, சீவகசிந்தாமணிக்கு ஒரு பிராகிருத நூல் மூலநூலாக இருந்திருக்கலாமோ என்ற சந்தேகம் எழுகின்றது.

கி. பி. பத்தாம் நூற்றுண்டில் எழுந்த சீவகன் கதை கூறும் ஒரேஒரு பிராகிருத நூல் புஷ்பதந்தரின் மகாபுராணமாகும். ஆனுல், இந்நூலிலுள்ள சீவகன் கதையை நோக்கின், இது சம்ஸ்கிருத உத்தரபுராணத்திலுள்ள கதையை அப்படியே பின்பற்றுவதுடன் சில இடங்களில் அங்குள்ள பகுதிகளிற் பல சுருக்கமாகவும் அமைந்திருப்பதைக் காணலாம். எனவே, இந்நூல் சீவகசிந்தாமணிக்கு மூலநூலாக அமைந்திருக்கலாம் என்பது அவ்வளவு சாத்தியமானதாகத் தெரியவில்லை.

சீவகசிந்தாமணியிலுள்ள இரு சொற்றெடர்களை வைத்து அதன் காலத்தை நிர்ணயிக்கச் சில ஆசிரியர்கள் முயன்றிருக்கின்றனர். முதலாவது, சீவகன் தாயான விசயையைக் குறிக்கும் ''அரிஞ்சயன் குலத்துட் டோன்றி''[20] என்னும் தொடராகும். ஞானமூர்த்தி[21] இந்த அரிஞ்சயன் என்ற பெயரைச் சோழ மன்னன் அரிஞ்சயனுடன் (கி. பி. 956—957) தொடர்புபடுத்தி, திருத்தக்கதேவர் இவனது சமகாலத்தவராகலாம் என்பர். ஆனுல், இங்கு கூறப்பட்டுள்ள அரிஞ்சயன் வரலாற்றுத் தொடர்புள்ள சோழ மன்னன் அரிஞ்சயனுக இருக்குமோ என்பது சந்தேகம். ஏனெனில், ஜைன புராணக் கதைகளிற் பல அரிஞ்சயர்கள் வருவதை நாம் அவதானிக்க முடிகின்றது. ஜைன மத ஆசிரியரான திருத்தக்கதேவர், இதை மனதிற் கொண்டே பெரும்பாலும், இத்தகைய ஒரு அடையை விசயைக்குக் கொடுத்திருக்கலாம். எனவே, ஞானமூர்த்தியின் வாதம் இங்கு வலுவுடையதாகத் தெரியவில்லை. இரண்டாவது, இந்நூலிலுள்ள 'முன்னீர் வலம்புரி' என்ற சொற்றொடராகும். சீவகசிந்தாமணிக்கு உரை எழுதிய நச்சினுர்க்கினியர் இச்சொற்றெடரைக் கொண்டு திருத்தக்கதேவர் சோழ குலத்தவர் என விளக்க முயல்கிறுர். ஆனுல், இவ்விதம் இவர் விளக்க முயன்றுலும், இந்தக் குறிப்பு சிந்தாமணியின் காலத்தை நிர்ணயிப்பதிலே தெளிவான உதவி எதுவும் புரியவில்லை. அத்துடன் இச் சந்தர்ப்பத்திற் சீவகசிந்தாமணியிலே தமிழ் நாட்டு மன்னர்களைப்

பற்றிக் குறிப்பிடப்படும் பகுதிகளும் எம் கவனத்தை ஈர்க்கின்றன. சீவகசிந்தாமணியிற் போர்க்களை நிகழ்ச்சிகளையோ சுயம்வரங்களையோ வர்ணிக்கும் திருத்தக்கதேவர் அங்கு வருகை தந்திருந்த மன்னர்களைப் பற்றிய வரிசையிலே தமிழ் நாட்டு மன்னர்களான பாண்டியனையும் பல்லவனையும் அடிக்கடி குறிப்பிட்டுள்ளார். சோழ மன்னனைப் பற்றிய குறிப்பு ஒரு இடத்திலாவது வரவில்லை. சோழ மன்னர் ஆண்ட செழுமைக் காலத்தில் இந்நூல் எழுதப்பட்டதாயின் இவ்விதம் சோழ மன்னரைப் பற்றிய குறிப்புக்கள் ஓரிடத்திலாவது வராது தவிர்த்து விடப்பட்டிருத்தல் குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

அடுத்து, சீவகசிந்தாமணியைப் பற்றிக் குறிப்பிடும் பிற நூல்கள், சாசனங்கள் முதலியவை, எமக்கு அதன் காலத்தை நிர்ணயிப்பதில் ஏதாவது உதவி புரிகின்றனவா என்பதை நோக்குவோம். சிந்தாமணி என்ற நூலின் பெயர் பின்வரும் நாலு இடங்களிற் காணப்படுகின்றது:

1. உமாபதி சிவாச்சாரியார் எழுதிய திருத்தொண்டர் வரலாறு.
2. சீவகசிந்தாமணிக்கு எழுதப்பட்ட உரைச் சிறப்புப் பாயிரம்.
3. மல்லிஷேணப் பிரசஸ்தி — சிரவணபெல்கோலாவில் கண்டெடுக்கப்பட்டது.
4. திருமுக்கூடலூர் நரசிப்பூம் தாலுகா கல்வெட்டு.

முதலாவதாகத் திருத்தொண்டர் வரலாற்றிலுள்ள கி. பி. 1217—1315 [22] குறிப்பை நோக்கின், இது சேக்கிழாரால், அநபாயமன்னனுக்கு (குலோத்துங்கன்[23] கி. பி. 1113—1050) பொய்புரட்டு உள்ள சிந்தாமணியைப் படியாது, உண்மை நிலையைத் தரும் சிவன் கதையைப் படிக்கும்படி புத்தி புகட்டப்படுவதாக அமைகின்றது. இந்தக் குறிப்பு எமக்கு, சீவக சிந்தாமணி கி. பி. 12ஆம் நூற்றாண்டிற்கு முன் இயற்றப்பட்டு விட்டது என்ற தகவலைத் தருகிறதேயொழியத் திடமாக இந்தக் காலத்திற்முன் சிந்தாமணி இயற்றப்பட்டதென்ற விபரத்தைத் தரவில்லை.

இரண்டாவதாக, சீவகசிந்தாமணிக்கு எழுதப்பட்ட உரைச் சிறப்புப் பாயிரத்தை நோக்கின் இங்கு,

"..................வன்பெருவஞ்சிப்
பொய்யா மொழிபுகழ் மையறு காட்சித்
திருத்தகு முனிவன்......... ...."

என்று அடிகள் வருவதைக் காண்கிறோம்.[24]

இங்கு கூறப்படும் ‘பொய்யாமொழி என்பதை, சம்ஸ்கிருதத்தி லுள்ள சத்யவாக்ய’ என்ற பட்டத்தின் மொழிபெயர்ப்பாகக் கொண்டு இப்பட்டத்தைக் கொண்ட கங்க மன்னனான சத்ய வாக்கிய கொங்குனிவர்ம பூதுகப் பெருமானடி (கி. பி. 938—953) என்பவனுடன் தொடர்புபடுத்துவர் வையாபுரிப்பிள்ளை,[25] பாலசுப்பிரமணியர்[26] முதலியோர். ஆனல் இவ்விதம் பூதுகப் பெருமானடியின் காலத்துடன் திடமாகத் திருத்தக்கதேவர் காலத்தைத் தொடர்புபடுத்துவது வலுவுடையதாகக் காணப் படவில்லை. காரணம், மைசூர் அரசிலே தலக்காட்டைத் (தளவன புரம்) தலைநகராகக் கொண்டு கி. பி. 1000 வரை ஆண்ட கங்க மன்னர்களிற் பலர் இந்தச் சத்யவாக்கிய என்ற பட்டப்பெயரைத் தம் பெயருடன் இணைத்திருந்தமைக்கு வரலாறு சான்று பகர் கிறது. ‘சத்யவாக்கிய’ என்ற பட்டத்தை முதன்முதல் தன் பெயருடன் இணைத்த மன்னன், முதலாவது ரசமல்லனாகும்.[27] இந்த உண்மை வித்தியாநந்தி என்ற ஒரு ஜைன ஆசிரியர் கூறும் குறிப்புக்களாலும் வலியுறுத்தப்படுகின்றது.[28] ரசமல்லனுக்குப் பின்வந்த கங்க மன்னர்கள் யாவரும் சத்யவாக்கிய என்ற பட்டப் பெயரைத் தம் பெயருடன் இணைத்திருந்தனர். எனவே சிவகசிந்தாமணி உரைப்பாயிரத்திற் கூறப்படும் ‘சத்யவாக்கிய’ என்ற பட்டப் பெயரைக் குறிப்பாக ஒரு கங்க மன்னனுக்கு ஏற்றி, அவன் சமகாலத்தவர் திருத்தக்கதேவர் என்று கூறுவது அவ்வளவு பொருத்தமானதாகத் தெரியவில்லை. இங்குள்ள ‘வஞ்சிசேர்’ என்ற தொடரும் எதுவித சான்றையும் பகருவதா யில்லை. எனவே, இந்த உரைப்பாயிரத்திலுள்ள தொடரால், திருத்தக்கதேவர் கி. பி. 1000 ஆண்டுக்கு முன் வாழ்ந்த ஒரு கங்கமன்னனாற் புகழப்பட்டுள்ளார் என்பது மாத்திரம்தான் எமக்குப் புலனாகின்றது.

மூன்றாவது, மல்லிஷேணப் பிரசஸ்தியிற் சிந்தாமணி என்ற ஒரு நூலைப்பற்றிக் காணப்படும் ஒரு குறிப்பாகும். இந்த பிரசஸ்தி, ஜைன மதகுரவர் ஒருவரான மல்லிஷேண மலதரி தேவ என்பவர் கி. பி. 1129ஆம் ஆண்டு பங்குனி 10ஆந் திகதி யில்[29] உயிர் நீத்ததையிட்டு எழுதப்பட்டதாகும். இதை எழுதிய மல்லிநாதர் என்பவர், இப்பிரசஸ்தியில் ஜைன மதக் குரவர்கள் பலரைப் புகழ்ந்துள்ளார். இங்கு ஜைன மதக் குரவர்கள் கூறப் பட்டிருக்கும் வரிசை சரியாக வரலாற்று வரிசைக் கிரமத்தில் காணப்படாவிட்டாலும், இந்த அமைப்பிற் குறிப்பிடத்தக்க கால வேறுபாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை. இந்தப் பிரசஸ்தியில், குமாரசேன என்ற ஒரு ஜைன ஆசிரியரைப் புகழ்ந்ததன்பின் சிந்தாமணி ஆசிரியரும், அதைத் தொடர்ந்து

சூளாமணி ஆசிரியரும் புகழப்பட்டிருக்கின்றனர். இவர்களைத் தொடர்ந்து மகேஷ்வரன், அகனங்கன் ஆகிய இருவரும் புகழப்பட்டிருக்கின்றனர். அக்காலத்து வாழ்ந்த ஜைன ஆசிரியர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் சில குமாரசேனன், அகனங்கன் ஆகியோர் காலத்தை நிர்ணயிக்க உதவுகின்றன. குமாரசேனன், வீரசேனன், ஜினசேனன் ஆகிய ஆசிரியர்களுள் ஜினசேனன் வீரசேனன் மாணவர். வீரசேனன் 'த்வன' என்ற தனது நூலை கி. பி. 780இல் முடித்திருக்கிறார்.[30] இவராற் குறையில் விடப்பட்ட 'ஜயதவன' என்ற நூல் ஜினசேனராற் கி. பி. 837இல் முடிக்கப்பட்டுள்ளது. எனவே, வீரசேனனின் காலம் கி. பி. 8ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகலாம். முல்குண்ட சாஸனத்தில்[31] (கி. பி. 902—903) வீரசேனர் குமாரசேனனின் தலையாய மாணவர் என்று தெரிகின்றது, இதிலிருந்து குமாரசேனரும், கி. பி. 8ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்திருக்கலாம் எனக் கொள்ளலாம்.[32]

அடுத்து, சிந்தாமணி, சூளாமணி ஆசிரியர்களுக்குப் பின்னர் மல்லிஷேணப் பிரசஸ்தியில் கூறப்படும் அகனங்கன் ராஷ்டிரகூட அவசன் முதலாவது கிருஷ்ணனுடைய (கி. பி. 750—775) சமகாலத்தவன்.[33] இவன் கி. பி. 778இல் பௌத்தர்களைக் காஞ்சியில் வாதில் வென்றதும், மல்லிஷேணப் பிரசஸ்தியிற் கூறப்படுகின்றது. அகனங்கன் சகபாடியான புஷ்பசேனனின் மாணவனான விமலசந்திரன் என்பானும் கி. பி. 8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தாகத் தெரிகின்றது.[34] எனவே இந்தச் சான்றுகள் எல்லாம் அகனங்கனும் கி. பி. 8ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்திருக்கலாம் என்பதைக் காட்டுகின்றன.

கி. பி. 1183ஆம் ஆண்டைச் சார்ந்த திருமுக்கூடலூர், நரசிப்பூம் தாலுகா சாஸனத்திலும் சிந்தாமணி ஆசிரியரும் சூளாமணி ஆசிரியரும் புகழப்படுகின்றனர். இங்கும்கூட இவர்களுக்கு முன் குமாரசேனரும், பின் மகேஷ்வரன் அகனங்கன் ஆகியோரும் புகழப்பட்டுள்ளனர். இந்த இரண்டு சாசனங்களிலுமுள்ள விபரங்களை ஒத்து நோக்கும்பொழுது சிந்தாமணி, சூளாமணி ஆசிரியர்களும், குமாரசேனர், அகனங்கன் முதலியோரது சமகாலத்தவர்களாக இருந்திருக்கலாம் என எண்ணக் கூடியதாக இருக்கிறது. இங்கு குறிப்பிடப்படும் சிந்தாமணி என்ற நூல் தமிழ்ச் சீவக சிந்தாமணியாகவே இருக்கவேண்டும் என்பது, நான்கு புருஷார்த்தங்களையும் தரவல்ல சிந்தாமணி போன்ற நூல் என்று மல்லிஷேணப் பிரசஸ்தியில் குறிப்பிடப்படும் குறிப்பிலிருந்து தெரிகின்றது. இத்தகைய புகழ்ச்சியை ஏற்கத்தக்க சிந்தாமணி என்ற ஒரு நூல் வேறு மொழிகளில்

இக்காலப் பகுதியில் இருந்ததாக இன்று கிடைக்கும் சான்றுகளிலிருந்து தெரியவில்லை.

சுவாமிக்கண்ணு,[35] சிவகசிந்தாமணியிலுள்ள சோதிடக் குறிப்புகளைக் கொண்டு இந்நூல் கி. பி. 813இல் எழுதப்பட்டிருக்கலாமெனக் கணித்திருக்கிறுர். இந்தக் குறிப்பும் மேற் குறிப்பும் மேற்குறிப்பிட்ட காலப்பகுதியுடன் ஒத்துள்ளமையைக் காணலாம்.

இச் சந்தர்ப்பத்திற் கோபிலாதராவுடைய[36] ஒரு கூற்றைக் கவனிக்கவேண்டியவர்களாகிறோம். இவர் குணபத்திரமுனிக்குப் பின் குமாரசேனர் என்ற ஒருவரும் அவருக்குப்பின் சிந்தாமணி ஆசிரியரும் அதற்குப்பின் பஹிவர்த்த தேவரும் இருந்ததாகக் கூறுகிறுர்.[37] இந்தக் கூற்றை வையாபுரிப்பிள்ளை, அவ்வை துரைசாமிப்பிள்ளை,[38] பாலசுப்பிரமணியம்,[39] தெ. பொ. மீனுக்ஷி சுந்தரன் ஆகியோரும் ஏற்றுத் தமது நூல்களில் திருப்பிக் கூறுகின்றனர்.

இந்த ஆசிரியர்கள் எந்த ஆதாரத்தைக்கொண்டு இவ்விதம் கூறுகிறுர்கள் என்று தெரியவில்லை. மல்லிசேஷணப் பிரசஸ்தியிலோ, திருமுக்கூடலூர் நரசிப்பூம் தாலுகா கல்வெட்டிலோ குணபத்திரர் குறிப்பிடப்படவில்லை. அவ்விதம் இருந்திருந்தால் ஒருகால் அது உதவியளித்திருக்கலாம்.

இன்னும் இந்நூலின் காலத்தைத் தீர்மானிக்கக்கூடிய சான்றுகள் கிடைக்கக்கூடும். இன்று எமக்குக் கிடைக்கக்கூடிய எல்லா ஆதாரங்களுடனும் நோக்கும்பொழுது சிவகசிந்தாமணி கி. பி. 8ஆம் நூற்றுண்டின் பிற்பகுதிக்கும் 9ஆம் நூற்றுண்டின் முற்பகுதிக்கும் இடைப்பட்ட ஒருகாலப் பகுதியில் எழுந்ததெனக் கொள்ளக்கூடியதாயிருக்கின்றது,

அடிக்குறிப்புகள்:

1. ஏ. என். உபாத்தியேயும் எச். எல். ஜைனும்: ஜீவாந்தர சம்புவின் முன்னுரை. பதிப்பாசிரியர் பன்னலால் ஜைன், வாரணுசி, ஆடி 1958 — பக்கங்கள் 8 — 10.

2. அ. முத்துக்குமாரு: A Study of Civakacintamani particularly from the point of the influence of Sanskrit language and literature on Tamil. ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்திற் கலாநிதி பட்டத்திற்காக அளித்த வெளியிடப்படாத ஆராய்ச்சிக் கட்டுரை, 1972— பக்கங்கள் 7–14.

3. கே. கே. ஹந்தீக்: ஜீவாந்தரசம்பு, பதிப்பாசிரியர் பன்னலால் ஜைன், வாரணுசி, 1958—பக்கம் 21,
4. சிவகசிந்தாமணி, பாடல் 482.
5. கத்தியசிந்தாமணி, பதிப்பாசிரியர் பன்னலால் ஜைன், வாரணுசி, 1968, லம்பம் 2, பந்தி 86 — பக்கம் 141.
6. நற்றிணை பாடல் 82.
7. பரிபாடல் 11, வரி 21–22. 9; 97; 10.
8. திருமுருகாற்றுப்படை, வரிகள் 102 – 103.
9. கத்தியசிந்தாமணி 5: பந்தி 144, பக்கம் 217, க்ஷத்திர சூடாமணி 4ஆம் தொகுதி.
10. சிவகசிந்தாமணி பாடல்கள் 670–693
11. சிவகசிந்தாமணி பாடல்கள் 1326 – 1334.
12. கத்தியசிந்தாமணி 5: பந்தி 159, பக்கம் 242.
13. கலித்தொகை 7.
14. சிந்தாமணி 1188.
15. கத்தியசிந்தாமணி 5: பந்தி 150, பக்கம் 227.
16. முத்துக்குமாரு: அதே கட்டுரை, பக்கங்கள் 55, 56, 57.
17. கத்தியசிந்தாமணி 11: பாடல் 297, பக்கம் 437.
18. சிவகசிந்தாமணி, பாடல் 311.
19. முத்துக்குமாரு: அதே கட்டுரை, பக்கங்கள் 59 – 65.
20. சிவகசிந்தாமணி, பாடல் 201
21. டீ. ஈ. ஞானமூர்த்தி: "A Critical study of Civaka-cintamani. கோயம்புத்தூர், நவம்பர் 1966, பக்கம் 11.
22. New catalogus Catalogorum Vol. III. சென்னைப் பல்கலைக் கழகம், பக்கங்கள் 94–95.
23. டி. எஸ். குப்புஸ்வாமி சாஸ்திரி: Indian Antiquary, Vol. XXXVI, 1907, பக்கம் 288.
24. உமாபதி சிவாச்சாரியார்: திருத்தொண்டர் புராணம், பதிப்பாசிரியர் பீ. இராமலிங்கசுவாமி, சேக்கிழார் நாயனார் புராணம், பாடல் 11.
25. எஸ். வையாபுரிப்பிள்ளை: காவியகாலம், பக்கம் 174.
26. பி. பாலசுப்பிரமணியம்: சிவகசிந்தாமணி முன்னுரை, பக்கம் 21.
27. முத்துக்குமாரு: அதே கட்டுரை, பக்கங்கள் 69–71.

28. ஜோதி பிரசாத் ஜைன்: The Jaina sources of the History of Ancient India (100 B.C—A. D. 900) டெல்கி, 1964 — பக்கம் 199.
29. Epigraphia Indica, Vol. III — பக்கங்கள் 190, 191.
30. ஜோதி பிரசாத் ஜைன்: அதே நூல் — பக்கம் 187.
31. Epigraphia Indica, Vol. XIII. பக்கங்கள் 190.
32. முத்துக்குமாரு: அதே கட்டுரை — பக்கங்கள் 72 – 74.
33. E. Hultzsah: Epigraphia Indica Vol. III, — பக்கங்கள் 186–187.
34. எம். எஸ். இராமசுவாமி ஐயங்காரும், பி. எஸ். ராவும்: Studies in South Indian Jainism. சென்னை, 1922 — பக்கம் 88.
35. எல். டி. சுவாமிக்கண்ணு: An Indian Ephemeris, Vol. I, Part I, Appendix iii — பக்கங்கள் 469–470.
36. டி. ஏ. கோபிலாதரர்: அருங்கலானவயம் சிவகசிந்தாமணி, சூளாமணி செந்தமிழ் 5.
37. வையாபுரிப்பிள்ளை: அதே நூல் — பக்கம் 172.
38. அவ்வை சி. துரைசாமிப்பிள்ளை: சிவகசிந்தாமணி ஆராய்ச்சி, 2ஆம் பதிப்பு, சென்னை 1948 — பக்கம் 11.
39. பாலசுப்பிரமணியம்: இதே இடத்தில் — பக்கம் 19.

உசாத்துணை நூல்கள்

தமிழ்

1. கலித்தொகை: பதிப்பாசிரியர், காசிவிசுவநாதன் செட்டியார், 3ஆம் பதிப்பு, சென்னை, 1959.
2. காவியகாலம்: எஸ். வையாபுரிப்பிள்ளை, 2ஆம் பதிப்பு, சென்னை, மார்ச் 1962,
3. கொங்குதேச ராஜாக்கள்: பதிப்பாசிரியர், சி. எம். ராமச்சந்திர செட்டியார், Madras Government Oriental Series, No. VI. சென்னை, 1950.
4. சமணத் தமிழ் இலக்கிய வரலாறு: தெ. பொ. மீனுக்ஷி சுந்தரன், கோயம்புத்தூர், 1961.
5. சிவகசிந்தாமணி: திருத்தக்கதேவர், பதிப்பாசிரியர், பாலசுப்பிரமணியம், 2ஆம் பதிப்பு, தென்னிந்திய சைவ சித்தாந்த கழகத்தினரால் பதிப்பிக்கப்பட்டது. திருநெல்வேலி, சென்னை, 1941.

6. சீவகசிந்தாமணி : திருத்தக்கதேவர், பதிப்பாசிரியர், உ. வே. சுவாமிநாத ஐயர், 6ஆம் பதிப்பு, சென்னை, 1957.
7. சீவகசிந்தாமணி ஆராய்ச்சி: அவ்வை எஸ். துரைசாமிப் பிள்ளை, 2ஆம் பதிப்பு, சென்னை, 1948.
8. சீவகசிந்தாமணிச் சொற்பொழிவு நினைவுமலர்: பதிப்பாசிரியர், வேணுகோபாலபிள்ளை, காஞ்சிபுரம் ஜைனத்தமிழ் இலக்கிய மன்றத்தாற் பதிப்பிக்கப்பட்டது. பகுதி 1, 1952, தென்இந்தியா.
9. சூளாமணி : தோலாமொழித்தேவர் ஜைனத் தமிழ் இலக்கிய மன்றத்தாற் பதிப்பிக்கப்பட்டது. திருநெல்வேலி, சென்னை, பெப்ருவரி 1962.
10. சூளாமணிச் சுருக்கம் : அவ்வை துரைசாமிப்பிள்ளை, 2ஆம் பதிப்பு, சென்னை, 1955.
11. செந்தமிழ் : Vol. V, டி. ஏ. கோபிநாதராவ், 'அருங்கலான்வயம்', சீவகசிந்தாமணி, சூளாமணி, சென்னை.
12. நரிவிருத்தம் : திருத்தக்கதேவர். பதிப்பாசிரியர், ஆறுமுகஞ்சேர்வை, சென்னை, 1923.
13. நற்றிணை : 3ஆம் பதிப்பு தென்னிந்திய சைவ சித்தாந்த கழகத்தினராற் பதிப்பிக்கப்பட்டது. திருநெல்வேலி, சென்னை, ஜனவரி 1962.
14. பரிபாடல் :
15. பெரிய புராணம் : திருத்தொண்டர் புராணம், உமாபதி சிவாச்சாரியார், பதிப்பாசிரியர், ஆறுமுகத்தம்பிரான் சுவாமி, சென்னை, 1888.

சம்ஸ்கிருத நூல்களும் பிராகிருத நூல்களும்

1. ஆதிபுராணம் : ஜினசேன, பதிப்பாசிரியர், பன்னலால் ஜைன், பெனாரிஸ், 1963.
2. உத்தரபுராணம் : குணபத்திரர், பதிப்பாசிரியர், பன்னலால் ஜைன், 2ஆம் பதிப்பு, வாரணாசி, 1968.
3. கத்திய சிந்தாமணி : வாதீபசிம்மன், பதிப்பாசிரியர், பன்னலால் ஞ்ஜன், வாரணாசி, 1968.
4. கத்திய சிந்தாமணி : வாதீபசிம்மன், பதிப்பாசிரியர், டி. எஸ். குப்புஸ்வாமி சாஸ்திரி & சுப்பிரமணிய சாஸ்திரி, சரஸ்வதி விலாச வரிசை, எண். 1, சென்னை, 1902.
5. க்ஷத்திர சூடாமணி : வாதீபசிம்மன், பதிப்பாசிரியர் டி. எஸ். குப்புஸ்வாமி சாஸ்திரி, சரஸ்வதி விலாச வரிசை, என் 111, தஞ்சாவூர், 1903.

6. ஹரிவம்ச புராணம்: ஜினசேன புன்னுட, பதிப்பாசிரியர் பன்னலால் ஜைன், வாரணுசி, 1962.

7. ஜீவாந்தர சம்பு: ஹரிச்சந்திரன், பதிப்பாசிரியர் பன்னலால் ஜைன், வாரணுசி, ஜூலை 1958.

8, மகாபுராணம்: புஷ்பதந்தர், பதிப்பாசிரியர் பி. எல். வைத்யா, பம்பாய், 1937.

1. Gnanamoorthy, T. E. : *A Critical Study of Civakacinthamani* Coimbatore, November, 1966.

2 Handiqui, K. K. : *Yasastilaka Camous and Indian Culture* Sholapur, 1949.

3. Jain Jyoti Prasad, the Jaina Sources of the History of Ancient India (100 B C. - A. D. 900=) Delhi, 1964

4. Karnataka Through Ages, Published by the Government of Mysore, 1968.

5 Meenakshisundaram, T. P.: *A History of Tamil Literature*, Annamalai, 1965.

6. Nilakanta Sastri, K. A.: *Cholas*, Vol. I & II, Madras, 1935—37.

7. ————————————: A History of South India, from Prehistoric times to fall of Vijayanagar, 3rd edition, Oxford, 1966.

8. Ramaswami Ayyangar, M. S. and Seshagiri Rao B.: *Studies in South Indian Jainism*, Madras, 1922.

9. Sharma, S. R. : *Jainism and Karnataka Culture*, Dharwar, 1940.

10. Swamikannu Pillai, L. D.: *An Indian Ephemeris*, A. D 700 - A. D. 1799, Vol. I. Part I. Madras, 1922.

Journals and unpublished thesis:

1. Indian Antiquary, Bombay, 1872—1933.
2. Indian Historical Quarterly, Calcutta, 1925.
3. Quarterly Journal of the Mithic Society, Bangalore, 1909
4. Muthuccumaru A.: *A Study of Civakaicntamani particularly from the point of view of the Influence of Sanskrit Language and Literature on Tamil.* Thesis submitted for the degree of Doctor of Philosophy to the University of Oxford, 1972.

வள்ளலார் கொள்கையின் அடிப்படை சமுதாயமா? சமயமா?

மோசூர் வாசுகி அம்மையார்

வாழையடி வாழை:

உலகம் பன்னெடுங்காலமாக வாழ்ந்துவருகிறது. எத்துணை கொடுமைகளுக்கிடையேயும் வாழ்ந்து வருகிறது. அங்ஙனம் வாழ்ந்து வருவதன் காரணம் யாது? அக்கொடுமைகளை நீக்கிச் சமுதாயம் நல்வாழ்வு பெறுதற் பொருட்டுத் தம் வாழ்வைத் தியாகம் செய்யும் அறிஞர்கள், ஞானிகள், அடியார்கள் பலர் அவ்வப்போது தோன்றுகின்றனர். தமக்கென வாழாது பிறர்க் கென முயலும் அப் பெரியோர்களாலேதான் இவ்வுலகம் கொடுமைகளால் அழியாது தொடர்ந்து வாழ்கின்றது.

"உண்டால் அம்மஇவ் வுலகம் ....
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே"[1]

என உயர்ந்தோர் உண்மையால் உலகம் வாழும் உண்மையை அறிந்து பாராட்டுகிறார் புவியரசாயும் கவியரசாயும் திகழ்ந்த கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதியார்.

இங்ஙனம் வாழையடி வாழையாகத் தோன்றிவரும் அறிஞர் பரம்பரையில், ஞானியர் வழியில், அடியவர் திருக்கூட்டத்தில் இராமலிங்க வள்ளலாரும் ஒருவராவர். சென்ற நூற்றாண்டிலே தமிழும் சன்மார்க்கமும் தழைத்தோங்க நம் செந்தமிழ் நாட்டில் தோன்றியவர் வள்ளலார். திருமூலர், திருவள்ளுவர், மணி வாசகர், தாயுமானவர் போன்ற அடியார் திருக்கூட்ட மரபில் அவரும் ஒருவராவார்.

"வாழையடி வாழையென வந்ததிருக் கூட்ட
மரபினில் யான் ஒருவன் அன்றோ"[2]

என்னும் திருவருட்பாப் பாடல் இவ்வுண்மையை வலியுறுத்துவ தாகும்,

வள்ளலாரது இரண்டு கண்களில் ஒன்று சமுதாயக் கண்; மற்றொன்று சமயக்கண் எனக் கூறலாம். சமுதாயத்தையும் சமயத்தையும் ஒருங்கு நோக்குகின்றார் அவர். அவற்றில் மலிந்து கிடந்த குறைபாடுகளையும் கொடுமைகளையும் காண்கின்றார். அக்கொடுமைகளைப் போக்கும் வழியில்லையா என எண்ணி இரங்குகின்றார். அங்ஙனம் இரங்கி அவர் பாடிய பாடல்கள் எண்ணில. அப்பாடல்களினின்றும் நாம் அறியும் வள்ளலார் கொள்கைகள் பலப்பல. அக் கொள்கைகள் சமுதாயத்தின் அடிப்படையில் எழுந்தனவா? சமய அடிப்படையில் எழுந்தனவா? அவர்தம் பாடல்களிற் காணும் கொள்கைகளை ஆராய்ந்து இவ்வினாவிற்கு விடைகண்டு தெளிவதே இக்கட்டுரையின் நோக்கம், வள்ளலார் கொள்கைகள் அனைத்தையும் ஆராயின் அது மிகமிக விரிந்து செல்லும். ஆதலின் அவர்தம் கொள்கைகளில் முதன்மையான சிலவற்றை மட்டும் ஈண்டு ஆராய்ந்து காணலாம்.

1. மாந்தர் உள்ளும் புறமும் ஒத்தவராதல்.
2. கொலையும் புலையும் தவிர்தல்.
3. பசியும் பிணியும் வறுமையும் ஒழிக.
4. உண்டிக்கொடையே (அன்னதானக் கொள்கை) உயிர்க் கொடையாகும்.
5. சன்மார்க்கமென்னும் நன்மார்க்கம்.
6. ஆன்ம நேய ஒருமை.

இவைபோன்றனவே வள்ளலாரின் முதன்மையான கொள்கைகள். இக்கொள்கைகள் சமயச்சார்புடையனவா? சமுதாய வாழ்வினை அடிப்படையாகக் கொண்டவையா?

மாந்தர் உள்ளும் புறமும் ஒத்தவராகுக:

சமுதாயத்தில் நிகழும் கொடுமைகளுக்குக் காரணம் பலப் பல. அவற்றுள் ஒன்று மக்களிற் பலர் அன்பால், அருளால், பண்பால் உள்ளும் புறமும் ஒத்திராமை எனக் காண்கின்றார் வள்ளலார். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவால் ஏற்படும் தீமைகளை எண்ணி அஞ்சுகின்றார். உலகம் சன்மார்க்கப் பாதையிற் செல்லவேண்டுமானால் உள்ளத்திற் பகைமையும், உதட்டிற் கேண்மையுங் கொண்டு திரியும் மாந்தர், அக்கொடுமையினின்றும் நீங்கித் திருந்தவேண்டும். அங்ஙனம் திருந்தினால்தான் துயர் நிறைந்த இவ்வுலகம், இன்பம் நிறைந்த பொன்னுலகமாக மாறும். உள்ளம் கறுத்து உடல் வெளுத்துக்

கொடுமை புரியும் மாந்தரின் உள்ளமும் உடலும், மனமும், சொல்லும் செயலும் அருள்மயமாக மாறும்வகையில் அன்னாரைத் திருத்தவேண்டும். இங்ஙனம் திருத்தி உலகம் முழுவதும் சன்மார்க்கப் பாதையிற் செல்லுமாறு செய்ய வேண்டும். அங்ஙனம் சென்று உலகம் இம்மையிலேயே பேரின்ப முற்று மகிழுமாறு ஆக்கவேண்டும். இத்தகைய திருப்பணி களைப் புரிதற்பொருட்டே இறைவன் தம்மை இவ்வுலகிற்கு வருவித்தான் என வள்ளலார் கருதுகின்றார்:

"அகத்தே கறுத்துப் புறத்துவெளுத்
திருந்த உலகர் அனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க
சங்கத் தடைவித் திடஅவரும்
இகத்தே பரத்தைப் பெற்றுமகிழ்ந்
திடுதற் கென்றே எனையிந்த
உகத்தே இறைவன் வருவிக்க
உற்றேன் அருளைப் பெற்றேனே."[3]

சமுதாயத்தில் நிகழும் கொடுமைகளுக்கு அடிப்படையானது உயிர்களின் தீயநெஞ்சம் என்பதை உணர்ந்து அதனைத் தூய நெஞ்சமாகத் திருத்தி, சமுதாயத்தைச் சன்மார்க்கப் பாதை யிற் செலுத்தி, இருளுலகை இன்பவுலகமாக்குவதே தமது வாழ்வின் குறிக்கோளாக மேற்கொண்டவர் இராமலிங்க அடிகளார் என்பது அவர்தம் அருட்பாவால் நன்குணரலாம்.

கொலையும் புலையும் தவிர்க :

சமுதாயம் அன்பும் அருளும் நிறைந்த தூய நெஞ்சு பெற வேண்டும். கொலையும் புலையும் நிறைந்த நெஞ்சில் அன்பும் அருளும் தோன்றுதல் இயலாது. அங்கு நெஞ்சில் தன்னலமே தாண்டவமாடும். தான் உடலை வளர்க்க, தன் உயிர் வாழ, தன் குடும்பம் வாழ, பிறர் உடலையழித்துப் பிற உயிரைக் கொன்று பிற குடும்பங்களை நாசமாக்கும் நச்சுப் பண்புதான் அந் நெஞ்சில் நிகழும்; அருட்பண்பு அங்கு உண்டாதல் முடியாது.

"தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூன்உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்"[4]

என்று திருவள்ளுவர் சமுதாயத்தை நோக்கி விடுக்கும் வினு இவ்வுண்மையை நன்குணர்த்தும்.

பிறர் நலங் கருதும் பெருந்தகையுள்ளம், கொலையும் புலையும் கருதாத பேருள்ளமாகும். இராமலிங்க அடிகளார் கொல்லா

விரதம் கொண்டவர். புலால் உண்ணும் மாந்தரைக் கண்டு மயங்கி, உள்ளம் நடுங்கி, உடல் மெலிந்து இளைத்தார். தமது மயங்கிய உள்ளத்தையும், இளைத்த உடலையும் இறைவனிடம் காட்டி,

வன்புலால் உண்ணும் மனிதரைக் கண்டு
மயங்கிஉள் நடுங்கிஆற் றமல்
என்பெலாம் கருக இளைத்தனன் அந்த
இளைப்பையும் ஐயநீ அறிவாய்'' [5]

எனப் பாடி இறைவன் திருவருளை நாடுகின்றார். பிறவுயிரைக் கொன்று தம் உயிரைப் பேணும் மாந்தர், சமுதாயத்திற்கு உறவினராகார், சமுதாயப் பகைவர் அவர்கள் என மனம் நொந்து கூறுகிறார்.

உயிர்க்கொலையும் புலைப்புசிப்பும் உடையவர்கள் எல்லாம்
உறவினத்தா ரல்லரவர் புறவினத்தார் ....[6]

கொடியவரே கொலைபுரிந்து புலைநுகர்வார்..........[7]

என்றெல்லாம் மனம் நொந்து கூறுகிறார். கொலையும் தவிர்ந்த நெஞ்சமே பிறர் வாழ்வு கருதும் அருள் நெஞ்சமாகும் என்பது வள்ளலார் கருத்து. அத்தகைய அருள்நெஞ்சம் பெற்ற சான்றோர்களாலேதான் சமுதாயம் உய்யும் என்பது அவர் கண்டு நிறுவும் உண்மையாகும்.

பசியும் பிணியும் வறுமையும் ஒழிய:

புத்தர் பெருமான் அரசவாழ்வில் இன்புற்றவர்; துன்பம் என்பதே யறியாமல் வாழ்ந்தவர். பிணி, மூப்பு, சாக்காடுகளை மறந்து வாழ்ந்தவர். அத்தகைய இன்பப் பெருமகனார் ஒருநாள் மூப்பு மிகுந்து தளர்ந்து மெலிந்து தண்டூன்றித் தடவித் தடுமாறும் கிழவன் ஒருவனைக் கண்டார்; தொழுநோயால் மெலிந்து வாடும் மற்றொருவனைச் சந்தித்தார்; செத்து மடிந்து சுடுகாடு நோக்கிச் செல்லும் பிணம் ஒன்றைப் பார்த்தார். இவற்றைக் கண்டபிறகே சமுதாய வாழ்விற் பிணி மூப்பு சாக்காடு என்னும் பெருந்துயர் நிலைகளும் உளவென உணர்ந்தார். அரச வாழ்வை, அரண்மனை வாழ்வை, இளவரசியுடன் துய்த்த இன்ப வாழ்வை, மயக்குறு மக்கட்பேற்றின் மாண்புறு வாழ்வைத் துறந்தார். இது வரலாறு கூறும் உண்மை.

அப் புத்தர் பெருமானின் மறுபிறப்பாய்ச் சென்ற நூற்றாண்டில் தோன்றியவரே வள்ளலார் எனத் துணிந்து கூறலாம்.

ஆனுல் வள்ளலார் அரச குடும்பத்தில், அரண்மனை வாழ்வில், இல்லற இன்பத்தில் திளைத்துத் துறந்தவரல்லர். வறிய குடும்பத்திற் பிறந்தார். பிறந்தவுடனேயே துறவு மேற் கொண்டனரோ எனக் கருதும் நிலையிலே தொடக்கம் முதல் அரும் பெரும் ஞானியாய்த் திகழ்ந்தார். சமுதாயத்திடையே, மாந்தரிடையே நிகழும் கொடுமைகளை மட்டுமன்று, ஓரறிவுயிர்களாகிய தாவரங்கள் உறும் இன்னல்களையும் கண்டு இரங்கியவர் வள்ளலார். மழையின்றி வாடும் பயிர்களைக் கண்டு வாடினுர். பசியால் மெலிந்து வீடுவீடாக இரந்தும் வயிறு நிரம்பாமற் சோர்ந்து கிடக்கும் இரவலர்களைக் கண்டு பதைத்தார். வாழ்நாள் முழுதும் தொழுநோயாலே துன்புறும் பிணியாளர்களை எதிர்ப்பட்டு நெஞ்சந் துடித்தார். இவற்றிற்கெல்லாம் மேலாகச் சமுதாயத்திற் பிறிதொரு துயர்நிலையை அவர் காண்கின்முர். அதுதான் பிளந்திறுவதல்லாற் பெரும்பாரம் தாங்கித் தளர்ந்து வளையாத கற்றூண் போன்ற மானிகளின் துயரவாழ்வு. எத்தனை இடையூறு நேரினும், எவ்வளவு வறுமையுறினும், பசியால் எத்துணை மெலியினும் ஈயென்று ஒருவர்பால் இரந்து நிற்காத ஏழைகளின் வறுமையிற் செம்மைநிலை. இறப்ப வரினும் இளிவந்த செயல்களைப் புரியாது, நெஞ்சம் இளைத்து வாடும் ஏழைச் சான்ருேர்களின் இந்த நிலையையும் சமுதாயத்திடையே கண்டு வள்ளலார் இளைத்து வருந்துகின்முர்.

"வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன் பசியினுல் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறு தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின் ருேர்என்
நேருறக் கண்டுளம் துடித்தேன்
ஈடில்மா னிகளாய் ஏழைக ளாய்நெஞ்
சிளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்."[8]

என்பது பத்தொன்பதாம் நூற்ருண்டுப் புத்தர்பெருமான் சமுதாயத்திடைக் கண்ட அவல நிலைகளையும், அதனுல் அவர் தம் நெஞ்சந் துடித்த துடிப்பினையும் எடுத்துக்காட்டும் நிழற் படமாகும். இங்ஙனம் சமுதாயத்தில் உயிர்கள் படும் துயரங்களை நினைந்து உருகும் வள்ளலார் — உயிர்களின் துயரம் நீங்க இறைவனது இன்னருளை வேண்டி,

"கோழையுல குயிர்த்துயரம் இனிப்பொறுக்க மாட்டேன்[9]
கொடுத்தருள்நின் அருளொளியைக் கொடுத்தருள்இப் பொழுதே"

என்று பாடி இரந்து நிற்கின்முர்.

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே :

சமுதாயத்தில் நிகழும் கொள்ளை, கொலை, புலை முதலிய கொடுமைகளுக்கெல்லாம் பிறப்பிடம் வறுமையும் பசியுமே யாகும். பசிக்கொடுமையால் இறக்க நேரினும் இழிசெயல் புரியாது, அவ்விறப்பிற்கு நல்வரவு கூறும் உயர்ந்தோர் உலகில் மிகமிகச் சிலரேயாவர். பசிக்கொடுமை தாங்காது தமது உயரிய பண்புகள் அனைத்தையும் விட்டொழித்தும் பழிச்செயல் பல புரிந்தேனும் வயிறு வளர்க்க முனைவோர் உலகில் மிகப் பலர்.

"மானம் குலம்கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம்உயர்ச்சி தாளாண்மை — தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்" 10

என்னும் ஔவையார் திருப்பாட்டும் பசி வந்திடப் பறந்துபோம் என்னும் உயர்ந்த பண்புகளை எண்ணி எடுத்தியம்புகின்றது. இங்ஙனம் மாந்தரின் உயரிய பண்புகளை நீக்கி அவரைப் பழிச் செயலிற் புகுத்தும் பசிப்பிணியைப் பாவி என அழைக்கின்றார் சீத்தலைச் சாத்தனார். உண்டி வழங்கி அப் பசிப்பிணி என்னும் பாவியை ஓட்டும் உயர்ந்தோரே உயிர்கொடுத்தோராவர் என்றும் சாத்தனார் பாராட்டுகின்றார். அவ்வள்ளல்களின் புகழ் உரைக்குந் தரமன்று.

"பசிப்பிணி யென்னும் பாவியது தீர்த்தோர்
இசைச்சொ லளவைக் கென்னா நிமிராது" 11

"ஆற்று மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே" 12

என்பன பசிப்பிணியின் இழிவும், அதனைத் தீர்க்கும் வள்ளல் களின் உயர்வும் எடுத்துக்காட்டுவனவாகும்.

உலகின் பசிக்கொடுமை ஒழியவேண்டும் என்பது வள்ளலாரின் முதன்மையான கொள்கை. இப்பிணி ஒழியின் அது காரணமாக விளையும் கொடுமைகள் தாமே ஒழியும். அக் கொடுமைகள் ஒழியின் சமுதாயம் சன்மார்க்கப் பாதையிற் சென்று நல்வாழ்வு வாழும். கொடியவராயினும், அன்னார்

வாடுவதைக் காணின் அவர்கட்கு உண்டிகொடுத்து உயிரைப் பேணுதலே பண்பும் கடமையும் அறமும் ஆகும் என்பது வள்ளலார் கொள்கை. கொலையும் புலையும் புரிந்து திரியும் கொடியவர்களைக் கண்டு வெறுக்கின்றார் வள்ளலார். அக் கொடியரை மக்கட் சமுதாயத்தின் பகைவராகக் கூறி ஒதுக்கு கின்றார். அத்தகைய கொடியோரும் பசியால் வருந்துவராயின் அவர்க்கு உணவிட்டு அவர்தம் பசியைக் களையுங்கள் என்று உலகமாந்தரை வேண்டுகின்றார். அவர்கள் உயிருக்குக் கேடு நேராமல் உதவுங்கள் என்று அறிவுறுத்துகின்றார்.

"உயிர்க்கொலையும் புலைப்புசிப்பும்
உடையவர்கள் எல்லாம்
உறவினத்தா ரல்லரவர்
புறவினத்தார் அவர்க்கும்
பயிர்ப்புறுமோர் பசிதவிர்த்தல்
மாத்திரமே புரிக........"[13]

"கொடியவரே கொலைபுரிநது
புலைநுகர்வா ரெனினும்
படியிலதைப் பார்த்துகவேல்
அவர்வருத்தம் துன்பம்
பயந்திர்த்து விடுக."[14]

என்றெல்லாம் பாடி உலகமாந்தரை வேண்டுகின்றார் வள்ளலார். அங்ஙனம் வேண்டுதலின் காரணம் என்ன? சமுதாயத்தில் உள்ள கொடுமைகள் ஒழியவேண்டுமாயின் முதற்கண் அதன்பால் உள்ள பசிக்கொடுமை மறையவேண்டும் என்பதே வள்ளலார் கொள்கையின் அடிப்படையாகும்.

சன்மார்க்மென்னும் நன்மார்க்கம்:

வள்ளலார் கண்ட சன்மார்க்க சங்கம் அவர் கண்ட சமயம் அன்று. சமயம் என்பது சமுதாயத்தை நல்வழிப்படுத்த எழுந்ததேயாகும். சமுதாயத்தில் உள்ள குறைகளைக் களைந்து நன்கு சமைக்கப்பட்டதே சமயம் எனலாம். ஆயின் நாட்டிற் பலப்பல சமயங்கள் எழுந்தன. சமுதாயத்தை ஒன்றுபடுத்த எழுந்த சமயங்கள் தம்முள் வேறுபட்டுப் பகைமை கொண்டு போரும் பூசலும் செய்து, சமுதாயத்தைச் சுக்கு நூறாகப் பிளந்து கொடுமை செய்யும் பணியில் இறங்கின. சமயங்களின் வேறுபாட்டையும் பகைமையையும் போக்குதற்கு வள்ளலார் பாடிய பாடல்கள் பலப்பல. நதிகள் பலவாக ஓடலாம். ஆனால்

அவையனைத்தும் முடிவிற் கடலைச் சென்றடைகின்றனவல்லவா? இங்ஙனமே சமயங்கள் பலவாகலாம். ஆனால் அவையனைத்தும் காணும் முடிவு ஒன்றேயெனக் கொள்ளுதல்வேண்டும் என்பது வள்ளலார் கொள்கை.

"பொங்குபல சமயமெனும் நதிகளெல்லாம்
புகுந்துகலந் திடநிறைவாய்ப் பொங்கி ஓங்கும்
கங்குகரை காணாத கடலே"[15]

என்னும் அவர்தம் திருப்பாடல் சமயங்களின் முடிவு ஒன்றே யெனக் காட்டி, அச்சமயங்கள் தம்மிடை வேற்றுமை ஒழிந்து ஒன்றுபட்டுச் சமுதாயத்தை வாழவிடவேண்டும் என்னும் கருத்தை நிலைநாட்டுவதாகும். சமயமும் மதமும் சாத்திரங்கள் பலவற்றை உருவாக்கி, அச் சாத்திரங்களைப் பின்பற்றும் சாதிகள் பலவற்றை உண்டுபண்ணி, அவற்றிடையே உயர்வு தாழ்வுகளையும் கற்பனைசெய்து, சமுதாயத்தை உருக்குலைத்து விட்டன. இக்கொடுமையைக் கண்ட வள்ளலார் இவற்றிற் கெல்லாம் காரணமாகிய சமயம் மதம் சாத்திரம் அனைத்தை யும் வெறுத்தார்.

"சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல் அழகலவே"[16]

எனச் சாதி, சமயம், மதம், சாத்திரம், கோத்திரம் முதலிய வற்றைப் பின்பற்றி வேற்றுமை கொண்டு அலையும் மாந்தரை நோக்கி வள்ளலார் அறிவுரை கூறுகின்றார்.

"சாதியும் மதமும் சமயமுந் தவிர்ந்தேன்
சாத்திரக் குப்பையும் தணந்தேன்"[17]

என அவற்றை அருவருத்து நீங்குகின்றார்.

'கலையுரைத்த கற்பனையே மெய்யெனக்கொண் டாடும்
கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக"[18]

என அவற்றை நோக்கி முழங்குகின்றார்.

சமயம், மதம், சாதி, சாத்திரம், கோத்திரம் முதலான வேறுபாடுகள் ஒழிந்து, சமுதாயம் நல்வாழ்வு பெற்று ஓங்குதற் பொருட்டு வள்ளலார் கண்ட சங்கமே சன்மார்க்க சங்கம். இது சமயமன்று, சங்கம். இச்சங்கத்தின் உறுப்பினர் உலகோர்

அனைவரும், மேற்கூறிய வேற்றுமைகள் ஒழிந்து நிற்றலே உறுப்பினராதற்குரிய தகுதி.

ஆதலின் சன்மார்க்க சங்கம் எவ்வகை வேறுபாடும் இல்லாத சமரச சங்கமாகும். வேற்றுமை பலவற்றைப் புகுத்தும் சமயங்களை ஒழித்துச் சமுதாயத்தை வாழ்விக்கக் கண்ட நல் வாழ்வுச் சங்கமே சமரச சன்மார்க்க சங்கமாகும். எனவே வள்ளலாரின் சன்மார்க்கக் கொள்கை சமயத்தின் அடிப்படையி லன்றிச் சமுதாய நல்வாழ்வின் அடிப்படையில் எழுந்ததே யாகும். இதனை,

"அகத்தே கறுத்துப் புறத்துவெளுத்
திருந்த உலகர் அனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க
சங்கத் தடைவித் திடஅவரும்
இகத்தே பரத்தைப் பெற்றுமகிழ்ந்
திடுதற் கென்றே எனைஇந்த
உகத்தே இறைவன் வருவிக்க
உற்றேன் அருளைப் பெற்றேனே" [19]

என்னும் அவரது திருவருட் பாவால் நன்கு அறியலாம்.

ஆன்மநேய ஒருமை :

ஒற்றுமை, ஒருமை என்னும் இரு சொற்களும் தம்முள் வேறுபாடுடையன. புறக்கோலங்களால் ஒன்றுபடுதல் ஒற்றுமை எனலாம். நிறத்தாலும், இனத்தாலும், நாட்டாலும், மொழி யாலும் ஒன்றுபடும் நிலையை ஒற்றுமை எனலாம். இவற்றால் எல்லாம் ஒத்து, மனத்தால், உளத்தால், உயிரால் ஒன்றுபட வில்லையெனின் அவ்வொற்றுமை நன்மைபயத்தலைக் காட்டிலும் தீமையே பெரிதும் விளைவிக்கும் எனலாம். நிறத்தாலும், இனத்தாலும், பிறவற்றாலும் ஒத்து ஒற்றுமையுடைய மாந்தருக் குள்ளேயே எத்தனைவகைப் போரும் பூசலும் நிகழக் காண்கின் றோம். ஆதலின் இவற்றால் ஒத்திருக்கும் ஒற்றுமையைக் காட் டிலும் மனத்தால், நெஞ்சத்தால், உள்ளத்தால், உயிரால் ஒத்து நிற்றலே சிறப்புடையதாகும். இவ்வகை ஒப்புமையே ஒருமை எனப்படுவதாகும். இதனையே ஆன்மநேய ஒருமை என்பார் வள்ளலார்.

பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் என வள்ளுவர் கூறியதும் இவ்வான்ம நேய ஒருமையையே எனலாம். ஆன்ம நேய ஒருமை யுடையராக உள்ளத்திலே, தன் இனம் பிற இனம், தன்மொழி பிறமொழி, தன்நாடு பிறநாடு என்னும் வேற்றுமைகள் சிறிதும்

நிலவா. விலங்குகள், பறவைகள், மலை, காடு எல்லாம் அவர்கட்குத் தம்மினமாகவே நெருங்கி நிற்கும்.

"காக்கை குருவி எங்கள் ஜாதி — நீள்
காடும் மலையும் எங்கள் கூட்டம்"

எனப் பாரதியார் ஆன்மநேய ஒருமையில் ஈடுபட்டு இன்பம் காண்கின்றார்.

இங்ஙனம் எள்ளளவும் யாரிடமும் எவ்வுயிரிடமும் வேற்றுமை காணாது, எல்லாவுயிரையும் தம்முயிரெனக் கருதி மகிழும் உயர்ந்தோர் உள்ளம்தான் அறிவு நிரம்பிய பேருள்ளமாகும். அறிவுருவாகிய இறைவன் நடமிடும் அரங்கமாகும்.

"எத்துணையும் பேதமுறா(து) எவ்வுயிரும் தம்முயிராய்
எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார் யாவரவர்
உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும் இடமெனநான்
தெளிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடவென் நெஞ்சம்மிக
விழைந்த தாலே"[20]

என உவந்து பாடுகின்றார் வள்ளலார். அவ்வித்தகர்தம் திருவடிகளுக்கு ஏவல் புரிந்து வாழ விரும்புகிறார் அவர், ஏன்? அவர்களாலேயே மதம், சாதி, சமயம், கோத்திரம் முதலான அனைத்து வேற்றுமையும் ஒழிந்து, போரும் பூசலும் நீங்கி, இன்பமும் அமைதியும் ஓங்கிச் சமுதாயம் வாழும், நாடு வாழும், உலகம் வாழும் என்பது வள்ளலார்தம் உறுதியான கொள்கை.

இங்ஙனம் வள்ளலாரது கொள்கைகள் மிகப்பல. மேலாக நோக்குவார்க்கு அவரும் ஒரு புதுச்சமயத்துக்கு அடிகோலுகிறார் என்னும் எண்ணம் தோன்றும். ஆழ்ந்து நோக்கின் சமயங்களை அவர் புறக்கணிப்பது தோன்றும். சாத்திரங்களை அவர் வெறுப்பது காணலாம். மதங்களை அவர் எதிர்ப்பதை அறியலாம். புரான இதிகாசக் கற்பனைகள் கூறுவனவற்றை உண்மையெனக் கொண்டாடும் அறிவை அவர் ஒதுக்குதல் அறியலாம். ஏன் இவையனைத்தும் எண்ணிறந்த வேறுபாடுகளை விளைவித்து, உயர்வு, தாழ்வுகளை உண்டாக்கிப் பசி, பிணி, பகைமைகளை

வளர்த்துச் சமுதாயத்தை நிலைகுலையச் செய்துவிட்டன. இத் தீமைகள் ஒழிந்த சமுதாயத்தைக் காணும் பொருட்டே சமரச சன்மார்க்க சங்கம் நிறுவினர். அன்னதான உயர்வை விளக்கினர். முடிவாக ஆன்மநேய ஒருமையை வற்புறுத்தினர். எனவே, வள்ளலார் தம் கொள்கைகள் அனைத்தும் சமயத்தின் அடிப்படையில் எழுந்தவையல்ல, சமுதாய வாழ்வின் அடிப் படையில் எழுந்தவையே என்பது உறுதியாகும்.

அடிக்குறிப்புகள்

1. புறநானூறு : 182
2. திரு அருட்பா : 3803
3. ,, ,, : 5485
4. திருக்குறள் : 251
5. திரு அருட்பா : 3450
6. ,, ,, அருள்விளக்க மாலை 7
7. ,, ,, ,, ,, 8
8. ,, ,, 6 முன். பிள்ளைப்பெரு விண்ணப்பம் 62
9. ,, ,, 3803
10. நல்வழி : 26
11. மணிமேகலை : 11 பாத்திரம் பெற்ற காதை 76—80
12. ,, ,, ,, 93—96
13. திரு அருட்பா : அருள் விளக்க மாலை 7
14. ,, ,, ,, ,, 8
15. ,, ,, மகாதேவ மாலை 48
16. ,, ,, புனிதகுலம் பெறுமாறு புகலல் 1
17. ,, ,, 4075
18. ,, ,, சிற்சபை விளக்கம் 9
19. ,, ,, 5485
20. ,, ,, பராபரன் உண்மை நிலையம் 2

இக் கட்டுரைக்குப் பயன்பட்ட நூல்கள் :

ஆசிரியர் பெயரும் முதலெழுத்துக்களும்	நூலின் சரியான தலைப்பு	பக்கம்	வெளியீட்டாளர் பெயர்	வெளியிடப் பட்ட இடம்	வெளியீட்டு ஆண்டு
1. இராமலிங்க அடிகள்	திரு அருட்பா	முழுதும்	ஊரன் அடிகள்	சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், திருச்சி	
2. டாக்டர் கு. சீனிவாசன்	சுத்த சன்மார்க்க விளக்கம்	,,			
3. ஊரன் அடிகள்	சன்மார்க்க விவேக விருத்தி	1-9-72 } 1-4-71 }			
4. ம. பொ. சிவஞானம்	வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு	முழுதும்	திரு. சோம சுவாமிநாதன்	இன்ப நிலையம், சென்னை	1968
5. ந. சண்முகம்	வள்ளலார் காட்டிய வழி		தமிழ்ப்பண்ணை	மாருதி பிரஸ், சென்னை	1966
6. இராமலிங்க அடிகள்	திரு அருட்பா 3ஆம் 9ஆம் பகுதி புத்தகம்		ஆ. பாலகிருஷ்ண பிள்ளை	அருட்பாவளாகம், சென்னை	1957
7. திருவள்ளுவர்	திருக்குறள்		டாக்டர் மு. வரதராசன்	கழகம், சென்னை	1968
8. ஔவையார்	நல்வழி		திரு. சுப்பையா பிள்ளை	கழகம்	
9. சீத்தலைச் சாத்தனார்	மணிமேகலை		உ. வே. சாமிநாத ஐயர்	கேசரி அச்சுக்கூடம்	1931

தோட்டத் தொழிலாளர் வரலாறு கூறும் மலையகத் தனிப்பாடல்கள்

கணபதிப்பிள்ளை நவசோதி

1. தனிப்பாடல்களின் முக்கியத்துவம்:

இலங்கையின் மலையகத்தில் வாழும் இலங்கை இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் வரலாற்றிற்கு, 1908ஆம் ஆண்டின் தொழிலாளர் ஆணைக்குழுவின் அறிக்கை, 1912ஆம் ஆண்டின் வைத்திய உதவிச் சட்டங்கள், 1922ஆம் ஆண்டின் இந்திய குடியகல்வுச் சட்டம், 1949ஆம் ஆண்டின் இந்திய பாகித்தானிய குடியுரிமைச் சட்டம், வேலையாட்கள் சட்டம், தொழிற்சங்கங்களின் வரலாறுகள், எமெர்சன் ரென்னர் போன்ற தேசாதிபதிகளும் ஹென்றிகேவ் நிக்கலஸ் போன்ருரும் இலங்கைத் தேயிலைத் தொழில், தமிழ்க் கூலியாட்கள் ஆகியனபற்றி எழுதியதைப் போன்ற நூல்களும், சிறப்பாகச் சிறிமா–சாஸ்திரி ஒப்பந்தமும் பலவகைப்பட்ட ஆதாரங்களாகும்.[1] இவற்றிற்குப் புறம்பானதே மலையக நாட்டுப் பாடல்களும், தனிப்பாடல்களும். இவை மரபு வழிப்பட்ட ஆதாரங்களாகும். வரலாற்று ஆதாரங்கள் உண்மைக்கு மாருயிருக்குமிடங்களில் அவ்வெற்றிடங்களை மரபு வழிப்பட்ட ஆதாரங்கள் நிரப்பும் தன்மையனவாயினும்[2], முதல்வகை ஆதாரங்களைப் போன்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களைத் தருவது மலையக நாட்டுப் பாடல்களினதும் தனிப்பாடல்களினதும் சிறப்பு அமிசமாகும்.

இலங்கை இந்தியப் பிரதமர்களுக்கிடையில் அமைவுற்ற சிறிமா–சாஸ்திரி ஒப்பந்தம் மலையகத் தனிப்பாடல் நூல்கள் பல தோன்றுதற்குக் காலாயிற்று. நூற்றைம்பது ஆண்டுக் காலமாக ஈழத்தின் பொருளாதார விருத்திக்கு முதுகெலும்பாய் இருந்த தோட்டத் தொழிலாளர்களில் ஐந்தரை இலட்சம் ஆட்கள் இந்திய மண்ணிற்குத் திருப்பி அனுப்பப்படுவதை ஏற்படுத்திய ஒப்பந்தம் தொழிலாளர்களின் மனநிலையைப் பெரும ளவிற் பாதிக்கவே அது மலையகத் தனிப்பாடல்களிலும் பிரதி

பலிப்பதாயிற்று. நாட்டுப் பாடல்களிற் காணப்படாத வகையில் அண்மைக்கால வரலாற்றுச் செய்திகளைத் தனிப்பாடல்கள் கொண்டிருப்பது முக்கிய அமிசமாகும்.

தென்னிந்தியத் தமிழ்த் தொழிலாளர்கள், கடல்கடந்த பிஜி, மொரேசியஸ், தென்னுபிரிக்கா, பர்மா, மலேசியா, அந்தமான், இலங்கை போன்ற பகுதிகளிற் குறிப்பாகத் தொழிலாளர்களாய்த் தோட்டங்களில் வாழ்ந்த வாழ்க்கை தமிழகத்திலும்[3] ஈழத்திலும்[4] தலைசிறந்த கவிஞர்களின் ஆக்கங்களுக்கு அடிப்படையாய் அமைந்தது.

இலங்கை இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள், தனிப் பாடல்களில் (அ) பாட்டாளி மக்கள், (ஆ) பாமர மக்கள், (இ) கூலி மக்கள் என்று குறிப்பிடப்படுகின்றனர்.

2. தென்னிந்தியத் தமிழ்த் தொழிலாளரின் முக்கியத்துவம்:

பிரித்தானியராட்சியிலே தோட்டங்கள் மலையகத்தில் ஆரம்பிக்கப்பட்டபோது அப்பகுதிகளைச் சூழ்ந்து பெரும்பான்மையினராக வசித்துவந்த சிங்களவர்கள் மலைப்பகுதிகளிற் கடின உழைப்புக்குப் பின்தங்கினர்.[5] இதனுல், தோட்டங்களிலே தொழிலாற்றுதற்குத் தென்னிந்தியத் தமிழர்களிலேயே தங்கியிருக்க வேண்டியதாயிற்று.[6]

3. தொழிலாளர் வருகை:

3 : 1. ஆங்கிலேயர் கங்காணி போன்ற முகவர்கள் மூலம் தமிழ் நாட்டிலே தொழிலாளர்களைத் திரட்டியதை ''அன்டை நாட்டுத் தமிழினத்தை அன்புடன் அழைத்தாங்க ஆங்கிலேயர்'', ''கங்காணிமார்கள் பல ஆட்களைத் தேடி காலமும் கழித்தார்'' என்று பாடல்கள் குறிப்பிடுகின்றன.

கோப்பிப் பயிர்ச் செய்கைக் காலத்தில் இவர்கள் அழைத்து வரப்பட்டதைக் ''கோப்பி உள்ள காலத்திலே கூட்டிவந்த கங்காணி'' என்னும் பாடலடி தெரிவிக்கின்றது.

3 : 2. நம்பிக்கை வாக்குறுதி:

தென்னிந்தியத் தொழிலாளர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு அவர்களைப் பல வழிகளிலும் திருப்திப்படுத்த வேண்டிய பெரும் பொறுப்பு கங்காணிமார்களிடம் இருந்தது.[7] இந்தியாவில் இருப்பதைப்போல் மட்டுமல்லாமல் அதனிலும் சிறப்பான வருமானமும் சொகுசான வாழ்க்கையும் இலங்கையிற் கிட்டும் என நம்பிக்கை வாக்குறுதிகளை அவர்கள் அளித்தமைக்கு, (அ) ''இந்தியாவிற் போலே நீங்கள் இலங்கையில் வாழ்வீ

ரென்ருர், (ஆ) தேனெழுகப் பேசி நம்மைத் திரட்டி இங்கு (இ) தேயிலேயில் மாசி தேங்காய் தொங்குகிறதென்று (ஈ) எல்லே யில்லாப் பல ஆசை காட்டி நம்மை ஏமாற்றி இலங்கைக்குக் கூட்டிவந்த (உ) பாயின்றி பஞ்சணேயில் படுத்து வயிறு பசி யின்றி வாழ்வீர் என்று சொன்னுர்'' என்னும் அடிகள் சான்று கூறுகின்றன.

தொழிலாளரைத் திரட்டும் நிலேயங்கள் திருச்சி போன்ற இடங்களில் நிறுவப்பட்டு அவர்களின் பெயர்கள் பதியப்பட்டன; ஈழநாட்டின் மலேயகத்தின் குளிரையும் மழையையும் தாங்கக் கூடியதாகக் கம்பளி போன்ற பொருள்கள் வழங்கப்பட்டன; இலங்கைக்குப் புறப்படுமுன்னர் மண்டபம் காம்பிலே தடுத்து வைக்கப்பட்டனர். இவ்வரலாற்றுச் செய்திகளே (அ) ''திருச்சி டிப்போ துரையிடத்தில் சேர்ந்து நின்ளுேமே (ஆ) பாழும் குளிர் மழை தாங்கிடவும்…… பேர் பதிந்து கம்பளி ஒன்று நீட்டி (இ) மண்டபம் காம்பிலே ஏழு நாள் போட்டு'' என்றவாறு பாடலடிகள் தெரிவிக்கின்றன.

3 : 3. மலேயக யாத்திரையும் காட்டை அழித்தலும்:

தோட்டங்களிலேயே தொழிலாளர்களின் உறைவிடங்க ளாக ஆட்டுப் பட்டிகள்போல லயம்கள் கட்டப்பட்டன; என் ணற்ற குடும்பங்கள் இவற்றில் வசிப்பதற்கெனப் பல காம்பருக்க ளாக இவை பிரிக்கப்பட்டிருந்தன. இதனேப் ''புல்லயத்தைக் கண்டோமே, அரையரையாக் காம்பிருக்கள் ஆட்டுப்பட்டியைப் போல்'' என்று தனிப்பாடலடி விவரிக்கின்றது.

காட்டை அழித்து, காணு வெட்டி மலேயகத்தைப் பயிர்ச் செய்கைக்குத் தயார்நிலேப்படுத்துவது ஆரம்ப காலங்களில் ஆண் களுக்குரிய வேலேயாக அமைந்திருந்தது. அலவாங்கும், கோடாலி யும் இப்பணிக்கு ஆயுதங்களாகப் பயன்படுத்தப்பட்டன. இவற்றை (அ) ''அலவாங்கு தானெடுத்து மலேமேல் ஏரி, அறுப தடி காணுவெட்ட அளந்துபோட்டாங்கள் (ஆ) கோடாலி எடுத்துக் காடுகளே அழித்து, (இ) காடுவெட்டி நொந்தாங்க'' என்று தனிப்பாடல்கள் தெரிவிப்பதுடன் தொழிலாளர்கள் வனவிலங்குகளின் அபாயத்தை எதிர்நோக்க வேண்டியிருந்ததை ''காட்டானே புலி கரடியைக் கண்டு பயந்தோமே'' எனவும் குறிப்பிடுகின்றன.

3 : 4. உழைப்புத் திறன்:

தென்னிந்தியத் தோட்டத் தொழிலாளர் தம் உழைப்பின் திறனேயும், கடும் உழைப்பினேயும், உழைப்பினுல் இலங்கை

எய்தும் பெரும் பயனையும் பற்றித் தெளிவான சிந்தை கொண்ட வர்களாய்க் காணப்பட்டனர். (அ) "காலை முதல் மாலை வரை கடும்பசியால் உழைத்துக் களனிகளாக்கியதும் தமிழன் (ஆ) தென்னிந்தியன் கைத்திறமை தேயிலை ரப்பர் தோட்டமையா (இ) ஏற்றுமதி இறக்குமதி இந்தியன் கைவேலை (ஈ) காப்பி, ரப்பர், தேயிலை நாட்டி" என அமைந்த பாடலடிகள் ஈழத்தின் பொருளாதார மேம்பாட்டிலே தென்னிந்தியத் தமிழர்களின் முக்கியத் துவத்தை அறைவனவாகும்.

3 : 5. வேலை ஒழுங்கு:

தொழிலாளர் நாளாந்தம் காலையில் ஐந்து மணிக்கே எழுந்து கஞ்சியைக் குடித்துவிட்டுத் தொழிற்சாலைக்குச் சென்று இருள் மறையுமுன்னரே வரிசையாய்ச் சென்று நிற்பர். அங்கு அவரவர்க்குரிய வேலை ஒழுங்குகளைக் கங்காணி அறிவிப்பான். கொழுந்து பறிப்பது மட்டுமல்லாமற் புல் வெட்டுவதும் தொழிலாளரின் வேலையாக அமைந்திருந்தது. நாளாந்தம் நடைபெறும் இந்த வேலை ஒழுங்கினைப் பின்வரும் பாடலடிகளின் மூலம் அறியலாம்: (அ) "ஆறுமணி யாகுமுன்னே அடிச்சிடுவான் சங்கு (ஆ) விடியுமுன்னே பிரட்டுக்களம் வரிசையிலே நின்று (இ) முறைத்து நின்று கண்டக்கையா கிழித்து துண்டு கொடுத்து பத்தாம் நம்பர் உச்சிமலை பதறிப்போ என்று (ஈ) நெரையை புடிங்க (உ) அரும்பை ஒதுக்கி கொழுந்தை எடுத்து வளந்த வாதை ஒடிங்க (ஊ) பள்ளம் மேடும் ஏறுறதும் புல்லு வெட்டிச் சாகிறதும்". தொழிலாளரின் சேவை இன்றியமையாததாய் இருந்ததினால் அவர்கள் வேலைத்தலங்களைவிட்டு நீங்க முடியாத நிர்ப்பந்தங்களுக்கானதை "ஓடிப்போன ஆட்களுக்கு வாரண்டு விதிப்பார்" எனும் அடிகள் மூலம் தெளிந்து கொள்ளலாம்.

4. தொழிலாளர் பிரச்சினைகள்:

4 : 1. தோட்டத் தொழிலாளர் அழைத்துவரப்பட்ட ஆரம்பகாலங்களில் இருந்தமைக்கு மாறாகக் கடந்த பத்து ஆண்டுக் காலங்களில் வேலையில்லாத் திண்டாட்டமும்; விலைவாசி உயர்வும் முக்கிய பிரச்சினைகளாக இடம்பெற்று வருகின்றன. இவற்றின் காரணத்தால் அவர்களின் வாழ்வில் வறுமை அணைத்து வாட்டியது. (அ) "ஆளுக்குறைப்பு (ஆ) வேலை இல்லா திண்டாட்டத்தால் வறுமை வாட்டுது (இ) அரிசி பருப்பு விலை விசம்போல் எப்பிடி ஏறுது (ஈ) சாமான் விலை கடைகளிலே சர்ப்பம்போலே ஏறுது" எனும் அடிகள் இதனைத் தெளிவாகக் காட்டுகின்றன.

4 : 2. தொழிலாளர்கள் தமது உழைப்புக்கேற்ற கூலியைத் தாம் பெறவில்லை என்பதை உணர்ந்தனர். தோட்டங்களில் வேலை நாட்களும் குறைக்கப்படவே கிடைத்துவந்த சொற்ப வருமானமும் பெறமுடியா நிலை ஏற்பட்டது. (அ) ''ஓயா உழைப்புழைத்துக் கூலி கிடைக்கலே (ஆ) சமத்துள்ள தொழிலாளர்களுக்கு சம்பளங்கள் ஏறலே'' எனும் பாடலடிகள் இதனை எடுத்தியம்புகின்றன.

வறுமையும் பட்டினியும் தோட்டத் தொழிலாளரின் வாழ்வில் இரண்டறக் கலந்த அமிசங்களாயின. பரம்பரை பரம்பரையாக இத்தகைய இன்னல்களை அனுபவிக்கலாயினர். (அ) ''சோறு தண்ணி இல்லாமே தொல்லையும் பட்டோம் (ஆ) பரம்பரையாய் பாடுபட்டு பட்டினி கிடந்து சம்பாரித்து (இ) மாடு போல உழைத்திடவே மனித பொம்மை யானேமையா'' எனும் அடிகள் இதனைத் தெளிவாக உணர்த்துவதுடன் பின்வரும் பாடலடி அவர்கள் கடனாளிகளாக வாழ்ந்ததையும் குறிப்பிடுகின்றது: ''காலமெல்லாம் உழைத்துழைத்துக் கடனாளியானேம்''.

5. அதிகாரிகள் கங்காணிகள் அட்டூழியம்:

5 : 1. பட்டினியும் வறுமையும் ஒருபுறம் வாழ்க்கையை வாட்டுகையில், மறுபுறம் தோட்ட முதலாளிகளினதும் தொழிலாளர்களை மேற்பார்வை செய்துவந்த கங்காணிகளினதும் அட்டூழியங்களும் அடக்கமுடியாவகையிலே தலைதூக்கி நின்றன. தொழிலாளி முதலாளி நல்லுறவு பேச்சளவிலேயே இருந்ததை (அ) ''பாட்டாளி வர்க்கமெல்லாம் கூட்டாளி என்று சொல்லி மூட்டை கட்டி பதுக்கிறாரே'' எனத் தனிப்பாடலடி தெரிவிக்கின்றது. முதலாளிகள் தமது செல்வச் செழிப்பான வாழ்வுக்காகத் தொழிலாளர்களை மனிதாபிமானத்தோடு மதிக்காது இயந்திரங்களாக உழைக்கவைத்ததை (அ) ''மனிதாபிமானத்தோடு மதிக்கின்றாரா நம்மை (ஆ) இந்தியர் எல்லாம் இயந்திரமாக்கி இஷ்டம்போல நடத்துராரே (இ) தொழிலாளியின் உழைப்பாலே உயருகிறார் முதலாளி'' என்ற பாடல்களின் அடிகளால் அறியலாம்.

5 : 2. தமது சுய இன்பங்களுக்காகப் பெண் தொழிலாளர்களைத் துரை கங்காணி போன்ற அதிகாரிகள் பயன்படுத்தி வந்தனர். தமது குடும்பத்தைக் காப்பாற்றுதற்குத் தோட்டங்களிற் பணியாற்றச் சென்ற மாதர்கள் உழைப்பை மட்டுமல்லாமல் தமது கற்பையும் இழக்கவேண்டிய பயங்கர நிலையிலே தொழிலாற்ற வேண்டியிருந்ததை (அ) ''ஒண்டியான சின்னத்

துரை பெண்களைக் கற்புமே யழிப்பார், (ஆ) கனிவாகப் பேசுறதும் கற்பைச்சூறை யாடுவதும்'' என உலகுக் குணர்த்து கின்றன தனிப்பாடல்கள்.

5 : 3. தோட்டங்களிலே தொழிலாளர்களுக்குப் பெயர் போடுவதும், பெரட்டுக் கலைப்பதும், வேலை மேற்பார்வை யிடுவதும், குறித்த நேரத்தில் அவர்களது வேலையை முடிப்பதும், சம்பளம் கொடுப்பதும் கங்காணிகளின் கடமைகளாயிருந்தன. தோட்டத் தொழில் அமைப்பிற் கங்காணி முக்கிய இடத்தை வகித்ததால் இம்முறை மாற்றியமைக்க முடியாதவாறு முக் கியத்துவம் பெற்று விளங்கிற்று.[8] கங்காணி தொழிலாளருடன் கடுமையாக நடந்துகொண்டதை (அ) ''அநியாயம் செய் யறதும் நீங்க, லயத்துக்கு அடித்துத் துறத்தறதும் நீங்க'', (ஆ) ''கங்காணி மாருடன் மலையிலே கரச்ச'' என்னும் அடிகள் தெரிவிக்கின்றன. கொழுந்தின் எடையினைக் கங்காணி குறைத்துக் குறித்தற்கு (அ) ''கொழுந்தைக் குறைக்கிறதும், (ஆ) மாருட் டம் செய்யறதும்'' என்னும் பாடலடி ஆதாரமானது.

6. உரிமை இழப்பு:

6 : 1. இலங்கையும் இந்தியாவும் பிரித்தானிய ஆட்சியில் இருக்கும்பொழுதே தொழிலாளர் திரட்டிவரப்படலாயினர். ஆரம்பகாலத்தில் இவர்கள் வாக்குரிமை பெற்றிருந்ததை ''இந்தியர்க்கு அகமகிழ்வோடு அரசியலில் வாக்குரிமை அளித்து வந்த நாடு'' எனத் தனிப்பாடல் குறிப்பிடுகின்றது. பின்னர் வாக்குரிமை, நாட்டுரிமை, குடியுரிமை அனைத்தும் இழந்தவர்க ளாக்கப்பட்டனர். இந்தியனே வெளியேறு எனும் கோஷங்கள் எழுப்பப்பட்டன. தமக்கு வாழ ஒரு நாடு இல்லையே என்ற ஏக்கம் தொழிலாளரிடையே குடிபுகுந்தது. இதனையே (அ) ''உரிமை இல்லை என்று சொல்லிச் சட்டம் பேசுரார், உன் னூருக்குப்போ என்று சொல்லி வழியைக் காட்டுரார் (ஆ) தங்க நாடு இல்லாமல் தவிப்பதை (இ) பிழைக்க வந்தோம் என்று சொல்லி பிரசா உரிமை மறுக்கிறார் (ஈ) உழைக்கும் தொழி லாளிக்கு உரிமையை மறுப்பதால் (உ) பாட்டன் பூட்டன் பிறந்த இடம் கேட்டு, பதில் கூற தயங்கியதால் நிராகரித்துப் போட்டு, ஓட்டுரிமை, நாட்டுரிமை, குடியுரிமையெல்லாம் ஒரே யடியாய் நமக்கில்லை என்று கூறி, (ஊ) தேனெழுகச் செய்த வரை தென்னிலங்கை சீறுதையா'' என்றவாறு தனிப்பாடல்கள் தெரிவிக்கின்றன.

6 : 2. பழிச்சொல்:

உரிமைகள் இழக்கப்பட்ட நிலையில் இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் நாடற்ற பிரசை, அகதி, கள்ளத்தோணி

எனும் பழிச்சொற்களுக்காளானது வரலாற்று உண்மை. இதனைத் தனிப்பாடல்களில் (அ) "நாடற்ற பிரஜையென நாமமது சூட்டி, (ஆ) ஐந்தேகால் லட்சம் பேர் அகதி எனக் கொண்டு, (இ) கள்ளத்தோணி என்று நம்மை பல்லைக் கடிக்கிறார்" என்றவாறு காணக்கூடியதாயுளது.

7. உலகத் தொழிலாளர் ஒற்றுமை:

உள்நாட்டில் "தங்கி வாழும் நாட்டிலே ஷேமமாக வாழ ணும்" என்றும், "சமமாக வாழ்ந்திடவே தடையும் விதிக் கிறார்" எனவும் சம உரிமைக் குரல் எழுப்பிய தொழிலாளர்கள் தாம் பாரெங்கும் பரந்த தொழிலாள வர்க்கத்தின் அங்கம் என்பதை உணர்ந்து உலகத் தொழிலாளர்களின் கடப்பாட்டினை வலியுறுத்தியும் நினைவூட்டியும் வரலாயினர்.

(அ) பாட்டாளி மக்களெல்லாம் பஞ்சத்தைப் போக்கணும்
பாரினில் ஒன்றுகூடிப் பாகுபாட்டை நீக்கணும்.

(ஆ) பாமர மக்களெல்லாம் பகைமையை மறக்கணும்
உலகத்தொழி லாளரெல்லாம் ஒன்றுகூடி வாழணும்.

எனும் பாடலடிகள் இதனை வெளிப்படுத்துகின்றன. தொழி லாளரிடை மட்டுமன்றி உலகில் வாழும் மக்களிடையேயும் வேறுபாடு காட்டப்படலாகாது எனும் உள்ளக்கிடக்கையினையும் உயர் நோக்கினையும் "உலகில் பலவர்ண உள்ளபடி மனிதர் கூட்டம் ஒருவன் படைப்புத்தானே மனிதா" எனும் பாட லடியிற் காணலாம்.

8. தொழிற்சங்கங்களும் தொழிலாளரும்:

இலங்கை இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயகத் தொழிலாளர் காங் கிரஸ், லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன், இலங்கைத் தொழிலாளர் கழகம் போன்ற பல தொழிற்சங்கங்களில் அங்கத்துவம் வகிக்கின்றனர். (அ) "ஒன்றல்ல இரண்டல்ல தோழர் சங்கம் (ஆ) ஆளுக்கொரு அரசு கச்சி (இ) தோமாசு இருளப்பன் தொரைக்கச்சி யாச்சு தொங்க தோட்டக் கருப் பாயி இலங்கைக் கச்சி யாச்சு" எனும் பாடலடிகள் தொழி லாளர்கள் கட்சிகளிடையே பிளவுபட்டிருந்ததைக் கூறுகின்றன.

கட்சிகளில் உறுப்பினரைச் சேர்த்தற்கு மதுபானம் பயன் படுத்தப்பட்டதை, "குடிக்கவிடும் பழக்கமதைக் கொண்டு வேலைக்காட்டில் கச்சிகட்ட" என்ற பாடலடி எடுத்தியம்பும்.

மலையகத் தொழிற்சங்கங்களின் கொள்கைகளிலும் அடிப்படை வேறுபாடு காணப்பட்ட செய்திகளை (அ) ''கச்சிகளைப் பிச்செடுக்கும் லட்சியங்களாச்சு (ஆ) நம் தலைவரெல்லாம் தனித் தனியாய்ப் படுத்துறங்குகிறார் (இ) போங்க இந்தியா எங்குது ஒரு கச்சி—இல்லை—போகவேண்டாமிங்குது மறுகச்சி'' என்றவாறு தனிப்பாடல்களிற் காணக்கூடியதாயுள்ளது.

9. சமூகப் பிரச்சினைகள் :

பொருளாதார அரசியற் பிரச்சினைகளுக்கு மத்தியிற் பிற பெண்கள் தொடர்பான சமூகப் பிரச்சினைகளும் தலைதூக்கியதைத் தனிப்பாடல்கள் தெரிவிக்கின்றன. பெற்றோருக்கு மாறாக இளவயதினர் பெண்களுடன் உறவு வைத்திருந்ததை (அ) ''பாலரெல்லாஞ் சிறுவயதில் பருவமாகுமுன்னே காதலாகிறார் சொந்த தந்தை அன்னையை மறந்து ஓடுகிறார்'' என்று தெரிவிக்கின்றது தனிப்பாடல்.

சொந்த மனைவியை வெறுத்துப் பரத்தையருடன் நட்புக் கொள்வதும் மலையகத்திற் காணப்படுவதைப் ''பரத்தையரைக் கூடி வீணாய்ச் சாகிறார்'', ''குடித்தன சொந்த மனையாளைத் தூற்றிப் பேசுகிறாய்'' எனும் அடிகளிற் கண்டுகொள்ளலாம்.

பெண்களோடு உறவாடியபின் அவர்களைக் கைப்பிடிக்கத் தவறும் ஆண்கள் குடும்பத் தொல்லைகளாலே தற்கொலை செய்த சம்பவங்களையும் (அ) ''ஆவலுடனே அணைத்து ஆசையெல்லாம் தீர்ந்த பின்பு நேசமுடன் கூடிவாழ மறுக்கிறார். குடும்ப நிர்ப்பந்தங்களா லுயிரைத் துறக்கிறார் (ஆ) காதல் இச்சையெல்லாம் தீர்ந்தபின்பு மாறுகிறார்'' என்றவாறு தனிப்பாடல்களிற் காணக்கூடியதாயுள்ளது.

10. வரலாற்றுச் செய்திகள் :

தோட்டத் தொழிலாளர்கள் இந்தியர்களென ஒதுக்கப்படவே, பெரும்பான்மை இனமாகிய சிங்களவர்களின் மூதாதையர்களும், அவர்களுக்கு முற்பட்ட நாகர் இயக்கர் போன்றோரும் இந்தியாவில் இருந்தே இலங்கைக்கு வந்தனர் எனும் எண்ணப்பாங்கு தொழிலாளர்களிடம் உதிக்கலாயிற்று. இதன் காரணத்தால் இலங்கை இந்தியத் தொடர்பான வரலாற்றுச் செய்திகளும் தனிப்பாடல்களில் இடம்பெறலாயின. பாடல்களில் விஜயன் மகிந்து போன்றவர்களின் வருகையும், புனித அரசமரம் கொண்டுவரப்பட்ட செய்தியும், மலையகத்திலே தலதா மாளிகையிற் புத்தரின் தந்தம் இடம்பெற்றமையும் பேசப்படுகின்றன.

(அ) ''நாகரும் இயக்கரும் இந்தியர்தானையா (ஆ) வங்க தேசத்தின் சிங்கபாகு மகன் இந்தியர்தானையா (இ) தமிழ் நாடு தன்னில் விஜயனும் பெண்ணெடுத்தார் (ஈ) வீர பராக்கிரமபாகு மன்னனும் பாண்டின் குலமையா'' எனும் பாடலடிகளில் இத்தகைய பண்டை வரலாற்றுச் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

11. இழப்பு:

தொழிலாளர்கள் உறவினர்களை மட்டுமல்லாமல் உழைத் ததையும் இழந்து கடனாளிகளாகக் காலங்கழித்தனர். தமி ழகத்திற்குச் செல்லும் தொழில்லாளர்கள், இருக்கின்ற பொருள் களை விற்றுப் பணமாக்கினர். உரிய உடைகள் இன்றி வாடினர்.

(அ) ''தோட்டக்காட்டில் அவதிப்பட்டு மடிந்தாங்க (ஆ) கட்டவும் துணியின்றி கடல் பயணமாச்சு (இ) மாடு கன்றுகளை விற்றுவிட்டோம்...... வீட்டு மரச்சாமான்களும் விற்று விட்டோம் (ஈ) காசு பணம் தேடவந்து கடனாளியா ஆகி விட்டு'' என அமைந்த பாடலடிகளில் மேற்குறித்த தகவல்களைக் காணலாம்.

12. சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தம்:

குடியுரிமை, வாக்குரிமை அற்றிருந்த தோட்டத் தொழி லாளரின் நூற்றுண்டுகாலப் பிரச்சினையைத் தீர்ப்பதாய்ச் சிறிமா— சாஸ்திரி ஒப்பந்தம் உருவானது. இதனடிப்படையில் சட்டங் களும் இயற்றப்பட்டன. ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தமிழ்நாடு திரும்பவேண்டிய நிலையை இந்த ஒப்பந்தம் உருவாக்கிற்று. (அ) ''சட்டமதை வகுத்திந்த நாட்டு மந்திரிகள், சாஸ்திரியைக் கண்டுஒரு கூட்டு ஒப்பந்தம் (ஆ) அஞ்சயகா லட்சம்பேரும் அந்தக் கரைக்கு (இ) சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தால் சீமைதேசம் போவோம்'' எனும் தனிப்பாடலடிகளில் இவ்விவரங்களைக் காணக்கூடியதாயுள்ளது.

பல தலைமுறைகளாக மலையகத்தில் வாழ்ந்து இந்திய நாட்டையே அறியாத தொழிலாளப் பெருங்குடி மக்கள் இந்தியா செல்லவேண்டிய புதிய யாத்திரையை வியப்போடு சிந்தித்ததை, (அ) ''இந்தியா நாடே தெரியாது அங்கே என்ன வேலை செய்வதென்று புரியாது, (ஆ) எப்பவோ வந்தது எலங்கைக்கு இதில் ஏழெட்டுத் தலைமுறை முடிஞ்சிருச்சு'' எனும் பாடலடிகளிற் காணலாம்.

13. புதிய நம்பிக்கைப் பயணம்:

சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தம் ஏற்பட்டவிடத்து இந்தியா செல்வதா இலங்கையிலே தங்குவதா என்பதைத் திடமாகத் தீர்மானித்துக்கொள்ள முடியாத மனநிலையினராய்த் தோட்டத் தொழிலாளர் இருந்தனர். எண்ணற்ற இன்னல்களுக்கிடையிலும் இலங்கையிலேயே வாழ்ந்து மடியவேண்டும் என்ற எண்ணமும் முன்னர் இருந்துவந்தது.

எனினும், புதிய நம்பிக்கையோடு பாரத நாட்டுப் பயணத்தை மேற்கொள்ளும் காலமும் வந்தது. ''இன்னல் பட்டுச் சாகவேணும் என்று சொன்ன காலமும் போச்சு'' என்று மகிழ்ந்து, ''நம்ம காலமெல்லாம் காத்திருந்த நாளும் வந்தாச்சு'' எனப் பயணநாளை வரவேற்றதைத் தனிப்பாடல்கள் குறிப்பிடுகின்றன.

''தேயிலைத் தூரிலே தேங்காய் மாசி'' எனத் தேனெழுகும் வார்த்தைகளை நம்பி வந்த தோட்டத் தொழிலாளர்கள் மரண யாத்திரை மேற்கொண்டு ''அரிய நடை'' நடந்து மலையகத்தில் நூற்றைம்பது ஆண்டுக்காலம் வாழ்ந்து தற்பொழுது தாயகம் பயணம் மேற்கொள்ளும் கட்டத்தில் இருக்கும் இன்றைய நிலையில், தமிழகத்தின் அன்புக்கரம் நீட்டும் ஆட்சியாளரிடமும் நம்பிக்கை வைத்துள்ளமையை, ''தேடி நமை ஆட்கொண்டு தேடுவார் மீனாட்சி'' எனும் மலையகத் தனிப்பாடலடியிலே காணக்கூடியதாயுள்ளது.

இவற்றிலிருந்து இலங்கை இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் வரலாற்றிற்கு முற்கூறிய வரலாற்று ஆதாரங்களைப்போல, மரபு வழிப்பட்ட ஆதாரங்களாகிய தனிப்பாடல்களுக்கும் தனிச் சிறப்பிடமுண்டென்பதை நாம் தெளிந்து கொள்ளலாம்.

அடிக்குறிப்பு:

1. க. நவசோதி: நாட்டுப்பாடலில் மலைநாட்டு வரலாறு, பக்கம். 4. புத்தொளி வெளியீடு, கொழும்பு, 1968.
2. ஜி.எல். கோம்: சமய அறநூல் அறிவுக் களஞ்சியம், தொகுதி 6, பக். 58, நியூயோர்க், 1955.
3. மகாகவி பாரதியார்: கவிதைகள்—'கரும்புத் தோட்டத்திலே', பக்கம் 81, சக்தி காரியாலயம், சென்னை, 1958.

4. (I) ஸி. வி. வேலுப்பிள்ளை: தேயிலைத் தோட்டத்திலே, செய்தி பதிப்பகம், கண்டி, 1969.

   (II) காசி ஆனந்தன்: தமிழா உன்னைத்தான், பக்கம் 1, படைஞர் பாசறை, கொழும்பு, 1970.

5. எமெர்சன் ரென்னர்: கண்டியில் கோப்பிப் பயிர்ச் செய்கையும் அதனது விளைவும். தொகுதி-11, பக்கம் 96. இலண்டன், 1859.

6. ஹென்றி கேவ்: இலங்கையும் அதனது தேயிலைத் தொழிலும், பக்கம் 184, இலண்டன், 1900.

7. மேற்படி நூலின் பக்கம் 182.

8. தொழிலாளர் ஆணைக்குழு அறிக்கை 1908. பக்கம் IX, கொழும்பு, 1908.

ஆராயப்பட்ட தனிப்பாடல் நூல்கள் :

1. சாமிநாதன் எஸ்., தோட்டத் தொழிலாளியின் குரல், மஸ் கெலியா.

2. ரெங்கநாதன் கா. சி., கட்சி நிலையும் கப்பல் பயணமும் (இரண்டாம் பதிப்பு)
   கூட்டுப் பதிப்பாளர்: மா. குரு. வேல்முருகதேவர், கண்டி, பிலவங்க மார்கழி.

3. பெரியாம்பிள்ளை எஸ். ஆர்., பாட்டாளியின் பயணம், பதிப்பாளர்: வி. இராமசாமி, நோர்வூட், 1968.

4. வெள்ளைச்சாமி அ. செ., பாட்டாளியின் பாடலும் சரசுவின் கணவன் பழனியின் மரணதண்டனையும், உலப்பனை, 1968.

பாளி சிங்கள இலக்கியங்களுடன் தமிழ் இலக்கிய உறவு

த. கனகரத்தினம்

சிங்கள மொழிக்கும் பாளி மொழிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இவ்வாறே சிங்கள மொழிக்கு, சமஸ்கிருத மொழியுடனும் தமிழ் மொழியுடனும் தொடர்பு உண்டு. சிங்கள இலக்கியம் முதலிலே பாளி மொழியின் அணைப்பிலும், பின்னர் சமஸ்கிருதத்தின் மடியிலும் தவழ்ந்து படிப்படியாக வளர்ந்து தமிழ் அன்னையின் பராமரிப்பிலும் நீண்டகாலம் இருந்திருக்கிறது. இவற்றிற்குச் சிங்கள இலக்கிய வரலாறுகளும் சரித்திர வரலாறுகளும் சான்று பகருகின்றன. இப்பொழுதுள்ள பழைய சிங்கள இலக்கியங்கள் அருகர் மகிந்தரின் காலத்துக்குப்பின் ஆக்கப் பட்டனவெனக் கருதப்படுகின்றன. அருகர் மகிந்தரின் சீடர்களினது வருகை இலங்கையிற் பௌத்தசமயத்தைக் கற்கவேண்டுமென்ற ஒரு விழிப்பை உண்டாக்கியது. இதனுற் பாளி மொழியிலிருந்த திரிபிடகமும் அட்டகதாக்களும் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டன. மகா அட்டகதா, மகா பச்சரி அட்டகதா, குருந்தி அட்டகதா என்ற மூன்று அட்டகதா விளக்கவுரைகள் பாளியிலிருந்து சிங்களத்திற்கு மொழிபெயர்க்கப்பட்டன. கி. பி. 5ஆம் நூற்முண்டில் இலங்கைக்கு வந்த புத்தகோசதேரர், புத்ததத்த மகாதேரர் ஆகியோர் இவ் விளக்கவுரைகளை மீண்டும் பாளிக்கு மொழிபெயர்த்தனர். இவ்வாறு சிங்களமும் பாளியும் பௌத்த மதத்தைப் போதிக்கும் சிறந்த இலக்கியங்களைத் தந்துள்ளன. பௌத்த மதத்துடன் தொடர்புபட்டவகையிற் பாளி, நீதி இலக்கியத்துறைக்கு மிகுந்த பணி செய்துள்ளதெனக் கூறலாம்.

பாளியின் செல்வாக்கு:

அக்காலத்திற் பிக்குகளிடம் கல்விபயின்ற குருமாரும் பொது மக்களும் பாளியைக் கற்றனர். பௌத்தசமயம் தூயதாய்

விளங்கிய அநுராதபுர காலத்திலே புத்தமதத்தினர் பாளி மொழிக்கு மதிப்பு அளித்தனர். அந்தவகையிற் பௌத்தமத நூல்களாய திரிபிடகத்தையும் விளக்கவுரைகளையும் பாளி மொழியிலே கற்பதிலும் ஆர்வம் காட்டினர். அக்காலக் கல்வி யின் நோக்கம் பாளி நூல்களைக் கற்றல் என்று கூறினும் மிகை யாகாது. பின்னர் ஏற்பட்ட அரசியற் குழப்பங்களாற் சிங்கள விளக்கவுரைகளும் ஏனைய நூல்களும் அழிந்தொழிந்துபோயின. பாளி மொழியும் இலக்கியமும் சிங்கள இலக்கியத்தின்மீது செல்வாக்குப் பெற்றிருந்தனவென்பது பல்வகைச் சான்றுக ளாலும் இன்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

பாளி சிங்கள நூல்கள் வெளியிடப்பட்ட அதேகாலத்தில் வடமொழியைக் கற்பதிலும் ஆர்வங்காட்டிய பகுதியினர் இருந்தனர். அபயகிரிக் கட்சியைச் சேர்ந்தோரும் வைதுல்ய வாதிகளும் வைதுல்ய வாதத்தை வடமொழி மூலம் கற்றனர். குச்சவெளி, திரியாய், ஜேதவனாராம என்னும் இடங்களிலுள்ள வடமொழிக் கல்வெட்டுக்களும், மிகிந்தலையிற் கண்டெடுக்கப் பட்ட மகாயான தத்துவ நூல்களும், இந்திக்கட்டு சாயச் செப்பேடுகளும், திரிகாயஸ்தவக் கல்வெட்டுக்களும் இலங்கையில் வடமொழி கற்கப்பட்டதென்பதைத் தெரிவிக்கின்றன.

பழைய காலந்தொட்டு தத்துவவிளக்க நோக்கங்கட்காகப் பாளி இலக்கணமும் இலக்கியமும் பயன்பட்டன. அத்துடன் நீதிகளையும் எடுத்தோதின. ஆனால், வடமொழி உலகியல் நோக்கங்கட்காகப் பரந்துபட்டமுறையிற் பயன்பட்டது. ஆகவே, இவ்விரு மொழிகளின் இலக்கண இலக்கியம் சிங்கள இலக்கியத்திற் செல்வாக்குப் பெற்றிருந்தன. இச் செல்வாக்கு மொழியில் மட்டுமன்றி, எழுதப்படும் பொருள், நடை என்ப வற்றிலும் காணப்படுகின்றது.

பாளிமொழி இன்று வழக்காறு இழந்துவிட்டது. பண்டைக் காலத்தில் வட இந்தியாவில் மகதம் முதலான தேசங்களில் அது வழக்காற்றில் இருந்து வந்திருக்கின்றது. புத்தசமயத்தைப் பரப்பிய கௌதமபுத்தர் இந்தப் பாளி மொழியிலேதான் தம் உபதேசங்களைப் பொதுசனங்களுக்குப் போதித்துவந்தார். அவரது போதனைகளைக் கொண்ட திரிபிடக நூல்களும் பாளி மொழியிலேயே எழுதப்பட்டிருக்கின்றன. மகத நாட்டில் வழங்கப்பட்டமையாற் பாளிமொழிக்கு 'மாகதி' என்னும் பெயர் உண்டு. வைதிக மதத்தாருக்குச் சமஸ்கிருதம் தெய்வ மொழியாக இருப்பதுபோல், பௌத்தர்களுக்கு மாகதி என்னும் பாளிமொழி தெய்வமொழியாக இருந்துவருகின்றது. தென்

னிந்தியா, இலங்கை, பர்மா ஆகிய இடங்களில் வாழ்ந்த பௌத்தர்கள் பாளிமொழியையே தங்கள் தெய்வ பாஷையாகக் கொள்கிறார்கள். தமிழ்நாட்டிற் பௌத்தமதம் பரவிய காலத்தில் அந்த மதத்திலே தெய்வபாஷையான பாளிமொழியும் இடம் பெறுவதாயிற்று. இன்றும் பௌத்த பிரசங்கங்களிற் பாளி மொழிப் பாடல்கள் முக்கிய இடம் வகிக்கின்றன.

பாளிமொழி தமிழ்நாட்டில் இடம்பெற்றிருந்தாலும் தமிழ் நாட்டுப் பௌத்தர்கள் அந்த மொழியைப் பேசிவந்தார்களென்று கருதுவதற்கு இடமின்று. பாளி இலக்கியங்களில் வரும் பல தத்துவங்களும் நீதிகளும் தமிழ் இலக்கியங்களிலும் வருகின்றன. மணிமேகலை, குண்டலகேசி, விம்பசாரகதை ஆகிய தமிழ் இலக்கியங்களிலே, பௌத்தசமயக் கருத்துக்கள் நிறைய வருகின்றன. இந்நூல்கள் பௌத்தர்களால் இயற்றப்பட்டமையினாற் புத்தரின் பௌத்தமதக் கருத்துக்களும் இந்நூல்களில் இடம்பெற்றுள்ளன.

''பிறவிகள் பல உள. இவை மாறிமாறிச் சுழன்று சுழன்று தோன்றுகின்றன'' என்பது புத்தரின் கொள்கையாகும். ''உலகமே துன்பமயம், அதிலிருந்து ஒருவன் விடுபடுவதே நிர்வாணம். ஆதலால், பிக்குகள் துக்கம், துக்கநிவாரணம், துக்க உற்பத்தி, துக்க நிவாரண மார்க்கம் என்ற நால்வகை வாய்மைகளையும் கடைப்பிடிக்கவேண்டும்'' என்று புத்தமதம் கூறுகிறது.

மணிமேகலையிற் பின்வரும் தொடராலும் இதனை அறியலாம்:

''பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
அற்றோர் உறுவது''

இப்பிறவிபற்றித் திருவள்ளுவரும் தமது தெய்வத் திருக்குறள் நீதிநூலில்,

''பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்.''

(அறத்துப்பால்—குறள் 10) என்றும்,

''பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.'' (துறவு—குறள் 10)

என்றும் ஒத்த பொருள்தருமாறு கூறியிருத்தல் ஒப்பிட்டறியற்பாலனவாம். பிறவி என்பது பெருங்கடல்; பற்றுத்தான் பிறவிக்குக் காரணமாகிறது. பற்று அற்றவர் பேரின்பத்தைப் பெறுவர்.

பற்று அறுதலுக்கும் பற்று அற்ற இறைவன் துணைவேண்டும்; பிறவிக் கடலைக் கடத்தற்கு இறைவன் பாதங்கள் தெப்பமாக உதவுகின்றன என்ற கருத்துக்கள் எம்மைச் சிந்திக்க வைக்கின்றன.

மேலும், இவ்வுலகில் உள்ள பொருள்கள் அனைத்தும் அநித்திய மானவை, யாவும் நிலையற்றவை; மிகவும் நெருங்கியுள்ள பொருள்களினின்றும் நாம் நம்மை விலக்கிக்கொள்ளவேண்டும் என்பது புத்தரது தலையாய கொள்கை.

அதே கருத்து,

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்" (துறவு—குறள் 1)

என்ற திருக்குறளிலும் பொருள்கள்மீது பற்று இல்லாதவனுக்குத் துன்பம் இல்லை என அமைந்திருத்தலைக் காணலாம்.

பௌத்தர்கள் நாடோறும் ஓதும்,

புத்தம் சரணம் கச்சாமி
(புத்தரிடம் அடைக்கலம் புகுகிறேன்)

தர்மம் சரணம் கச்சாமி
(தர்மத்திடம் அடைக்கலம் புகுகிறேன்)

சங்கம் சரணம் கச்சாமி
(சங்கத்தினிடம் அடைக்கலம் புகுகிறேன்.)

என்ற பஞ்சசீலத்தில் அடங்கிய நீதிகள் தமிழ் நீதி இலக்கியங்களிற் பரந்துகிடப்பதைக் காணலாம்.

பஞ்சசீலங்களாவன :—

1. எவ்வுயிரையும் கொல்லாமை
2. கள்ளாமை
3. கற்பு நெறியிற் சிற்றின்பம் துய்த்தல்
4. பொய் பேசாமை
5. மயக்கத்தைத் தரும் மதுவகைகளை உட்கொள்ளாமை.

பஞ்ச காவியங்களுட் சிறந்த பௌத்த காவியமாக மணிமேகலை விளங்குகிறது. பாளி—பிடகநூல்களிற் கூறியுள்ள பௌத்தக் கருத்துக்களை அப்படியே தமிழில் மணிமேகலையின் நூலாசிரியர் சாத்தனார் தமது நூலில் அமைத்துள்ளார். மணிமேகலையின் நான்காம் காதையாகிய பளிக்கறைபுக்க காதையில் யாக்கை பற்றிய பௌத்தர்களின் கொள்கையினைப் பின்வருமாறு கூறுகிறார் :

"வினையின் வந்தது வினைக்குவிளை வாயது
புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது
மூப்புவிளி வுடையது தீப்பிணி யிருக்கை
பற்றின் பற்றிடம் குற்றக் கொள்கலம்
புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை
அவலக் கவலை கையா றழுங்கல்
தவலா உள்ளம் தன்பா லுடையது
மக்கள் யாக்கை யிது......"

பௌத்தர் திரிபிடகத்தைத் தமிழில் உரைத்தபோது பாளி மொழிச் சொற்களிற் சில தமிழிற் கலந்துள்ளன. இவ்வாறு நிகழ்தலும் இயற்கையே. இத்தகைய சொற்கள் மணிமேகலை, குண்டலகேசி ஆகிய பௌத்த நூல்களிற் காணப்படுகின்றன. உதாரணத்திற்கு ஆராமம், கருணை, சீலம், உபாசகர், தேரர், தேரி, போதி, விகாரை என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

பாளி இலக்கியங்களில் உலகப் பிரசித்திபெற்ற நூல் தம்ம பதம் என்ற பௌத்த இலக்கியம் ஆகும். ஐரோப்பாவிலேயே முதன்முதற் பிரசுரமான (1855இல்) பாளி நூலும் இதுவாகும். பேராசிரியர் இராதாகிருஷ்ணனுக்கும் இதில் ஈடுபாடுண்டு; அவர் இதற்கு அருமையான மொழிபெயர்ப்புச் செய்திருக்கிறார். இந்தியாவில் வாழ்ந்த வண. என். சோமானந்த என்னும் சிங்களப் பிக்கு ஒருவர் இதனைத் தமிழிலும் (1950இல்) மொழி பெயர்த்திருக்கிறார். இப் பாளி இலக்கியத்தில் வரும் கூடா வொழுக்கம், பேராசை, கோபம், பிராமணம், துறவு போன்ற அதிகாரங்களில் உள்ள கருத்துக்கள் பலவகையிலும் திருக்குறள், நாலடியார் போன்ற நீதிநூற் கருத்துக்களை ஒத்திருப்பதை அவதானிக்கலாம்.

திருக்குறள் நாலடியார் போன்ற நூல்களுக்கு முற்பட்ட காலத்திற் புத்தரினால் அருளிச் செய்யப்பட்ட இத் தம்மபதத்திற் பிராமணர் யார் என்பதை விளக்க ஒரு அதிகாரம் செய்யப் பட்டுள்ளது. "பிராமண குலத்துத் தாயிடம் பிறந்தமையால் ஒருவரைப் பிராமணர் என்று அழைக்கமாட்டேன். அவர் அறவொழுக்கங்கள் அற்றவராயின் பிராமணர் என்ற பெய ருக்கே அருகதை அற்றவர். அறவொழுக்கங்களும் பரிசுத்த குணங்களுமுடைய ஒருவரையே நான் பிராமணர் என்று அழைப் பேன்" என்று புத்தபிரான் கூறுகிறார்.

வசலசூத்திரத்திற் பின்வரும் பகுதியும் இதே கருத்தைக் கூறுகின்றது:

"நஜச்சா வசலோ ஹோதி; நஜயச்சா ஹோதி பிராமணோ
கம்மனு வசலோ ஹோதி; கம்மனு ஹோதி பிராஃமணோ"

"சினம் நீங்கி தன்னளியுடையவராய்ச் சமய அனுட்டானங்களையும் நல்லறங்களையும் பேணி நடப்பவராய், பேராசை நீங்கிய பெற்றியராய் விளங்குபவர் எவரோ அவரையே யான் பிராமணர் என அழைப்பேன்" என்கிறார்.

இக் கருத்துக்களைத் திருவள்ளுவர்,

"பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்."

"அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்."

என்ற குறள்களிற் சிறப்பாக அமைத்து இருக்கிறார்.

போலித் துறவைப்பற்றிக் கூறுகையிலே தலையை மழித்தலும் நீட்டலும் வேண்டா. துறவி வஞ்சியாது பஞ்சப்புலன்களைக் கட்டுப்படுத்தி நல்லொழுக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்: மற்றவர்களை ஏமாற்றுவதற்குப் போலிவேடங் கொள்ளலாகாது என்று தம்மபதம் (சூத்தி. 264) கூறுவதனை,

"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்."

என்று திருக்குறளும் கூறுவதனை ஒப்பிட்டுப்பார்த்தால் நீதி நூற் கருத்துக்களில் ஒற்றுமை நிலவுவது தெளிவாகும்.

பாளி உரையாசிரியர்கள்:

பிற்காலத்திற் பௌத்த திரிபிடகங்களுக்கு விரிவுரை எழுதிய சிறந்த பிக்குகளிற் சிலர் தமிழராகவோ, தமிழ் நாட்டிலிருந்து வந்தவர்களாகவோ இருப்பதையும் நாம் மறந்துவிடலாகாது. இலங்கையில் அநுராதபுரத்திலுள்ள மகா விகாரையிற் றங்கி மதுரார்த்த விலாசனி, அபி தம்மாவதாரம், விநயவினிச்சயம் போன்ற பல விளக்கவுரைகளை எழுதிய புத்ததத்த மகா தேரர் சோழநாட்டிலே உரக புரத்திற் பிறந்த தமிழராவர்; இவர் பாளி மொழியை நன்கு கற்றவர்; பௌத்தர்களுடைய வேதமாகிய திரிபிடகம் முதலிய நூல்களைத் துறைபோகக் கற்றவர்; பாளிமொழியிற் பல செய்யுள்கள் இயற்றியவர். இவர் தாம் இயற்றிய நூல்களிலே தமது பிறந்த நாடாகிய சோழநாட்டையும் காவிரிப்பூம்பட்டினத்தையும் இனிய கவிக

ளில் வர்ணித்துப் பாடியுள்ளார். வஜ்ஜிர போதி என்ற மகாயான பிக்குவும் தமிழரே. இவரும் இவரது சீடர் அமோக வஜ்ஜிர தேரரும் இலங்கைக்கு வந்து அபயகிரி விகாரையிற் சில காலம் தங்கியிருந்தார்கள்.

திரிபிடகத்தின் பல பகுதிகளுக்கு உரையெழுதிய புத்த கோஷமகாசாரியாரும் புத்ததத்த மகாதேரரும் ஒரே காலத்தவர். புத்த கோஷரும் இந்தியாவிலே பிறந்த பிராமணர். பபஞ்சசூதனியில் சம்மாதிட்டிசுத்தத்திற்கு அவர் எழுதிய விளக்கவுரையிற் பாரதப்போரையும் சீதையைக் கவர்ந்துசென்றமையையும் பற்றிக் குறிப்பிடுகிறார். இதனால் அக்காலத்திலேயே பாரதம் இராமாயணம் ஆகிய இரு வடமொழிக் காவியங்களையும் இலங்கையிலுள்ளவர்கள் அறிந்திருந்தனர் என்பது பெறப்படும். பாளி மொழியையும் பௌத்த நூல்களையும் நன்கு கற்றறிந்த தம்மபால ஆசாரியர் சூத்திர பீடத்திற் சில பகுதிகளுக்கு உரையெழுதுகையிற் சிங்களவுரைகளையும் தமிழ் நாட்டுப் பௌத்த பள்ளிகளில் இருந்த பழைய திராவிட உரைகளையும் ஆராய்ந்து விரிவுரை எழுதினார் என்று சொல்லப்படுகிறது. இவ்வாறு பாளி, சமஸ்கிருதம், சிங்களம், தமிழ் என்பவற்றிடையே தொடர்பு உண்டாவதற்கு அக்காலந்தொட்டு பலர் தொண்டாற்றியிருப்பதை அறிஞர்கள் தம் ஆராய்ச்சிகளிற் கண்டுள்ளனர்.

அறநூல்கள்பற்றித் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் குறிப்பிடுகையில், ''அறநூல்கள்—இவற்றில் எல்லாம் புத்தர்கள்—அவர்களைவிடச் சமணர்களின் முயற்சிகளைக் காணலாம். இந்த அறவகை இலக்கியம் தமிழ்நாட்டில் தமிழோடு தமிழாய் இயைந்துவிட்டது. பின்னாளில் தோன்றிய ஔவையார் பாடல்களில் நன்னெறி, நீதிநூல், நீதிநெறி விளக்கம் போன்றவை இந்த நூல்களின் அடிச்சுவட்டில் சென்றவையேயாம்'' என்கிறார்.

சிங்கள தமிழ் இலக்கிய உறவு:

சிங்கள தமிழ் இலக்கிய உறவைப்பற்றி ஆராய்கையிற் சிங்கள தமிழ்க் கவிஞர்களின் தொண்டு, தமிழிலிருந்து சிங்களத்திற்கும் சிங்களத்திலிருந்து தமிழுக்கும் மொழிபெயர்க்கப்பட்ட நூல்கள், இருமொழிக்கும் பொதுவாய் அமைந்த இலக்கியக் கருத்துக்கள், இருமொழிக்கும் பாலமாய் விளங்கிய அறிஞர்களின் தொண்டு என்பனவற்றைக் கருத்திற் கொள்ளலாம். சிங்கள இலக்கிய வரலாற்றுக் காலத்துக்கேற்ப இவ்விலக்கிய உறவு எவ்வாறு வளர்ந்து வந்திருக்கிறதென்பதை ஆராய்தல் பொருத்த

மானதாகும். சிங்கள இலக்கிய வரலாற்றுக் காலத்தை அநுராத புரக் காலம், பொலநறுவைக் காலம், தம்பதெனிக் காலம், குருநாகல் காலம், கம்பளைக் காலம், கோட்டைக் காலம், கண்டிக் காலம், இக்காலம் எனச் சிங்கள இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் வகுத்திருக்கிறார்கள்.

அநுராதபுரக் காலத்திலே தமிழ்ப் பண்டிதர்கள் பலர் வாழ்ந்து தமிழை வளர்த்திருக்கிறார்கள். இக்காலத்திலே தமிழ் மொழி உயர்ந்த நிலையிலிருந்ததென அறியக்கிடக்கிறது. சோழர் படையெடுப்பிற்குப் பின்னரே தமிழ்ப் பிக்குகளின் வருகை, தமிழ் நூல்கள் இலங்கைக்குக் கொண்டுவந்தமை, இந்து கலாசாரம் பழக்கவழக்கம் பரவியமை என்பன நிகழ்ந்தன. தமிழ்ப் பண்டிதர்களின் தொடர்பாற் சிங்கள மொழியிலே தமிழ்மொழியின் செல்வாக்கு உண்டாகியது. அக் காலச் சிங்கள நூல்களாகிய சத்தர்மரத்னாவளிய, தூபவம்சம், புத்சரணய என்பவற்றிலிருந்து இச் செல்வாக்குத் தெளி வாகின்றது.

பொலநறுவைக் காலத்திலும் ஜாதக அட்டுவா—விளக்க வுரை எழுதிய ஆசிரியர் சரளமாகத் தமிழ்ச் சொற்களைப் புகுத்தி எழுதியுள்ளனர். இவற்றுட் சில தற்சமமானவையாகவும் தற்பவ மானவையாகவும் காணப்படுகின்றன.

உ—ம்:

தற்சமம்—தாளம், குந்தாலி, பொதி, விளக்கு, நாம்பன், பெட்டகம்.

தற்பவம்—தியவுல் (வௌவால்); கொகாபத் (கொக்கு).

அநுராதபுரக் காலத்திற் சிங்களத்துடன் பாளியும் தமிழும், பொலனறுவைக் காலத்திலே சிங்களத்துடன் சமஸ்கிருதமும் அதிகம் கலந்து அம்மொழியை வளம்படுத்தின. இரண்டாம் பராக்கிரமபாகு அரசர் தம்பதேனிய காலத்திற் புகழ்பெற்ற பண்டிதர். அவரது சிறந்த காவியமாகிய கவிசிலுமினவில் (காவியசூடாமணி) வரும் பாடல் ஒன்றும் ''தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை'' என்ற திருக்குறளின் கருத்தை ஒத்திருக்கிறது.

சிங்கள இலக்கியத்திற் கோட்டைக் காலம் (15ஆம் 16ஆம் நூற்றாண்டு) பொற்காலம் எனப்படும். நல்லூர்த்துணையார், 6ஆவது பராக்கிரமபாகுவின் மகளாகிய உலகுடையதேவியை (உலோக நாதா) மணமுடித்தார். இவர்களது புத்திரன் ஜய

வாகுவை, சபுமால் குமாரய கொன்ருன். இவன் 7ஆம் பராக்கிரமபாகு என்ற பெயருடன் ஆட்சி செய்தான். 7ஆம் பராக்கிரமபாகு சோழநாடு ஆதிய தென்னிந்திய நாடுகளைக் கீழ்ப்படுத்தியிருந்தமையாலும் தமிழர் சிங்களர் தொடர்பு மிகவும் நெருக்கமாகவே இருந்தது. இக்காலத்திலே ஆக்கப்பட்ட பூவைவிடுதூது (செலலினி சந்தேச) ஆகிய சந்தேச (தூது) நூல்களில் இந்துக் கோவில்களின் பெயர்கள் இடம்பெற்றிருக்கின்றன. ஆருவது பராக்கிரமபாகுவின் புரோகிதராக இருந்தவர் தென்னிந்தியாவிலிருந்து வந்த இந்துப்பிராமணர் ஒருவர். இவ்வாறு சிங்களருக்கும் தமிழ் மக்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருந்துவந்தது. தமிழ்மொழியும் இந்துசமயமும் தொடர்பு கூட விளங்கிய காலம் கோட்டைக்காலமே.

கோட்டைக் காலத்தில் வாழ்ந்த வீதாகம மைத்திரேய பிக்கு உயர்ந்த ஸ்தானத்தை வகித்துவந்தார். இவர் தமிழிலும் நிறைந்த பாண்டித்தியம் பெற்றவர். இவர் யாழ்ப்பாணத்திற்குச் சென்று தமிழிற் பௌத்த பிரசங்கம் செய்தார் என்பதற்கும் கற்சாசனச் சான்றுகள் உண்டு.

வீதாகம பிக்குவின் 'புதுகுண அலங்காரய'வில் வரும் வர்ணனைகள் சில கி. பி. 2ஆம் நூற்ருண்டிற் செய்யப்பட்டதாகக் கருதப்படும் மணிமேகலையிலுள்ள கருத்தைப் பெரிதும் ஒத்திருக்கின்றன.

மணிமேகலை 7ஆவது காதையில்,

"கோல்நிலை திரிந்திடிற் கோள்நிலை திரியும்
கோள்நிலை திரிந்திடின் மாரிவறங் கூரும்
மாரிவறங் கூரின் மன்னுயி ரில்லை
மன்னுயி ரெல்லாம் மன்னுள் வேந்தன்"

என வரும் நீதிப்பகுதி, 'புதுகுண அலங்காரய'வில் (107ஆம், 109ஆம் பாடல்கள்) அதே கருத்தைத் தருமாறு அமைந்திருக்கிறது.

"தர்மநெறி தவறி அதர்மநெறியில் அரசன் உலகத்தை ஆளுகின்றபோது அவன் ஆட்சிபுரிகின்ற நாட்டில் விஷக்காற்றுப் பலமாக வீசுகிறது" என்றும், "சந்திரசூரியர் தாம் செல்லும் பாதையில் வழமைபோல் மனச்சந்தோஷத்துடன் செல்வதில்லை; அதனுல் மழை இல்லாமல் மாரி வறக்கிறது. மழையில்லாது போகவே தானியங்கள் காலத்திற்கு முற்றிப் பயன்தராது போகின்றன" என்றும் அப்பாடல்களிற் கூறப்பட்டிருப்பதை நோக்கின் தமிழ் மணிமேகலைக் கருத்திற்கும் 'புதுகுண அலங்

காரய'க் கருத்திற்கும் மிகுந்த ஒற்றுமையைக் காணலாம். இங்கும் தமிழின் செல்வாக்கு மேலோங்கி விளங்குகின்றதைக் காணலாம்.

அக்காலங்களிற் பல்கலைக் கழகங்களாக விளங்கிய பிரிவேனுக் களிலே தமிழ்மொழியும் கற்பிக்கப்பட்டது. வைத்தியத்திற் காகத் தமிழ் வைத்திய நூல்கள் உபயோகிக்கப்பட்டன. அந் நூல்கள் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டன. அதனாலே பல தமிழ்ச்சொற்கள் சிங்கள நூல்களில் நிலைத்துநின்றன. தமிழி லுள்ளவாறே பிரயோகிக்கப்பட்டன. தமிழிலுள்ள வைத்திய சிந்தாமணி பைசஜியசங்கிரகம் என்ற நூலைச் சந்திரசேகர பண்டித ரின் மாணுக்கரான சேலசிங்க என்ற தமிழ் வைத்தியர் சிங்க ளத்தில் மொழிபெயர்த்தார். பொட்டனி, கைப்பு, சிந்துரம், நெல்லி, திப்பிலி, சாதிலிங்கம், நீர்முள்ளி முதலிய தமிழ்ச் சொற்கள் சிங்களத்திலும் அவ்வாறே வழங்கப்படுகின்றன.

7ஆம் நூற்றாண்டிலே தென்னிந்தியாவில் மேலோங்கி நின்ற பத்தி இலக்கியம் இங்குள்ள பண்டிதர்களால் உபயோகிக்கப் பட்டதாக அக்காலத்தில் ஆக்கப்பட்ட சந்தேச—தூது காவி யங்கள் பேசுகின்றன. தென்னிந்தியாவிலிருந்து பல பண் டிதர்கள் இலங்கைக்கு விஜயம் செய்தார்களென்பதற்குப் போதிய சான்றுகள் உள. பல்வகை மொழிகளிலும் பாண்டித் தியம் பெற்ற பண்டிதர்கள் இங்கு இருந்தமையால் அவர்களை நாடியே தென்னிந்திய பண்டிதர்களும் வந்திருக்கவேண்டும். இவர்கள் வருகையாலும் சிங்கள மொழியிலே தமிழின் செல் வாக்கு மேன்மேலும் பெருகியது.

கோட்டைக் காலத்தில் ஆக்கப்பட்ட பல்வேறு சந்தேச— தூது காவியங்களிலும் தமிழின் செல்வாக்குத் தெட்டத்தெளி வாக விளங்குகின்றது. இவைமூலம் இந்தியாவிலிருந்து வந்த சோழர், பாண்டியர், தெலுங்கர் முதலிய தமிழர்கள் இங்கு வாழ்ந்தார்கள் என்றும், அவர்கள் அம்பலங்களிலே தங்கியிருக்கும் வேளைகளில் இராம சீதை போன்ற காதைகளைப் பேசிக்கொண்டு இருந்தார்களென்றும் அறியக்கிடக்கின்றது. அதுமட்டுமன்றி, இந்துசமயப் பழக்கவழக்கங்களும் பரவியிருந்ததாகவும் அறியக் கிடக்கின்றது. கிளிவிடுதூதில் அம்பலமொன்றில் நடைபெற்ற தாகப் பாடப்பெற்ற ராஜகுண வர்ணனையிலும், சிலப்பதிகார காவியத்தில் இடம்பெற்ற பாண்டிய மன்னனின் குண வர்ணனை யிலும் ஒப்புமை இருப்பதைக் காணலாம். தொட்டகமுவ ஸ்ரீ ராகுல தேரர் சிலப்பதிகாரத்தில் வரும் வர்ணனையைப் படித்து அறிந்திருந்தமையாற்றான் சிங்களத்தில் அவ்வாறு

வர்ணனையைச் செய்தார் என்று சொல்லமுடியும். அவர் கல்வி கற்ற விஜயபாகு பிரிவேனுவிலே தமிழ் கற்பிக்கப்பட்டதென்பதை

'பவசத் ஸக்கு மகத எலு தெமள கவி நலு......'

என்னும் அடிகளால் அறிகிறோம். அதனுல் இராகுலர் அங்கே தமிழைக் கற்று நன்கு அறிந்திருந்தார் என்பதற்கு அவரது சந்தேச நூல்களே சான்றுபகருகின்றன.

சந்தேச காவியங்களுள் திலகபிரிவேனுவைச் சேர்ந்த இருகல் குலதிலக அவர்களால் ஆக்கப்பட்ட 'கோகில சந்தேச' தென்னிலங்கையிலுள்ள தேவந்துறையிலிருந்து யாழ்ப்பாணம் வரை குயிலைத் தூதுவிடுக்கும் சந்தேச நூலாகும். ஆரியச் சக்கரவர்த்திகளை வென்று யாழ்ப்பாணத்தைத் தனது ஆட்சியிற் கொண்டுவந்த சபுமல் குமாரயாவைப் புகழ்ந்து பாடும் நோக்குடன் இந்நூல் ஆக்கப்பட்டது. இச்சந்தேசத்திலே தமிழ்க் கிராமங்களும் கோவில்களும் விரிவாகப் பாடப்பட்டுள்ளன. நூலில் வரும் 42ஆவது பாடலிலே தீபாவளிக் கொண்டாட்டத்தைப்பற்றிப் பாடப்பட்டுள்ளது. வலிகமவில் தமிழ்ப் பண்டிதர்கள் வாழ்ந்தார்களென்பதைக் கோகில சந்தேசத்திலுள்ள கவிகள் எடுத்துக்காட்டுகின்றன. 6ஆவது பராக்கிரமபாகுவின் ஆஸ்தான சபையிலிருந்து புலவர்கள் தமிழிற் பாண்டித்திய முடையவர்களாக விளங்கினுர்களென்பதை ஒரு சந்தேசப் பாடல் விளக்குகிறது. (பாடல்: 155).

சந்தேச நூல்களிலெல்லாம் வாசல், தோடு, மடம், அம்பலம், பந்து, சங்கம், முதலி, சிந்து போன்ற தமிழ்ச் சொற்கள் தாராளமாகப் பயின்று வருதலைக் காண்டல் கூடும்.

தமிழ்ப் பாடல்களைப் பின்பற்றிக் கோட்டைக் காலத்திற் பராக்கிரமபாகு புகழ்மாலை ஆக்கப்பட்டுள்ளது. பல்வேறு வகை விருத்தப் பாக்களில் இந்துசமயக் கடவுளோடு அரசனை உவமித்து, பெண்ணின் விரகதாபத்தை எடுத்துக்காட்டி, அரச பக்தி மேலோங்கக் காட்டி இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. இந்நூல் தமிழிலுள்ள 96 வகைப் பிரபந்தங்களில் அரசன் விருத்தத்திற்குச் சமனுனது. கோட்டைக் காலத்துக்குரிய ஒரேயொரு உரைநடை நூலாகிய சத்தர்ம ரத்னுவளியிற் சமஸ்கிருதம் பெரும்பாலும் கலந்துள்ளது. பாளிச் சொற்களும் உள. அதிலே தமிழின் செல்வாக்கு அதிகமில்லையெனினும் ஆங்காங்கு சுத்த தமிழ்ச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. உதாரணத்திற்கு ஆலட்டம், திக்கு (—திக்குப்படுதல்), இலைத்தட்டு—வெற்றிலைத் தட்டு என்பவற்றைக் குறிப்பிடலாம்.

1505இல் போர்த்துக்கீசர் வருகையால் நாட்டில் பொருளாதாரமும் சமய வளர்ச்சியும் சீர்குலைந்தன. இலக்கிய வளமும் குன்றியது. சீதாவாக்கை காலத்தில் இந்நிலை இன்னும் கீழ்நிலை அடைந்தது. 1ஆவது இராசசிங்கன் இந்துசமயத்தைத் தழுவினுன். சிங்கள இலக்கியச் செல்வங்களை நாசஞ்செய்தான். இக்காலத்திற் சிங்கள இலக்கியத்தை உயிருடன் வாழச்செய்த பெருமை தமிழிலும் பாண்டித்தியம் பெற்ற இருவரைச் சேரும். அவர்களில் ஒருவர் அழகிய முகவண்ண முகவெட்டி. மற்றவர், இவரது தந்தை தர்மத்துவஜ பண்டிதர். அழகியவண்ணரது சுபாஷித என்னும் நூல் மூலம் சிங்கள பாஷையிலே தமிழின் செல்வாக்கும், தமிழ்ப் பண்டிதர்கள் இங்கு வாழ்ந்து தொண்டாற்றினுர்கள் என்ற செய்தியும் தெளிவாக விளங்கக் கிடக்கின்றன. சமஸ்கிருத பாளி நூல்களை மாத்திரம் ஆதாரமாகக் கொண்டு சுபாஷித என்னும் நூல் செய்யப்படவில்லை. தமிழிலும், நீதிநூல்களைத் தழுவியே இந்நூல் செய்யப்பட்டுள்ளது. நூலின் ஆரம்பத்திலே ஆசிரியரே இந்த உண்மையைச் சொல்லிவைத்திருக்கிறுர்.

ஒளவையாரால் இயற்றப்பட்ட மூதுரை, நல்வழி, நீதிவெண்பா என்ற நீதிநூல்களிலிருந்து எடுக்கப்பட்ட கருத்துக்கள் சுபாஷித என்ற நூலில் இடம்பெறுகின்றன.

உதாரணத்திற்கு மூதுரையில் வரும்

''நன்றி யொருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தரும்கொல் எனவேண்டாம்—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்.''

என்னும் பாடலின் கருத்தும் சுபாஷித்தலில் வரும் 95ஆவது பாடலின் கருத்தும் ஒத்திருத்தலை அவதானிக்கலாம்.

''பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானுடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் பாரே யனுபவிப்பார்
பாவிகா ளந்தப் பணம்.''

''ஈக்கு விடந்தலையி லெய்துமிருந் தேளுக்கு
வாய்த்த விடங்கொடுக்கில் வாழுமே—நோக்கரிய
பைங்கண்அர வுக்குவிடம் பல்லளவே துர்ச்சனனுக்
கங்கமுழு தும்விடமே யாம்.''

என்ற நீதிவெண்பாப் பாடலின் கருத்துடைய பாடல் சுபாஷிதவில் உண்டு.

அழகியவண்ணாரினல் ஆக்கப்பட்ட சந்தேச நூலாகிய சேவல்விடுதூதிலிருந்து அக்காலச் சமூகச் செய்திகளை அறியக் கூடியதாக விருக்கின்றது. அழகியவண்ணர் தமிழர் சூழலில் வாழ்ந்தாரென்றும், அவரது மன்னனாகிய 1ஆவது இராசசிங்கன் சைவசமயத்தைத் தழுவித் தமிழ் முதலிய பாஷைகளிற் பாண்டித்தியம் பெற்றிருந்தார் என்றும் சேவல்விடுதூது எடுத்துக் காட்டுகின்றது. மேலும் 1ஆவது இராசசிங்கனின் கவிஞர் குழாத்தில் இருந்த புலவர்கள் சிங்களம், பாளி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் மட்டுமன்றித் தமிழ்மொழியிலும் பாண்டித்தியம் பெற்றவர்களாக விளங்கினர்கள்.

கண்டிக் காலத்திற்குரியது றணஸ்கல்ல பிக்குவின் உலோ கோபகாரய என்ற இலக்கிய நூலாகும். அழகியவண்ணாரிலும் பார்க்க றணஸ்கல்ல தமிழிற் பாண்டித்தியம் மிக்கவராக விளங்கினர். இவர் திருக்குறள் போன்ற நீதிநூல்களையும் ஆராய்ந்து கற்றவர் என்பதற்கு இவரது 'உலோகோபகாரய' என்ற நூல் சான்றுபகருகிறது.

உதாரணமாக,

> "தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
> முந்தி யிருப்பச் செயல்."
>
> (புதல்வரைப் பெறுதல் — குறள் 7)

> "அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
> பொறுத்தானே டூர்ந்தா னிடை."
>
> (அறன் வலியுறுத்தல் — குறள் 7)

என்ற இரு திருக்குறள்களின் கருத்தையுடைய பாடல்களை 'உலோகோபகாரய'விற் காணலாம். (பாடல் 10; 105).

இவ்வாறு திருக்குறளின் நேர் மொழிபெயர்ப்புப் போன்ற பல பாடல் 'உலோகோபகாரய'வில் இடம் பெற்றிருக்கின்றன. ஈண்டு அவற்றை விரிவஞ்சி விடுக்கின்ரும். திருக்குறள் பௌத்த சமயக் கருத்துக்களைக் கொண்ட நூல் என்ற நம்பிக்கை யிருப்பதால் இவர் திருக்குறளில் இவ்வளவு தூரம் விருப்பம் காட்டியிருக்கலாம் என்று எண்ணவேண்டியிருக்கிறது. அழகிய வண்ணர் பின்பற்றிய மூதுரை, நல்வழி ஆகிய நீதிநூற் கருத்துக் களையும் தழுவி றணஸ்கல்ல சுவாமி அவர்கள் தமது 'உலோ கோபகாரய'வில் அவற்றை எடுத்தாண்டிருக்கிறுர்.

உதாரணமாக,

"நன்றி யொருவற்குச் செய்தக்கா லந்நன்றி
என்று தருங்கொ லெனவேண்டா — நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்."

என்ற மூதுரைப் பாடலின் கருத்தை உலோகோபகாரய பாட லிற் (பாடல் 233) காணலாம்.

றணஸ்கல்ல சுவாமிகள் தமிழ்ப் பாடல்களை நேரடியாக மொழிபெயர்த்தார் என்று சொல்லமுடியாது. எனினும் தமிழி லுள்ள நீதிநூற் கருத்துக்களைத் தேர்ந்தெடுத்துச் சிங்களத்தில் நூல் செய்துள்ளார் எனத் துணிந்து கூறலாம். கண்டிக் காலத்திற் சிங்கள தமிழ் இலக்கிய உறவுக்குச் சிறந்த இலக்கிய பாலம் அமைத்த பெருமை றணஸ்கல்ல சுவாமி ஒருவரையே சேரும்.

சிங்கள ராச்சியம் தமிழ்நாயக்கர் கையிலிருந்த காலத்தில் மக்களும் தமிழை எழுத — வாசிக்க — பேச அறிந்திருந்தார்க ளென அக்காலத்தில் வழங்கிய மொழிமூலமும் சில ஆவணங்கள் மூலமும் தெரியவருகிறது. 1815இல் கண்டி ராச்சியம் ஆங்கி லேயர் ஆட்சிக்கு வந்தபோது சிங்கள — ஆங்கிலேயர் உடன் படிக்கையிற் கையெழுத்திட்ட மலைநாட்டு ''நிலைமைகள்'' (கெபற்றிபோல, கலகொட, கலகம தவிர்ந்த) தமிழிலேயே கைச்சாத்திட்டிருக்கிறார்கள். இவ்வாறு தமிழ் அக்கால சமூகத்தி லேயே சிறந்த செல்வாக்கும் புகழும் பெற்றிருந்தது.

கண்டிக் காலத்தில் வாழ்ந்த சிறந்த பண்டிதர் அத்தறகம ராஜகுரு பண்டார என்பவராவர். அவர் குழந்தைகளுக்காக யாத்த கணதெனி ஹலல (தோத்திரம்) என்ற நூலின் மூலம் தமிழிற் சிறந்த பாண்டித்தியம் பெற்றவர் என்பது தெளி வாகிறது. அவர் கல்விக்கதிபதியாகிய கணபதியை வேண்டுதல் செய்கையில், கல்வியின் சிறப்பை அழகாகக் கூறுகிறார். அதில் வரும் அச்செய்யுள் நாலடியாரில் வரும் கல்விபற்றி வரும் செய்யுளையே தழுவியதாகவிருக்கிறது:

"வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பி னரசர் செறின்வவ்வா
ரெச்ச மெனவொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற."

மாத்தறைக் காலத்தை ஆராயுங்கால் சிங்களப் புலவர்கள் தமிழ் இலக்கியங்களிலுள்ள சிருங்கார ரசமுள்ள காவியங்களைத் தழுவியே நூல்கள் செய்திருப்பதாகத் தெரிகிறது. இக் காலத்திற்

சிங்களத்திற் சிறந்த இலக்கிய வளர்ச்சி ஏற்பட்டதென்று சொல்வதற்கிடமில்லை. 'மகரத்துவஜ' என்ற நூலை ஆக்கிய திசாநாயக்க முதலியும், 'சின்னமுத்து கதை' என்ற நூலை எழுதிய விதான என்பவரும் தமிழிற் பாண்டித்தியம் பெற்றவர்களாக விளங்கினர்கள். மாத்தறை காலத்துக் கவிஞர்கள் செய்த சந்தேச காவியங்கள் எல்லாம் தமிழர் தெய்வமாகிய கதிர்காமக் கந்தன்பால் தூது அனுப்புவதாக அமைந்திருக்கின்றன.

18ஆம் நூற்றுண்டில் ஆக்கப்பட்ட கஜபாகு காவியத்தில் (நீலன் என்ற வீரன் சோழநாட்டிற்குச் சென்றமையை வர்ணிக்கும் காவியம்) சிலப்பதிகாரத்தின் சாயல் படிந்திருப்பதைக் காணலாம். பத்தினி தோத்திரம், பத்தினி கதை, வசந்தமாலை என்ற சிறு நூல்களும் சிலப்பதிகாரக் கதையைத் தழுவி எழுந்தவைகளாகும்.

18ஆம் நூற்றுண்டிற் புகழ்பெற்ற சிங்கள பண்டிதராக விளங்கியவர் யாகோமே கொன்ஸால் வெஸ் என்பவராவர். அவர் தமிழ் சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் நூல்கள் செய்திருக்கிறுர். துக்பிராப்தி பிரசங்கம் என்ற நூலை முதலிற் சிங்களத்தில் எழுதித் தமிழிலும் அவரே மொழிபெயர்த்துள்ளார். பேதகாரயன்கே தர்க்கம் என்ற நூலையும் கலிப்பாப் பாடல்களில் யாத்துள்ளார். போர்த்துக்கிச — சிங்கள தமிழ் அகராதி என்பதனையும் ஆக்கியுள்ளார். இவ்வகையிற் பலரின் பாராட்டைப் பெற்ற சிறந்த புலவராகத் தமிழ் சிங்கள உறவை மேலோங்கச் செய்திருக்கிறுர். பிலிப்பு சிஞ்கோ என்பவர் முதல் எழுதிய நாடகங்கள் (12) அனைத்தும் தமிழ் நாடகங்களைத் தழுவி அமைந்திருக்கின்றன. பேதுறு சில்வா என்பவர் தமிழிலிருந்து ஹரிச்சந்திர நாடகத்தைப் பின்பற்றிச் சிங்களத்தில் அதனை எழுதினுர். சிங்கள நாடகம் பற்றி நன்கு ஆராய்ந்தவரும், சிங்கள நாடகத்திற்குப் புத்துயிரளித்தவரும், சிறந்த நாடகக் கலைஞருமான ஈ. ஆர். சரச்சந்திர அவர்கள் தமது சிங்கள நவகதா என்ற நூலில் நாடகம தமிழிலிருந்துதான் சிங்களத்திற்கு வந்தது என்பதை ஏற்றுக்கொள்கிறுர்.

அண்மைக் காலத்தில் வாழ்ந்த ஹிஸ்ஸல்லே தம்மரத்தின தேரர் சிறந்த தமிழ் அறிஞராகவும் விளங்கினர். அவர் தமிழ் மணிமேகலை காவியத்தை (1951ஆம் ஆண்டில்) மணிமேகலா சம்பு என்ற பெயரிலும், சிலப்பதிகார காவியத்தைப் பத்தினிதெய்யோ என்ற பெயரிலும் சிங்களத்தில் மொழிபெயர்த்துள்ளார். அவர் சீவக சிந்தாமணி என்ற காவியத்தையும் சிங்களத்தில் மொழி பெயர்த்துள்ளார். சுன்னுகம் அ. குமாரசுவாமிப்புலவர் அவர்கள் எழுதிய இரகுவமிச சரிதாமிருதத்தை இரகுவமிச சரித்திராமிருத

விளக்கவுரையாக எழுதியுள்ளார். அத்துடன் தமிழ் சிங்கள மகா அகராதி ஒன்றையும் ஆக்கித் தந்துள்ளார்.

தமிழிலே சிறந்து விளங்கும் திருக்குறள் என்ற நூலை 1961இல் சிங்களத்திற்கு மொழிபெயர்த்த பெருமை வரிகம்பிற்றி ஜீ. மிஸிகாமி என்ற அம்மையாரைச் சாரும். ஃம்பெறலிய நாவலை கிராமப் பிறழ்வு என்ற பெயரில் அல்ஹாஜ் எம். எம். உவைஸ் அவர்கள் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார்கள். செலலிஹினி சந்தேச என்ற தூதுகாவியத்தை பூவைவிடுதூது என்ற பெயரில் அழகான செய்யுள் நடையில் வித்தியாரத்தினம் நவாலியூர் சோ. நடராசன் அவர்கள் யாத்திருக்கிறார்கள்.

இத் தூதுபற்றி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்,

''பூவைவிடு தூது புலவர் மகனளித்தார்
நாவை மணஞ்செய் நறுந்தமிழில் — கோவைஉலா
என்றவகைக் கப்பால் இருமொழிக்கு நன்னட்புந்
துன்றுவிக்குந் தூதுசொலித் தூது''

என்று பாடியிருப்பதும் மனங்கொள்ளத்தக்கது. செலலிஹினி சந்தேசம் என்ற நூலில் விபீடணக் கடவுளிடம் நாகணவாயைத் தூதாக விடும் செய்தியைக் காணலாம். மேகதூதத்தின் சாயலை இந்நூலிற் காணலாம்.

முனிதாச குமாரதுங்காவின் சிறுகதைகளைத் திருமதி சரோஜினி அருணாசலம் அவர்கள் கலியாணச் சாப்பாடு, செத்துப் பிழைத்த சின்னச்சாமி என்ற பெயரில் தமிழிற் பெயர்த்துள்ளார். சிங்கள — தமிழ் அகராதியைச் சிறப்புறச் செய்துதந்த பெருமை திரு. கே. டி. பீரிஸ் அவர்களுக்குரியது. இது இலக்கியங் கற்போருக்கு உறுதுணையாக உதவுகிறது.

முதன்முதலில் ராஜாஜியின் தமிழ்ச் சிறுகதைகளைச் சிங்களத்தில் மொழிபெயர்த்து நூல்வடிவில் வெளியிட்ட பெருமை முன்னாள் ஹாமினி பாடசாலை அதிபரும் தமிழறிஞருமாகிய டி. டி. நாணயக்கார அவர்களுக்குரியது. அவர் ஆறுமுக நாவலரின் சைவ வினாவிடையையும் (முதற்பாகம்) சிங்களத்தில் மொழிபெயர்த்துள்ளார். சிங்கள தமிழ் இலக்கிய உறவுக்காக அவர் இன்று தொண்டாற்றிவருகிறார். ஸ்ரீ இராகுல தேரரின் காவிய சேகரத்தை நான் தமிழில் மொழிபெயர்த்து வருகிறேன். இது விரைவில் நூல்வடிவம் பெறுமென எதிர்பார்க்கலாம்.

சிங்கள தமிழ் இலக்கிய உறவிற்காக இலைமறை காயாகத் தொண்டாற்றிவருவோர் இன்னும் பலருளர். இம் முயற்சியில் இலங்கை இலக்கிய இதழ்களும் மாத ஏடுகளும் நாள் இதழ்களும் சிறந்த தொண்டாற்றுகின்றன.

உசாத்துணை நூல்கள்

நூலாசிரியர் பெயர்	நூல்	வெளியீட்டாளர்	வெளியீட்டு இடம்	ஆண்டு
புத்த தத்த மகாதேரர்	தம்மபதம்	கொழும்பு அப்போதிக்கறிஸ் கம்பனி லிமிடெட்	கொழும்பு	
நாரத தேரர்	தம்மபதம்	து வாம் அன் து குவான்	சைகோன், வியட்நாம்	1963
இராகுல தேரர்	செலலிஹினி சந்தேச		கம்பஹா	1944
நவாலியூர் சோ. நடராசன்	பூவைவிடு தூது	சிறீலங்கா சாகித்திய மண்டலம்	கொழும்பு	1963
அழகியவண்ணர் றணஸ்கல்ல	சுபாஷித உலோபகாரய		பாணந்துறை	1935
ஹிஸ்ஸல்லே—தம்மரத்தின சுவாமி	සිංහලයේ ද්‍රවිඩ බලපෑම	சரஸ்வதி வித்தியாலய பிரிவேணு	திவுலுப்பிட்டிய	1963
ஜி. பி. மலலசேகரா	The Pali Literature of Ceylon	எம். டி. குணசேன கம்பெனி லிமிடெட்		1958
திருவள்ளுவர்	திருக்குறள்	ஆறுமுகநாவலர்		
ஔவையார்	நீதிநூற் கொத்து, நல்வழி, மூதுரை	திருநெல்வேலி தென்னிந்திய நூற்பதிப்புக் கழகம்	சென்னை	
மயிலை—சீனி வேங்கடசாமி	பௌத்தமும், தமிழும்	,, ,,	சென்னை	
சீத்தலைச்சாத்தனார்	மணிமேகலை			
இளங்கோ அடிகள்	சிலப்பதிகாரம்			
	நாலடியார்			
	திரிபிடக நூல்கள்			

அறபுத் தமிழ்

பி. நயினுர் முகமது

அறபுத் தமிழ் எனும் தொடர் பலர்க்குப் புதுமையாகத் தோன்றும். குடத்துள்ளிட்ட விளக்காக, நிலத்துள்ளிட்ட நிதியாக இஃதமைந்துள்ளது. பன்னூற்றுக்கணக்கான பைந்தமிழ்ப் பனுவல் தோன்றித் துலங்குவதற்குக் காரணமாக இருந்தமையால், 'அறபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ்' என இலங்கைத் தமிழ்ச் சான்ருேர் ஒருவர் இயம்புகின்ருர்.[1]

இஸ்லாமும் இன்பத்தமிழும் கண்ட இணைப்பால் எழுந்த பல விளைவுகளுள் ஒன்றே அறபுத் தமிழ். இஸ்லாத்தின் இனிய கொள்கைகளையும் அரிய தத்துவங்களையும் திருக்குரான் மறைமொழிகளையும் திரு நபியின் மணிமொழிகளையும் தமிழ் முஸ்லீம்களுக்கு விளக்கிட விழைந்தனர் சமயச் சான்ருேர். ஆனுல் அறபிச் சொற்களை அருந்தமிழில் எழுதும்போது மூலச் சொற்கள் உருமாறிப் பொருள் வேறுபாடு கொண்டுவிடுகின்றன. சில வேளைகளில் முரண்பட்ட பொருளையும் பயந்துவிடுகின்றன.

ஒவ்வொரு முஸ்லிமும் தொழும்போது 'இறைவனே, எனக்கு மன்னிப்பளிப்பாயாக!' என இறைஞ்சுமிடத்து வரும் ஓரரபிச் சொல்லைத் தமிழ் எழுத்துக்களில் 'மக்பிர்லி' என அமைத்தால் 'இறைவனே என்னை இறைவிரோதியாக்கிவிடு' எனும் பொருளைத் தந்துவிடுகின்றது. அழகு எனும் பொருள் கொண்ட 'ஜமால்' எனும் அறபிச் சொல்லை 'சமால்' எனத் தமிழ் எழுத்தில் எழுதும்போது வடக்கு அல்லது வாடைக் காற்று எனப் பொருள் கொண்டுவிடும். இவ்வாறு விபரீதங்கள் ஏற்பட்டுவிடாமல் உரிய பொருளை இனியமுறையில் இயம்பும் பொருட்டு இரு மொழிகளிலும் புலமைச் சான்ருேர் அரிய முறை ஒன்றைக் கண்டனர். இஃதே அறபுத் தமிழாகும்; ஆர்வீ என்றும் அழைப்பர்.[2]

அறபி நெடுங்கணக்கில் உள்ள சில எழுத்துக்கள் தமிழ் நெடுங்கணக்கில் இல்லை. ஒரு மொழியிலுள்ள எழுத்துக்கள்

அனைத்தும் பிறிதொரு மொழியில் இருக்குமென எதிர்பார்க்க முடியுமா? தமிழில் உள்ள ஒலிகள் சிலவற்றுள் ஒவ்வொன்றிற்கும் நுண்ணிய வேறுபாடுகொண்ட சில ஒலிகள் அறபியில் உள்ளன.

ஒலி	தமிழ்	அறபி
அ	1	3
க	1	5
ச	1	4
த	1	5
ப	1	2

இவ்வாறு நுண்ணிய வேறுபாடுகள் கொண்ட அறபி ஒலிகளுக்கெல்லாம் தமிழில் உரிய எழுத்துக்கள் இல்லை. ஆதலின் பிரார்த்தனைகளையும் சமயக் கருத்துக்களையும் பொருள் வேறுபடாமல் தரும்பொருட்டுத் தமிழ்ச் சொற்களை அறபி எழுத்துக்களில் எழுதினர்.

இம் முயற்சியில் ஈடுபட்டோர்க்கு இன்னொரு இடர்ப்பாடும் ஏற்பட்டிருக்க வேண்டும். எவ்வாறு அறபி ஒலிகளை எல்லாம் வெளியிடத் தமிழ் எழுத்துக்களால் இயலவில்லையோ, அவ்வாறே தமிழ் ஒலிகளையெல்லாம் அறபி எழுத்துக்களால் வெளியிட முடியவில்லை. எ, ஏ, ஒ, ஓ ஆகிய உயிரெழுத்துக்களும், ங, ச, ட, ண, ழ, ள, ற முதலிய மெய்யெழுத்துக்களும் அறபி நெடுங்கணக்கில் இல்லை. ஆதலின் இவ்வொலிகளைச் சார்புடைய அறபி எழுத்துக்களிற் சில குறிகளையிட்டு வெளிப்படுத்தினர். அறபி எழுத்துக்கள் 29. புதிதாக அமைத்துக்கொண்டவை 12. ஆக அறபுத் தமிழ் எழுத்துக்கள் 41.

அறபுத் தமிழ் தோன்றுவதற்கு வேறு காரணங்களும் கூறுவர். அவை பின்வருமாறு:—

1. முஸ்லீம்களுக்கு அறபு வேத மொழியாகும். ஆதலின், திருமறை உரைகளும் இஸ்லாமியக் கொள்கைகளும் வேத மொழியாகிய அறபி மொழியின் எழுத்துக்களில் அமைய வேண்டும் என விரும்பினர்.[3]

2. அறபி எழுத்தில் அமைந்துள்ள திருக்குரான் மிகவும் மதித்துப் போற்றப்பெறுகிறது. ஆதலின், அறபி எழுத்திலுள்ள தமிழ் நூலும் மதிக்கப்பெறும் எனக் கருதினர்.[4]

3. பார்சி, துருக்கி, மலாய், பெர்பெர், சோமாலி, உர்து முதலிய உலக நாடுகள் பலவற்றில் வழங்கும் மொழிகளெல்லாம் அறபி எழுத்தினை ஏற்றுள்ளன. ஆதலால் உலகப் பொதுமை

கருதி அறபி எழுத்துக்களைத் தமிழ் முஸ்லீம்களும் கொண்டிருக்கலாம்.[5]

4. முஸ்லீம்களனைவரும் திருக்குரானை அறபி எழுத்தில் ஓத அறிந்திருப்பாராதலால் எளிதில் படித்தறிந்து கொள்ளும் பொருட்டு அறபி எழுத்துக்களில் தமிழ் நூல்களை இயற்றியிருக்கலாம்.[6]

5. தமிழகத்திலே தங்கிவிட்ட அறபுகள் படிப்பதற்கு இஃது எளிதாக இருந்ததும் ஒரு காரணமாதலால், ஒரு மொழி பிறிதொரு மொழியின் எழுத்துக்களை ஏற்றுக்கொள்வது புதியதன்று. ஐரோப்பிய மொழிகள் பல உரோமன் எழுத்தினை ஏற்றுக்கொண்டுவிட்டன.[7] மலேசியாவில் மலாய் மொழி ஆட்சி பீடத்தில் உரோமன் எழுத்திலும், மக்கள் வழக்கில் அறபி எழுத்திலும் இயங்கி வருகின்றது.[8] வட இந்திய மொழிகளிற் பல தேவநாகரி எழுத்துக்களை ஏற்றுக்கொண்டுவிட்டன.[9]

இந்தியாவில் அறபுத் தமிழுக்கு முன்னோடியாக விளங்குவது அறபு வங்காளமாகும். பின்னர் கேரளத்திலும் அறபு மலையாளம் தோன்றிவிட்டது.[10]

மொழி என்பது வாயால் மொழியப்பெறும் ஒலியின் ஈட்டத்தையே குறிக்கும் என்பர் மொழியியலார்.[11] எனவே இஃது அறபி எழுத்துக்களால் அமைந்தபோதும் தமிழ் மொழியேயாகும்.

மரணம் விடாது மலக்கல் மௌத்தென் முன்னே
மறந்து விடாது (மரணம்)

கல்லினுள் துளைசெய்து தேரைபோ லிருந்தாலும்
கருங்கல்லுக் கோட்டைக்குள் மறைவா யொழிந்தாலும்
கடலும் திடலும்விட்டுக் கணமாய மானுலும்
க்ணக்கற்ற மருந்தைநீ புசித்துச் செமித்தாலும்[12] (மரணம்)

எனும் மரணவிளக்கம் குறித்து அறபி எழுத்தில் அமைந்த பாடலில் மலக்கல் மௌத் (எமன்) எனும் தொடர் தவிர ஏனைய சொற்களெல்லாம் இனிய எளிய தமிழ்ச்சொற்களே. மணிப்பிரவாள நடையில் வடசொற்கள் கலந்திருப்பதுபோல் அறபுத் தமிழில் அறபிச் சொற் கலப்பு உண்டு.

இவ்வாறு அறஉரைகளும் அருளுரைகளும் அறிவுரைகளும் அமைந்த நூல்கள் அறபுத் தமிழில் அநேகம் உண்டு. கவிதைகளாகவும் இசைப் பாடல்களாகவும் எழுந்துள்ளன. உரைநடையில் எண்ணற்ற நூல்கள் தோன்றியுள்ளன. பழைய திருக்

குரான் விளக்க உரைகள் அறபுத் தமிழிலேதான் அமைந்துள்ளன. அறபுத் தமிழில் வார ஏடுகளும் வெளிவந்துள்ளன[13] என்பது குறிப்பிடத்தக்கது.

இருமொழிப் புலமை கொண்ட சான்றோர் பலர் அறபுத் தமிழ் வளர்ச்சியிற் பொதுவாக ஈடுபட்டாரேனும் காயல்பட்டினத்துச் சான்றோரின் பணி குறிப்பிடத்தக்கதாகும்.

கி. பி. எட்டாம் நூற்ருண்டு முதல் பதினைந்தாம் நூற்ருண்டுவரை அறபுத் தமிழ் வளர்ச்சியும் மலர்ச்சியும் பெற்றது. 19ஆம் நூற்ருண்டில் அச்சுப் பொறி பொதுமக்கள் அனுபவத்திற்கு வந்ததும் அறபுத் தமிழ் நூல்கள் தமிழ் எழுத்துக்களில் வெளிவரலாயின. எளிமையும் இனிமையும் கருதி அச்சிட்டு வெளிவந்த தமிழ் நூல்களை மக்கள் பெரிதும் வரவேற்றனர். அறபுத் தமிழ் படிப்பவரின் எண்ணிக்கை குறைவதாயிற்று. அறபுத் தமிழும் வளர்ச்சி குன்றித் தளர்ச்சியுற்றது. தமிழ்க் கல்வி பெருமளவில் பரவிவருவதாலும், மொழித்தூய்மை பேணும் உணர்வு இஸ்லாமிய இளைஞரிடமும் எழுந்துள்ளமையாலும் அறபுத் தமிழ் தன் செல்வாக்கை இழந்துவிட்டது. எனினும், அழிந்துவிடாமல் இதனைக் காத்துவரும் பெருமை முஸ்லீம் மாதர் குலத்தைச் சேர்ந்ததாகும். வட ஆற்காடு, செங்கல்பட்டு, திருநெல்வேலி, குமரி மாவட்டங்களிலுள்ள முதிய முஸ்லீம் சமுதாயத்தினர் அறபுத் தமிழைத் தொடர்ந்து பயின்றுவருகின்றனர். ஆதலின் அறபுத் தமிழ் படிக்கும் பழக்கத்தைக் கொண்டோர்க்காகத் தமிழில் வெளியான நூல்களிற் பல, அறபுத் தமிழ் எழுத்துக்களில் வெளியிடப்பெற்றுள்ளன.[14]

அறபுப் பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் அறபுத் தமிழ்ப் பயிற்சியும் நடைபெற்று வருகின்றது. காயல்பட்டினம், பரங்கிப்பேட்டை, கிழக்கரை போன்ற ஊர் மக்களிடம் அறபுத் தமிழ் நூல்கள் பல அழியாமல் உள்ளன.

அறபி மொழிக்கும் தமிழுக்கும் பாலமாக விளங்குவதுபோல் தமிழக முஸ்லீம்களுக்கும் இலங்கை முஸ்லீம்களுக்கும் இணைப்பாகவும் இது விளங்குகின்றது.

இதுவரை 200க்கும் மேற்பட்ட அறபுத் தமிழ் நூல்கள் கிடைத்துள்ளன. இவற்றுள், திருக்குரான் விளக்க உரைகள் பல; நபிகள்நாயகம் பற்றிய நூல்கள் பல; இஸ்லாமிய மார்க்க ஒழுக்கங்களைப் பற்றிய நூல்கள் பல; ஞான நூல்கள் பல; வாழ்க்கை வரலாறுகளும் பல; செய்யுள் நூல்களும் உள: அகராதியும் உண்டு.

உசாத்துணை நூல் விபரம் :

1. தொகுப்பாசிரியர்: செய்யிது ஹசன் மௌலானா எஸ். ஏ., இஸ்லாமிய தமிழ் இலக்கியச் சொற்பொழிவுகள், அரசு வெளியீடு, கொழும்பு-15, 1968.
2. வேங்கடசாமி மயிலை சீனி: 19ஆம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம், முதலாம் பதிப்பு, 1962, வெளியிட்டோர்: சாந்தி நூலகம், 2/122, பிராட்வே, சென்னை-1.
3. Uwise M. M,: *Muslims Contribution to Tamil Literature*, Publishers: Tamil Manram—Galhinna, Kandy, 1953.
4. கனி ஆர். பி. எம்.: 'இஸ்லாமிய இலக்கியக் கருவூலம்', வெளியிட்டோர்: அருள் நூல் பதிப்பகம், 22ஏ, மயிலைப் பெரியதம்பி தெரு, சென்னை-1.
5. சீனிவாசன் ரா.: மொழியியல், அணியகம் வெளியீடு, இரண்டாம் பதிப்பு, 1969.
6. மௌலவி முகம்மது இப்ராகீம்: மரண விளக்கம்.

அடிக்குறிப்பு :

1. *அறபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ்—அஸீஸ், ஏ. எம். ஏ., இஸ்லாமிய தமிழ் இலக்கியச் சொற்பொழிவுகள் — பக்கம் 25.*
2. *19ஆம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்—பக்கம் 157.*
3. *19ஆம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்—பக்கம் 156—157.*
4. ......Muslim Tamil authors who wrote Tamil words in Arabic script might have expected that the Muslims would also consider these words as sacred.
   —Muslims Contribution to Tamil Literature—p. 121.
5. For the more, the Arabic scripts is said to be the universal mark of Muslim dominance or influence wherever Islam spread.
   —Muslims Contribution to Tamil Literature—p. 120.
6. *சாதாரணத் தமிழ் முஸ்லீம் திருக்குர்ஆன் ஓதத் தெரிந்தவனாதலால் அறபி எழுத்துக்களை விளங்கியவனாய் அவற்றின் சேர்க்கையைப் புரிந்தவனாய் இருப்பான். ஆனால் அறபிச் சித்தாபுகளைப் படிக்கவோ, விளங்கவோ அவனால் முடியாது. இந்த நிலையில் அவன் அறிந்த லிபியைக்*

கொண்டு அவனுடைய தாய்மொழியின் ஒலியால் மார்க்க ஞான விளக்கம் தர இஸ்லாமிய மார்க்க ஞானப் பெரியார்கள் முன்வந்தனர்.

— இஸ்லாமிய இலக்கியக் கருவூலம்—பக்கம் 209.

7. Likewise North India uses Devanagari script and the European countries the Roman script.

—*Muslims Contribution to Tamil Literature—p. 120.*

8. ரோமன் லிபி இன்றைய மலேசியாவில் உத்தியோக மொழியாக விளங்குகிறது. ஆயினும் இன்றுகூட அறபு லிபி மலாய் மொழியில் அங்கு பத்திரிகைகள் வெளிவருகின்றன. இம்மொழி வெகுஜன வழக்கில் ஜாவி என அழைக்கப்படுகிறது.

—இஸ்லாமிய தமிழ் இலக்கியச் சொற்பொழிவுகள்—பக்கம் 31.

9. Likewise North India uses Devanagari scripts.

—*Muslims Contribution to Tamil Literature—p. 120.*

10. அறபுத் தமிழை உண்டாக்கி இஸ்லாமிய இலக்கியத்தை அதில் மலரச்செய்தனர். இதன்பின்னரே மலேயாளத்திலும் அறபி மலேயாளம் வரலாயிற்று.

—இஸ்லாமிய இலக்கியக் கருவூலம்—பக்கம் 209.

11. மொழியென்பது வாயால் மொழியப்படும் ஒலியின் ஈட்டத்தையே குறிக்கும். —மொழியியல்—பக்கம் 5.

12. மரணவிளக்கம்—பக்கம் 12.

13. கஷ்புல்ருன் கல்பல்ஜான் — வார ஏடு முதலில் தோன்றிய அறபுத் தமிழ்ப் பத்திரிகை.

செய்தி விநோதம் எனும் பொருள்கொண்ட 'அஜாயிபுல் அக்பார்'—வார ஏடு.

14. அறபுத் தமிழில் வெளிவந்த நூல்களைப் படித்தும் பழக்கப் பட்டவர்களுக்காகப் பின்னர் தமிழ் எழுத்துக்களில் அச்சான (சிறுப்புராண வசனம் போன்ற) பல நூல்கள் அறபித் தமிழிலும் வெளியிடப்பட்டன.

—இஸ்லாமிய இலக்கியக் கருவூலம்—பக்கம் 208.

தமிழ்த் தன்வரலாறுகளின் இலக்கியத் தகுதிப்பாடு

சாலினி இளந்திரையன்

0. வாழ்க்கை வரலாறும் தன்வரலாறும் ஒரு தனிமனிதனின் வாழ்க்கைக் கதையையே சொல்லுவனவாயினும், தன் வரலாறு என்பது வாழ்க்கை வரலாற்றிலிருந்து பெரிதும் வேறுபடுகிறது. ஒருவருடைய வரலாற்று நிகழ்ச்சிகளை மற்றொருவர் தொகுத்துத் தேர்ந்தெடுத்து அடைவுபடுத்தி நாயகனின் குணமலர்ச்சி வெளிப்படுமாறு சொல்லுவதால் வாழ்க்கை வரலாறு உருவாகிறது; இதற்கு மாறாக, தன்வரலாறு என்பது, வரலாற்றுக் கதையின் நாயகனும் அதன் ஆசிரியனுமாக உள்ள மனிதன் தனது கடந்தகால வாழ்வை மீண்டும் முறையாக நினைவுகூர்வதன் மூலமே உருவாகிறது.[1]

0.1. வாழ்க்கை வரலாறு என்பது படைப்பு இலக்கியத்துள் ஒரு பகுதியாகக் கருதப்பட்டு வந்தாலும், தன்வரலாறுகள் சிறந்த இலக்கியங்களாக உருவாக முடிவதில்லை என்னும் கருத்தும் ஒரு சாராரால் எடுத்துரைக்கப்பட்டு வருகிறது. அதற்கு அவர்கள் கூறும் காரணங்களுள் முக்கியமானவை ஐந்து. முதலாவது, எந்தத் தனிமனிதனும் தன் வாழ்க்கையின் எல்லா நிகழ்ச்சிகளையும் மீண்டும் முழுமையாக நினைவுகூர முடியாது[2] என்பது. இரண்டாவது, தங்களுக்கு இழிவுதரக்கூடிய நிகழ்ச்சிகளை மறைத்துவிட்டு மற்றவைகளையே சொல்லுவார்கள்[3] என்பது. மூன்றாவது, தங்கள் கதையைச் சொல்லும்போது தங்கள் செயல்களுக்கு நியாயம் கற்பிக்கும் முறையிலேயே விவரிப்பார்களாகையால்[4] அந்த வரலாறு ஒருதலைச் சார்பானதாக அமைந்து விடும் என்பது. நான்காவது, தங்கள் வாழ்வு மற்றவர்கள் ஏற்றுப் பின்பற்றத்தக்கதாக அமைந்திருக்கிறது என்ற நினைவிற் பலர் அதை ஒரு நீதிப் போதனைக்களமாக ஆக்கிவிடுகிறார்கள் என்பது. ஐந்தாவது, ஒரு மனிதனுடைய வாழ்வு அவனுடைய

மரணத்தோடேயே முற்றுப்பெறுவதால் அந்த நிகழ்ச்சியைச் சொல்லாத தன்வரலாற்றுக் கதையில் ஒரு முழுமை இருக்க முடியாது என்பது.[5]

0 . 2. இவை தகுந்த காரணங்கள் போலவே தோன்றினாலும், இவை அனைத்தையும் மறுப்பவைபோலத் தமிழிலும் வேறு மொழிகளிலும் தன்வரலாற்று நூல்கள் உருவாகியுள்ளன. அவற்றைப் படிக்கையில் எல்லோரும் தங்கள் வாழ்வின் எல்லா நிகழ்ச்சிகளையும் மறந்து விடுகிறார்கள் என்றோ, தங்களுக்குக் குறைவு உண்டாக்கும் நிகழ்ச்சிகளை அடியோடு மறைத்துவிடுகிறார்கள் என்றோ கொள்ள முடியவில்லை. தங்கள் செயல்களுக்கு நியாயங் கற்பிப்பது, நீதிபோதனை செய்வது என்னும் இயல்புகளே இல்லாத தன்வரலாறுகளையும் பார்க்கிறோம். வெவ்வேறு இலட்சியங்களை முன்வைத்து ஒருவர் நடத்தும் வாழ்வின் ஒவ்வொரு கட்டமும் ஒரு தனிவாழ்வாகக் கொள்ளத்தக்க முழுமையின் கூறுகளைப் பெற்றே இருக்கிறது.[6] இருக்கவே மரணத்தைப் பற்றிச் சொல்லாத ஒரு மனிதனின் வாழ்க்கைக் கதையில் முழுமைப்பாடு இல்லை என்று சொல்ல இயலாது. ஆகவே சிறந்த நினைவாற்றலும் உயர்ந்த மனப்பாங்கும் தெளிந்த படைப்புத் திறனும் உடையவர்கள் எழுதும் தன்வரலாறுகள் சிறந்த இலக்கியங்களாக உருவாகின்றன என்றே கொள்ளவேண்டும்.

1. தமிழ் இலக்கியத்திலே தன்வரலாற்று இலக்கியத்தின் முளை, சங்க காலத்துப் பெருஞ்சித்திரனார், நக்கண்ணையார், கோவூர்கிழார் முதலியோரின் பாடல்களிலே தன்வரலாற்றுக் குறிப்புக்களாக உள்ளது. இளங்கோவடிகளும் நாயன்மார்களிலே சிலரும் தன்வரலாற்றுக் குறிப்புக்களைத் தந்துள்ளனர். பதினைந்தாம் நூற்றாண்டுக் காளமேகத்தின் பாடல்களில் இக் குறிப்புக்கள் வன்மையாக வெளிப்பட்டிருக்க, பதினெட்டாம் நூற்றாண்டில் ஆனந்தரங்கர் நாட்குறிப்பு மிகத் தெளிவான தன்வரலாற்றுப் போக்குகளைப் பதிவுசெய்துள்ளது. வாழ்க்கைப் பகுதிகளைச் சொல்லும் குறிப்புக்கள், நினைவுக் குறிப்புக்கள் என்னும் போக்கு இந்த நூற்றாண்டுவரை நீடித்தே வந்தது. ஆனாலும் தமிழிலே முழுமையான தன்வரலாற்று இலக்கியமும் இந்த 20ஆம் நூற்றாண்டிலேயே உருவாகிவிட்டது.

2 . 1. தமிழிலுள்ள தன்வரலாற்று நூல்களுட் காலத்தால் முந்தியது திரு. வி. க. வின் 'வாழ்க்கை (வரலாற்று)க் குறிப்புக்கள்'. இப்புத்தகம் 1944 பிப்ரவரியில் வெளிவந்தது. "வாழ்க்கை நிகழ்ச்சிகளில் இன்றியமையாத சிலவற்றை மட்டும் கூறுகூறாகக் குறித்துச் செல்ல முயல்கின்றேன்"[7] என்று நூலின் தோற்றுவாயில் திரு. வி. க. அவர்கள் குறிப்பிட்டிருந்தாலும்,

இந்த நூலின் முழுமைப் பெருமை பல அறிஞர்களையும் கவர்ந்து உள்ளது.[8] ஓர் ஆய்வாளனுக்குரிய தெளிவோடு அவர் தம்முடைய வாழ்வை மதிப்பீடு செய்திருப்பதே அதற்குக் காரணம்.

2.2. அந்தண்மை என்பதற்கு அழகானதொரு விளக்கம் தந்துவிட்டு, ''எனது வாழ்க்கையில் அந்தண்மை இடம் பெற்றதா, இல்லையா? இதற்குச் சோதனை வேண்டும். என் வாழ்க்கைக் குறிப்புக்கள் வெளிவரின் சோதனைக்கு வழி ஏற்படும்''[9] என்று தொடங்குகிறார் திரு. வி. க.

2.3. இருநூறு பக்க அளவில் (பக். 251—451) தம்முடைய அரசியல் வாழ்வை விவரித்துவிட்டுப் பின்வருமாறு பேசுகிறார்: ''ஆபாசக் கட்சி அரசியல் முறை மேல்நாட்டினின்றும் வந்து இறங்கிய சரக்குகளில் ஒன்று. அது வாழ்க்கையிற் போராட்டத்தை விளைப்பதாதலின் அதனால் மக்கள் மனச்சான்றுடைய அறவோராதல் இயலவில்லை. இந்நுட்பம் எனது அரசியல் வாழ்க்கையில் செவ்வனே விளங்கியது. அவ்விளக்கம் போராட்டமற்ற வாழ்க்கையைக் கூட்டவல்ல சன்மார்க்க அரசியலை நாடச் செய்தது''.[10]

2.4. தொழிலாளர் இயக்கங்களில் ஈடுபட்டது இவருடைய வாழ்விற் கணிசமான ஒரு பகுதியாக உள்ளது. அதைப்பற்றிய குறிப்புக்களை எல்லாம் தந்தபின், ''பொறுமையும் அமைதியும் அந்தணச் செல்வமல்லவோ? அச் செல்வத்தைத் தொழிலாளர் இயக்கம் என்னுள் வளரச்செய்ததை எனது வாழ்க்கை கண்டது. என் அகத்திருந்த கரடுமுரடு மூர்க்கம் முதலிய விலங்கியல்புகளைப் பெரிதும் புரட்டித்தள்ளியது தொழிலாளர் இயக்கம்''[11] என்கிறார். தொடக்கத்தில் (''எனது வாழ்க்கையில் அந்தண்மை இடம்பெற்றதா, இல்லையா?'' என்று) அவர் எழுப்பிய கேள்விக்கு அவரே இங்கே விடைசொல்லிவிட்டது கவனத்துக்குரியது. அவருடைய சமயவாழ்வைப் பற்றிய பகுதியும் இத் தகையதொரு குறிப்புடனேயே முடிவுறுகிறது.[12]

2.5. இதன்பிறகு மாதர், சீர்திருத்தம், தொண்டு என்னும் பகுதிகள் முறையே பேசப்படுகின்றன. இறுதியில் உடல் என்னும் பகுதியை அமைத்துத் தமது உடல்நிலை, அதன் வளர்ச்சி, தம்பால் அமைந்த பழக்கவழக்கங்கள் போன்றவற்றை விளக்கி வருகிறார் திரு. வி. க. முடிவிலே, இறுவாய் என்னும் பகுதி இந்த வாழ்க்கைக் குறிப்புக்களுக்கு முற்றுப்புள்ளியாக அமைகிறது.

2.6. தோற்றுவாய், பிறப்பு, கல்வி என்று தொடங்கி முறையாக வளர்த்துச் செல்லப்படும் இந்த வரலாற்றினூடேயும்

அரசியல், தொழிலியக்கம், சமயம் ஆகிய பகுதிகள் சிறிதே விம்மிப் பெருத்த தோற்றமளிக்கின்றன. பிறவற்றிற் காணப் படாததொரு விளக்க வலியுறுத்தப் பாங்கும் அவற்றிலே நிழ லிடுகிறது.[13] ஒவ்வொரு பகுதியின் முடிவிலும் உள்ள குறிப்பு, படிப்பவர்களை அடுத்த பகுதிக்கு ஆயத்தப்படுத்துகிறது என்ரு லும், அந்தக் குறிப்பு இல்லாமலே அப்படி ஓர் ஆற்றலைப் பெற்றிருப்பதுதான் தன் வரலாற்று இலக்கியத்தின் சிறப்பு. அந்த ஆற்றலை இந்த வரலாறு பெற்றிருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே, பகுதி முடிவுக் குறிப்பு மிகை என்றே கொள்ள வேண்டும்.

2.7. இந்த நூலின் கடைசிப் பகுதியிற் பின்வரும் குறிப்பைத் தருகிமுர் திரு. வி. க. ''வாழ்க்கைக்கு ஏதேனும் ஒரு செல்வம் தேவை. எச்செல்வமும் பெருத வாழ்க்கை வாழ்க்கையாகாது. என் வாழ்க்கை ஏதேனும் செல்வம் பெற்றதா? என் வாழ்க்கை ஒருவகைச் செல்வம் பெற்றது. அது தொண்டுச் செல்வம்.''[14] இதைப் படித்த உடனே, நாயகரின் அந்தண்மை கனிந்த வாழ்வு முழுவதும் நம் மனக்கண்களில் மீண்டும் விரிகிறது; அதிலே, காந்தத்தால் இழுப்புண்டு ஓடிவந்து அதனில் ஒட்டிக்கொள்ளும் இரும்புத் துகள்கள் போல், இந்த நோக்கிற்குத் தோதான நிகழ்ச்சிகளின் வரிசை மட்டுமே தெரிகிறது; இடைவந்த பிற குறிப்புக்களும் முடிப்புக்களும் நம் நெஞ்சில் வருவதே இல்லை. எனவே, தமிழில் வெளிவந்துள்ள தன்வரலாறுகளில் ''வாழ்க்கைக் குறிப்புக்கள்'' தனிச்சிறந்த ஓர் இடத்தைப் பெறுகின்றது.

3:1. 1944 இலேயே வெளிவந்த மற்ருெரு தன்வரலாறு, நாமக்கல் கவிஞரின் 'என் கதை'. ''என்னுடைய வாழ்க்கை யைப் பற்றிய சிற்சில நினைவுகளை எழுதிவைத்தால் பொழுது போக்காகப் படிப்பதற்கு மட்டுமாவது பயன்படலாம் என்ற ஆசையினுல் இந்த 'என் கதை'யை எழுதலானேன்; இது வாழ்க்கையின் வரலாறுகள் வரிசைக்கிரமமாக எழுதப்பட்ட சரித்திரம் அல்ல'' என்னும் முன்னுரையோடு[15] தொடங்கித், தமது வாழ்வின் பல நிகழ்ச்சிகளைச் சொல்லிச் செல்லுகிமுர் கவிஞர்.

3:2. 'என் கதை' திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள் போன்ற பொருட் பாகுபாட்டு அமைப்பிலேயே அடைவு செய்யப் பட்டுள்ளது. பிறப்பு, வளர்ப்பு, சித்திரக்காரரானது அலுவல், குடும்ப வாழ்க்கை என்பவை முதற்பகுதியாக உள்ளன; 1906 முதல் தொடங்கிய அரசியல் வாழ்வு அடுத்த பகுதியாக அமை கிறது; கவிஞராகவும், எழுத்தாளராகவும், உரையாசிரியராக வும் வாழ்ந்த வாழ்வு கடைசிப் பகுதியிற் சொல்லப்படுகிறது.

3.3. 'என் கதை' என்னும் இந்தத் தன்வரலாற்று நூல் ஒரு நாவல்போலத் தொடங்குகிறது. முதலாம் அத்தியாயத்தில் ஒரு குழந்தையின் பிறப்பைப்பற்றிச் சுவைபட விவரித்த ஆசிரியர், அதன் முடிவில், ''அந்தக் (குழந்தை) கறுப்பண்ணன் தான் நான்; என்னை என் தாயார் எப்போதும் கறுப்பண்ணு என்றுதான் அழைப்பார்கள்'' என்று சொல்லும்வரை[16] நாம் ஒரு புனைகதையைப் படித்துவருவதாகவே தோன்றுகிறது. நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுத்துள்ள முறை, அவற்றை விவரிக்கும் விதம், ஆசிரியருடைய தெளிந்த தமிழ்நடை எல்லாமாகச் சேர்ந்து 'என் கதை'க்குச் சிறப்பூட்டுகின்றன.

3.4. சுவைததும்ப நடக்கும் இந்த வரலாற்றில் ஒரு சிறிய குறையும் உள்ளது; நிகழ்ச்சிகளைக் கதைப்பாணியில் விவரிப்பது என்று முடிவுசெய்துகொண்டதாலோ என்னவோ, சில நிகழ்ச்சிகளைத் தேவைக்கு அதிகமாக நீட்டி விவரிக்கிறார் இவர். சான்றாக முன்பு சந்தித்திருந்த ஒரு பெண்ணை மீண்டும் சந்தித்த ஒரு நிகழ்ச்சி ஒன்றரைப் பக்க அளவில் விவரிக்கப்படுகிறது.[17] ஆனாலும், நிகழ்ச்சிகளை அப்படியப்படியே விவரித்துச்செல்லும் 'என் கதை' ஒரு சுவையான தன்வரலாறு என்பதிலே தடையில்லை. பொதுவாகத் தன்வரலாறுகளில் இடம்பெறும் 'அறிவுரை கூறும் போக்கு' இவருடைய தன்வரலாற்றிலேதான் முதன்முதலாகக் களையப்பட்டுள்ளது என்பதும் இந்த நூலுக்குள்ள ஒரு தனிச்சிறப்பு.

4.1. 1946இல் முதன்முதலாக அச்சேறிய வ. உ. சி.யின் சுயசரிதை முழுதும் அகவற்பாவால் அமைந்துள்ளது. நாட்டுச் சிறப்பு, நகரச்சிறப்பு, குடும்பவரலாறு என்னும் மூன்று சிறு பகுதிகளைத் தொடக்கமாகக் கொண்டு, நாயகரின் பிறப்பு முதல் அவர் 1912இல் சிறையினின்று விடுதலைபெற்றது வரையுள்ள நிகழ்ச்சிகளைத் தொடர்ச்சியாக விவரிக்கிறது இந்நூல்.

4.2. நூலின் செய்திகளைப் படித்துவரும்போதே நாயகரின் பீடுற்ற பேருருவம் நம் நெஞ்சில் நிலைத்துவிடுகிறது. பிறப்பைப் பற்றிய செய்தியிலேயே இந்தப் பெருந்தன்மை யதார்த்த நோக்கில் முகிழ்க்கிறது.[18] நாயகரின் பெருமைக்குத் துணையாக, அவரது பிறப்புக்கு முந்திய கனவுகளையோ, விரதங்களையோ, தீர்க்கதரிசனங்களையோ சொல்லாத போக்கு இதிலே முக்கியமாகக் கவனிக்கத்தக்கது.

4.3. தமது குறைகளைத் தம்முடைய பொறுப்பிலேயே ஏற்றுப் பேசுவது இவருடைய பண்பு: ''மதுரநாயகம் என்னும் மானிறை புலவன் சதுரமா எனக்குச் சாற்றினனாயினும் என்

னுடைக் குறையால் "இடறினேன் பரீட்சையில்'' என்பது[19] முதல், கப்பல் கம்பெனிக் கூட்டாளிகள் இவரை விலக்கிவிட்டுப் பின்னர் ஏஜெண்டாக நியமித்தபோது அதையும் ஏற்றுக் கொண்டதை, ''நன்றென மொழிந்தேன் நாணம் விடுத்தே'' என்று நினைவுகூருவது[20] வரையில், ஒவ்வோரிடத்திலும் தம்முடைய குறையை மறைக்காமலேயே பேசுகிருர்.

4.4. காவற்படையினர் முன்னும் பின்னும் இரண்டு பக்கங்களிலும் அணிவகுத்துநின்று தங்களைச் சிறைக்கு அழைத்துச் சென்ற நிகழ்ச்சியைக் கூட (தங்களுக்கு அளிக்கப்பட்ட அரச மரியாதை என்று) நகைச்சுவை ததும்பவும் தமது பெருமிதம் புலப்படும் விதமாகவுமே வருணிக்கிருர் வ. உ. சி.[21] அக்காலச் சிறைவாழ்வு கொடுமைகள் நிறைந்தது; இதை நினைந்தே, ''மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும், நூலோர்கள் செக்கடியில் நோவதுவும் காண்கிலையோ?''[22] என உருகினுர் பாரதி. வ. உ. சி.யே இந்நூலிற் பல இடங்களில் அக்கொடுமைகளை விவரித்துள்ளார்.[23] ஆயினும் சில கைதிகள் ஒன்று சேர்ந்து ஜெயிலர், சூப்பிரண்டெண்டு, டாக்டர் ஆகிய மூவரையும் கொலைசெய்வது என்று திட்டமிட்டபோது, ஒரு சிறந்த நீதிபதிக்குரிய நேர்மைத் திண்மையுடன், ''சூப்பிரண்டெண்டும் டாக்டரும் யாருக்கும் தீங்கு செய்வதில்லையே; ஜெயிலர்தானே கொடியவன்? அவனை மட்டும் வேலையை விட்டுப் போகும்படி செய்தால் போதுமே.'' என்று சொல்லியருளினுர் இப் பெருமகன்.[24] இந்த நிகழ்ச்சிகளே இவருடைய பெருந்தகைமையையும் பெருந்திண்மையையும் விவரிப்பனவாக அமைந்துள்ளன. இரண்டு வேறு காலக்கட்டங்களில் எழுதப்பட்டதானுலும், நாயகரின் மேற்குறித்த குணச்சித்திரத் தொடர்ச்சி குன்ருதவாறே நூல் அமைந்துள்ளது.

4.5. இவருடைய வாழ்வில் சுதேசிக்கப்பல் ஓட்டியதும், அதனுற் சிறைப்பட்டு இன்னலுற்றதும், அந்த இன்னல்களாலும் இவர் தளராதிருந்ததுமே முக்கியமான நிகழ்ச்சிகள். இந்தச் சுயசரிதையும் இவர் வாழ்வின் அந்தக் குறிப்பிட்ட பகுதியையே பேசுகிறது. எனவே, நாயகரின் பண்போவியம் முழுமைபெற்றுத் துலங்குமாறு அமைந்த இந்த நூலை ஒரு சிறந்த தன்வரலாறு என்று சொல்வதிலே தவறில்லை.

5.1. இதை அடுத்துத் தோன்றிய (தி. சே. சௌ. ராஜனின்) ''நினைவு அலைகள்'' என்னும் நூல் 1947இல் வெளிவந்தது. இந்த நூல் பலவகைகளிலே தமிழ்த் தன்வரலாற்றுத் துறையின் முதிர்ச்சியைக் காட்டுகிறது. வ. உ. சி.யைப் பெருமித மிக்க விடுதலை வீரராகக் காண்பதுபோலவே, இந்த

நூலின் நாயகரை ஒரு நடுத்தரக் குடும்பத்துச் சாதாரண மனிதனின் பண்புகளோடும் அவனுடைய வாழ்க்கைப் போராட்டங்களோடும் அப்பட்டமாகக் காண்கிறோம்.

5.2. ''முதற் சிறைவாசத்தின் பயனாகத் தேசிய லக்ஷியங்களுக்கென அல்லும் பகலும் விடாது உழைத்துவந்த மனப்பான்மை மாறிவிட்டது. கடன் தொல்லை அதிகரித்துவிட்டது. தொழில் நடத்தாமல் இருந்தால் தினசரி வாழ்க்கைக்கு வருவாயில்லை.''[25] இதன்விளைவாக, அவருடைய உள்ளம் பின்வரும் விதமாக ஒரு கேள்வியை எழுப்பியது: ''(அரசியல் தொண்டில்) உழைப்பவனுக்குச் சாப்பாடு, அவனைச் சார்ந்தவர்களின் சம்ரக்ஷணை, அவர்களின் நன்மை தீமை முதலியவைகளுக்குக் குறைந்தபக்ஷமான வருவாயாவது இல்லாமல் அவன் என்ன செய்யமுடியும்?......... ஊதியத்தை எதிர்பார்த்துப் பொதுஜன சேவை செய்வதில் இகழ்ச்சிக்கு உரியது என்ன என்று எனக்குப் புலப்படவில்லை.''[26]

5.3. பூணூல் போட்டுக்கொண்டதால் ஏற்பட்ட வைதிகத் தொல்லைகளை மனக்கசப்போடு விவரித்து,[27] அந்தச் சடங்கு சம்பிரதாயங்களை மீறி மேல்நாட்டுக்கும் வெளிநாட்டுக்கும் சென்றுவந்ததை எல்லாம் விவரித்த இவர், மீண்டும் ''பிராயச்சித்தம்'' செய்துகொண்டு பழைய வைதிக தருமத்துக்கே திரும்பிவிட்டதையும் முறையாக விவரிக்கிறார். ஏழு நிபந்தனைகளோடு கூடிய ஒப்பந்தத்தை வைதிகர்களோடு செய்துகொண்டு ''பிராயச்சித்தம்'' பெற்ற பிறகும்[28] ஊரிலிருந்த ஒரு குழுவினர் அதை ஏற்கவில்லை; இவருக்குப் ''பிராயச்சித்தம்'' பண்ணி வைத்த வைதிகர்களுக்கும் அவர்கள் தொல்லை கொடுத்தார்கள். ''அவர்களை மற்ற வைதிகர்களின் தொல்லையினின்று காக்க வேண்டி என்னை அறியாமலே நானும் அவர்களுக்குப் பக்கபலமான ஒரு லௌகிய வைதிகனாக மாறிவிட்டேன். எது செய்தாலும் செய்யாவிட்டாலும், தினசரி நாமம் போடுவதில் மட்டும் தவறுவதில்லை. தலையில் உச்சிக்குடுமி வைத்துக்கொண்டேன். என்னைச் சார்ந்த கோஷ்டியார் செய்யும் திருவிழாக்களிலும் ஆசார்ய வைபவங்களிலும் பங்கு எடுத்துக்கொண்டு உழைத்தேன்.'' தம்முடைய செயல்மாற்றத்தை இப்படி விவரிக்கிறார் ராஜன்.[29]

5.4. அவ்வப்போது தம்மோடு தொடர்புபட்டவர்களையும் சமுதாயங்களையும் பற்றி இவர் தெரிவிக்கும் விவரம் அல்லது கருத்துரை அளவாக இருக்கிறது: ''ஆங்கிலேயர்கள் சகிப்புத் தன்மை உள்ளவர்கள். அமைதியுடன் நடக்கும் திறமை அவர்க

ளுக்கு உண்டு; விடாமுயற்சியும் பிடிவாதமும் அதிகம். அதி நுட்பமான வேதாந்த விசாரணை, அதன்பின் அபிப்பிராயம், கொள்கை வித்தியாசங்கள், அதன் காரணமான பிரிவினைகள், போராட்டங்கள் இவைகளின் கொடுமைகள் அவர்களின் சமூகத்தைக் குலைத்துவிடவில்லை. காணக்கூடாத மறுஉலகத்தை நாடி, உயிர்வாழும் உலகத்தைத் துறக்க யத்தனிக்கும் மனப்பான்மை ஆங்கிலேய ஜாதியாரிடம் இல்லை.''[30] ''நந்தனுருடைய திவ்விய சரித்திரத்தை அல்லும் பகலும் கதாகாலக்ஷேபங்களாகவும் நாடகங்களாகவும் காதால் கேட்டும் கண்ணுல் கண்டும் ஆனந்தித்தும், ஹரிஜனங்களின்பால் உள்ள எண்ணம் எள்ளளவும் மாருது வாழ்வு நடத்தும் நம்மை என்னவென்று சொல்வது.''[31] ''பெரிய சீர்திருத்தக்காரரர் என்று கருதப்பட்ட கனம் ஸ்ரீநிவாசாச்சாரியார் ஹரிஜனங்கள் ஆலயப் பிரவேசச் சட்டத்தை எதிர்த்ததும் ஓரிடத்தில் சுருக்கமாகத் தெரிவிக்கப் படுகிறது.''[32]

5.5. இவைபோன்ற குறிப்புக்கள் அங்கங்கே அளவாக அமைந்து நூலுக்குச் சுவை தருவதுடன், பத்தொன்பதாம், இருபதாம் நூற்ருண்டுகளில் ஓர் இந்திய நடுத்தர வர்க்க மனிதனின் மனப்போக்கில் ஏற்பட்டிருந்த முரண்பாடுகளையும் விளக்குவனவாக உள்ளன. எதையும் தாமாகவே ஆராய்ந்து முடிவு செய்யும் இயல்பும் தன்னம்பிக்கையும் உடைய ஒருவரைக் கூட, சமய சமுதாயச் சம்பிரதாயச் சேறு உள்ளிழுத்து அழுத்த முனைகிறது; அவற்றிலிருந்து விடுபட முனையும் தனிமனிதன் சிலபோது வெற்றி பெறுகிருன்; சிலபோது தோல்வியும் பெறுகிருன். யதார்த்த நோக்கில் இவை சித்திரிக்கப்பட்டுள்ளதால், சமுதாய மாற்றத்திற்கான தேவையையும் அது ஏற்பட முடியாததற்கான தடைகளையும் சுட்டிக்காட்டும் ''நினைவு அலைகள்'' அருமையான ஒரு தன்வரலாற்று நூலாக உருவாகியுள்ளது.

6.1. இதை அடுத்து 1950இல் (புத்தகமாக) வெளிவந்த 'என் சரித்திரம்' நாயகருடைய வாழ்வின் முற்பகுதியை மட்டுமே சொல்லுகிறது. ஒரு பகுதியை மட்டும் சொல்லுவதாலேயே ஒரு தன்வரலாறு குறையுடையதென்று கருத இடமில்லாவிட்டாலும், டாக்டர் உ. வே. சாமிநாதையர் எழுதியுள்ள முறை, அவர் தமது வரலாற்றை மிக விரிவாக எழுதத் திட்டமிட்டிருந்தார் என்பதை உணர்த்துகிறது. இவருடைய வாழ்விற் சிறிதே தொடர்புபடும் (அல்லது தொடர்பே ப்டாத) ஒவ்வொருவருடைய வாழ்வும் மிக விரிவாகவே சொல்லப்பட்டுள்ளது.[33]

6.2. ''இந்தச் சரித்திரம் தனி ஒருவருடைய வரலாருக மாத்திரம் இருக்கவில்லை. இதனிடையே பல புலவர்களைத் தெளிவான உருவத்திற் பார்க்கிறோம். பல நல்லவர்களைக் காண்கிறோம். மடாதிபதிகளைப் பார்க்கிறோம். ஜமீன்தார்களும் செல்வர்களும் பக்தர்களும் வருகிறார்கள். சில சிறு மனிதர்களும் கயவர்களும் தலைநீட்டுகிறார்கள்.''[34] இத்தனைபேரின் வடிவங்களையும் துணைக்கொண்டு அமைந்த பெரிய மாளிகையின் மேற்கூரைபோல் அமையவேண்டிய ஐயரின் வரலாறு முழுமையாகச் சொல்லப்பட முடியாமற் போனதால் 'என் சரித்திரம்' ஓர் அரைகுறைக் கட்டிடமாகவே நின்றுவிட்டது.

7.1. இதே ஆண்டில் வெளிவந்த மற்றொரு தன்வரலாற்று நூல் சுத்தானந்த பாரதியாரின் ''ஆத்மசோதனை''. 620 பக்க அளவில் அமைந்த இந்த வரலாற்றில் உபதேசக்குரல் அங்கங்கே கேட்கிறது. அதுவும் மறைமுகமாகச் சொல்லப்படவில்லை; ''பெற்றோருக்கு எச்சரிக்கை'' என்று தலைப்பிட்டும்,[35] ''என் அருமைச் சகோதர சகோதரிகளே'' என்று விளித்தும்[36] சொல்லப்படுகிறது. தவிர, ''இரண்டு வயதுமுதல் நான் கண்டது கேட்டதெல்லாம் எனக்கு நினைவிருக்கிறது''[37] என்று இவர் சொல்லுவதும் நம்ப முடியாததாகவே உள்ளது.

7.2. நினைவு வருவதை எல்லாம் சொல்லிக்கொண்டு போகும் இந்த வரலாறு[38] ஒரு நினைவுக் குறிப்பேடு போலவே உள்ளது. சுத்தானந்தர் தம்முடைய வரலாற்றை 1957இல் மீண்டும் ஒருமுறை சிறிது மாற்றி எழுதியுள்ளார். அதன் தொடக்கத்தில் அவர் சொல்லியுள்ள பின்வரும் முகவுரை, இந்த நூலின் போக்கை ஒருவாறு உணர்த்தும்: ''இந்த ஜீவாத்மா நதி இன்ப துன்பக் கரைகளூடே, உலகின் குண தொந்த விகாரங்களூடே, கரடுமுரடான காட்டுப் பாதைகளூடே யாரையோ ''ஓம் ஓம்'' என்று தேடிச் சென்றுகொண்டிருக்கிறது. இந்த ஜீவநதி இருபதாண்டிலேயே கடலை அடைந்தும், இன்னும் தியான மலையினின்று ஓடி ஓடி மோனக்கடலைக் கலந்து கலந்து இன்னும் ஓடிக்கொண்டே இருக்கிறது.''[39]

7.3. இந்தக் குறிப்புக்கு ஏற்ப, இந்தத் தன்வரலாறு ஒருவகையான அதீதப் போக்குடனேயே எழுதப்படுகிறது. இவருக்கு ஏற்படப்போகின்றவற்றை எல்லாம் வயது வரிசையில் பூரணனந்தர் என்பவர் முன்கூட்டியே சொல்லிவிட்டதாகவும் அதன்படியே எல்லாம் நடந்துவருவதாகவும் சுத்தானந்தர் குறிப்பிடுகிறார்.[40] இடையிடையே ஆசிரியப் பணியிலும், அரசியலிலும், நூல் ஆக்கத்திலும் ஈடுபட்ட செய்திகளும் சொல்லப்படுகின்றன. முக்கிய நூலிற் போலவே, இந்த நூலிலும்

பல செய்திகள் எந்த நோக்கும் இன்றி, நினைவுகூரப்பட்டுள்ளன. ஆயினும் ஒரு துறவியின் வாழ்வு என்ற வகையில், இதன் நோக்கையும் போக்கையும் ஒருவாறு ஏற்கலாம்; உலகாயத நெறிகளிலேயே ஈடுபட்டு, அது தொடர்பான செய்திகளையே தெரிந்து வருபவர்களுக்குச் சற்றே வேறுவிதமான செய்திகளைத் தருவது இந்த நூலின் ஒரு புதுமை என்று சொல்ல வேண்டும்.

8.1. பம்மல் சம்பந்தமுதலியார் 1963இல் வெளியிட்ட ''என் சுயசரிதை'' என்னும் நூல் மிகச் சுருக்கமாக இருப்பதோடு, அதன் நடையும் நிகழ்ச்சிகளை விவரிக்கும் முறையும் அவ்வளவு புதுமையாக இல்லை. ஒவ்வொரு நிகழ்ச்சியை அல்லது மனிதரைப்பற்றிப் பேசும் முன்பும், ''என் தகப்பனுரைப்பற்றிச் சில வார்த்தைகள் எழுத விரும்புகிறேன்,''[41] ''இனி என் தாயாரைப்பற்றிச் சில வார்த்தைகள் எழுத விரும்புகிறேன்,''[42] ''இனி என் சொந்தக் கதையை ஆரம்பிக்கிறேன்''[43] என்பன போன்ற (தேவையற்ற) அறிமுகங்களைச் சேர்த்திருப்பதால் படிப்பதில் அலுப்புத்தட்டுகிறது.

8.2. சில நிகழ்ச்சிகளைச் சொல்லிவிட்டு அதனுற் பெறப்படும் உபதேசத்தையும் அங்கேயே செய்துவிடுவதும் இவர் வழக்கம். இவருடைய தகப்பனுரின் சாதகத்திற் குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சி அப்படியே நடக்காததைச் சொல்லிவிட்டு, ''சோதிடத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் இதைக் கவனிப்பார்களாக'' என்று சுட்டிக்காட்டுகிருர்;[44] மற்ருேரிடத்தில் நேரந் தவருமையைப்பற்றிய ஒரு நிகழ்ச்சியின் இறுதியில், ''இதை வாசிக்கும் எனது இளைய நண்பர்களாவது வெள்ளையர்களைப் போல் தாங்களும் என் விஷயத்திலும் குறித்த சூலக்கிரமப்படி நடக்கக் கற்றுக்கொள்வார்களாக'' என்று[45] எடுத்துச் சொல்லுகிருர். எனவே, நாட்குறிப்புப்போல் முறையாக இவருடைய சரிதத்தைச் சொல்லும் இந்த நூல் சுவையான தன்வரலாருக அமையவில்லை.

9.1. கண்ணதாசனின் ''வனவாசம்'' இதற்கு நேர்மாருக, இளமைத் துடிப்போடும் சுறுசுறுப்போடும் எழுதப்பட்டுள்ளது; கழிந்ததற்கு இரங்கும் ஒருவித வேதனையும் அந்தத் துன்ப நிலைக்குத் தன்னை ஆளாக்கியவர்கள் மீது எழும் ஆத்திரமும் பொங்கி எழுமாறு நடக்கிறது இந்த நூல். ''1943இலிருந்து 1961 ஏப்பிரல் வரை என் வாழ்க்கை நடந்தவிதம் இதில் வருணிக்கப்பட்டுள்ளது. சில உண்மைகளை நிர்வாணமாகக் காட்டியிருக்கிறேன்; சில துயரங்களைத் தாழ்வு கருதாது கூறியிருக்கிறேன்'' என்று நூலின் முன்னுரையில்[46] சொல்லுகிருர் ஆசிரியர்.

9.2. இளமைப் பருவத்திலே அவருக்கு ஏற்பட்ட ஆசைகளும், அவை சிலபோது நிறைவேறியும் சிலபோது தவறான வழியில் இழுத்துச் சென்றும் அவருடைய வாழ்வையும் அனுபவத்தையும் உருவாக்கிய வரலாறும் இடையிடையே எழும் சிந்தனைச் சுழிப்புக்களோடு (அதாவது, நிகழ்ச்சி மதிப்பீடுகளோடு) தெளிவாகவே சொல்லப்பட்டுள்ளன. இதைச் சொல்லலாம், இதைச் சொல்லக்கூடாது என்று நம் சமுதாயத்தில் இருந்து வரும் அரூயைத் தத்துவங்களை மீறி, தம்முடைய பாலியல் அனுபவம் முதல் எல்லாவற்றையுமே வெளிப்படையாகப் பேசுகிறார்.[47] இதில், ''நான் வனவாசம் என்று குறிப்பிடுவது ஓர் அரசியல் கட்சியில் நான் வாழ்ந்த வாழ்க்கையே ஆகும். அந்தக் கட்சியிலிருந்து வெளியேறியதோடு வனவாசம் முடிந்து விடுகிறது'' என்ற தலைப்புக்கு விளக்கம் தந்துள்ளார் கண்ணதாசன்.[48] திராவிட முன்னேற்றக் கழகமே இந்த அரசியல் கட்சி என்பது நூல் முழுவதும் தெரிகிறது. அந்தக் கட்சியின் தலைவர்கள் உள்ளொன்றும் புறம்ஒன்றுமாக நடிப்பவர்கள், ஒழுக்கக் கேடர்கள் என்னும் செய்திகளே நூலின் பெரும் பகுதி.[49] ஆனால் எந்தக் கருத்தும் நிகழ்ச்சிகள் வாயிலாகவே சொல்லப்படுகிறது; ஆசிரியரின் குறிப்பும் அங்கங்கே இடம் பெறுகிறது.

9.3. இந்தச் செய்திகளைப் படிக்கையில், இந்த வரலாறே குறிப்பிட்ட சிலரைத் தூற்றுவதற்காகத்தான் எழுதப்பட்டதோ என்னும் எண்ணம் உண்டாகிறது. ஆனாலும் ஏழைக் குடும்பத்திற் பிறந்த ஆர்வமுள்ள ஓர் இளைஞனின் வளர்ச்சி வரலாற்றில் ஏற்படும் அனுபவங்களும் அவற்றின் விளைவுகளும் அழகாகவே சித்திரிக்கப்படுகின்றன. எந்தக் கொள்கையுமில்லாமல் வளரும் ஓர் இளைஞன், சிறுகச் சிறுகப் பட்டணத் தொடர்புகளும் தலைவர்களின் அறிமுகமும் ஏற்பட்டு, ஒரு கட்சியின் கொள்கைகளுக்கு முழுமையாக ஆட்படும் வரலாறும் சிறப்பாகச் சித்திரிக்கப்படுகிறது. எனவே, சுவையான தன் வரலாறுகளுள் ''வனவாச''த்துக்கும் ஓர் இடம் உண்டு.

10. "திரு. வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள்'' ஆய்வுநோக்கில் அமைந்து அவருடைய வாழ்வின் நோக்கத்தை வரையறுக்கிறது. நாமக்கல்லாரின் ''என்கதை'' நீதி போதனை என்ற தன்முனைப்பு இன்றிச் சுவைமலி வரலாறாக உருவெடுத்துள்ளது. வ. உ. சி.யின் ''வ. உ. சி. சுயசரிதை,'' தி. சே. சௌ. ராஜனின் ''நினைவு அலைகள்,'' கண்ணதாசனின் ''வனவாசம்'' ஆகியவை இன்றைய சமுதாயத்தில் ஒரு தனிமனிதன் மேற்கொள்ள வேண்டியிருக்கும் போராட்டங்களை எதார்த்த நோக்கிற் சித்திரிப்பவை. திரு. வி. க. வின் நினைவாற்றல், வ. உ. சி. யின் குறை

வாழ்விலும் ஒரு நிறைவு, கண்ணதாசனின் எதையும் மூடி மறைக்காது வெளிப்படுத்துந் தன்மை ஆகியவை தன் வரலாறு இலக்கியமாகாது என்று சொல்வோரின் காரணங்களைப் பல மிழக்கச் செய்து விடுகின்றன. உணர்ச்சி குன்றுமற் சொல்லிச் சுவையூட்டுவது, எதார்த்த நோக்கிற் சித்திரிப்பது, வாழ்க்கைக்கு ஓர் இலக்கைக் காட்டுவது ஆகிய இலக்கியத்தின் கூறுகள், "என் கதை", "நினைவு அலைகள்", "வ.உ.சி சுயசரிதை", "திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள்" முதலியவற்றிற் குறைவின்றி நிறைந்துள்ளன. இவ்வாறு இலக்கியக்கூறுகள் ஒன்றோ பலவோ பெற்று, படைப்பவர்களுக்கு ஓர் இன்பத்தையும் படிப்பவர்களுக்கு ஓர் உணர்வெழுச்சியையும் தருவனவாக அமைந்திருப்பதாலே தமிழிலுள்ள தன் வரலாறுகள் பலவற்றைத் தகுதிசான்ற இலக்கியங்களாகக் கொள்வதில் எந்தத் தடையுமில்லை.

மேற்கோள் குறிப்புக்கள் :

1. John A. Garraty: The Nature of Biography, New York (1957), p. 26.
2. Steinberg, S. H. (Ed): Cassell's Encyclopaedia of Literature Vol. I, London (1953), p. 62—63.
3. Ibid, p. 63.
4. Ibid, p. 63.
5. Sir Sidney Lee: Elizabethan and Other Essays, Wimbledon (1929), p. 36.
6. Arthur H. Nethercot: The last Four Lives of Annie Besant (1963).
7. திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள், சென்னை (2ஆம் பதிப்பு 1969), பக்கம் 8.
8. (i) வையாபுரிப்பிள்ளை எஸ்.: அகராதி நினைவுகள், சென்னை (1950), பக்கம் 42.
   (ii) டாக்டர் மு. வரதராசன்: திரு. வி. க., சென்னை (1962), பக்கம் 49.
   (iii) கோ. சண்முகசுந்தரம்: தமிழ்ப்பொழில், தஞ்சை (ஏப்பிரல்/மே 1961), பக்கம் 15.
9. திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள், சென்னை (1969), பக்கம் 6.

10. மேற்படி நூல், பக்கம் 453.
11. மேற்படி நூல், பக்கம் 584—585.
12. மேற்படி நூல், பக்கம் 683—684.
13. மேற்படி நூல், பக்கம் 350—383; பக்கம் 553—576; பக்கம் 586—684.
14. மேற்படி நூல், பக்கம் 961.
15. நாமக்கல் கவிஞர்: என் கதை, சென்னை (3ஆம் பதிப்பு 1955), முன்னுரை, பக்கம் 5.
16. மேற்படி நூல், பக்கம் 9.
17. மேற்படி நூல், பக்கம் 78—79.
18. வ. உ. சி. சுயசரிதை, சென்னை (1946), பக்கம் 6.
19. மேற்படி நூல், பக்கம் 11.
20. மேற்படி நூல், பக்கம் 54.
21. மேற்படி நூல், பக்கம் 94.
22. பாரதியார் கவிதைகள் (சக்திப் பதிப்பு), சென்னை (1957), பக்கம் 47.
23. வ. உ. சி. சுயசரிதை, சென்னை (1946), பக்கம் 89; 91—92; 105—107.
24. மேற்படி நூல், பக்கம் 121—122.
25. தி. சே. சௌ. ராஜன்: நினைவு அலைகள், சென்னை (1947), பக்கம் 253.
26. மேற்படி நூல், பக்கம் 254.
27. மேற்படி நூல், பக்கம் 34.

தமிழரின் இலக்கியத் திறனாய்வுமுறை— சில அறிமுகக் குறிப்புக்கள்

சு. கலா பரமேஸ்வரன்

சிறந்த இலக்கியங்கள் தோன்றி வளர்ந்த ஒரு மொழியிலே இலக்கிய ஆய்வு முறைகளும் இயற்கையாக எழுவது தவிர்க்க முடியாததே யெனினும், தமிழிலே தெளிவாக இனங்கண்டு கொள்ளக்கூடிய இலக்கியத் திறனாய்வுமுறை இருக்கின்றதா என்பது பிரச்சினைக்குரிய ஒரு விடயமாகவே இருந்து வருகின்றது. 'புலநாவிற் பிறந்த சொல் புதிதுண்டு', சங்கம் அமைத்துக் கவி படைத்தும், சிறந்த இலக்கிய மரபுகளை வகுத்துச் சீரிய இலக்கியங்களை யெல்லாம் தொகுத்தும், அவற்றுக்கெல்லாம் பேருரை வகுத்தும், தமிழையும்கூட முத்தமிழ் எனப் பகுத்தும் உயரிய கலைநுகர் தன்மைகொண்டு வாழ்ந்தோரிடம் இலக்கியத் திறனாய்வுமுறை இருக்கவேயில்லை என்பது எந்த அளவிலே பொருந்துமென ஆய்தல் பயனுடையதாகும். மேற்கத்திய முறையையொட்டிய தனியான திறனாய்வுமுறை தமிழிலே இல்லாமலிருந்தாலும், பண்டைய தமிழ் இலக்கியங்களை நுணுகி ஆயும்போது அங்கே இலக்கியத்துடன் இலக்கியமாக இணைந்து ஓரளவு மறைபொருளாகவும், ஆனால் தன்மைகள் ரீதியிற் சுலபமாக வகுத்துக் காட்டக்கூடியதுமான ஓர் இலக்கியத் திறனாய்வு முறையைத் தெளிவாக இனங்கண்டுகொள்ள முடியும். இது பற்றிய சில அறிமுகக் குறிப்புக்களைத் தருவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

திறனாய்வு இலக்கியமுறை தமிழ்நாட்டிலே தோன்றவேயில்லை என நமதுகாலத் திறனாய்வாளர் சிலர் கருதுகின்றனர்.[1] மேலைநாட்டை ஒட்டிய இலக்கிய விமரிசனம் தமிழிலே இல்லவே இல்லை யென்று அழுத்தமாகக் கூறுவார் பேராசிரியர் முத்துச்சிவன்.[2] ஆனால் இலக்கியத் திறனாய்வுக்குரிய முறைகளைத் தமிழர் அறியவேயில்லை என்று கூறுவது பொருந்தாது.[3] உண்மையிலே இலக்கியத் திறனாய்வு தமிழுக்குப் புதிய துறையன்று.[4] திறனாய்வு

விமரிசனம் போன்ற பதப்பிரயோகங்கள் பண்டைத்தமிழ் இலக்கியங்களிலே தென்படா விட்டாலும்[5], பல திறனாய்வு முறைகளை அவர்கள் கையாண்டுள்ளமையை நிறுவக்கூடியதாக வுள்ளது. 'பாடலுட் பயின்றவை நாடுங் காலை' எனத் தொல் காப்பியத்தில் அடியொன்று வருகின்றது.[6] பாடலுட் பயின்ற வற்றை நாடுவதும், முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணு வதும்[7] திறனாய்வுக்குரிய முதனிலைகளேயாம். இலக்கியத் திற னாய்வுப் பாங்கு தமிழிலே ஆங்காங்கு தென்பட்ட முறையையும், அவ்வெண்ணக்கரு வளர்ந்த வகையையும் திரு. ஏ. வி. சுப்பிர மணிய ஐயர் தமது 'தமிழாராய்ச்சியின் வளர்ச்சி' என்ற நூலில்[8] ஓரளவு கோடிட்டுக் காட்ட முனைகின்றாரெனினும் இது பற்றி முழுமையான ஆய்வு இதுவரை நிகழ்த்தப்படவில்லை.

தமிழிலே ஏன் தெளிவாக இல்லை?

தமிழிலே தனியான திறனாய்வு மரபு மிகவும் பிற்காலம் வரை தோன்றாததற்குக் காரணமாக இருந்தது முதனூலாரின் பேரறிவிற்கு அளிக்கப்படும் அளவிறந்த மதிப்பு மரபாகும் என்பர். ''இது பின்னுள்ளோர் கூறிய நூற்கு எல்லாம் முதனூ லாதலின் தொல்காப்பியனாரை மாறுபடுதல் மரபன்று என்க''[9] என நச்சினார்க்கினியர் தமது செய்யுளியலுரையிற் கூறுவது இதனை விளக்கும். நூல் குற்றமுடையது போலத் தோன்றினும் அதற்குக் குணத்தைக் கற்பிக்கும் மரபு இதனாலேயே தோன் றிற்று. பண்டு தமிழ்நாட்டில் நிலவிவந்த நூல் அரங்கேற்ற முறை திறனாய்வினைத் தடுத்த மற்றொரு காரணியாகும். அத் தகைய அரங்கேற்ற முறையில் மன்றத்து இலக்கியச் சுவை ஞரின் நியாயமான பிரச்சினைகளுக்குச் செவி சாய்த்து நூலைச் செப்பம் செய்யும் வாய்ப்புக்கள் அதிகம் இருந்திருக்க வேண்டும். எப்போதும் குணத்தையே நாடிப் போற்றும் தமிழ்மரபு திற னாய்வு நோக்கை மழுங்கச் செய்தது என்பது அந்த அளவு பொருந்தாது எனலாம். அன்றைய எழுத்துமுறைப் பிரச்சினையை நோக்கியும், மாணவரது உய்த்துணரும் ஆற்றலின் பெருக்கங் குறித்தும் இலக்கிய விடயங் குறித்துச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தலே அன்றுதொட்டு வழக்காக இருந்துவந் துள்ளது என்பதற்கு ஆதாரங்கள் உள.

திறனாய்வு முறை;

''ஒரு கலையாக்கத்திலிருந்து ஒருவர் பெறும் அனுபவ உணர்வைத் தெளிவுபடுத்தி, மதிப்பிட்டு மற்றோர்க்கு உணர்த் துவதே திறனாய்வாகும். இது அழகியல் அனுபவத்திலே இயற்கை யாகவும், தவிர்க்க முடியாததாகவும் அமையும் ஒன்றாகும்,[10]

என்று அமெரிக்க ஆங்கிலக் கலைக்களஞ்சியம் இரத்தினச் சுருக்கமாகக் கூறும். திறனாய்வாளர் சிரிய மதிநுட்பத்துடன் இலக்கியத்தைக் கற்று, சிருஷ்டியாளரின் உள்ளத்து உணர்ச்சி அனுபவத்தைச் சீராகப் புரிந்துகொண்டு அதனைப் பிறர்க்கு உணர்த்தல் வேண்டும். கருத்து வெளிப்பாடுகளை இலகுவாகப் பற்றிக் கொண்டு அவற்றின் அடிப்படைகளைத் தெளிவாகப் புரிந்து பகுக்கக்கூடிய ஆற்றலும், கூர்மையான நோக்கால் அரியவற்றையும் எளியனவாக அறியும் மனப்பக்குவமும், நல்லதையும் அல்லதையும் பேதித்தறியும் மதிநுட்பமும் மிக்கு விளங்குதல் திறனாய்வாளருக்கு முக்கியமானவை.[11] அதன்வழி, படைப்பின் உயிரான அம்சங்களிலும் கருத்துக்களிலும் ஒளிபாய்ச்சிக் கலைத் தன்மையை வெளிக்கொணர்ந்து அவற்றை மதிப்பிடல் வேண்டும். எனவே, இத்தகைய திறனாய்வாளனின் திறனாய்வுக் கோட்பாட்டுக்கு இலக்கியத்தின் மதிப்புப் பற்றிய அறிவும், அதனை உணர்த்தும் திறன் பற்றிய அறிவும் இரு தூண்களாக அமையும் என்பர்.[12] எனினும் திறனாய்வை அமைக்கச் சில இலக்கியக் கொள்கைகள் பெரும்பாலும் வேண்டப்படுவதால் இல்க்கியத் திறனாய்வு இலக்கியக் கொள்கைகளை உள்ளடக்கியதாகக் கொள்ளப்படும் என்பதைச் சிலர் மனங்கொள்வதில்லை.[13] இத்தகைய திறனாய்வுக்கு முடிவு செய்யும் ஆற்றல் மிக முக்கியமானதாகும்.

தமிழ் இலக்கியக்காரர்கள் கையாண்ட திறனாய்வு முறைகளை மேற்கத்தைய முறையை யொட்டிச் செலுத்து நிலைத் திறனாய்வு (Inductive Criticism), பகுப்புமுறைத் திறனாய்வு (Analytical Criticism), பாராட்டுமுறைத் திறனாய்வு (Appreciative Criticism) எனப் பகுக்கமுடியும். முடிபுமுறைத் திறனாய்வினை (Judicial Criticism) தமிழர் கையாண்டது வெகு குறைவு என்றே கொள்ளலாம். செலுத்துநிலைத் திறனாய்வு என்பது இலக்கியத்தை ஆராய்ந்து அதனினின்றும் அவ் விலக்கியத்திற்கு மரபும் விதியும் அமைத்துக்கொண்டு, அவற்றைப் பேணும் வகையிலே அவற்றிற்கு இயைய இலக்கியம் அமைந்துள்ளதா என ஆய்தலாகும். எல்லா இலக்கியங்களிலும் ஆரம்பத்திலே தோன்றும் திறனாய்வு முறை இதுவேயாம். கிரேக்க இலக்கியத்திலே அரிஸ்டாட்டில் காலத்தில் எழுந்தவையும், ஆங்கில இலக்கியத்திலே எலிசபெத் காலத்திலும் சிறிது பின்னரும் தோன்றியவையும்,[14] தமிழிலக்கியத்திலே தொல்காப்பியர், நன்னூலார் காலங்களில் வெளிப்படுத்தப்பட்டவையும் இத்தகைய திறனாய்வு முறைகளே எனக் கொள்ளலாம். படைப்பிலக்கியத்தின் நல்ல பகுதிகளையும் படைப்பாளனையும் ஆயும்

பாராட்டுமுறைத் திறனாய்வும், நூலின் பல பகுதிகளையும் அவை ஒன்றுடன் ஒன்று பொருந்தும் வகையையும் ஆயும் பகுப்பு முறைத் திறனாய்வும், பெருமளவு தமிழாசிரியர்களால் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

தமிழிலே திறனாய்வின் தோற்றமும் வளர்ச்சியும்:

தமிழிலக்கிய வரலாற்றிலே பண்டைக்காலத்திலே ஒரு புலவரின் பாடலை மற்றையோர் படித்துத் திறனாய்வு செய்யும் முறை எவ்வகையிலிருந்தது எனக் கூறமுடியாமல் உள்ளது. ஆனால், கிடைக்கும் ஆதாரங்களிலிருந்து அரங்கேற்றமுறையிலே நூல்கள் நன்கு ஆய்வு செய்யப்பட்டிருக்கவேண்டும் எனலாம். சங்கப் பாடல்களிற் கபிலரின் கவித்திறமையைப் போற்றும் சில வரிகளும், பரணர் மாங்குடிமருதனார் ஆகியோரின் பெயர்ப் பிரஸ்தாபமும் மட்டும் ஆங்காங்கே வருகின்றன. ஆனாலும் சங்கப் பாடல்களில் நயமும் சுவையும் உள்ள பாடல்களை ஓர் அடிப்படையுடன் எட்டுத்தொகை பத்துப்பாட்டு எனத் தொகுத்தவகையிலும், நாயன்மார் ஆழ்வார் பத்திப் பாடல் களைத் திருமுறைகளாகவும் திருவாய் மொழிகளாகவும் தொகுத்த வகையிலும் அவர்களின் இலக்கிய ரசிகப்பாங்கு ஓரளவு தென்படுகின்றது என்பர். மேலும், பண்டைத் தமிழ் நூல்களிற் காணப்படும் பாயிரங்களையும் பதிகங்களையும் சிறிய அளவிலான திறனாய்வுகள் என்பர். இதற்குச் சிறந்த உதா ரணம் அகநானூற்றுப் பாயிரமாகும். இத்தகைய ஒரு மரபின் கொடுமுடியாக அமைந்து வெளிவந்த 'திருவள்ளுவமாலை', திருக்குறளைப் பல கோணங்களிலிருந்து ஆயும் பாடல்களைக் கொண்டதாகும்.[15] இதேபோன்று மணிப்பிரவாள நடையி லுள்ள திருவாய்மொழி வியாக்கியானங்கள் பாசுரத்தை யனு பவித்த பத்தர்களின் கவிதையனுபவத்தைக் காட்டுகின்றன.[16] எனக் கூறப்பட்டாலும் கூட தமிழிலக்கியத்தின் சிறந்த கவித் துளிகளைக் கொண்ட திருவாய்மொழிப் பாடல்களும் கம்ப ராமாயணப் பாடல்களும் அக்காலத்து இலக்கிய ஆய்வாளரான உரையாசிரியர்களையோ பிற இலக்கியச் சுவைஞர்களையோ கவராததற்கும் அவைபற்றித் திறனாய்வு அல்லது மேற்கோட் பாடல்கள் தோன்றாமைக்கும் சமய மாறுபாடு மட்டும் ஒரு காரணமாக இருக்கும் எனத் திட்டமாகக் கூறமுடியாது.

திறனாய்வு வரலாறு:

'இலக்கியத் திறனாய்வு' வளர்ந்த வரலாற்றை ஆயுந்துறை தமிழுக்குப் புதியதாயினும் மற்ற மொழிகளிலே இத்துறையிலே எண்ணற்ற நூல்கள் வெளியாகிவருகின்றன. இலக்கியம் பற்றிய

கருத்து வெளிப்பாட்டினையும், கருத்து மோதலையும் கொண்ட அத் திறனாய்வு வரலாற்றிலே ஒரு தொடர்ச்சித்தன்மையும் தெளிவும் வெளிப்படுதல் முக்கியமானதாகும். இலக்கியத் திறனாய்வு வரலாற்றிலே இலக்கிய வகைபற்றிய கருத்துக்களும் இலக்கியக் கோட்பாடுகள்மீது ஒளிபாய்ச்சுதலும் முக்கிய மானவை என்பர்.[17] இவ்வகையிலே திறனாய்வு வரலாறானது இலக்கியம் பற்றிப் பகுத்து அறிகின்ற கருத்துக்களின் வரலா றாகவே விளங்கும். இலக்கியத் திறனாய்வு எல்லா இலக்கியக் கொள்கைகளையும் உள்ளடக்குமாறு கொள்ளப்படுவது வழக்க மாகிவிட்டதென்பது இவ்விடத்தில் மனங்கொள்ளத்தக்கது. தொல்காப்பியரின் ஆய்விலும், பின்பு உரையாசிரியர்களின் திறனாய்வு மரபிலும் இலக்கியக் கொள்கைகள் தெளிவாக ஆய்வுசெய்யப்பட்டுள்ளமை அவர்களின் ஆராய்ச்சி வன்மையைச் செம்மையாகப் புலப்படுத்திநிற்கின்றது.

தொல்காப்பியரின் இலக்கியக் கோள்கை:

பண்டைத் தமிழ்ப் புலவரின் அடிப்படையான இலக்கியக் கோட்பாடுகளையெல்லாம் நூற்றுக்கணக்கான நூற்பாக்களிலே திட்பமானவாக்கில் ஆழ்ந்த சிந்தனைப் பண்புடன் தொல்காப் பியர் வரைந்திருக்கின்றார்.[18] பனம்பாரனார் கூறுவதுபோல முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணியும், பாடலுட் பிறந்தவை நாடியும் இலக்கியப் பொருளைத் திரட்டியும், இலக்கியத் தன்மையை ஆய்ந்தும் இவர் வகுத்த விதிகள் வெறுமனே இலக்கணம் எனப் புறக்கணிக்கப்பட முடியாதன. உலகியல் வழக்கிலமைந்த மக்களின் அகப்புறப் போராட்டங்கள் சார்ந்த வாழ்வின் இயக்கங்களும் உணர்ச்சிகளுமே 'நாடக வழக்கு' எனப்பட்ட கலைமெருகுடன் கூடி 'புலநெறி வழக்கம்' என்ற தொல்காப்பியரின் இலக்கியக் கோட்பாடாகின்றது. அகம் புறம் என்ற புலநெறி வழக்கின் இரு பெரும் பிரிவுகளும், தமிழ் நாட்டில் ஐந்திணை நெறியளாகி, முதல், கரு, உரி என்ற பாகு பாட்டிற் பல துறைகளாக விரிக்கப்படுகின்றன. மேற்கத்தைய இலக்கியத் திறனாய்வாளர் கருதுவதுபோல ஒவ்வொரு அகப் பாட்டினையும் நாடகநிலையாக வைத்து ஆயும் மரபினைத் தொல் காப்பியர் கொண்டுள்ளார்.[19] அதற்கியையக் கூற்றுக்கு உரியோர், கேட்போர், மெய்ப்பாடு, சூழ்நிலை ஆகியவற்றைத் தொல்காப் பியர் விளக்குவர்.

தொல்காப்பியர் யாப்பின் வகைகளைக் கூறும் தமது நூற் பாவில் யாப்பாவது பாட்டு முதற்பட்ட ஏழனடியாகத் தமிழ் நாட்டிலே வழங்கும் செய்யுள் மரபு எனக் குறிப்பிடுவதன் மூலம் ஓர் இலக்கியம் என்பது பலதிறப்பட்ட பாக்களையும்

நூல்களையும் கொண்டது என்பதைக் காட்டுகின்றார். ஒரு நூலை நன்குணர்ந்து இன்புறுதற்குரிய பத்து அழகுகள், நூலில் வரத் தகாத பத்துக் குற்றங்கள், ஆசிரியர் திறம்படச் செறித்துக் கூறிய நுட்பங்களை உணர்த்தற்குத் துணைபுரியும் முப்பத்திரண்டு உத்திகள், இவையெல்லாம் தொல்காப்பியராற் கூறப்படுகின்றன.[20] பழந்தமிழரின் உள்ளக் கிளர்ச்சிகளிற் பாட்டிற்குச் சிறந்தனவற்றை மெய்ப்பாடுகள் எனக் கொண்டு அவற்றை இலக்கியத்துடன் இயைபுறப் பொருத்தினர். ஓர் இலக்கிய ஆக்கத்தின் இறுதி அங்கங்கள் பலவும் ஒருங்குபட அமைதலாலே தோன்றும் தொகுதியழகை 'வனப்பு' எனக் குறிப்பிட்டு, வனப்பின் அம்சங்கள் பலவற்றையும் சிறப்பாக விளக்குதல் அவர் காலத்து இலக்கியத் திறனாய்வின் பெற்றியைக் காட்டி நிற்கின்றது. கவிதையின் மற்ற அம்சங்களுக்கு மேலாக 'இழுமென் மொழியால் விழுமியது நுவலல்' எனக் கவிதையின் பொருளமைப்பைத் தொல்காப்பியர் சிறப்பிப்பது இலக்கியத்தைக் கருத்துக்கள் பொதிந்த ஒரு வடிவமாகக் கருதுவதற்கு இடமளிக்கின்றது. மேற்கத்தைய இலக்கியத்தில் அரிஸ்டாட்டில் தோற்றுவித்ததையொத்துத் தொல்காப்பியர் இலக்கியத்தில் அவயவிக் கொள்கையை (Organic Theory) முன்வைத்தார்.[21] தொல்காப்பியரைப் பின்னுள்ளோர் பின்பற்றிச் சீரிய இலக்கியங்கள் படைத்தபோதுங்கூட, சோழர்காலத்தின் பின் பெருமளவில் ஏற்பட்ட வடமொழிச் செல்வாக்கால் இந்நிலையில் மாற்றம் ஏற்பட்டது.

உரையாசிரியர்கள் பங்கு:

தமிழ் இலக்கியத் திறனாய்வைப் பொறுத்தவரையிற் பண்டைத் தமிழ் உரையாசிரியர்களின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். ஒருவகையில் உரையாசிரியர்களைச் சிறந்த திறனாய்வாளராகவும் அவர்களின் உரைகளிற் பெரும் பகுதிகளைத் திறனாய்வுகள் எனவும் கூறுவதிலே தவறில்லை.[22] படைப்பாளனின் உள்ளக்கிடக்கையை நுணுகியாராய்ந்து தெளிவுபெற எடுத்தெழுதும் வன்மையாளரே உண்மை உரையாசிரியராவார் எனக் கருதப்பட்டது.[23]

> ''சூத்திரத் துட்பொரு ளன்றியும் யாப்புற
> வின்றி யமையா தியைபவை யெல்லாம்
> ஒன்ற உரைப்பது உரைஎனப் படுமே.''[24]

என்பர் தொல்காப்பியர். இவர்கள் கருத்துரையும் பொழிப்புரையும் கூறுவதுடன் நிற்காது தமது உரைகளிற் பல இலக்கியக் கொள்கைகளைக் கூறுவர்; தாம் எடுத்துக்கொண்ட

நூலின் சிறப்பான அனுபவ உணர்வுகளை உட்புகுந்து ஆய்வர். இவ்வுணர்வு புலப்படுத்துவதில் உள்ள கலையம்சங்களைப் புலப் படுத்திக் கற்பனைச் சிறப்புக்களை ஒப்புமையுடன் வெளியிடுவர். இலக்கியப் பாத்திரங்களின் பண்புகளை ஆய்வர். சொற்களுக்கு உண்மைப் பொருள் கூறுவதுடன் அவ்வப்போது சொற்பிர யோகங்களின் சிறப்பையும் தகுதிப்பாட்டையும் ஆய்வர். உரையெழுதப் புகுந்த நூல்களில் உள்ள இயைபின்மைகளுக்கு அமைதிகாணும் வகையிலே மாணவர்க்கு விளக்கங்கள் அளிப்பர். உரையாசிரியர்கள் முதனூலாசிரியரின் குற்றங் குறைகளைக் கண்டிக்க முனையவில்லையேயன்றிப் பிரச்சினைக்குரிய இலக்கிய விடயங்களிலே தம்மையொத்த இலக்கிய ஆய்வாளருடன் கருத்துச் சமர் புரிந்து, திர்க்கமான கண்டனங்களைப் பரஸ்பரம் வீசியதிலிருந்து அவர்களது ஆய்வு வன்மையும் ஆளுமைச் சிறப்பும் செவ்வனே தெரிகின்றன. இது இவ்வாறிருக்கையில் மேலைநாட்டு விமர்சனம் போலன்றி நமது நூல்களுக்கு வாய்த்த விமர்சனம் பதப்பொருள், இலக்கண நுட்பங்கள் இவற்றை உணர்த்துவதுடன் நின்றுவிடுகின்றது எனப் பேராசிரியர் முத்துச் சிவன் கூறுவது எவ்வகையிலும் பொருந்தாததொன்றேயாம். உரையாசிரியர்களும் ஒருவகையிலே மேலைப்புலத் திறனாய் வாளரையொத்துக் கவிதையின் இயல்பான தன்மைகளைச் சுட்டிய அதேவேளையிலே, ஓரொருகால் கவிதையெழுந்த பகைப்புலத்தினை ஆயவும் முனைந்தனர் என்பர் தனிநாயக அடிகள்.[24அ]

முஸ்லிம்களின் தென்னகப் படையெடுப்பினையடுத்துப் பண்டைய கலை இலக்கியச் செல்வங்களைப் பேணவேண்டும் என்ற முனைப்புத் தமிழகம் எங்கணும் தலைதூக்கிய நிலையிலே 'சென்ற காலத்தின் பழுதிலாச் சிறப்பை'ப் பேசும் செவ்விய நிலை இலக்கியங்களை (classics) மரபு குன்றாது சான்றோர் கூறிய வாறு விளக்குவதும், அவ்வழி அவர்களின் சுவைநுகர்வுப் பாங்கினை மேம்படுத்திப் பண்டைச் செல்வங்களைப் பேண உந்து தல் அளிப்பதும் வரலாற்றுத் தேவையாக இருந்திருக்கவேண்டும். இந்நிலையில் உரையாசிரியரின் ஆய்வு முயற்சிகள் நயக்கத்தக்க வகையில் எழுந்தன. மேலும் அன்றைய நிலையில் வடமொழிச் செல்வாக்கினாலே தமிழிலக்கிய வளர்ச்சி பாதிக்கப்படுவதைத் தடுப்பதும் உரையாசிரியர்களின் முக்கிய நோக்கமாக இருந் திருக்கவேண்டும்.[25]

தமிழுரையாசிரியர்கள் பலருள்ளும் இலக்கியத் திறனாய்வுத் துறையிற் பெரிதும் ஈடுபட்டு உழைத்தவர்கள் பேராசிரியர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர், நச்சினார்க்கினியர் ஆகியோ

ராவர். பேராசிரியர் ஒரு புதிய உரையாசிரிய பரம்பரையையே தொடக்கிவைத்தார் என்றும், அடியார்க்குநல்லார், நச்சினார்க் கினியர் ஆகியோர் இவர் பரம்பரையைச் சேர்ந்தவரென்றும், இப் பரம்பரைத் தொடர்பாற் பரிமேலழகர் பல்கலைப் புலமை பெற்றார் என்றும் கூறுவர்.[25அ] பேராசிரியர் பரம்பரையினரின் இலக்கியத் திறனாய்வு முயற்சிகள் விரிந்த ஆய்விற்குரிய விடய மாகும்.

தமிழ்த் திறனாய்வும் இலக்கியக் கொள்கைகளும்:

இலக்கியத் திறனாய்வு என்பது இலக்கியக் கோட்பாட்டுடன் பின்னிப் பிணைந்தது என்பது நாம் ஏற்கெனவே அறிந்த தொன்றே. அரிஸ்டாட்டில் காலந்தொட்டுப் பொதுவான இலக் கியத் திறனாய்வு வரலாற்றிலே, திறனாய்வானது இலக்கியக் கோட்பாடு பற்றிய கருத்து மோதல்களிற் பலவகைப்பட்ட வாதங்களையும் பிரதிவாதங்களையும் கண்டுள்ளது. தமிழ் இலக் கியத்திலும் உரையாசிரியர்களாற் பவவகைப்பட்ட இலக்கியக் கோட்பாடுகள் முன்வைக்கப் பட்டுள்ளமையுடன் கருத்துமோதல் களும் நிகழ்ந்திருக்கின்றன.

பண்டைய இலக்கியப் பொருளமைப்பை அகம் புறம் எனப் பிரிவு செய்தமை உரையாசிரியர்களின் சிந்தனையைத் தூண்டி, அவற்றுக்குப் பலவிதமான விளக்கங்களை அளிக்கச் செய்திருக் கின்றது. அவை சங்கப்புலவரின் உட்கிடக்கையை ஆயமுனையும் கருத்துரைகளாக உள்ளன.

இலக்கியத்தில் உணர்த்தப்படும் பொருள்கள் கருத்துப் பொருள்கள் எனவும், காட்சிப் பொருள்கள் எனவும் இரு வகைப் படும் என்பர். இதனையொத்து உணர்த்தப்படும் பொருள்பற்றிய பகுப்புமுறையினைக் களவியலுரையிலே காணக்கூடியதாக வுள்ளது.[26]

கலை இலக்கியங்களானவை அவற்றின் அழகியல், வாழ்வியற் பயன்பாடுகளுக்குப் புறம்பாக அறம் முதல் நாற்பொருளையும் சிறப்பிக்கும் நோக்குடன் கூடியவை என்ற கருத்து, பண்டைய இலக்கிய ஆசிரியரிடமிருந்திருக்கின்றது. இலக்கியத்தில் எடுத்துக் கொள்ளப்படும் பொருள் பல நோக்கங்களுடன் கூடியதென் பதை இளம்பூரணர் தமது தொல்காப்பிய உரையிற் 'பொருள்' என்பதற்குக் கருத்து விளக்கம் அளிக்கும்போது எடுத்துக் கூறுவர்.

"......அறம் பொருள் இன்பம் வீடு என உலகத்தோரும் சமயத்தோரும் கூறுகின்ற பொருள் யாதனுள் அடங்குமெனின் அவையும் உரிப்பொருளினுள் அடங்கும்...... உலகத்தில் நூல்

செய்வார் செய்கிறது அறிவிலாதாரை அறிவு கொளுத்த வேண்டி யன்றே: யாதானும் ஒரு நூல் விரித்தோதிய பொருளைத் தாமும் விரித்தோதுவராயின் ஓதுகின்றதனுற் பயன் இன்றும்......''[27]

நூல் செய்யப்படுவதன் நோக்கம், அதனுல் எய்தப்படும் பயன் பற்றிய பிரஸ்தாபம் இங்கே எழுந்தமை எமது சிந்தனை யைத் தூண்டுவதாகும். இதற்கு ஒருபடி மேற்சென்று, இலக் கியம் அறம் முதல் நாற்பொருளையும் நிலைநிறுத்தும் நோக் குடையதாகும் என்ற கருத்தினை நிறுவ முனைவதனையே நச்சினர்க் கினியரது உரையிலே பல இடங்களிலே கண்டுகொள்ள முடி கின்றது[28].

கவிதையிலே புலப்படுத்தப்படும் உணர்வுகளுக்கும் உலகியல் வாழ்வின் உண்மை உணர்வுகளுக்கும் உள்ள தொடர்பின் தன்மை பற்றிய கருத்து வேறுபாடு அரிஸ்டாட்டில் காலத்திலேயே ஆரம்பித்தது என்பர்.[29] பண்டைய இலக்கியப் பொருளான புலநெறி வழக்கம் மெய்ம்மைநெறி சார்ந்த உலகியல் மரபாலும் புனைந்துரை சார்ந்த நாடக வழக்காலும் புலப்படுத்தப்படும் என்பர் தொல்காப்பியர்.[30] இப் புலநெறி வழக்கம் உண்மையில் எதனை வெளிக்காட்டுகின்றது என்பது அன்றைய தமிழிலக்கியக் காரரிடை கருத்து வேறுபாடுகளை ஏற்படுத்தி யிருக்கின்றது. இதனை ''இல்லது இனியது நல்லது என்று புலவரால் நாட்டப் பட்டதோர் ஒழுக்கம்'' என்பர் களவியலுரையார். ஒரு காலத்தில் அல்லது ஓரிடத்தில் நிகழும் ஒரு செயற்பாட்டை மற்றொரு காலத்தில் அல்லது மற்றொரு இடத்தில் நிகழ்ந்த தாகப் படைத்துக்கொள்ளும் கற்பனையாற்றலை யொத்து, எக் காலத்திலும் எவ்விடத்தும் இல்லாததைப் படைக்கும் கற்பனை யையே 'இல்லது புனைதல்' எனக் களவியலுரையார் கருதுகின்ருர் போலத் தெரிகின்றது. இத்தகைய முழுக் கற்பனையையே நல்லது என்றும் இனியது என்றும் புலவர் தமது இலக்கியப் பொருளாகக் கொண்டுள்ளனர் என்பதே களவிய லுரையாரின் கருத்தாம்.

நச்சினர்க்கினியர் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. 'இல்லது' என்பதனை எதிர்த்துக் கூறும் அவரது கருத்துக்கள் தீர்க்க மானவை; சுவையானவை.

''......புனைந்துரை வகையிற் கூறுப என்றலின் புலவர் இல்லனவுங் கூறுபவாலோவெனின், உலகத்தார் நன்மை பயத் தற்கு நல்லோர்க்குள்ளனவற்றை ஒழிந்தோர் அறிந்தொழுகுதல் அறம் எனக் கருதி, அந் நல்லோர்க்குள்ளனவற்றிற் சிறிதில்லன வும் கூறுதலின்றி, யாண்டும் எஞ்ஞான்றும் இல்லன கூருர்.....''[31]

'சிறிது இல்லன கூறுதல்' என்ற நச்சினார்க்கினியரின் கற்பனையே தொல்காப்பியரால் உண்மைத் தலைவனை அமைத்து இல்லாத நிகழ்ச்சியைக் கற்பித்தல் என்றும், இல்லாத தலைவனைக் கற்பித்து உள்ள நிகழ்ச்சிகளைக் கற்பித்தல் என்றும் இருவகைக ளாகக் கூறப்படும். இலக்கியத்தின் பயன்பாடு கருதி அளவான கற்பனையைக் கலத்தலே புலவர் சிறப்பு என்பதனை நச்சினார்க் கினியர் இங்கே வலியுறுத்துகின்றார். இதனாலே பெருமளவு மெய்ம்மைத்தன்மை சார்ந்த சமுதாய இலக்கியமே நெடிது வாழும் என்ற சீரிய கருத்தை அளவிறந்த வடமொழிப் பற்றுக் கொண்டிருந்த நச்சினார்க்கினியர் வெளியிட்டுள்ளார். மேலும்,

> ''......இப் புலநெறி வழக்கினை இல்லது......என்னாமோ வெனில் இல்லது கேட்டோர்க்கு மெய்ப்பாடு பிறந்து இன்பஞ் செய்தாகலானும் உடன் கூறிய உலகியல் வழக்கத்தினை ஒழித்தல் வேண்டுமாகலானும் அது பொருந்தாது......''

என்று நச்சினார்க்கினியர் கூறுகின்றபோது இலக்கியத்தின் இன்பப் பயன்பாடு தெளிவாகக் கூறப்படுகின்றது. காதல் ஒழுக்கம் ஐந்திணை மக்களிடத்தும் உலகியலால் நடந்த ஒழுக்கம் என்பதனை ''......ஐம்புலத்து வாழ்வார் மணமுஞ் செய்யுளுட் பாடியக்கால் இழுக்கின் றென்றான்......''[32] எனக் கூறுவர்.

பெருமளவு உலகியலையொட்டி ஐந்து நிலங்களிலும் அவ்வந் நிலங்களுக்கேற்பச் சிறப்பான உணர்வு வெளிப்பாடு நிகழும். ஒவ்வொரு காலப் பிரிவினையும் (பெரும்பொழுது, சிறுபொழுது) தொல்காப்பியர் சுருங்கக் கூறுவர்.[33] இவற்றுக்கு உரை விளக்கந் தரும் நச்சினார்க்கினியர் அவ்வந் நிலங்களுக்குரியவாக ஒவ் வொரு வகை இயற்கைச் சூழ்நிலையை வகுத்தமைக்கு உரிய காரணங்களை மெய்ம்மையான சமூக நோக்குடன், இலக்கியத்தை நடைமுறை வாழ்க்கையுடன் இணைத்து, தெளிவான விளக்க வுரை வழங்குவார். மிகவும் பிற்காலத்திற்றோன்றிய நச்சினார்க் கினியரையொத்த ஆய்வாளர் ஒருவர், சங்ககாலத்து மக்களது உள்ளத்தையும், வாழ்க்கைப் போக்கையும், அளவு நிலைகளையும் அறிந்து இவ்வாறு விளக்கவுரை தருதல் அவரது திறனாய்வுத் தகைமையையே புலப்படுத்துகின்றது. கலை, சிறப்பாக இலக்கியம், உண்மையைத் தனக்குரியதாகக் கொள்ளும் என்ப தனை அன்றைய இலக்கிய ஆசிரியரே உணர்ந்திருந்தமையினை இது காட்டிநிற்கின்றது.

இதையொத்து, பேராசிரியரின் தொல்காப்பிய மெய்ப்பாட் டியல், செய்யுளியல் உரைகளைக் கற்கும்போது ஆங்காங்கு அவ ருடைய இலக்கியக் கோட்பாடுகளையும் திட்பமான இலக்கியத் திறனாய்வுக் கருத்துக்களையும் காணமுடிகின்றது. நேரடியான

பொருள் கூறுதலுக்குப் புறம்பாக, பல்சுவையும் நிரம்பியதாகத் தமது உரையை அமைத்த பரிமேலழகர்கூட இலக்கியத்தின் பண்பும் பயனுங் குறித்துப் பல கருத்துக்கள் தெரிவித்துள்ளமையினை அவரது திருக்குறளுரையிலிருந்து கண்டு தெளியலாம்.

மரபுக்கோல்கை :

தமிழுரையாசிரியர்களுட் பலரும் இலக்கியத்திலே மரபு பேணப்படவேண்டும் என்ற கருத்தைப் பெரிதும் கொண்டவர்களாக மட்டுமல்ல, அதனை உறுதியாக வற்புறுத்திய வகையில் மரபின் பாதுகாவலர்களாகவும் விளங்கியுள்ளனர். 'மரபு என்பது, காலமும் இடனும் பற்றி வழக்குத் திரிந்தக்காலுந் திரிந்தவாற்றுக்கு ஏற்ப வழுப்படாமை செய்வதோர் முறைமை' எனப் பேராசிரியர் கூறுவர்.[34] தொல்காப்பியர் தமது நூல் எங்கணும் மரபிற்கு அளித்த முக்கியத்துவமும், பிற்காலத்திலே தமிழ் இலக்கிய நெறிமுறைகளைப் பாதிக்கும் வகையிலே வடமொழி இலக்கியக்காரரும் பிறரும் செயற்பட்டமையுமே மரபைப் பாதுகாக்கும் விடயத்தில் உரையாசிரியரைப் பெரிதும் ஈடுபடுத்தியிருக்க வேண்டும்.

பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் தமது உரைகளிற் சங்க மரபைச் சான்றோர் மரபு என மேம்படுத்திய அதேவேளையிற் பிற்காலத்திய மரபுகளைக் கண்டித்தனர். மரபினை மீறிவருவன பற்றிக் குறிப்பிடுகையில், 'அவை சான்றோர் செய்யுள் அல்ல என மறுக்க' என்றும், 'அங்ஙனம் வந்தது பிற்காலத்துச் செய்யுள் என்ப' என்றும் மறுப்புரை கூறுவர். பேராசிரியரின் அடியொற்றி இலக்கியங்களை மரபினடியாகச் சான்றோர் இலக்கியங்கள், பிற்காலத்திய இலக்கியங்கள் எனத் தெளிவாக வேறுபடுத்திப் பார்க்குந் தன்மை கொண்டிருந்த நச்சினார்க்கினியர்[35] தமது காலம் வரையிலும் புதிதாகத் தோன்றிய இலக்கிய இலக்கணக் கருத்துக்களையும் மரபுகளையும் ஏற்றுக்கொள்ளத் தயங்குகின்ற போக்கும், அவற்றுட் பலவற்றை வன்மையாக எதிர்க்கின்ற பாங்கும் கொண்டிருந்தார். 'அடையாளப்பூக் கூறியமையினால் நெடுநல்வாடை புறத்திணைச் சார்ந்ததே' என்றவாறு கருதியவர், தீவிர மரபுணர்வினாலே செம்பாகமான உரைக்குப் புறம்பாக ஆசிரியருக்குக் கட்டளையிடும் பாங்கிலே, 'புலநெறி வழக்கின்மையின் செய்யற்க', 'முன்னுள்ளோர் கூறியவாறன்றிக் கூறப்படாது'[36] என்றெல்லாம் எழுதுவர். 'காப்பியம்' என்ற வடமொழிப் பதத்தை ஏற்ற அடியார்க்கு நல்லாரிடமும், வடமொழி அலங்கார முறைகளுக்கியையக் கவிநலன்களைக் கூறும் பரிமேலழகரிடமும் இத்துணை மரபுத் தன்னுணர்வு இருந்திருக்கவில்லை எனலாம்.

இலக்கியப் பொருளின் சிறப்பு:

பண்டைத் தமிழ் இலக்கிய ஆய்வாளர் 'புலநெறி வழக்கமாகிய இலக்கியப் பொருள் மரபினை முதல், கரு, உரி என மூன்றாகப் பாகுபடுத்தியபோதுங்கூட, இலக்கியத்தின் உணர்வனுபவமான பொருளை 'உரிப்பொருள்' எனச் சிறப்பித்தனர். உரிப்பொருள் பற்றிய தொல்காப்பியர் நூற்பாவுக்குப் பொருள் விளக்கம் கூறும் நச்சினார்க்கினியர் ''இச்சிறப்பானே முதலின்றிக் கருவும் உரிப்பொருளும் பெறுவனவும், முதலுங் கருவுமின்றி உரிப்பொருள் பெறுவனவுங் கொள்க ..... இங்ஙனங் கூறவே உரிப்பொருளின்றேற் பொருட் பயனின்றென்பது பெற்றாம்.....'' என எழுதுவர்.[37]

இலக்கியக் கோட்பாடானது அனுபவத்திலே நிலைகொள்ளலானது, திறனாய்வு வரலாற்றிலே மிகவும் முக்கிய இடம் பெறுகின்றதொன்றாகும் என்பர். இலக்கியத்தின் உட்பொருளான அனுபவமே இலக்கியத்தின் மற்ற எல்லா அம்சங்களிலுந் தலையாயது என்பதனை நன்குணர்ந்த உரையாசிரியர்களுள்ளே நச்சினார்க்கினியர் தலையாயவராவர். இவ்வகையில், இலக்கியத்துட் புலப்படுத்தப்படும் பொருள் வெளிப்பாட்டை முக்கியமாகக்கொண்டு தமது உரையினை நடாத்திச்செல்வர். நூலாசிரியருடைய கொள்கையையும் அவர் கருத்தையும் அறிய வேண்டியளவு உழைத்தறிந்து அவற்றிற்கேற்ப உரையெழுதுவார். ஒரு நூலை முழுமையாகச் சிங்க நோக்காக நோக்குதல் இவர் தனிச்சிறப்பு என்பர்.[38] 'இலக்கண உரையாசிரியர்' என்பதிலும் பார்க்க 'இலக்கிய உரையாசிரியர்' என்ற வகையிற் சிறப்பாகக் கொள்ளப்படக்கூடிய நச்சினார்க்கினியர் இலக்கிய ஆக்கங்களிலே உள்ள தலையாய உணர்வினைத் தமது சங்க உரை நூல்களிலே வெவ்வேறிடங்களிலே விளக்கி உரைத்தலை நாம் காணக்கூடியதாகவுள்ளது.

தலைவன் காதலியைப் பிரிந்து வேற்றுப் புலத்துக்குப் புறப்படும்போது அவளின் பிரிவுணர்வு தரக்கூடிய துன்ப நிலையை நினைந்து தனது பயணத்தை நிறுத்தும் பாங்கைக் காட்டும் வகையிலே பிரிவுணர்வைச் சிறப்பிக்கும் பட்டினப்பாலையிலே 301 அடிகளிலும், ஆக ஆறே அடிகளே அகப்பொருள் பற்றியனவாக இருக்கவும், பாட்டின் உயிரான அனுபவத்தினைக் கருதி அதனை 'அகப்பாடல்' என்றே நிறுவ முனைவர் நச்சினார்க்கினியர். பாட்டிலே மன்னன் சிறப்பும் நாட்டுப் பெருமையும் பிற உணர்வுகளும் புலப்படுத்தப்பட்டுள்ள போதுங்கூட, அவையெல்லாம் பிரிவுணர்வையே சிறப்பிக்கின்றன என்பதைக் கருதிய நச்சினார்க்கினியர் 'முதலும் கருவும் கூறாமல் உரிப்பொருளே

சிறக்கும்படி கூறியது' என விளக்குதல் அவரது திறனாய்வு வன்மையைப் புலப்படுத்தி நிற்கின்றது.

நெடுநல்வாடையின் பொருளேயும் பெயர் விளக்கத்தையும் கூறும் நச்சினர்க்கினியரின் உரைப்பகுதியின் தொடக்கம் வெறும் சொற்பொருள் விளக்கமாக இல்லாமற் பாட்டின் உயிரான அனுபவப் பொருளேச் சிறப்பிப்பதாக அமைந்துள்ளதனே நாம் மனங்கொள்ள வேண்டும். இதனே 'மரபு' கருதி அகப்பாட்டல்ல என நச்சினர்க்கினியர் கூற முனேந்தாலும் பாட்டின் தலேயாய அனுபவத்திற்கு ஒளி பாய்ச்சத் தவறவில்லே. முல்லேப் பாட்டு உரையின் தொடக்கத்திலே தரும் பொருள் விளக்கமும் இவ்வகையிலமைந்ததேயாகும்.

இவ்வாறெல்லாம் பாட்டின் தலேயாய அனுபவப் பொருள் களேக் கோடிட்டுக் காட்டி அவற்றைப் படிப்போர் மனத்திற் பதியும்படி கூறுந் திறனாய்வாளனின் ஒரு கடமையைச் செவ்வனே செய்துள்ளார் நச்சினர்க்கினியர்.

செய்முறைத் திறனாய்வு :

தமிழுரையாசிரியர்கள் தமது உரைகளிலே இலக்கியம் பற்றித் தெரிவித்த கருத்துக்களேயும் பொருட்புலப்பாடு பற்றி அளித்த விளக்கங்களேயும்விட, ஒரொருகால் செய்முறைத் திறனாய்விலே ஈடுபட்டுள்ளமையினேயும் கண்டுகொள்ள முடிகின்றது. செய்முறைத் திறனாய்வு கவிதை சம்பந்தப்பட்டதாக அமையும் போது, கவிதையின் அமைப்பும் அதன் பல்வேறு இயல்புகளும் நெருங்கிய ஆய்வுக்குள்ளாகின்றன. கவிதையின் பல்வேறு கூறு களேத் தனித்தனி இனங்கண்டுகொள்வதுடன் அவ்வுறுப்புக்களே யெல்லாந் தொகுத்து அவை குறிக்கும் உன்னதமான கவியுள் ளத்தைக் காண்பதே செய்முறைத் திறனாய்வின் மெய்ம்மைப் பண்பாகின்றது.[39] காப்பியத்தைப் பொறுத்தவரையிற் காப்பியப் பொருள், அதன் அமைப்பு, கதை வளர்ச்சி, நிகழ்ச்சியியைபு, பாத்திர வளர்ச்சி ஆகியவற்றைக் காண்பது இன்றியமையாத தாகின்றது. பேராசிரியர் பரம்பரையினர் இவ்வகைகளிலே திறனாய்வு புரிந்துள்ளனர்.

நேரிதானதும் திட்பமானதுமான கருத்து வெளிப்பாட்டைத் தமது தனிச்சிறப்பாகக் கொண்ட பேராசிரியர், விமரிசன ஆற்றல் பெரிதும் கைவரப் பெற்றவராவர். தொல்காப்பியர் செய்யுளுறுப்பாகக் கூறிய அங்கங்கள் பலவும் சங்க இலக்கியத் தில் அமைந்துள்ளவகையைத் தமது செய்யுளியலுரையில் விளக்கும்போதும், உவமவியல் மெய்ப்பாட்டியல் ஆகிய இயல் களிலே தரும் விளக்கக் குறிப்புக்களின்போதும் பேராசிரியரின்

திறனாய்வு வன்மையைக் கண்டுகொள்ள முடிகின்றது. எனினும், சொற்களுக்கு உண்மைப் பொருள் கண்டு கூறுந் திறமும், சொற்பிரயோகங்களின் சிறப்பினை விளக்கும் அழகும் அவரது திருக்கோவையாருரையிற் பெரிதும் வெளிப்படக் காணலாம்.

பரிமேலழகர் எழுதிய உரைநூல்களுள்ளே அவரது திருக்குறளுரை சிறப்பானது என்பர். திருக்குறளுக்குத் தோன்றிய எல்லா உரை நூல்களினும் அதற்குத் தனிமதிப்பு தொன்று தொட்டு இருந்து வருகின்றது. திருக்குறளின் அமைப்புமுறை குறித்து—பால்வகுப்பு, இயல் பிரிப்பு, அதிகாரவைப்பு ஆகியன பற்றி — செவ்விதாக விளக்குவதுடன், ஒவ்வொரு குறளுக்கும் பொழிப்புரையும் விசேடவுரையும் எழுதிக் குறளின் பொருள் வெளிப்பாட்டையும் கவிநயங்களையும் கலையம்சங்களையும் வெளிக் கொணர்வர். திருக்குறளிற் பயின்றுவரும் சொற்களை ஆராய்ந்து அவற்றின் பொருளையும் சிறப்பையும் நிலைநிறுத்தலிற் பரிமேலழகருக்குச் சிறந்த ஆற்றல் இருந்தது.

அடியார்க்கு நல்லாரும் நச்சினார்க்கினியருந் தமிழ்க் காவியங்களான சிலப்பதிகாரத்திற்கும் சீவகசிந்தாமணிக்கும் முறையே எழுதிய உரைகள், பல திறனாய்வு முறைகளைக் கொண்டவை எனலாம். மேலைநாட்டுத் திறனாய்வாளரைப்போல, அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்தைப் பல்வேறு கோணங்களிலே ஆய்வர். சிலப்பதிகாரத்தின் காப்பிய அமைப்பு, கதைப் போக்கு, பாத்திரப் பண்புகள் முதலானவற்றை எல்லாம் திறனாய்வு நோக்கிலே விளக்குவர். நச்சினார்க்கினியரும் தமது சீவகசிந்தாமணியுரையிலே, கதைத் தொடர்பையும் பாத்திர வளர்ச்சியையுங் கொண்டு பல விளக்கங்களை அளிப்பதுடன் காப்பியத்தின் கற்பனைச் சிறப்பும் உணர்வு நலனும் உவமை முதலாம் படிம அமைப்புஞ் சீராகப் புலப்படும்வண்ணம் விளக்கங்கள் அளிப்பர். இவ்வகையில் அவரின் சங்க உரைநூல்களிலும் பார்க்கச் சீவகசிந்தாமணியுரை பல திறனாய்வு முறைகளைக் கொண்டது, மரபுமுறைகளுக்குட்பட்ட சங்கநூல்களிலும் பார்க்கச் சீவகசிந்தாமணியுரையிலே சிறிது சுதந்திரமாகத் திறனாய்வு செய்யும் வாய்ப்பு நச்சினார்க்கினியருக்கு இருந்திருக்க வேண்டும் எனத் தெரிகின்றது.

இவ்வாறு பண்டைத்தமிழர் இலக்கியத்தைப் பற்றி அவ்வக் காலச் சமுதாய, கால நோக்கிற்கியையப் பல கருத்துக்களை வெளியிட்டும், இலக்கிய ஆக்கங்களின் தலையாய உணர்வையும் பொருளையும் சிறப்பாகச் சுட்டியும், ஒரொருகால் அவற்றின் கற்பனை கலா அம்சங்களைத் தெளிவுற விளக்கியும் பலவகைகளில் இலக்கியத் திறனாய்வு புரிந்ததனைக் காணக்கூடியதாக இருக்

கின்றது. எனினும், அவர்கள் இலக்கிய ஆக்கங்கள் பற்றி எவ்வகையிலும் முடிவான மதிப்பீட்டினைக் கொண்ட முடிபு முறைத் திறனாய்வினைக் கையாண்டு, தமது ஆளுமையை வெளிக் காட்டும் வகையிலே முழுமையான திறனாய்வாளராகச் செயற் பட முடியாமற் போனமைக்குச் சில காரணங்களைக் கூறலாம். மரபுக்குக் கொடுத்த மதிப்பும், அதன்வழி நூலாசிரியருக்குப் புகழ் தேடும் நோக்கும், இலக்கணத்துடன் எதனையும் பொருத்திப் பார்க்குந் தன்மையும், அக்காலத்து அறக்கருத்துப் போன்ற சமுதாய மதிப்பீடுகளுக்கு (Social Values) அவர்கள் கொடுத்த முக்கியத்துவமும் என்பனவே அவை. இன்றைய கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது இக்காரணிகள் இவர் களை உண்மையான திறனாய்வாளருக்குரிய தன்மையிலிருந்து குறைத்துவிடுகின்றன என்றுகூடக் கூறிவிடலாம்.

நச்சினார்க்கினியரின் தனித்துவமான அம்சங்களைவிட்டு, அன்றைய திறனாய்வாளரின் பிரதிநிதியாக நச்சினார்க்கினியரை எடுத்துக்கொண்டு அக்காலத்திய திறனாய்வு முறையின் முக்கிய குறைபாடுகளை நோக்கலாம்.

முன்னைய சங்கத்தாரின் ஆழ்ந்த ரசனைப்பாங்கிலும் அகத் தியனார் தொல்காப்பியனார் போன்றோரின் பேரறிவிலும் கொண் டுள்ள அளவிறந்த ஈடுபாட்டாற் சில இடங்களிலே கவிஞரின் குற்றத்தின் பாங்கினைச் செம்மையாக ஆய்வுசெய்ய முனையாமை யுடன், குற்றத்தையும் குணம் எனக் கொள்ள முனைவதனையும் நச்சினார்க்கினியரின் உரைப்பகுதிகளிற் காணலாம். மலைபடு கடாத்திலே 'தீயினன்ன ஒண்செங்காந்தள்' என்ற தொடரிலே[40] தலைவன் நன்னன் என்ற பெயர் தீயொடு சேர்ந்து வருதலின் இது ஆனந்தக்குற்றம் என ஆளவந்தபிள்ளை கூறிய கருத்தை நச்சினார்க்கினியர் மறுத்துரைக்கும்போது எழுதிய வரிகள், இவரது மதிப்பீட்டு அளவுகோல்களைப் புலப்படுத்துகின்றன.

இதனையொத்துப் பாடாண்திணையில் ஒரு துறையான 'கொடுப்பா ரேத்திக் கொடாஅர்ப் பழித்தல்' என்பதனை விளக்கும் பொருளியல் நூற்பாவுக்கு இளம்பூரணர் முதலானோர் நேரடிப் பொருள் கூறவும், நச்சினார்க்கினியர் பொருள் ஈயாதா ரைப் பழித்துப்பாடும் புலவர் வழக்கத்திற்கு நல்ல நோக்கத் தைக் கற்பிக்க முனைவர்.[41]

திறனாய்வாளன் என்ற வகையில் நூல்நுவலும் பொருளைக் கருத்திருத்தி, அது தன் கருத்துப் புலப்பாட்டுச் செயற்பாட்டிலே தோல்வியுறும் இடங்களையும், நேரிதான இயற்கைப் பண்பு, கலையுணர்வு போன்றன குன்றிச் செல்லும் வகையிற் பொருள் நடந்துசெல்லும் இடங்களையும் சுட்டிக்காட்ட வேண்டியது

அவசியமாகின்றது. திறனாய்வாளனின் அத்தகைய கடமையி லிருந்து சிறிது விலகிச் சென்று, இயற்கைப் பண்பும் கலையுணர் வும் குன்றிவரும் இடங்களையெல்லாம் தமது திறமையாற் சரி செய்ய முனைதல் ஒரு திறனாய்வாளனுக்கு ஆகாததேயெனினும், அவ்வகையில் நடக்கும் பாங்கு அன்றைய தமிழ்த் திறனாய் வாளரான உரையாசிரியரின் தனிப்பண்பாக விளங்கியது. சீவக சிந்தாமணியிலே ஆசிரியரின் கருத்தும் உணர்வும் மாறுபடுவது போலவோ பொருந்தாவகையிலே தென்படுவதுபோலவோ தோன்றுகின்ற வேளைகளிலே, நச்சினார்க்கினியர் கொண்டு கூட்டல் முறையாலும், நூலில் வராத சொற்களைத் தாமாக வருவித்து வினைமுடிபு கூறுவதாலும் மூல ஆசிரியரைக் குற்றத்தி லிருந்து காக்க முனைவர். பரிமேலழகரும் திருக்குறளிலே வழுப் பாடு தோன்றுவதுபோலத் தெரியுமிடங்களிலே வழுக்களைக் களையும் வகையிலும், பொருட்பொருத்தங் குன்றிவரும் இடங் களிலே பொருட்பொருத்தம் தோன்றும் வகையிலும் தமது உரையினை அமைப்பர். இவற்றை விரிப்பின் கட்டுரை மேலும் விரிவடையும்.

முதனூலாருக்கு அளித்த அளவிறந்த மதிப்பும், சங்க இலக் கியங்களுட் பெரிதும் திளைத்துப்பெற்ற பன்னூற் பயிற்சியும் உரையாசிரியரை இலக்கியத்தில் விதிமுறையையும் மரபு நெறி களையுமே சிறப்பாகப் போற்றும் விதிவழித் திறனாய்விலும், இலக்கியத்தின் பல்வேறு பகுதிகளையும் அவற்றின் பொருத்தப் பாட்டை ஆயும் பகுப்புமுறைத் திறனாய்விலும் பெரிதும் ஈடு படுத்தின. விதிவழித் திறனாய்விற் பெரிதும் ஈடுபட்டுழைத்த நச்சினார்க்கினியர், பத்துப்பாட்டிற்கும் கலித்தொகைக்கும் உரை கூறும்போது அவை எவ்வெவ் வகைகளிலே தொல்காப் பியரின் இலக்கண வரம்புகளுக்கு உட்பட்டுப் பாடப்பட்டுள்ளன என ஆய்வதிலே கவனம் செலுத்தினார். இவ்வகையிலே நச்சி னார்க்கினியர் இலக்கிய ஆசிரியனின் கவியுள்ளம் உணர்ச்சி வெளிப்பாடு போன்றவற்றிலும் பார்க்கப் பாடல்களின் விதி முறைச் சார்பினையும் இயைபினையும் கூடுதலாக மதிக்கின்றாரோ எனச் சிந்திக்க வேண்டியுள்ளது.

இலக்கியத் திறனாய்வு என்ற பதத்தின் பொருள் விரிவு பெற்று, சில தசாப்தங்களுக்கு முன்னாக ஐரோப்பிய முறைகள் சார்ந்த 'நவீன தமிழ்த் திறனாய்வு' தோன்றும் வரைக்கும் பண்டைத்தமிழ்த் திறனாய்வு மரபின் செல்வாக்குத் தமிழ்த் திறனாய்வாளரிடை இருக்கத்தான் செய்தது. உணர்ச்சியும் உருவமுமே கவிதைக்குப் பிரதானமானவை எனக் கொண்டதும் இரசனை முறையில் அமைந்ததுமான டி. கே. சி. யின் இரசிக

விமரிசன முறையிலும், மேற்கத்தியத் திறனாய்வின் சில அம்சங்களைக்கொண்டு பழந்தமிழ் நூல்களை ஆய்ந்த வ. வெ. சு. ஐயர், மறைமலையடிகள் முதலானோரின் திறனாய்வு முறையிலும் உரையாசிரியர்களின் திறனாய்வு முறைகளின் தடங்களைக் காணக் கூடியதாக இருக்கின்றது. விதிமுறைத் தளையிலிருந்து விடுபட்டதாகவும், காலப்போக்கிற்கியைய விளக்கப்பாங்கானதாகவும் இருந்தபோதுங்கூட இவையும் ஒருவகையிலே தனிமனித வாதத்துடன் கூடிய இலக்கிய விருத்தியுரைகளே எனக் கூறலாம்போலத் தெரிகின்றது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, திறனாய்வு என்பது இலக்கியத்திலே அவ்வக் காலத்தினரின் போக்கிற்கும் தேவைக்கும் இயைய அமைவது என்பதனையும், ஒரு தனிக்காலப் பிரிவின் அல்லது தனியொரு ஆசிரியனின் திறனாய்வு இலக்கியத்தின் எல்லா இயல்புகளையுந் தழுவிக்கொள்ளும் என எதிர்பார்க்க முடியாது என்பதனையும்[12] நாம் விளங்கிக் கொள்வோமானால் பண்டைய தமிழ்த் திறனாய்வு மரபின் உள்ளார்ந்த அம்சங்களைப் புரிந்துகொள்வதிற் கஷ்டம் இருக்காது.

அடிக்குறிப்புகள் :

1. இரகுநாதன் சி., இலக்கிய விமரிசனம், சென்னை 1964. பக்கம் 1.
2. முத்துச்சிவன் அ., அசோகவனம், சென்னை 1956. பக். 4.
3. ஆறுமுகம் கே., 'தமிழ் இலக்கணங்களில் திறனாய்வு முறைகள்' (கட்டுரை) IATR KualaLampur Conference Proceedings—Vol. II. KualaLampur, 1963. p. 470.
4. மாணிக்கம் வ. சுப., 'இருதிறன்' (கட்டுரை). Dr. R. P. Sethuppillai Silver Jubilee Commemoration Volume — Madras-5. 1961. p. 349.
5. விமரிசனம் என்ற பதத்தைச் சற்றே வேறான பொருளிலே பரிமேலழகர் தமது திருக்குறளுரையிலே ஆள்வர் (357). 'திறனறிந்து சொல்லுக சொல்லை' என்பர் வள்ளுவர் (644). 'திறனறிதல்—இது ஆராய்ந்து சொல்லுமாறு கூறிற்று' என்பர் பரிப்பெருமாள்.
6. தொல். அகத்திணையியல் சூ. 3.
7. தொல். எழுத்து; பாயிரம்.
8. சுப்பிரமணிய ஐயர் ஏ. வி., தமிழாராய்ச்சியின் வளர்ச்சி, சென்னை, 1959.

9. தொல். செய்யுளியல்: நச்சினார்க்கினியருரை சூ. *140.*

10. Encyclopaedia Americana—Vol. 8, U.S A. 1958. p. 211.

11. வரதராசன் மு., இலக்கிய ஆராய்ச்சி, சென்னை, *1953.* பக். *332.*

12. Richards I. A., The Principles of Literary Criticism, London, 1928. p 25.

13. ரெனிவெலாக் (சக) ஆஸ்டின்வாரன்---இலக்கியக் கொள்கை (மொழிபெயர்ப்பு).

14. Watson D., The Literary Critics, London, 1962. p. 13.

15. சுப்பிரமணிய ஐயர் ஏ. வி., மு. கு. பக். *84, 90, 109, 141.*

16. சுப்புரெட்டியார் நா., கவிதையனுபவம், சென்னை, *1961,* பக். *127.*

17. Wimsatt K. W. (Jn.) & Brooks, Cleanth—Literary Criticism—A History—New York, 1966. p. VII.

18. சுப்பிரமணிய ஐயர் ஏ. வி., மு. கு. பக். *17.*

19. மீனாட்சிசுந்தரன் தெ. பொ., பாட்டில் புரட்சி, சென்னை, *1965,* பக். *14.*

20. வரதராசன் மு., மு. கு. பக். *307.*

21. Meenakshisundaran T. P., The Theory of Poetry in Tolkappiyam, Annamalai—1961. p. 55, 56.

Kailasapathy K., Tamil Heroic Poetry, London, 1968. p. 48, 139.

22. அரவிந்தன் மு. வை., உரையாசிரியர்கள், சென்னை, *1968.* பக். *60.*

23. கதிரேசன் செட்டியார் மு., உரைநடைக்கோவை II. சென்னை, *1956.* பக். *26.*

24. தொல். மரபியல் சூ. *105.*

24அ. Thaninayagam F. X., 'Apperception in Tamil' IATR KualaLampur Conference Proceedings, Vol. II. p. 141.

25. செல்வநாயகம் வி., தமிழ் உரைநடை வரலாறு, யாழ்ப்பாணம், *1957,* ப. *4.*

25அ. அரவிந்தன் மு. வை., மு. கு. பக். *558.*

26. இறையனார் களவியலுரை, சூ. *2.*

27. தொல். இளம்பூரணம், அகத்திணையியல் சூ. *1.* உரை.

28. தொல். நச்சினார்க்கினியர், அகத். சூ. 1., பொருளதி. 92. சிந்தாமணி பா. 1.
29. Wimsatt W. K. & Brooks, C. Op. Cit. p. 740.
30. தொல். அகத்திணையியல், சூ. 56.
31. தொல். நச்சினார்க்கினியம், அகத்திணையியல், சூ. 56.
32. மே. கு. களவியல், சூ. 106, உரை.
33. மே, கு. அகத்திணையியல், சூ. 6 — 12.
34. தொல். பேராசிரியம், செய்யுளியல், சூ. 1.
35. தொல். நச்சினார்க்கினியம் செய்யுளியல், சூ. 63, 153, 160, 240, 268.
36. மே. கு. புறத்திணையியல், சூ. 86.
37. மே. கு. அகத்திணையியல், சூ. 3.
38. அரவிந்தன் மு. வை., மு. கு. ப. 190.
39. கைலாசபதி க. (சக), முருகையன் இ., கவிதைநயம், கொழும்பு. 1971. பக். 3,5.
40. மலைபடுகடாம், நச்சினார்க்கினியருரை.
41. தொல். நச்சினார்க்கினியம், புறத்திணையியல், சூ. 90.
42. Eliot T. S. The Use of Poetry and the Use of Criticism, London, 1933, p. 141 — 142.

பகுதி III

இலக்கணம், மொழியியல்

ஆய்தம் ஒரு முதலெழுத்தும் ஆகும்

க. வீரகத்தி

ஆய்த எழுத்தின் இயல்பு எத்தன்மையானது? அஃது ஓர் அடிப்படை எழுத்தும் ஆகுமா, அன்று? இவ்வினக்களுக்கு விடைகாண முன், முதல் சார்பு என்ற இரு பதங்களின் பொருள் வரையறையை அறிந்திடல் அவசியம். எவ்வெப் பொருளில் இவ்விரு பதங்களும் இலக்கண நூலோரால் எடுத்தாளப்பட்டுள்ளன?

முதலும் சார்பும்:

தொல்காப்பியனார் முதலெழுத்து, சார்பெழுத்து என ஒரு பாகுபாட்டைக் கூறினாரில்லை. சார்ந்து வருதலை மரபாகவுடைய குற்றியலுகரம், குற்றியலிகரம் ஆய்தம் என்ற மூன்றும் அல்லாத விடத்து, தமிழ் எழுத்துக்கள் முப்பது என (முன்னோர்) கூறுவர் (தொல். எழு. 1) என்று கூறி, அடுத்த நூற்பாவாற் சார்ந்து வரும் மூன்றும், ''எழுத்தோரன்ன'' எனப் புலப்படுத்தி, இவையும் சேர எழுத்துக்கள் முப்பத்துமூன்று எனக் கொள்ள வைத்தார். குறிப்பிட்ட மூன்றெழுத்தைச் சார்பெழுத்து என்று கூறினார் அன்றி, ஏனைய முப்பதையும் முதலெழுத்து என அவர் கூறவில்லை. இம் முப்பத்துமூன்று ஒலிகளுமே அடிப்படை ஒலிகள் என்ற காரணத்தாலேதான் அவர் அவ்வாறு கூறவில்லை. 'மூன்று தலையிட்ட முப்பதிற்றெழுத்து'' (தொல். எ. 103) எனப் பின்னும் அவர் கூறியதை நோக்கும்பொழுது இம் முப்பத்துமூன்று எழுத்துக்களையும் அடிப்படை எழுத்துக்களாகவே கருதினார் என்பது வலுவுறுகின்றது.

''எழுத்தோரன்ன'' என்பதற்கு, 'அவையும் முற்கூறிய முப்பதெழுத்தோடு ஒரு தன்மையாய் வழங்கும்' என நச்சினார்க்கினியர் உரை வரைந்திருப்பதையும் இங்கு நினைவுகூர வேண்டும். 'ஒரு தன்மையாய்' என்றதால் இம் முப்பத்துமூன்றும் அடிப்படை ஒலிகள் என்ற கருத்து நச்சினார்க்கினியருக்கும் உடம்பாடாதல் பெற்றுக்கொள்ளக் கூடியதே.

''எழுத்தோரன்ன'' என்ற தொடர் மீண்டும் எழுத்ததிகாரத்திலே தொல்காப்பியரால் எடுத்தாளப்பட்டுள்ளது (தொல். எ. 141). முன்பு என்ன கருத்தில் அதனைக் கொண்டுள்ளாரோ அதே கருத்திலேதான் இங்கும் பிரயோகித்துள்ளார். நச்சினர்க்கினியரும் முன்பு என்ன கருத்துரைத்தாரோ அதே கருத்தையே இங்கும் உரைத்தார். முப்பத்துமூன்று எழுத்துக்களையுமே அடிப்படை எழுத்துக்கள் என இருவரும் கருதியுள்ளமை தெளிவாகின்றது.

எந்த மொழியின் இலக்கணமானலுஞ் சரி, அவ் இலக்கணம் அடிப்படை ஒலிகளுக்கான குறியீடுகளையே நெடுங்கணக்கு ஆக முதலிற் கூறும். நமது இலக்கணம் இதற்கு விலக்கு ஆகாது.

இலக்கண நூல்களில் முதன்முதலாக 'முதல்' என்ற பதத்தைக் கையாண்டவர் நேமிநாத ஆசிரியரே ஆவர்.

''ஆவி அகரமுதல் ஆறிரண்டாம், ஆய்தம்இடை
மேவும், ககரமுதல் மெய்களாம் மூவாறும்
கண்ணும் முறைமையால் காட்டியமுப் பத்தொன்றும்
நண்ணும் முதல்வைப்புஆகும் நன்கு''. (நேமி. 1)

ஆவி பன்னிரண்டும், ஆய்தம் ஒன்றும், மெய் பதினெட்டும் ஆக 31 எழுத்துக்களும் முதல் வைப்பு என்கிருர் நேமிநாதத்தார். முதல் என்ற பதத்திற்கு விளக்கம் தராவிட்டாலும், ஆய்தத்தையும் முதல் வைப்பில் அடக்கியுள்ளார். ஆய்தம் ஒரு முதலொலி என்பது அவர் கருத்தாகின்றது.

தொல்காப்பியர் சார்பெழுத்தென்று சிலவற்றைக் குறிப்பிட்டார்; முதலெழுத்து என எதையும் மொழியவில்லை. நேமிநாதத்தாரோ முதல்வைப்பு எனச் சிலவற்றைக் கூறினர்; சார்பு என எதையும் கூறினரில்லை.

அறிந்தவரையில் இலக்கண நூலோருள் நன்னூலார்தான், முதல் சார்பு என இருவகைப்படுத்தி, அனைத்தெழுத்தையும் இவ்விரு பிரிவிலும் முற்ருக அடக்கிக்கொண்டவர். இவ் இயல்பினது சார்பெழுத்து எனத் தொல்காப்பியர் விளக்கம் கொடுத்துவிட்டபடியால், முதலெழுத்து என்பதற்கு விளக்கம் தருவது அவர் கடமையாய்விட்டது.

''மொழிமுதற் காரண மாம்அணுத் திரள்ஒலி
எழுத்துஅது முதல்சார்பு எனஇரு வகைத்து''. (நன். 58)

மொழிக்கு முதற்காரணமான ஒலிதான் முதலெழுத்து எனக் கூறும் பவணந்தியார் எது முதலெழுத்து என்பதற்கு வரையறைவு செய்துவிட்டார். முதற்காரண ஒலி முதலொலி; அவ் ஒலியின் குறியீடு முதலெழுத்து. இவ்வாருன எழுத்து, முதல் சார்பு என இருவகைப்படும் என்றதால், சார்பெழுத்தும் மொழிமுதற்காரண எழுத்தாகலாம் என்பதையும் தெட்டத் தெளிவாக்கியுள்ளார்.

முதல் என்ற சொல்லுக்குக் காரணம் என்ற பொருளும் உண்டு. ''நோய் நாடி நோய்முதல் நாடி'' (குறள் 948) என வரும் திருக்குறளில், 'முதல்' காரணம் என்ற பொரு ளாதல் அறியலாம்.

காரண ஒலி அல்லது மொழிமுதற் காரண ஒலி 'முதலொலி' ஆகி, அதன் குறியீடு 'முதலெழுத்து' ஆகியது. முதலொலி – Basic Sound. இனிச் சார்பு என்னும் பதத்தின் பொருளை அறிவோம். சார்ந்துவருவது சார்பு. எது எதனை ஏன் சார்தல் வேண்டும் என்ற வினவும் கூடவே எழுகின்றது. மிருதுவான அல்லது நுண்ணிய அல்லது இவ்விரு தன்மையும் கொண்ட ஒரு பொருள் தன்னிலும் வன்மை கூடிய ஒன்றுடன் தன் இயக்கத்திற் காகச் சார்ந்துகொள்வது இயல்பு.இவ்வகைத் தன்மைகொண்ட ஒலிகளிற் சில, வன்மையான ஒலிகளைச் சார்ந்து இயக்கம் உறு கின்றன. இங்கு சார்பொலி என்பது சார்பால் ஏற்படும் மாற்ருெலி (allophone) அன்று, சாருகின்ற ஒலி என்பதே.

மென்மையான, முதிர்ச்சியுருத பனங் குருத்து 'சார்வு' (சார்பு > சார்வு) எனும் வழக்காறையும் இங்கு நோக்கி, சார் பெழுத்தின் தன்மையை விளங்கிக்கொள்ளலாம்.

இவ்வாறு சார்தல் காரணமாக, சாரும் ஒலியும் சாரப் படும் ஒலியும் ஒன்று எனக் கருதிவிடக் கூடாது. இது வேறு, அது வேறு. முல்லைக் கொழுந்தும் அது பற்றிப்படரும் கொழு கொம்பும் வேறு வேறு பொருளே. வேறுவேறு ஆயினும், காரண ஒலி என்ற அடிப்படையிலான முதலெழுத்து என்னும் பிரிவும், சார்தல் என்ற அடிப்படையிலான சார்பெழுத்து என்னும் பிரிவும் ஒன்றையொன்று விலக்கி நிற்கும் பாகு பாடுகள் அல்ல. ஒரு சார்பெழுத்து ஒரு முதலெழுத்து ஆகவும் அமையலாம். இவ்விருவகை ஒலிகளும் மொழிக்கு அடிப்படை ஒலிகளே.

ஆய்தம் :

ஆய்தம் சார்பெழுத்துக்களில் ஒன்று. வரிவடிவம் ஃ ஆகும். இஃது H என்னும் ஆங்கில எழுத்தின் ஒலிப்பை ஒத்தது. H என்னும் எழுத்தின் பெயரும் அதன் ஒலிப்பும் வேறு வேருதல் போல, ஆய்தம் என்னும் பெயரும் அதன் ஒலிப்பும் உள்ளன. ஒலியை உள்ளடக்கிய சொல்லாக ''அஃகேனம்'' எனவும் படும். இவ் ஒலி வடமொழி விஸர்க்கம் போன்றதும் எனலாம். ஆய்த எழுத்து செய்யுளிலே மாத்திரம் பயில்வது எனவும், சம்ஸ்கிருத விஸர்க்கத்தின் பின்பற்றலாய் இருக்கலாம் எனவும் ஜி. யூ. போப் கூறுவர்.[1] தனிநிலை, புள்ளி, ஒன்று எனவும் வேறு பெயர்கள் இதற்கு உண்டு.

ஆய்த எழுத்தின் அதிகமான தன்மைகளை உள்ளடக்கிய சொல்லாகத் தனிநிலை என்னும் பெயர் காணப்படுகின்றது. நெடுங்கணக்கில் உயிருக்கும் மெய்க்கும் நடுவாக ஆய்தம் வைக்கப்பட்டுள்ளது. உயிரொலிகள் போல் மொழியிடையே வரும் வல்லெழுத்தை உரசொலி ஆக்குகின்றது; யாப்பில் அலகும் பெறுகின்றது.

மெய்யெழுத்துக்கள் போல் தனித்தியங்கும் இயல்பு அற்றது; அளபெடை கொள்வது; ஒலிமயக்க வரையறையை உடையது. மெய்யெழுத்துப்போல் முதலொலியாகவும் உள்ளது. இதனாற்போலும் ஆய்தம், உயிர் மெய் இரண்டின் 'புணரொலி' எனவும் கூறப்படும்.

சில எழுத்துக்கள் எடுத்து உச்சரிக்கப்படுவன. சில படுத்து உச்சரிக்கப் படுகின்றன. ஆய்தம் எடுத்தும் படுத்தும் உச்சரிக்கப் படுவது. எந்த நோக்கிலும் தனிநிலை என்ற பெயர் மிகப் பொருத்தமானதே.

இன்னும் ஒரு தனிநிலை அதற்கு உண்டு. ஆய்தம் என்ற பெயரே அதைக் காட்டும்.

'ஒய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்
ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்'

(தொல். சொ. 330)

குறிப்பிட்ட நான்கு சொல்லும் ''ஒரு பொருட்குள்ள அளவின் நுணுக்கத்தைக் காட்டும்' என்பர் தெய்வச்சிலையார்[2]. எனவே, ஆய்தம் இயல்பிலேயே நுணுகிய ஒலி என்பதாம். அன்றி, நுணுக்கப்பட்ட ஒலி ஆகாது. ஆய்தம் மிக மிக நுண்ணிய ஒலி என்றே கால்டுவெல் அவர்களும் கூறுவர்[3].

நலிபும் நலிப்பும்:

ஆய்தம் நலிபு எனவும்படும். ஆய்தவண்ணத்தை நலிபு வண்ணம் எனக் கூறுவர் தொல்காப்பியர், 'நலிபுவண்ணம் ஆய்தம் பயிலும்' (தொல். பொ. 535). இந்நூற்பா உரையில் 'நலியென்பது ஆய்தம்' எனக் குறிப்பிடுவர் நச்சினார்க்கினியர். 'நலிந்து உச்சரிக்கப்படுதலின் நலிபு எனப்பட்டது' என இதன் காரணம் தெரித்தார்[4] குமாரசுவாமிப்புலவர். இவ்வாறு உச்சரிப் பதனை வடநூலார் 'ஸ்வரிதம்' என்று கூறி, 'சமாகாரஸ்வரித' என, அதன் இலக்கணத்தையும் கூறியுள்ளனர்.

ஆய்தத் தொடர்மொழி இறுதிவல்லினம் உரசொலியாக நலிவதால், ஆய்தம் நலிபு எனப்பட்டது என்றொரு கருத்தும் உண்டு.[5] அதுவாயின், ஆய்தம் 'நலிப்பு' எனப்பட்டிருத்தல் வேண்டும். எனவே, தெய்வச் சிலையார் கருத்தே 'உள்ளதன் நுணுக்கம்' என்பதற்குச் சரியான பொருளாகும். இயல்பி லேயே நுணுகிய ஒலி உடைய ஆய்தம் நலிபு எனப்பட்டது என்க.

இயல்பான தனியொலி:

ஆய்தம் இயல்பான ஒரு தனி ஒலியே ஆகும். இன்னொன்றின் திரிபொலி எனின் தொல்காப்பியனார் நிச்சயமாகக் கூறி யிருப்பார். அவர் எங்கும் அதனைத் 'திரிபொலி' என்று கூற வில்லை. வேறு எந்த இலக்கண நூலாசிரியராவது ஆய்தத்தைத் திரிபொலி என்று கூறவும் இல்லை. தொல்காப்பிய எழுத்ததி காரத்திற்கு நுட்பமான உரைதந்த நச்சினார்க்கினியர் கூட, ஆய்தம் இயல்பானதோர் ஒலியே என்றார். எழுத்ததிகாரம் இரண்டாம் நூற்பா உரையில் ஆய்த ஒலிபற்றி அவர் குறிப் பிடுவது பின்வருவதாகும்.

> ''இதற்கு வடிவு கூறினார், ஏனையொற்றுக்கள் போல உயிரேறாது ஓசை விகாரமாய் நிற்பதொன்றாகலின். எழுத்தியல் தழா ஓசைகள்போலக் (கொள்ளினுங்?) கொள்ளற்க என்றற்கு எழுத்தேயாம் என்றார்''.

குற்றியலுகர இகரங்களுக்கு வேறாக வடிவில்லை. 'சந்தனக் கோல் குறுகினால் பிரப்பங்கோலாகாது. அதுபோல் உயிரது குறுக்கமும் உயிரேயாம்' என அறுதியிட்டுக் கூறியவருக்கு, இறுதி யான சார்பெழுத்திற்கு (ஆய்தம்) எனத் தனி ஒலி உண்டா, அவ் ஒலிக்கெனத் தனி வடிவம் உண்டா என எழும் வினாக்க ளுக்கு விடை கூறும் கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. ஆதலினாலே தான், 'இதற்கு வடிவு கூறினார்... ஓசை விகாரமாய் நிற்ப தொன்றாகலின்', என்றார். ஏனை மெய்கள் போல் உயிரேறாத

ஆய்தத்திற்கும் வடிவுண்டா எனில் உண்டு. அவ் ஓசை, ஏனை மெய்களின் ஓசை நோக்க விகாரமானது. இதுவே நச்சினார்க்கினியர் கருத்தென்க. தனிவடிவு உண்டு என்பதற்குக் காரணம் தனி ஒலியும் உண்டு என்பதாகும்.

ஓசை விகாரம் எழுவாய்த் தொடர்; ஓசையினது விகாரம் என்ற கருத்திலான ஆறும் வேற்றுமைத் தொகைத் தொடர் அன்று. மனித முகம் நோக்க மந்திமுகம் விகார முகம் என்று கூறப்பட்டுள்ள முதிய இலக்கண உவமையை இங்கும் நினைவு கூரலாம். ஆய்த ஒலி ஆய்தத்திற்கு இயல்பொலி; ஏனை ஒலிகளுடன் ஒப்புநோக்க ஓசைவிகாரம் என்பது கருத்து.

மேலும், ஓசையினது விகாரமாய் நிற்றல் வடிவு கூறுதற்குக் காரணம் ஆக முடியாது. ஓசை விகாரங்களுக்குத்தான் வடிவுண்டு என்ருய் விடும் அல்லவா! திரிபொலி அன்று என்பதுடன் அவர் நின்றுவிடவில்லை. இயல்பான சீழ்க்கை, முக்கு முனகல் ஒலிகள் போலவும் கொள்ளற்க என்றும் கூறியுள்ளாரே!

மீண்டும் நாம் தொல்காப்பியத்திற்கு வருவோம். ''ஈறியல் மருங்கினும் இசைமை தோன்றும்'' (தொல். எ. 39) என்ற நூற்பாவில் 'இசைமை' என்ற சொல் ஆய்தத்திற்கெனத் தனி ஒலி உண்டு என்பதைத் தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றது. இவ்வண்ணம் ஒலியியல் வல்லுநரான தொல்காப்பியர் கூறியிருப்பவும், அதனைத் திரிபொலி என்று நாம் ஏன் ஒரு கற்பனையில் இறங்கவேண்டும்.

முஃடீது, கஃறீது எனவரும் தொடர்மொழிகளின் இறுதி எழுத்துக்களான ளகர லகரங்கள் புணர்ச்சிக்குரிய இயல்புகளின்படி கெட்டுவிட, அவ்வெற்றிடங்களை ஆய்தம் நிரப்பிக் கொண்டது. நிலைமொழி இறுதிகள் கெட, ஆய்தம் தோன்றியது என்றே கூறுவர்[6] நேமிநாத உரையாசிரியரும். ஆங்கில மொழி மேதையும், உலகு வியக்கும் பேரறிஞருமாகிய சேர் பொன். இராமநாதன் தமது செந்தமிழ் இலக்கணத்தில் மேற்கூறியவாறே முடித்துக் காட்டியமையும்[7] தெரிக. ஏன், ''஌ளவீற் றியைபின்ஆம் ஆய்தம் அஃகும்'' (நன். 97) எனவே கூறினர் பவணந்தியாரும். ஆகும், ஆய்தம் என்ருரல்லாமல், திரியும் ஆய்தம் எனக் கூறவில்லை.

அவ் கடிய என்பது கடைக்குறையாய் அஃ கடிய என வாயிற்று எனல் வேண்டும். அல்லாக்கால், ஆண்டு ஆய்தம் தோன்றற்குக் காரணம் இன்ரும் எனக் கூறுவர்[8] கார்த்திகேய முதலியாரும்.

ஒரு தன்மைகெட்டு மறுதன்மை உண்டாவதையே திரிபு என்று சொல்வது. புத்தருடைய கணபங்கவாதத்தை இவ்விடத்து நினைவு கூருவோம். இவ்வழி நோக்க முஃடீது, கஃறீது என்பவற்றில் லகர ளகரங்கள் கெட, ஆய்தம் தோன்றியதே திரிபு ஆகும். அப்படித் தோன்றும்போது, பிறப்பாலும் முயற்சியாலும் ஒத்தனவே தோன்றும். அது வேறு காரியம். இந்த முறையில் திரிவதை வைத்துக்கொண்டு ஆய்தம் திரிபொலி என்பதா?

திரிபொலி எனவே கொள்வோம். மட்பாண்டம், விட்புலம் என்னும் தொடர்களில், ணகர ளகரம் டகரமாகத் திரிந்தன. டகரம் அடிப்படை ஒலியன்று எனக் கொள்ளுவமோ? இவ்வண்ணமே குறிப்பிட்ட சில எழுத்துக்கள் ஆய்தமாகத் திரிவதால் அஃது இயல்பொலியும் அன்று, அடிப்படை ஒலியும் அன்று எனக் கொள்ள முடியாது. ஆய்தம் ஓர் இயல்பான அடிப்படை ஒலி என்பதாலேதான் தமிழ்நெடுங்கணக்கில் ஓரெழுத்தாக இடம்பெற்றது.

ஆய்தம் இயல்பான அடிப்படை ஒலி என்ற காரணத்தினுலேதான் நன்னூலாரும் அதற்குத் தனியாகப் பிறப்பிடம் கூறினுர்; ''ஆய்தக் கிடந்தலை'' (நன். 87) என்முர்.

ஏனம் என்ருெரு சாரியை கொடுத்து, அஃகேனம் எனக் கூறும் வழக்கமும் ஆய்தம் ஓர் இயல்பொலி என்பதற்கு ஆதாரமாகும். அஃ + க் + ஏனம். ககரம் எழுத்துப்பேறு.

மெய்யெழுத்துக்களை ஒலிக்க, மெய்யொலி அனைத்தின் முன்னம் இகரம் ஒலிப்பதையும், வல்லினத்தை உச்சரிக்க இறுதியில் உகரம் ஒலிப்பதையும் கவனிக்கலாம். ஆய்தம் அரையுயிரும் அரை மெய்யுமான ஓரெழுத்தென்பர் கால்டுவெல். அதனுற்போலும் ஆய்தத்தை அஃ, இஃ என இரண்டாயும் மக்கள் உச்சரிப்பர். இஃ என்பதில் இகரம் இடும்பை, இழுப்பு என்பவற்றிலுள்ள இகரம்போல் ஒலிக்கும். ஆய்தத்தை உயிர்மெய் இரண்டின் புணரொலி எனவும் கூறுவதுண்டு.[9]

இன்னும், சாரியை பெற்று அஃகான், மஃகான் என வரும் இடங்களில் நிற்கும் ஆய்தத்தை எதன் திரிபென்பது?

லகர, ளகரங்களின் திரிபொலிதான் ஆய்தம் என்று கொண்டவர், ஆய்தம் வரும் இடங்களிலெல்லாம் அவ் ஆய்தம் ஏதோ ஓரெழுத்தின் திரிபு எனக் காட்டுவதற்கு முயற்சித்

துள்ளனர். அஃது என்னும் ஒரு சொல் அவ் து எனப் பிரிக்கப் பட்டு, வகரத்தின் திரிபு ஆய்தம் எனப்படுகின்றது. அவ் என்பது ஒரு பன்மைச் சொல். தொல்காப்பியனுர் கூறிய 'வற்று' என்னும் ஒரு சாரியையை 'அற்று' எனக் கொண்டுள்ளார் நன் னூலார். இதிலிருந்து தெரிவது அவ் என்பதை நன்னூலார் பன்மையாகக் கண்டுள்ளார் என்பதே. அவ் என்ற பன்மையுடன் து என்ற ஒருமை விகுதி சேர்ந்து முழுவதும் ஒருமைச் சொல் லாகும் முறை மொழி இயல்புக்கு ஒவ்வாததாகும். மூன்றெழுத் துச் சொற்களிடை வரும் ஆய்தத்தை இயற்கையாக வருவது எனக் கூறுவர்[10] பேராசிரியர் இலக்குவனுரும்.

இதுவரை கூறப்பட்டவற்றிலிருந்து ஆய்தம் திரிபொலி அன்று என்பதும், அஃதோர் இயல்பான தனி ஒலி என்பதும் பெற்றுக் கொள்ள முடியும்.

அகம் —மனை, மனம்
அஃகம்—தானியம்

அடிப்படை அல்லது முதலொலி:

அகரம் —அ என்னும் எழுத்து
அஃகரம்—வெள்ளெருக்கு
அகல் —விசாலித்தல்
அஃகல் —சிறிதாகல்

இச்சோடுகளில் ஒவ்வொன்றும் பொருள் வேறுபாடுள்ளது. காரணம் ஒவ்வொரு இணையிலும் ஒவ்வொன்று ஆய்த எழுத் தைக் கொண்டிருப்பதாகும். எனவே, ஆய்த எழுத்தை அடிப் படை எழுத்து அல்லது முதலெழுத்து அல்லது ஒலியன் எனக் கொள்ளவேண்டியுள்ளது.

இவ்விடத்து நம் மூதாதையரின் பெயர் வைக்கும் திறனையும் வியந்து பாராட்டாமலிருக்க முடியாது. அஃகு என்பது ஒரு வினைப்பகுதி. வினைப்பகுதிகளை இருபத்துமூன்ருக வகுத்த நன்னூலார் குற்றுகர வினைப்பகுதிக்கு 'அஃகு' என்பதனையே கொண்டார். இதன் அடிச்சொல் 'அஃ' என்பதாகும். சுருங்கிய நுண்ணிய ஒலி யொன்ருலேயே சுருங்குதல், நுணுகுதல் என்று பொருள்படும் ஒரு சொல் ஆக்கப்பட்டுள்ளது. இசை காரண மாகத் தோன்றும் உரிச் சொற்களுள் இஃதும் அடங்கும்.

அது, அஃது: இது, இஃது; உது, உஃது ஆகிய சுட்டினை களிற் பொருள் வேறுபாடில்லை. ஆனல், ஒரு காரணம் பற்றித்

தான் ஆய்தம் இடையே புகுந்து கொண்டது; அது + ஆடை ஆகிய இரு மொழிகளையும் புணர்க்க, 'அதுவாடை' எனப் புணரும். இதனாற் பல பொருள்தரும் தொடராக அஃது மாறி விட்டது. அது வாடை என, சோளகமன்று, அது வாடைக் காற்று என்றொரு பொருளும் கொள்ளலாம். அது > அஃது என நிறுத்தி, ஆடையுடன் சேர்க்க 'அஃதாடை' எனச் சேரும். இரண்டாவது பொருளொன்று தோன்றவில்லை. பொருள் மயக்கைத் தவிர்த்திடற்காக, கால்டுவெல் கருதுவது போல், இவ்விடங்களில் ஆய்தம் இலக்கண நூலோரின் புலமை நெறியிலான படைப்பு[11] ஆகலாம்.

ஆய்தத்தை ஒரு முதலெழுத்தாகக் கொள்ளக் கூடாதென் பதற்கு, ஆய்தம் மாற்றொலிகளை ஏற்படுத்துவது ஒரு காரண மாகக் கூறப்படுகின்றது.[12] ஆய்தம் மாத்திரம் மாற்றொலியை உண்டாக்கவில்லை. முதலெழுத்து எனக் கூறப்படும் ஏனை யெழுத்துக்களிற் சிலவும் மொழி இடையில் நிற்கும் வல்லினத் திற்கு மாற்றொலி உண்டாக்குகின்றன. மகாமேதை, அல்கு, சுளகு என்பவற்றிலுள்ள வல்லினம் உரசொலியாகவே மாறுகின்றது. ஆகவே, இக்காரணம் காரணமாகாமை அறியலாம்.

இறுதியாகப் புலவர் புராணம் உடையாரின் ஒரு செய்யுளைக் குறிப்பிடுவது பொருத்தமாகத் தெரிகிறது.

" ஆயுத வெழுத்தோன் றென்னு தவர்களு மையு மௌவும்
தோயுமாத் திரையி ரண்டாச் சொல்பவர் களும்போன் றுள்ள
பேயுணர் வினரெல் லோரும் பெரும்புகழ்க் கும்ப நாதன்
ஆயுமுன் றமிழ்ச்சீ ரோர்ந்து நவின்றமை வினவி லாரே."

'ஆயுதவெழுத்தொன்றென்னுதவர்களும்' என்பதற்கு இந் நூலாசிரியரின் மகனாராகிய தி. மு. செந்தில்நாயகம் பிள்ளை அவர்கள், 'ஆய்தவெழுத்தைச் சார்பாகக் கொள்வது விடுத்து தனித்த சுதந்திர எழுத்தாகக் கொள்ளாதோரும்' எனக் குறிப்புரை எழுதியுள்ளார். இக் குறிப்புரையையும் குறிப்பாகக் கவனிப்போம்.

சார்பெழுத்தும் முதலெழுத்தும் ஒன்றுக்கொன்று முரணான தன்மையைக் கொண்டவை அல்ல என்பதும், ஆய்தம் திரி பொலி அன்று, இயல்பான தனி ஒலி என்பதும், அஃதோர் அடிப்படை ஒலி என்பதும் இக் கட்டுரை மூலம் பெற்றுக் கொள்ளக் கூடியனவாம்.

அடிக்குறிப்புகள்:

1. Pope, G. U.: *A Hand Book of the Ordinary Dialect of the Tamil Language*; p. 12; Oxford University Press, London, 1911.
2. தெய்வச்சிலையார்: தொல். சொல்; பக். 171; தெ. இ. சை. நூ. கழகம், 1963.
3. Caldwell Rt. Rev.: *A Comparative Grammar of the Dravidian Lauguages or South Indian family of Languages;* P. 130. University of Madras, 1961.
4. குமாரசுவாமிப்புலவர் அ.: யாப்பருங்கலக்காரிகை— பக். 213; கு. அம்பலவாணபிள்ளையால் பதிப்பிக்கப் பட்டது. 1938.
5. தெ. பொ. மீ.: கலைக்களஞ்சியம் (தொகுதி—2); பக். 758; தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை; 1955.
6. நேமிநாதம்; பக். 30; தி. தெ. சை. நூ. கழகம், சென்னை; 1956.
7. இராமநாதன் கௌரவ ஸ்ரீமான் பொன்னம்பலம்: செந்தமிழ் இலக்கணம் முதற்பாகம்; பக். 70; அடிஸன் அச்சுக் கூடம், சென்னை; 1927.
8. கார்த்திகேய முதலியார் மாகறல்: மொழிநூல்; பக். 17 (இலக்கணவியல்); வேப்பேரி, சென்னை; 1913.
9. தியாகராயன் ஈப்போ திரு.: செந்தமிழ்ச் செல்வி பதினொன்றும் சிலம்பு; பக். 161; தி. தெ. சை. நூ. கழகம்; 1933.
10. இலக்குவனார் சி.: தொல்காப்பிய ஆராய்ச்சி; பக். 62; வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை; 1961.
11. மூன்றும் அடிக்குறிப்புப் பார்க்க.
12. வேலுப்பிள்ளை ஆ.: தமிழ் வரலாற்று இலக்கணம்; பக். 56; பாரிநிலையம், சென்னை; 1966.

அகத்திணையில் நிலமுதற் பொருள்

நா. சிவபாதசுந்தரனுர்

1. உலகப் பொருள்

(புறத்தில் புறம்)

உலகப் பொருள், அகப்பொருளாக உண்மைப்படும்போது, முதல் கரு உரி என்ற முப்பொருட் கோட்பாடுகளுக்கு உட்படும் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். மனித வாழ்வில் நிலப் பண்புக்கூறு ஒன்றி வளர்வதே பொருட்கோட்பாடு எனப்படும். உலக நிலப் பண்பின் முப்பொருட் கோட்பாடு என்பது மனித வாழ்வின் ஒவ்வொரு வளர்ச்சிநிலையின் படிமுறையாகும். உலக நிலப் பண்பினது வளர்படியின் கோட்பாடு ஒவ்வொன்றும் அவ்வவ் வளர்படியின் வளர்ச்சி முற்றுப்பெற்று, மனவளமும் மறுமலர்ச்சி எய்தும்போதே தொடங்கும். எனவே, அகப் பொருளின் வளர்வு நிலை வளமே முப்பொருட் கோட்பாடு என்று உணர்வோம். முப்பொருட் கோட்பாடுடைய அகப்பொருள் திணைகளின் நிகழ்விடமே உலகமாகும். இந்த உலகின் பொதுப் பண்பைத் தொல்காப்பியர்,

"நடுவண் ஐந்திணை நடுவண தொழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே. —தொல். அகத். 2

என்று விளக்கியுள்ளார். இந்நூற்பா இயற்கைப் பின்னணியில் ஐந்திணை இயல்கின்றதை எடுத்தியம்புவதோடு புறத்திற் புறமாய் விளங்கும் உலகம் அகப்பொருளாய் இடம்பெறும்போது நிலம் எனப்படும் முதற்பொருளாக அமைந்துவிடுகின்றது என்பதையும் எடுத்தியம்புகின்றது. ''படுதிரை வையம்'' என்று உலகப் பொருள் உணர்த்தப்பட்டபடியால் நிலமாகிய முதற் பொருள் முல்லைக்காலத்தை உள்ளிட்ட பொருளாகவே எண்ணப் படும் என்றவாறு.

2. நிலவுலகப் பொருள்

(புறத்தில் அகம்)

உயிர்வாழ்வு உலக இயற்கையோடு இணையும்போது வாழ்க்கைக் கூறுகளுடைய நிலவுலகமாக நிற்கும். இவ்வாறு நின்ற இயற்கை நிலவுலகம் மாந்தர் மனத்தகத்திற் பொருள் பெறும் நிலையினையே ஆன்ருேர் நிலவுலகப் பொருள் என்பர். இயற்கைப் பின்னணியில் ஐந்திணையாகத் திணைப்பொருள் இயல்கின்றபோது, அத் திணைப் பொருட்கண் நிலவுலகம் பெற்றிடும் பொருண்மையிற் பழந்தமிழ்ப் புலவோர் கண்ட அறிவியலையே தொல்காப்பியர்,

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே."

— தொல். அகத். 5

என நிலநூற்பாவில் நுவல்கின்ருர். இயற்கைப் பின்னணி ஐந்திணை நெறியாக இயல்கின்ற நீர்மையில் நடுவுத் திணையாகிய பாலைத் திணை நீங்கலாக மற்றைய நான்கு திணைகளுக்கும் பகுத்தல் உடையதாக நிலவுலகம் பண்புபெற்று ஈடுசெய்யும் என்பது தொல் தமிழோர் சிறந்த முடிபாகும். இந்தத் தமிழ் மரபு வழிச் சித்தாந்தத்தைத் தொல்காப்பியர் நுவலும்போது நிலப் பெயரையும், நிலப் பண்புப் பெயரையும், நிலப் பண்பாடு என்றதின் பெயரையும் ஒருங்கே முறையுற எடுத்து விளக்கம் பெற இந்நூற்பாவிற் காட்டுகின்ருர். நிலப்பெயர் "காடுறை" என்பது. நிலப் பண்புப் பெயர் "மாயோன்". என்பது. நிலப் பண்பாடு தரும் பெயர் "முல்லை" என்பது. இவ்வாறே மற்றைய உலகங்களையும் கொள்க. இவ்வாறு பகுக்கப்பட்ட நிலமுறையில் உலகம் என்று எல்லையுறுதலாற் பழந்தமிழகம் வெவ்வேருக வரையறுக்கப்பட்ட திட்டமான கூர்தலறங்களைக் கண்டு கடந்திருப்பதைத் தொல்தமிழ்ப் புலவோர் தம் புலநெறியாலே தெளிந்திருந்தனரென நாம் உணரலாம். காடுறை, மைவரை, தீம்புனல், பெருமணல் என்பன நிலமுதற்பொருளின் இயற்கைக் கூறுகள். மாயோன், சேயோன், வேந்தன், வருணன் என்பன அப்பொருளின் வாழ்க்கைக் கூறுகள். முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்பன அவற்றின் இனக் கூறுகள். இதில் இயற்கைக்

கூறும் வாழ்க்கைக் கூறும் பொருளுற்பத்தியிலும், இனக்கூறு இன்ப உற்பத்தியிலும் அடங்கும். காடுறை முதலான இயற்கைக் கூறுகளில் முல்லை முதலான இனக்கூறுகள் இணைந்து இயலும் நிலமுதற் பொருளின் உரியைத் தொல்காப்பியர்,

> "புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
> ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை
> தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே."—தொல். அகத். 16

என்று கூறியுள்ளார். ஐந்திணை நெறிப்படும்போது இயற்கைப் பின்னணி முல்லைத்திணையில் இருத்தலிலும், குறிஞ்சித் திணையில் புணர்தலிலும், மருதத் திணையில் ஊடலிலும், நெய்தல் திணையில் இரங்கலிலும் நிலைத்து உரிப்பொருளாக அமையும். இது இன உற்பத்தி முறைக்கு உரிய களமுமாகும். பொருளுற்பத்தி முறையில் இயற்கைப் பின்னணிப் பொருளை நோக்கில் முல்லை நிலத்தில் இருத்தல் என்பது தொழில் (செய்தி) அற்ற நிலையாம். குறிஞ்சி நிலத்தில் புணர்தல் என்பது மெல்லத் தொழிலுறும் நிலையாம். மருத நிலத்தில் ஊடல் என்பது தொழில் வளர்வுறுதலுக்கு மேற்கொள்ளும் ஆள்வினையிற் பொருந்தும் பிணங்கல் நிலையாம். நெய்தல் நிலத்தில் இரங்கல் என்பது தொழில் வளம் பெறுதலிற் பிறக்கும் பிணங்கலால் மனித எண்ணம் மாண்புறுது போகவே மனம் நிலையாமையுற்று அலைவுறும் நிலையாம். இவ்வாறு நிலவுலகப் பொருள் விஞ்ஞான நோக்கில் விளக்கம்பெற, தொல்காப்பியர் முத்தமிழ்ப் பழமையில் ஏற்றிக் கூறிய திறன் வியத்தற்குரியதொன்றாகும்.

3. நிலமுதற் பொருள்

(அகத்திற் புறம்)

நில நிலை:

மாந்தர் நிலவுலகப் பொருளை உள்முகப்படுத்துங்கால் உளவாகும் அகப்பொருளின் எண்ணச் சித்திரத்தில் நிலவுலகப் பொருள் நிலமுதற் பொருளாய் விளங்குகின்றது. நிலம் என்னும்போது நிலத்தோடு அமைந்த கரு, உரி என்னும் பொருள்களும் அமையும். புறத்திற் புறமாய் நின்ற இயற்கை நிலத்தை மாந்தர் உள்முகப்படுத்துங்கால் அவரின் உளத்தில் உளதாகும் இன்பத்திற்கு மண்ணும் பொழுதும் ஆகிய இவ்விரண்டின் இயல்புகளே அடிப்படையான காரணங்களாய் இருக்கின்றன. இதனுல் இவை முதற்பொருள் எனப்பட்டன. முதல் என்பது தொடக்கம் எனப் பொருள்படும். அகப்பொருளின் தொடக்கப்

பொருளாய் அகத்திற் புறமாய் விளங்கும் நிலத்தை மனோ தத்துவப் பாங்கில் மிக அழகாகக் கூறும் ''மாயோன் மேய காடுறை உலகம் . .. '' என்ற நூற்பாவில், ''மாயோன் மேய காடுறை உலகம்'' என்பது ஒன்றாகவும்; ''மாயோன் மேய காடுறை உலகம் முல்லை'' என்பது இன்னொன்றாகவும், இவ்வாறே மற்றைய நிலவுலகங்களின் கருத்து நிலையும் அமையத் தொல்காப்பியர் கூறியுள்ளார். புறத்தில் அகமாய் விளங்கும் நிலமுதற்பொருள் மாந்தரின் புலங்களுக்குக் காட்சிப்பொருளாய் அகப்படும்போது உண்டாகும் மன எண்ணம் ''நேரெண்ணம்'' ஆகும். புறத்தில் அகமாய் விளங்கும் நிலமுதற் பொருளின் காடுறை முதலான நான்கு கூறுகள் நேரெண்ணப் பொருளா னதும், அவற்றின் புறத்தில் அகம் என்ற நிலை நீங்கி ''அகத்திற் புறம்'' என்ற நிலை ஆகின்றன. அகத்திற் புறமாய் நேரெண் ணப் பொருளில் நின்ற காடுறை முதலான புறப்பொருள்கள் ''முல்லை'' முதலான வேறெண்ணமாக அந் நேரெண்ணத்தி லிருந்து மலரும்போது ''அகத்தில் அகம்'' என நின்று காடுறை உலகம்—முல்லை என்று இணைத்துக்கூறும் அகப்பொருள் நிலையைப் பெறுகின்றன.

நில நூற்பாவை ஒட்டிய இந்த மனோதத்துவ நோக்குகளை இன்னும் சற்று விளக்க முயலின், காடுறை முதலான நான்கு உலகங்களை உள்ளடக்கி உருவான இயற்கை உலகம் மாந்தரின் அகப்பொருளிற் புறத்திற் புறமான பொருளாம். அந்த நான்கு உலகங்கள் வெளிப்பட்டு முழு நில உலகமாகத் தோன்றிய முழு நில முதற் பொருளே அகப்பொருளிற் புறத்தில் அக மாகப் புலப்படும். இந்த முழுமுதல் நில உலகத்தையே மாந்தர் அகத்தின் ஒழுகும் ஒழுக்க அமைப்பில் முதற்கண் நோக்குவர். அப்பொழுது நேர்படும் ஒழுக்க எண்ணமே திணை நிலையிற் ''புறத்திணை'' எனப்படும். இஃது அகத்திற் புறம் எனப்படும். இந்த அகத்திற் புறமான திணை நிலையிற் பிறந்த நில உலகின் வேறெண்ணமே மாந்தரின் அகத்தில் அகம் என்ற அகத்திணை எனப்படும். இவ்வாறு மாந்தரின் புற, அக எண் ணங்களும் ஒழுக்கங்களும் மேலும் நில நிலையிற் காண்க.

நிலநோக்கு நிலை :

புறத்தில் அகமாய் உள்ள காடுறை முதலான உலகங்களின் இடத்து நேர்ந்தெழுந்து மாந்தரது மனத்தகத்திற் பெருந்திய நேரெண்ணப் பெயர்களே மாயோன், சேயோன், வேந்தன், வருணன் என்பனவாம். இவற்றைத் தமிழான்றோர் தெய்வம் சுட்டிடும் கருப் பொருட் பெயர்களாகக் காட்டியுள்ளனர்.

தெய்வம் சுட்டிய பொருளெண்ணமாக நேரெண்ணம் நில நோக்கு நிலையில் அமையும் என்பதைத் தொல்காப்பியரும் நினைந்து ஓதிய உண்மையை அந் நூற்பாவில் வரும் ''மேய'' என்ற சொல் எடுத்துக்காட்டும். காடுறை, மைவரை என்ற இயற்கை நிலங்களோடு மாயோன், சேயோன் என்ற தெய்வப் பெயர்களை நேராக முற்பட இணைத்துச் சொல்லிய முறை யாலும் அவ்வுண்மை மேலும் வலிமைப்படும். இந்தத் தெய்வப் பெயர்களே ''நிலப்பண்புப்'' பெயர்களாம். மாந்தரின் ஒழுக் கத்திற்கு நிலமானது முதற் பொருளாகும்போது, அந்நிலப் பொருள்களுக்கு உரிய பண்புகள் புலப்படக் கூறவேண்டும் என்ற விஞ்ஞான எண்ணத்தாலே தொல்காப்பியர் அவைகளை ஆராய்ந்தார். அந்தப் பண்பாய்வில், அப் பண்பு பண்பளவாய்ப் பெயர் பெறக் கூற இயலாதிருத்தலை உணர்ந்து, அப் பண்பைத் துலக்கும் பண்பியாகக் கூறுதலே சிறந்ததாகும் என்று அறிவியல் முறையாகத் துணிந்து, மாயோன், சேயோன் என்ற பெயர்ப் பொருள்களாகக் கூறியுள்ளார். இந்த நிலப் பண்பு, இயற்கை நிலங்களுக்கு உரிய மண்ணியற் பண்பு அன்றாதலின் அந்த வேற்றுமையை நாம் விளங்க அதனை அந்த இயற்கை நிலங் களுக்கு வேறாகவும் உடனாகவும் வைத்து அவர் கூறிய நுட்பம், நிலப்பண்பு எது என்பதைத் தேர்ந்த அவரது அறிவியற் பாங்கின் பெற்றியை விளக்கும். இதனாற் பண்டைத் தமிழரின் பொரு ளாராய்ச்சியின் விஞ்ஞானப் போக்கும் புலனாகின்றது.

நேரெண்ணத்தால் அகத்திலே தெய்வப் பொருண்மையாகி நின்று ஒளிரும் நிலப் பண்புடை நிலத்தையே தனக்குரிய ஒழுக்க வாழ்வு நிலமாக ஆக்கவேண்டிய பெரு விருப்பை வேறாகவும் உடனாகவும் அந் நிலத்தினுள் மயங்கி நின்ற தெய்வப் பொருண் மையே மாந்தர்க்கு ஊட்டுகின்றது. ஊட்டவே அவன் அந் நிலவியற்கையை அவ்வாறு எண்ணாது ஒழுக்க நிலமாக வேறாக எண்ணுகின்றான். இந்த ஒழுக்க நில எண்ணமே வேறெண்ண மாகும். எனவே, நிலப்பொருளின் வேறெண்ணம் தெய்வ சத்தி யாக இறைசத்தியின் விளைவெண்ணம் என்பது வெளிப்படை யாகின்றது. தொல்காப்பியரும் நிலநூற்பாவில் நிலத்தை நிலப் பண்புடன் முறையுறக் கூறிவந்த முறைநிலையிலேயே,

> "முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
> சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

என்று வேறெண்ணமான ஒழுக்க நிலத்தைப் புலப்படுத்தி யுள்ளார். இதிலிருந்து மாந்தர்க்குக் காடுறை முதலான நிலங்கள் முதற் பொருட்கு உரியனவாய் அகத்திணையின் பொது

நிலங்கள் என்றும், முல்லை முதலான நிலங்கள் கருப்பொருட்கு உரியதாய் அகப்பொருளின் சிறப்பு நிலங்கள் என்றும் நாம் நில நோக்கிற் கணித்துக்கொள்ளலாம். ஒழுக்க நிலம் இறை சத்தியால் மாந்தர்க்கு உணர்த்தப்படுவதால் அவனது ஒழுக்க மும் தெய்வப் பொருண்மையது என்பது சொல்லாமலே அமை யும். இதனுலேயே திருவள்ளுவர்,

> "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
> உயிரினும் ஓம்பப் படும்."

என்ருர். இதுவரையும் விரித்த பொருளால் நிலநோக்குநிலை அறிவும் அறியாமையும் மயங்கிய மயக்கப் பொருளது என்பது தெளிவாகும்.

நிலநோக்குப் பொருள் நிலை:

முப்பொருட் கோட்பாட்டில் முன்னுறுங் கோட்பாடான முதற்பொருள் நிலையில் நிலநோக்கை ஆராய்வாம். மாந்தரின் எண்ணத்தில் நேரெண்ணத்துக்குரிய பொருளாக இயற்கை நிலம் அமைவதற்கு முன்பு அந்நிலம் இயற்கை உலகமாய் முதற் பொருளாய்—புறத்திற் புறம் என்ற அகப்பொருள் நிலையைப் பெறும் என்று முன்னர்க் கூறியுள்ளோம். இது முதற் பொருட் காலத்தின் முதல் நிலையாம். இக்கால நிலம் ஐந் திணைக்குரிய ஐந்நிலங்களை வெளிப்படுத்தாது உள்ளடக்கிப் பொதுவான மூல நிலமாகவே காணப்படும். இந் நிலத்தையே ஐயனுரிதனுர் தம் புறப்பொருள் வெண்பா மாலையில் " வையகம் போர்த்த வயங்கொலிநீர் கையகலக் கற்ருேன்றி மண்தோன்ருக் காலம்" என்று சொல்லியுள்ளார். இது வெறும் மலைநிலம் என்க.

மலை சார்ந்த நிலம் அன்று மலையாக நின்ற இந்த இயற்கை உலகம் மலையும் மலைசார்ந்த நிலமுமான குறிஞ்சி உலகமாக—நில இயற்கையாக—நேரெண்ண நிலமுதற் பொருளாக அமைந்த பின்பு அந்த இயற்கை நிலப்பொருள் நிலையை அகப் பொருளோர் புறத்தில் அகம் என்பர். இது முதற் பொருட் காலத்தின் இடைநிலையதுவாகும். இந்த இடைநிலைப்பகுதி அகப்பொருளின் நேரெண்ணப் பொருட்பகுதியாய் விளங்கலின் அது பண்பு நிலையது என்பதாம். அஃதாவது படுதிரை வையம் நடுவணது ஒழிந்த ஐந்திணையாகப் பகுக்கப்பட்ட பண்புடைய தாகும் என்று ஆன்ருேர் ஆழ்ந்து அறிந்து அறையத்தக்கதான மூல நிலப்பண்பை வெளிப்படையாக வெளிக்கொணர்ந்து நின்ற காட்சி நிலம் என்பதாம்.

இந்நிலையான நிலம்,

"ஓங்குதிரை வியன்பரப்பின் ஒலிமுந்நீர் வரம்பாகத்
தேன் தூங்கும் உயர்சிமய மலைநாறிய வியன்ஞாலம்"

மதுரைக் காஞ்சி 1—4

என்று அமையுமென மதுரைக்காஞ்சி என்ற பாட்டு நூல் கூறும். இதிற் கடலும் மலையும் சேர்ந்த முழு நிலவுலகம் காணப்படுகின்றது. இந்த நிலவுலகமும் உயர் சிமயத்திலே தேன் தூங்கு நிலையதாய் விளங்குகின்றது என்றும் சொல்லப்பட்டுளதால் நிலமுதற் பொருளில் முதனிலையான காடுறை உலகம் பெறப்பட்டுள்ளது. இதனுடன் அக்காடுறை உலகமும், ஒரு கூட்டில் பெருந்தொகையான தேனீக்கள் கூட்டாகக் குழுமியிருந்து கூட்டுணவும் கூட்டின்பமும் பெறும் பெற்றியது போலக் காடுறை உலகப் பண்பும் பண்பாடும் காணத்தக்கது என்பதையும் புலப்படுத்தியவாறும். நிற்க, எவ்விதமான மனித முயற்சிகளும் நடைபெறாத இயற்கை நிலமாக—தெய்வம் படைத்த நிலமாக நிலமுதற் பொருள் நின்ற சிரினையே நாம் தெய்வ நிலமென்றும், அந்நிலப் பண்பு தெய்வப் பொருண்மையது என்றும், அந் நிலப் பண்பாடாம் ஒழுக்கம் தெய்வப் புணர்ச்சியது என்றும் ஆன்றோர் கொண்டனர். இதனாலன்றோ அகப்பொருளிலக்கணம் கண்டார் அகப்பொருளுக்குரிய கருப்பொருளிலே தெய்வம் தேர்ந்து அதனையே முதற்கண் நிறுத்திக் காட்டினர். இத் தகுவான தெய்வப் பொருண்மை நிறைந்த நிலத்திலேயே,

"யானை தாக்கினும் அரவுமேற் செலினும்
நீல்நிற விசும்பில் வல்லேறு சிலைப்பினும்
சூல்மகள் மாறா மறம்பூண் வாழ்க்கை
வலிக்கூட் டுணவின் வாட்குடிப் பிறந்த"

—பெரும்பா. 134—137

மக்கள் வாழ்ந்தனர். இப்பாப் பகுதியில் இயற்கை உலகத்தின் செயற்பாடுகளால் நிலமும், அச் செயற்பாடுகளுக்கு அஞ்சாத வீர வாழ்க்கையை அந்நில மக்கள் தம்மை அறியாமலே தழுவித் தலைப்பட்டு நிற்கும் பெற்றியால் நிலப் பண்பும், கூட்டாக மக்கள்தம் மிகு வலிமையை ஆண்டு உணவாம் பொருளியலைப் பெற்றுக்கொள்ளும் கோட்பாட்டால் இன்பியலுக்குரிய நிலப் பண்பாடும் விளங்குகின்றன. இதுவே முதற்பொருட் காலத்தின் இடைநிலையில் நின்ற நிலமுதற் பொருளின் விளக்கமாகும்.

முதற்பொருட் காலத்தின் இறுதிநிலையில் இந்த நிலமுதற் பொருள் நிற்கும் நிலையை இனி விளக்குவாம். இதற்கு, ந ெ ட

பண்பு எங்ஙனம் நிலப் பண்பாடாயிற்று என்பதை முதற்கண் நோக்கல் வேண்டும். தெய்வப் பொருண்மையான நிலப்பண்பை நேரெண்ணத்தால் நேர்ந்துகொண்ட மாந்தர் அந்த நிலப் பண்பிலே விடுதலறியா வேட்கையினராய் நிலமுதற் பொருளை மேலும் மேலும் எண்ணுகின்றனர். அவ்வாறு மாந்தர் எண்ணும் போது மறம்பூன் வாழ்க்கை வளத்தால் இந்த இயற்கை நிலமே நாம் விரும்பி வாழும் ஒழுக்க நிலமாக இனிதுற இயலும் என்று நிலம் ஒட்டா நீர்மையவாகிய வேறெண்ணம் கொண்டனர். நிலமொட்டிய நிலப் பண்பு நேரெண்ண வழியாய் மாந்தர் மனத்தகத்தில் மலரவே அவரது மறம்பூன் அறிவியல் அதனை நிலமொட்டா வாழ்வியலுக்கு வழிப்படுத்தியது. இதனையே ஆன்ருேர் நிலப்பண்பாடு என்றனர். இதுவே அகப் பொருளில் ''திணைப்பொருள்'' எனப்படும். இக் கருத்தை அகப்பொருள் நெறியில் விளக்குறின் நிலமுதற் பொருள் நிலப் பண்புப் பொருளாக மாந்தர் மனத்தில் நேர்பெறுதலால் அது நிலமொட்டிய திணைப் பண்பாய் அங்கு மிகுந்து இயல்வதாயிற்று. இதனையே தமிழான்ருேர் ஐந்திணைக்கு அமையாத பெருந்திணை என்பர். உலக வழக்கிற்கு உரியதான இப்பெருந்திணை ஒழுக லாற்றைப் புலநெறிப் புலவோர் உள்ளத்தால் உள்ளலும் தீதே என்று எண்ணி எடுத்தெறிந்தனர். அவ்வாறு அவர்கள் எடுத் தெறிந்தாலும் அதனைக் குறிப்பாகக் குறித்து அகப்பொருளிலக் கணம் இயம்பியுள்ளனர்.

இந்த நிலமொட்டிய திணைப்பண்பாய் மிகுந்த நிலப்பண் பானது பெயரும் பெற்றியதாகிய தெய்வப் பண்போடு மயங்கி நின்றதால் அது பெருந்திணை நிலையிலிருந்து மாந்தரைப் பிரித் துச் சிறுதிணையினராய் ஒழுகத் தூண்டிற்று. எனவே, அவர்கள் பக்கம் பக்கமாய்க் கிளையுருவிற் கிளைத்துப் போய்க் காடுறை யாய் வாழ்ந்தனர். இந் நிலையில், புறத்தில் அகமாய் நின்ற நிலப்பொருள் அகத்திற் புறமாய் வேற்றுநிலை பெற்று முதற் பொருள் காலத்தின் இறுதி நிலையைப் பெறுகின்றது. இவ் விறுதிக் காலத்திற்ருன் நாம் முன் விளக்கியவாறு கூட்டுக் கைக்கிளைத் திணையாக நிலமுதற்பொருளின் பண்பாடு மிளிர் கின்றது. இந்த நிலப் பண்பாட்டுச் செய்தியை வெற்பன், சிலம்பன், எயினன், கானவன் என்ற மலைநில மக்கட் பெய ரோடு அமையவே கூறலாம். வெற்பன், சிலம்பன் என்ற பெய ருடையோர் மலையிலும், எயினன், கானவன் என்ற பெயருடை யோர் மலை சார்ந்த நிலத்திலும் பொருந்துவர். மலை சார்ந்த நிலத்தில் திரிந்த குறிஞ்சியிலே எயினரும் திரியாக் குறிஞ்சியிலே கானவரும் வாழ்ந்தனர். இவர்கள் விலங்குகளின் இயல்பு

அறியாது வல்வில்திறன் நோக்கிச் சாந்த விலங்கான பசு போன்ற விலங்குகளையும் எய்யும் விருப்பில் தலைநின்றனர். சிறப்பாகக் காட்டுப் பசுவின்மேல் அம்பெய்து அது குறிதவறி விடுமானால், அது தெய்வக்குற்றத்தால் விளைந்த செயல் என்று எண்ணி மலைக் கடவுளை வழிபடத் தம் கிளையோடு எழுந்து கள்ளுண்டு வழி படுவர். இதிலிருந்து, பசு போன்ற சாந்த விலங்குக் கொலை வாழ்வு குற்றமுடைத்தன்று என்பதும், தாம் செய்யும் தொழில் தெய்வ ஆற்றலுக்கு உட்பட்டதென்பதும், தொழில் வளத்தில் வீழ்வு வரின் அது தெய்வத்தின் எச்சரிக்கையாகும் என்பதும், அதற்குப் பயந்து கிளையோடு கூட்டாக வேண்டுதல் கொள்வ தென்பதும் முதற்பொருட் காலநிலப் பண்பாடாக நாம் நேர லாம். நிலமுதற் பொருட் பண்பும், பண்பாடும் தமிழக அறிவியல் நோக்கில் முதற்கண் தெய்வப் பொருண்மையிலே மிகுந்தன என்பது இதுவரை கூறியவாற்றாலே தெளிவாகின்றது.

4. நிலமுதற் பொருளின் திணையியல் :

முப்பொருளின் முன்பொருளான முதற்பொருட் காலத்தின் இறுதியில் மாந்தர் படிப்படியான சிறு முயற்சிகளின் விளைவால் அவர்களிடையே ஓர் ஒழுங்குப் பண்பாடு ஒளிவிடலாயிற்று. இந்த ஒளி நிலையால் அவர்களிடையே அவர்களை அறியாமல் ஒழுக்கப் பண்பு அரும்புவதாயிற்று. முதற் பொருட்கால மக்க ளிடம் இந்த ஒழுக்கப்பண்பு காலப்போக்கிலே திண்மைப்பட்டுத் ''திணை'' என்று சுட்டிச் சொல்லுமளவுக்குத் திகழ்வதாயிற்று. திணை அல்லது ஒழுக்கம் உயிர்ப்பண்புக்கு உரியதான நிலப் பண்பாட்டுப் பொருளாய் உளப்படுவதால் உரிப்பொருள் எனப் பட்டது. இந்த உரிப்பொருளில் நின்ற மாந்தர் நிலத்தை ஒட்டி வாழ்வுறுவராகில் முதற்பொருள் நிலையினர் என்றும், நிலப்பண்பை ஒட்டி வாழ்வுறுவராகில் கருப்பொருள் நிலையினர் என்றும், நிலப் பண்பாட்டை ஒட்டி வாழ்வுறுவராகில் உரிப் பொருள் நிலையினர் என்றும் நாம் தெளிதல் வேண்டும். இதில், முதற்பொருட் கால மக்களின் திணையியல் நிலத்தை ஒட்டிய தாகும். எனவே, இது நிலத்திணை எனப்படும். நிலத்திலும் நிலத்தின் தன்மையிலும் திண்மைப்பட்டு ஒழுகுதலால் அந் நிலத்திணையைத் ''திண்மைத்திணை'' எனலாம். இஃது அகப் பொருள் நோக்கில் ''முல்லையிற் குறிஞ்சி'' எனப்படும். இதனையே தொல்காப்பியர் ''காடுறை'' என்றார். ''காடுறை'' என்ற சொல் காடு + உறை என்று பகுக்கப்படும். ''காடு'' — மிகுதல். மிகுதல் — பெருகுதலாம். அஃதாவது அளவுமீறிப் பெருகுதலாம். ''உறை'' — உறுதலை உடையது. அஃதாவது

சேருதலுக்கு உரிய இடம் என்பதாம். எனவே, அளவுக்கு மீறிப் பெருகுதலுக்கு உறுதலை உடையது என்பது ''காடுறை'' என்ற சொற்பொருளாகும். இதனுல், நிலமுதற் பொருளின் ஒழுக்கம், அளவின்றி இன்பத்தில் திளைத்தலும், அதனுல் மக்கள் அளவின்றிப் பெருகுதலாற் பொருளை அளவின்றிக் கூட்டுதலுமாய் அமையும். இதனையே தமிழ் ஆன்ருேர் ''பெருந்திணை'' என்றனர். காடுறை என்ற சொற்பொருட்கும், பெருந்திணை என்ற சொற்பொருட்கும் மிக ஒன்றிய அமைவு உளதென்க. ''மிகுதியாக இருத்தலைச் செய்தல்'', ''பெரும் அளவில் புணர்தலைப் புரிதல்'' என்ற கருத்துக்கள் முதற் பொருட்கால இன உற்பத்தியில் நோக்கும்போது, தங்கு தடையின்றிக் கூட்டாக இருந்து புணர்தல் புரியும் ''கூட்டுமணம்'' என்ற இன்பியல் வகையும், பொருள் உற்பத்தியில் நோக்கும்போது இயற்கையில் விளைந்தவற்றைத் தங்கு தடையின்றி எளிதாக எடுத்தலாகிய ''பறிமுதற் பொருளாக்கம்'' என்ற பொருளாக்க வகையுமாக அமைகின்றன. இந்த இருவகை உற்பத்தி முறைகளும் அகப் பொருள் மொழியில் ''முல்லையிற் குறிஞ்சி'' எனப்படும். அஃதாவது, ''இருத்தலிற் புணர்தல்'' என்பதாம். இருத்தல் இனிதுறுதலுக்காகவே புணர்தலைச் செய்தல் என்பதே இதன் விரிபொருள். எவ்வித தொழிலுமின்றி மிகுதியாய் இருத்தலைக் கொண்டு இன உற்பத்தி ஒன்றையே இயற்றும் காடுறைஞரின் இயல்பு காலப்போக்கில் எய்தல் என்ற வேட்டைத் தொழில் உறுவதாய் முற்பட்டது. இதனுல் மிகுதியாய்ப் புணர்ந்து இருத்தல் என்ற முல்லை நிலைக்கு இடையூறு பொருந்துவதாயிற்று. இதனுல் காட்டின்கண்ணுள்ள பெருந்திணைப் பெருந் தொகுதிகள், பெருந்திணைச் சிறு தொகுதிகளாகப் பிரிதல் நிலையுற்றுக் காடுறையாய் இயல்பில் மிகுந்தன. இதனையே தொல்காப்பியர் காடுறை உலகம் முல்லை எனப்படும் என்று முல்லையைக் காட்டினுர். முல்லையில் முல்லை என்பது, இருத்தல் நிலை திண்மைப்படுத்தற்காகப் புணர்தல் உரியிற் பெருகாது இருத்தல் உரியிலேயே மிகுதலை உடையதாதல் என்பதாம்.

காடுறை உலகில் முல்லையிற் குறிஞ்சி நிகழ்வது பாலை நிலம் என்ற பொது நிலப்பக்கம் அமைந்த மலைசார்ந்த காட்டு நிலத்திலாம். முல்லையில் முல்லை நிகழ்வது அப்பொது நிலமான பாலைப் பக்கம் அமையாது காடு சார்ந்த மலைக்காட்டு நிலத்திலாம். எனவே காடுறை உலகம் பாலை சார்ந்த குறிஞ்சி நில உலகம் என்றும் முல்லை சார்ந்த குறிஞ்சி நிலம் என்றும் இருமைத் திணைநிலை உடையதாகின்றது. இது நிலமுதற் பொருள் நோக்கு விளக்கமாம். இனிக் காலமுதற் பொருள் நோக்கில்

உரைக்கின் வெப்பநிலக் குறிஞ்சிக்காடு என்றும், தட்பநிலக் குறிஞ்சிக்காடு என்றும் குறிக்கப்படும். மலை சார்ந்த முன்னிலப் பகுதியே மைவரைப் பகுதியாக அமைதலின், அப்பகுதி தட்பம் மிகுந்த குறிஞ்சிநிலக் காடாய் முல்லையில் முல்லை நிகழ்வதாயிற்று. அதன் பின்னிலப்பகுதி மழைமுகில் பெரிதும் எதிர்ப்படாத பகுதி ஆதலால், நிலம் திரியும் வெப்ப மலை நிலப் பகுதியாய் முல்லையிற் குறிஞ்சி பெறுவதாயிற்று. இவ்வாறு மலை சார்ந்த குறிஞ்சிக் காட்டின் கடுங் குளிராலும், பாலை சார்ந்த குறிஞ்சிக்காட்டின் கடும் வெப்பத்தாலும் மாந்தரின் உரிப் பொருள் தனித்துவம் பெறுது போயிற்று. முல்லை சார்ந்த குறிஞ்சிநிலக் காடோ வெப்பமும் தட்பமும் சமநிலைப்பட்ட நிலமாதலின் அந்நில மாந்தர் உரிப்பொருள் தனித்துவம் பெறுவதாயிற்று. இதனுலேயே தொல்காப்பியர் இந் நிலத்தையே புல நெறிக்கு ஏற்றதாகக் கொண்டார். இவ்வாறு தொல்காப்பியர் மலைசார்ந்த குறிஞ்சிக்காடும் பாலை சார்ந்த குறிஞ்சிக்காடும் என்ற இருநிலக் காடுகளை நிலமுதற் பொருளினின்றும் புறக்கணித்தது, அறிவியல் முறையான அன்பின் ஐந்திணைக்கு ஒவ்வா ஒழுக்க நிலம் என்று ஓர்ந்த அறிவுடைமையால் என்க. ஆனுல், தொல்காப்பியர் அன்பின் ஐந்திணைக்கு ஒவ்வாத அந் நிலங்களின் ஒழுக்க நிகழ்வுகளைக் குறிப்பாக அகத்திணை இயலிற் கூறியுள்ளார். அவற்றை ஈண்டு நாம் ஆராயின் அகத்திணையின் நிலமுதற் பொருளின் பொருண்மை தெளிவாகப் புலப்படும்.

தொல்காப்பியர் தாம் வரைந்த அகத்திணை இயலில் தாழ்ந்த இன்ப நிலைகள் எனக் கருதப்படும் கைக்கிளை, பெருந்திணை நூற்பாக்களை யாத்துள்ளார். இதிற் பெருந் திணையை,

"ஏறிய மடற்றிறம் இளமை தீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே."

—தொல். அகத். 51

என்ற ஒரு நூற்பா யாத்துள்ளார். இந் நூற்பாவானது ஐந் திணையில் நிகழும் களவு, கற்பு நிலையில் வரும் பொருந்தாக் காம ஒழுக்க நிகழ்வுகளைச் சொன்னுலும் ஐந்திணையில் அமையாத பெருந்திணைக் கோட்பாடுகளுக்கும் இந் நூற்பாக் கருத்துக்கள் அமையும். அஃதாவது, முதற்பொருட் காலத்தில்

வெற்பன், சிலம்பன் என்ற மலே சார்ந்த குறிஞ்சிக்காட்டு மக்களும் எயினர் என்ற பாலே சார்ந்த குறிஞ்சிக்காட்டு மக்களும் கானவர் என்ற முல்லே சார்ந்த குறிஞ்சிக்காட்டு மக்களும் மேற்கொண்ட முல்லே நிலேயிற் புணர்தலும் இருத்தலும் ஆகக் கொண்ட காமத் திறனுக்கும் அஃது அமையும் என்பதாம். நாம் முன்னர்க் கூறிய முல்லேயிற் குறிஞ்சிக்கும், முல்லேயில் முல்லேக்கும் இப் பெருந்திணே நூற்பாப் பொருளே நன்கு இயைத்துக் காட்டலாம். பெருந்திணே நூற்பாவில் முல்லேயிற் குறிஞ்சியாம் இருத்தலிற் புணர்தலே,

"தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலோடு தொகைஇ"

என்று வரும் நூற்பா அடிகள் எடுத்துக் காட்டும். முல்லேயில் முல்லேயாம் இருத்தலில் இருத்தலே,

"ஏறிய மடற்றிறம் இளமை தீர்திறம்"

என்று வரும் நூற்பா அடிகள் எடுத்துக்காட்டும். இப் பெருந்திணே நிகழ்வுகளில் "தேறுதல் ஒழிந்த காமத்து மிகு திறமும், ஏறிய மடற் திறமும்" மலே சார்ந்த குறிஞ்சிக் காட்டிற்கு அமையும். "மிக்க காமத்து மிடலொடு தொகைஇ" பாலே சார்ந்த குறிஞ்சிக் காட்டிற்கு அமையும். "இளமை தீர் திறம்" முல்லே சார்ந்த குறிஞ்சிக் காட்டிற்கு அமையும். இந்த நான்கு வகையான பெருந்திணே நிகழ்வுகளேத் தொல்காப்பியர் நுட்ப திட்பமாக உரிப்பொருள் கூறும் நூற்பாப் பகுதியில் பிரிதலின் வேறு வகையான ஒழுக்கம் கூறும் இரண்டு நூற்பாக்கள் யாத்துள்ளார்.

"கொண்டுதலேக் கழியினும் பிரிந்தவ ணிரங்கினு
முண்டேன மொழிப வோரிடத் தான"

—தொல். அகத். 15

என்பதும்,

"கலந்த பொழுதும் காட்சியும் அன்ன"

—தொல். அகத். 16

என்பதும் அந் நூற்பாக்களாம். இந் நூற்பாக்களே ஐந்திணேக் குரியவாய்ப் புலநெறி வழக்காகத் தமிழ்ச் சான்ருேர் கருத்து உரைக்கினும், ஐந்திணேக்கமையாத பெருந்திணே கைக்கிளேத் திணேகளுக்கும் பொருந்த உலக வழக்கு உரியதாய்ப் பொருள் கொள்ளலாம். தொல்காப்பிய உரையாசிரியர்களில் முன்னவரான இளம்பூரணர் இந் நோக்குடையவர். "கொண்டுதலேக்

கழிதல்.........'' என்ற நூற்பா பாலை சார்ந்த குறிஞ்சிக் காட்டு எயினர் ஒழுக்க உரியாக உள்ளலாம். ''கலந்த பொழுதும்'' என்பது மலை சார்ந்த குறிஞ்சிக்காட்டு வெற்பர். சிலம்பர் ஆன வேடர் ஒழுக்க உரியாக உரைக்கலாம். ''காட்சியும்'' என்பது முல்லை சார்ந்த குறிஞ்சிக்காட்டுக் கானவர் ஒழுக்க உரியாக ஓதலாம். இவ்வாறு பெருந்திணைக் குறிப்பு, நிகழ்வுகளையும் பிரிதலின் வேறு வகையான ஒழுக்க உரிப் பொருள்களையும் ஒப்ப நோக்கி ஆராய்ந்து அகத்திணையில் நிலமுதற் பொருளின் பொருண்மையை அறிக. இவ்வொப்புமை ஆய்வால் முதற்பொருட் காலத்திற்கு நிலைக்களமான காடுறை உலகத்தின் காமப் புணர்ச்சிப் பொது இயல்பும் புலனாகும். அதனை ஈண்டு சிறிது கூறுவாம்.

அகத்திணையில் நிலமுதற் பொருட் பண்பு தெய்வப் பொருண்மை மிகுந்து இயலும் நிலப் பண்பு என்பதை முன்னர் ஆய்ந்து துணிந்தோம். இந்த நிலப்பண்பு பெருந்திணை நிலையது என்பதும் கண்டோம். இதனாற் பெருந்திணையின் பொதுப் பண்பு தெய்வப்புணர்ச்சியதுவாகும் என்றல் நேரியதாம். ''தெய்வம்'' என்ற சொற்பகுதி ''தெய்'' என்பதாம். இது தே—தேய்—தெய் என்று அமைவுறும். ''அம்'' என்பது அழகு என்ற பொருண்மை உறும் சொல்லர்க்க விகுதி. தேய்—தேய்தல். காடுறை மக்கள் கட்டைகளையும் கற்களையும் ஒன்றோடொன்று தேய்க்கவே அதனிடத்திருந்து ''தீ'' உண்டாயிற்று. அத் தீயினால் அம்மக்கள் தம் வல்லமையால் ஆற்ற முடியாத சில கருமங்களைச் செய்து முடித்தார்கள். இதனாலே தீயானது வல்லமை வாய்ந்த பொருளாய் மிகுந்து நின்றதாற் காடுறைஞர் அதனைப் போற்றினர். அப் போற்றலின் பேற்றால் அத்தீயின் பொருண்மை அழகை அவர்கள் அறிந்து அவ்வறிவுப் பொருளோடு அத் தீப்பொருளையும் இணைத்துத் தெய்வம் என்று ஒழுக்க வாழ்வின் கருப்பொருளாய்க் கைக்கொண்டு வழுத்தினார்கள். இத் தீ என்ற தெய்வக் கருப்பொருளையே முன்னாகக் கொண்டு இன உற்பத்தியிலும், பொருள் உற்பத்தியிலும் தொகுதியாய் மிகுதியுற இருந்து சேர்தலைப் புரிந்ததால் ஆன்றோர் இதனைத் தெய்வப் புணர்ச்சி என்றனர். தேய் என்பது ஆகுபெயராய்த் தீயை உணர்த்த, அந்தத் தீ ஆகுபெயராய்த் தெய்வம் உணர்த்தியபடியால் ''தேய்'' என்பது இருமடி ஆகு பெயராய்த் தெய்வம் உணர்த்திற்று. முதற் பொருட்காலத்

தமிழரின் தெய்வக் கோட்பாடும் வழிபாடும் தீயை ஒட்டியன என்பது இதனுல் நமக்குத் தெளிவாகின்றது. இக்கருத்துக்கு அரணுகவே காடுறை உலகின் நிலப்பண்பு என்று எடுத்துரைக்கும் தெய்வப் பெயரான ''மாயோன்'' என்ற சொல்லின் பொருளும் அமைகின்றது. மாயோன் என்பது மாய்-ஒன் எனப் பகுக்கப்படும். தொகுதியாக உறைதலைச் செய்த நிலங்களின் காடுகளை இயற்கையாகவே தோன்றி எரித்து மாய்த்தலோடு அல்லாமல், அதற்குள் வாழ்ந்து பெரும் துன்பம் புரிந்த விலங்கு, பறவை, ஊர்வன போன்றவைகளையும் தியானது மாய்த்தது. இவ்வாறு மாய்த்தல் தொழிலைத் தீ செய்தபடியால் அத்தீ அழித்தற் கருத்துப் பொருளாகி, மாயோன் என்ற பெயர் பெற்றது. ஒன் என்ற விகுதியின் ஆற்றலால் மாயோன் என்ற தீயாக நின்ற தெய்வம் மாயாதவன்—அழியாதவன் என்ற கருத்துடைப் பொருளாகின்றது. காடுறை உலகில் தீயானது அம்மக்களுக்கு இயற்கையாகவே தீமையானவற்றை மாய்த்துத் தான்மட்டும் மாயாது இயற்கையாகவே நிற்றலால் அவ்வியற்கைத் தீயானது பேராவியற்கை உடையது என்க.

தே—தேய்ப்பது. அதாவது குறைப்பது என்ற பொருளாற்றலால் உயிர்கள் உறும் பெருந் துன்பத்தையோ அல்லது அத் துன்பத்துக்குரிய மூலப் பொருளையோ தேய்த்துத் தடுப்பது தெய்வம் என்ற மெய்யியற் பொது உண்மைக் கருத்து நமக்கு உறுதியாக்கப்பட்டதோடு, நிறைவுடைமை பேராற்றலுடைமை என்றவைகளை உடைத்து இறைத்தெய்வம் என்பதும் அறியப்பட்டது. உலகப் புணர்ச்சி தெய்வப் புணர்ச்சி என்று ஆன்ருேரால் இட்டு உரைக்கப்பட்டதிலிருந்து நாம் மேற்கண்ட விளக்கத்தின்படி அதுவும் தேய்தலை—குறைதலை—உடைய புணர்ச்சி என்ற கருத்துறும். தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம் எனப்பட்ட, தாய் தந்தை மகவு உடன்பிறந்தோர் என்ற முறைத் தெளிவு இழந்த புணர்தலிலே காமத்து அளவு இறந்து இருத்தலாம் திறத்திற் பெருந்திணை ஆதியில் நிலைத்தது. இந்தப் பெருந்திணைப் போக்கைத் தடைசெய்வதற்காகத் திணைத் தலைவர்கள் முதற்கண் பெற்ருேர்—மகவுப் புணர்ச்சித் தடை செய்தனர். இளமை தீர் திறம் தேய்ந்து அழிய உடன் பிறந்தார் புணர்ச்சித்தடை செய்தனர். ஏறிய மடல் திறம் குறைய, எவ்வித உறவுமுறை உள்ளவரோடும் புணர்ந்து கொள்ளும் இரத்தக் கலப்புப் புணர்ச்சியைத் தடை செய்தனர். இவ்வாறு பெருந்திணைப் புணர்ச்சியின் விரிவு

எல்லையின் அளவு, வரவரக் காலப்போக்கிற் குறைக்கப்பட்டுத் தன் இரத்தக் கலப்பற்ற புணர்ச்சி ஏற்பட்டதால் தெய்வப் புணர்ச்சி உலகியல் முறையிலும் தேய்தலை உடைய புணர்ச்சி என்ற கருத்துமிக நேரிய ஞான்றென்க. இவ்வாறு முதற் பொருட் காலத்தில் ஆதித் தமிழரின் இன்பியற் கோட்பாடு நிலமுதற் பொருள் கொண்டு தேரலாம்.

உசாத்துணை நூல்கள் :

1. தொல்காப்பியர்—தொல்காப்பியம்: கழக வெளியீடு - 1954, இளவழகனுர் பதிப்பு, சென்னை.
2. ஐயனரிதனுர் — புறப்பொருள் வெண்பாமாலை: கழக வெளியீடு-1954, பெருமைப்புலவர், சென்னை.
3. மாங்குடிமருதனுர் — மதுரைக்காஞ்சி: எஸ். ராசம் வெளியீடு-1957, பதிப்புக்குழு, சென்னை.
4. உருத்திரங்கண்ணனுர்—பெரும்பாணுற்றுப்படை: எஸ். ராசம் வெளியீடு-1957, பதிப்புக்குழு, சென்னை.

இலங்கைப் பேச்சுத் தமிழின் ஒலி மாற்றங்களும் சிறப்பு வழக்குகளும்

கணபதிப்பிள்ளை நவசோதி

இலங்கைப் பேச்சுத் தமிழிற் சொல் உச்சரிப்பு, அசை அழுத்தங்கள் முதலியவற்றைப் பொறுத்தவரையில் மிக்க வேறுபாடுகள் காணப்படுகின்றன. பரம்பரைக் குடிகளாகிய யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற வட கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களிடையே அமைந்த பேச்சுத் தமிழின் ஒலி மாற்றங்கள் இந்தியத் தமிழ் நாட்டுப் பேச்சுத் தமிழிற் காணப் படாதனவாகும். இலங்கையின் மலையகத்தில் வாழும் தோட்டத் தொழிலாளர்களின் பேச்சுத் தமிழின் ஒலி மாற்றங்கள் பிற மாகாணத் தமிழ் மக்களின் பேச்சுத் தமிழின் ஒலி மாற்றங்களி லின்றும் தனித்தன்மை வாய்ந்திருத்தற்கு அவர்கள் (அ) தமிழகத்திலிருந்து வந்து குடியேறியமையும் (ஆ) ஒன்றரை நூற்றுண்டுக் காலமாக வட கிழக்கு மாகாணங்களிலிருந்தும் வேருக மலையகத்தில் தனிப்பட்ட சூழலிற் பிற பாதிப்புகளுக்குட்படாது வாழ்ந்து வருகின்றமையுமே ஏதுக்களாகும். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலையகம் எனும் முப்பகுதிகளிலும் பேசப்படும் பேச்சுத் தமிழிற் காணப்படாத வகையில் வேறுபட்ட ஒலி மாற்றங்களும் சிறப்பு வழக்குகளும் இலங்கையின் தலைநகரமாகிய கொழும்பில் வாழும் முசுலிம்களின் பேச்சுத் தமிழில் இடம் பெற்றுள்ளமை அவதானிக்கற்பாலதான அமிசமாகும். உர்து, அரபு மொழிச் சொற்கள் தமிழ் ஒலி உருவம் பெற்று வழங்குதல் மட்டக்களப்பு முசுலிம்களின் பேச்சுத் தமிழிற் காணப் படுவதொன்ருகும்.

1. இலங்கைப் பேச்சுத் தமிழின் பொதுவான ஒலி மாற்றங்கள் :

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னர், வவுனியா மாவட்டத்துத் தமிழர்களின் பேச்சுத் தமிழிற் பின் வரும் ஒருமைப்பாடான ஒலி மாற்றங்கள் காணப்படுகின்றன :

1 : 1. ஓரினமாகும் அமைப்பில் (assimilation) மொழியின் இடை நிலையில் றகரம் பகரமாகவும் வகரம் ககரமாகவும் ஒலிக்கப்பெறுகின்றன.

உ-ம்:	ற — ப	நாற்பது	— நாப்பது
	வ — க	சிவப்பு	— சிகப்பு

1 : 2. பேச்சு வழக்கில் மொழியின் விகுதியில் ற்று, த்து ஆக ஒலிக்கப்படுவதுடன் த்து, ச்சு ஆகவும் மாற்றமுற்று ஒலிப்பது பெருவழக்காகக் காணப்படுவதாகும்.

உ-ம்:	ற்று — த்து	நேற்று	— நேத்து
		ஏற்று	— ஏத்து
		கழற்று	— கழத்து
		பெற்று	— பெத்து
	த்து — ச்சு	அடைத்து	— அடைச்சு
		எரித்து	— எரிச்சு
		உரித்து	— உரிச்சு

1 : 3. மொழியின் இடைநிலையில் ''ழ''கார ஒலி ''ள''கார ஒலியாகவும் ''த''கார ஒலி ''ச''கார ஒலியாகவும், ரகரம் றகரமாகவும் மாற்றம் பெறுகின்றன. இரண்டாவது வகையில் ஓரினமாகும் அமைப்பில் சகார ஒலி அமைவதையும் இறுதி வகையில் சகர மெய் மறைவதையும் பின்வருவன வெளிப்படுத்துவனவாம்:

உ—ம்:	ழ — ள	பழம்	— பளம்
		வாழைப்பழம்	— வாளைப்பளம்
		அழுகை	— அளுகை
		குழப்பம்	— குளப்பம்
	த — ச	வைத்தான்	— வைச்சான்
		கைத்தல்	— கைச்சல்
	ர — ற	கவர்ச்சி	— கவற்சி
		உணர்ச்சி	— உணற்சி

1 : 4. இலங்கைப் பேச்சுத் தமிழில் மெய்யொலியில் முடிய வேண்டிய சொற்கள் குற்றுகரம் ஏற்று வழங்குகின்றன:

உ—ம்:	நெல்	— நெல்லு
	கள்	— கள்ளு
	பல்	— பல்லு
	புல்	— புல்லு
	கல்	— கல்லு

1 : 5. இலங்கைப் பேச்சுத் தமிழில் மிகக் குறைந்த அளவு பிரயத்தனங்கள் பிரயோகிக்கப்படுவதும் ஒரு பண்பாக அமைவதினல் இயல்பாய் இருந்திருக்க வேண்டிய ஒலிகள் மறைவதற்கு 'ர'கரம் கெடுவதை உதாரணமாகக் கொள்ளலாம் :

வளர்ப்பு — வளப்பு
பார்த்து — பாத்து
சேர்ந்து — சேந்து
வளர்த்து — வளத்து

1 : 6. எண்ணுப் பெயர்களில் மொழி முதல் ஐ காரம் அகர மாக மாற்றம் பெறுகின்றது :

உ-ம்: ஐம்பது — அம்பது
ஐந்நூறு — அஞ்ஞூறு

2. யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழிலுள்ள ஒலி வேறுபாடுகள் :

இந்திய நாட்டுப் பேச்சுத் தமிழில் மெய்யொலியில் முடிவடையாத சொற்கள் வட இலங்கை யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழில் மெய்யொலியில் முடிவடைவது சிறப்புப் பண்பாகும். யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் தகரம் றகரம் ஆகிய வல் லொலிகள் இடையண்ண வல்லொலியாகிய சகரமாகச் சில விடங்களில் மாறுகின்றன. மெல்லொலிகளாகிய ஙகரமும் நகரமும் இடையண்ண மெல்லொலியாகிய ஞகரமாகச் சில விடங்களில் மாறுகின்றன. இம்மாற்றம் மொழிக்கு முதலில் அல்லது இடையில் வருகின்ற இகரத்தினல் அல்லது ஐகாரத்தி னல் அல்லது யகரத்தினல் நிகழ்கின்றது[1].

2 : 1. தகரமும் றகரமும் இடையண்ண சகரமாக ஒலிக்கப் படுகின்றன. தன்வினை வடிவங்கள் பிறவினை வடிவங்களை அடையும்போது அவற்றில் அமைந்த தகரவொலிகள் சகரவொலிகளாக மாறுவதைக் கீழ்க்கண்டவற்றிற் காணலாம் :

தன்வினை	பிறவினை	பிறவினைப் பேச்சு வடிவம்
அவிந்து	அவித்து	அவிச்சு
உரிந்து	உரித்து	உரிச்சு
குறைந்து	குறைத்து	குறச்சு
மறைந்து	மறைத்து	மறச்சு

இகரம் ஊர்ந்த யகரத்திற்குப் பின்வரும் றகரங்கள் சகரங்களாக மாறுகின்றன. அப்பொழுது இகரம் ஊர்ந்த யகரம் முற்றாகக் கெடுவதைக் கீழ்வரும் உதாரணங் களிற் காணலாம்:

ஆயிற்று — ஆச்சு
போயிற்று — போச்சு

மொழிக்கு முதலிலும் இடையிலும் உள்ள இகரத்திற்குப் பின்வரும் தகரம் சகரமாகின்றது:

உ - ம்: பெரிது — பெரிசு
சிறிது — சிறிசு
பிதற்று — புசற்று

2 : 2. ஙகரமும் நகரமும் ஞகரமாக மாற்றமுறுகின்றன. இகரத்திற்குப் பின்வரும் ஙகரம் ஞகரமாகின்றது.

உ - ம்: இங்கே — இஞ்சை
இஞ்சே

எண்ணுப் பெயர்களில் ஐகாரத்திற்குப் பின்வரும் நகரம் ஞகரமாக ஒலிமாற்றமடைகின்றது:

உ - ம்: ஐந்நூறு — அஞ்ஞூறு
இருபத்தைந்து — இருவத்தஞ்சு

2 : 3. யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழில் மொழிக்கு முதலிற் பின்வரும் ஒலிமாற்றங்கள் இடம்பெறுவது சிறப்பாகக் காணப்படுவதொன்றாகும்:

இ — ஈ	மிகுதி	— மீதி
இ — உ	திறப்பு	— துறப்பு
	விளிப்பு	— முளிப்பு
இ — எ	இழவு	— எழவு
உ — இ	புரட்டு	— பிரட்டு
	புரளி	— பிரளி
எ — இ	செலவு	— சிலவு
ஒ — உ	தொடக்கம்	— துடக்கம்
	கொடு	— குடு

2 : 4. மொழி இறுதியில் 'ற்று', 'த்து' ஆக ஒலிக்கப்படுவதுண்டு.

உ - ம்: ஊற்று — ஊத்து
பெற்று — பெத்து

2 : 5. யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழில் மெய்யிலே முடிவடைந்திருக்கவேண்டிய சில சொற்கள் ஒலித்துணை உகரம் பெற்று முடிகின்றன.[2]

உ-ம்: வில் — வில்லு
சொல் — சொல்லு
எள் — எள்ளு
முள் — முள்ளு
கொள் — கொள்ளு
நெல் — நெல்லு
கல் — கல்லு

யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழில் இவ்வாறான ஒலித்துணை உகரம் பெறாத பெயர்ச் சொற்களும் வழக்கில் உள்ளன:

உ-ம்: கண், மண், ஆண்.
தோள், தோல், கால், கடவுள்.

இந்தியத் தமிழில் ஒலித்துணை உகரம் பெற்று முடியும் சொற்கள் யாழ்ப்பாணத் தமிழில் ஒலித்துணை உகரம் பெறாது ஒலிக்கப்படுவதும் உண்டு:

உ-ம்: இந்தியத் தமிழ்	யாழ்ப்பாணத் தமிழ்
கண்ணு	கண்
பாலு	பால்
வாத்தியாரு	வாத்தியார்
பொண்ணு	பெண்

இந்தியப் பேச்சுத் தமிழில் மொழிமுதல் எகரம் ஒகரமாய் ஒலி மாற்றமுறுவதை இறுதி உதாரணத்திற் கண்டு கொள்ளலாம்.

3. கிழக்கிலங்கையின் மட்டக்களப்புப் பேச்சுத் தமிழில் யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழிலுள்ள ஒலிமாற்றங்களும் இடம் பெற்றிருப்பினும் சில சிறப்பு ஒலிமாற்றங்களும் குறிப்பிடத் தக்கனவாகும்.

3 : 1. மொழிக்கு முதலில் அகரம் எகரமாக ஒலிக்கப்படுவது மட்டக்களப்புப் பேச்சுத் தமிழின் சிறப்பு அமிசமாகும்.

உ-ம்: அரிசி — எரிசி
மன்னன் — மென்னன்
அலங்கார ரூபன் — எலங்கார ரூபன்

3 : 2. மொழி முதலில் ஐகாரம் அகரமாகவும் எகரமாகவும் திரிவுற ஒலிக்கப்படுவதைக் காணலாம்.

உ-ம்: வைத்த — வச்ச — வெச்ச

3 : 3. மொழி முதல் இகரம் உகரமாக ஒலிமாற்றம் பெறுவதைப் பிள்ளை எனும் பதம் புள்ள என உச்சரிக்கப் படுவதில் அறியற்பாலதாகும்.

3 : 4. மொழி இடையில் 'ல' கரம் 'ண' கரமாகவும், மொழி விகுதி 'ற' கரம் 'ட' கரமாகவும் ஒலிமாற்றம் பெறுகின்றது.

உ-ம்: ஒன்று — ஒண்டு
பன்றி -- பண்டி
கன்று — கண்டு
கொன்று — கொண்டு

3 : 5. 'ந்த' 'ஞ்ச' என ஒலிமாற்றம் பெறுவதையும் ரகரம் லகரமாக ஒலிமாற்றம் பெறுவதையும் மட்டக்களப்புப் பேச்சுத் தமிழிற் காணலாம்.

ந்த — ஞ்ச முடிந்தது — முடிஞ்சது
விடிந்தது — விடிஞ்சது

ர — ல குரவை — குலவை
சரவை — சலவை

3 : 6. மொழி இறுதியில் தகரம் சகரமாக ஒலிமாற்றம் அடைகின்றது.

உ-ம்: வைத்த — வச்ச — வைச்ச

3 : 7. மொழி முதல் ஏகாரம் ஆகாரமாகவும் ஓகாரமாகவும் உச்சரிக்கப்படுவதை இப் பிராந்தியப் பேச்சுத் தமிழிற் காணலாம்:

சேவல் — சாவல்
பேடு — போடு

3 : 8. 'ஏன்' என்னும் விகுதி 'அன்' ஆக மாறி ஒலித்தல் இலங்கையின் பிற பகுதிகளின் பேச்சுத் தமிழிலும் பொதுவான ஒன்ருயினும் மட்டக்களப்புப் பேச்சுத் தமிழில் இம்மாற்றம் பெருவழக்காயுள்ளது.[3]

வந்தேன் — வந்தன்	வருவேன் — வருவன்
தந்தேன் — தந்தன்	அடித்தேன் — அடிச்சன்
பிடித்தேன் — பிடிச்சன்	கதைத்தேன் — கதைச்சன்
படிப்பேன் — படிப்பன்	படிக்கிறேன் — படிக்கிறன்

இவ் விகுதி மாற்றம் மூன்று காலங்களிலும் இடம் பெறுவது. நிகழ்காலச் சொற்கள் சில, இவ்வாறான விகுதி மாற்றத்துடன் மொழி முதல் நீண்டும், இடை நிலை திரிந்தும் வழங்குவதற்குப் பின்வரும் பதங்கள் எடுத்துக்காட்டுக்களாகும்:

தருகிறேன் — தாறன்
வருகிறேன் — வாறன்
போகிறேன் — போறன்

நிகழ்காலச் சொற்கள் 'கின்று' இடைநிலையினை ஏற்காமல் 'கிறு' இடை நிலையினை ஏற்று ஒலித்தல் இப் பிராந்தியப் பேச்சுத் தமிழின் பண்புகளிலொன்றாகும்.

3 : 9. எண்ணுப் பெயர்களில் 'ன்', 'ம்' ஆகவும் 'ம்', 'ன்' ஆகவும் ஒலிமாற்றம் பெறுவதை மட்டக்களப்புப் பேச்சுத் தமிழிற் காணலாம்:

உ-ம்: ஒன்பது — ஒம்பது
ஐம்பது — அன்பது

3 : 10. யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழிற் காணப்படுவதைப் போன்று மெல்லின மெய்யீறும் இடையின மெய்யீறும் குற்றுகரம் ஏற்று வழங்குதல் இப் பிராந்தியப் பேச்சுத் தமிழிலும் காணப்படுவதொன்றாகும்:

உ-ம்: மண் — மண்ணு
நெல் — நெல்லு
கல் — கல்லு

இவ்வாறே இரு பிராந்தியங்களின் பேச்சுத் தமிழிலும் ஓரினமாகும் அமைப்பிலும் ஒருமைப்பாடு காணப்படுகின்றது.

உம்: நாற்பது — நாப்பது
வெட்கம் — வெக்கம்
நிற்கிறான் — நிக்கிறான்

4. இலங்கையின் தலைநகராகிய கொழும்பில் வாழும் முசுலீம்களின் பேச்சுத் தமிழில், வடக்குக் கிழக்குப் பகுதியில் வாழும் முசுலீம்களின் பேச்சுத் தமிழில் இடம்பெறாத ஒலிமாற்றங்கள் அமைந்துள்ளன. யாழ்ப்பாணம், மட்டக்களப்புப் பகுதிகளிலுள்ள தமிழ் மக்களின் பேச்சுத் தமிழிற் காணப்படாத ஒலிமாற்றங்களும் இவர்களது பேச்சுத் தமிழில் இடம்பெறுகின்றமைக்கு இவர்களின் அரபுமொழிப் பரிச்

சியமே முக்கிய காரணமாகும். உர்து அரபு மொழிகளின் 'ப' (Ba) என்ற ஒலி, தமிழில் வகரம் மொழி முதலில் வரக்கூடிய இடங்களில் 'ப' கரமாக உச்சரிக்கும் அளவிற்கு மிகுதியாகவே பயன்படுத்தப்படுதல் சிறப்பு அமிசமாகும்.

4 : 1. மொழிக்கு முதலில் பின்வரும் ஒலிமாற்றங்கள் இடம் பெறுகின்றன :

பி—பு	பிடி	—புடி
பி—பொ	பிறகு (பின்னர்)	—பொறவு (பொறவைக்கு)
வ—ப	வயிறு	—பவுறு
	விழுந்து	—புளுந்து
	விளங்காது	—புளங்காது
வை—வெ	வை	—வெய்
சு—சோ	சுகம்	—சோம்
சொ—செ	சொன்னான்	—சென்னான்

4 : 2. இடைநிலை எழுத்துக்கள் இன்றியும் ஒலிக்கப்படுவதுண்டு.

த சதம் — சம் (பத்சம்)
க சுகம் — சோம்

4 : 3. ஏனைய பிராந்தியப் பேச்சுத் தமிழில் உள்ளதைப் போன்று 'ர'கர ஒலி இன்றி ஒலிக்கப்படும் சொற்களும் உண்டு.

நேரத்தோடு — நேத்தோடு
இருக்கு — ஈக்கு

4 : 4. உகரம் ஊர்ந்த உயிர்மெய்ச் சொற்கள் இகர ஒலி மாற்றம் பெறுகின்றன.

இரு — இரி
முன் — மின்

4 : 5. வினைச்சொல்லில் 'யா' 'தா' ஆக ஒலிமாற்றம் பெறுகின்றது.

யார் — தார்

4 : 6. இடைநிலைக் 'க' கரம் 'வ' கரமாக ஒலிமாற்றம் பெறுகின்றது.

பகல் — பவல்
மகன் — மவன்

4 : 7. கொழும்பு முசுலீம்கள் சிறப்புச் சொல்லாட்சிகளைத் தமது பேச்சுத் தமிழில் கையாள்கின்றனர்.

ட்டு :	எங்கே	— எங்கிட்டு
	இங்கு	— இங்கிட்டு
கோ :	வைத்துக்கொள்	— வெச்சுக்கோ
ஆக்கா !	ஓடினால்	— ஓடினாக்கா
அக்க :	அங்கு	— அங்கனக்க
	இங்கு	— இங்கனக்க
காட்டி :	வரும்வரை	— வரக்காட்டி
	ஓடும்வரை	— ஓடக்காட்டி
சிரிக்கு :	ஓடினஉடன்	— ஓடினசிரிக்கு

4 : 8. ளகர லகர மெய்யீறு கொண்ட பெயர்ச் சொற்கள் உகர உயிர் இணைந்து ஒலிமாற்றம் பெறுகின்றன :

தோள் — தோளு கால் — காலு
தோல் — தோலு வாள் — வாளு

5. மட்டக்களப்பு முசுலீம்கள் அரபுப் பதங்களைத் தமிழுருவளித்து உச்சரிக்கின்றனர் :

மஃரிப் — மகரிக்கை
மிஸ்கின் — மிசுகின்

5 : 1. கொழும்பு முசுலீம்களின் பேச்சுத் தமிழில் பெருவழக்காக வகரம் 'ப' (Ba) கரமாக உச்சரிக்கப்படினும், மட்டக்களப்பு முசுலீம்களின் பேச்சுத் தமிழில் உர்து, அரபுப் பதங்களில் உள்ள 'ப'கரம் வகரமாகவே மொழி முதல் இடைநிலைகளில் ஒலி மாற்றமடைகின்றன.

உ-ம் : சபூர் — சவுறு
பாங்கு — வாங்கு

6. மட்டக்களப்பு யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் 'ங்க' எனும் சொல்லாட்சி எல்லாச் சொற்களிலும் இடம்பெறுவதில்லையாயினும், மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் பேச்சுத் தமிழிற் பெரு வழக்குகளாய் ''எப்படிங்க'', ''வாங்க'', ''சுகங்களா'' என்றவாறு பயின்றுவரப்படுவதைக் காணலாம்.

7. யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் ' இங்கு ' என்பது ' இங்கை ' எனவும், ' இஞ்சை ' எனவும், ' அங்கு ' என்பது ' பங்கை ' எனவும் ' பங்கா ' எனவும் உச்சரிக்கப்படுவது இப்பிராந்தியத்திற்கே உரியதொன்றாகும்.

இலங்கைப் பேச்சுத் தமிழின் ஒலிமாற்றங்களும் சிறப்பு வழக்குகளும் குறித்து முதன்முறையாக இக் கட்டுரையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கையின் மேற்குக் கரையில் நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம் போன்ற பகுதிகளில் வாழும் தமிழ்மக்களின் பேச்சுத் தமிழிற் சிங்களச் சொற்கள் பெருமளவில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்க அமிசமாகும். இத்துறையில் மேலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

அடிக்குறிப்புகள் :

1. தனஞ்சயராசசிங்கஞ் ச., யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் சில ஒலிகள் சகர ஞகரமாக மாறும் வகை.—தினகரன்

2. சுசீந்திரராசா சு., ஒலித்துணை உகரம், நுட்பம்: தமிழ்ச் சங்கம், இலங்கைப் பல்கலைக் கழக கட்டுப்பெத்த வளாகம், 1973. பக். 16 (1973).

3. கந்தையா வி. சீ., மட்டக்களப்புத் தமிழகம்; பக். 111, ஈழகேசரி பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம், யாழ்ப்பாணம், 1964.

தமிழ்ச் சொற்றொடரியல் முறையில் கணக்கியற் குறியீடுகள்

(Mathematical Symbols in Thamizh Syntax)

இரா. கணேசன்

1. கணக்கியற் குறியீடுகள் :

"சில்வகை எழுத்திற் பல்வகைப் பொருளைச்
செவ்வ னாடியிற் செறித்தினிது விளக்கித்
திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம்."

எனச், சூத்திரம் என்றால் என்ன என்பதை நன்னூலார் வரையறை செய்கிறார். இதே வரையறை கணக்கியற் குறியீடுகளுக்கும் பொருந்தும்.

"Mathematical symbols constitute a language in which quantities, operations with them, and their relations to each other are represented in abstract terms clearly and concisely."

எனக் கணக்கியற் குறியீடுகளை Encyclopaedia Brittanica (1970) வரையறை செய்வதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

கணக்கியற் குறியீடுகள் என்பன கணக்குத் துறைச் சொல் அல்லது சொற்றொகுதிகளைக் குறிக்க வழங்கும் இடுகுறிகளாகும். மிகப் பழைய அச்சிட்ட எண் கணிதவியல் (Arithmetic) நூல்களில் அத்துறைச் சொல் அல்லது சொற்றொகுதிகளின் சுருக்கங்களையோ முதலெழுத்துக்களையோ கணக்கியற் குறியீடுகளாகப் பயன்படுத்தி வந்திருக்கின்றனர். நாட் செல்லச் செல்ல இச் சுருக்கங்கள் சில குறியீடுகளாற் குறிக்கப்படலாயின. அவ்வாறு முதன் முதலில் வழக்குக்கு வந்த குறியீடு = என்பதாகும். கி. பி. 1557ஆம் ஆண்டிற்றான் இராபர்டு இரிகார்டு (Robert Recorde) என்பவர் தம் எழுத்துக் கணிதவியலில்

(Algebra) = என்ற குறியீட்டை முதன் முதலாகப் பயன் படுத்தினர். "is equal to" என்னும் சொற்றொகுதி பல முறை திரும்பத் திரும்ப வந்ததால் அதனை = என்னும் குறி யீட்டால் வழங்க முற்பட்டதாக அவர் தம் நூலிற் குறிப்பிட் டுள்ளார். அவருக்குப் பின் கணக்கியல் மேலும் மேலும் வளர லாயிற்று. < (Less than), > (Greater than), முதலிய குறி யீடுகள் வழக்குப் பெறலாயின. ஒரே குறியீடு வழங்குவார் தகுதிக்கும் நிலைக்கும் ஏற்ப வெவ்வேறு சொல்லையோ சொற் றொகுதிகளையோ குறிக்கும் சூழ்நிலைகள் முதலில் உருவாயின. பின்னரே சில கணக்கறிஞர்களின் முயற்சியால் ஒவ்வொரு குறியீடும் குறிக்கும் பொருள் நிலைவு செய்யப்பட்டு உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2. ஆங்கில மொழியிற் கணக்கியற் குறியீடுகள்:

ஆங்கில மொழியில் இத்தகைய குறியீடுகள் எவ்வாறு வழங்குகின்றன என இனிக் காண்போம். முதலில் மிக அடிப் படையான கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் (+, —, ×, ÷) குறியீடுகளை எடுத்துக் கொள்ளுவோம்.

$$8 + 4 = 12$$

இதனை ஆங்கிலத்தில் Eight plus Four is equal to Twelve என்றே படிப்பர். இங்கு "Plus" என்னும் சொல்லின் குறி யீடாக "+" உம், "is equal to" என்னும் சொற்றொகுதி யின் குறியீடாக "=" உம் பயன்படுத்தப்படுகின்றன. என்றாலும் ஆங்கில மொழியின் சொற்றொடரியல் முறையில் எத்தகைய மாற்றமும் இல்லை.

Eight plus Four என்பது எழுவாய்
is equal to என்பது பயனிலை
Twelve என்பது நிறைநிலை (Complement)

அதாவது ஆங்கில மொழியில் சொற்றொடரின் முதற் பகுதி யாக எழுவாயும், அதனை அடுத்துப் பயனிலையும், அதனை அடுத்து நிறைநிலையோ செயப்படுபொருளோ வருவது மாற வில்லை. மற்ற எந்தக் குறியீடுகளைப் பயன்படுத்தினாலும் இதே வைப்புமுறை மாறாதிருத்தலைக் கீழ்க் கண்டவற்றால் அறிய லாம்.

$8 - 4 = 4$ என்பது Eight minus Four is equal to Four என்றும்

$8 \times 4 = 32$ என்பது Eight multiplied by Four is equal to Thirty two என்றும்

$8 \div 4 = 2$ என்பது Eight divided by Four is equal to two என்றும்

$8 > 4$ என்பது Eight is Greater than Four என்றும்

$4 < 8$ என்பது Four is less than Eight என்றும்

$8 \neq 4$ என்பது Eight is not equal to Four என்றும் படிக்கப்படும்.

3. தமிழ்மொழியிற் கணக்கியற் குறியீடுகளைப் பயன்படுத்து வதில் உள்ள சிக்கல் என்ன?

கணக்கியற் குறியீடுகளை அனைத்து நாட்டவரும் ஒன் றெனவே ஏற்றுக் கொண்டுள்ளதாக அறிகிறோம். நாமும் அக் குறியீடுகளை அவ்வாறே பயன்படுத்துவதிலே தவறேதும் இல்லை. ஆயின் சிக்கல்தான் என்ன?

$8 + 4 = 12$ என்பதை எடுத்துக் கொள்ளுவோம்.

இதனைத் தமிழில் எவ்வாறு படிப்பது?

''எட்டு கூட்டல் நான்கு சமம் பன்னிரண்டு'' எனப் படித்தார் ஒரு கல்லூரி மாணவர்.

''எட்டும் நான்கும் பன்னிரண்டு'' என ஒரு சிறுவனும்
''எட்டுடன் நான்கைக் கூட்டப் பன்னிரண்டு'' என இன்னொரு சிறுவனும் படித்தனர்.

கல்லூரி மாணவரின் கூற்று, செயற்கையாக இருத்தலைக் காணலாம். ஆனால் இக் கூற்று, எண்களும் குறியீடுகளும் வைக்கப்பட்டுள்ள முறையில் அமைந்திருப்பது புலனாகும். பள்ளிச் சிறுவர்களின் கூற்று இயற்கையாக இருத்தலைக் காண லாம். ஆனால் அவர்கள் கூற்று, எண்களும் குறியீடுகளும் வைக்கப்பட்டுள்ள முறையில் அமைந்தில்லாமையைக் காண லாம். அவர்கள் கூற்றுப்படிக் குறியீடுகளைப் பயன்படுத்தி எழுதுவதாயின்

$8 + 4 = 12$ என்பது
$8, 4 + 12 =$ என அமையும்.

இஃது அனைத்து நாட்டு எழுது முறைக்கு மாறாக விருத் தலைக் காணலாம். இத்தகைய சிக்கலுக்குக் காரணமென்ன? தமிழ் மொழியில் முதலில் எழுவாயும் அதனையடுத்துச் செயப்படு பொருளும் அதனையடுத்துப் பயனிலையும் வருவதே சொற்றொட ரியல் முறை. அனைத்து நாட்டுக் கணக்கியற் குறியீடு வைப்பு

முறை ஆங்கிலச் சொற்றொடரியல் முறையைத் தழுவி நிற்கிறது. எனவே எண், குறியீட்டு வைப்பு முறையில் படித்தால் அது தமிழ்ச் சொற்றொடரியல் முறைக்கு முரணாக அமைகிறது. ஆகவே, தமிழ் மொழியிற் கணக்கியற் குறியீடுகளைப் பயன்படுத்தும்போது மூன்று வகைக் கட்டுப்பாடுகளை நாம் பின்பற்ற வேண்டியவர்களாக உள்ளோம்.

1. அனைத்துலகக் குறியீடுகளையே பயன்படுத்துதல் வேண்டும்.

2. அனைத்துலக எண், குறியீட்டு வைப்பு முறையையே பின்பற்றுதல் வேண்டும்.

3. மேற்கண்ட அதே எண், குறியீட்டு வைப்புமுறை தமிழ்ச் சொற்றொடரியல் முறையிலும் பொருந்துதல் வேண்டும்.

சற்றே நினைத்துப் பார்த்ததில் மேற்கண்ட கட்டுப்பாடுகளுக்குட்பட்டுக் கணக்கியற் குறியீடுகளைத் தமிழில் வழங்க முடியும் என்பது புலனாயிற்று. அவற்றை இனிக் காண்போம்.

4. சிக்கலுக்குத் தீர்வு:

$8 + 4 = 12$ என்பதை எட்டும் நாலும் பன்னிரண்டு எனலாம், இவ்வாறுதான் இந்தி மொழியிலும் பர்மிய மொழியிலும் வழங்குகின்றனர்.

எட்டுடன் கூடும் நாலாம் பன்னிரண்டு என்றும் கூறலாம். இஃது "உயிரும் உடம்புமாம் முப்பது முதலே" என்பதுடன் ஒப்பு நோக்கத் தக்கது. இங்கு உடன்கூடும் என்பது + குறியீட்டினிடத்தையும், ஆம் என்பது = குறியீட்டினிடத்தையும் பிடிக்கின்றன. எண், குறியீட்டு வைப்பு முறையிலும் மாற்றமில்லை; தமிழ்ச் சொற்றொடரியல் முறைக்கும் ஏற்ப அமைகிறது.

$8 - 4 = 4$ என்பதை எட்டில் கழியும் நாலாம் நாலு எனலாம்.

$8 \times 4 = 32$ என்பதை எட்டைப் பெருக்கும் நாலாம் முப்பத்திரண்டு எனலாம்.

எட்டு நாலு முப்பத்திரண்டு என்பது உலக வழக்கு. இஃது ''ஈரெட்டாண்டு அகவையினுன்'', ''ஈராறுண்டு அகவையினுன்'' என வரும் சிலப்பதிகார அடிகளுடன் ஒப்புநோக்கத் தக்கது.

$8 \div 4 = 2$ என்பதை எட்டை வகுக்கும் நாலாம் இரண்டு எனலாம்.

$[(8 + 4 + 3 - 2 - 1) \times 4] \div 3 = 16$ என்பதை எட்டுடன் கூடும் நாலுடன் கூடும் மூன்றில் கழியும் இரண்டில் கழியும் ஒன்றைப் பெருக்கும் நாலை வகுக்கும் மூன்றும் பதினறு எனலாம்.

Positive Four என்பதை $+4$ என்று குறிப்பிடுவது வழக்கம். இதனை உடன்பாட்டு நாலு எனலாம்.

Negative Four என்பதை -4 என்று குறிப்பிடுவது வழக்கம். இதனை எதிர்மறை நாலு எனலாம்.

மேலும் சில கணக்கியற் குறியீடுகளும் அவற்றைத் தமிழில் வழங்கும் முறைகளும் கீழே தரப்பட்டுள்ளன.

$\frac{a}{b} = c$	a இன் கீழ் b ஆம் c அல்லது b இல் a ஆம் c
$a^0 = 1$	a இன் சுழிமடி என்பது 1
$a^1 = a$	a இன் ஒருமடி என்பது a
$a^2 = 100$	a இன் இருமடி என்பது நூறு
$a^3 = 1000$	a இன் மும்மடி என்பது ஆயிரம்
$\sqrt{a} = 10$	a இன் இருமடி வேர் என்பது பத்து
$\sqrt[3]{a} = 10$	a இன் மும்மடி வேர் என்பது பத்து
$a = b$	a க்கு ஈடாம் b
$a \neq b$	a க்கு ஈடன்று b
$a > b$	a இனும் சிறிது b
$a < b$	a இனும் பெரிது b
$x < a < y$	x இனும் பெரிது a; a இனும் பெரிது y

(இஃது ''நீரினும் பரந்தன்று; வானினும் உயர்ந்தன்று'' என்னும் குறுந்தொகை வரியுடன் ஒப்பு நோக்கத்தக்கது.)

$a \not> b$ a இனும் சிறிதன்று b

$a \not< b$ a இனும் பெரிதன்று b

$a \parallel b$ a க்கு இணையாகும் b

$a \perp b$ a க்குச் செங்குத்தாம் b

b = Sin c where c is an angle. b என்பது Sin c இங்கு c என்பது ஒரு கோணம்.

$a \geq b$ a யினும் சிறிது அல்லது ஈடாம் b

$a \simeq b$ a க்கு ஏறத்தாழ ஈடாம் b

$a \sim b = c$ a இடை b ஆம் c

இதனை ஆங்கிலத்தில் Difference between a and b is equal to c என்பர். இங்கு ஆங்கிலச் சொற்ருெடரியல் முறைக்கு ஏற்பக் குறியீட்டு வைப்பு முறை அமையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

$$L\{f(t)\} = \int_{0}^{\infty} e^{-st} f(t)\,dt$$ $f(t)$ இன் Laplace மாற்றம் என்பது e இன் எதிர்மறை st மடியை $f(t)dt$ஆல் பெருக்கிச் சுழியிலிருந்து எண்ணிலிவரை நுண் தொகுப்பு செய்யக் கிடைப்பதாகும்.

5. முடிவுரை :

அனைத்துலகக் குறியீடுகளை ஏற்றுக்கொண்டாலும், அனைத்துலக எண், குறியீட்டு வைப்பு முறையைப் பின்பற்றினுலும், அவற்றைத் தமிழ்ச் சொற்ருெடரியல் முறைக்கு ஏற்ப வழங்க முடியும் என இதுகாறும் கண்டோம். ஓரோவழி அவ்வாறு இயல்வதில்லை. காட்டாக x E y என்பதை எடுத்துக் கொள்ள லாம். E என்பது "is a member of" என்னும் சொற் ருெகுதியின் குறியீடு. எனவே, x E y என்பதை x is a member of y என ஆங்கிலத்திற் படிப்பர். x, y இன் உறுப்பு என்றே இதனைத் தமிழில் படிக்க நேரும். அதற்காகத் தமிழில் x y E என எழுதவேண்டியதில்லை. x E y என்றே தமிழிலும் எழுது வோம். ஆனுல், x, y இன் உறுப்பு என்றே தமிழிற் படிப்போம். இதில் நாணத்தக்கது ஒன்றுமில்லை. ஆங்கில மொழியிற்கூட

இத்தகைய குறை சிலவிடங்களில் உள்ளது. t என்பது "follows from" என்னும் சொற்றொகுதியின் குறியீடு. P t q என்பதை P follows from q என்று படிப்பதில்லை. q follows from P என்றே படிக்கின்றனர்.

மேலெழுந்தவாருக நோக்கும்போது கணக்கு, அறிவியல் களைத் தமிழில் எழுதத் தமிழிலக்கணம் இடராக நிற்பது போலத் தோன்றும். ஆனல், ஆழ்ந்து ஆராய்வோமாயின் தமிழிலக்கணம் நமக்கு வழிகாட்டும் சுடர் விளக்காக நிற்பது புலனாகும்.

பகுதி IV

வெகுசனத் தொடர்பு

மொழிபெயர்ப்பும் தனித் தமிழ்ச் சொற்களும்

கு. செல்வச்சந்திரன்

இன்றைய உலகம் அறிவியல், மருத்துவம், விண்வெளி ஆராய்ச்சி போன்ற துறைகளிலே துரிதமாக முன்னேறுகின்றது. எல்லா மொழிகளிலும் புதுத்துறைகளிற் போதியளவு நூல்களும், சஞ்சிகைகளும் இல்லை. அதனால் அத்தகைய துறைகளிலுள்ள நூல்களையும் சஞ்சிகைகளையும் பல மொழிகளில் மொழிபெயர்க்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. தமிழிலும் அத்தகைய புதுக் கருத்துக்களையும், நூல்களையும், சஞ்சிகைகளையும் மொழி பெயர்க்க வேண்டிய தேவை உள்ளது. அத்துடன் ஈழத்தைப் பொறுத்த வரையிற் கல்வி பல்கலைக்கழக படிப்புவரை தமிழ் மொழிவழியும் புகட்டப்படுகின்றது. ஈழத்திற் சட்டங்களும், வெவ்வேறு திணைக்கள அறிக்கைகளும், ஆணைக்குழுக்களின் அறிக்கைகளும், படிவங்களும் தமிழில் மொழிபெயர்க்க வேண்டிய கடப்பாடு இருக்கின்றது. எனவே ஈழத்திலே தமிழ் மொழியைப் பொறுத்த வரையில், மொழிபெயர்ப்பு முக்கிய இடம் வகிக்கின்றது.

ஈழத்திலே தமிழ் மொழிபெயர்ப்புத் தொடர்பான சில குறிப்பிட்ட விடயங்களைக் கவனிப்பதற்கு அரசகரும மொழித் திணைக்களம் பொறுப்பாயிருக்கின்றது. 1958ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கத் தமிழ்மொழி (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் கீழ் 1966ஆம் ஆண்டு தைத் திங்கள் 8ஆம் நாளன்று இயற்றப்பட்ட தமிழ் மொழியைப் பயன்படுத்துவதற்கென உருவாக்கப்பட்ட ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்தும் பணி மேற்கூறிய திணைக் களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சட்டங்களைத் தமிழில் மொழிபெயர்த்தல் சட்ட வரைநர் திணைக்களத்தின் பொறுப் பாகும். வெவ்வேறு திணைக்களங்களும் தமிழ் மொழிபெயர்ப் பாளர்களின் உதவியுடன் தமிழ் மொழிபெயர்ப்பைச் செய்கின் றன. கல்விக்குத் தேவையான நூல்களைத் தமிழில் மொழி

பெயர்த்தலைக் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் பொறுப்பேற்றுள்ளது.

தமிழில் மொழிபெயர்க்கும்பொழுது வடமொழிச் சொற்களும் பயன்படுத்தப்படுகின்றன. தமிழிலே தூய தமிழ்ச் சொற்கள் இருந்தும், வடமொழிச் சொற்கள் கையாளப் படுகின்றன. சில மொழிகள் வேறு மொழிகளிலிருந்து சொற்களைப் பெறவேண்டி யிருக்கின்றன. உதாரணமாக நடைமுறை ஆங்கில மொழியில் எழுத்து மொழியிலும் பேச்சு வழக்கிலும் பல வேற்றுமொழிச் சொற்களும் சொற்றொடர்களும் பயன் படுத்தப்படுகின்றன.[1] ஐம்பதுக்கு மேற்பட்ட வெவ்வேறு மொழிகளிலிருந்து பெறப்பட்ட சொற்களும் சொற்றொடர்களும் ஆங்கிலத்தில் கையாளப்படுகின்றன.[2] உதாரணமாக, ஆங்கில மொழியில் judo, karate போன்ற ஜப்பானியச் சொற்களும், verandah போன்ற போர்த்துக்கீசியச் சொற்களும், Ahimsa, Satyagraha, Purana, Sutra போன்ற வடமொழிச் சொற்களும், Catamaran, Pariah, Patchouli போன்ற தமிழ்ச் சொற்களும், பல பிரெஞ்சுச் சொற்களும், இலத்தீன் சொற்களும் பயன் படுத்தப்படுகின்றன.[3]

தமிழ்மொழி வளம் நிறைந்த மொழியானதால் வேற்று மொழிகளிலிருந்து சொற்களைக் கடன் வாங்கத் தேவையில்லை. தேவையேற்படின் புதுக் கருத்துக்களைக் கூறுவதற்குத் தமிழ் மொழியிலுள்ள அடிச் சொற்களிலிருந்து புதுச் சொற்களை உருவாக்கலாம்.

ஒரு மொழியில் வேறு மொழிச் சொற்களைப் பயன்படுத்துதல் திட்டமிட்ட செயலாகவும் இருக்கின்றது. உதாரணமாக, எல்லா மொழிகளிலும் ஒருமைப்பாட்டைக் கொண்டுவருவதற்குச் சொற்கள் வடமொழியிலிருந்து உருவாக்கப்பட வேண்டுமென இந்திய அரசியலமைப்பிற்பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.[4]

> "It shall be the duty of the Union to promote the spread of the Hindi language, to develop it so that it may serve as a medium of expression for all the elements of the composite culture of India and to secure its enrichment by assimilating without interfering with its genius, the forms, style and expressions used in Hindustani and in the other languages of India specified in the Eighth Schedule, and by drawing, wherever necessary or desirable, for its vocabulary, primarily on Sanskrit and secondarily on other languages".

வடமொழியிலிருந்து சொற்கள் பல மொழிகளில் உருவாக்கப்பட்டால், காலப்போக்கில் மொழிகளில் ஒருமைப்பாடு ஏற்படுமென்பது இக்கொள்கையின் நம்பிக்கையாகும். இக்கொள்கையை ஈழத்திலும் தமிழ்மொழி பயன்படுத்துதலை நடைமுறைப்படுத்த வேண்டிய அரசகருமமொழித் திணைக்களமும் கடைப்பிடிக்கின்றது. ஈழத்திலே தமிழுக்கும் சிங்கள மொழிக்கும் பொதுவான மொழியாக வடமொழி அமைகின்றது. சிங்கள மொழியில் ஏராளமான வடமொழிச் சொற்கள் உள்ளன. உதாரணமாக, பல்கலைக் கழகத்திற்கு விஸ்வவித்தியாலய, மருத்துவ நிலையத்திற்கு ஆரோக்கிய சாலாவ போன்ற சொற்கள் உள்ளன. இவைகளுக்கு நேரொத்த தூய சிங்களச் சொற்களும் உள்ளன, தனிச் சிங்களத்திற் பல்கலைக் கழகம் சரசவிய என்றும், மருத்துவ நிலையம் ரோகல என்றும் அழைக்கப்படுகின்றன. தமிழ் மொழியிலும் வடமொழிச் சொற்கள் இருக்கின்றன. தமிழ்மொழியில் வடமொழிச் சொற்களைப் பயன்படுத்துதல் அரசகரும மொழித் திணைக்களத்தின் கொள்கையாகும். உதாரணமாக, மொழியென்ற சொல்லு சிங்களத்திற் பாஷாவ என்று வழங்குகின்றது. தமிழில் பாஷை என்று வடமொழிச் சொல் வழங்குகின்றது, Public Administration என்பது சிங்களத்தில் ரூஜ்ய பரிபாலன என வழங்குகின்றது. மேற்படி திணைக்களம் அதனைத் தமிழில் அரசாங்க நிருவாகம் எனப் பயன்படுத்துகின்றது. சிங்களத்தில் ரூஜ்ய என்பதன் கருத்து அரசாங்க என்பதாகும். Public Administration என்பதன் சரியான தமிழ்மொழி பெயர்ப்பு பொது நிருவாகம் ஆகும். இப்படியாக வடமொழிச் சொற்களையும் சிங்களக் கருத்துக்களையும் திட்டமிட்டுத் தமிழ் மொழியிற் புகுத்துவதாற் கன்னித் தமிழுக்கு ஆபத்து ஏற்படலாம். இதனைத் தடுத்துத் தமிழைக் காப்பாற்றுவதற்கு ஒரேயொரு வழி தனித்தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துவதேயாகும்.

அரசகரும மொழித் திணைக்களம் சிங்களத்தில் உள்ள நேரொத்த சொற்களைத் தமிழில் பயன்படுத்துகின்றது. சிங்களத்திலே திங்களுக்கு மாசய என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. தமிழில் மாசம் என்ற நேரொத்த சிங்களச் சொல்லை மேற்படி திணைக்களம் பயன்படுத்துகின்றது. ஆண்டு என்ற சொல்லுக்குச் சிங்களத்தில் வர்ஷய என்ற சொல்லையும், தமிழில் வருஷம் அல்லது வருடம் என்ற சொல்லையும் மேற்கூறிய திணைக்களம் கையாளுகின்றது. இத்தகைய நேரொத்த சிங்களச் சொற்களைத் தமிழிற் கையாளுவதாலே தமிழிற் சிங்களச் சொற்கள் புகுவதற்கு ஏதுவாகின்றது. சிங்களச்

சொற்கள் தமிழிலே வந்தடையாமல் இருப்பதற்குத் திங்கள், ஆண்டு போன்ற தூய தமிழ்ச் சொற்களைக் கையாளுதல் விரும்பத் தக்கது. சிங்களத்துக்கும் தமிழ் மொழிக்கும் பொதுவான வட மொழிச் சொற்களைப் பயன்படுத்த வேண்டுமென வலியுறுத்துவ தோடு மேலே கூறப்பட்ட திணைக்களம் சிங்கள மொழியிலுள்ள சொற்களை அப்படியே தமிழ் மொழியிற் கையாளவும் செய் கின்றது. சிங்களத்தில் மஹாஜன சம்பத என்ற சொற்கள் தமிழி லும் மஹாஜன சம்பத என்று கையாளப்படுகின்றன. இதனைத் தமிழில் மக்கள் செல்வம் என்று அழகாக எழுதலாம். சிங்களத் தில் ஜாதிக சம்பத என்ற சொற்கள் தமிழிலும் ஜாதிக சம்பத என்று கையாளப்படுகின்றன. இதனைத் தமிழில் நாட்டுச் செல்வம் என அழகாகக் கூறலாம். சிங்களத்திலுள்ள லக்சல என்ற சொல் தமிழிலும் லக்சல என்று கையாளப்படுகின்றது. இதனைத் தமிழில் ஈழக் கூடம் எனக் கூறலாம். கல்வியின் நூற்றாண்டுக்குச் சியவச என்னுஞ் சொல் சிங்களத்திற் பயன் படுத்தப்படுகின்றது. அது தமிழிலும் சியவச என்று அழைக்கப் படுகின்றது. இதனைத் தமிழில் நூற்றாண்டு எனக் கூறலாம். இலக்கிய நிறுவனத்திற்குச் சிங்களத்திற் சாகித்திய மண்டலய என்று கூறப்படுகின்றது. தமிழிலும் சாகித்திய மண்டலம் எனக் கையாளப்படுகின்றது. இந்தியாவிலும் இலக்கிய நிறுவனம் சாகித்திய அகெடமி என்று அழைக்கப்படுவது ஈண்டு குறிப் பிடத்தக்கது. தமிழிலே இலக்கிய நிறுவனம் என்று குறிப் பிடலாம்.

ஒரு மொழியிலே வேற்று மொழிச் சொற்கள் திட்டமிடப் பட்டும், திட்டமிடப்படாமலும் புகுவதால் அச்சொற்களை வேற்று மொழிச் சொற்களெனக் கண்டுபிடிப்பது கடினமான தாக இருக்கும். வேற்று மொழிச் சொற்களால் ஒரு மொழிக்கு ஏற்படும் இத்தகைய ஆபத்தை ஆங்கில மொழியிலிருந்து ஒரு வாறு புரிந்துகொள்ளலாம். ஆங்கிலமொழியிற் கையாளப்பட்ட பிரெஞ்சுச் சொற்கள் மொழியுடன் ஒன்றாகக் கலந்தமையால், அவற்றிற் பலவற்றை, மொழியியல் மாணவர்களினால் அன்றி ஏனையோராற் பிரெஞ்சுச் சொற்களென இலகுவில் அடையாளங் கண்டுகொள்ளப்பட முடியாது. உதாரணமாகப் பின்வரும் சொற்கள் வேற்றுமொழிச் சொற்களென்பது ஆங்கிலத்தைச் சாதாரணமாகக் கையாளுபவருக்குத் தெரியாது: assets, bargain, broker, chair, coat, dance, faith, fruit, fur, ink, joy, pray, roast.

ஆங்கில மொழியில் பிரெஞ்சுச் சொற்களைப் பரந்த அடிப் படையில் ஏற்றுக்கொண்டமை, மற்றைய வேற்று மொழிகளி

லிருந்து சொற்களை ஏற்றுக்கொள்ளுதலை இலகுவாக்கிற்று. அக் காலந் தொடக்கம் வேற்றுமொழிச் சொற்கள் பெருமளவில் ஆங்கிலத்தில் சேர்க்கப்பட்டன. ஆங்கிலத்தில், சொற்கள் பிரெஞ்சு மொழியிலிருந்தும், கிரேக்க, இலத்தீன் மொழிகளி லிருந்தும், வேறு ஐரோப்பிய மொழிகளிலிருந்தும், உலகத்தின் பெரும்பகுதி பயணிகள் சென்றடையக்கூடியதாக வந்தவுடன் வேறு மொழிகளிலிருந்தும் வந்து சேர்ந்தன.[5] இதேபோன்று தமிழ்மொழியிலே திட்டமிட்டும் திட்டமிடப்படாமலும் வட மொழிச் சொற்களையும் சிங்கள மொழிச் சொற்களையும் பயன் படுத்துவதால் அவை தமிழோடு கலந்தபின் அவற்றை இனங் கண்டுபிடிப்பது எல்லோராலும் முடியாததாகும். பூரணை நாளுக்குப் போயா என்ற சிங்களச் சொல்லைத் தமிழிலும் போயா என்று கையாளுகின்றார்கள். போயா நாளன்று ஈழத்தில் விடுமுறையாதலால், இச்சொல் நாளடைவில் தமிழ்மொழியிற் புகுந்துவிடும். பூரணையை நோன்மதி நாளென்று இனிமையாக அழைக்கலாம். இப்படியான ஆபத்திலிருந்து தமிழைக் காப் பாற்றுவதற்குத் தூய தமிழ்ச் சொற்களைக் கையாளலாம்.

நெருங்கிய தொடர்புடைய ஒரே குடும்ப மொழிகள் பல உள்ளன. அவற்றில் ஒன்றான இந்து ஐரோப்பிய மொழிகளைப் பொறுத்தவரையில் அவற்றைப் பேசுபவர்கள் வேறு நாடு களுக்குச் சென்ற முக்கிய காரணத்தால் அந்த மொழிகள் பெரும்பாலும் வேறுபட்டு வெவ்வேறு மொழிகளாயின. ஈற்றில் வேறுபாடுகள் அதிகமானமையால் இந்த மொழிகளின் தொடர்பு தெளிவாகப் புலப்படாது போயிற்று.[6] ஒரே குடும்ப மொழிகளிலுள்ள மொழிகள் வேறுபடுவது மட்டுமல்லாமல் ஒரு மொழியே இடத்திற்கு இடமும், மாகாணத்திற்கு மாகாணமும், நாட்டுக்கு நாடும் வேறுபடலாம். ஈழத்தில் வல்வெட்டித்துறையி லுள்ள தமிழ் யாழ்ப்பாணப் பேரூரிலுள்ள தமிழுடன் சிறிது வேறுபடுகின்றது. யாழ்ப்பாணத் தமிழுக்கும் மட்டக்களப்புத் தமிழுக்கும் வேறுபாடுகள் உண்டு. தமிழ்மொழி இந்தியா, ஈழம், மலேசியா, சிங்கப்பூர், ஆபிரிக்கா, மொறிசியசு, பிஜித் தீவுகள் போன்ற இடங்களில் உள்ளது. ஈழத்திற் கையாளப் படும் தமிழுக்கும் தமிழ்நாட்டிற் கையாளப்படும் தமிழுக்கும் வேறுபாடுகள் உள்ளன. இத்தகைய வேறுபாடுகளை ஆங்கிலத் திலும் பிரெஞ்சு மொழியிலும் காணலாம். அமெரிக்காவிற் பயன்படுத்தப்படும் ஆங்கிலத்தை அமெரிக்க ஆங்கிலம் என் றழைக்கக்கூடிய அளவிற்கு இங்கிலாந்திலுள்ள ஆங்கிலமும் அமெரிக்காவிலுள்ள ஆங்கிலமும் வேறுபடுகின்றன. எழுத்திலும் இருநாட்டு ஆங்கிலங்கள் வேறுபாடுடையன. உதாரணமாக colour என்ற சொல் அமெரிக்காவில் color என்று எழுதப்படு

கின்றது. பிரெஞ்சு நாட்டிற் கையாளப்படும் பிரெஞ்சு மொழி கனடாவிலுள்ள பிரெஞ்சு மொழியினின்றும் வேறுபடுகின்றது. இங்கிலாந்திற்கும் அமெரிக்காவிற்கும் பலதுறைகளில் நெருங்கிய தொடர்பு இருந்தும் இருநாடுகளிலுமுள்ள ஆங்கில மொழி வேறுபடுகின்றது. அத்தகைய நெருங்கிய தொடர்பு எல்லா நாடுகளிலும் வாழும் தமிழ் மக்களுக்கிடையில் இல்லை. நெருங்கிய தொடர்பை நூல்கள், சஞ்சிகைகள், திரைப்படங்கள் போன்றவைகள் மூலமும் ஏற்படுத்தலாம். தமிழ் ஒரு தொன்மையான மொழி. அது பல கோடி மக்களாற் பேசப்படுகின்றது. அதன் சிறப்பையும் இனிமையையும் கட்டிக் காப்பாற்றுவதற்கு ஒருமித்த தமிழ்ச் சொற்களை எல்லா நாடுகளிலும் பயன்படுத்த வேண்டும். இந்தியாவில் High Court என்பது தமிழிலும் ஹை கோட் என்று எழுதப்படுகின்றது. ஈழத்தில் மேல் நீதி மன்றம் என வழங்குகின்றது. இந்தியாவில் Collector என்பது கலெக்டர் என்றே கூறப்படுகின்றது. ஈழத்தில் அச்சொல் வேறு ஒருவரின் பதவிப்பெயரில் பயன்படுத்தப்படுகின்றது. Principal Collector of Customs என்பது பிரதான சுங்கச் சேகரிப்பாளர் எனப் பயன்படுத்தப்படுகின்றது. ஒருமித்த தமிழ்ச் சொற்களை எப்படித் தீர்மானிப்பது என்ற கேள்வி எழுகின்றது. ஒருமித்த சொற்களை உருவாக்குவதற்குத் தனித்தமிழ்ச் சொற்களை அடிப்படையாகக் கொள்ளலாம்.

தனித் தமிழ்ச் சொற்களை மொழிபெயர்ப்பிற் கையாளும் போது அவற்றை விளங்கிக்கொள்ள முடியாதெனவும் கூறப்படுகின்றது. Mechanic என்பதனைப் பொறியியலாளர் என எழுதலாம். அதனை மெக்கானிக் என்று எழுதினால் விளங்கிக் கொள்ள முடியும் எனச் சொல்லப்படுகின்றது. Mechanic என்ற ஆங்கிலச்சொல் ஆங்கிலம் தெரிந்தமையால் புரிந்துகொள்ள முடிகின்றது. மொழியென்பது எத்தனையோ ஆண்டுகளுக்கு நிலைத்திருக்க வேண்டியதொன்றாகும். ஆங்கில அறிவு படிப்படியாகக் குறைந்து வருகின்றது. பல ஆண்டுகளுக்குப் பின்பு ஆங்கில அறிவு இல்லாத மாணவனொருவன் மெக்கானிக் என்று சொன்னால் புரியமுடியாத நிலையும் ஏற்படும். சொற்களைப் பயன்படுத்தும்பொழுது சொற்கள் தமிழ்மொழியுடன் இயற்கையாகச் சேர்ந்து செல்ல வேண்டும். எனவே மொழிபெயர்ப்பிலே தனித்தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துதல் தமிழ் மொழிக்கு அழகையும் எழுச்சியையும் கொடுக்கும் என்பது திண்ணம்.

அடிக்குறிப்புக்கள்:

1. A. J. Bliss — *A dictionary of foreign words and phrases in Current English* — Page 1.
   Publishers: Routledge & Kegan Paul, London.
2. ibid Page 1.
3. ibid appendix.
4. The Constitution of India — Part xvii — Official Language. Chapter iv–Special Directives Section 351.
   Publishers: Manager of Publications, Delhi.
5. A. J. Bliss — *A dictionary of foreign words and phrases in Current English — Page 5.*
   Publishers: Routledge & Kegal Paul, London.
6. W. B. Lockwood — *A Panorama of Indo European Languages.* Page 1.
   Publishers: Hutchinson University Library, London.

இலங்கை இந்தியத் தமிழ்க் கலைச்சொல் ஆக்க முறைகளும் அடிப்படை வேறுபாடுகளும்

கணபதிப்பிள்ளை நவசோதி

தமிழ்க் கலைச்சொல் ஆக்கத் துறையிற் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகத் தமிழ்நாட்டிற் பின்வரும் மூன்று கருத்துக்கள் நிலவி வந்துள்ளன :

(அ) வடமொழிச் சொற்களைப் பயன்படுத்திக் கலைச் சொற்களை உருவாக்கல்.

(ஆ) இலக்கியங்களிலிருந்து பெற்றும் புதிதாக உருவாக்கியும் தூய தமிழ்ச் சொற்களைக் கையாளல்.

(இ) பிறமொழிக் கலைச்சொற்களின் உச்சரிப்பை அவ்வாறே எழுதல்.

இம் மூன்று முறைகளுள்ளும் முதலாவதற்குத் தற்போது ஆதரவு இல்லையென்றும், மூன்றும் முறை பின்பற்றப்பட வேண்டியதென்றும் தமிழக அறிஞர்களாற் கருதப்படுகின்றது.[1] சொற்களை ஆளும் வகையிற் சாசனங்கள், இலக்கியங்கள் போன்றவற்றிலிருந்து வழக்கற்றுப்போன சொற்களை மீண்டும் எடுத்தாளல்வேண்டு மெனும் கருத்தும் வலுப்பெற்று வருகின்றது. மேற்கு நாடுகள் விஞ்ஞானத் துறையில் முன்னேறும் வேகத்தைக் கணிக்கையில் விஞ்ஞானக் கலைச்சொற்களிலும் பார்க்க ஆட்சி நிருவாகத்துறைச் சொற்களுக்கு இக் கருத்துப் பெரிதும் பொருந்துமெனலாம்.

கலைச் சொற்றொகுதிகள் :

கலைச் சொற்றொகுதிகளைப் பொறுத்தவரையில், ஈழநாட்டுச் சுவாமி விபுலானந்தரவர்களைப் பொதுத் தலைவர்களாகக் கொண்டு திருநெல்வேலி சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்

1938ஆம் ஆண்டில் வெளியிட்ட 'கலைச்சொற்கள்' எனும் தொகுதிக்குத் தனி இடமுண்டு. இலங்கைக் கல்வித் துறையினரும் கலைச்சொல் ஆய்வுக் குழுவில் இடம் பெற்றதால், இலங்கை இந்திய அறிஞர்களால் மேற்கொள்ளப்பட்ட ஒருமைப் பாட்டின் கன்னிமுயற்சிச் சின்னமாக இத்தொகுதியினைக் கொள்ளலாம்.

இக் கலைச்சொற்றொகுதி (1) சொற்கள் சுருக்கமாயும் தெளிவாயும் பொருள் பொதிந்தனவாயும் இருத்தல் வேண்டும். (2) அவை தமிழோடு தமிழாய்க் கலக்கும் இயல்பினவாக இருத்தல் வேண்டும் எனும் கொள்கையின்பால் அமைக்கப் பட்டது.

1947ஆம் ஆண்டு சென்னை அரசாங்கத்தினால் வெளியிடப் பட்ட List of Technical and Scientific Terms என்னும் கலைச் சொற்றொகுதிகளில் முன்குறிப்பிட்ட சொற்றொகுதியிற் காணப் பட்ட தமிழ்ச் சொற்கள் பெரிதும் புறக்கணிக்கப்பட்டுத் தமிழ் இலக்கண வரம்புகள் மீறப்பட்டதுடன் வடமொழி ஆங்கிலச் சொற்கள் பயின்றும் வந்தன.

இலங்கையிலே தன்மொழி அலுவலகத்தினாலும் அரசகரும மொழித் திணைக்களத்தினாலும், கல்வி வெளியீட்டுத் திணைக் களத்தினாலும் வெளியிடப்பட்ட கலைச் சொற்றொகுதிகளிற் சென்னையரசாங்கத்தார் வெளியிட்ட கலைச் சொற்றொகுதியும் ஓரோவழி பயன்படுத்தப்பட்டது. இச்சொற் றொகுதிகளிற் பின் வரும் முறைகள் கையாளப்பட்டுள்ளன :-

1. ஆங்கிலம், பிரெஞ்சு, இலத்தீன், சேர்மன் ஆகிய மொழிகளிலிருந்தெடுத்த சொற்களுக்குத் தமிழுருவங் கொடுக்கப்பட்டுள்ளன.
2. புதுச்சொற்களை யாக்கும்போது இலக்கணப் புணர்ச்சி விதிகள் கவனிக்கப்பட்டுள்ளன.
3. கூட்டுச் சொல்லாக்குகையில் முதற்பொருள் சிதையா வாறு சுருக்கமுறை கையாளப்பட்டது.
4. புதுச் சொல்லாக்குகையிற் பிறமொழியில் அச் சொல் லின் முதற் கருத்தே மூலமாகக் கொள்ளப்பட்டது.
5. கிரந்த எழுத்துக்கள் நீக்கப்பட்டுள.
6. வடசொற்களும் உவந்த தமிழ்ச் சொல்லில்லா விடத் துத் தமிழுருவில் அமைத் தெழுதப்பட்டுள.
7. தமிழில் மொழிபெயர்க்கையில் ஆங்கிலக் குறியீடே பயன்படுத்தப்பட்டது.

1948ஆம் ஆண்டில் இரண்டாவது பதிப்பைக் கண்ட ''ஆட்சிச்சொல் அகரவரிசை'' (English — Tamil Terms in Administration) ஆட்சி நிருவாகத்துறையின் சிறப்பான பல தமிழ்ச் சொற்களைக் கொண்டிருப்பினும் ஈழநாட்டுக் கலைச் சொற்களுக்கும் இதற்கும் வேறுபாடுகளும் காணப்படுகின்றன.

வடமொழிச் சொற்கள் :

பதினேழாம் பதினெட்டாம் நூற்றாண்டுக் காலங்களில் ஆங்கிலத்திற் கிரேக்க இலத்தீன் சொற்கள் பெரு வழக்குடையன வாய்க் காணப்படினும் தற்போது பழைய தெள்ளிய ஆங்கிலச் சொற்கள் மீண்டும் முக்கியத்துவம் பெற்று வருகின்றன. இவ் வாறே தமிழ் நூல்களில் வடமொழிச் சொற்களை மிகுதியாய்ப் பெற்று எழுதுவது நடைக்குப் பெருமையளிக்கும் என்று கருதிய காலமும் இருந்தது.

1942ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆசிரியர் வெளியிட்ட ''அசேதன ரசாயனம்'' எனும் நூலில் மூலகங் களின் பெயரிலும் கூட்டுப் பொருட் பெயரிலும் வழக்கில் இருந்த வடமொழிப்பெயர் அகராதியினின்றும் சர்வதேச முறைக்கு முரணாகக் கலைச்சொற்கள் எடுத்துக் கையாளப் பட்டதைப் பின்வரும் உதாரணங்களிற் கண்டு கொள்ளலாம்.

மூலகங்கள் : குளோரின் — ஹரிகதம், புரோமின் — இரக்தகம்.
கூட்டுப்பொருள் : ஹைட்ரோகுளோரிக் அசிட் — அப்ஜஹரிதகிகா [மிலம்.

எனினும் தற்போது ஆட்சி நிருவாகத் துறையில் வட மொழி நீக்கப்பட்டுத் தூய தமிழ்ச் சொற்கள் கையாளப்பட்டு வருவதைப் பாஷை, சரித்திரம், விஜயம் எனும் சொற்க ளிடத்தில் முறையே மொழி, வரலாறு, வருகை போன்றன வான சொற்கள் பயன்படுத்தப்பட்டு வருவதிலிருந்து அறியலாம்.

ஆங்கிலச் சொற்கள் :

கலைச்சொற்களைப் பயன்படுத்துவதில் இரு நாட்டுக் கலைச் சொற்களிலும், நெருங்கிய தெளிவுடைய ஆங்கிலச் சொற்கள் இடம்பெறுவதைக் காணலாம். தமிழகத்திற் சினிமா, லைட், சைக்கிள், ரயில், கார், கேட், சிகரட், சோடா, ஐஸ், டான்ஸ், காலேஜ் போன்ற சொற்கள் இக் காரணம் குறித்தே ஏற்கப் பட்டிருப்பதாய்க் கொள்ளப்படுகிறது.

பஸ், சைக்கிள், பஸ் ஸ்டான்ட், விசில், கண்டக்டர், டிக் கெட் போன்ற ஆங்கிலச் சொற்களுக்குரிய பேருந்து வண்டி,

மிதிபொறி வண்டி, பேருந்து நிலையம், ஊதுகுழல், நடத்துபவர், பயணச்சீட்டு எனும் தமிழ்ச் சொற்கள் தூய தமிழ் வாதிகளுக்கு மட்டும் விளங்கக்கூடியனவெனும் கருத்தும் தமிழகத்தில் உண்டு. தூய தமிழ்வாதம் கலைச்சொற்கள் வேறுபடுதற்கு முக்கியமானதொரு காரணமென்பதை இவை தெளிவுறுத்தும்.

தமிழ் இலக்கண வரம்பும் பிறமொழி ஒலி உச்சரிப்பும்:

சர்வதேசப் பெயர்களையும் குறியீடுகளையும் அவ்வாறே தமிழிற் பயன்படுத்த வேண்டியுள்ளது. பெயரிடு முறைபற்றிய சர்வதேசச் சட்டத்திற்கமைய (International Code of Nomenclature) இவ்வாறு எழுதுமிடத்துத் தமிழ் இலக்கண வரம்பு மீறவேண்டியுளது.

ராம்னேஸி — இராம்னேஸி லட்வீஜியா — இலட்வீஜியா.

இவ்விரு உதாரணங்களிலும் மொழிக்கு முதலில் ரகரமும் லகரமும் வரலாகா எனும் வரம்பிற்கமைய இகரத்தை முதலில் இட்டு எழுதுவது சர்வதேச சட்டத்திற்கு விரோதமாகும். இருவகை ஆட்சியினையும் கலைச் சொற்றொகுதிகளில் காணலாம்.

சில ஒலிகளுக்கான சொற்கள் தமிழில் இல்லாத குறைபாட்டினால் ஷ, ஜ, ஹ, ஸ போன்ற எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. F, D, G, B போன்ற ஆங்கில எழுத்துக்கள் பழக்கமுறையாலே அதே ஒலி தவறாது ஒலிக்கப்படுகின்றன. உதாரணமாக 'Bus' என்பதற்கு 'பஸ்' என்று எழுதினாலும் தவறான உச்சரிப்பு இடம் பெறுவதில்லை. இவ்வகையான தமிழில் இல்லா ஒலிகளுக்குப் புதிய குறியீடுகள் அமைக்கப்படல் வேண்டுமெனும் கருத்தும் வேரூன்றி வருகின்றது.

சர்வதேசச் சட்டமும் மூலகக் குறியீடுகளும்:

ஒரு பொருளுக்கு முதலில் எந்தப் பெயர் எந்த முறையில் எழுதப்பட்டதோ அதே முறையில் எழுதப்படவேண்டியதே சர்வதேசச் சட்டமாகும். இவ்விதி பல சந்தர்ப்பங்களிலே தமிழ் இலக்கண வரம்பு கருதியும் பலவேறு உச்சரிப்புக்களின் காரணத்தினாலும் புறக்கணிக்கப்பட்டு வரப்பட்டுள்ளது.

கத்தரிக்காயைக் குறிக்கும் ஸொலானம் மெலஞ்சினா எனும் பதம் சொலானம் மெலஞ்ஜினா என எழுதப்படுவது முரணாகும். இவ்வாறே தாவரவியலிற் பூவரசினைக் குறிக்கும் சொல், தெஸ்பீஸியா, தெஷ்பீஸியா, தெஸ்பீஷியா, தெச்பீசியா எனப் பலவாறு எழுதப்படுதல் சர்வதேசச் சட்ட விதிக்கு முரணாகும்.

தமிழகத்தின் ஆட்பெயர்களும் ஊர்ப்பெயர்களும் தாவர வியற் பெயர்களாக மாறுகையில் இலத்தீன் உருவம் பெறுதலைப் பின்வரும் உதாரணங்களிற் கண்டு கொள்ளலாம்.

*அய்யங்காரியா ஸ்டெல்லேட்டா
செனிஸியோ தாதுலிங்கமை

*பெப்பரோமியா திண்டுகலென்ஸில்
பிம்பினெல்லா பழனியென்ஸிஸ்

மூலகக் குறியீடுகளைப் பெறுத்தவரையில், செம்பு (Cu), தங்கம் (Au), வெள்ளி (Ag), இரும்பு (Fc) என்றவாறு பயன் படுத்தப்பட்டு வருவதில் இரு நாடுகளிடையேயும் ஒருமைப் பாடு காணப்படுகின்றது.

கலைச்சோல் விகுதிகள்:

ஆங்கிலத்தில் To, d, do, s, so என்பவற்றில் முடியும் விஞ்ஞானக் கலைச்சொற்கள் ற்று, ட்டு, சு என்றவாறு விகுதி பெற்றுத் தமிழ் மரபு தழுவியுள்ளன.

உ-ம்: Anilinate — அனிலினேற்று   Anolyte — அனோலைற்று
Annelid — அனலிட்டு   Anode — அனோட்டு
Anatase — அனற்றேசு   Apatornis — அப்பத்தோனிசு

எனினும் சில கலைச்சொற்கள், ஒரு சீரான விகுதிகள் இன்றிப் பலவாறும் அர், ஆளர், நர் என்றவாறு பயன்படுத்தப் பட்டுமுள்ளதற்குப் பின்வருவன எடுத்துக்காட்டுக்களாகும்:

பகுப்பவர், பகுப்பாளர்

எழுத்தர், எழுதுநர், எழுதுவினைஞர்

சிங்கள மொழியில் ஆங்கிலச் சொற்களை எடுத்தாளுமிடத்து, அமையும் விதிமுறைகள் இவ்விடத்தில் நோக்கற்பாலன. ஆட்சி நிருவாகத் துறையில் tion என விகுதி பெறும் சொற்கள் ஸிய (ஸிய) எனவும் T அல்லது teஇல் முடியும் சொற்கள் துவ (துவ, உவ) எனவும் விகுதிபெற்று முடிவதைப் பின்வரும் சிங்களக் கலைச்சொற்களிற் கண்டுகொள்ளலாம்:

Tion	Condition	කොන්දේසිය	(கொந்தேசிய)
	Regulation	රෙගුලාසිය	(றெகுலாசியா)
T	Report	රපෝර්තුව	(ரபோர்துவ)
	Parliament	පාර්ලිමේන්තුව	(பார்லிமென்துவ)
	Department	දෙපාර්තමේන්තුව	(தெபார்த்மேந்துவ)
Te	Estimate	ඇස්තමේන්තුව	(அஸ்தமேத்துவ)
	Note	නෝට්ටුව	(நோட்டுவ)

இலங்கை இந்தியச் சொல்லாட்சி வேறுபாடுகள் :

தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் வெளிவந்த கலைச் சொற்றொகுதிகளில் ஒரே ஆங்கிலச் சொல்லுக்குப் பல வேறுபட்ட சொற்கள் கையாளப்பட்டு வருவதனைப் பின்வரும் அட்டவணை தெளிவுறுத்தும் :

	தமிழ்நாடு	இலங்கை
Acid	காடி	அமிலம்
Mammal	பாலுண்பான்	முலையூட்டி
Engineering	கட்டிடக்கலை	எந்திரவியல்
Industry	ஆக்கத்தொழில்	கைத்தொழில்
Bank	பாங்கு	வங்கி
Assessors	தீர்வையாளர்	மதிப்பீட்டாளர்
Police	ஊர்காவலர்	பொலிசு
Department	துறை	திணைக்களம்
Manager	செயலாளர்	முகாமையாளர்
Analyst	பகுத்தாய்பவர்	பகுப்பாளர்
Corporation	மாநகராட்சிக் கழகம்	கூட்டுத்தாபனம்/யாக்கம்
Board	வாரியம்	சபை
Director	இயக்குநர்	பணிப்பாளர்
Inspector	ஆய்வாளர்	சோதனைகாரர்

இலங்கைக் கலைச்சொற்களிடையே ஒருமைப்பாடு :

இலங்கை இந்தியக் கலைச்சொற்களிடையே இதுகாறும் கூறிய வேறுபாடுகள் காணப்படுகையில் இலங்கையிற் கையாளப்படும் கலைச்சொற்களிடையேயும் ஒருமைப்பாடு காணப்படவில்லை. தமிழ் வழங்கும் நாடுகளிடையே கலைச்சொற்களிடை ஒருமைப்பாடு ஏற்படுத்தவேண்டு மெனவும், அதற்குத் தனி நிறுவனம் அவசியமெனவும் கூறுபவர்கள் இதனைக் குறித்துச் சிந்தித்ததாய்த் தெரியவில்லை.

சிங்களத்திற்கும் தமிழிற்கும் பொதுவான வடமொழிச் சொற்களை ஆட்சித்துறையிற் பயன்படுத்தவேண்டு மெனும் வாதத்தின்படி சிலகாலம் வழக்கில் இருந்த வடமொழிச் சொற்கள் தற்போது தமிழ்ச் சொற்களாக மாற்றப்பட்டுள்ளன. இவ்வகையில் Language, Office, Year எனும் சொற்களுக்குத் தமிழிற் பாஷை, காரியாலய(ம்), வர்ஷய (வருடம்) எனும் வடமொழிச் சொற்கள் சிறிதுகாலம் வழக்கில் இருந்து வந்துள்ளன.

ஒரே துறைச் சொற்களிடையேயும் ஒரு சீரான சொற்கள் இலங்கையிற் பேணப்படாதமைக்குப் பின்வரும் கலைச் சொற்களைக் கூறலாம்.

(1) விலங்குக்கரி — மிருகக்கரி Animal Charcoal
(2) முன்னோர் — மூதாதை Ancestor
(3) கோண அளவை — கோணவளவு Angular measure
(4) அனிலைன் — அனிலீன் Aniline
(5) சமனில்லாத் திருப்பம் — அசமத்திருப்பம் Anisotropy

இலங்கையில் அரசகரும மொழித் திணைக்களமும், சட்டவரைநர் திணைக்களமும் கலைச்சொற்றொகுதி ஆக்கத்துறையில் உடனுழைத்திருப்பினும் ஒருமைப்பாட்டை இவ்விரு திணைக்களங்களும் பேணாமைக்குப் பின்வரும் சொல் அட்டவணை சான்றாகும்.

	சட்டவரைநர்	அரசகரும மொழி
Attorney-General	சட்டத்துறைத் தலைமையதிபதி	சட்டத்துறை அதிபதி
Chief Judge	பிரதம நீதிபதி	பிரதான நீதிபதி
Commander-in-Chief	படைத்தலைவர்	முனைஞர் — பிரதானி
Commissioner-of Assize	பருவநீதிமன்ற ஆணையாளர்	பருவமன்று ஆணையாளர்
Consolidated fund	திரட்டு நிதி	ஈட்ட நிதியம்
Court	நீதிமன்றம்	மன்று
Public	பகிரங்க	பொது / அரசாங்க
Fund	நிதி	நிதியம்
Officer	அலுவலர்	உத்தியோகத்தர்
Trade Union	தொழிற்சங்கம்	தொழிற்சமாசம்

மேற்கூறியவற்றிலிருந்து இலங்கை இந்தியக் கலைச்சொல்லாக்கத் துறையிற் பொதுவான கோட்பாடுகள் பேணப்பட்டதுடன் அதேவேளையில் எண்ணற்ற வேறுபட்ட சொற்பிரயோகங்களும் வழக்கில் இருப்பதும், இலங்கையில் ஒரே நாட்டிற்குள்ளேயே ஒருமைப்பாடு பேணப்படாமையும் தெளிவாக அறியக்கூடியதாகும்.

இலங்கை இந்திய நாடுகளில் உயர் கல்வித்துறை ஆட்சியாளரின் கட்டுப்பாட்டில் இருக்கின்றமையினுல் இரு நாட்டுக் கலைச் சொற்களிடையே அமைந்த ஒருமைப்பாடு இருநாட்டு அரசாங்க மட்டத்தில் ஏற்படுத்தக்கூடியதல்லாமற், கடந்த மாநாடுகளிற் சுட்டிக்காட்டியதைப் போன்று Bureau of Translation போன்றதான தனி நிறுவனங்களினுல் ஏற்படுத்த முடியாததாகும்.

அடிக்குறிப்புக்கள் :

1. தோதாத்ரி எஸ்., விலங்கியல், தமிழில் முடியும். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.

2. வானமாமலை நா. ரசாயனம். தமிழில் முடியும். பக். 121 (1965).

தமிழிற் சட்ட மொழிபெயர்ப்பிலுள்ள சிக்கல்கள்

கு. செல்வச்சந்திரன்

ஈழத்திற் சட்டம் தமிழிலும் மொழிபெயர்க்கப்படுகின்றது. அதற்கு நீதியமைச்சின் கீழ் இயங்கும் சட்டவரைநர் திணைக் களம் பொறுப்பாகவுள்ளது. 1972ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் 22ஆம் நாளன்று வகுத்தமைக்கப்பட்ட இலங்கை அரசியலமைப்பு, சட்டவாக்கமொழி தொடர்பாகப் பின்வரு மாறு குறிப்பிடுகின்றது: சட்டங்கள் யாவும் சிங்களத்திற் சட்ட மாக்கப்படல் வேண்டும் அல்லது இயற்றப்படல் வேண்டும்.[1] அவ்விதம் சட்டமாக்கப்படும் அல்லது இயற்றப்படும் ஒவ்வொரு சட்டத்தினதும் தமிழ் மொழிபெயர்ப்பொன்றும் இருத்தல் வேண்டும்.[2] அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர்முன்னர் வலுவுடையனவாயிருந்த, துணைநிலைச்சட்ட வாக்கம் உட்பட்ட எழுத்திலான எல்லாச் சட்டங்களும் நீதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அதிகாரத்தின்கீழ் இயன்ற அளவு விரைவாகச் சிங்களத்திலும் தமிழ் மொழிபெயர்ப்பிலும் கசெற்றில் வெளியிடப்படல் வேண்டும்.[3]

சட்டம் ஆங்கிலத்தில் வரையப்பட்டுத் தமிழில் மொழி பெயர்க்கப்படுகின்றது. ஆங்கிலத்திலுள்ள வழமையான சட்டச் சொற்றொடர்களுக்குக் குறிப்பிட்ட தெளிவான கருத்துக்கள் உள்ளன. ஆனால் அத்தகைய சொற்றொடர்களுக்குத் தமிழில் நேரொத்த சொற்றொடர்களைக் கண்டுபிடிப்பதிற் சில இடர்ப் பாடுகள் உள்ளன. இந்த இடர்ப்பாடு கனடாவிலும் உள்ளது. கனடாவிலுள்ள சட்ட மொழிபெயர்ப்பில் மேலே உள்ள இடர்ப் பாடு பற்றிப் பின்வருமாறு கூறப்படுகின்றது!

"Traditional legal expressions found in one language, where they have a clearly defined meaning, sometimes have no equivalent in the other language."[4]

சட்டத்தை மொழிபெயர்க்கும் தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் சட்டத்திலே தகைமை இல்லாததாற் சட்டக் கருத்துக்களையும் சட்ட நுணுக்கங்களையும் அவர்களாற் புரிய முடிவதில்லை. சட்டங்கள் தகுதிவாய்ந்த பிரதிச் சட்டவரைநராலும், மேலதிகச் சட்ட வரைநராலும் வரையப்படுகின்றன. அத்தகைய தகுதிவாய்ந்த அலுவலர்கள் தமிழ் மொழிபெயர்ப்புப் பிரிவில் இல்லை. இதனாலே தமிழ் மொழிபெயர்ப்பு ஆங்கிலத்திலுள்ள சட்டத்தை நேரொத்ததாக இருக்குமென்று எதிர்பார்க்க முடியாது. இதனையொத்த இடர்ப்பாட்டைக் கனடாவிலும் காணலாம். கனடாவிலுள்ள சட்ட மொழிபெயர்ப்பில் மேலேயுள்ள இடர்ப்பாடு தொடர்பாகப் பின்வருமாறு கூறப்படுகின்றது :-

"The translation of federal statutes also suffers from the fact that the translation Bureau does not employ specialists. The original English version, on the other hand is drafted either by, or with the help of, experts in the particular subject of legislation. The translators cannot rely upon any such assistance. Furthermore, the Bureau finds it difficult to recruit competent personnel. The result is that the French version of federal statutes is frequently a poor translation of the English text."[5]

ஈழத்திலே தமிழிற் சட்ட மொழிபெயர்ப்பிற்கு உதவுவதற்குச் சட்ட அகராதி இல்லாமை சட்ட மொழிபெயர்ப்பைக் கடினமாக்குகின்றது. தமிழ்நாட்டிற் சட்ட அகராதி இருப்பதால் இப்பிரச்சினை அங்கே இல்லையென்று கூறலாம். ஈழத்திற் சட்ட வரைநர் திணைக்களம் Act என்பதைச் சட்டம் என மொழிபெயர்க்கின்றது. அரசகரும மொழித் திணைக்களம் செய் சட்டம் என மொழிபெயர்க்கின்றது. Sub-section என்பதைச் சட்ட வரைநர் திணைக்களம் உட்பிரிவு என மொழிபெயர்க்கின்றது. அரசகரும மொழித் திணைக்களம் உப பிரிவு என மொழிபெயர்க்கின்றது.

சட்ட மொழிபெயர்ப்பிலே தன்னிச்சையான நடையைக் கையாள முடியாது. சொல்லுக்குச் சொல் மொழிபெயர்க்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. சட்ட மொழிபெயர்ப்பிலே தன்னிச்சையான நடையைக் கையாண்டாற் கருத்து மாறுபடலாம். சொல்லுக்குச் சொல் மொழிபெயர்க்கா விட்டாற் கருத்து மாறுபடலாம். உதாரணம்: A police officer - காவல் துறை அலுவலர் ஒருவர், the police officer — காவல்துறை அலுவலர். சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பதால் மொழி பெயர்ப்பினை விளங்கிக்கொள்வது கடினமாகவும் இருக்கின்றது.

எல்லா ஆங்கிலச் சொற்களுக்கும் வெவ்வேறு தமிழ்ச் சொற்கள் தேடுவதிற் சிறிது சிரமம் இருக்கின்றது. உதாரணம்:- Law, Act எனும் இரு சொற்களுக்கும் சட்டம் என்ற சொல்லே மொழிபெயர்ப்பிற் கையாளப்படுகின்றது. ஆனல் Act என்பதற்குச் செய் சட்டம் எனவும் கையாளலாம். இத்தகைய இடர்ப்பாடு கனடாவில் இன்னெரு இடர்ப்பாட்டின் அம்சமாகக் காணப்படுகின்றது. கனடாவில் அத்தகைய அம்சம் தொடர்பாகப் பின்வருமாறு கூறப்படுகின்றது:-

> "The problem is further compounded in Canada by the existence of two systems of Law — the civil law and the common law — which sometimes use the same word to denote different legal institutions or, conversely, employ different terms to describe essentially identical notions."[6]

ஈழத்திலே தமிழிற் சட்ட மொழிபெயர்ப்பு கடந்த சில ஆண்டுகளாகத்தான் கிரமமாகச் செய்யப்பட்டு வருகின்றது. சட்ட மொழிபெயர்ப்பிலே தமிழ்ச் சொற்கள் இருந்தாலும் ஆங்கிலச் சொற்கள் விளங்கக்கூடியனவாயும் எளிதானவையும் போலத் தோன்றுகின்றன. உதாரணமாக Jury என்ற சொல்லுக்கு யூரி என்ற சொல் விளங்கக்கூடியதாக இருக்கின்றது. ஆனல் அறங்கூறவையம் என்ற தமிழ்ச் சொல்லேயும் பயன்படுத்தலாம்.

மொழிபெயர்ப்பாளர்கள் சட்டமொழிபெயர்ப்பிற் சட்ட நுணுக்கங்களை அறிந்திருத்தல் அவசியமானதாகும். குடியியற் சட்டத்தில் வரும் Regular Action என்பதை மொழிபெயர்ப்பதற்குச் சட்ட அறிவும் நுணுக்கங்களும் தேவைப்படுகின்றன. If the Notary attesting the deed and any of the witnesses is dead என்ற வசனத்திற்கு இரண்டுவகையான மொழிபெயர்ப்பைக் கொடுக்கலாம். உறுதியையும் சாட்சிகளுள் எவரையும் அத்தாட்சிப்படுத்தும் நொத்தாரிசு இறந்திருந்தால் என்று கூறலாம்; அல்லது உறுதியை அத்தாட்சிப்படுத்தும் நொத்தாரிசும் சாட்சிகளுள் எவரும் இறந்திருந்தால் என்று கூறலாம்.

சட்ட மொழிபெயர்ப்பிற் சொற்சுருக்கம் காணப்படுகின்றது. அவற்றை விரிவுபடுத்தின் பொருள்தராது. உதாரணம் Legislative Enactments என்பதற்குச் சட்டவாக்கங்கள் எனச் சுருக்கமாகக் குறிப்பிடலாம். Court, Court House நீதிமன்றம் அல்லது மன்று எனச் சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

ஆங்கிலத்திலுள்ள சட்டத்தில் ஆண்பாலுக்கும் பெண் பாலுக்கும் வெவ்வேறு சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் தமிழில் ஒரே சொல்லைப் பயன்படுத்தலாம். உதாரண மாக executor, executrix என்ற சொற்களுக்கு நிறைவேற்றுநர் என்ற ஒரு சொல்லைப் பயன்படுத்தலாம். Administrator, administratrix என்ற சொற்களுக்கு நிருவாகி என்னும் சொல்லைப் பயன்படுத்தலாம். ஆங்கிலத்திலே ஆண்பாலுக்கும் பெண் பாலுக்கும் வெவ்வேறு சொற்கள் இருப்பினும், தமிழில் ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் வெவ்வேறு சொற்களைப் பயன் படுத்தலாம். ஆனால், தமிழில் மதிப்புக் கருதி சில மாற்றங் களைச் செய்யவேண்டி இருக்கிறது. உதாரணமாக He, She என்னும் சொற்களுக்கு அவர், அவள் என்று கூறலாம். ஆனால் மதிப்புக்கருதி He, She என்பவற்றுக்கு அவர் என்று தமிழில் கூறவேண்டியிருக்கின்றது.

சட்டத்தில் Shall என்ற சொல் பல இடங்களில் கையாளப் படுகின்றது. அச்சொல் வேண்டும் என்ற கருத்தையும், எதிர் காலத்தையும் கூறுகின்றது. Shall என்ற சொல்லைக் கருத்திற் கேற்ப மொழிபெயர்த்தல் இன்றியமையாததாகும். The quorum shall be three என்ற வசனத்தைக் கூட்ட நடப்பெண் மூன்றுதல் வேண்டும் என்று அல்லது கூட்ட நடப்பெண் மூன்றாகும் என்று மொழிபெயர்க்கலாம்.

மொழிபெயர்ப்பு, இயற்கையான மொழிநடையிலிருந்து விலகிச் செயற்கையான மொழிநடையாக மாறுகின்றது. இதனால் மொழிபெயர்ப்பை வாசித்து மூல விடயத்தை அறிந்து கொள்ள முடியாமல் இருக்கின்றது. ஒருமைப்பாட்டிற்காகக் கலைச்சொற்களைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் இருக்கின்றது. ஆனாற் கலைச்சொற்கள் அல்லாத சாதாரண சொற்களில் ஒருமைப்பாடு தேவையில்லை. சாதாரண சொற்களிற் குறிப்பிட்ட சொற்களைப் பயன்படுத்தவேண்டுமென்ற நியதி மொழி பெயர்ப்பைச் செயற்கையான மொழிநடையாக்குகின்றது. Shall be deemed என்ற வசனத்திற்குக் கருதப்படுதல் வேண்டும் என்று அல்லது கொள்ளப்படுதல் வேண்டும் என்று மொழி பெயர்க்கலாம். Deemed என்ற சொல்லுக்குக் கருதப்படுதல் என்ற சொல்லை மட்டும் பயன்படுத்த வேண்டுமென்று கூறினால் மொழிபெயர்ப்பு விளங்காததாய் அமையலாம். கொள்ளப் படுதல் என்ற சொல்லையும் பயன்படுத்தலாம் என்ற நியதி இருந்தால் மொழிபெயர்ப்புக் கடினமானதாய் அமையாது.

சட்ட மொழிபெயர்ப்பில் ஒரு குறிப்பிட்ட ஆங்கிலச் சொல்லுக்கு ஒரு குறிப்பிட்ட தமிழ்ச் சொல்லைத்தான் பயன் படுத்தவேண்டு மென்பது சில விடங்களிற் பொருந்தாது. Council என்ற சொல் Medical Council என்பதில் மருத்துவப் பேரவையென்றும் Municipal Council என்பதில் மாநகர மன்றம் என்றும் மொழிபெயர்க்கப்படுகின்றது.

ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்குப் பெயர்க்கும் பொழுது மொழிபெயர்ப்பு விளங்கிக்கொள்ளக் கூடியதாயும் மூலமொழியின் சரியான பெயர்ப்பாகவும் இருத்தல் வேண்டும். இத்தகைய நியதிகள் சட்ட மொழிபெயர்ப்பிற் கூடுதலாக எதிர் பார்க்கப்படுகின்றன. ஏனென்றால். தமிழிலே வழக்குகளை விசாரணை செய்யும்பொழுது, தமிழ் மொழியிலுள்ள சட்டம் முக்கியத்துவம் அடைகின்றது. சட்ட மொழிபெயர்ப்பிலே தவறுகள் இருந்தால், வழக்கிலும் பல விபரீதங்கள் ஏற்படும்.

அடிக்குறிப்புக்கள் :

1. இலங்கை அரசியலமைப்பு — அத்தியாயம் 3 — சட்டவாக்க மொழி — பிரிவு 9 (1) — பக்கம் 5 — 1972.

2. இலங்கை அரசியலமைப்பு — அத்தியாயம் 3 — சட்டவாக்க மொழி — பிரிவு 9 (2) — பக்கம் 5 — 1972.

3. இலங்கை அரசியலமைப்பு — அத்தியாயம் 3 — சட்டவாக்க மொழி — பிரிவு 10 (1) — பக்கம் 5 — 1972.

4. *Report of the Royal Commission on Bilingualism and Biculturalism.*

   Book I — The Official Languages — Page 56.

   Publisher: Roger Duhamel, Queen's Printer and Controller of Stationery Ottawa, Canada, 1967.

5. ibid page 56.

6. ibid page 57.

இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும்

சில குறிப்புக்கள்

ஆ. சிவநேசச்செல்வன்

அன்னியர் ஆட்சியின் விளைவாலே ஏற்பட்ட பன்முகப் பட்ட வளர்ச்சி பொதுத் தகவற் சாதனங்களுள் ஒன்ருன பத்திரிகைத் துறையினை இலங்கையிலே தோற்றுவித்தது. ஏறத்தாழ ஒரு நூற்ருண்டுக்குமேலாக இலங்கையிலே தோன்றிய பல்வேறு பத்திரிகைகளும் தமது தகவற் சாதனப் பணிக்குப் புறம்பாகத் தமிழியல் வளர்ச்சியின் பன்முகப்பட்ட கூறுபாடுகளை நெறிப்படுத்தியுள்ளன. சில்வாழ்நாளும் பல்பிணியும் கொண்டன வாக இயங்கிய பல பத்திரிகைகள் நீண்டகாலம் தொடர்ந்து நடைபெருவிடினும் அவை அவ்வக் காலங்களில் உருவாக்கிய சிந்தனைப் பின்னணியும் வளர்ச்சிப் போக்கும் இலங்கையின் சமூக பொருளாதார அரசியற் சூழ்நிலையைத் தெளியவைக்கும் பிரதான தகவல் தேட்ட சாதனங்களாக அமைகின்றன.

அச்சியந்திரங்களின் வருகையோடும் வளர்ச்சியோடும் இணைந்து வளர்ந்த பத்திரிகையுலகு கிறித்துவப் பாதிரிமார் களின் முயற்சியினலும், ஆங்கிலங் கற்ற மத்தியதர வர்க்கத்தின ரின் இயக்கத்தினுலும் இலங்கையில் உருவாகியது.[1] பத்தொன் பதாம் நூற்ருண்டின் முற்பாதியிலே படிமுறையாக ஏற்பட்ட கல்வி வளர்ச்சியும் வாசனைப் பழக்கமும் பத்திரிகைச் சாதனத் தின் முக்கியத்துவத்தை உணரும் நிலைக்குப் பலரையும் இட்டுச் சென்றது. இதே காலகட்டத்தில் அச்சியந்திர சாதனத்தை அரசினதும், மிசனரிமாரினதும் தேவைகளுக்கு மட்டுமே பயன் படுத்த ஆங்கில அரசாங்கம் அனுமதி வழங்கியிருந்தது.[2] இதன் பயனுகத் தோன்றிய ஆங்கிலப் பத்திரிகைகள் அரச பிரகடனங் களைத் தாங்கி வெளிவந்ததுடன் சுதேச சம்பவங்களுக்கு முக்கி யத்துவம் அளிக்கவில்லை: அதேசமயம் சுதேச பத்திரிகைச்

தேவையையும் பலவாறுக வலியுறுத்தி வந்தன. பத்தொன்பதாம் நூற்றுண்டின் ஆரம்பத்திலிருந்து இலங்கைக்கு வரத்தொடங்கிய பல்வேறு மிசனரிமாரும் தமது சமயப் பிரசாரத் தேவைக்குத் துணையான துண்டுப் பிரசுரங்களை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டனர். அரசாங்க அச்சகத்திற்குப் புறம்பாக அச்சியந்திர சாதனத்தைப் பயன்படுத்தும் வாய்ப்புப் பெற்ற மிசனரிமார் முழுமுனைப்புடன் சமயப்பிரசார நூல்களையும் வெளியிட்டனர். 1834ஆம் ஆண்டு முதல் மானிப்பாயில் அமெரிக்க மிசனரிமாரால் ஆரம்பிக்கப்பட்ட அச்சகத்திலிருந்து பெருந்தொகையான தமிழ்ப் பிரசுரங்கள் வெளிவரலாயின; இவர்களே இலங்கையின் முதலாவது தமிழ்ப்பத்திரிகையான உதயதாரகைப் பத்திரிகை யையும் 1841ஆம் ஆண்டு தோற்றுவித்தனர்.[3]

உதயதாரகை முதலில் மாசிகையாக ஆரம்பிக்கப்பட்டுப் பின்னர் திங்களிருமுறையாகி வாரமொருமுறையாகி இன்று வரை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. ஹென்றி மாட்டின், செத்பேசன் ஆகிய இருவரையும் ஆசிரியராகக்கொண்டு அமெரிக்கமிசன் அச்சியந்திரசாலையில் ஈஸ்ற்மென் ஸ்ராங் மைனர் என்பவரால் இது முதலில் வெளியிடப்பட்டது. இரு மொழிப் பத்திரிகையாக ஆங்கிலமும் தமிழும் கலந்த நிலையில் வெளிவந்த இப் பத்திரிகையின் அமைப்புப் பற்றிய முதலாவது ஆசிரிய தலையங்கம் அவதானித்தற்குரியது.

> "……………… உதயதாரகைப் பத்திரத்தில் கற்கை, சரித்திரம், பொதுவான கல்வி, பயிர்ச்செய்கை, அரசாட்சி மாற்றம் முதலானவைபற்றியும் பிரதான புதினச் செய்திகள் பற்றியும் அச்சடிக்கப்படும். அது தமிழ்ப் பாஷையிலும் இடைக்கிடையே தமிழும் இங்கிலிசும் கூடினதாயும் எட்டுப் புறம் உள்ள நான்காக மடித்த தாள் அளவில் ஒவ்வொரு மாத முதலாம் மூன்றும் கிழமைகளிற் பிரசித்தம் பண்ணப் படும்."[4]

சமயத் தேவையைப் பிரதானமாகக் கொண்டு ஆரம்பிக்கப் பட்ட இப் பத்திரிகையின் நோக்கும் அமைப்பும் பரந்த கோட் பாடுகளை உள்ளடக்கியதாகக் காணப்பட்டன. 1823ஆம் ஆண்டு அமெரிக்க மிசனரிமாரால் ஆரம்பிக்கப்பட்ட வட்டுக்கோட்டை செமினரியின் மாணவர்களான கென்றி மாட்டின், செத்பேசன் ஆகியோர் தாம் பெற்ற கல்வியின் பிரதிபலிப்பாக இப் பத்திரி கையை நடாத்த முனைந்தனர். சுதேச மாணவர்களான பத்திரிகை ஆசிரியர்களினுல் விரிவாகத் தலையங்கத்தில் வலி யுறுத்தப்பட்ட கல்வித் தேவையும், அறிவு விழிப்பும் காலப்

போக்கில் அமெரிக்க மிசனரிமாரின் முழுமுனைப்பான சமயப் பிரசார தேவைக்குப் பயன்படுத்தப்பட்டன. ஐரோப்பாவிற் கல்வி வளர்ச்சியும் பத்திரிகை வளர்ச்சியும் ஏற்படுத்திய பாரிய விழிப்புணர்ச்சியைப் புத்திபூர்வமாக உணர்ந்து அவ்வகை மலர்ச்சி இலங்கையிலும் ஏற்படவேண்டும் என்பதை ஆசிரியர்கள் வலியுறுத்தியமையைப் பின்வரும் வாசகங்கள் தெளிவாக உணர்த்துகின்றன :

"......... ஆகையினுல் எங்கள் தேசத்தவர்கள் பலவிதமான அறிவிலுந் தேறவேண்டுமென்ற விருப்பத்தினுல் இப்படிப்பட்ட பத்திரத்தைக் காலத்துக்குக்காலம் அச்சடிப்பிக்கை இட்டுக் கொண்டோம். ஐரோப்பா தேசத்தார் இவ்வகைப் பத்திரங்களால் வெகு அறிவுகளை அடைந்து வருவதைக் கண்டு எங்கள் முயற்சி மிகவும் அற்பமாக இருந்தாலும் அதனுல் உண்டாகும் தோற்றம் பெரிதாயிருக்கும் என்றும் இன்னும் அநேகர் இவ்விதமான முயற்சிகளில் ஏற்பட்டு அறிவைப் பரப்புவார்கள் என்றும் நம்பி இதைத் தொடங்கினேம்."[5]

வாசனைப் பழக்கத்தை ஏற்படுத்துவதையும், இந்துக்களின் கவனத்தைத் தன்பால் ஈர்த்தலையும் முதன்மைப் படுத்தித் தோன்றிய உதயதாரகையைத் தொடர்ந்து அதே ஆண்டிலே உதயாதித்தன் என்ற பத்திரிகை சைமன் காசிச் செட்டியினுல் ஆரம்பிக்கப்பட்டது.[6] கொழும்பிலிருந்து வெளியிடப்பட்ட இப் பத்திரிகையின் பதின்மூன்று இதழ்களே வெளிவந்தன.[7] இப் பத்திரிகை வெளிவந்த செய்தி உதயதாரகையிற் காணப்படு கின்றது. 1845ஆம் ஆண்டு கொழும்பிலிருந்து உரைகல்லு (Touch Stone) என்னும் கத்தோலிக்கப் பத்திரிகை வெளியான செய்தியும் உதயதாரகையிற் காணப்படுகின்றது.[8] கிறிஸ்தவ மிசனரிமாரிடையே ஏற்பட்ட சமய வேறுபாடுகளைக் களையும் வகையிலும் அறிவுச் சூழலை உருவாக்க வேண்டும் என்ற ஆர்வத்துடனும் இப்பத்திரிகைகள் இயங்கியமையை அவைபற்றிய குறிப்புகளும் அறிமுகவுரைகளும் உணர்த்துகின்றன. உதயாதித்தன், உரைகல்லு ஆகிய பத்திரிகைப் பிரதிகள் தேசிய புராதன அரும்பொருளகத்திலும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பத்தொன்பதாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் அச்சகம் அமைக்கும் உரிமையைச் சுதேசிகள் 1835ஆம் ஆண்டு சென் ஜோஜ் கசற்றரின் வழியே பெற்றுக்கொண்டமை மிசனரிமாரைத் தவிர்ந்த பிறரும் பத்திரிகைகளைத் தோற்றுவிக்கும் வாய்ப்பினை ஏற்படுத்தியது. ஆங்கிலங் கற்ற புத்திஜீவிகளின் தோற்றமும் இவ்வகை முயற்சிகளுக்குரிய தளத்தினை ஏற்படுத்தியது. 1835ஆம்

ஆண்டு வைமன் கதிரைவேற்பிள்ளை வித்தியாதர்ப்பணம் (Literary Mirror) என்ற பத்திரிகையையும், நிக்கொலசு சூல்ட் விறிமன் (Jaffna Freeman) என்ற பத்திரிகையையும் ஆரம்பித்தனர். சமய சமூக அறிவியற் கருத்துக்களைத் தாங்கி வெளிவந்த இப் பத்திரிகைகளின் பிரதிகளும் அரும் பொருளகத்திற் காணப் படவில்லை. இவை பற்றிப் பிற ஆங்கிலப் பத்திரிகைகளும் உதய தாரகையும் ஆங்காங்கே கூறியுள்ள கருத்துக்கள் இவற்றின் முக்கியத்துவத்தை நன்கு உணர்த்துகின்றன. 1863ஆம் ஆண்டு சி. வை. கதிரவேற்பிள்ளை இலங்காபிமானி (Ceylon Patriot) என்ற பத்திரிகையை வெளியிட்டார். இப்பத்திரிகை மானிப்பாயில் அச்சிடப்பட்டது. 1864ஆம் ஆண்டு ஞெபேட் நியூட்டன் என்பவர் கொழும்பிலிருந்து இலங்கைகாவலன் (Ceylon Watchman) என்ற பத்திரிகையை வெளியிட்டார். இதே ஆண்டில் பாலியர் நேசன் என்ற சிறுவர் பத்திரிகை இளைஞர்களின் சமய முன்னேற்றம் கருதி அமெரிக்க மிசனரிமாரின் ஆதரவுடன் வில்லியம் சின்னத்தம்பியால் வெளியிடப்பட்டது. 1864இல் சி. முத்தையா பிள்ளை என்பவர் கொழும்பிலிருந்து இலங்கை பாதுகாவலன் என்ற பத்திரிகையை வெளியிட்டார். குறிப்பாக 1850க்குப் பின்னர் ஏற்பட்ட இரு தசாப்தங்களிலும் இலங்கையெங்கணும் பத்திரிகை சாசனத்தின் முக்கியத்துவத்தை யுணர்ந்த சூழல் உருவாகியது. ஆரம்பத்திலே சமயப்பிரசார தேவையைக் கல்விப்பின்னணியிற் பூர்த்தி செய்ய முயன்ற பத்திரிகைகள் செய்திப் பரிவர்த்தனை, அரசியல் விமர்சனம், சமூக முன்னேற்றம், பொருளாதார வளர்ச்சி ஆதியனவற்றிற் கவனஞ் செலுத்தும் நிலைமை தோன்றியது. குறிப்பாக இலங்கை காவலன், இலங்கை பாது காவலன், இலங்காபிமானி ஆகிய பத்திரிகைகளின் பொருளடக்கம் நாட்டுவளர்ச்சியின் பன்முகப்பட்ட கூறுபாடுகளை உள்ளடக்கி யுள்ளமை குறிப்பிடத்தக்கது. சமய சர்ச்சைகளுக்கு அதி முக்கியத்துவம் கொடாது தேச முன்னேற்றம் கருதி இயங்கும் நிலை தோன்றியமை பத்திரிகை சாதனத்தின் நிதானமான செயற்பாடு உருவாகியமையை உணர்த்துகின்றது.[9]

பொதுமக்களுக்குப் பல்வேறு செய்திகளையும் பிரசித்தம் பண்ண வேண்டும் என்ற நோக்குடன் 1890ஆம் ஆண்டு கு. அப்புத்துரைஐயர் கொழும்பிலிருந்து புதினாதிபதி என்ற பத்திரிகையை ஆரம்பித்தார். கரலிகித பத்திரிகையாக (கையெழுத்துப் பத்திரிகை) வெளிவந்த இப் பத்திரிகையிற் கேலிச்சித்திரங்களும் அக்கால தேசாதிபதிகளின் படங்களும் வரையப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து 1873ஆம் ஆண்டு கொழும்பு சோனகப்பட்டித் தெருவைச் சேர்ந்த நெயிந்த

மரைக்கார், வாப்பு மரைக்கார் ஆகியோரால் **புதினலங்காரி** என்ற பத்திரிகை கரலிகித அச்சகத்தின் மூலம் வெளியிடப் பட்டது. 'ஏனைய சனங்கள் பத்திரிகையாற் பெறும் நன்மையை முஸ்லிம்களும் பெறவேண்டும்' என்ற நோக்குடன் தொடங்கிய இப் பத்திரிகையே முதலாவது முஸ்லிம் பத்திரிகையாகும். இப் பத்திரிகைகளில் வெளிவந்த விடயங்களின் தலையங்கங்கள் ஆங்கிலத்தில் இடப்பட்டுள்ளமை குறிப்பிடற்குரியது. இப் பத்திரிகைகள் அரசியற் சம்பவங்களையும், பொதுச் செய்திகளை யும் விமர்சன நோக்கில் வெளியிட்டமையும் அவ்வப் பத்திரிகை ஆசிரியர் உரைகளிலே வெளியிடப்பட்டுள்ளது.

ஆரம்ப காலம் முதலாக **உதயதாரகைப்** பத்திரிகையும் பிற பத்திரிகைகளும் உருவாக்கிய சமயப் பிரசார முயற்சிகளுக்கு எதிர்முனைப்புக் கொடுக்கும் வகையிலே 1876ஆம் ஆண்டு **சுத்தோலிக்க பாதுகாவலன்** என்ற பத்திரிகை, பிப்பையா முருகப்பா ஆகியோரை ஆசிரியராகக் கொண்டு வெளியிடப் பட்டது. இதனைத் தொடர்ந்து 1877ஆம் ஆண்டு ஏச். எம். சின்னத்தம்பி என்பவரால் **இலங்கைநேசன்** என்ற சைவப் பத்திரிகையும், 1880ஆம் ஆண்டு ஊரெழு சரவணமுத்துப் பிள்ளையை ஆசிரியராகக் கொண்டு **சைவ உதயா பானு** என்ற பத்திரிகையும் வெளிவந்தன. 1881ஆம் ஆண்டு உடுவில் வைத் தீசுவர ஐயர் **சைவசம்போதினி** என்ற கரலிகித பத்திரிகையை வெளியிட்டார். 1882ஆம் ஆண்டு மூத்ததம்பிச் செட்டியாரால் வெளியிடப்பட்ட **விஞ்ஞான வர்த்தனி** என்ற பத்திரிகையும் சைவசமயப் பத்திரிகையாகும். இவை யாவும் ஆறுமுகநாவல ருடைய சமயப் போராட்டங்களின் பிரதிபலிப்பாக வெளி வந்தமை மனங்கொள்ளத்தக்கது.

முஸ்லிம் சமூகத்தினரிடையே மறுமலர்ச்சி ஏற்படுத்துவதற்கு அயராது உழைத்த சித்திலெவ்வை 1882ஆம் ஆண்டு **முஸ்லிம் நேசன்** என்ற பத்திரிகையை ஆரம்பித்தார். முஸ்லிம் மக்க ளுடைய பின்னணியிலே தேச மறுமலர்ச்சிக்குரிய கருத்துக்களைத் தாங்கி வெளிவந்த இப்பத்திரிகை, இஸ்லாமிய வேதக் கருத் துக்களை மக்களிடையே பரப்பித் தத்துவார்த்த ரீதியான சிந்தனையை உருவாக்கியது. **இலங்கைநேசன், சைவ உதய பானு** ஆகிய சைவசமயப் பத்திரிகைகள் உருவாக்கிய சமய சிந்தனை களை ஆறுமுகநாவலரின் வழியிற் பரப்பும் நோக்கில் 1884ஆம் ஆண்டு வல்வை பொ. ஞானசபாபதிப்பிள்ளை **சைவாபிமானி** என்ற பத்திரிகையை நடாத்தினர். இயற்றமிழ்ப் போதகாசிரியர் வல்வை வைத்திலிங்கம்பிள்ளை இப்பத்திரிகையுடன் இணைந்து செயற்பட்டமை குறிப்பிடற்பாலது.

சமயப் பிரசார நோக்குடன் சன்மார்க்க விடயங்களைத் தாங்கி வெளிவந்த சன்மார்க்க போதினி 1885ஆம் ஆண்டு அச்சுவேலி ச. தம்பிமுத்துப்பிள்ளையினால் ஆரம்பிக்கப்பட்டது. கிறிஸ்தவ சமயக் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்த இப்பத்திரிகை நாடெங்கும் மலிந்திருந்த சமூக வேறுபாடுகளைக் களையும் நோக்குடன் இயங்கியது. இதனைத் தொடர்ந்து 1886ஆம் ஆண்டு இலங்கையின் முதலாவது தினப்பத்திரிகை யாகிய இலங்கைத் தின வர்த்தமானி ரி. எஸ். ராஜூப்பிள்ளை என்பவரால் வெளியிடப்பட்டது. பொதுச் செய்திகளைத் தாங்கி வெளிவந்த இப்பத்திரிகை கவர்ச்சிகரமான தலையங்கங்களை இடும் முறையையும் தொடக்கி வைத்தது.

முஸ்லிம் மக்களிடையே உருவாகி வந்த மறுமலர்ச்சியின் பிரதிபலிப்பாக 1886ஆம் ஆண்டிலே சர்வஜன நேசன் என்ற பத்திரிகை ஏ. எஸ். சி. மொகய்டீன் என்பவரால் வெளியிடப் பட்டது. 1890ஆம் ஆண்டில் அ. அப்துல் றகுமானால் வெளி யிடப்பட்ட சைபுல் இஸ்லாம் என்ற பத்திரிகையும் 1893ஆம் ஆண்டு எல். எம். ஒத்மன் என்பவரால் வெளியிடப்பட்ட இஸ்லாம் மித்திரன் என்ற பத்திரிகையும் 1900ஆம் ஆண்டில் ஐ. வே. ம. அப்துல் அசீஸ் என்பவரால் வெளியிடப்பட்ட முஸ்லிம் பாதுகாவலன் என்ற பத்திரிகையும் இந்தவகையில் அவதானித்தற்குரியவை.

ஆறுமுகநாவலரின் மறைவுக்குப் பின்னர் சைவ மலர்ச்சி யைப் பிரதானமாகக் கொண்டு 1889ஆம் ஆண்டு தோன்றிய இந்துசாதனம் ரி. பி. செல்லப்பாபிள்ளை, நல்லூர் த. கைலாச பிள்ளை ஆகியோரை முறையே ஆங்கில, தமிழ் ஆசிரியர்க ளாகக் கொண்டு வெளிவந்தது. சைவபரிபாலனசபையினரால் வெளியிடப்பட்ட இப்பத்திரிகை நாட்டின் தேசிய மலர்ச்சி யையும், அரசியல் விழிப்பையும் மனங்கொண்டு இயங்கியமை குறிப்பிடற்பாலது.[10]

1896ஆம் ஆண்டு வெஸ்லியன் மிசனரிமாரினால் மட்டக்களப்பில் மாணவன் என்ற பத்திரிகை வெளியிடப் பட்டது. எம். எஸ். பாவா என்பவரை ஆசிரியராகக் கொண்ட இப் பத்திரிகையே மட்டக்களப்புப் பிரதேசத்தில் வெளிவந்த முதலாவது பத்திரிகையாகும். மட்டக்களப்புப் பிரதேச வளம் பற்றியும், வழக்குக்கள் பற்றியும், வரலாறுபற்றியும் அரிய தகவல்கள் இப்பத்திரிகையிற் காணப்படுகின்றன.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பாதியிற் படிமுறையாக வளர்ந்துவந்த பத்திரிகைகள் சமயப்பிரசார நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டனவாயினும் சமூக மலர்ச்சியையும் அறிவு வளர்ச்சியையும் பிரதான நோக்காகக் கொண்டு இயங்கின. சமயப் பத்திரிகைகள் பல அரசாட்சியாரின் குறைபாடுகளையும் அவ்வப்போது எடுத்துக்காட்டின; குறிப்பாக நாடெங்கும் உருவாகிய அறிவுத்தாகத்தைத் தீர்க்கும் நோக்குடன் செயற்பட்டன. இருபதாம் நூற்றுண்டின் முதலிரு தசாப்தங்களிலே தோன்றிய பத்திரிகைகள் தகவற் சாதனப் பணியின் முழுமையினைப் பெற்று இயங்கின. 1900ஆம் ஆண்டில் திராவிடகோகிலம் என்ற பத்திரிகை எம். சதாசிவம்பிள்ளையால் ஆரம்பிக்கப் பட்டது. தொடர்ந்து விவேகானந்தன் (1902), சுதேசநாட்டியம் (1902), இலங்கை மித்திரன் (1903), பூலோக ஔஷதோபகாரி (1905), மிஸ்பாகுல் இஸ்லாம் (1906), சஞ்சீவ காரணி (1907), ஆத்ம போதினி (1907), சைவ சூக்குமார்த்த போதினி (1908), ஞான சித்தி (1908), முஸ்லிம் (1908), விஜயலக்ஷ்மி (1910), உண்மை தூதன் (1910), திராவிட மித்திரன் (1910), ஞானப் பிரகாசம் (1910), சைவ பாலிய சம்போதினி (1910), பாலச்சந்திரன் (1910), விஜயபானு (1911), மஹா விஜயலட்சுமி (1911), கலியுக வரதன் (1911), சண்முகநாதன் (1911), விசுவகர்மன் (1912), இலங்கை முஸ்லிம் (1914), பாலபாஸ்கரன் (1915), இலங்கா மித்திரன் (1917), ஜனமித்திரன் (1918), ஹித்யாத் உத் இஸ்லாம் (1919), தூதன் (1919), ஆதித் திராவிடன் (1919), சம்சுல் இஸ்லாம் (1920) ஆகிய பத்திரிகைகள் ஒன்றன்பின் ஒன்றுகத் தோன்றின. இவற்றிற் பல நீண்டகாலம் தொடர்ந்து நடைபெறவில்லையெனினும் அவ்வக் காலத்தில் அவை வெளியிட்ட கருத்துக்கள் சமுதாய மாற்றத்தையும் வளர்ச்சியையும் இனங் காட்டுவனவாக அமைகின்றன.

குறிப்பாக ஆசுகவி க. வேலுப்பிள்ளையால் நடாத்தப்பட்ட சுதேசநாட்டியம், சி. எஸ். நமசிவாயத்தால் வெளியிடப்பெற்ற இலங்கை மித்திரன், எம். வி. பொன்னம்பலபிள்ளையால் வெளியிடப்பட்ட பாலச்சந்திரன், சச்சிதானந்தா நமசிவாயத்தால் வெளியிடப்பட்ட விஜயபானு, லாரி. முத்துக்கிருஷ்ணுவினுல் வெளியிடப்பட்ட ஜனமித்திரன் ஆகிய பத்திரிகைகள் தீவிரமான சமூக அரசியல் விமரிசனக் கருத்துக்களை வெளியிட்டு வந்தன. பத்திரிகைச் சாதனத்திற்கேற்ற மொழிநடை

வளர்ச்சியும் எளிமையும் இக்காலகட்டத்தில் முழுமைபெற்றன. பல பத்திரிகைகளுக்கு அவ்வவற்றைத் தோற்றுவித்தவர்களுடைய ஆர்வம் மட்டுமே மூலதனமாக அமைந்தமை அவை தொடர்ந்து இயங்கும் வாய்ப்பினை ஏற்படுத்தவில்லை.

ஏறத்தாழ 1920ஆம் ஆண்டு வரையில் ஏற்பட்ட அரசியல் விழிப்புணர்வும் தேசியப் பிரச்சினைகளும் தொடர்ந்து தோன்றிய பத்திரிகைகளிலே முனைப்புப் பெற்றன. 1922ஆம் ஆண்டு கோ. நடேசையர் ஆரம்பித்த தேசநேசன் என்ற பத்திரிகையும், 1923ஆம் ஆண்டு டி. பி. மாசிலாமணிப்பிள்ளை ஆரம்பித்த தேசபக்தனும் பத்திரிகைச் சாதனத்தின் முழுமையை இலங்கை பெற்றமையை உணர்த்துவனவாயுள்ளன. 1924ஆம் ஆண்டு ஆர். சாரங்கபாணிச் செட்டியார் ஆரம்பித்த தொழிலாளி என்ற பத்திரிகையும் இந்த வகையிலே நோக்கத்தக்கது. இதே காலகட்டத்தினைத் தொடர்ந்து தமிழர்போதினி *(1923)*, சைவசித்தாந்தபானு *(1924)*, இந்தியன் *(1924)*, மேல்நோக்கம் *(1925)*, இலங்கை விகடன் *(1924)*, அந்தோனியார் தூதன் *(1925)*, தேசத்தொண்டன் *(1925)*, சத்திய மித்திரன் *(1926)*, ஆதித்திராவிட மித்திரன் *(1926)*, கலிகால தீபம் *(1927)*, திராவிடன் *(1927)*, நியாயாபிமானி *(1927)*, சோதிடபரிபாலினி *(1927)*, ஜனநேசன் *(1928)*, இலங்கை இந்தியன் *(1928)*, தேசபந்து *(1928)*, தொழிலாளர் தோழன் *(1928)*, தினத்தபால் *(1930)* ஆகிய பத்திரிகைகள் வெளிவந்தன.

குறிப்பாக 1930 ஆம் ஆண்டு வரையில் டொனமூர் அரசியல் திட்டமும், அதன் தர்க்கரீதியான வளர்ச்சியும் ஈழகேசரி *(1930)*, வீரகேசரி *(1930)*, தினகரன் *(1932)* போன்ற பத்திரிகைகளைத் தோற்றுவித்தன. இப்பத்திரிகைகள் தோன்றிய காலத்தில் இயங்கிய தொழிலாளி *(1930)*, தமிழன் *(1930)* ஆகிய பத்திரிகைகள் குறிப்பிடற்பாலன. தேசமுன்னேற்றம், சமூக முன்னேற்றம், இலக்கியவளர்ச்சி ஆதிய விடயங்கள் பத்திரிகைப் பொருளாயின. இருபதாம் நூற்றுண்டு ஆரம்பம் முதல், படிப்படியாக ஏற்பட்டு வந்த உலகச் செய்திகளையறிவிக்கும் ஆர்வமும் இக்காலத்தில் முதிர்ச்சி பெற்றது. பத்திரிகைகள் விளம்பர சாதனமாக மாறியமையும், கேலிச்சித்திரங்கள் படங்கள் ஆதிய முக்கியத்துவம் பெற்றமையும் அவதானிக்கக் கூடியவை. கட்சியரசியலை முதன்மைப்படுத்திப் பத்திரிகைகள் இயங்க முனைந்தன. தேசவிடுதலை பற்றிய கருத்துக்கள் வெளியிடப்பட்டன. சுருங்கக் கூறின் பத்திரிகைச் சாதனத்தின் பிரதான செயற்பாட்டினை உணர்ந்த நிலை உருவாகியது. இலங்கை டெமோகிறற *(1931)*, கிழக்குத் தபால் *(1931)*, ஊழியன் *(1932)*, ஆனந்தன் *(1932)*,

வித்தியா விநோதம் (1934), தமிழ் நேசன் (1934), அரசகேசரி (1934), சுதந்திரன் (1935), சைவத்தொண்டன் (1935), இந்தியன் கேசரி (1935), இலங்கை சோனகர் (1935), ஜெயக்கொடி (1935), தினவர்த்தமானி (1935), விஜயகேசரி (1937), புதினம் (1937), சமதர்மம் (1938), பாரதகுலதீபம் (1939), பாரதசக்தி (1939), யாழ்ப்பாண சோதி (1939), பாட்டாளி உலகம் (1946), ஈழமுரசு (1948), காந்தியம் (1948), சுடரொளி (1948), எரிமலை (1948), பாட்டாளி (1950), யாழ்பாடி (1950) ஆகிய பத்திரிகைகள் ஒன்றன்பின் ஒன்ருகத் தோற்றின. ஏறத்தாழ 1940ஆம் ஆண்டு வரையில் தோன்றிய பத்திரிகை பல இந்திய விடுதலைப் போராட்டத்தின் எதிரொலியாகத் தோன்றியவை. குறிப்பாக காங்கிரஸ் (1939), இந்தியா (1939), காந்தி (1939), காலசக்கரம் (1939), நவசோதி (1939), போர்முரசு (1939), நவசக்தி (1940), அருணோதயம் (1940), பொதுஜன சேவை (1940), தீபம் (1941), ஜனசக்தி (1941), ஜனமணி (1941), தீப்பொறி (1947) ஆகிய பத்திரிகைகள் சிலகாலம் மட்டுமே வெளிவந்திருப்பினும் அவை நாட்டின் விழிப்புணர்வையும், சமூகத்தின் வெட்டுமுகத் தோற்றத்தையும் பிரதிபலிப்பவையாக உள்ளன. தொடர்ச்சியாக இயங்கும் வீரகேசரி, தினகரன், சுதந்திரன் ஆகிய பத்திரிகைகளும், அண்மைக்காலத்தில் ஈழநாடு, செய்தி போன்ற பத்திரிகைகளும் நடைபெற்று வருகின்றன. குறுகிய காலம் நடைபெற்ற தினபதியும் சிந்தாமணியும் குறிப்பிடத்தக்கவை.

பட்டியல் ரீதியான வளர்ச்சி மரபினூடே காலந்தோறும் ஏற்பட்ட பிரதான போக்குகள் சுட்டிக்காட்டப்பட்டன. இலங்கைப் பத்திரிகை மரபு ஏறத்தாழ ஒன்றரை நூற்றுண்டுச் சாதனைகளைக் கொண்டது. சமயத் தேவையை முதன்மைப் படுத்தித் தோன்றிய பத்திரிகைகள் பல வேறு காலங்களிலும் அரசியல் சமூக பொருளாதார மாற்றங்களுக்கேற்ற வகையில் வெளிவந்துள்ளன. நாட்டின் கல்வி விழிப்பையும் சமூக விழிப்பையும் அரசியல் விழிப்பையும் உணர்த்தும் சாதனமான பத்திரிகை உலகம் அனுபவரீதியான முறையிலேயே வளர்ச்சி பெற்றது. காலந்தோறும் வெளியான பத்திரிகைகளும் அவற்றின் ஆசிரியர்களும் வெளிப்படுத்திய பத்திரிகைத் திறன் (Journalistic talents) சமூக தாக்கம் ஆதியன பத்திரிகைகளை ஒரு ஜனநாயக சாதனமாக மாற்றின. எனினும் விஞ்ஞானக் கோட்பாடுகளுக்கிணங்க வளர்ந்துவரும் பத்திரிகைக் கல்வி மரபு இலங்கையில் இன்னும் நெறிமுறையாக ஏற்படவில்லை யென்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

அடிக்குறிப்புகள் :

1. S. Vithiananthan, Tamil Literature and Scholarship. The Pioneer work of Christians in Ceylon. *Proceedings of the First International Conference Seminar of Tamil Studies.* (IATR) Vol II, (Kulalumpur 1969).
2. Dennis E. Rhodes, *The Spread of Printing Eastern Hemisphere* (India, Pakistan, Ceylon, Burma and Thailand), (London 1969) p. 74.
3. Lyman S. Kulathungam, 'The Story of the Star'. *The Morning Star 1841—1941, Centenary Memorial Edition,* (Tellippalai 1941) p. 19; J. V. Chelliah, The American Mission Press, op. cit., p. 64.
4. உதயதாரகை, ஆசிரியர் தலையங்கம் ஜனவரி, *1841.*
5. மேற்படி.
6. மேற்படி செய்திப் பத்தி. மே. *1841.*
7. பொ. பூலோகசிங்கம், தமிழிலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெருமுயற்சிகள், *(யாழ்ப்பாணம் : 1970)* பக். *41.*
8. உதயதாரகை, செய்திப் பத்தி. மே. *1845.*
9. தேசிய புராதன திணைக்களப் பட்டியலை ஆதாரமாகக் கொண்டு அவ்வப் பத்திரிகை முதற் பிரதிகளை ஒப்பு நோக்கியே இத் தகவல்கள் தரப்படுகின்றன.
10. V. Ragunathamuthaliar, *The Contribution of Saivaparipalana Sabai to Education.* An essay submitted in part fulfilment for Diploma in Education. University of Ceylon (Peradeniya 1972) pp. 1—40.

இருமொழித் தட்டச்சு

கொடுமுடி ச. சண்முகன்

0. ஆங்கிலம், தமிழ் இரண்டு மொழிகளையும், ஒரே தட்டச்சுப் பொறியில் அமைக்க இயலுமா எனக் காண்பதே இக் கட்டுரையின் நோக்கம்.

1. தேவை :

1 : 1. ஆங்கிலம் தமிழ்நாட்டிற் கடந்த மூன்று நூற்றாண்டுக ளாகப் புழங்கி வருகின்றது. அரசின் ஆட்சி மொழியாகவும் இருந்தது. தற்போது தமிழ் ஆட்சியில் இடம் பெற்று அரியணை ஏறியுள்ளது. முழு அளவிலே தமிழைப் பயன் படுத் தாமல் இருப்பதற்கான தடைகளுட் போதிய தட்டச்சுப் பொறிகள் இல்லாமை முதன்மையானதாகும். தமிழ் ஆட்சி மொழியாக இருந்தாலும் ஆங்கிலம் புழக்கத்தில் இருக்க வேண்டியுள்ளது. எனவே தற்போதைய ஆங்கிலப் பொறி களைத் தமிழ் ஆங்கிலம் கலந்தவையாக மாற்ற இயலு மாயின் நலம் விளையும்.

1 : 2. அறிவியற் கருத்துக்களை அறிந்துகொள்ளும் சாளரமாக ஆங்கிலம் விளங்குகிறது. அறிவியல் வளர்ச்சி எவ்வளவோ, அவ்வளவே நாட்டின் முன்னேற்றம் ஆகும். அறிவியற் கட்டுரைகளைத் தமிழில் எழுதும்போது, புதிய நுட்பச் சொற்களை அறிமுகப்படுத்தும்போதெல்லாம், ஆங்கிலச் சொற்களைப் பெய்து எழுதவேண்டியுள்ளது. தனித் தமிழ்த் தட்டச்சுப் பொறிகள் அறிவியற் கட்டுரைகளை எழுதப் போதுவதில்லை. இருமொழித் தட்டச்சுப் பொறிகள் இருந் தால் இது எளிதாக இருக்கும்.

1 : 3. தமிழ்த் தட்டச்சுப் பொறியில், நிறுத்தச் சாவிகள் உள்ளன. அவை தாளைப் பொத்துவிடுகின்றன. வேகத் தைக் குறைத்து விடுகின்றன. நிறுத்தச் சாவிகள் தமிழ்த் தட்டச்சின் பொலிவைக் குறைக்கின்றன.

1:4. தமிழ் நெடுங்கணக்கின் எழுத்துருவங்கள் தட்டச்சில் அறுபதுக்கு மேலும், புத்தக அச்சில் 120க்குப் பக்கமாகவும் உள்ளன. எனவே இவற்றின் எண்ணிக்கை குறைந்தால் மாேேனாடைப், லேனோடைப் போன்ற அச்சுப் பொறிகளுக்கும், கணிதி போன்ற மின்னணுக் கருவிகளுக்கும் எளிதாக இருக்கும்.

2. ஆங்கிலம்:

ஆங்கிலத்தில் 26 எழுத்துக்கள் உள்ளன. அதில் பெரிய எழுத்து, சிறிய எழுத்து என இரண்டு வகை உள்ளதால் 52 உருவங்கள் தேவைப்படுகின்றன. பெரிய எழுத்தின் பயன்பாடு பற்றிய ஐயம் உலகம் முழுவதும் தோன்றி வருகின்றது. சொற்றொடர் தொடக்கம், பெயர்களின் முதலெழுத்து, தலைப்பெழுத்துக்கள் போன்ற ஒரு சில இடங்களைத் தவிர வேறு பயன் இல்லை. அவ்விடங்களிலெல்லாம் சிறிய எழுத்துக்களைப் பயன்படுத்தினாலும் பொருள் மாறப்போவதில்லை. பழகிய கண்கள் மாற்றத்தை ஏற்கச் சில நாட்களாகும். வேறு இடரில்லை. ஆங்கில மலர் பல முழுவதும் சிறிய எழுத்துக்களைப் பயன்படுத்திப் பொலிவுடன் திகழ்கின்றன. எனவே இருமொழிப் பொறியில் ஆங்கிலத்தின் சிறிய எழுத்துக்களை மட்டும் வைத்துக் கொள்ளலாம்.

3. தமிழ்:

தமிழ் நெடுங்கணக்கில் தற்போதைய உருவங்களைச் சீர்மைப் படுத்தி, தேவையில்லாத உருவங்களைத் தவிர்த்தும், கூட்டெழுத்துக்களைப் பிரித்தும் எழுதினாற் போதும். அவற்றை ஒவ்வொன்றாக ஆராயலாம்.

3:1. ளை லை னை ணை —ளை, லை, னை, ணை
னா ணா றா —னா, ணா, றா

மேற்கண்ட சீர்மைகளாற் குழப்பம் எள்ளளவும் இல்லை. தானாகவே தடுமாறாமற் படிக்க இயலும்.

3:2. உகர, ஊகார வரிசை இரண்டுமே அதிகமான உருவ மாறுபாடு கொண்டுள்ளன. உகர மெய் 18, ஊகார மெய் 18 ஆக முப்பத்தாறு எழுத்துக்கள் உள்ளன. அவற்றைத் தட்டச்சில் அமைக்க 18 சாவிகள் வீணாகிவிடுகின்றன. தமிழ் நெடுங்கணக்கிலேயே அதிகமான உருவங்கள் கொண்ட வரிசைகள் இவைதாம். மெய்யெழுத்துக்களின் அருகில் அமைக்கக் கூடிய இரண்டு உருவங்களை ஏற்படுத்திக் கொண்

டால், மிக எளிதாகிவிடும். க வுடன் ா சேர்த்தால் நெடில் கா வருவது போல, பக்கக் குறி ஒன்று அமைக்க வேண்டும்.

பக்கக் குறியாக ு ூ ஆகியவற்றைப் பயன்படுத்தலாம் எனச் சிலர் கருதுகின்றனர். அதில் சில இடர் உள்ளன. டகரத்திற்கு வலது பக்க மேல் முனை இல்லை. அதனால் பக்கக்குறி ஒட்டாமல் தனித்து நிற்கும். எனவே ு ூ குறிகள் உகர ஊகார வரிசைக்குப் பொருந்தா.

புதியகுறி தனித்த எழுத்துருவம் கொண்டிருக்க வேண்டும். அடுத்து வரும் இரு குறிகள் மிகப் பொருத்தமானவை. அவை] Ǝ

கு, சு, டு, து, பு, று — க], ச], ட], த], ப], ற] ,
கூ, சூ, டூ, தூ, பூ, றூ — கƎ, சƎ, டƎ, தƎ, பƎ, றƎ ,
ஙு, ஞு, ணு, நு, மு, னு — ங], ஞ], ண], ந], ம], ன] ,
ஙூ, ஞூ, ணூ, நூ, மூ, னூ — ஙƎ, ஞƎ, ணƎ, நƎ, மƎ, னƎ ,
யு, ரு, லு, வு, ழு, ளு — ய] ர] ல] வ] ழ] ள] ,
யூ, ரூ, லூ, வூ, ழூ, ளூ — யƎ, ரƎ, லƎ, வƎ, ழƎ, ளƎ ,

4. தமிழ் நெடுங்கணக்கிற்கு மேலே கண்ட சீர்மை மிகவும் இன்றியமையாத அவசரத் தேவை. அதே சமயத்தில் நெடுங்கால நோக்கில் இன்னும் சில சீர்மைகளைப் பற்றி எண்ணுவதிற் பிழையில்லை.

4 : 1. இகர, ஈகார வரிசையில் ஒட்டுக் குறிகள் உள்ளன. ? ° என்பவை நிறுத்தக் குறிகளாக உள்ளன. முதலில் இக் குறியை அடிக்கவேண்டும். உருளை நகராது. அதன் மேலேயே எழுத்தைத் தட்டினால் இகர உயிர்மெய் விழும். இதிலும் டகர வரிசைக்கு இக்குறிகள் பொருந்தா. அதனால் டி, டீ என இரு உருவங்கள் கூடுதலாக உள்ளன.

உகர வரிசைக்குப் பரிந்துரைத்தது போலவே இகர வரிசைக்கும் தனிக்குறியாகப் பக்கத்தில் அமைத்துக்கொள்ளலாம். இதனாலே தட்டச்சில் அதிக நன்மைகள் இல்லாது போனாலும் புத்தக அச்சில் 36 எழுத்துருவங்களுக்குப் பதிலாக இரண்டே பக்கக் குறிகள் போதும். பக்கக் குறிகளாக q, p இவ்விரண்டு குறிகளையும் ஏற்றுக்கொள்ளலாம்.

4 : 2. மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளி வைத்து எழுதப்படுகிறது. தட்டச்சில் மெய்ப்புள்ளி நிறுத்தச் சாவியில் உள்ளது. புள்ளி தட்டியதும் உருளை நகராது. அதன் அடியில் எழுத்து

வந்து சேரும். நிறுத்தச் சாவி ஆனதால் தாள் பொத்துப் போகின்றது. தாளின் பின்பக்கம் சொத்தை மகம் போலக் காட்சி தரும். இதுவே தமிழ்த் தட்டச்சுப் பொறியின் அவலநிலை ஆகும். அதனுற் புள்ளியை எழுத்தின் தலையில் வைக்காமல் பக்கத்தில் மேற்புறம் வைக்கும் ஏற்பாடு செய்யலாம்.

கந° தன°

ஏற°றம°, வாட°டம°, கத°தி

புள்ளிவரும் இடத்தில் இடைவெளி அதிகம் தோன்றுகிற தன்றோ? தட்டச்சில் அரை டிகிரி நகர்த்தம் கொடுக்க இயலும். மராட்டியம் போன்ற பிற இந்திய மொழித் தட்டச்சுக்களில் அரை டிகிரி நகர்த்தம் வைக்கப்படு கின்றது. மெய்ப்புள்ளியை இவ்வாறு அமைத்துக் கொண்டால் நிறுத்தச் சாவியைத் தவிர்க்கலாம்.

இதனுல் இன்னொரு பெரிய நன்மையும் உண்டு. புத்தக அச்சில் மெய்யெழுத்துக்களுக்காக உள்ள 18 உருவங்களைக் குறைத்துக் கொள்ளலாம்.


4 : 3. இன்னொரு பரிந்துரையும் உண்டு. அது மிகவும் எளிமை யானதுதான். உயிர் நெடில்களை எழுதக் கால்களைப் பயன்படுத்துவதாகும்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஓ — அா, இா, உா, எா, ஒா

இதனுல் ஐந்து எழுத்துருவங்கள் குறைகின்றன. நெடில் களின் புழக்கம் மிகவும் குறைவு. அதனுற் கட்டுரைகளில், கவிதைகளில் அதிகம் வாரா.

5. சாவி அமைப்பு:

ஆங்கிலம், தமிழ் எழுத்துக்கள் கொண்ட தட்டச்சின் சாவி அமைப்புக் காண்க.



5 : 1. ஆங்கில எழுத்து வரிசை அமைப்புச் சிறிதும் மாறுமல் அப்படியே வைத்துக்கொள்ளப்பட்டது. ஆனுல் தூக்கலில் வைத்துக்கொள்ளலாம். தூக்கல் சாவியைப் பூட்டி, ஆங்கிலச் செய்திகளை அடித்துக்கொள்ளலாம். £, @, Rs, $ ஆகிய குறிகள்தவிர மீதி எந்தக் குறியும் விடுபடவில்லை. அவை ஒரோவழி வருபவை யாதலின், அவையின்மையாற் பேரிடர் ஏதுமில்லை.

5 : 2. தமிழ்த் தட்டச்சு எழுத்துக்களும் தமிழ்நாடு அரசாங்கம் ஒப்புக்கொண்ட சாவி அமைப்பில் அதிகம் பிறழாமல் அமைக்கப்பட்டுள்ளன. எல்லாம் கீழ் வரிசையிலேயே உள்ளன.

5 : 2 : 1. ஞ, ெ, ே, ஐ ஆகிய நான்கே எழுத்துக்கள் மட்டும் இடம்மாறி அமைக்கப்பட்டுள்ளன.

5 ; 2 ; 2. மெய்ப்புள்ளி இரண்டாம் வரிசையிற் பழைய இடத்திலேயே உள்ளது. தற்போது நிறுத்தச் சாவியாக உள்ளதை, அரை டிகிரி நகர்த்தம் கொடுத்து அமைக்கப்பட்டுள்ளது. அதிலேயே அரைப் புள்ளியையும் வைத்துக்கொள்ளலாம் (:).

5 : 2 : 3. உகர, ஊகார பக்கக் குறிகள் இரண்டும் ஒரு சாவியிலும், இகர, ஈகார பக்கக் குறிகள் இரண்டும் ஒரு சாவியிலுமாக அமைத்து இரண்டாம் வரிசையின் வலப் பக்கத்தின் இறுதியில் வைத்துக்கொள்ளலாம்.

5 : 2 : 4. முதல் வரிசையில் ஸ, ஜ, ஸ்ரீ, & போன்ற எழுத்துக்களும் உள்ளன.

6, இடமிகை :

நெடுங்கணக்குச் சீர்மையால் எழுதும் இடம் அதிகமாவது ஒரு குறை. மேலே கூறிய எல்லாச் சீர்திருத்தங்களையும் சேர்த்தால், இடமிகை சுமார் 25% தான். உருவங்களின் எண்ணிக்கைக் குறைவால் ஏற்படும் நன்மை கருதி இந்தக் கூடுதல் இடத்தைப் பொறுத்துக்கொள்ளலாம். ஆங்கில எழுத்துக்களின் (murugan — முருகன் — ம] ர] கன°) அமைப்பை நோக்கினுல் உலகத்தோடு ஒட்ட ஒழுகலுக்குப் புறம்பாகாது. அச்சில் சுமார் 35 உருவங்களே உள்ளன என்பதை நோக்கும் போது இதன் பெரும் பயன் வெள்ளிடைமலை.

7. செயலாக்கம்:

இவ்வகைச் சீர்மையை மக்கள் எவ்விதம் ஏற்பர்? தற்போதைய நெடுங்கணக்கில் உள்ள அச்சிட்ட புத்தகங்களை என்ன செய்வது?

இத்தனை சீர்மைகளையும் ஒரே சமயத்தில் அறிமுகப் படுத்தினால் தமிழ் கூறும் நல்லுலகம் ஏற்றுக்கொள்ளத் தயங்கும். எதிர்ப்புகள் மிகும். ஆனால் சிறுகச் சிறுக அமுலாக்கினால் எளிதாக இருக்கும்.

னா, ணா, றா, னை, ணை, ளை போன்றவற்றை விடுதலை நாளேடு பல ஆண்டுகளாகப் பரப்பி வருகிறது. அதே போல உகர, ஊகார பக்கக் குறிகளை முதல் இரண்டு ஆண்டுகளுக்குப் பயன் படுத்தலாம். செய்தித்தாள்கள் இந்த மாற்றத்தை ஏற்றுப் பரப்பினால் போதும்; மிக எளிதில் மக்கள் மனதில் படியும்.

இகர, ஈகார பக்கக் குறிகளை அடுத்த இரண்டு ஆண்டு களுக்குச் சேர்த்துக் கொள்ளலாம். மெய்ப் புள்ளியைத் தள்ளி வைப்பதை அதற்கடுத்த இரண்டாண்டுகளில் மேற்கொள்ள லாம்.

புதிதாக வரும் எல்லாப் புத்தகங்களிலும் இந்தச் சீர்மை பற்றிய குறிப்பைச் சேர்த்து வெளியிடப் பணிக்கலாம். தட்டச்சுப் பொறிகளில் இப்போதிருந்தே முழுமையான அளவிற் செயலாக்கலாம். ஏனெனில், தட்டச்சுப் பொறியின் புழக்கம் ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள்ளேயே அமைந்து விடுகின்றது. அவர்கள் இம் மாற்றங்களை எளிதிற் புரிந்துகொண்டு செய லாக்க முடியும்.

8. இருமொழித் தட்டச்சுப் பொறி:

இருமொழித் தட்டச்சுப் பொறியின் விலை தற்போதைய தமிழ்த் தட்டச்சுப் பொறியின் விலைக்குள்ளாகவே இருக்கும். கூடுதற் செலவு இல்லை. ஒன்றிற்கு மேற்பட்ட பொறிகள் உள்ள அலுவலகங்களில் பழைய ஆங்கிலத் தட்டச்சுப் பொறி ஒன்றும் வைத்துக் கொள்ளலாம். இரண்டு பொறி வைத்துக்கொள்ள வசதி இல்லாத தமிழ் வணிகர்களின் அலுவலகங்களுக்கு இரு மொழிப்பொறி பெருத்த நன்மை தரும் என்பதில் ஐயமில்லை.

மாறுதற் காலத்திற் சிறிதளவு குழப்பம் தவிர்க்க இயலாது. உலகம் முழுவதும் ஆங்கில அளவுகளிலிருந்து மெட்ரிக் முறை களுக்கு மாறிக் கொண்டது. இன்றியமையாத மாற்றங்களை ஏற்றுக்கொள்ளுதல் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும். ஒவ்வொரு தமிழ் மகனின் அன்றாட வாழ்க்கையில் இந்த மாற்றம் குறுக்கிடுமாதலால் நிதானத்துடன் அமுலாக்குவது இன்றியமையாதது. தமிழறிஞர்கள் நன்கு ஆராய்ந்து மக்களை வழிப்படுத்தல் இன்றியமையாததாகும்.

பி. கு.: 7c — 9p. இகர, ஈகாரக் குறிகள்.

பிற்சேர்க்கை: 1 திருந்திய வடிவம்

பொறியியலாக்குந் துணைபுரியும் பாடங்களில் முதன்மையானது அளக்கையியல். இதில் செய்து பழகிக் கொள்வதுதான் அதிகம்; படித்து அறிந்து கொள்வது மிகவும் குறைவு. செய்து பழகியபின் பாடத்தைப் படித்தால், அது மிகையாகத் தோன்றும். காகிதத்தில் அறிவதைவிட களத்தில் அறிவதே மிகுதி. கருவிகளை இயக்குவது, கைப்பழக்கமாக வேண்டும். படிக்கும்போது தோன்றும் பல ஐயங்கள் கருவிகளைக் கண்டதும் பறந்து விடும்.

அளக்கையில் மொழியின் வேலை குறைவு இருந்த போதிலும், ஒருவருக் கொருவர் இடும் ஆணைகள், பொருள் மாறாமல் அடுத்தவரால் புரிந்து கொள்ளப்பட வேண்டும். ஆங்கிலத்திலும் பல சொற்கள் இடத்திற்கேற்ப மாறுபட்ட பொருளில் வழங்கி குழப்பத்தை இல்லாமலில்லை. எனவே தமிழில் புழங்கும் போதும் அவ்வாறு சில வேளைகளில் நேர்ந்தால் அதுபற்றி மயங்க வேண்டியதில்லை.

பிற்சேர்க்கை: 2 திருந்திய வடிவம்

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் றாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் றாள் வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் றாள் வாழ்க
ஏக னனேக னிறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க.

தமிழ் நெடுங்கணக்கில் எழுத்துச் சீரமைப்பு

வ. கோவிந்தபிள்ளை

தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் ஏனைய பிறநாடுகளிலும் வாழும் தமிழ் மக்களிடையே தமிழ் நெடுங்கணக்கில் எழுத்துச் சீரமைப்பினைப் பற்றிய அபிப்பிராயம் பல்லாண்டுகளாக நிலவி வருகின்றது. இதன் காரணமாக ஒவ்வொருவரும் உண்மையை உணராததாற் பழமை விரும்பிகள் மாற்றத்தை ஏற்க மறுக்கின்றனர்; புதுமை விரும்பிகள் மாற்றம் செய்யவேண்டுமென்ற ஒரே நோக்கிற்காக மாற்றத்தை மேற்கொள்ள முயலுகின்றனர். இதனைத் தவிர்த்தற்பொருட்டு இருசாராருக்கும் ஏற்பச் சிலவற்றைக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

காலத்தோடு ஒட்டி எழுத்துக்களில் மாற்றம் செய்யவேண்டியது இன்றியமையாததொன்றே. பள்ளியிற் பயிலும் சிறுவர்கள் தமிழ் நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்களைப் பயிலப் பல மாதங்கள் எடுக்கின்றனர். காரணம் ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு வகையாக அமைந்திருத்தலே. பயின்றவர்களும் சிலவேளைகளிற் பிழையாகவே எழுதுகின்றனர். ஏதாவது ஒரு தொடர்பு இருக்குமானால், இவ்விதத் தவறுகள் ஏற்படா. கி, ஙி என்பவற்றிற்கு உள்ள தொடர்பு கூ, ஙூ என்பவற்றிற்கில்லை. க உடன் உ சேர்த்து எழுதப்பட்டுள்ளது. ஆனால், அதனைக் 'கு' என்று கொள்ளாது 'கூ' என்று நெடிலாகவே கொள்கின்றோம். 'உ'வினது அல்லது 'ஊ'வினது தொடர்பு எதுவுமின்றி 'ஆ'விற்குக் கீழ் விசிறி இடுவது போன்று பூ, வூ, யூ என்பவற்றை எழுதுகின்றோம். ஆனால் அவற்றைப் பா, வா, யா என்னாது, பூ, வூ, யூ என்றே கூறுகின்றோம். இத்தகைய திரிபுகளைக் காட்டிலும் எதற்கும் ஒரு ஒற்றுமை இருத்தல் நல்லதென்ற நோக்கிலேயே சில கூற விரும்புகின்றேன்.

உயிர் எழுத்துக்கள்:

உயிர் எழுத்துக்களைச் சிறிது நோக்குவோமானாற் சில உண்மைகள் எமக்குப் புலனாகும். ஒவ்வொரு உயிர் எழுத்திலும் ஒலிவடிவான சுழி அடங்குவதைக் காண்கின்றோம். இதிற் குறில்

நெடில் என்பவற்றின் வேறுபாடுகளைப் பிரித்துக் காட்டுவதற்காகவே அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்து குறில்களுக்கும் ஒவ்வொரு சுழியும் ஆ, ஈ, ஊ, ஓ, ஐ, ஔ என்னும் நெடில்களுக்கு இவ்விரு சுழிகளும் இடப்பட்டுள்ளன. குறில் ஐந்தினுள்ளும் ஏ, ஓ எனக் கருதிவந்த எ, ஒ என்னும் இரண்டினையும் ஏ, ஓ என்பவற்றினின்றும் வேறுபடுத்திக் காட்டுதற்குப் பண்டைக்காலத்தில் அவற்றின்மீது புள்ளியிட்டே எழுதிவரலாயினர். இதனை 'மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்' (தொல். எழு. 15), 'எகர ஒகரத் தியற்கையு மற்றே' என்ற சூத்திரங்களிலிருந்து அறியலாகும். இதற்கு உதாரணமாகப் பின்வரும் தண்டியலங்காரச் செய்யுளையும் காட்டுவர். அது வருமாறு:

"நேரிழையார் கூந்தலினோர் புள்ளிபெற நீண்மரமாம்
நீர்நிலையோர் புள்ளி பெறநெருப்பாம்"

இதில் ஓதி என்பதிலுள்ள ஓ புள்ளிபெற ஒ̇தி என்று மரத்தையும் ஏரி என்பதிலுள்ள எ புள்ளிபெற எ̇ரி என்று நெருப்பினையும் குறிக்கலாயின. இந்த உயிர்மீது புள்ளிபெற்ற முறையினையே உயிர்மெய் எழுத்துக்களான கெ, ஙெ என்பவற்றுக்கும் கெ̇, ஙெ̇ என உயிர்மெய்க் குறில்களைக் குறிக்கப் புள்ளியிட்டு எழுதலாயினர். எனவே, மெய்யெழுத்துக்களுக்கு மாத்திரமன்றி, உயிர் எழுத்துக்களையும் உயிர்மெய்யெழுத்துக்களையும் குறிக்கப் புள்ளியிட்டு எழுதிவந்தனர் என்பது இதிலிருந்து புலப்படும். கல்லில் எழுதிவந்த காலத்தில் இப்புள்ளியிடுவது இலகுவாகவும் இருந்திருக்கலாம். பின்னர் ஓலையில் எழுதத் தொடங்கியதும், புள்ளியிடுவது கடினமாகத் தென்படவே அம்முறையைக் கைவிடலாயினர். 'மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்' என விதி இருந்தபொழுதிலும் ஓலையில் எழுதுவது கடினமாகையால் அவ் விதி தளர்த்தியே எழுதப்பட்டு வரலாயிற்று. எனவே, எழுத்துக்கள் வசதிக்காக அமைக்கப்படுவனவேயன்றி வசதிகளைக் குறைப்பதற்காக எக்காலத்திலும் மேற்கொள்ளப் படவில்லை.

உயிர்மெய் 'ஆ' வரி:

உயிரெழுத்தாகிய 'ஆ'வை இரு சுழிகள் அமைத்தெழுதியது போன்று அவ்வரியில் உள்ள உயிர்மெய்யெழுத்துக்களாகிய கா, ஙா, சா என்பவற்றிற்கும் உயிர்மெய்க்குறில்களாகிய க, ங, ச என்பவற்றிற்கும் பக்கத்திற் புள்ளி (சுழி)யிட்டே அக்காலத்தில் எழுதினர். 'ஆ'விற்குரிய வரியின் இறுதிவரையும் இவ்விதி மேற்கொள்ளப்பட்டிருந்தது என்பதை முற்கூறிய வெண்பாவின்

— சீரளவும்
காட்டோன் ருெழிப்ப விசையா மதனளவு
மிட்டோன் ருெழிப்ப மிடறு"


என்னும் மிகுதியடிகளிலிருந்தும் ஏனைக் கல்வெட்டுக்களி லிருந்தும் காணக் கிடக்கின்றது. அதாவது க.ந்த.ரம் (காந்தாரம்) என்பதில் ஒரு புள்ளியைக் குறைக்கும்பொழுது இசை என்னும் பொருளிலும் மற்றப் புள்ளியையும் குறைக்கக் கழுத்து என்னும் பொருளிலும் வரும் எனப் பாடியுள்ளார். இந்த முறையும் ஓலைச் சுவடியில் எழுதத் தொடங்கிய பின்னர் புள்ளியிடுவது கடினமாகத் தோன்றியதாலோ அல்லது எழுத்து வளர்ச்சியின் காரணத்தாலோ என்னவோ புள்ளியைக் காலாக மாற்றி 'காந்தாரம்' என அரவு சேர்த்து எழுதலாயினர். அவ்வாறு எழுதிய காலத்திலும் ணா, றா, னா என்ற எழுத்துக் களைத் தொடுத்து ஓலைகளிலே எழுதும்போது அவை ஒன்றுடன் ஒன்று தொடுபட்டு னா என்பது ண என உருவத்திரிபு ஏற்பட லாயிற்றுப்போலும். இதன் காரணத்தினுல் இவ்வெழுத்துக்க ளுக்குத் தனி எழுத்துக்களை — ணு, ரு, னு என உபயோகிக்க லாயினர். இப்பொழுதோ அச்சுக்கலை நன்கு வளர்ச்சியடைந் திருப்பதினுலும் நூல்கள் ஏட்டுப் பிரதிகளிலல்லாது அச்சுப் பிரதிகளாக இருப்பதினுலும் முன்னரேற்பட்ட உருவத் திரிபுகள் பற்றிக் கவலைப்பட ஏதுவில்லை. இந்த முறை, பயிலும் சிறுவர் களுக்கும் கால அவகாசத்திற் குறைவினை ஏற்படுத்துகின்றது. இதே முறையின்படி, அதாவது உயிர்மெய்யெழுத்தின் முறைப் படி, 'அ' என்ற உயிர் எழுத்துடன் அரவினைச் சேர்த்து 'அா' எனக் கொள்வதோடு ஏனைய உயிர் நெடில்களுக்கும் இம் முறையையே கடைப்பிடித்தல் மிகவும் பொருத்தமானதாகும்.

உயிர்மெய் இ, ஈ வரிகள் :

மேற்கூறிய முறைப்படி இ, ஈ வரிசளிலே தொடங்கும் உயிர் மெய் எழுத்துக்கான கி, கீ என்பனவற்றிற்கும் முறையே விசிறி யும் சுழிசேர்ந்த விசிறியும் இட்டு அவற்றின் குறில் நெடில்களை ஆக்கிக்கொண்டனர். எனவே விசிறிகளே இ, ஈ என்பவற்றைக் குறிக்கும் வரிவடிவமாகும். டி என்பதைக் குறிப்பதற்குக்கூட பண்டைக்காலத்தில் ட வின் மீது விசிறி இட்டே எழுதினர். அது உறுப்பாயமையாத காரணத்தினுலோ என்னவோ பின்னர் அதனைத் தற்போதுள்ள முறையில் டி என எழுதலாயினர். அந்த எழுத்தினை அவ்வாறே மேற்கொள்ளினும் இவ்வரிகளுக்குரிய உயிர் எழுத்துக்களான இ, ஈ என்பவற்றிற்கும் உயிர் எழுத்தான 'அ' விற்கு விசிறியை இட்டு அி அீ எனக் கொள்வோமாயின் உயிர் எழுத்துக்களில் ஆ, இ, ஈ ஆகிய எழுத்துக்களை நீக்கிவிடும் வாய்ப்பு ஏற்படும். அரவு 'ா' அடையாளமேயாயினும் ர் ரி ரீ என எழுத்தாகவே கருதப்படுகின்றது.

உயிர்மெய் உ, ஊ வரிகள் :

கி, கீ என்ற உயிர்மெய் எழுத்துக்களின் வடிவினைக் காட்ட மெய்யெழுத்தின் சார்பாக 'க'வும் உயிரெழுத்தின் சார்பாக ி விசிறியும், ீ சுழிசேர்ந்த விசிறியும் இடம்பெற்றிருக்கின்றன. இந்த முறைப்படி 'உ' வரியைப் பார்த்தால் உயிர் ஏறிய தொடர்பு எழுத்தமைப்பிலே தெரிவது குறைவு. ஆனால், 'கூ' என்ற எழுத்தினை நோக்கினால் 'க'வும் 'உ'வும் இணைந்திருப்பதைக் காணலாம். அவ்வாறிணைக்கப்பட்ட பொழுதிலும் அதனைக் 'கு' எனக் கூறாது 'கூ'வென நெடிலாகவே கருதுகின்றோம். 'கூ' வரியிலுள்ள ஏனைய எழுத்துக்களுக்கு இத்தொடர்பும் கிடையாது. அவற்றுள் 'கூ' ஒருவிதமாகவும் ஙூ, சூ, பூ, வூ, யூ என்பன 'ஆ' போன்றும், ஞூ, தூ, நூ, றூ, னூ என்பன ஒருவகையாகவும் டூ, மூ, ழூ என்பன வேறொருவகையாகவும் தற்பொழுது எழுதப்படுவதுண்டு. எனவே, இந்த முறையில் வேறுபடும் பல்வேறுவகையான எழுத்துக்களைப் பயிலும் பள்ளிச் சிறுவர்களும், பிறமொழியாளர்களும் எழுத்துக்களைப் பயில்வதிலேயே பல மாதங்களைச் செலவிடவேண்டியவர்களாகின்றனர். எனவே, கா, கி, கீ என்ற வரிகளை ஒப்ப ஒரே சீரளவினை உடைய அமைப்பு முறையொன்றனை அமைத்தல் சாலவும் உகப்பானதாகும்; சுலபமானதுமாகும். அதற்கு 'க' எனும் உயிர்மெய் எழுத்துடன் 'உ' என்னும் உயிரினைப் பக்கம் மாற்றி முறையே சுழியின்றியும் ு ூ சுழிசேர்த்தும் எழுதுதல் மிகப் பொருத்தமானதாகும். இம்முறை எழுத்தோட்டத்திற்கும் காலச்சுருக்கத்திற்கும் உகந்ததாகும். அதேபோன்று அச்சு முறைக்கும் தட்டெழுத்து முறைக்கும் இலகுவானதாகும். இம்முறையைப் பின்பற்றி எழுதுவோமானால் தற்பொழுது தட்டெழுத்து இயந்திரங்களில் உபயோகிக்கப்படும் பெரும்பாலான எழுத்துக்களைக் குறைக்கவும் வழியமையும். தற்பொழுது நாம் உபயோகிக்கும் கிரந்த எழுத்துக்களான ஸ, ஜ, ஷ என்பனவற்றுக்கும் இவ்வடையாளங்களை உபயோகிக்கலாம். அவ்வாறு உபயோகிப்போமாயின் கிரந்த அடையாளங்களான ு, ூ இரண்டையும் நீக்கிவிடலாம். மேற்கூறிய முறைப்படி நாம் கு, கூ வரிகளை அமைப்போமாயின் அவை பின்வருமாறு அமையும் :



மேற்சொல்லிய முறையை விட வேறு முறைகளேக் கையாள்வோமாயின் அவை தட்டெழுத்து முறைக்குக் கால அளவில் சமமாக இருப்பினும் கையினுல் எழுதுபவர்களுக்குக் கால அளவு கூடுதலாகவே தேவைப்படும். அம்முறை அவ்வளவு பொருத்தமானதாகக் கருதப்படமாட்டாது.

ஐ வரி:

'ஆ'வரிக்கு அரவினே உபயோகித்தமை போன்று 'ஐ' வரிக்கும் சங்கிலிக்கொம்பினே வரி முழுவதற்கும் உபயோகித்தலே நன்று. இந்த முறைப்படி அமைப்பின் தட்டெழுத்து இயந்திர அமைப்பிற்கும் மிகவும் உதவுவதாக முடியும். தற்பொழுது தட்டெழுத்து இயந்திரங்களிலே உயிர்மெய்யெழுத்துக்களே ஆக்குவதற்கு என அநேக அடையாளங்கள் உபயோகிக்கப்படுகின்றன. உதாரணமாக மெய்யெழுத்தினே அமைப்பதற்கு மெய்ப்புள்ளியும், உயிர்மெய்யெழுத்துக்களாகிய கி, ஙி என்பனவற்றை அமைக்க விசிறியும் (ി), கீ, ஙீ என்பனவற்றை அமைக்க மேல் விசிறியும் (ീ), பு, வு என்பனவற்றை அமைக்கக் கீழ்க்காலும் (ן), பூ, வூ என்பனவற்றை அமைக்கக் கீழ்விசிறியும் (ூ), மு, ரு என்பனவற்றை அமைக்கத் தலேப்புள்ளியும் (·), லே, ணே என்பனவற்றை அமைக்கத் தலேக்குறியும் (ꟹ), தூ, லூ என்பனவற்றை அமைக்கப் பக்கக் காலும் (T), கிரந்த எழுத்துக்களான ஸு, ஜூ என்பனவற்றை அமைக்க வேறு கிரந்த அடையாளங்களான (ு) (ூ) குறியீடுகளுமாகப் பத்து அடையாளங்கள் உபயோகத்திலுள்ளன. எனது முறையை மேற்கொள்வோமாயின் தட்டெழுத்து இயந்திரத்திலும் ஐந்து அடையாளங்கள் மாத்திரமே தேவைப்படுவனவாகும். புதிதாகக் காட்டப்பட்டுள்ள அடையாளங்களிரண்டினேயும் ി, ீ இவற்றைப் போன்று சிறிய உருவில் நகரும் விசையிலோ அன்றேல் நகரா விசையிலோ பொருத்திக்கொள்ளலாம். இம்முறையாலான எழுத்துச் சீரமைப்பினே இறுதியிற் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணேயிற் பார்க்கவும்.

மேற்கூறப்பட்டுள்ளபடி எமது மொழியின் வடிவமுறை அமையுமெனில் தமிழ் மொழியைக் கற்கும் வெளிநாட்டறிஞர்களுக்கும் குழந்தைகளுக்கும் சில பொது விதிகள் மூலமாகவே தமிழ் எழுத்து வடிவங்களே இலகுவாகப் புகுத்திவிடலாம்.

எழுத்து அட்டவணை

அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ
ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ
ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ
ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ
ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ
ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ
ய	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யௌ
ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லௌ
வ	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
ற	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றௌ
ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ

கட்டுரைத் தலைப்புக்களின் அகரவரிசை

ஆசிரியர்களின் பெயர் அகரவரிசை

இராசு செ. புலவர்: சி. எஸ். ஐ. உயர்நிலைப்பள்ளி, ஈரோடு, தமிழ்நாடு.

இளந்திரையன் சாலை (டாக்டர் வி. ஆர். மகாலிங்கம்): எம். ஏ. எம். லிற்., பிஎச். டி., தமிழ்த்துறைத் தலைவர், தில்லிப் பல்கலைக்கழகம், இந்தியா.

இளந்திரையன் திருமதி சாலினி (டாக்டர் திருமதி மகாலிங்கம்): எம். ஏ., எம். லிற்., பிஎச். டி., தமிழ்த்துறைத் தலைவர், ஸ்ரீ வேங்கடேஸ்வரக் கல்லூரி, புதுதில்லி, இந்தியா.

கணேசன் இரா: பி. இ. டி., எம். ஐ. இ., கிண்டி, சென்னை.

கலா பரமேஸ்வரன் சு: பி. ஏ., ஆராய்ச்சி மாணவன், இலங்கைப் பல்கலைக்கழகப் பேராதனை வளாகம்.

கனகரத்தினம் த: பி. ஏ., பாடநூல் எழுத்தாளர், கல்வி வெளியீட்டுத் திணைக்களம், கொழும்பு.

கோவிந்தபிள்ளை வ: எழுதுவினைஞர், தமிழ்த்துறை, இலங்கைப் பல்கலைக்கழகப் பேராதனை வளாகம்.

சண்முகசுந்தரம் த: பி. ஏ., பி. எட்., ஆசிரியர், கந்தசுவாமி கோவிலடி, மாவிட்டபுரம்.

சண்முகன் ச கொடுமுடி: பி. இ. டி., எஸ். எஸ்., எம். ஐ. இ., உதவிப் பொறியியலாளர், பொ. ப. து. தென்மேற்கு உட்கோட்டம், சென்னை.

சந்திரசேகரம் சோ: பி. எட்., விரிவுரையாளர், கல்வித்துறை, இலங்கைப் பல்கலைக்கழகப் பேராதனை வளாகம்.

சற்குணம் ம: பி. ஏ., சனசமூக உத்தியோகத்தர், உள்ளூராட்சி அலுவலகம், மட்டக்களப்பு.

சிவசாமி வி: எம். ஏ., விரிவுரையாளர், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.

சிவநேசச்செல்வன் ஆ: பி. ஏ., விரிவுரையாளர், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.

சிவபாதசுந்தரனுர் நா புலவர்: தமிழ்த்துறை, மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.

சிவராசா அ: பி. ஏ., விரிவுரையாளர், பொருளியற்றுறை, இலங்கைப் பல்கலைக்கழகப் பேராதனை வளாகம்.

சுப்பிரமணியம் நாகராஜ ஐயர் : எம். ஏ., ஆசிரியர், இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

செல்வச்சந்திரன் குமாரசாமி: பி. ஏ., மொழிபெயர்ப்பாளர், சட்டவரைஞர் திணைக்களம், கொழும்பு.

நயினுர் முகம்மது சி எம். ஏ: தமிழ்த்துறைத் தலைவர், ஜமால் முகம்மது கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு.

நவசோதி கணபதிப்பிள்ளை: பி. ஏ., மொழிபெயர்ப்பாளர், அரச கருமமொழித் திணைக்களம், கொழும்பு.

நாணயக்கார டி. டி: முன்னைநாள் தலைமையாசிரியர், தந்திரி முல்ல, பாணந்துறை.

பத்மநாதன் சி: பி. ஏ., பிஎச். டி., விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, இலங்கைப் பல்கலைக்கழகப் பேராதனை வளாகம்.

பாலசுந்தரம் இ: பி. ஏ., உதவி விரிவுரையாளர், தமிழ்த்துறை, இலங்கைப் பல்கலைக்கழகக் கொழும்பு வளாகம்.

முத்துக்குமாரு, செல்வி வி: பி. ஏ., பிஎச். டி., விரிவுரையாளர், மொழி கலாசாரத்துறை, இலங்கைப் பல்கலைக்கழகப் பேராதனை வளாகம்.

வாசுகி அம்மையார், மோசூர்: எம். ஏ., எம். லிற்., பிஎச். டி. தமிழ்ப் பேராசிரியர், மிராண்டி ஹவுஸ், தில்லிப் பல்கலைக் கழக மகளிர் கல்லூரி, தில்லி.

வீரகத்தி க. பண்டிதர்: வாணி கலைக்கழக இயக்குநர், கரவெட்டி, யாழ்ப்பாணம்.

வேந்தனுர், செல்வி கலையரசி: எம். ஏ., விரிவுரையாளர், தமிழ்த் துறை, இலங்கைப் பல்கலைக்கழகப் பேராதனை வளாகம்.